# IC - 38

# வலை திரட்டி

# கலவை

அங்கீகாரம்

இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏஐ) பரிந்துரைத்த திருத்தப்பட்ட பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, மும்பையில் உள்ள இன்சூரன்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா இந்த பாடப் பிரிவை தயாரித்துள்ளது.

ஆசிரியர்கள்/ மதிப்பாய்வாளர்கள் (அகர வரிசைப்படி)


பேராசிரியர் அர்ச்சனா வஜே
டாக்டர் ஜார்ஜ் இ. தாமஸ்
பேராசிரியர் மாதுரி சர்மா
சிஏ.பி.கோடீஸ்வர ராவ்
டாக்டர் பிரதீப் சர்க்கார்
டாக்டர் ஆர்.கே.துக்கல்
டாக்டர் சசிதரன் கே.குட்டி


இந்தப் பாடத்திட்டம் பின்வருபவர்களின் உதவியுடன் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு மற்றும் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது


சி-டாக், புனே.
குமாரி மாயா பி. உத்தமன்
திரு ஆர். பட்டாபிராமன்



भारतीय बीमा संस्थान
INSURANCE INSTITUTE OF INDIA

ஜி - பிளாக், ப்ளாட் எண் சி 46, பாந்திரா குர்லா வளாகம், பாந்த்ரா (கி), மும்பை - 400 051.

# வலை திரட்டி

# கலவை

# IC - 38

**பதிப்பு ஆண்டு: 2023**

**அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை**

இந்தப் பாடப்பிரிவின் உள்ளடக்கங்கள் இன்சூரன்ஸ் இன்ஸ்டிடியூட் ஆ்ஃப் இந்தியாவின் (III) பதிப்புரிமை ஆகும். இன்சூரன்ஸ் இன்ஸ்டிடியூட் ஆ்ஃப் இந்தியாவின் தேர்வுகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு கல்வி சார்ந்த உள்ளீடுகளை வழங்குவதற்காக இந்தப் பாடப்பிரிவு வடிவமைக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி இந்தப் பாடப்பிரிவின் உள்ளடக்கங்களை பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ வணிக நோக்கத்திற்காக மீண்டும் உருவாக்கப்படக்கூடாது.

உள்ளடக்கங்கள் நடைமுறையில் உள்ள சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை மற்றும் சட்டப்பூர்வ அல்லது வேறு ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால் விளக்கங்கள் அல்லது தீர்வுகளை வழங்குவது இதன் நோக்கத்தில் இல்லை

இது குறிப்புக்காக வழங்கப்படும் பாடப் புத்தகம் மட்டுமே. தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் இந்த பாடப் புத்தகத்தில் இருந்து மட்டும் இருக்காது என்பதை நினைவில் கொள்ளவும்.

வெளியீட்டாளர்: பொது செயலாளர், இன்சூரன்ஸ் இன்ஸ்டிடுயூட் ஆ்ஃப் இந்தியா, ஜி பிளாக், ப்ளாட் சி- 46, பாந்திரா குர்லா வளாகம், பாந்த்ரா (கி) மும்பை - 400 051, மற்றும் பிரசுரிக்கப்பட்ட இடம்

இந்த பாடப் புத்தகம் தொடர்பான எந்தவொரு தகவல்தொடர்புக்கும் தலைப்புப் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் தனிப்பட்ட வெளியீட்டு எண்ணைக் குறிப்பிட்டு ctd@iii.org.in என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

# முன்னுரை

இன்சூரன்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா, (நிறுவனம்) இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏஐ) பரிந்துரைத்த பாடத்திட்டத்தின் அடிப்படையில் காப்பீட்டு முகவர்களுக்காக இந்த பாடப்பிரிவை உருவாக்கியுள்ளது. பாடப்பிரிவின் உள்ளடக்கங்ளைத் தயாரிக்கும் பணியில் தொழில் நிபுணர்கள் ஈடுபடுத்தப்பட்டடனர்.

இந்த பாடப்பிரிவை ஆயுள், பொது மற்றும் உடல்நலக் காப்பீடை பற்றி அடிப்படை அறிவை வழங்கும் காரணத்தால், முகவர்களால் சரியான கண்ணோட்டத்தில் தங்கள் தொழில்முறை வாழ்க்கையை புரிந்துக்கொண்டு பாராட்ட முடிகிறது.

பாடப்பிரிவு நான்கு பிரிவுகளாக வழங்கப்பட்டுள்ளது. (1) மேலோட்டப் பார்வை - காப்பீட்டுக் கொள்கைகள், சட்டக் கோட்பாடுகள் மற்றும் காப்பீட்டு முகவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ஒழுங்குமுறை விஷயங்களை உள்ளடக்கிய ஒரு பொதுவான பிரிவு. (2) ஆயுள் காப்பீட்டு முகவர்கள், (3) பொது காப்பீட்டு முகவர்கள் மற்றும் (4) ஹெல்த் இன்சூரன்ஸ் முகவர்கள் ஆக விரும்புபவர்களுக்காக தனித்தனி பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன.

பரீட்சை வடிவம் மற்றும் கேட்கப்படும் ஆப்ஜெக்டிவ் (கேள்விக்கு 4 பதில்களில் இருந்து தேர்வு) கேள்விகளின் வகைகளை பற்றி ஒரு ஊகத்தை வழங்க, பாடப்பிரிவில் மாதிரி கேள்விகளின் தொகுப்பு சேர்க்கப்பட்டுள்ளது. மாதிரி கேள்விகள் மறுநோக்கு சமயத்தில் கற்றதை புனராய்வு செய்துகொள்ள உதவும்.

காப்பீடு ஒரு மாறும் சூழலில் செயல்படுகிறது. சந்தையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து முகவர்கள் புதுப்பித்த நிலையில் இருக்க வேண்டும். தனிப்பட்ட ஆய்வு மற்றும் அந்தந்த காப்பீட்டாளர்களால் ஏற்பாடு செய்யப்படும் உள் பயிற்சி திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் அவர்கள் அறிவை தொடர்ந்து வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நிறுவனத்திடம் இந்தப் பணியை ஒப்படைத்ததற்காக ஐஆர்டிஏஐக்கு நிறுவனம் நன்றி தெரிவிக்கிறது. இந்த பாடப்பிரிவை படித்து பரீட்சையில் தேர்ச்சி பெற்று இன்சூரன்ஸ் மார்க்கெட்டிங் துறையில் வெற்றி பெற விரும்பும் அனைவரையும் நிறுவனம் வாழ்த்துகிறது.

# உள்ளடக்கங்கள்


| அத்தியாய எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| **பிரிவு** | **பொதுவான அத்தியாயங்கள்** | |
| C-01 | காப்பீடு அறிமுகம் | 2 |
| C-02 | காப்பீட்டின் முக்கிய கூறுகள் | 26 |
| C-03 | காப்பீட்டின் கோட்பாடுகள் | 39 |
| C-04 | காப்பீட்டு ஒப்பந்தங்களின் அம்சங்கள் | 59 |
| C-05 | ஏற்பளிப்பு மற்றும் மதிப்பீடு | 70 |
| C-06 | ஈடுக்கோரல்களின் செயலாக்கம் | 82 |
| C-07 | ஆவணப்படுத்தல் | 92 |
| C-08 | வாடிக்கையாளர் சேவை | 104 |
| C-09 | குறை தீர்க்கும் செயல்முறை | 127 |
| C-10 | வலைதிரட்டிகளுக்கான கட்டுபாட்டு அம்சங்கள் | 139 |
| **பிரிவு** | **ஆயுள் காப்பீடு** | |
| L-01 | ஆயுள் காப்பீடில் சம்பந்தப்பட்டவை | 155 |
| L-02 | நிதி திட்டமிடல் | 164 |
| L-03 | ஆயுள் காப்பீட்டுத் தயாரிப்புகள்: மரபு வழி | 184 |
| L-04 | ஆயுள் காப்பீட்டுத் தயாரிப்புகள்: மரபு -சாராத | 200 |
| L-05 | ஆயுள் காப்பீட்டின் பயன்பாடுகள் | 204 |
| L-06 | ஆயுள் காப்பீட்டின் விலை மற்றும் மதிப்பீடு | 214 |
| L-07 | ஆயுள் காப்பீட்டு ஆவணமாக்கல் | 226 |
| L-08 | ஆயுள் காப்பீட்டின் ஏற்பளிப்பு | 248 |
| L-09 | ஆயுள் காப்பீட்டின் ஈடுக்கோரல்கள் | 267 |
| **பிரிவு** | **உடல்நலக் காப்பீடு** | |
| H-01 | உடல்நலக் காப்பீடு அறிமுகம் | 279 |
| H-02 | உடல்நலக் காப்பீட்டு ஆவணம் | 291 |
| H-03 | உடல்நலக் காப்பீட்டுத் தயாரிப்புகள் | 304 |
| H-04 | உடல்நலக் காப்பீட்டின் ஏற்பளிப்பு | 355 |
| H-05 | உடல்நலக் காப்பீட்டின் ஈடுக்கோரல்கள் | 381 |
| **பிரிவு** | **பொது காப்பீடு** | |
| G-01 | பொது காப்பீட்டு ஆவணம் | 410 |
| G-02 | ஏற்பளிப்பு மற்றும் விலையை நிர்ணயித்தல் | 437 |
| G-03 | தனிநபர் மற்றும் சில்லறை காப்பீடு | 453 |
| G-04 | வணிக காப்பீடு | 470 |
| G-05 | பொது காப்பீட்டின் ஈடுக்கோரல்கள் | 513 |
| **பிரிவு** | **பின் இணைப்புகள்** | |
| A-01 | பின் இணைப்புகள்- பூர்த்தி செய்வதற்கான மாதிரி முன்மொழிவு படிவங்கள் மற்றும் ஈடுக்கோரல் படிவங்கள் | 527 |

# பிரிவு
# ஒரு கண்ணோட்டம்

# அத்தியாயம் C-01

# காப்பீட்டின் அறிமுகம்

**அத்தியாயத்தின் அறிமுகம்**

காப்பீடின் அடிப்படைகளை, அதாவது அது தோன்றிய விதம், மற்றும் இயங்கும் விதத்தை அறிமுகப்படுத்துவதே இந்த அத்தியாயத்தின் குறிக்கோள் ஆகும். எதிர்பாராத சம்பவங்களினால் ஏற்படும் பொருளாதார நஷ்டத்தை ஈடு செய்ய காப்பீடு உதவும் விதத்தையும் மற்றும் அபாய கைமாற்றத்திற்கு முக்கிய கருவியாக காப்பீடு செயல்படும் விதத்தையும் கற்பிப்பதே இதன் நோக்கம்.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**


A. காப்பீடு வரலாறு - வரலாறு மற்றும் பரிணாமம்
B. அபாய நிதிசேர்ம கொள்கை
C. அபாய மேலாண்மை அணுகுமுறைகள்
D. அபாயத்தை நிர்வகிக்கும் கருவியாக காப்பீடு
E. காப்பீட்டைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் கருத வேண்டியவை
F. காப்பீட்டுச் சந்தையில் ஈடுபட்டுள்ளவர்கள்
G. சமூகத்தில் காப்பீட்டின் பங்கு

## A. காப்பீடு வரலாறு - வரலாறு மற்றும் பரிணாமம்

நாம் நிச்சயமற்ற ஒரு உலகத்தில் வாழ்கிறோம். பின்வருவது போன்ற தகவல்களை கேள்விப்படுகிறோம்:

- ✓ ரயில்கள் மோதிக்கொள்ளுதல்;
- ✓ முழு சமூகங்களை அழித்த வெள்ளம்;
- ✓ கட்டடங்களையே அழிக்கும் பூகம்பங்கள்;
- ✓ இளைஞர்கள் திடீரென இறப்பது

**வரைப்படம் 1: நம்மை சுற்றி நடக்கும் நிகழ்வுகள்**




இந்த நிகழ்வுகள் மக்களுக்கு கவலை மற்றும் பயத்தை ஏன் ஏற்படுத்துகின்றன?

காரணம் சாதாரணமானதே.

i. முதலில் **இதையெல்லாம் முன்னுணரமுடியாது**, ஒருவர் ஒரு நிகழ்வை எதிர்பார்த்து, முன்கூட்டியே உணர்ந்தால் தான் அதற்காக தயாராக இருக்கமுடியும்.

ii. இரண்டாவதாக அத்தகைய முன்னுணரமுடியாத மற்றும் அசம்பாவிதமான நிகழ்வுகளே அடிக்கடி **பொருளாதார இழப்பு மற்றும் சோகத்திற்கு** காரணமாக இருக்கும்.

பகிரும் மற்றும் பரஸ்பர ஆதரவை தரும் ஒரு அமைப்பு இருந்தால், அதன் மூலம் சமூகத்தில் இது போன்ற நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு

உதவ சுற்றியுள்ள மக்களால் முன்வர முடியும். காப்பீட்டு யோசனை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பிறந்தது. இருந்தும், இன்று நாம் அறிந்த, காப்பீட்டின் வடிவம் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளாகவே நடைமுறையில் இருக்கிறது

## 1. காப்பீட்டு வரலாறு

காப்பீடு கி.மு. 3000 முதல் ஏதோ ஒரு வடிவத்தில் இருந்ததாக அறியப்படுகிறது. பல நாகரிகங்கள், கடந்த சில ஆண்டுகளில், நிதியை சேகரித்து, சமூகத்தில் சில பேருக்கு ஏற்படும் அனைத்து இழப்புகளையும் ஈடு செய்ய, தங்கள் மத்தியிலேயே அதை பகிர்ந்துக்கொள்ளும் கருத்தாக்கத்தை செய்து காட்டியுள்ளார்கள். இந்த கருத்தாக்கம் பயன்படுத்தப்பட்ட சில வழிகளை நாம் பார்க்கலாம்.

## 2. வழிவழியாக வந்த காப்பீடு- சில எடுத்துக்காட்டுகள்

| | |
|---|---|
| **அடகு கடன்கள்**' ('bottomry loans') | கப்பலின் சரக்கு தொலைந்து அல்லது களவாடப்பட்டு விட்டால், கடன்களை தள்ளுபடி செய்ய ஒரு விலையாக, கடன் கொடுததவர்களுக்கு **பாபிலோனிய வணிகர்கள்** கூடுதல் பணத்தை செலுத்தவேண்டும் **பரூச் மற்றும் சூரத்தில்** இருந்த வியாபாரிகள் மத்தியிலும் இதே நடைமுறைகள் பரவி இருந்தன. |
| தருமசிந்தையுள்ள சங்கங்கள்/ நட்பு சங்கங்கள் **(Benevolent societies/Friendly societies)** | கிரேக்கர்கள் 7-ஆம் நூற்றாண்டு இறுதியிலேயே இறந்தவர்களின் ஈமச்சடங்குகளையும் - அவர்களது குடும்பங்களை கவனிக்கவும் முன்கூட்டியே பணம் கட்டுவதை தொடங்கிவிட்டனர். இங்கிலாந்திலும் இதே போன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. |
| **ரோட்ஸ்** | கடல் வழியாக பொருட்களை அனுப்பும் ரோட்ஸ் வர்த்தகர்கள், அவர்களில் யாரேனும் ஜெட்டிசன்[1] காரணமாக தங்கள் பொருட்களை இழந்திருந்தால் நஷ்டத்தைப் பகிர்ந்து கொண்டனர். |
| **சீன வர்த்தகர்கள்** | பண்டைய காலத்தில் சீன வர்த்தகர்கள் தங்கள் பொருட்களை பல்வேறு படகுகளில் அனுப்புவார்கள். படகுகளில் ஏதாவது ஒன்று மூழ்கினால் கூட, |

[1] ஜெட்டிசன் என்பது கப்பல் எடையை குறைத்து சமநிலையை (balance) மீண்டும் பெற சில சரக்குகளை தூக்கி எறிவது

| | |
|---|---|
| | அவர்களது நஷ்டம் பகுதியாகவே இருக்கும். |

## 3. காப்பீட்டின் நவீன கருத்துக்கள்

இந்தியாவின் கூட்டு குடும்ப அமைப்பில், இந்தியாவின் ஆயுள் காப்பீட்டு கொள்கையை பிரதிபலித்தது. ஒரு குடும்ப உறுப்பினர் துரதிருஷ்டவசமாக இறந்தால், அதனால் வரும் இழப்புகளை குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் பகிர்ந்ததால், இதன் விளைவாக குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தொடர்ந்து பாதுகாப்பாக உணரமுடிந்தது.

கூட்டு குடும்ப அமைப்பு உடைந்தது மற்றும் நவீன யுகத்தில் தனிப்பட்ட குடும்பங்களின் எழுச்சியும் தினசரி வாழ்வின் அழுத்தமும் இணைந்து பாதுகாப்பிற்கு மாற்று அமைப்புகளை உருவாக்குவதை அவசியமாக்கியது. இது ஒரு தனிப்பட்டவருக்கு ஆயுள் காப்பீட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

i. **லாயிட்ஸ் (Lloyds)**: நவீன வணிகக் காப்பீடு லண்டனில் உள்ள லாயிட்ஸ் காபி ஹவுஸில் தொடங்கியது, அங்கு வணிகர்கள் கடலில் பல்வேறு ஆபத்துகளால் அவர்களுக்கு ஏற்படும் இழப்புகளைப் பகிர்ந்து கொள்ள ஒப்புக்கொண்டனர்.

ii. லண்டனில் 1706-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட **அமிகப்பில் சொசைட்டி ஃபார் ஏ ப்ர்பசுவல் அஷ்யூரன்ஸ்** உலகின் முதல் ஆயுள் காப்பீடு நிறுவனம் என கருதப்படுகிறது.

## 4. இந்தியாவில் காப்பீட்டின் வரலாறு

(a) **இந்தியா**: இந்தியாவில் நவீன காப்பீடு 1800 ஆண்டின் தொடக்கத்தில் அல்லது அதற்கு பிறகு, வெளிநாட்டு காப்பீட்டு முகவர்கள் கடல் சார்ந்த காப்பீடு வணிகத்தை ஆரம்பித்தப்போது தொடங்கியது.

| | |
|---|---|
| **ஓரியன்டல் லைஃப் இன்சூரன்ஸ் கம்பனி லிமிடெட்** | இந்தியாவில் முதலில் நிறுவப்பட்ட ஆயுள் காப்பீடு நிறுவனம் ஒரு ஆங்கில நிறுவனம் |
| **டிரைடன் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** | இது இந்தியாவில் முதலில் நிறுவப்பட்ட பொது காப்பீட்டு நிறுவனம். |
| **பாம்பே மியுட்சுவல் அஷ்யூரன்ஸ் சொசெட்டி லிமிடெட்** | இது தான் முதல் இந்திய காப்பீட்டு நிறுவனம். இது மும்பையில் 1870-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. |
| **தேசிய காப்பீட்டு நிறுவனம் லிமிடெட்** | இது இந்தியாவின் உள்ள மிக பழமையான காப்பீட்டு நிறுவனம். இது 1906 இல் |

| | |
|---|---|
| | தொடங்கப்பட்டது |

பின்னர் பல இந்திய நிறுவனங்கள், அந்த நூற்றாண்டு முடியும் தருவாயில் சுதேசி இயக்கத்தின் விளைவாக அமைக்கப்பட்டன.

**முக்கியமானவை**

a) **காப்பீட்டுச் சட்டம், 1938 என்பது** இந்தியாவில் காப்பீட்டு நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒழுங்குப்படுத்த இயற்றப்பட்ட முதல் சட்டம். இந்த சட்டம், அவ்வப்போது திருத்தப்பட்டு, இன்றும் அமலில் உள்ளது. .

b) ஆயுள் காப்பீட்டு வணிகம் செப்டம்பர் 1, 1956 அன்று நாட்டுடைமயாக்கப்பட்டது மற்றும் **இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்** (LIC) உருவாக்கப்பட்டது. 1956-இல் இருந்து 1999 வரை, இந்தியாவில் ஆயுள் காப்பீடு வியாபாரத்தை செய்யும் பிரத்தியேக உரிமைகளை எல்.ஐ.சி. பெற்றிருந்தது.

c) 1972-இல் பொது காப்பீட்டு வணிகமும் நாட்டுடமையாக்கப்பட்டது மற்றும் **பொது காப்பீட்டு இந்திய கழகம் (General Insurance Corporation of India -GIC) மற்றும் அதன் நான்கு துணை நிறுவனங்களும்** அமைக்கப்பட்டன.

d) **1994** இல் சமர்ப்பிக்கப்பட்ட **மல்ஹோத்ரா கமிட்டி** தன் அறிக்கையில், போட்டிக்காக சந்தையைத் திறக்குமாறு பரிந்துரைத்தது.

e) 2000 ஆம் ஆண்டில் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டுச் சட்டம், 1999 (**IRDAI**) இயற்றப்பட்டு காப்பீட்டுச் சந்தை தாராளமயமாக்கப்பட்டது. இது ஏப்ரல் 2000 இல் காப்பீட்டுத் துறைக்கான சட்டப்பூர்வ ஒழுங்குமுறை அமைப்பாக இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தை (**IRDAI**) நிறுவியது.

f) 2021 இல் செய்யப்பட்ட காப்பீட்டுச் சட்டத்தின் திருத்தம், இந்தியக் காப்பீட்டு நிறுவனத்தில் செலுத்தப்பட்ட ஈக்விட்டி மூலதனத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்களை 74% பங்கு வரை வைத்திருக்க அனுமதித்துள்ளது. மறுகாப்பீடு செய்ய வெளிநாட்டுக் காப்பீட்டாளர்கள் இப்போது இந்தியாவில் கிளைகளை நிறுவலாம்.

### a. இன்று உள்ள ஆயுள் காப்பீடு தொழில் (செப்டம்பர் 30, 2021 நிலவரப்படி)

a) தற்போது, 24 ஆயுள் காப்பீட்டு” நிறுவனங்கள் இந்தியாவில் இயங்குகின்றன. ஆயுள் காப்பீட்டு கழகம் (எல்ஐசி) இந்தியாவின் ஒரே பொதுத்துறை நிறுவனமாக இருக்கிறது மீதமுள்ள 23 ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் தனியார் துறையில் உள்ளன.

b) 34 பொது காப்பீட்டு நிறுவனங்கள் உள்ளன, அவற்றில் 4 - நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கோ. லிமிடெட், தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ஆகியவை பொதுத்துறை நிறுவனங்களாகும் மற்றும் பொது காப்பீட்டின் அனைத்து வகைகளையும் கையாள்கின்றனர். 26 தனியார் நிறுவனங்களும் காப்பீட்டின் அனைத்து வகைகளையும் கையாள்கின்றனர். 6 பொது காப்பீட்டாளர்கள் உடல்நலக் காப்பீட்டை மட்டுமே கையாள்கிறார்கள். 2 சிறப்பு காப்பீட்டாளர்களான - வேளாண் காப்பீட்டு நிறுவனம் [AIC] மற்றும் ஏற்றுமதி கடன் மற்றும் உத்தரவாத கார்ப்பரேஷன் [ECGC], இரண்டும் பொதுத்துறை நிறுவனங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

c) இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகம் [GIC Re] - எனும் ஒரு மறுகாப்பீட்டு நிறுவனம் உள்ளது, மற்றும் கிளை அலுவலகங்கள் மூலம் செயல்படும் 11 வெளிநாட்டு மறுகாப்பீட்டு நிறுவனங்கள் உள்ளன.

d) இந்திய அரசின் தபால் துறையும் (இந்தியா போஸ்ட் என அழைக்கப்படுகிறது) அஞ்சல்வழி ஆயுள் காப்பீடு எனப்படும் ஆயுள் காப்பீடு வணிகத்தை செய்கிறது, ஆனால், இந்தியா போஸ்ட் கட்டுப்பாட்டாளரின் அதிகார வரம்பின் கீழ் வருவதில்லை.

**சுய-பரீட்சை 1**

பின்வருவனவற்றில் இந்தியாவில் காப்பீட்டுத் துறைக்கான ஒழுங்குமுறை அமைப்பு எது?

I. இந்திய காப்பீட்டு அதிகாரம்

II. காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்

III. இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம்

IV. இந்திய பொது காப்பீட்டு கழகம்

## காப்பீடு எவ்வாறு செயல்படுகிறது

நவீன வர்த்தகம் சொத்து உரிமை கொள்கையின் ஆதாரத்தில் தொடங்கப்பட்டது. குறிப்பிட்ட நிகழ்வின் [இழப்பு அல்லது அழிவு] காரணமாக ஒரு சொத்தின் மதிப்பு குறைகிற போது, சொத்தின் உரிமையாளருக்கு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. ஒரே மாதிரி சொத்துடைய பல உரிமையாளர்களின் சிறிய பங்களிப்புகள் மூலம் ஒரு பொது நிதியை


உருவாக்கினால், இந்த நிதியை அந்த இழப்பை ஈடு செய்ய பயன்படுத்த முடியும்.

இங்கே வணிகச் சொத்தின் இழப்பு/அழிவு இல்லாத காரணத்தால், இறப்பு மற்றும் இயலாமை ஏற்படும் போது அபாயங்களை சேகரிக்கும் இந்த வழிமுறை வித்தியாசமாக செயல்படுகிறது.

## வரையறை

நிச்சயமற்ற நிகழ்வுகள்/சூழ்நிலைகள் காரணமாக துரதிருஷ்டவசமாக சிலருக்கு ஏற்படும் இழப்புகளை, அதே போன்ற இழப்புகளுக்கு உள்ளாகும் நிலைமையில் உள்ளவர்களுடன் பகிர்ந்துக்கொள்வதை காப்பீடு என்று கருதமுடியும்.

**வரைப்படம்** 2: காப்பீடு எப்படி வேலை செய்கிறது




இருப்பினும், சில கேள்விகளுக்கு பதிலளிக்க தேவை.

i. இந்த மாதிரி பொது நிதியை உருவாக்க, கடினமான உழைப்பு மூலம் சம்பாதித்த பணத்தை தர மக்கள் ஒப்புக்கொள்வார்களா?

ii. அவர்களின் பங்களிப்பு உண்மையிலேயே விரும்பிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகிறதா என்று அவர்களால் எப்படி நம்ப முடியும்?

iii. அவர்கள் கட்டும் பணம் மிக அதிகமானதா அல்லது மிக குறைவானதா என்று எப்படி தெரியும்?

iv. இந்த நிதியை நிர்வகிப்பதற்கும், நஷ்டம் அடைந்தவர்களுக்கு பணம் கொடுப்பதற்கும் யார் பொறுப்பேற்பார்கள்?

இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் ஒரு விடையாக காப்பீட்டாளரின் தேவை வருகிறது. காப்பீட்டாளர் அபாயத்தை மதிப்பிடுகிறார், தனிப்பட்ட பங்களிப்புகளை (அதாவது பிரீமியம்) முடிவுசெய்து சேகரிக்கிறார், அபாயங்கள்

மற்றும் பிரீமியங்களை சேர்மமாக சேர்த்துவைத்து, இழப்பைச் சந்தித்தவர்களுக்குச் வழங்க ஏற்பாடு செய்கிறார். காப்பீடு நிறுவனங்கள் தனிநபர்கள் மற்றும் சமூகத்தின் நம்பிக்கையையும் பெற வேண்டும்.

## 1. காப்பீடு என்பது மதிப்பைப் பற்றியது

a) முதலில், பொருளாதார மதிப்புள்ள ஒரு சொத்து இருக்கவேண்டும், அந்த சொத்தானது:

   i. **பொருள் சார்ந்ததாக இருக்கலாம்** (ஒரு கார் அல்லது ஒரு கட்டிடம் போன்றது) அல்லது

   ii. **பொருளாக இல்லாமலும் இருக்கலாம்** (பெயர் மற்றும் நல்லெண்ணம் போன்றவை) அல்லது

   iii. **தனிப்பட்டதாக இருக்கலாம்** (ஒருத்தரின் கண்கள், கால்கள் மற்றும் உடலின் மற்ற பகுதிகளை போல).

b) சொத்து ஒரு குறிப்பிட்ட நிகழ்விற்கு பிறகு அதன் மதிப்பை இழக்கலாம். இழப்பு ஏற்படுகின்ற மாதிரி வாய்ப்பு தான் **அபாயம் (risk)** என குறிப்பிடப்படுகிறது. அபாயம் ஏற்பட்ட காரணமே **ஆபத்து (peril)** என அறியப்படுகிறது.

c) சேர்மம் **(Pooling)** என அழைக்கப்படும் ஒரு கோட்பாடு உள்ளது. இது பல்வேறு நபர்களின் தனிப்பட்ட பங்களிப்புகளின் [அதாவது பிரீமியம்] சேர்மத்தை கொண்டுள்ளது. இந்த நபர்களின் சொத்துக்கள் மற்றும் அவற்றிற்கு ஏற்படக்கூடிய அபாயங்களும் ஒரே மாதிரி. அவர்களின் சொத்துக்கள் பல சூழல்களில் 'அபாயங்கள்' என்றும் குறிப்பிடப்படுகின்றன.

d) இந்த நிதி சேர்மம் ஒரு **ஆபத்தினால்** இழப்புக்களை சந்தித்த சிலருக்கு **ஈடுசெய்ய (compensate)** பயன்படுத்தப்படுகிறது.


e) இந்த நிதி சேர்மம் மற்றும் துரதிர்ஷ்டமான சிலருக்கு ஈடுசெய்வது என்பதெல்லாம் **காப்பீட்டாளர்கள் (INSURER)** எனும் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

f) காப்பீட்டு நிறுவனம் இந்த திட்டத்தில் பங்கேற்க முற்படும் ஒவ்வொரு நபருடனும் ஒரு காப்பீட்டு **ஒப்பந்தத்தில்** நுழைகிறது. ஒவ்வொரு பங்கேற்பாளரும் **பாலிசிதாரர் (insured)** என அழைக்கப்படுகிறார்.

## 2. காப்பீடு அபாயத்தின் சுமையை குறைக்கிறது

அபாய சுமை என்பது ஒரு தனிப்பட்ட இழப்பு நிலைமை/நிகழ்வை சந்தித்ததன் விளைவாக ஏற்பட்ட செலவுகள், இழப்புகள் மற்றும் குறைபாடுகளை குறிக்கிறது.

**வரைப்படம் 3: ஒருவருக்குள்ள அபாய சுமைகள்**




ஒவ்வொருவருக்கும் உள்ள அபாய சுமைகளில் இரண்டு வகைகள் உள்ளன - முதன்மை **(Primary)** மற்றும் இரண்டாம் **(Secondary)**

### a) முதன்மையான அபாய சுமை

முதன்மையான அபாய சுமை **(primary burden of risk)** உண்மையில் முழு அபாய நிகழ்வுகளின் விளைவாக, வீடுகளில் [மற்றும் வணிக அலகுகளில்] சந்தித்த இழப்புக்களை குறிக்கிறது. இந்த இழப்புக்கள் பெரும்பாலும் நேரடியானது மற்றும் அளவிடக்கூடியது, மற்றும் எளிதில் காப்பீடு மூலம் இதை ஈடு செய்ய முடியும்.

**எடுத்துக்காட்டு**

ஒரு தொழிற்சாலை தீயால் அழிந்துவிடும் போது, சேதமடைந்த அல்லது அழிக்கப்பட்ட பொருட்களின் உண்மையான மதிப்பை கணக்கிட்டு அதற்கான இழப்பீடை இழந்தவருக்கு வழங்கமுடியும்.

தனிப்பட்ட ஒருவர் இதய அறுவை சிகிச்சை செய்துக்கொண்டால், அதற்கான மருத்துவ செலவு தெரிந்த மதிப்பு என்பதால் அதையும் ஈடு செய்யமுடியும். கூடுதலாக சில மறைமுக இழப்புகளும் நேரிடலாம்.

**எடுத்துக்காட்டு**

தீயினால் வர்த்தக நடவடிக்கைகள் தடைப்பட்டு ஏற்படும் இலாப இழப்பையும் கணக்கிடலாம் மற்றும் இந்த மாதிரி இழப்பால் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடும் வழங்கமுடியும்.

எவருடைய ஸ்கூட்டர் பாதசாரி மீது மோதியதோ, அவர் பாதிக்கப்பட்டவருக்கு நீதிமன்றத் தீர்ப்பின்படி இழப்பீடு வழங்கியாக வேண்டும்.

**b) இரண்டாம் அபாய சுமை**

அத்தகைய நிகழ்வு நிகழாமல் இருந்து, நஷ்டமும் ஏற்படாவிட்டாலும், ஆபத்தில் உள்ளவர்கள் சில சுமைகளைச் சுமக்கிறார்கள். அதாவது, முதன்மைச் சுமையைத் தவிர, ஒருவருக்கு இரண்டாம் நிலை அபாய சுமையும் இருக்கிறது.

**இரண்டாம் அபாய சுமை** (secondary burden of risk) என்பதில் இப்படி ஒரு இழப்பு உள்ளாகக்கூடிய நிலைமையில் இருப்பது உண்மை என்றால், கூறப்பட்ட நிகழ்வு நிகழவில்லை என்றாலும், இந்த சுமைகளை ஏற்று அதிலிருந்து தன்னை காத்துக்கொள்ள ஏற்படும் செலவுகள் மற்றும் உலைச்சலை ஒருவர் தாங்கியாக வேண்டும். .

இந்த சுமைகளில் சிலவற்றை நாம் புரிந்து கொள்ளலாம்:

i. முதலில் **பயம் மற்றும் பதட்டத்தினால்** ஏற்படும் உடல் மற்றும் மன அழுத்தம் உள்ளது. இதனால் மன அழுத்தம் ஏற்பட்டு ஒரு நபரின் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

ii. இரண்டாவதாக ஒரு **இழப்பு ஏற்படுமா அல்லது இல்லையா என்பதை பற்றி உறுதியாக தெரியாதப்போது**, அத்தகைய நிலையை சந்திக்க ஒரு இருப்பு நிதியை அமைப்பதுதான் செய்யவேண்டிய விவேகமான விஷயம். இது போன்ற நிதிகள் சுலபமாக எடுக்கிற மாதிரி (liquid form-இல்) இருக்கவேண்டும் மற்றும் குறைந்த வருமானத்தை ஈட்டலாம்.

ஒரு காப்பீட்டு நிறுவனத்திடம் அபாயத்தை கைமாற்றுவதன் மூலம், மன அமைதியை அனுபவிக்கலாம், மற்றும் இருப்பாக ஒதுக்கி இருக்கவேண்டிய நிதியை முதலீடு செய்து, மேலும் திறம்பட வணிகத்தை திட்டமிடலாம். இந்த காரணங்களுக்காக தான் முக்கியமாக காப்பீடு தேவைப்படுகிறது.

இந்தியாவில், யாராவது வாகனம் வைத்திருந்தால், அவர் மூன்றாம் தரப்பு காப்பீட்டை வாங்க வேண்டும், ஏனெனில் ஒருவர் பொது சாலையில் ஓட்ட விரும்பினால் அது கட்டாயமாகும். அதே நேரத்தில், காருக்கு சேதம் ஏற்படுவதற்கான சாத்தியங்களை சந்திக்க ஏற்பாடு செய்வது விவேகமான விஷயம், இருப்பினும் அது கட்டாயமில்லை. உரிமையாளர்-ஓட்டுநருக்கு தனிப்பட்ட விபத்துக் காப்பீடு இருப்பதும் கட்டாயமாகும்

**சுய-பரீட்சை 2**

பின்வருவதில் இரண்டாம் அபாய சுமை என்பது எது?

I. வணிக குறுக்கீடு செலவு

II. பொருட்கள் சேதமடைந்த செலவு

III. எதிர்காலத்தில் இழப்புக்களை சந்திக்க ஒரு இருப்பு நிதியை ஒதுக்கி வைப்பது.

IV. மாரடைப்பு காரணமாக ஏற்படும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செலவுகள்


## B. அபாய நிதிசேர்ம கொள்கை

காப்பீட்டு நிறுவனங்கள் பாலிசிதாரர்களுடன் வெவ்வேறு விதமான ஒப்பந்தங்களில் நுழைகின்றன - , அவர்கள் தனிநபர்களாகவோ அல்லது நிறுவனங்களாகவோ இருக்கலாம். பாலிசிதாரர்களுக்கு அவர்கள் செலுத்தும் நன்மைகள் ஒப்பந்தத்தின்கீழ் அவர்களது கடமைகளாகும். காப்பீட்டாளர்கள் அபாயங்களை ஏற்பதற்கும், இழப்புகள் ஏற்பட்டால், அவற்றை ஈடுசெய்வதற்கும் நிதிரீதியாக திறன் கொண்டவர்களாக இருந்தால் மட்டுமே இந்த காப்பீட்டு ஒப்பந்தங்கள் அர்த்தமுள்ளவையாக இருக்கும். ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள். **பரஸ்பர நன்மை (Mutuality)** அல்லது சேர்மத்தின் கொள்கையின் பயன்பாடு மூலம் இந்த அமைப்பு உருவாகிறது.

பரஸ்பர நன்மை **(Mutuality)** மற்றும் பல்வகைப்படுத்துதல் **(Diversification)** என்பவை நிதி சந்தைகளில் அபாயத்தை குறைக்கும் முக்கியமான இரண்டு வழிகளில் இருக்கின்றன, இரண்டும் அடிப்படையில் வேறுபட்டு உள்ளன.

| **பல்வகைப்படுத்துதல் (Diversification)** | **பரஸ்பர நன்மை (Mutuality)** |
|---|---|
| பல்வகைப்படுத்துதலில் நிதிகள் பல்வேறு சொத்துக்கள் இடையில் பரவலாக இருக்கும் (வெவ்வேறு கூடைகளில் முட்டைகளை வைப்பது). | **பரஸ்பர நன்மை (Mutuality)** அல்லது சேர்மத்தின் கீழ், பல்வேறு தனிநபர்களின் நிதி இணைகிறது (ஒரே கூடையில் எல்லா முட்டைகளையும் வைப்பது |
| பல்வகைப்படுத்துதலில் ஒரு ஆதாரத்தில் இருந்து நிதி பல இலக்குகளுக்கு செல்கிறது. | பல நிதி ஆதாரங்களில் இருந்து ஒன்றிற்கு நிதி வருகிறது. |

**வரைப்படம் 4: பரஸ்பர நன்மை - பரஸ்பர நன்மை** (பல நிதி ஆதாரங்களில் இருந்து ஒன்றிற்கு நிதி வருகிறது)




பரஸ்பர நன்மை அல்லது நிதி சேர்ம கொள்கை ஆயுள் காப்பீட்டில் இரண்டு குறிப்பிட்ட வகை பங்குகளை வகிக்கிறது. ஒரு சிறிய பங்களிப்பை (பிரீமியம்) செலுத்துவதன் மூலம், காப்பீடு செய்யப்பட்ட அபாயம் காரணமாக இழப்பு ஏற்பட்டால், அவருக்கு கிடைக்கும் பெரிய அளவிலான நிதியை (கார்பஸ்) காப்பீடு செய்தவர் உடனடியாக உருவாக்குகிறார். சாத்தியமாகும் இந்த பெரிய பணநிதி தான் காப்பீட்டை தனித்துவமாக்குகிறது மற்றும் அனைத்து நிதி தயாரிப்புகளிலும் இதற்கு எந்த மாற்றீடுமே இல்லாமல் செய்கிறது.

## C. அபாய மேலாண்மை அணுகுமுறைகள்

ஒருவர் காப்பீடு மட்டும் தான் அனைத்து வகையான அபாய சூழ்நிலைகளுக்கும் சரியான தீர்வா என்று கேட்கலாம். இதற்கான பதில் 'இல்லை' என்பதே.

தனிநபர்கள் தாங்கள் சந்திக்கும் அபாயங்களை எதிர்கொள்ளும் பல முறைகளில் காப்பீடும் ஒரு வழிமுறை. அபாயங்களை எதிர்கொள்ள மற்ற வழிமுறைகளும் உள்ளன, அவை கீழே விளக்கப்பட்டுள்ளன:

### 1. அபாய தவிர்ப்பு (Risk avoidance)

ஒரு இழப்பு நிலைமையை தவிர்ப்பதன் மூலம் அபாயத்தை குறைப்பதே "அபாய தவிர்ப்பு" என அறியப்படுகிறது. எனவே ஒருவர் அபாயத்தை உண்டாக்கக்கூடிய செயல்பாடுகள் அல்லது சூழ்நிலைகளை, அல்லது சொத்து அல்லது நபர்களை கையாள்வதை தவிர்க்க முயற்சி செய்யலாம்.

## எடுத்துக்காட்டு

i. வேறு ஒருவருக்கு உற்பத்தி செய்யும் ஒப்பந்தத்தை அளிப்பதன் மூலம், சிலர் உற்பத்தி அபாயங்களை ஏற்க மறுக்கலாம்.

ii. ஒரு விபத்தை சந்திக்க பயந்து வீட்டிற்கு வெளியே போகாமல் இருக்கலாம் அல்லது வெளிநாட்டில் உடல்நலம் பாதிக்கப்படும் என்ற அச்சத்தினால் பயணமே செய்யாமல் இருக்கலாம்..

அபாய தவிர்ப்பு அபாயத்தை கையாள ஒரு எதிர்மறையான வழியாக கருதப்படுகிறது. தனிப்பட்ட மற்றும் சமூகங்களில் முன்னேற்றங்களை கொண்டுவர சில அபாயங்களை எதிர்கொள்வது தேவைப்படுகிறது. அத்தகைய நடவடிக்கைகளை தவிர்ப்பதன் மூலம், இது போன்ற அபாயமான நடவடிக்கைகளால் பெறக்கூடிய நன்மைகளை இழக்கக்கூடும்.

**2. அபாயத்தை தன்னிடமே வைத்திருத்தல் (Risk retention)**

சிலர் அபாயத்தின் தாக்கத்தை நிர்வகிக்க முயற்சி செய்து மற்றும் அபாயம் மற்றும் அதன் விளைவுகளை தாங்க முடிவெடுக்கின்றனர். இது சுய-காப்பீடு என்று அழைக்கப்படுகிறது.

**எடுத்துக்காட்டு**

அனுபவத்தின் அடிப்படையில், ஒரு வணிக நிறுவனத்திடம் ஒரு வரம்புவரை சிறிய இழப்புகளை தாங்கக்கூடிய திறன் இருந்தால், அபாயத்தை தங்களிடமே தக்க வைத்துக்கொள்ள முடிவு செய்யலாம்.

**3. அபாய குறைப்பு மற்றும் கட்டுப்பாடு (Risk reduction and control)**

அபாய தவிர்ப்பை விட இது நல்ல நடைமுறை மற்றும் பொருத்தமான அணுகுமுறை ஆகும். இதற்கு அர்த்தம் இழப்பு ஏற்படும் வாய்ப்பை குறைக்க மற்றும்/அல்லது இழப்பு ஏற்பட்டாலும் அதன் தீவிரத்தை குறைக்க நடவடிக்கைகளை எடுப்பது தான்.

**முக்கியமானவை**

இழப்பு ஏற்படும் வாய்ப்புகளை தடுக்க எடுக்கப்படும் வழிமுறைகள் 'இழப்பை தடுத்தல்' **(Loss Prevention)** எனப்படுகின்றன. இழப்பின் தீவிரத்தை குறைக்க எடுக்கப்படும் வழிமுறைகள் **'இழப்பு குறைப்பு' (Loss Reduction)**/ இழப்பை குறைந்தபட்சமாக்குதல் (Loss Minimisation) எனப்படுகின்றன.

அபாய குறைப்பில் பின்வரும் முறைகள் மூலம் இழப்புக்களின் அதிர்வெண் மற்றும்/அல்லது அளவை குறைப்பது அடங்கும்:-

a) **சரியான அபாய நடைமுறைகளில் பல்வேறு வகையான ஊழியர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சி வழங்குவது** -, எ.கா. (i) வழக்கமாக "தீயை கட்டுப்படுத்தும் பயிற்சிகளை" செய்விப்பது, (ii) கார்களில் சீட்பெல்ட்களை போடுவது, ஹெல்மெட் அணிவது.

b) **சுற்றுச்சூழலில் மாற்றங்களை செய்வது**, அதாவது "ஃபிசிகல்" நிலைமைகளை மேம்படுத்துவது, எ.கா. (i) நெருப்பு அலாரங்களை நிறுவுவது (ii) மலேரியா பரவுவதைக் குறைக்க கொசுக்களை அழிக்க ரசாயனங்களை தெளித்தல்

c) **ஆபத்தான அல்லது அபாயகரமான நடவடிக்கைகளில் செய்யப்படும் மாற்றங்கள்**, அதாவது இயந்திரங்கள், உபகரணங்களை பயன்படுத்தும் போது மற்றும் பிற பணிகளை செய்யும் போது -எ.கா. (i) கட்டுமான தளங்களுக்குள் ஹெல்மெட் அணிதல்; (ii) ரசாயனங்களைக் கையாளும் போது கையுறைகள் மற்றும் முகக் கவசங்களை அணிதல்.

d) **ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றுதல்**- நோய்வாய்ப்படும் நிகழ்வைக் குறைக்க உதவுகிறது - எ.கா. (i) வழக்கமான மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வது; (ii) தொடர்ந்து யோகா பயிற்சி செய்வது.

e) **பிரிப்பது (Separation),** அதாவது அபாயங்களை கட்டுப்படுத்தும் ஒரு முறையாக ஒரு இடத்திலேயே வைக்காமல், வெவ்வேறு இடங்களில் சொத்து பொருட்களை பிரித்துவைப்பது. எ.கா. (i) பெரிய அளவில் உள்ள எரியக்கூடிய பொருட்களை தனித்தனி இடங்களில் சேமித்து வைத்தல்; (ii) தொழிற்சாலைகளின் அபாயகரமான பகுதிகளில் தீ தடுப்பு கதவுகளை பொருத்துதல்

4. **அபாய நிதி (**Risk financing)

இது ஏற்படும் இழப்புகளை சந்திக்க நிதியை ஒதுக்குவதை குறிக்கிறது.

a) **சுய நிதி மூலம் அபாயத்தை வைத்திருத்தல்** இழப்புகள் நிகழும்போது அவற்றைத் தானே தாங்கிக் கொள்வதை உள்ளடக்கியது. நிறுவனம் அதன் சொந்த அல்லது கடன் வாங்கிய நிதி மூலம் அதன் சொந்த ஆபத்தை ஏற்று மற்றும் நிதியளிக்கிறது, இது **சுய-காப்பீடு** என்று அழைக்கப்படுகிறது.

b) **ஒரு பெரிய குழுவிற்குள் அபாயத்தை தக்கவைத்தல்:** ஏற்படக்கூடிய அபாயம் ஒரு பெரிய குழுவின் பகுதியாக இருந்தால், அதாவது பெற்றோர் நிறுவனம் போன்றது, அபாயத்தை இழப்புகளுக்கு நிதியளிக்கும் பெரிய குழுவிற்குள் தக்க வைத்துக் கொள்ளலாம், . இது பரஸ்பர சம்மதத்துடன் உருவாக்கப்பட்ட குழுவாகவும் இருக்கலாம்.

c) **அபாயத்தை கைமாற்றுதல்** (Risk transfer) என்பது அபாயத்தை வைத்திருத்தலுக்கு ஒரு மாற்றாக உள்ளது. இதில் இழப்புகளின் பொறுப்பு மற்றொரு நிறுவனத்திற்கு கைமாற்றப்படுகிறது

**அபாயத்தை கைமாற்றுவதற்கு உள்ள முக்கிய வடிவங்களில் காப்பீடு ஒன்றாகும்**, **மற்ற பல வடிவங்களின் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்வதற்குப் பதிலாக**, **மக்கள் காப்பீட்டை விரும்புகிறார்கள்**, **ஏனெனில் இது உறுதியையும் மன அமைதியையும் அளிக்கிறது.**

5. **உத்தரவாதமும் காப்பீடும்**

ஒரு நிகழ்வு நடக்கிறதோ இல்லையோ, அதற்கு எதிராக பாதுகாப்பை வழங்கும் பெரும்பாலான பொது காப்பீட்டு ஒப்பந்தங்களுக்கு காப்பீடு பயன்படுத்தப்படுகிறது, மேலும், இதில் நிகழ்வுக்குப் பிறகுதான் இழப்புத் தொகையை மதிப்பிட முடியும்.

உத்தரவாதம் என்பது நீண்ட காலத்திற்கு அல்லது இறக்கும் வரை உள்ள நிதிக் காப்பை குறிக்கிறது. வாழ்க்கையைப் பொறுத்தவரை, மரணம் (இழப்பு நிகழ்வு) நிகழும் என்பது உறுதி. நேரம் மட்டுமே நிச்சயமற்றது. மேலும், ஒருவர் இறக்கும் போது ஏற்படும் பொருளாதார இழப்பின் அளவை மதிப்பிட முடியாது. செலுத்த வேண்டிய இழப்புத் தொகையை, முன்கூட்டியே நிர்ணயிக்க வேண்டும். அதனால்தான் மக்கள் ஆயுள் காப்பீட்டில் 'உத்தரவாதம்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள்

**இத்தகைய நுட்பமான தொழில்நுட்ப வேறுபாடுகள் இருந்தாலும், இந்தியா உட்பட பெரும்பாலான சந்தைகளில் காப்பீடு' மற்றும் உத்தரவாதம்' என்ற சொற்கள் மாறிமாறி பயன்படுத்தப்படுகின்றன.** *[இந்தியாவில் உள்ள மிகப் பெரிய பொதுக் காப்பீட்டு நிறுவனத்திற்கு - நியூ இந்தியா* ***அஷ்யூரன்ஸ்*** *கம்பெனி லிமிடெட் என்று பெயர் மற்றும் இந்தியாவில் உள்ள வேறு எந்த ஆயுள் நிறுவனமும் அதன் பெயரில்* ***'அஷ்யூரன்ஸ்'*** *என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை!]*

**வரைப்படம் 5: காப்பீடு எவ்வாறு காப்பீடு பெற்றவருக்கு நஷ்டஈடு வழங்குகிறது**




**சுய-பரீட்சை 3**

பின்வருவதில் எது ஒரு அபாய கைமாற்றுதல் முறை?

I. வங்கி நிரந்தர வைப்பு (FD)

II. காப்பீடு

III. பங்குகள்

IV. ரியல் எஸ்டேட்

## D. அபாயத்தை நிர்வகிக்கும் கருவியாக காப்பீடு


நாம் அபாயம் பற்றி பேசும் போது, உண்மையில் ஏற்பட்ட இழப்பை பற்றி பேசாமல் ஏற்படக்கூடிய இழப்பு பற்றி குறிப்பிடுகிறோம். அதனால் இது எதிர்பார்க்கப்படும் இழப்பு. இந்த எதிர்பார்க்கப்படும் இழப்பின் செலவு இரண்டு காரணிகளை பெருக்கி கிடைக்கிறது

i. இழப்பை ஏற்படுத்தக்கூடிய எந்த ஆபத்திற்கு எதிராக காப்பீடு செய்கிறோமோ அது நடக்கக்கூடிய **நிகழ்தகவு (probability)**

ii. **தீவிரம்** (தாக்கம்) அல்லது அதன் விளைவாக நஷ்டப்பட்ட தொகை

**நிகழ்தகவு** மற்றும் **தீவிரம்** (இழப்பின் அளவு) இரண்டையுமே சார்ந்த நேர்விகிதத்தில் அபாய செலவும் அதிகரிக்கும். இது வெவ்வேறு வழிகளில் வேலை செய்கிறது-. (அ) இழப்பின் அளவு மிக அதிகமாகவும், அது நிகழும் நிகழ்தகவு குறைவாகவும் இருந்தால், அபாய செலவு குறைவாக இருக்கும், ஏனெனில் இந்த நிகழ்வுகள் மிகக் குறைவாக இருக்கலாம். (ஆ) இழப்பின் அளவு சிறியதாக இருந்தாலும், அது நிகழும் நிகழ்தகவு மிக அதிகமாக இருந்தால், அபாய செலவு அதிகமாக இருக்கும், ஏனெனில் இதுபோன்ற பல நிகழ்வுகள் நடக்கலாம். அபாயத்தை நிர்வகிப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாக காப்பீட்டைக் காணலாம். காப்பீடு செய்யப்பட்ட இழப்பின் காரணமாக ஒருவர் தன் சொத்துக்கள்/செல்வத்தை இழக்கின்ற நிதித் தாக்கத்திலிருந்து இது ஒருவரைப் பாதுகாக்கிறது.

**வரைப்படம் 6: காப்பீடை தேர்வு செய்யும்போது கருதவேண்டியவை**




## E. காப்பீடை தேர்வு செய்யும்போது கருதவேண்டியவை

காப்பீடு செய்யவேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிக்கும் போது, ஒருவர் ஏற்படக்கூடிய இழப்பை சுயமாக தாங்குவதற்கு ஆகும் செலவிற்கும் மற்றும் அபாயத்தை கைமாற்றும் செலவிற்கும் இடையே ஒப்பிடவேண்டும். இழப்பின் தாக்கம் மிக அதிகமாக இருக்கும் இடத்தில் காப்பீடு மிகவும் அவசியம்,

ஆனால் நிகழ்தகவு (அதனால் பிரீமியமும்) மிகக் குறைவு. . எ.கா. (i) நிலநடுக்கம் ஏற்படும் வாய்ப்பு; (ii) கப்பல் மூழ்கும் வாய்ப்பு.

a) **சிறியதிற்கு அதிக அபாயத்தை எதிர்கொள்ளவேண்டாம்**: அபாயத்தை கைமாற்றும் செலவுக்கும் கணக்கிடப்பட்ட நஷ்ட மதிப்புக்கும் இடையே ஒரு நியாயமான உறவு இருக்க வேண்டும்.

   ஒரு சாதாரண பால் பேனாவை காப்பீடு செய்வதில் அர்த்தம் உள்ளதா?

b) **உங்களால் இழக்கமுடிவதை விட அதிகமானவற்றை அபாயத்திற்கு உட்படுத்த வேண்டாம்**: ஒரு நிகழ்வின் விளைவாக ஏற்படக்கூடிய இழப்பு மிக பெரியதாக இருந்து, அதன் மூலம் நீங்கள் திவாலாகக்கூடிய நிலைமை ஏற்படும் என்றால், அபாயத்தை தன்னிடமே வைத்திருத்தலில் அர்த்தமில்லை..

   ஒரு பெரிய எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை அழிந்தால் அல்லது சேதமடைந்தால் என்ன நடக்கும்? நிறுவனத்தால் அந்த நஷ்டத்தை தாங்க முடியுமா?

c) **சாத்தியமான அபாய விளைவுகளை கவனமாக கருத்தில் கொள்ளவும்**: நிகழ்வு நடக்கின்ற (அதிர்வெண்) நிகழ்தகவு குறைவாக உள்ள ஆனால் சாத்தியமான தாக்கம் (தீவிரம்) அதிகமாக உள்ள சொத்துக்களை காப்பீடு செய்வதே சிறந்தது.

   விண்வெளி செயற்கைக்கோளின் இழப்பு மிக அதிகமாக இருக்கும், அதை காப்பீடு செய்தாக வேண்டும்.

**சுய-பரீட்சை 4**

பின்வரும் சூழல்களில் எதற்கு காப்பீடு அவசியமாக தேவைப்படுகிறது?

I. குடும்பத்தில் சம்பாதிக்கும் ஒரே ஒருவர் அகால மரணம் அடையலாம்
II. ஒரு நபர் அவரது பணப்பையை இழக்கலாம்
III. பங்கு விலைகள் மிகவும் குறைந்துவிடலாம்
IV. இயற்கை தேய்மானம் காரணமாக ஒரு வீட்டின் மதிப்பு குறையலாம்.

## F. காப்பீட்டு சந்தையில் ஈடுபடுபவர்கள்

காப்பீட்டுத் துறையில் காப்பீட்டு நிறுவனங்கள் (காப்பீட்டாளர்கள்) முக்கிய பங்கு வகிக்கின்றனர். காப்பீட்டாளர்களுடன் கூடுதலாக, காப்பீட்டு மதிப்பு சங்கிலியின் ஒரு பகுதியாக வேறு பல தரப்பினரும் உள்ளனர். முழு சந்தையையும் ஒழுங்குபடுத்தும் காப்பீட்டு ஒழுங்குமுறையாளரும் இருக்கிறார்

முகவர்கள், தரகர்கள், வங்கிகள் (பாங்கஷ்யூரன்ஸ் மூலம்) காப்பீட்டு சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் விற்பனைப் புள்ளிகள் போன்ற இடைத்தரகர்கள், வாய்ப்பாளர்கள்/காப்பீடு செய்துள்ளவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களின் தேவைகளைக் கண்டறிந்து, அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கிடைக்கும் பாலிசிகள் பற்றிய தகவல்களை வழங்குகின்றனர்.

அளவாய்வாளர்கள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்கள் / சரிசெய்பவர்கள் ஈடுக்கோரல்கள் மற்றும் துணை வேலைகளை மதிப்பிடுகின்றனர். மூன்றாம் தரப்பு நிர்வாகிகள் உடல்நலம் மற்றும் பயணக் காப்பீட்டுக் ஈடுக்கோரல்களைக் கையாள்கின்றனர். அனைத்து இடைத்தரகர்களுக்கும் வாடிக்கையாளரை பற்றிய பொறுப்பிருப்பதாக விதிமுறைகள் வழங்குகின்றன.

முகவர்கள், காப்பீட்டு நிறுவனத்திற்கும் காப்பீடு செய்தவருக்கும் இடையில் இடைத்தரகர்களாக இருப்பதால், காப்பீடு செய்பவருக்குள்ள அபாயம் பற்றிய அனைத்துத் தகவல்களும் காப்பீட்டாளருக்கு வழங்கப்படுவதை உறுதிசெய்யும் பொறுப்பு அவர்களுக்கு உள்ளது.

**முக்கியமானவை**

**வாய்ப்பாளரிடம் (வாடிக்கையாளர்) காப்பிட்டு முகவர்/ இடைத்தரகருடைய கடமை**

ஐஆர்டிஏஜ ஒழுங்குவிதிகள் வாய்ப்பாளரிடம் இடைத்தரகருக்கு சில பொறுப்புகள் இருப்பதாக வழங்குகின்றன. காப்பீட்டாளரிடமும் இடைத்தரகருக்கு பொறுப்பு உள்ளது.

காப்பீட்டாளர் அல்லது அவரது முகவர் அல்லது காப்பீட்டு இடைத்தரகர் ஆகியோரின் ஆலோசனையை வாய்ப்பாளர்கள் சார்ந்திருக்கும் பட்சத்தில், அந்த வாய்ப்பாளருக்கு அத்தகைய நபர் நியாயமான முறையில் ஆலோசனை வழங்க வேண்டும் என்று ஒழுங்குவிதி கூறுகிறது. ஒரு காப்பீட்டாளர் அல்லது அதன் முகவர் அல்லது வேறு இடைத்தரகர், முன்மொழியப்பட்ட காப்பீட்டிற்கான அனைத்து தகவல்களையும் வாய்ப்பாளரிடம் தரவேண்டும். அதை வைத்து வாய்ப்பாளர், அவர் தேவைகளுக்கு சரியாக பொருந்தும் சிறந்த காப்பீடை தேர்ந்தெடுப்பார்" என்றும் ஒழுங்குவிதி கூறுகிறது..

வாடிக்கையாளரால் முன்மொழிவு மற்றும் பிற இணைக்கப்பட்ட ஆவணங்கள் நிரப்பப்படாவிட்டால், வாடிக்கையாளரின் முன்மொழிவுப் படிவத்தின் முடிவில், படிவத்தின் உள்ளடக்கம் மற்றும் ஆவணங்களின் உள்ளடக்கம் அவருக்கு முழுமையாக விளக்கப்பட்டுள்ளது மற்றும் முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்தின்

முக்கியத்துவத்தை அவர் முழுமையாகப் புரிந்துகொண்டார் என்று சான்றிதழை இணைக்கலாம்.

வாடிக்கையாளர் காப்பீட்டாளருக்கு பிரீமியத்தை செலுத்தும்போது, காப்பீட்டாளர் ரசீதை வழங்குவது அவசியம். அதாவது, பிரீமியம் முன்கூட்டியே செலுத்தப்பட்டாலும் கூட ரசீது தேவை.

## G. சமூகத்தில் காப்பீட்டின் பங்கு

காப்பீட்டு நிறுவனங்கள் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. நாட்டின் செல்வம் காக்கப்படுவதை மற்றும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய அவர்கள் பெருமளவுக்கு பங்கேற்கிறார்கள். அவர்களின் சில பங்களிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

a) காப்பீடு பரஸ்பர நன்மையை வழங்கும் கொள்கையின் அடிப்படையில் நிறுவப்பட்டது, இதில் சமூகத்தின் கூட்டு சக்தியானது பொருளாதார இழப்பை சந்திக்கும் துரதிருஷ்டவசமான சில உறுப்பினர்களுக்கு ஆதரவளிப்பதற்காக ஒன்றிணைக்கப்படுகிறது. காப்பீட்டுக்கு மாற்றே கிடையாது..

b) காப்பீட்டு நிறுவனங்கள் சிறிய அளவிலான பிரீமியத்தை வசூலித்து, அவற்றை ஒரு பெரிய நிதியாக சேகரிக்கின்றன. இந்த நிதிகள் பாலிசிதாரர்களின் நலன்களுக்காகவும் சமூகத்தின் நலனுக்காகவும் வைக்கப்பட்டு முதலீடு செய்யப்படுகின்றன. அவர்கள் தேவையில்லாமல் ஊக முயற்சிகளில் முதலீடு செய்யவில்லை.

c) விபத்துக்கள் அல்லது தற்செயலான நிகழ்வுகளால் ஏற்படும் இழப்புகளுக்கு எதிராக காப்பீடு செய்துள்ள ஏராளமானவர்களுக்கு- தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு - பாதுகாப்பின் பலனை காப்பீடு வழங்குகிறது. இது மூலதனத்தைப் பாதுகாத்து, வணிகம் மற்றும் தொழில் வளர்ச்சிக்காக அதை வழங்குகிறது, இது நாட்டின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

d) வணிக மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு வழிவகுக்கும் மூலதனத்தின் முதலீட்டை காப்பீடு செயலாக்குகிறது. இது தொழில்முனைவோருக்கு உள்ள பயம், கவலை மற்றும் பதட்டம் ஆகியவற்றை அகற்ற உதவுகிறது.

e) பல வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் சொத்துக்கள் இழப்பு அல்லது சேதத்திற்கு எதிராக காப்பீடு செய்யப்படாவிட்டால், கடன்களை

வழங்குவதில்லை. அவர்களில் பலர் பாலிசியை இணைப் பாதுகாப்பாக ஒதுக்குமாறு வலியுறுத்துகின்றனர். .

f) பெரிய சிக்கலான அபாயங்களை ஏற்றுக்கொள்வதற்கு முன், பொது காப்பீட்டாளர்கள் தகுதிவாய்ந்த பொறியாளர்கள் / பிற நிபுணர்கள் மூலம் சொத்தை ஆய்வு செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். அவர்கள் அபாயத்தை மதிப்பிடுகின்றனர் மற்றும் அபாயத்தைக் குறைக்க அபாய மேலாண்மை நடவடிக்கைகளை பரிந்துரைக்கின்றனர் மற்றும் மதிப்பீட்டிற்கு உதவுகின்றனர்.

g) காப்பீடானது வர்த்தகம், கப்பல் போக்குவரத்து மற்றும் வங்கி சேவைகள் ஆகியவற்றின் மூலம் நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டுகிறது.

h) காப்பீட்டு நிறுவனங்கள் தீயினால் ஏற்படும் இழப்பை தடுப்பது, சரக்கு இழப்பை தடுப்பது, தொழில்துறை பாதுகாப்பு மற்றும் சாலை பாதுகாப்பு துறைகளில் ஈடுபட்டுள்ள பல நிறுவனங்களுடன் தொடர்பை வைத்திருக்கன்றன.

i) காப்பீடு வழங்கும் பாதுகாப்பு காரணமாக தொழில்முனைவோர்கள் புதிய அல்லது ஒப்பீட்டளவில் தெரியாத துறைகளில் முதலீடு செய்வதற்கான நம்பிக்கையை பெறுகிறார்கள்.

**தகவல்**

காப்பீடு மற்றும் சமூக பாதுகாப்பு

a) சமூக பாதுகாப்பு வழங்குவது மாநிலத்தின் பொறுப்பாகும். அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் சமூகப் பாதுகாப்பிற்கான ஒரு கருவியாக கட்டாயமாகவோ அல்லது தன்னிச்சையாகவோ காப்பீட்டைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது.. தொழிலாளர் அரசு காப்பீட்டு சட்டம் (Employees State Insurance Act), 1948 மூலம் தொழிலாளர் மாநில காப்பீட்டு கழகம் (Employees State Insurance Corporation) மூலம் காப்பீடு செய்யப்பட்ட தொழில்துறை ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு நோய், இயலாமை, மகப்பேறு மற்றும் இறப்பு சமயத்தில் ஏற்படும் செலவுக்கு பணத்தை வழங்குகிறது.

b) காப்பீட்டு நிறுவனங்கள், அரசு ஆதரவுள்ள பின்வரும் சமூக பாதுகாப்பு திட்டங்களில் முக்கியமான பங்கை வகிக்கின்றன.

1. PMJJBY - பிரதமரின் ஜீவன் ஜோதி பீமா யோஜனா
2. PMSBY - பிரதமரின் சுரக்ஷா பீமா யோஜனா

3. PMFBY - பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம்

4. PMJAY - பிரதமரின் ஜன் ஆரோக்கிய யோஜனா (ஆயுஷ்மான் பாரத்)

5. PMVVY - பிரதமரின் வய வந்தனா யோஜனா - ஒரு ஓய்வூதியத் திட்டம்

6. APY - அடல் பென்ஷன் யோஜனா

இவை மற்றும் பிற அரசு திட்டங்கள் இந்திய சமூகம்/சமுதாயத்திற்கு நன்மை வழங்கி வருகின்றன.

c) அரசாங்கத் திட்டங்களை ஆதரிப்பதுடன், சமூகப் பாதுகாப்பை வழங்குவதை இறுதி நோக்கமாகக் கொண்ட வணிக அடிப்படையில் காப்பீட்டுத் துறை காப்பீடுகளை வழங்குகிறது. **கிராமப்புறக் காப்பீட்டுத் திட்டங்கள்**, வணிக அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு, கிராமப்புறக் குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளன.

**சுய-பரீட்சை 5**

பின்வரும் காப்பீட்டுத் திட்டங்களில் எது இந்திய அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுகிறது?

I. பிரதமரின் ஜன் ஆரோக்கிய யோஜனா - ஆயுஷ்மான் பாரத்

II. பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம்

III. பிரதமரின் சுரக்ஷா பீமா யோஜனா

IV. மேலுள்ள அனைத்தும்

**சுருக்கம்**

- காப்பீடு அபாய சேர்மம் மூலம் செய்யப்படும் அபாய கைமாற்றம் ஆகும்.
- இன்று நடைமுறையில் உள்ள காப்பீட்டு வணிகம் தொடங்கிய இடம், லண்டன் லாயிட்ஸ் காபி ஹவுஸ் என்று தெரியவருகிறது.
- ஒரு காப்பீடு ஏற்பாடில் பின்வருபவை உள்ளன:
  - ✓ சொத்து,
  - ✓ அபாயம்,
  - ✓ ஆபத்து,

- ✓ ஒப்பந்தம்,
- ✓ காப்பீட்டு நிறுவனம் மற்றும்
- ✓ காப்பீடு பெற்றவர்

- ஒரே மாதிரி சொத்துக்களை கொண்ட மற்றும் ஒரே மாதிரி அபாயங்களுக்கு உள்ளாகக்கூடிய நபர்கள் ஒரு பொதுவான நிதி சேர்மத்தில் பங்கேற்கிற போது அது சேர்மம் என அறியப்படுகிறது.
- காப்பீடை தவிர, அபாயத்தை நிர்வகிக்கும் மற்ற வழிகளாக உள்ளவை:
  - ✓ அபாய தவிர்ப்பு,
  - ✓ அபாய கட்டுப்பாடு,
  - ✓ அபாயத்தை தன்னிடமே வைத்திருத்தல்,
  - ✓ அபாய நிதி
  - ✓ அபாய கைமாற்றல்
- காப்பீடின் அடிப்படை விதிகள்:
  - ✓ இழக்க முடிவதை விட அதிகமாக அபாயத்தின் மதிப்பிடு இருக்கக்கூடாது.
  - ✓ கவனமாக அபாயத்தின் சாத்தியமுள்ள வெளிப்பாடுகள் அனைத்தையும் படிக்கவும் மற்றும்
  - ✓ சிறியதிற்கு அதிக அபாயத்தை எதிர்கொள்ளவேண்டாம்

**முக்கிய வார்த்தைகள்**

1. அபாயம்
2. சேர்மம்
3. சொத்து
4. அபாய சுமை
5. அபாயத்தை தவிர்த்தல்
6. அபாய கட்டுப்பாடு
7. அபாயத்தை தன்னிடமே வைத்திருத்தல்
8. அபாய நிதி
9. அபாய கைமாற்றல்

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

**பதில்** 1 - சரியான பதில் விருப்பம் II.

**பதில்** 2 - சரியான பதில் விருப்பம் III.

**பதில்** 3 - சரியான பதில் விருப்பம் II.

**பதில்** 4 - சரியான பதில் விருப்பம் I.

**பதில்** 5 - சரியான பதில் விருப்பம் IV.

# அத்தியாயம் C-02

# காப்பீட்டின் முக்கிய ஆக்கக்கூறுகள்

**அத்தியாயத்தின் அறிமுகம்**

இந்த அத்தியாயத்தில், காப்பீட்டின் செயல்பாட்டைக் கட்டுப்படுத்தும் பல்வேறு முக்கிய ஆக்கக்கூறுகள் மற்றும் காப்பீட்டுக் கொள்கைகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

A. காப்பீட்டு ஆக்கக்கூறுகள்

சொத்துக்கள் மற்றும் அபாயம்

இடையூறு மற்றும் ஆபத்து

அபாய நிதி சேர்மம்

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு ஒருவருக்கு பின்வருவது புரியும்:

1. சொத்துக்களை பற்றி
2. அபாயம், இடையூறுகள் மற்றும் ஆபத்துகளைப் பற்றி
3. அபாய மேலாண்மையின் முக்கியத்துவத்தை பாராட்டமுடியும்
4. காப்பீட்டில் அபாய நிதி சேர்மம் பற்றி புரியும்

**A. காப்பீட்டின் ஆக்கக்கூறுகள்**

காப்பீட்டு செயல்முறையில் உள்ள நான்கு ஆக்கக்கூறுகளை நாம் பார்த்திருக்கிறோம்

- ✓ சொத்து
- ✓ அபாயம்
- ✓ அபாய நிதி சேர்மம்

இப்பொழுது கொஞ்சம் விரிவாக, காப்பீட்டு செயல்முறையின் பல்வேறு ஆக்கக்கூறுகளை பார்ப்போம்.

1. சொத்து

**வரையறை**

'அதன் உரிமையாளருக்கு சில நன்மைகளைத் தரும் மற்றும் ஒரு பொருளாதார மதிப்புள்ள எதுவும்' சொத்து என வரையறுக்கப்படுகிறது.

ஒரு சொத்தில் பின்வரும் அம்சங்கள் இருக்கவேண்டும்:

- **பொருளாதார மதிப்பு:** ஒரு சொத்திற்கு பொருளாதார மதிப்பு இருக்க வேண்டும். மதிப்பை இரண்டு வழிகளில் குறிப்பிடலாம்.

a) **வருமானத்தை உண்டாக்குவது (Income generation):** சொத்து பலனளிக்கக்கூடியதாக இருக்கலாம் மற்றும் வருமானத்தை ஈட்டலாம்..

**எடுத்துக்காட்டு**

பிஸ்கட் உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் ஒரு இயந்திரம், அல்லது பாலை தரும் மாடு, இவை இரண்டுமே அவற்றின் உரிமையாளர்களுக்கு வருமானத்தை உண்டாக்குகின்றன. ஆரோக்கியமான தொழிலாளியும் நிறுவனத்திற்கு ஒரு சொத்தாக இருக்கிறார்.

b) தேவைகளை பூர்த்திசெய்வது: ஒரு சொத்தால் ஒன்று அல்லது கூட்டாக பல தேவைகளை திருப்தி செய்து மதிப்பை கூட்ட முடியும்.

**எடுத்துக்காட்டு**

ஒரு ஃப்ரிட்ஜ் அதாவது குளிர்சாதன பெட்டி குளிர்வித்து உணவை காக்கிறது, ஒரு கார் பயணம் செய்ய சௌகரியமாகவும் வசதியாகவும்

உள்ளது, இதேபோல் நோய் இல்லாத ஒரு உடல் தனக்கும் மற்றும் குடும்பத்திற்கும் மதிப்பை கூட்டுகிறது.

- **பற்றாக்குறை மற்றும் உடைமை** (Scarcity and ownership)

காற்று மற்றும் சூரிய ஒளி பற்றி என்ன சொல்லலாம்? அவை சொத்துக்கள் இல்லையா?- **இதற்கான பதில் 'இல்லை' என்பதே.**

உண்மையில், மிக சில பொருட்களே காற்று மற்றும் சூரிய ஒளி போன்று விலைமதிக்க முடியாதவை. இவை இல்லாமல் நம்மால் உயிர் வாழ முடியாது. ஆனால், பொருளாதார அர்த்தத்தில் அவைகளை சொத்துக்கள் என கருத முடியாது.

இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன:

- ✓ அவைகளின் விநியோகம் ஏராளமாக உள்ளது மற்றும் பற்றாக்குறை இல்லை.
- ✓ அவை எந்த ஒரு தனிப்பட்டவருக்கும் சொந்தமானதில்லை ஆனால் சகலருக்கும் இலவசமாக கிடைக்கிறது.

இதன் அர்த்தம், சொத்தாக தகுதி பெற இரு நிபந்தனைகள் உள்ளன - அதன் பற்றாக்குறை மற்றும் அதற்கு உடைமையாளர் யாராவது அல்லது யாருக்காவது அது உடைமையாக இருக்கவேண்டும்

- **சொத்துக்களின் காப்பீடு**

எதிர்பாராத நிகழ்வுகளால் ஏற்படும் நிதி இழப்புகளுக்கு எதிராக மட்டுமே காப்பீடு பாதுகாப்பை வழங்குகிறது, அதில் இயற்கையான தேய்மானத்தால் ஏற்படும் இழப்புகள் வராது.

காப்பீட்டால், **இழப்பு அல்லது சேதத்தில் இருந்து சொத்தை பாதுகாக்க முடியாது** என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். காப்பீடு உள்ளதோ இல்லையோ ஒரு நிலநடுக்கம் வீட்டை அழித்துவிடும். இழப்பின் பொருளாதார தாக்கத்தை குறைக்க ஒரு தொகையை இழப்பீடாக மட்டுமே காப்பீட்டு நிறுவனத்தால் தரமுடியும்.

ஏதாவது உடன்படிக்கை மீறப்பட்டாலும் இழப்புகள் ஏற்படலாம்.

எடுத்துக்காட்டு

வாங்குபவர் அனுப்பப்பட்டுள்ள இறக்குமதி பொருட்களை ஏற்க மறுத்தால் அல்லது பணம் செலுத்தாவிட்டால் ஏற்றுமதியாளருக்கு பெரும் நஷ்டம் ஏற்படும்.

---

- **ஆயுள் காப்பீடு**

நம் வாழ்க்கையை பற்றி என்ன? நம் சொந்த வாழ்வு மற்றும் நம் அன்புக்குரியவர்களின் வாழ்வை விட விலைமதிக்கமுடியாதது வேறு எதுவுமே உண்மையில் இல்லை. விபத்து மூலம் அல்லது நோய் வரும்போது நம் வாழ்வு தீவிரமாக பாதிக்கப்படலாம்.

இது இரண்டு வழிகளில் பாதிப்பை ஏற்படுத்த முடியும்:

- ✓ முதலில் குறிப்பிட்ட நோயிற்கான சிகிச்சை செலவுகள்
- ✓ இரண்டாவதாக, மரணம் அல்லது உடல் இயலாமை காரணமாக, பொருளாதார வருவாயை இழக்கலாம்.

இந்த வகையான இழப்புகள் நபரின் காப்பீட்டு மூலம் அல்லது தனிப்பட்ட வழிகளில் காப்பீடு செய்வதன் மூலம் பாதுகாக்கப்படுகின்றன. மதிப்புள்ள சொத்துக்கள் [அதாவது வருவாயை தருவது அல்லது சில தேவைகளை பூர்த்தி செய்வது]; எதையாவது இழப்பதால் [விபத்து காரணமாக அல்லது தற்செயலான நிகழ்வுகள் மூலம்] நிதி சார்ந்த இழப்புகள் [பணத்தின் அடிப்படையில் அளவிடக்கூடிய மாதிரி] ஏற்படுகிறதோ, அதற்கெல்லாம் காப்பீடு செய்வது சாத்தியமாகிறது.

எனவே இந்த சொத்துக்கள் பொதுவாக காப்பீட்டு செய்யப்படும் விஷயங்கள் என காப்பீடு சம்பந்தப்பட்ட உரையாடல்களில் குறிப்பிடப்படுகிறது.

**2. அபாயம்**

காப்பீட்டு செயல்முறையின் இரண்டாவது ஆக்கக்கூறு, அபாயத்தின் கருத்தாக இருக்கிறது. அபாயம் என்பதை **இழப்பின் வாய்ப்பை (chance of a loss)** என வரையறுக்கலாம். ஒரு நிகழ்வு நடந்தால் ஏற்படக்கூடிய இழப்பு அல்லது சேதத்தை அபாயம் குறிக்கிறது என்று இதன் மூலம் தெரிகிறது. [அபாயம் சில சமயங்களில் காப்பீட்டின் விஷயத்தைக் குறிப்பிடவும் பயன்படுத்தப்படுகிறது.] நாம் பொதுவாக நம் வீடு எரிந்துவிடும் அல்லது நம் கார் விபத்துக்கு உள்ளாகும் என்று எதிர்பார்ப்பதில்லை. எனினும் அது நடக்கலாம்.

வீடு எரிவதால் அல்லது திருட்டுப் போவதால் ஏற்படும் பொருளாதார இழப்பு அல்லது ஒரு விபத்து ஏற்படுத்தும் கால் இழப்பு போன்றவை அபாயங்களின் உதாரணங்களாக உள்ளன.

இது இரண்டு தாக்கங்களை கொண்டுள்ளது.

i. **முதலாவதாக**, இந்த இழப்பு நடக்கலாம் அல்லது நடக்காமலும் போகலாம்.

ii. **இரண்டாவதாக**, எந்த நிகழ்வு நடந்தால் உண்மையிலேயே இழப்பு ஏற்படுகிறதோ, அது **ஆபத்து** என அறியப்படுகிறது. இது இழப்பின் காரணமாக இருக்கிறது

எடுத்துக்காட்டு

ஆபத்துக்களுக்கான உதாரணங்கள் தீ, பூகம்பம், வெள்ளம், மின்னல், கொள்ளை, மாரடைப்பு போன்றவை.

---

**இயற்கையாக ஏற்படும் தேய்மானம்**

எதுவுமே நிரந்தரமாக நீடிக்காது என்பது தான் உண்மை. ஒவ்வொரு சொத்தும் செயல்பட மற்றும் லாபங்களை விளைவிப்பதற்கு ஒரு வரையறுக்கப்பட்ட ஆயுளை கொண்டுள்ளது. இது ஒரு இயற்கையான செயல்முறையாகும், மேலும் ஒருவர் தனது மொபைல்கள், வாஷிங் மெஷின்கள்.மற்றும் துணிகள் தேய்ந்து போனவுடன் அவற்றை நிராகரிக்கிறார் அல்லது மாற்றுகிறார். எனவே சாதாரண தேய்மானத்தால் ஏற்படும் இழப்புகள் காப்பீடு செய்யப்படுவதில்லை.

**அபாயத்திற்கு உள்ளாகுதல்:** ஆபத்து ஏற்பட்டால் இழப்பும் ஏற்படும் என்பது அவசியமில்லை. கடலோர ஆந்திரப்பகுதியில் வரும் வெள்ளத்தினால் மும்பையில் உள்ள நபருக்கு எந்த இழப்பும் வராது. இழப்பு ஏற்பட சொத்து ஆபத்திற்கு உள்ளாகி இருக்கவேண்டும். அபாயத்திற்கு உள்ளாகுதல் மட்டுமே காப்பீடு மூலம் இழப்பீடை பெற போதிய காரணம் இல்லை.

எடுத்துக்காட்டு

எந்தவித சேதத்தையும் விளைவிக்காமல் தொழிற்சாலை வளாகத்தில் தீ பற்றியிருக்கலாம். ஆபத்தின் விளைவாக உண்மையான பொருளாதார (நிதி) இழப்பு ஏற்பட்டால் மட்டுமே காப்பீடு அங்கு செயல்பாட்டிற்கு வருகிறது.

---

**அபாயத்திற்கு உள்ளாகக்கூடிய அளவு (Degree of risk exposure):**

இரண்டு சொத்துக்கள் ஒரேவித ஆபத்திற்கு உள்ளாகலாம் ஆனால் இழப்பின் வாய்ப்பு அல்லது இழப்புத் தொகை வெகுவாக மாறுபடலாம். தண்ணீர்

டாங்கரை விட, வெடிபொருட்களை கொண்டு செல்கின்ற வாகனத்தின் காரணமாக, தீயினால் அதிக இழப்பு ஏற்படலாம்.

### 3. அபாய மேலாண்மை

- **நஷ்டப்படக்கூடிய அளவின் தீவிரம்**

இது இழப்பின் அளவு மற்றும் தனிநபர் அல்லது வணிகத்தின் மீது, அதன் தாக்கத்தின் அளவு மூலம் கிடைக்கிறது. இந்த அடிப்படையில், அபாய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளை மூன்று வகையாக பிரிக்கலாம்

- **கடுமையானவை**

இழப்புகள் பெருமளவில் இருந்தால்; இதன் விளைவாக மொத்த இழப்பு அல்லது திவாலான நிலையும் ஏற்படலாம். விபத்து குறிப்பிடத்தக்க மற்றும் கடுமையான தாக்கம், இயலாமை, உபகரணங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு சேதம் விளைவிக்கும் போது இழப்புகள் கடுமையானதாக இருக்கலாம், ஆனால் இது ஓரளவிற்கு மீளக்கூடியதாக இருக்கலாம். கடுமையான இழப்புகளில் தீவிரமான நிதி இழப்புகள் ஏற்படுவதும், செயல்பாடுகளைத் தொடர ஒரு நிறுவனத்தை கடன் வாங்க நிர்ப்பந்திப்பதும் அடங்கும்.

**எடுத்துக்காட்டு: கடுமையானவை**

- ✓ குட்காவில் ஒரு பெரிய பன்னாட்டு நிறுவனத்தின் ஆலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ரூ 1 கோடி மதிப்புள்ள சரக்கு அழிகிறது. இழப்பு மிக அதிகமானது ஆனாலும் திவாலாகும் நிலைமைக்கு வழிவகுக்கிற அளவுக்கு பெரியதில்லை.
- ✓ கடற்கொள்ளையர் கப்பலில் இருந்து வரும் கடற்கணை ஒரு முழு பயணிகள் கப்பலை மூழ்கடிக்கும் ஆனால் பெரும்பாலான பயணிகள் காப்பாற்றப்படுகிறார்கள்.
- ✓ ஒரு பெரிய விபத்து விளைவாக ஏற்படும் சிறுநீரகப் பாதிப்பின் விளைவாக, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படுவதால், சிகிச்சையின் செலவு மிக அநியாயமாக இருக்கும்.

- **பேரழிவை தருபவை**

பேரழிவு இழப்புகள், நடைமுறையில் மீளமுடியாத வகையில், அதிக எண்ணிக்கையிலான மக்களின் இறப்பு அல்லது முழுமையான இயலாமை, சொத்துக்களின் பரவலான இழப்பு, குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, பேரழிவு இழப்புகள் பொதுவாக திடீர், பரவலான மற்றும் தடுக்க முடியாத பேரழிவுகளைக் குறிக்கின்றன.

**எடுத்துக்காட்டு: பேரழிவை தருபவை**

- ✓ சில கிராமங்களை முழுமையாக அழிக்கின்ற ஒரு பூகம்பம் அல்லது வெள்ளம்.
- ✓ ஒரு பெரிய பிரதேசத்தில் பரவியுள்ள பல கோடி மதிப்புள்ள நிறுவலை ஒரு பெரிய தீ விபத்து அழிக்கிறது
- ✓ உலக வர்த்தக மையத்தின் மீது நடந்த 9/11 தீவிரவாத தாக்குதலில், ஏராளமான மக்கள் காயம் அடைந்தனர்.
- ✓ கோவிட் - 19 போன்ற ஒரு தொற்றுநோய் உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு நோயை பரப்பியுள்ளது.

---

- ➢ **சிறிய அளவு/குறிப்பிடத்தகாத** (**Marginal/Insignificant**)

  சாத்தியமான இழப்புகள் குறிப்பிடற மாதிரி அதிகமில்லை மற்றும் எந்தவித தேவையற்ற நிதி சுமையும் இல்லாமல் எளிதாக ஒரு தனிநபரால் அல்லது நிறுவனத்தில் ஏற்கனவே உள்ள சொத்துக்கள் அல்லது தற்போதைய வருமானத்தில் இருந்து சமாளித்துவிட முடியும்.

**எடுத்துக்காட்டு**

- ✓ சிறிய கார் விபத்து காரணமாக ஒரு பக்கமாக உரசியதால் காரின் பெயிண்ட் சற்று சேதமடைந்து மற்றும் ஃபென்டர் சற்றே வளைந்து விடலாம்.
- ✓ ஜலதோஷம் மற்றும் இருமலால் தனிநபர் அவதிப்படுவது.

---

**4. இடையூறுகள் (**Hazard**) மற்றும் ஆபத்துக்கள்** (Perils)

இழப்பு அல்லது அதன் தீவிரத்தின் நிகழ்தகவை அதிகரிக்கும் நிலை அல்லது நிலைகள் மற்றும் இதன் மூலம் அபாயத்திற்கு வழிவகுத்து பாதிப்பு(களை) ஏற்படுத்துவதே இடையூறு என அறியப்படுகிறது. காப்பீட்டு நிறுவனங்கள் அபாயத்தை மதிப்பீடு செய்யும்போது, சொத்துக்கு உள்ளாகக்கூடிய இடையூறுகளையும் பொதுவாக கணக்கில் எடுத்துக்கொள்கின்றனர்.

காப்பீட்டு மொழியில் இடையூறு என்ற சொல், கொடுக்கப்பட்ட ஆபத்திலிருந்து எழும் இழப்புக்கான வாய்ப்பை உருவாக்கும் அல்லது அதிகரிக்கின்ற நிபந்தனைகளை அல்லது அம்சங்களை அல்லது பண்புகளைக் குறிக்கிறது. ஒரு அபாயம் வெளிப்படும் பல்வேறு இடையூறுகள் பற்றிய முழுமையான அறிவு ஏற்பளிப்புக்கு மிகவும் அவசியம். அபாயம், ஆபத்து மற்றும் இடையூறுகளின் இடையில் உள்ள இணைப்பை காட்ட சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சொத்து | ஆபத்து | இடையூறு |
|---|---|---|
| வாழ்க்கை | புற்றுநோய் | அதிகப்படியான புகைபிடித்தல் |
| தொழிற்சாலை | தீ | வெடி பொருள் கவனிக்கப்படாமல் விடப்படுவது |
| கார் | கார் விபத்து | ஓட்டுநர் கவனக்குறைவாக வாகனம் ஓட்டுவது |
| சரக்கு | புயல் | சரக்குகளில் நீர் கசிந்து கெட்டுப்போவது; நீர்ப்புகாக் கொள்கலன்களில் சரக்குகள் கட்டப்படவில்லை |

முக்கியமானவை

- **இடையூறுகளின் வகைகள் (Types of hazards)**

a) **பொருள்சார்ந்த இடையூறு (Physical hazard)** இழப்பின் வாய்ப்பை அதிகரிக்கும் உடல் அல்லது பொருள் சார்ந்த நிலை.

**எடுத்துக்காட்டு**

i. கட்டிடத்தில் குறைபாடுள்ள வயரிங்
ii. தண்ணீர் விளையாட்டுகளில் ஈடுபடுவது
iii. உட்கார்ந்தே பணியாற்றுகின்ற வாழ்க்கைமுறை

b) நடைமுறை சார்ந்த இடையூறு (Moral hazard) என்பது இழப்பின் அதிர்வெண்கள் அல்லது தீவிரத்தன்மையை பாதிக்கும் தனிப்பட்டவரின் நேர்மையின்மை அல்லது பண்புகளில் உள்ள குறைபாடுகளை குறிக்கிறது ஒரு நேர்மையற்ற தனிப்பட்ட மனிதர் மோசடி செய்து காப்பீட்டின் வசதியை தவறாக பயன்படுத்தி பணம் சம்பாதிக்க முயற்சி செய்யக்கூடும்.

**எடுத்துக்காட்டு**

ஒருவர் வேண்டுமென்றே ஒருவரின் சொத்துக்களுக்கு தீ வைத்தால் மற்றும் பாலிசியின் கீழ் இழப்புகளுக்காக ஈடுக்கோரல்களை சமர்ப்பித்தால், அத்தகைய ஈடுக்கோரல்கள் தெளிவாக மோசடியானவை மற்றும் நியாயமான முறையில் நிராகரிக்கப்படலாம்.

நடைமுறை சார்ந்த இடையூறின் சிறந்த உதாரணம், தொழிற்சாலையை காப்பீடு செய்த பின்னர் காப்பீட்டு தொகையை வாங்கும் பொருட்டு அதை எரித்து விடுவது அல்லது ஒரு பெரிய நோய் தொடங்கிய பின்னர் உடல்நலக் காப்பீட்டை வாங்குவது.

c) ***சட்டரீதியான இடையூறு*** (Legal hazard) *ஏற்படும் சேதத்திற்கு நஷ்டஈடு கொடுக்கும் பொறுப்புள்ள வழக்குகளில் அதிகமாக காணப்படுகிறது. சட்ட அமைப்பு அல்லது ஒழுங்குமுறை சூழலின் சில அம்சங்களால் இழப்புக்களின் நிகழ்வு அல்லது தீவிரத்தன்மையை அதிகரிக்க முடியுமென்றால் இவ்வாறு நடக்கிறது.*

**எடுத்துக்காட்டு**

விபத்துக்கள் நடந்தால் தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் சட்டம் இயற்றப்பட்டால் வழங்கவேண்டிய பணத்தொகை பொறுப்பை கணிசமாக உயர்த்தலாம்.

---

காப்பீட்டில் உள்ள பெரிய பிரச்சினையே, அபாயங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட இடையூறுகள் இடையே உள்ள உறவு தான். சொத்துக்கள், இந்த அடிப்படையில் தான் பல்வேறு அபாய வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. சம்பந்தப்பட்ட இடையூறுகள் அதிகமாக உள்ளதன் விளைவாக இழப்பு ஏற்படக்கூடிய நிலைகள் அதிகரித்தால், அதற்கு ஏற்ப காப்பீட்டிற்கு விதிக்கப்படும் விலையும் [அதாவது பிரீமியம்] அதிகரிக்கும்.

5. **காப்பீட்டின் கணித கோட்பாடு** (Mathematical principle of insurance) (**அபாய நிதி சேர்மம்**)

காப்பீட்டின் மூன்றாவது ஆக்கக்கூறு காப்பீட்டை சாத்தியமாக்குகின்ற கணித கோட்பாடு தான். இது அபாய நிதி சேர்ம கொள்கை எனப்படுகிறது.

**எடுத்துக்காட்டு**

தீ அபாயத்திற்கு உள்ளாகக்கூடிய 100000 கான்கிரீட் வீடுகள் இருக்கிறதாகவும், அதில் சராசரியாக ரூ. 50000 இழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பிருப்பதாக கருதவும். ஒரு வீட்டில் தீ விபத்து ஏற்படக்கூடிய வாய்ப்பு 1000-இல் 2 [அல்லது 0.002] என்றால், இதற்கு அர்த்தம் இழந்த மொத்த தொகையின் அளவு 10000000 [=50000 x 0.002 x 100000] ஆக இருக்கும்

நூறாயிரம் வீடுகளின் ஒவ்வொரு உரிமையாளரிடம் இருந்தும் ரூ. 100-ஐ காப்பீட்டு நிறுவனம் பங்களிப்பாக பெற்று மற்றும் இந்த பங்களிப்புகளை ஒரு நிதியாக சேகரிக்க முடிந்தால், அது தீயால் அவதிப்பட்ட துரதிருஷ்டவசமான சிலருக்கு இழப்பீடு தர போதுமானதாக இருக்கும்.

காப்பீடு செய்யப்படும் அனைவருக்கும் சமபங்கு [நியாயமாக] உள்ளதை உறுதி செய்ய, மேலுள்ள எடுத்துக்காட்டில் உள்ள வீடுகள் அனைத்துமே ஒரேமாதிரி அபாயத்திற்கு உட்படுவது அவசியம்.

a) **காப்பீட்டில் இந்த கோட்பாடு வேலை செய்கின்ற சரியான விதம் என்ன**?

ஒரே மாதிரி ஆபத்திற்கு உள்ளாகி, இழப்பால் பாதிக்கப்படக்கூடிய அனைத்து பாலிசிதாரர்களின் அபாயங்களும் பகிரப்பட்டு நிதி சேகரிக்கப்படுவதால், காப்பீட்டு நிறுவனத்தினால் அந்த அபாயத்தை மற்றும் அதனால் ஏற்படும் நிதி பாதிப்புகளையும் ஏற்றுக்கொள்ள முடிகிறது.

| பெரும் எண்ணிக்கை யில் மக்கள் | பிரீமியம் செலுத்து தல் | பிரீமியம் | இழப்பை சந்தித்த ஒரு சிலருக்கு ஈடுக்கோரலை செலுத்துதல் |
|---|---|---|---|
| பலர் பணம் செலுத்துகிறார் கள் | பிரீமியமா க சிறிய அளவில் பணம் கிடைக்கு ம் | இந்த சிறிய தொகைகள் ஒரு பொதுவான சேர்மமாக இணைக்கப்பட்டால், புள்ளிவிவர ரீதியாக மதிப்பிடப்பட்ட ஈடுக்கோரல்களை செலுத்தும் அளவுக்கு பெரிய தொகை கிடைத்துவிடும் | இழப்பை சந்தித்தவர்களுக்கு பெரிய தொகை வழங்கப்படுகிறது |

b) **அபாய சேகரிப்பு மற்றும் அதிக எண்ணிக்கைகளின் விதி (Risk pooling and the law of large numbers)**

சேதத்தின் நிகழ்தகவு [1000-இல் 2 அல்லது 0.002 என மேலே உள்ள உதாரணத்தில் கணிக்கப்பட்டுள்ளது] தான் பிரீமியம் நிர்ணயிக்கப்படுவதற்கு அடிப்படையாக இருக்கிறது. உண்மையான அனுபவங்களும் எதிர்பார்த்தபடியே இருந்தால் காப்பீட்டு நிறுவனம் எந்த இழப்பின் அபாயத்தையும் எதிர்கொள்ள வேண்டாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில், காப்பீடு செய்தவர்களிடம் சேகரித்த பல பிரீமியம் தொகைகளே ஆபத்தினால் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடை வழங்க முற்றிலும் போதுமானதாக இருக்கும். உண்மையான அனுபவம் எதிர்பார்த்ததை விட அதிக பாதகமாக மற்றும் சேகரிக்கப்பட்ட பிரீமியங்கள் இழப்பீடுகளை செலுத்த போதுமானதாக இல்லை என்றால் காப்பீட்டு நிறுவனம் அந்த அபாயத்தை எதிர்கொள்ள வேண்டும்.

காப்பீட்டு நிறுவனங்களால் அதன் கணிப்புகளை பற்றி எப்படி உறுதியாக இருக்கமுடியும்? "அதிக எண்ணிக்கைகளின் விதி" என்ற கோட்பாடின் காரணத்தால் இது சாத்தியம் ஆகிறது. அபாயங்களின் நிதி சேர்மம் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, மதிப்பிடப்பட்டுள்ள அல்லது எதிர்பார்க்கப்பட்ட சராசரி இழப்பிற்கு அதே அளவு நெருக்கமாக

இழப்புகளின் உண்மையான மதிப்பும் இருக்கும் என்று இந்த விதி கூறுகிறது.

c) காப்பீட்டு நிறுவனங்களிடம் கடன்தீர்க்கும் சக்தி இருக்க வேண்டும்::

அபாய சேர்மங்கள் மற்றும் உருவாக்கப்பட்ட பிரீமியம் சேர்மங்கள் ஆகியவை ஈடுக்கோரல்களின் தொகையை வழங்க போதுமானதாக இல்லை என்றால் (அவ்வாறு ஏற்பட்டால்), அபாய நிதி சேர்மங்கள் மற்றும் காப்பீட்டு அமைப்பே தோல்வியடையும். காப்பீட்டாளர்களிடம் சேர்மத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அளவுக்கு போதுமான பணம் இருக்க வேண்டும். அவர்களிடம் போதுமான பணம் இருந்தால், அவர்கள் கடன் தீர்க்கும் சக்தி உள்ளவர்களாக கருதப்படுவார்கள், மேலும் அவர்களின் கடமைகளைச் செய்ய அவர்களிடம் பணம் இல்லையென்றால், அவர்கள் திவாலாகிவிடுவார்கள்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எதிர்பார்க்கப்படும் மற்றும் உண்மையான ஈடுக்கோரல் சூழ்நிலைகளுக்கு இடையில் எதிர்பாராத விலகல்களை சந்திக்க காப்பீட்டாளர்கள் சில உபரி பணத்தை (அல்லது கடனளிப்பு வரம்பு -solvency margin) தங்களிடம் வைத்திருக்க வேண்டும். எதிர்கால கொடுப்பனவுகளுக்கான காப்பீட்டாளர்களின் கடப்பாடுகளை ஈடுகட்ட சொத்துக்கள் எந்த அளவிற்கு உள்ளன என்பதை கடனளிப்பு வரம்பு மதிப்பிடுகிறது. பல்வேறு நாடுகள் கடனளிப்பு வரம்பை மதிப்பிடுவதற்கு வெவ்வேறு நடவடிக்கைகளைப் பயன்படுத்துகின்றன. இந்தியாவில், ஐஆர்டிஏஐ ஆனது காப்பீட்டாளர்கள் குறைந்தபட்சம் 1.5 இன் கடனளிப்பு விகிதத்தை பராமரிக்க வேண்டும் என்று கட்டாயமாக்கி உள்ளது.

**எடுத்துக்காட்டு**

இதற்கான ஒரு எளிய விளக்கம், நாணயத்தை சுண்டி எறிந்தால் (toss) தலைகள் விழுவதற்கான நிகழ்தகவு ½ உள்ளது. ஆனால் நீங்கள் நாணயத்தை நான்கு முறை சுண்டி எறிந்தால் உண்மையில் 2 தலைகள் கிடைக்கும் என்று எப்படி உறுதியாக சொல்ல முடியும்?

சுண்டி எறியும் எண்ணிக்கை மிக அதிகமாகி முடிவிலியை நெருங்கும் போது தான், ஒவ்வொரு தரமும் இரண்டு சுண்டி எறிதலில் ஒரு முறை தலையை பெறும் வாய்ப்பு நெருக்கமானதாக மாறிவிடும்.

---

இதற்கு அர்த்தம், காப்பீட்டு நிறுவனங்களால் அதிகமான எண்ணிக்கையில் காப்பீடு செய்யமுடிந்தால் தான் உறுதியாக நிற்கமுடியும். பல ஆயிரங்களில்

வீடுகளை காப்பீடு செய்த காப்பீடு நிறுவனத்தை விட சில நூறு வீடுகளை மட்டுமே காப்பீடு செய்த நிறுவனம் அதிக மோசமாக பாதிக்கப்படும்.

| முக்கியமானவை |
| --- |

**ஒரு அபாயத்தை காப்பீடு செய்வதற்கான நிபந்தனைகள்**

காப்பீட்டு நிறுவனத்தின் பார்வையில் ஒரு அபாயத்திற்கு எதிரான காப்பீடு எப்போது பயனுள்ளதாக இருக்கும்?

காப்பீட்டு செய்வதற்காக கருதப்படும் அபாயத்தின் ஆறு பரந்த தேவைகள் கீழுள்ள பெட்டியில் தரப்பட்டுள்ளது.

i. இழப்புகளை சரியாக கணிக்க முடிகின்ற வகையில் **ஓரியல்புள்ள [ஒரே மாதிரி] ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய தொழில்கள்** கணிசமாக பெரிய அதிக அளவில் இருக்கவேண்டும். **அதிக எண்ணிக்கைகளின் விதிகளில்** இருந்து இது வருகிறது. இதில்லாமல் கணிப்புகள் செய்வது கடினமாக இருக்கும்

ii. **அபாயத்தால் உற்பத்தியாகும் இழப்பு திட்டவட்டமானதாக மற்றும் அளவிடக்கூடியதாக இருக்க வேண்டும்**. ஒரு இழப்பு ஏற்பட்டதையும் அதனால் நேர்ந்த இழப்பின் அளவையும் உறுதியாக சொல்ல முடியாவிட்டால் இழப்பீடை முடிவு செய்வதும் கடினமாக உள்ளது.

iii. **இழப்பு தற்செயலானதாக அல்லது எதிர்பாராததாக இருக்க வேண்டும்**. நடக்கலாம் அல்லது நடக்காமல் போகலாம் என்கிற மாதிரி ஒரு நிகழ்வின் விளைவாக அது இருக்க வேண்டும். நிகழ்வு காப்பீடு செய்தவரின் கட்டுப்பாட்டை தாண்டி நடந்திருக்க வேண்டும். எந்த காப்பீட்டு நிறுவனமும் காப்பீடு செய்தவர் வேண்டுமென்றே ஏற்படுத்திக்கொள்ளும் இழப்பிற்கு காப்பீடை வழங்கமாட்டார்கள்.

iv. **சிலரின் இழப்புகளை பலர் பகிர்ந்து கொள்வது** என்பது வேலை செய்ய காப்பீடு செய்த குழுவில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு சிறிய சதவீதம் மட்டுமே இழப்பால் பாதிக்கப்படவேண்டும்.

v. **பொருளாதார சாத்தியக்கூறு** (Economic feasibility): காப்பீட்டின் செலவானது சாத்தியமான இழப்புடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருக்க முடியாது; இல்லையெனில் காப்பீடு பொருளாதார ரீதியாக நிலைத்திருக்காது.

vi. **பொதுக் கொள்கை**: இறுதியாக ஒப்பந்தமானது பொதுக் கொள்கை மற்றும் அறநெறிக்கு மாறாக இருக்கக் கூடாது.

**சுய-பரீட்சை 1**

பின்வருவதில் எது காப்பீடு செய்யக்கூடிய அபாயத்தை குறிக்கவில்லை?

I. தீ
II. திருடப்பட்டபொருட்கள்
III. கொள்ளை
IV. கப்பல் பிடிபட்டதால் ஏற்பட்ட சரக்கின் இழப்பு

**சுருக்கம்**

a) காப்பீட்டு செயல்முறையில் நான்கு ஆக்கக்கூறுகள் உள்ளன (சொத்து, அபாயம், அபாய நிதி சேர்மம் மற்றும் காப்பீடு ஒப்பந்தம்).

b) அதன் உரிமையாளருக்கு சில நன்மைகளைத் தரும் மற்றும் ஒரு பொருளாதார மதிப்புள்ள எதுவுமே சொத்து தான்.

c) இழப்பு ஏற்படக்கூடிய ஒரு வாய்ப்பு அபாயத்தை குறிக்கிறது.

d) இழப்பு அல்லது அதன் தீவிரத்தின் நிகழ்தகவை அதிகரிக்கும் நிலை அல்லது நிலைகள் இடையூறு என அறியப்படுகிறது.

e) காப்பீட்டை சாத்தியமாக்கும், கணித கோட்பாடு தான் அபாய நிதி சேர்ம கொள்கை எனப்படுகிறது.

**முக்கிய வார்த்தைகள்**

a) சொத்து
b) அபாயம்
c) இடையூறு
d) அபாய நிதி சேர்மம்
e) அளித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல்
f) சட்டப்பூர்வமான கருதுகை

**சுய-பரீட்சைக்கான பதில்கள்**

பதில் 1 - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் C-03
# காப்பீட்டு கொள்கைகள்

## அத்தியாயத்தின் அறிமுகம்

இந்த அத்தியாயத்தில், காப்பீட்டின் வழிமுறைகளின் அடிப்படையாக செயல்படும் கோட்பாடுகளைப் பற்றி விவாதிக்கிறோம்.

a) "உபரிமா ஃபைட்ஸ்" (Uberrima fides) என்பது “கோரப்படுகிறதோ இல்லையோ, முன்மொழியப்படும் அபாயத்துக்கு உரிய அனைத்து அடிப்படை உண்மைகளையும் துல்லியமாகவும் முழுமையாகவும் தானாக முன்வந்து வெளிப்படுத்துவதற்கான ஒரு நேர்மறை கடமை" என வரையறுக்கப்படுகிறது. அனைத்து காப்பீட்டு ஒப்பந்தங்களும் ஊபரிமா ஃபைட்ஸ் கொள்கையின் அடிப்படையில் உள்ளன.

b) 'காப்பீடுப் பற்று' இருப்பது ஒவ்வொரு காப்பீட்டு ஒப்பந்தத்தின் ஒரு அத்தியாவசிய உட்பொருளாகவும் மற்றும் காப்பீட்டு சட்டத்தின் முன்-தேவையாகவும் கருதப்படுகிறது.

c) ஈட்டுறுதி (Indemnity) பாலிசிதாரர் எதிர்பாராத நிகழ்வால் பாதிக்கப்படும் போது அவரது இழப்பின் அளவிற்கு ஈடு கிடைப்பதை உறுதி செய்கிறது

d) கடன் பற்றுரிமை (Subrogation) என்றால் காப்பிடப்படும் பொருள் சார்ந்த அனைத்து உரிமைகளும் தீர்வுகளும் காப்பீடு பெற்றவரிடமிருந்து காப்பீட்டு நிறுவனத்திற்கு மாற்றி அளிக்கப்படுவது என்று அர்த்தம்.

e) ஒரே சொத்து ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருந்தால், அனைத்து காப்பீட்டாளர்களும் அளிக்கும் மொத்த இழப்பீட்டுத் தொகை உண்மையான இழப்பிற்கு மிகையாக இருக்கக்கூடாது என்பதையே 'பங்களிப்பு கோட்பாடு' குறிக்கிறது.

f) அண்மைக் காரணி காப்பீட்டின் ஒரு முக்கிய கொள்கை மற்றும் இதன் நோக்கம் இழப்பு அல்லது சேதம் ஏற்பட்ட விதம் என்றும் மற்றும் அது உண்மையிலேயே காப்பீடு செய்யப்பட்ட ஒரு ஆபத்தின் விளைவாக தான் ஏற்பட்டதா என்பதை கண்டறிவதில் தான் உள்ளது.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

A. ஊபரிமா ஃபைட்ஸ் (Uberrima fides)

B. காப்பீடுப் பற்று

C. அண்மைக் காரணி

D. ஈட்டுறுதி

E. கடன் பற்றுரிமை

F. பங்களிப்பு

## A. *உபரிமா ஃபைட்ஸ்* **(Uberrima Fides)**

காப்பீட்டு ஒப்பந்தங்களில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் உள்ளன, அவை கீழே விவாதிக்கப்பட்டுள்ளன:

**1.** உன்னத நன்னம்பிக்கை அல்லது உபரிமா ஃபைட்ஸ் அல்லது **(Utmost Good Faith or *'Uberrima Fides'* )**

இந்த காப்பீட்டு ஒப்பந்தத்தின் அடிப்படை கோட்பாடுகளில் ஒன்றான உன்னத நன்னம்பிக்கை அல்லது "உபரிமா ஃபைட்ஸ்" என்பது "கோரப்படுகிறதோ இல்லையோ, முன்மொழியப்படும் அபாயத்துக்கு உரிய அனைத்து அடிப்படை உண்மைகளையும் துல்லியமாகவும் முழுமையாகவும் தானாக முன்வந்து வெளிப்படுத்துவதற்கான ஒரு நேர்மறை கடமை" என வரையறுக்கப்படுகிறது.

பொதுவாக அனைத்து வணிகரீதியான ஒப்பந்தங்களும் அவர்களுடைய பரிவர்த்தனையில் நன்னம்பிக்கையைப் பின்பற்ற வேண்டும் என்றும் பொய்யோ ஏமாற்றோ இருக்கக் கூடாது என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு பின்பற்றப்படும் விதி "கவியட் எம்டர்" (Caveat Emptor) அதாவது 'வாங்குநர் கவனிக்க' **(Buyer Beware)** என்பதாகும். ஒப்பந்தம் செய்யப்படும் விஷயத்தை ஒப்பந்தம் செய்யும் தரப்புகள் ஆய்வுசெய்வது எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு தரப்பு மற்றொரு தரப்பினை தவறுதலாக வழிநடத்தாமல் சரியான பதில்களை அளிக்கும்வரை, அடுத்த தரப்பு ஒப்பந்தத்தை தவிர்ப்பதற்கான கேள்வியே எழாது.

காப்பீட்டு ஒப்பந்தங்கள் மாறுபட்ட வகையை சேர்ந்தவை, ஏனெனில் ஒப்பந்தம் செய்யப்படும் விஷயம் தொட்டுணர முடியாதது மற்றும் காப்பீட்டாளரால் அதை அறியமுடியாது. மீண்டும் இதில் முன்மொழிபவருக்கு மட்டுமே தெரிந்த பல அடிப்படை உண்மைகள் உள்ளன. காப்பீட்டாளர் பெரும்பாலும் தகவலை பெற முன்மொழிபவரை மட்டுமே முற்றிலும் நம்பியிருக்க வேண்டும். எனவே முன்மொழிபவருக்கு காப்பீடு விஷயத்தை பற்றி அனைத்து அடிப்படை உண்மைகளையும் காப்பீட்டாளர்களிடம் வெளியிடவேண்டிய சட்டபூர்வ கடமை உள்ளது. அதாவது, காப்பீடு ஒப்பந்தத்தின் விஷயத்தை பற்றிய எந்த உண்மையை பற்றியும் காப்பீடு பெற்றவர் திரித்துக்கூற கூடாது. காப்பீடு ஒப்பந்தங்களைப் பொறுத்தமட்டில் முழுப் பிரதிநிதித்துவம் மற்றும் முழு வெளிப்பாட்டின் இந்த உயர் கடப்பாடு, அவற்றை உன்னத நம்பிக்கையின் ஒப்பந்தங்களாக ஆக்குகிறது.

**உன்னத நன்னம்பிக்கை ஏதாவது ஒரு தரப்பால் அனுசரிக்கப் படாவிட்டால், ஒப்பந்தத்தை மற்ற தரப்பு தவிர்க்கமுடியும்**. இதற்கு அடிப்படையாக உள்ள தர்க்கம், குறிப்பாக எந்த காப்பீட்டு ஒப்பந்தத்தில் நுழையும் போதும், யாரையும் அவர் செய்கின்ற சொந்த தவறை லாபத்திற்காக பயன்படுத்த அனுமதிக்கமுடியாது.

a) **அடிப்படை உண்மை** என்பது ஒரு காப்பீட்டு ஏற்பாளர் அந்த அபாயத்தை ஏற்பதா எனத் தீர்மானிக்கவும், ஏற்பதானால் பிரீமய விகிதம் மற்றும் அதற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை தீர்மானிப்பதைப் பாதிக்கக்கூடிய ஒரு உண்மை என வரையறுக்கப்பட்டுள்ளது.

ஒரு வெளிப்படுத்தப்படாத உண்மை அடிப்படையானதா இல்லையா என்பது தனிப்பட்ட வழக்கின் சூழ்நிலையை பொறுத்தது. அது நீதி மன்றத்தில் மட்டுமே இறுதியில் முடிவு செய்யப்படுகிறது அபாயத்தைப் பாதிக்கும் உண்மைகளை காப்பீடு பெறுபவர் **வெளிப்படுத்த வேண்டும்**.

அடிப்படைத் தகவல் என்பது காப்பீடு நிறுவனங்கள் முடிவெடுப்பதற்கு துணைசெய்யும் தகவல்களாகும்:

- ✓ அவர்கள் அந்த அபாயத்தினை ஏற்பார்களா?
- ✓ அப்படி ஏற்றால், எந்த பிரீமிய விகிதத்தில் மற்றும் எந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில்?

பொதுச் சட்டத்தின்கீழ் உன்னத நன்னம்பிக்கையின் இந்த சட்டப்பூர்வ கடமை உருவாகிறது. முன்மொழிபவருக்குத் தெரிந்த அடிப்படை உண்மைகளை மட்டுமல்லாது அவர் அறிய வேண்டிய அடிப்படை உண்மைகளுக்கும் இந்தக் கடமை விரிவடைகிறது. அதே மாதிரி, காப்பீடு செய்தவருக்கு பாலிசி பற்றிய எந்த தகவலையும் மறைக்காமல் வழங்கும் கடமை காப்பீட்டாளருக்கு உள்ளது.

**எடுத்துக்காட்டு**

பின்வருபவை முன்மொழியும் சமயத்தில் முன்மொழிபவர் வெளிப்படுத்தவேண்டிய அடிப்படை உண்மைகளின் சில எடுத்துக்காட்டுகள்:

i. **ஆயுள் காப்பீடு**: சொந்த மருத்துவ வரலாறு, பரம்பரை நோய்களுக்கான குடும்ப வரலாறு, புகைபிடித்தல் மற்றும் குடிப்பது போன்ற பழக்கங்கள், பணிக்கு போகாத நாட்களின் விவரங்கள், வயது, பொழுதுபோக்குகள், முன்மொழிபவரின் வருமான விவரங்கள், ஏற்கனவே உள்ள ஆயுள் காப்பீட்டு பாலிசிகள் போன்ற நிதிசார்ந்த தகவல்கள் முதலியன

ii. **தீ காப்பீடு**: கட்டிடத்தின் அமைப்பு மற்றும் பயன்பாடு,. கட்டிடத்தின் வயது, அங்கே சேகரித்து வைக்கும் /உற்பத்தி பொருட்களின் இயல்பு முதலியன

iii. **கடல் சார்ந்த காப்பீடு**: பொருட்கள் விவரங்கள், பேக்கிங் அதாவது கட்டப்படும் முறை மற்றும் போக்குவரத்து முறை முதலியன

iv. **வாகன காப்பீடு**: வாகனத்தின் விவரங்கள், வாங்கிய தேதி, யார் டிரைவர் மற்றும் பிராந்திய பதிவு அதிகாரம் போன்ற விவரங்கள்

v. **உடல்நலக் காப்பீடு**: ஏற்கனவே இருக்கும் நோய், வயது போன்றவை.

b) **ஒரு உண்மை 'அடிப்படையானதாக' மாறும்போது: ஒருவர் வெளிப்படுத்த வேண்டிய சில வகையான அடிப்படை உண்மைகள்**, குறிப்பிட்ட அபாயத்திற்கான வெளிப்பாடு பொதுவாக எதிர்பார்க்கப்படுவதை விட அதிகமாக உள்ளதை குறிக்கிறது.

| **எடுத்துக்காட்டு** |
|---|

கடல் வழியாக எடுத்துச் செல்லப்படும் பொருட்களின் இடையூறை உண்டாக்கும் இயல்பு; நோயின் கடந்த கால வரலாறு, ஒரு வீட்டில் கொள்ளையடிக்கப்பட்ட வரலாறு.

i. அனைத்து காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்தும் பெற்ற முந்தைய பாலிசிகளின் இருப்பு மற்றும் அவற்றின் தற்போதைய நிலை

ii. முன்மொழிவுப் படிவத்தில் அல்லது காப்பீட்டுக்கான விண்ணப்பத்தில் உள்ள அனைத்துக் கேள்விகளும் அடிப்படையானவை என்றே கருதப்படுகின்றன. ஏனெனில், இவை காப்பீட்டின் விஷயம் சார்ந்த பல்வேறு அம்சங்கள் மற்றும் அபாயத்திற்கான வாய்ப்பு பற்றியும் உள்ளன. அந்தக் கேள்விகள் உண்மையாக மற்றும் அனைத்து வகைகளிலும் முழுமையாக பதிலளிக்கப்பட வேண்டும்.

பின்வருபவை வெளிப்படுத்த தேவையில்லாத உண்மைகளுக்கான சில உதாரணங்கள்.

| **தகவல்** |
|---|

a. **வெளிப்படுத்த தேவையில்லாத அடிப்படை உண்மைகள்**: காப்பீட்டு ஏற்பாளர் மூலம் குறிப்பிட்ட விசாரணை எதுவும் இல்லை எனில், முன்மொழிந்தவருக்கு பின்வரும் உண்மைகளை வெளிப்படுத்தவேண்டிய எந்தவித பொறுப்பும் இல்லை:

i. **அபாயத்தை குறைக்க நடைமுறைப்படுத்திய நடவடிக்கைகள்**, எ.கா.: ஒரு தீ அணைப்பான் (fire extinguisher) இருப்பது.

ii. **பாலிசிதாரருக்கு தெரியாத அல்லது அவர் அறியாத உண்மைகள்.** எ.கா.: அதிக இரத்த அழுத்தம் உள்ள ஒருவருக்கு பாலிசி எடுத்த நேரத்தில் அதை பற்றி தெரியாமல் இருந்திருந்தால், இந்த உண்மையை மறைத்ததாக அவர் மீது குற்றம் சாட்டமுடியாது.

iii. **நியாயமான விடாமுயற்சி மூலம் கண்டுபிடிக்கக்கூடிய உண்மைகள்-** ஒவ்வொரு அடிப்படை உண்மையையும் கூறவேண்டிய அவசியம் இல்லை. மேலும் தகவல் தேவை என்றால் காப்பீட்டு ஏற்பாளர்கள் அதை பற்றி நினைவாக கேட்கவேண்டும். எ.கா.: ஜவுளிக் கடைக்காக காப்பீடு செய்யும்போது, அந்தக் கடையில் உள்ள சில சிந்தடிக் ஆடைகள் எளிதில் எரியக்கூடியவை என்று சொல்லத் தேவையில்லை

iv. **சட்ட சம்பந்தமான விஷயங்கள்**: எல்லோருக்கும் இந்த நாட்டின் சட்டம் தெரிந்திருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது. எ.கா.: வெடிபொருட்களை சேமித்து வைப்பது பற்றிய நகராட்சி சட்டங்கள்

v. பாலிசிதாரருக்கு அவசியமில்லாததாக தோன்றுகின்றவை [அல்லது கூடுதல் தகவலின் தேவை தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால்].

அத்தகைய வழக்குகளில், காப்பீட்டு நிறுவனம் பதில்களை முழுமையற்றது என்ற அடிப்படையில் பின்னர் பொறுப்பை தட்டி கழிக்கமுடியாது.

---

b. **வெளிப்படுத்தல் கடமை:** முன்மொழிவு ஏற்கப்பட்டு மற்றும் பாலிசி வழங்கப்படும் வரை, அதாவது பேச்சுவார்த்தை நடக்கும் காலம் முழுவதும், ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்களில், வெளிப்படுத்தல் கடமை உள்ளது.

ஒரு தரம் பாலிசி ஏற்கப்பட்டுவிட்டால், அதற்கு பிறகு பாலிசியின் காலம் முழுவதும் எழும் எந்த அடிப்படை உண்மைகளையும் வெளியிட தேவை கிடையாது.

**எடுத்துக்காட்டு**

திரு ராஜன் பதினைந்து ஆண்டுகளுக்கு ஒரு ஆயுள் காப்பீட்டு எடுத்துள்ளார். பாலிசியை எடுத்து ஆறு ஆண்டுகளுக்கு பிறகு, திரு. ராஜனுக்கு சில இதய பிரச்சினைகள் ஏற்பட்டு மற்றும் அறுவை சிகிச்சையை மேற்கொள்ள வேண்டி வந்தது. திரு ராஜன் காப்பீட்டு நிறுவனத்திற்கு இந்த உண்மையை வெளியிட தேவையில்லை.

*[எனினும், உரிய காலத்தில் பிரீமியங்களை கட்ட தவறியதால் பாலிசி காலாவதியான நிலையில் இருந்து மற்றும் பாலிசிதாரர் பாலிசி ஒப்பந்தத்தை புதுப்பித்து மீண்டும் அமலில் கொண்டு வர நினைத்தால், புதுப்பிக்கும் நேரத்தில், புது பாலிசியில் செய்கிற மாதிரியே, அடிப்படையான மற்றும் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் வெளியிடும் கடமை அவருக்கு உள்ளது.]*

அவருக்கு உடல்நலக் காப்பீடு இருந்தால், பாலிசியைப் புதுப்பிக்கும் போது, இந்த உடல்நலப் பிரச்சினை குறித்து காப்பீட்டாளரிடம் திரு. ராஜன் தெரிவிக்க வேண்டும்.

இதேபோல், பொதுக் காப்பீட்டின் விஷயத்தில், ஒரு நிறுவனம்/ தொழிற்சாலைக்கான தீ காப்பீட்டுக் கொள்கையை புதுப்பிக்கும் போது, கட்டிடத்தின் ஆக்கிரமிப்பில் மாற்றம் செய்யப்பட்டிருந்தால், காப்பீடு செய்தவர் அதை காப்பீட்டாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

ஒரு கப்பலுக்கான தளத்திற்கான பாலிசியை புதுப்பிக்கும் நேரத்தில், வேறு வகையான சரக்குகளை எடுத்துச் செல்லும் வகையில் கப்பல் மாற்றப்பட்டிருந்தால், காப்பீடு செய்தவர் காப்பீட்டாளருக்குத் தெரிவிக்க வேண்டும்; எ.கா. பருப்புகளுக்கு பதிலாக அபாயகரமான இரசாயனங்களை எடுத்து செல்வது.

c. **வெளிப்படுத்தாமை சூழ்நிலைகள்**: பாலிசிதாரர் அடிப்படை உண்மைகளை பற்றி அமைதியாக உள்ளார், ஏனெனில் காப்பீட்டு நிறுவனம் எந்த குறிப்பிட்ட விசாரணையையும் எழுப்பவில்லை. காப்பீட்டு நிறுவனம் கேட்ட கேள்விகளுக்கு மழுப்பலான பதில்களை தந்த காரணத்தால் அத்தகைய சூழ்நிலைகள் வரலாம்.

   பெரும்பாலும் கவனக்குறைவால் [அறியாமையால் அல்லது எந்த எண்ணமும் இல்லாமல் இருக்கலாம்] அல்லது முன்மொழிந்தவர் அந்த உண்மை தேவையில்லை என்று நினைத்ததால் வெளிப்படுத்தாமல் இருந்திருக்கலாம். அப்படியிருந்தால், அது அப்பாவித்தனம்.

   ஆனால் உண்மையை வேண்டுமென்றே வெளிப்படுத்தாவிட்டால் அதை மறைத்ததாக கருதப்படுகிறது. அப்படியிருந்தால், அதில் ஏமாற்றும் நோக்கம் உள்ளது.

d. **திரித்துக் கூறுதல்**: காப்பீடு ஒப்பந்த சமயத்தில் நடக்கும் பேச்சுவார்த்தையில் வெளியிடப்பட்ட அறிக்கை பிரதிநிதித்துவம் என்று அழைக்கப்படுகிறது. இது உண்மையின் திட்டவட்டமான அறிக்கையாக அல்லது நம்பிக்கை, நோக்கம் அல்லது எதிர்பார்ப்பின் அறிக்கையாக

இருக்கலாம். இதில் உள்ள உண்மை கணிசமான அளவு சரியாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரதிநிதித்துவம் செய்வது நம்பிக்கை அல்லது எதிர்பார்ப்பு விஷயங்களை பற்றி இருக்கும் போது, அது நன்னம்பிக்கையுடன் தரப்படவேண்டும். திரித்துக்கூறுவதில் இரண்டு வகைகள் உள்ளன:

i. **அப்பாவித்தனமாக திரித்துக்கூறுதல்**-துல்லியமற்ற அறிக்கைகள், அதாவது எந்தவித மோசடியான நோக்கத்துடனும் கூறப்படாதவை.

ii. மறுபுறம், **மோசடிக்காக திரித்துக்கூறுதல்** என்பது காப்பீட்டு நிறுவனத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் அல்லது உண்மையை மதிக்காமல் பொறுப்பற்ற முறையில் வேண்டுமென்றே தரப்பட்ட தவறான அறிக்கைகள்.

ஏமாற்றும் நோக்கத்துடன் மறைத்திருந்தால், அல்லது உண்மை வெளிப்படுத்தாமை அல்லது திரித்துக்கூறுதல் இருந்தால் ஒரு காப்பீடு ஒப்பந்தம் பொதுவாகவே செல்லாததாகி விடுகிறது.

காப்பீட்டுச் சட்டம், 1938 இல் செய்யப்பட்ட திருத்தங்கள் (மார்ச், 2015) மோசடிக்காக பாலிசியே கேள்விக்குள்ளாக்கக்கூடிய நிபந்தனைகள் குறித்த சில வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளன. புதிய விதிமுறைகள் பின்வருமாறு

e. **மோசடி: காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 45 (2) இன் (2015 இல் திருத்தப்பட்டது**). கீழ் "மோசடி" என்ற சொல் குறிப்பிடப்பட்டுள்ளது அதன்படி, மோசடியின் அடிப்படையில் காப்பீட்டாளர் ஆயுள் காப்பீட்டு பாலிசியை குறிப்பிட்ட காலத்திற்குள் மட்டுமே கேள்விக்குட்படுத்த முடியும், அதற்கு பின்னர் செய்யமுடியாது. இருப்பினும், காப்பீட்டாளர்கள் (அ) பாலிசி வழங்கிய தேதி (ஆ) அபாயம் காக்கப்பட தொடங்கும் தேதி, (இ) பாலிசி புதுப்பிக்கப்பட்ட தேதி அல்லது (ஈ) ரைடர் தொடங்கிய தேதியிலிருந்து, இதில் எது கடைசியாக வருகிறதோ, மூன்று ஆண்டுகளுக்குள் மட்டுமே, பாலிசி மீது அவ்வாறு கேள்விகளை எழுப்ப முடியும்.

பாலிசி கேள்விக்குட்படுத்தப்பட்ட காரணங்களை காப்பீடு செய்தவர் அல்லது அவரது சட்டப்பிரதிநிதிகள், நியமிக்கப்பட்டவர்கள் அல்லது உரிமை மாற்றம் செய்யப்பட்டவர்களுக்கு எழுத்துப்பூர்வமாக காப்பீட்டாளர் தெரிவிக்க வேண்டும்.

"மோசடி" என்ற சொல், காப்பீட்டாளரை ஏமாற்றும் நோக்கத்துடன் அல்லது காப்பீட்டு பாலிசியை வழங்க காப்பீட்டாளரைத் தூண்டும் நோக்கத்துடன்,

காப்பீடு செய்பவரால் செய்யப்படும் எந்தவொரு செயலையும் குறிக்கிறது. பாலிசிதாரர் உயிருடன் இல்லாத பட்சத்தில், மோசடியை பொய்யென்று நிரூபிப்பது பயனாளிகளின் பொறுப்பு என்றும் வழங்கப்பட்டுள்ளது.

## B. காப்பீடுப் பற்று (Insurable interest)

'காப்பீடுப் பற்று' இருப்பது ஒவ்வொரு காப்பீட்டு ஒப்பந்தத்தின் ஒரு அத்தியாவசிய உட்பொருளாகவும் மற்றும் காப்பீட்டு சட்டத்தின் முன்-தேவையாகவும் கருதப்படுகிறது.

**காப்பீடுப் பற்றின் மூன்று முக்கியமான ஆக்கக்கூறுகள்**:

i. காப்பீடு செய்யப்படுகிற வகையில் சொத்து, உரிமை, பற்று, வாழ்க்கை அல்லது முக்கிய கடப்பாடு (potential liability) இருக்க வேண்டும்.

ii. இத்தகைய சொத்து, உரிமை, பற்று, வாழ்க்கை அல்லது முக்கிய கடப்பாடு காப்பீடு செய்யக்கூடிய பொருளாக இருக்க வேண்டும்.

iii. காப்பீடு செய்யப்படும் விஷயங்களான, சொத்து, உரிமை, பற்று, வாழ்க்கை அல்லது கடப்பாடு சுதந்திரம் (freedom of liability) போன்றவற்றுடன் காப்பீடு செய்பவருக்கு உள்ள சட்டப்பூர்வமான உறவின் காரணமாக அவை பாதுகாக்கப்பட்டால், அவர் பயனடைய வேண்டும். அதே மாதிரி, இழப்பு, சேதம், காயம் அல்லது கடப்பாடு உருவாக்கம் மூலம் அவர் நிதியை இழக்கும் நிலையும் இருக்கவேண்டும்.

காப்பீடு, சூதாட்டம் அல்லது பந்தய உடன்பாடுடன் எப்படி வேறுபடுகிறது என்று பார்ப்போம்.

a) **சூதாட்டம் மற்றும் காப்பீடு**: சீட்டு விளையாட்டில் வெற்றி அல்லது தோல்வி ஏற்படலாம், ஆனால் தீ ஒரே விளைவை தான் ஏற்படுத்தும்- அதாவது வீட்டின் உரிமையாளருக்கு இழப்பை மட்டுமே தரும்.

   ஏற்பட்ட இழப்பை ஏதாவது வழியில் ஈடு செய்துக்கொள்வதை உறுதி செய்ய தான் உரிமையாளர் காப்பீட்டை எடுத்துக்கொள்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், காப்பீடு செய்பவருக்கு அவரது வீட்டில் இருக்கும் பற்று அல்லது அவரது பணம் தான் காப்பீடுப் பற்று என குறிப்பிடப்படுகிறது. காப்பீடுப் பற்று இருப்பது தான் ஒரு காப்பீடு ஒப்பந்தத்தை செல்லத்தக்கதாக்கி சட்டத்தின் கீழ் அமல்படுத்தக் கூடியதாகிறது.

## எடுத்துக்காட்டு

திரு. படேல் ஒரு வங்கியில் ரூ. 15 லட்சம் அடமானக் கடனுடன் ஒரு வீட்டை வாங்கியள்ளார்., இந்தத் தொகையில் 12 லட்சத்தைத் திருப்பிச் செலுத்தியிருந்தால், நிலுவையில் உள்ள மூன்று லட்சத்திற்கு மட்டுமே வங்கி வட்டியை வசூலிக்கும்.

இவ்வாறு செலுத்தப்படாத கடனின் மீதித் தொகைக்கு வங்கியானது நிதி ரீதியாக வீட்டின் மீது காப்பீடுப் பற்றை கொண்டுள்ளது மற்றும் அது பாலிசியில் இணை காப்பீடு செய்யப்படுவதை வங்கி உறுதி செய்யும்.

திரு. படேல் ஒரு வீட்டின் உரிமையாளர் மற்றும் வங்கியில் இருந்து ரூ 15 லட்சம் அடமான கடனை வாங்கியுள்ளார். கீழுள்ள கேள்விகளை பற்றி யோசிக்கவும்:

- ✓ அவருக்கு வீட்டில் காப்பீடுப் பற்று உள்ளதா?
- ✓ வங்கிக்கு வீட்டில் காப்பீடுப் பற்று உள்ளதா?
- ✓ இதில் அவரது பக்கத்துவீட்டுக்காரரின் பற்று என்ன?

திரு தாஸுக்கு மனைவி, இரண்டு குழந்தைகள் மற்றும் வயதான பெற்றோர் கொண்ட ஒரு குடும்பம் இருக்கிறது. கீழுள்ள கேள்விகளை பற்றி யோசிக்கவும்:

- ✓ அவருக்கு அவர்களது நலனில் காப்பீடுப் பற்று உள்ளதா?
- ✓ அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டால் அவருக்கு நிதி இழப்பு ஏற்படுமா?
- ✓ பக்கத்துவீட்டுக்காரரின் குழந்தைகள் பற்றி என்ன? அவருக்கு அவர்கள் மீதும் காப்பீடுப் பற்று இருக்குமா?


காப்பீடு செய்யப்படும் விஷயம் மற்றும் காப்பீட்டு ஒப்பந்தத்தின் விஷயத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை கூறுவது இங்கே பொருத்தமாக இருக்கும்.

**காப்பீடு செய்யப்படும் விஷயம்** காப்பீடால் பாதுகாக்கப்படும் சொத்தை பற்றியது, அதற்கென்று உள்ளார்ந்த மதிப்பு ஒன்று இருக்கும்.

மறுபுறம் **காப்பீடு ஒப்பந்தத்தின் விஷயம்** பாலிசிதாரருக்கு அந்த சொத்தில் உள்ள நிதி சார்ந்த பற்றை குறிக்கிறது. பாலிசிதாரருக்கு சொத்தில் உரிமை இருந்தால் மட்டுமே அதை காப்பீடு செய்துக்கொள்ளும் சட்டப்பூர்வமான உரிமை அவருக்கு இருக்கிறது. காப்பீட்டு பாலிசி வெறும் சொத்தை அப்படியே

பாதுகாப்பதில்லை, ஆனால் பாலிசிதாரருக்கு சொத்தின் மீது உள்ள நிதி சார்ந்த பற்றை (financial interest) பாதுகாக்கிறது என்பது தான் இதன் சரியான அர்த்தம்.

✓ **பொது சட்டத்தின்படி காப்பீடுப்பற்று**




b) **காப்பீடுப் பற்று இருக்க வேண்டிய நேரம்:** ஆயுள் காப்பீட்டில், காப்பீடுப் பற்று பாலிசி எடுத்துக்கொள்ளும் நேரத்தில் இருக்கவேண்டும். ஈடுக்கோரல் நேரத்தில் மட்டும் காப்பீடுப்பற்று தேவைப்படும் கடல்சார் பாலிசிகளை போன்ற சில விதிவிலக்குகளை தவிர, பொது காப்பீடில், காப்பீடுப் பற்று பாலிசி எடுக்கும்போது மற்றும் ஈடுக்கோரல் நேரம், இந்த இரண்டு நேரத்திலுமே இருக்க வேண்டும்.

தீ மற்றும் விபத்து காப்பீடுகளில் காப்பீடுப் பற்று பாலிசி எடுத்துக்கொள்ளும் நேரத்தில் மற்றும் இழப்பு நேரத்தில், இந்த இரண்டு நேரத்திலுமே இருக்க வேண்டும்.

சொந்த காப்பீடை தவிர உடல்நலம் மற்றும் தனிநபர் விபத்து காப்பீட்டு விஷயத்தில், முன்மொழிபவர் தன் குடும்பத்திற்கும் காப்பீடு செய்யமுடியும், ஏனெனில் குடும்பம் விபத்தை சந்தித்து மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது அவர்களும் நிதி இழப்பால் பாதிக்கப்படுவார்கள். எனினும், கடல் சரக்கு காப்பீடில், காப்பீடுப் பற்று இழப்பு நேரத்தில் மட்டுமே தேவைப்படுகிறது, ஏனெனில் விலையை செலுத்தும் போது பொருட்களின் உரிமை கை மாறும், இது போக்குவரத்து சமயத்திலேயே நிகழலாம்.

## C. அண்மைக் காரணி (Proximate cause)

அண்மைக் காரணி காப்பீட்டின் ஒரு முக்கிய கோட்பாடு ஆகும் மற்றும் இதன் அக்கறை இழப்பு அல்லது சேதம் ஏற்பட்ட விதம் என்றும் மற்றும் அது உண்மையிலேயே காப்பீடு செய்யப்பட்ட ஒரு ஆபத்தின் விளைவாக தான் ஏற்பட்டதா என்பதை கண்டறிவதில் தான் உள்ளது. இழப்பு காப்பீடு செய்யப்பட்ட ஆபத்தினால் ஏற்படும்போது, காப்பீட்டு நிறுவனம் அதற்கு பொறுப்பாகிறது. உடனடி காரணம் காப்பீடு செய்யப்பட்ட ஆபத்தாக இருந்தால், காப்பீட்டு நிறுவனம் அந்த இழப்பிற்கு இழப்பீடை தந்தாக வேண்டும், இல்லையெனில் தர தேவையில்லை. இந்த கோட்பாடின் பயன்பாடு, பொது காப்பீட்டு ஈடுக்கோரல்களைப் பொறுத்தவரை நடைமுறையில் அதிகமாக இருக்கும்.

ஒரு இழப்பு ஏற்படும்போது, பெரும்பாலும் அந்த சம்பவத்துக்கு தொடர்ச்சியான பல நிகழ்வுகள் காரணமாக இருக்கும், எனவே சில சமயங்களில் அருகாமை அல்லது அண்மைக் காரணத்தைத் தீர்மானிப்பது சிரமமானதாக இருக்கும். இந்த விதியின்படி, காப்பீட்டாளர் இழப்பை ஏற்படுத்திய நிகழ்வுத் தொடரின் இயக்கத்துக்குள் பொருந்தக்கூடிய முக்கியக் காரணத்தை தேடுகிறார், இது இழப்பு ஏற்படுவதற்கு முந்தைய கடைசி நிகழ்ச்சியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை, அதாவது, அந்த நிகழ்ச்சி அதற்கு நெருக்கமானதாகவோ, அல்லது இழப்பை ஏற்படுத்தியதற்கு உடனடிப் பொறுப்புடையதாகவோ இருக்க தேவையில்லை.

உதாரணமாக, தீ விபத்தினால் ஒரு தண்ணீர் குழாய் வெடிக்கலாம். இதன் விளைவாக நீர் சேதம் ஏற்பட்டாலும், தீ விபத்து தான் நிகழ்வின் அண்மைக் காரணியாக கருதப்படுகிறது. மற்ற காரணங்களை தொலை காரணங்கள் என வகைப்படுத்தலாம், இவை அண்மைக் காரணிகளில் இருந்து வேறுபட்டவை. தொலை காரணங்கள் இருந்தாலும், நிகழ்வு நடக்கிறமாதிரி எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை.

### வரையறை

அண்மைக் காரணி (Proximate cause) என்பது, ஒரு புதிய மற்றும் தன்னிச்சையான ஆதாரத்திலிருந்து திறமையுடன் தொடங்கிச் செயல்படும், எந்த ஒரு சக்தியின் குறுக்கீடும் இன்றி ஒரு முடிவை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுத் தொடரின் இயக்கத்தைத் தொடங்கிய செயல்திறன்மிக்க மற்றும் திறமையான காரணம் என வரையறுக்கப்படுகிறது.

அண்மைக் காரணி கோட்பாடு காப்பீட்டு ஒப்பந்தங்களுக்கு எப்படி பொருந்துகிறது? பொதுவாக, ஆயுள் காப்பீடு மரணத்திற்கான காரணத்தை பொருட்படுத்தாமல், ஒரு மரண நன்மைக்கு ஈடை வழங்குவதால், அண்மை காரணி கொள்கை இதில் பொருந்தாது. எனினும் பல ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்களில் ஒரு விபத்து பலன் ரைடர் (கூடுதல் காப்பீடு) உள்ளது, அதில் விபத்து மூலம் மரணம் ஏற்பட்டால், ஒரு கூடுதல் தொகை வழங்கப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. இது போன்ற சூழ்நிலையில், மரணம் ஒரு விபத்து விளைவாக ஏற்பட்டதா என்று உறுதி செய்ய - இறப்பிற்கான காரணத்தை அறிந்துகொள்ள தேவை - அண்மைக் காரணி கொள்கை இது போன்ற நிகழ்வுகளுக்கு பொருந்தும்.

அண்மைக் காரணி கோட்பாடை புரிந்துகொள்ள, பின்வரும் காட்சிகளை கருதவும்:

**எடுத்துக்காட்டு**

**காட்சி** 1: திரு. அஜய் தனது காரை கேரேஜில் நிறுத்திவிட்டு நீண்ட விடுமுறைக்கு சென்றிருந்தார். ஆறு மாதங்களுக்குப் பிறகு, திரும்பி வந்து காரை ஸ்டார்ட் செய்தபோது, காரின் ஏர் கண்டிஷனிங் வேலை செய்யாததைக் கவனித்தார். திரு. அஜய், ஏர் கண்டிஷனிங்கை பழுதுபார்க்கும் செலவுக்காக காப்பீட்டு நிறுவனத்திடம் ஒரு ஈடுக்கோரலை தாக்கல் செய்தார், காப்பீட்டு நிறுவனம் கோரிக்கையை நிராகரித்தது. காரின் மற்றும் ஏர் கண்டிஷனிங் சிஸ்டத்தின் 'சாதாரண தேய்மானம்' தான் சேதத்திற்கான காரணம் என்றும், காப்பீட்டு பாலிசியில் அவை விலக்கப்பட்ட ஆபத்துகளாக இருந்ததால் இழப்பீடு கிடைக்காது என்பது தான் காப்பீடு நிறுவனம் கூறிய காரணம். திரு அஜய் நீதிமன்றத்தை அணுகினார். அந்த கார் 12 வருடங்கள் பழமையானது என்றும், அதற்கு முந்தைய 6 வருடங்களில் கார் அல்லது ஏர் கண்டிஷனிங் சர்வீஸ் செய்யப்படவில்லை/ பழுதுபார்க்கப்படவில்லை என்று வழங்கப்பட்டிருந்த சர்வே ரிப்போர்ட்டை ஆராய்ந்த பிறகு, சேதத்திற்கு காரணம் 'சாதாரண தேய்மானம்' தான் மற்றும் காப்பீட்டு நிறுவனத்திற்கு ஈடுக்கோரலை செலுத்த பொறுப்பில்லை என்றும் நீதிமன்றம் கூறியது.

**காட்சி** 2: திரு பின்டோ, குதிரை சவாரியின் போது, கீழே விழுந்து அவரது கால் உடைந்துவிட்டது, அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுவதற்கு முன் நீண்ட நேரம் ஈரமான தரையில் கிடந்தார். ஈரமான தரையில் கிடந்ததால், அவருக்கு காய்ச்சல் வந்து, நிமோனியாவாக அதாவது நுரையீரல் அழற்சி நோயாக வளர்ந்து தீவிரமாகிவிட்டதால், இறுதியில் அவர் இறந்துவிட்டார். இதற்கு நிமோனியா உடனடி காரணமாக தெரிந்தாலும், தற்செயலான வீழ்ச்சி தான் அவர் இறந்ததற்கு உண்மையான அண்மைக்

காரணி என்பது வெளிப்பட்டது, மற்றும் இந்த ஈடுக்கோரல் தனிநபர் விபத்து காப்பீட்டின் கீழ் அனுமதிக்கப்பட்டது.

தீயின் விளைவாக பாலிசிதாரருக்கு சில இழப்புகள் ஏற்படுகிறது ஆனால் அதற்கான அண்மைக் காரணி தீ என்று கூறமுடியாது. நடைமுறையில், வணிகம் மூலம் இந்த இழப்புகள் தீ காப்பீட்டு பாலிசிகளின் கீழ் வழக்கமாக வழங்கப்படுகிறது.

---

அத்தகைய இழப்புக்களுக்கான உதாரணங்கள் இவ்வாறு இருக்கலாம் -

- ✓ தீ அணைக்க பயன்படுத்தப்படும் நீர் மூலம் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம்
- ✓ தங்களது கடமையை நிறைவேற்றும்போது தீயணைப்புப்படை மூலம் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம்
- ✓ எரியும் கட்டிடத்தில் இருந்து ஒரு பாதுகாப்பான இடத்திற்கு அகற்றப்படும் போது சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம்

**சுய-பரீட்சை 1**

திரு பின்டோ ஒரு குதிரை சவாரி விபத்திற்கு பிறகு ஈரமான தரையில் கிடந்ததன் விளைவாக நுரையீரல் அழற்சி அதாவது நிமோனியா நோயால் பாதிக்கப்பட்டார். நிமோனியா நோயினால் திரு பின்டோ இறந்தார். அவர் இறப்பதற்கான அண்மைக் காரணி என்ன?

I. நிமோனியா

II. குதிரை

III. குதிரை சவாரி விபத்து

IV. துரதிர்ஷ்டம்

---

## D. இழப்பீடு (Indemnity)

பொது காப்பீடு பாலிசிகளுக்கு இழப்பீட்டுக் கோட்பாடு பொருந்தும். **அதாவது, இழப்பினை சந்திக்கும் பாலிசிதாரர், இழப்பு ஏற்படுத்தும் நிகழ்வுக்கு முன் எத்தகைய நிதி நிலைமையில் இருந்தாரோ அதே நிலையில் வைப்பதற்காக அந்த இழப்பீடு வழங்கப்படுகிறது.** பாலிசிதாரர் அவர் அடைந்த இழப்பு அளவிற்கு ஈடுசெய்யப்படுவார், அதற்கு மேல் அல்ல என்று காப்பீட்டு ஒப்பந்தம் உத்தரவாதம் தருகிறது.

ஒருவர் தனது சொத்துக்களைக் காப்பீடு செய்வதன் வழியாக இழப்பிற்கு கூடுதலாக இலாபம் பெறக்கூடாது என்பதே இதன் கொள்கை. இழந்த இழப்பின் பொருளாதார மதிப்பினை மதிப்பிட்டு அதற்கேற்ப இழப்பீடை காப்பீட்டு நிறுவனம் வழங்குவார்கள்.


**எடுத்துக்காட்டு**

ராம் தனது ரூ. 10 லட்சம் மதிப்புடைய வீட்டினை, அதன் முழுத் தொகைக்கும் காப்பீடு செய்துள்ளார். தீயில் எரிந்து ரூ. 70000 அளவிற்கு இழப்பினை அடைந்திருக்கிறார். காப்பீட்டு நிறுவனம் அவருக்கு ரூ. 70000 வழங்கும். காப்பீடு செய்தவர் அதற்கு மேல் கோர முடியாது.

செலுத்த வேண்டிய இழப்பீடு ஒருவர் எடுக்கும் காப்பீட்டு வகையைப் பொறுத்தது. இழப்பீடு கீழ்க்காணும் தீர்வின் மாதிரிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வழிகளில் நடக்கலாம்:

- ✓ ரொக்கமாக தொகை வழங்குதல்
- ✓ சேதமடைந்த சாமானை பழுதுபார்ப்பது
- ✓ இழந்த அல்லது சேதமுற்றதை மாற்றுதல்
- ✓ மீட்டல், (புனர் ஸ்தாபனம்) உதாரணமாக, தீயில் எரிந்துபோன வீட்டை மீண்டும் கட்டியெழுப்புதல்

**வரைபடம் 2 - இழப்பீடு**




a) **ஏற்கப்பட்ட மதிப்பு** : இருப்பினும், எளிதில் மதிப்பிட முடியாத அல்லது இழப்பின்போது உறுதிசெய்ய முடியாத சில விஷயங்களும் உள்ளன. உதாரணமாக, ஒரு குடும்ப பாரம்பரிய சொத்து அல்லது கலைப்பொருட்களுக்கு விலையினை நிர்ணயிப்பது கடினமாக இருக்கலாம். அதேபோன்று, கடல் சார்ந்த காப்பீட்டுத் திட்டங்களில், உலகில் பாதி

தூரத்தை தாண்டி சென்றுள்ள ஒரு கப்பல் விபத்தில் சிக்கினால், அந்த இழப்பினை மதிப்பிடுவது கடினமாக இருக்கலாம்.

அப்படிப்பட்ட நேரங்களில், 'ஏற்கப்பட்ட மதிப்பு' என்ற கோட்பாடு பின்பற்றப்படுகிறது. காப்பீட்டு ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் காப்பீட்டு நிறுவனமும் காப்பீடை பெறுபவரும் காப்பீடு செய்யப்பட வேண்டிய பொருளின் மதிப்பிற்கான தொகையை பற்றி சேர்ந்து நிர்ணயிக்கின்றனர். முழு இழப்பு நடந்தால், காப்பீட்டு நிறுவனம் பாலிசியில் ஏற்கப்பட்ட தொகையை அளிக்க சம்மதிக்கிறது. இந்த வகையான பாலிசி **"ஏற்கப்பட்ட மதிப்பு பாலிசி"** ("Agreed Value Policy") என அறியப்படுகிறது.

b) **குறை காப்பீடு**: ஒரு சொத்தின் முழு மதிப்புக்கும் காப்பீடு செய்யப்படாத ஒரு சூழ்நிலையை எண்ணிப் பாருங்கள். ஒருவரின் காப்பீடு எந்த அளவு உள்ளதோ அதே அளவிற்குத்தான் இழப்பீடை பெற அவருக்கு உரிமை உள்ளது.

ரூ. 10 லட்சம் மதிப்புடைய ஒரு வீடு, ரூ. 5 லட்சத்திற்கு மட்டும் காப்பீடு செய்யப்பட்டது. தீயில் எரிந்ததன் காரணமாக ஏற்பட்ட இழப்பு ரூ. 60000 என்றால், ஒருவர் அந்த முழுத் தொகையையும் கோர முடியாது. வீட்டு உரிமையாளர் அதன் மதிப்பில் பாதி அளவிற்கு மட்டுமே காப்பீடு செய்திருக்கிறார். எனவே, அவர் இழப்புத் தொகையில் 50% மட்டுமே கோர முடியும் [ரூ. 30000]. இது குறை காப்பீடு என்றும் அறியப்படுகிறது.

சொத்து மற்றும் கடப்பாடு சார்ந்த பெரும்பாலான பொது காப்பீடு பாலிசிகளில், பாலிசிதாரர் இழப்பின் உண்மையான தொகை அளவிற்கு ஈடுசெய்யப்படுகிறார். அதாவது, தேய்மானம் போக சொத்துக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதத்திற்கு அப்போதைய சந்தை விலையில் அதை மாற்றித் தர தேவையான தொகையினால் ஈடுசெய்யப்படுகிறார்.

## E. கடன் பற்றுரிமை (Subrogation)

கடன் பற்றுரிமை என்றால் காப்பிடப்படும் பொருள் சார்ந்த அனைத்து உரிமைகளும் தீர்வுகளும் காப்பீடு பெற்றவரிடமிருந்து காப்பீட்டு நிறுவனத்திற்கு மாற்றி அளிக்கப்படுவது என்று பொருள். எனவே, இது பெரும்பாலும் இழப்பீட்டின் 'தொடர்ச்சி' என்று அழைக்கப்படுகிறது.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு காப்பீட்டாளர் இழப்பை சந்தித்தால் மற்றும் அந்த இழப்பீடு காப்பீட்டாளரால் ஈடுசெய்யப்பட்டால், அந்த இழப்பிற்காக மூன்றாம் தரப்பினர் வழங்கவேண்டிய இழப்பீடை பெற காப்பீடு செய்தவருக்கு உள்ள உரிமை காப்பீட்டாளருக்கு மாற்றப்படும், காப்பீட்டு

நிறுவனம் எந்த அளவு தொகையை கொடுத்துள்ளதோ அந்த அளவு மட்டுமே சேதத்தை வசூலிக்கலாம் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

**முக்கியமானவை**

**கடன் பற்றுரிமை:** தவறுசெய்த மூன்றாம் தரப்பிடமிருந்து பாலிசிதாரருக்கு வழங்கிவிட்ட இழப்பீட்டுத் தொகையை வசூலிப்பதற்கு காப்பீட்டு நிறுவனம் பயன்படுத்தும் நடவடிக்கையாகும்.

காப்பீட்டு நிறுவனம் தனக்குச் செலுத்திய இழப்பீட்டுத் தொகையை மூன்றாம் தரப்பிடமிருந்து வசூலிக்க பாலிசிதாரர் காப்பீட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கும் உரிமைகள் எனவும் கடன் பற்றுரிமையை வரையறுக்கலாம்..

**எடுத்துக்காட்டு**

திரு. கிஷோருடைய வீட்டுப் பொருட்கள் சில்வைன் போக்குவரத்து சேவையினால் எடுத்துச் செல்லப்பட்டது. ஓட்டுனரின் கவனக்குறைவினால் அவை ரூ. 45000 அளவிற்குச் சேதமடைந்து விட்டன; மற்றும் காப்பீட்டு நிறுவனம் திரு. கிஷோர் அவர்களுக்கு ரூ. 30000 வழங்கிவிட்டனர். சில்வைன் போக்குவரத்திடமிருந்து ரூ.30000 மட்டும் வசூலித்துக்கொள்ள காப்பீட்டாளருக்கு கடன் பற்றுரிமை உள்ளது.

இந்த விவகாரம் வழக்காகி, திரு. கிஷோருக்கு இழப்பீடாக ரூ.35,000 வழங்குமாறு சில்வைன் டிரான்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட்டால், அவர் காப்பீட்டாளருக்கு கடன் பற்றுரிமை உட்பிரிவின் கீழ் ரூ.30,000 ஈடுக்கோரல் தொகையை செலுத்தி, மீதித் தொகையான ரூ.5,000 ஐ தன்னிடமே .வைத்திருக்க வேண்டும்.

கடன் பற்றுரிமை உட்பிரிவு ஒரு இழப்பிற்காக காப்பீடு பெற்றவர் இருமுறை - காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து ஒருமுறையும் மூன்றாம் தரப்பிடமிருந்து இரண்டாவது முறையும் - தொகையை வசூலிப்பதைத் தடுக்கிறது. இழப்பீட்டு ஒப்பந்தங்களில் மட்டுமே கடன் பற்றுரிமை உருவாகிறது மற்றும் ஆயுள் காப்பீட்டு பாலிசி அல்லது தனிநபர் விபத்து பாலிசி போன்ற நன்மை பாலிசிகளில் கிடையாது.

**எடுத்துக்காட்டு**

திரு. சுரேஷ் ஒரு விமான விபத்தில் இறந்து விடுகிறார். அவருடைய குடும்பத்தினருக்கு தனிநபர் விபத்து பாலிசியை வழங்கிய காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து முழுக் காப்புறுதித் தொகையான ரூ. 50 லட்சத்தையும், விமான நிறுவனம் வழங்கும் இழப்பீட்டுத் தொகையான ரூ.15 லட்சத்தையும் வசூலிக்கும் உரிமை உள்ளது.

## F. பங்களிப்பு *(*Contribution):

கடன் பற்றுரிமை போலவே, 'பங்களிப்பும்' இழப்பீட்டுக் கோட்பாடை பின்பற்றி வருகிறது. எனவே, இது இழப்பீட்டின் 'தொடர்ச்சி' என்றும் அழைக்கப்படுகிறது. பங்களிப்பு என்பது பொது காப்பீட்டு ஒப்பந்தங்களில் எழும் ஒரு கோட்பாடாகும். ஒன்றுக்கும் மேற்பட்ட காப்பீட்டாளர்களிடம் இருந்து காப்பீடு செய்திருந்தால், அந்தப் பொறுப்பு எவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை இது நமக்குக் கூறுகிறது. ஒரே சொத்து ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களில் காப்பீடு செய்யப்பட்டிருந்தால், அனைத்து காப்பீட்டாளர்களும் அளிக்கும் மொத்த இழப்பீட்டுத் தொகை உண்மையான இழப்பிற்கு மிகையாக இருக்கக்கூடாது என்பதையே 'பங்களிப்பு' என்ற கோட்பாடு குறிக்கிறது.

எடுத்துக்காட்டு: திரு ஸ்ரீநிவாஸ் தனது வீட்டிற்காக இரண்டு காப்பீட்டு நிறுவனங்களிடம் தீ பாலிசியை எடுத்துள்ளார், இரண்டு நிறுவனங்களிடமும் அவர் முழு மதிப்பான ரூ.12 லட்சத்திற்கு காப்பீடு செய்துள்ளார். தீ விபத்து ஏற்பட்டு அதன் விளைவாக அவருக்கு ரூ.3 லட்சம் இழப்பு ஏற்பட்டதாக வைத்துக்கொள்வோம், அவர் ஒவ்வொரு காப்பீட்டாளரிடமிருந்தும் ரூ.1.5 லட்சம் தொகையை ஈடாக கோரலாம்.

பங்களிப்புக் கோட்பாடு இழப்பீட்டு பாலிசிகளுக்கு மட்டுமே பொருந்தும். ஆயுள் காப்பீட்டின் விஷயத்தில் இது எழுவதில்லை, ஏனென்றால் உயிர் இழப்பு ஏற்படும் போது ஏற்படும் இழப்புகளுக்கு எந்த மேல் வரம்பையும் வைக்கமுடியாது.

**சுய-பரீட்சை 2**

பின்வருவதில் எது அச்சுறுத்தலுக்கான ஒரு உதாரணம் ஆகும்?

I. ரமேஷ் அச்சடிக்கப்பட்டதை படிக்காமலேயே ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறார்

II. மகேஷ் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால் அவனை கொன்றுவிடுவேன் என்று ரமேஷ் அச்சுறுத்துகிறார்

III. மகேஷை ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைக்க ரமேஷ் அவரது தொழில் நிலை செல்வாக்கை பயன்படுத்துகிறார்

IV. மகேஷை ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைக்க ரமேஷ் தவறான தகவலை வழங்குகிறார்

**சுய-பரீட்சை 3**

பின்வரும் விருப்பங்களில் ரமேஷால் யாருக்கு காப்பீடு செய்யமுடியாது?

I. ரமேஷின் வீடு

II. ரமேஷின் மனைவி

III. ரமேஷின் நண்பன்

IV. ரமேஷின் பெற்றோர்கள்

**சுய-பரீட்சை 4**

பங்களிப்பு கோட்பாடின் முக்கியத்துவம் என்ன?

I. காப்பீட்டாளருடன் காப்பீடு செய்தவரும் ஈடுக்கோரலில் ஒரு குறிப்பிட்ட பகுதியை பங்களிப்பதை இது உறுதி செய்கிறது

II. சேர்மத்தின் பகுதியாக இருக்கும் அனைத்து காப்பீடு செய்தவர்களும், அவர்கள் செலுத்திய பிரீமியத்தின் விகிதத்திலேயே, சேர்மத்தின் பங்கேற்பாளரால் செய்யப்படும் ஈடுக்கோரலை தீர்த்துவைக்க பங்களிப்பதை இது உறுதி செய்கிறது.

III. பல காப்பீட்டாளர்கள் ஒரே விஷயத்திறகு காப்பீடு வழங்கும் போது, அவர்கள் ஒன்று கூடி, காப்பீடு செய்யப்பட்ட விஷயத்தின் மீது அவர்களுக்கு உள்ள வெளிப்பாட்டின் விகிதத்தில் ஈடுக்கோரல் தொகையை வழங்குவதில் பங்களிக்க வேணேடும்

IV. பிரீமியம் காப்பீடு செய்பவரால் ஆண்டு முழுவதும் சம தவணைகளில் பங்களிக்கப்படுவதை இது உறுதி செய்கிறது

**சுருக்கம்**

- காப்பீட்டுக் கொள்கைகளின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:

  i. உபரிமா ஃபைட்ஸ் (Uberrima fides)

ii. காப்பீடுப் பற்று

iii. அண்மைக் காரணி

iv. இழப்பீடு

v. கடன் பற்றுரிமை

vi. பங்களிப்பு

## முக்கிய வார்த்தைகள்

1. வெளிப்படுத்தாமை
2. திரித்துக்கூறுதல்
3. அடிப்படை உண்மைகள்
4. ஏற்கப்பட்ட மதிப்பு
5. குறை காப்பீடு

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

**பதில்** 1 - சரியான பதில் விருப்பம் III

**பதில்** 2 - சரியான பதில் விருப்பம் II

**பதில்** 3 - சரியான பதில் விருப்பம் III

**பதில்** 4 - சரியான பதில் விருப்பம் III

# அத்தியாயம் C-04

# காப்பீட்டு ஒப்பந்தங்களின் அம்சங்கள்

**அத்தியாய அறிமுகம்**

இந்த அத்தியாயத்தில், காப்பீட்டு ஒப்பந்தத்தின் செயல்பாடை கட்டுப்படுத்தும் ஆக்கக்ககூறுகளையும் சிறப்பு அம்சங்களையும் விவாதிக்கிறோம்.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

A. காப்பீடு ஒப்பந்தத்தின் சட்ட கூறுகள்

B. செல்லுபடியாகும் ஒப்பந்தத்தின் ஆக்கக்கூறுகள்

C. முன்கூட்டியே பிரீமியம் செலுத்துதல்

D. கோருதல்

E. சலுகை காலம் மற்றும் இலவச-தோற்றம் போன்ற ஏற்பாடுகளை செயலாக்குகிறது

## A. காப்பீட்டு ஒப்பந்தங்கள் - சட்ட கூறுகள் மற்றும் சிறப்பு அம்சங்கள்.

காப்பீட்டு ஒப்பந்தத்தின் சட்ட கூறுகள் மற்றும் சிறப்பு அம்சங்களையும் இந்த அத்தியாயம் கையாள்கிறது.

### 1. காப்பீடு ஒப்பந்தம்

காப்பீடு வழிமுறையில், காப்பீட்டு நிறுவனம் பிரீமியம் என அழைக்கப்படும் ஒரு விலை அல்லது கருதுகை மூலம் குறிப்பிட்ட அபாயங்களுக்கு எதிராக நிதி பாதுகாப்பை வழங்க ஒப்புக்கொள்வதாக ஒரு ஒப்பந்த உடன்பாடு மூலம் ஏற்றுக்கொள்கிறது. ஒப்பந்த உடன்படிக்கை ஒரு காப்பீடு பாலிசி வடிவில் செய்யப்படுகிறது.

### 2. ஒரு காப்பீடு ஒப்பந்தத்தின் சட்ட அம்சங்கள்

இந்த பிரிவு காப்பீடு ஒப்பந்தத்திற்கு சம்பந்தப்பட்ட சில அம்சங்களை பார்த்துவிட்டு, பொதுவாக காப்பீட்டு ஒப்பந்தங்களை கட்டுப்படுத்தும் சட்ட கொள்கைகளை பற்றியும் கூறுகிறது

**முக்கியமானவை**

ஒப்பந்தம் என்பது இரு கட்சிகள் இடையே சட்டத்தால் அமல்படுத்தப்படுகின்ற உடன்பாடாக இருக்கிறது. இந்திய ஒப்பந்த சட்டம் , 1872-இன் (Indian Contract Act, 1872) விதிமுறைகள் காப்பீட்டு ஒப்பந்தங்கள் உட்பட இந்தியாவில் உள்ள அனைத்து ஒப்பந்தங்களையும் நிர்வகிக்கிறது.

---


காப்பீட்டு ஒப்பந்தம் என்பது இரு கட்சிகள் இடையே ஏற்படும் ஒப்பந்தம், அதாவது, காப்பீட்டாளர் எனப்படும் நிறுவனம், மற்றும் பாலிசிதாரராக உள்ள காப்பீடு பெறுபவருக்கும் மத்தியில் உள்ள உடன்பாடாகும் மற்றும் இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

**வரைப்படம்** 1: **காப்பீட்டு ஒப்பந்தம்**




## B. செல்லுபடியாகும் ஒப்பந்தத்தின் ஆக்கக்கூறுகள்

**வரைப்படம்** 2: **செல்லுபடியாகும் ஒப்பந்தத்தின் ஆக்கக்கூறுகள்**




**செல்லுபடியாகும் ஒப்பந்தத்தின் ஆக்கக்கூறுகள் பின்வருமாறு:**

1. **அளித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் (Offer and acceptance):**

   ஒரு நபர் மற்றொருவரிடம் எதையாவது செய்ய அல்லது செய்யாமல் இருப்பதற்காக அவரது ஒப்புதலை பெற, தனது விருப்பத்தை குறிப்பிடும்போது, அவர் வாய்ப்பை அளிப்பதாக அல்லது முன்மொழிவதாக கூறப்படுகிறது. பொதுவாக, வாய்ப்பு முன்மொழிபவர் மூலம் அளிக்கப்பட்டு, மற்றும் ஏற்பு காப்பீட்டு நிறுவனம் மூலம் செய்யப்படுகிறது.

   வாய்ப்பு யாரிடம் அளிக்கப்படுகிறதோ, அவர் அதற்கு தனது இசைவு தந்ததும், அது ஏற்கப்பட்டதாக கருதப்படும். அதனால், ஒரு முன்மொழிவை ஏற்றதுமே, அது ஒரு வாக்குறுதி ஆகிறது. ஏற்கப்பட்டது

முன்மொழிபவருக்கு தெரிவிக்கப்பட வேண்டும், அதன் விளைவாக ஒப்பந்தம் உருவாகிறது.

ஒரு முன்மொழிபவர் காப்பீட்டு திட்டத்தின் விதிகளை ஏற்றுக்கொண்டு, தனது இசைவை தெரிவித்து வைப்பு தொகையை செலுத்தி, அந்த முன்மொழிவு ஏற்கப்பட்டவுடன் இந்த தொகை முதல் பிரீமியமாக மாற்றப்பட்டுவிடும், மற்றும் முன்மொழிவு பிறகு பாலிசியாகி விடுகிறது. ஏதாவது நிபந்தனை வைக்கப்பட்டால், அது எதிர் வாய்ப்பாக மாறுகிறது. பாலிசி பத்திரம் ஒப்பந்தத்தின் ஆதாரமாகிறது.

2. **கருதுகை**

இதற்கு அர்த்தம், இந்த ஒப்பந்தம் இருகட்சிகளுக்கும் பரஸ்பர லாபத்தை கொண்டிருக்க வேண்டும் என்பது தான். பிரீமியம் தான் பாலிசிதாரரின் பக்கத்தில் வரும் கருதுகை அதாவது பங்கு மற்றும் இழப்பீடுகளை தருகின்ற வாக்குறுதி, காப்பீட்டு நிறுவனத்தின் கருதுகை அதாவது பங்கு.

3. **கட்சிகள் இடையே உடன்பாடு (Consensus Ad-Idem)**

இரு கட்சிகளுமே ஒரே அர்த்தத்தில், ஒரே விஷயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இரு கட்சிகளுக்கும் இடையே ஒருமித்த அதாவது கருத்தொருமித்தல் -**"consensus ad-idem"** இருக்க வேண்டும்.

4. **தடையற்ற ஒப்புதல்**

ஒரு ஒப்பந்தத்தில் நுழையும் போது தடையற்ற ஒப்புதல் இருக்க வேண்டும். பின்வரும் காரணங்களால் ஏற்கபடாத போது, அந்த ஒப்புதல் தடையற்றதாக கூறப்படுகிறது-

- ✓ அச்சுறுத்தல்
- ✓ தகாத ஆதிக்கம்
- ✓ மோசடி
- ✓ திரித்துக்கூறுதல்
- ✓ தவறு

அச்சுறுத்தல், மோசடி அல்லது திரித்துக்கறுதல் மூலம் செய்யப்படும் ஒரு உடன்பாடு, சட்டப்படி செல்லுபடியாகாது.

5. **கட்சிகளின் தகுதி**

ஒப்பந்தம் செய்கின்ற இரு கட்சிகளும் ஒப்பந்தத்தில் நுழைய சட்டபூர்வமாக தகுதிப் பெற்றிருக்க வேண்டும். முன்மொழிவில் கையெழுத்திடும் நேரத்தில் பாலிசிதாரர் மேஜராக அதாவது வயதுவந்தவராக இருக்கவேண்டும் மற்றும் சித்தநலம் உள்ளவராக இருக்க வேண்டும் மற்றும் சட்டத்தின் கீழ் தகுதிநீக்கம் பெற்றவராக இருக்கக்கூடாது. உதாரணமாக, சிறார்களால் (minors) காப்பீட்டு ஒப்பந்தங்களில் நுழைய முடியாது.

6. **சட்ட உரிமை**

ஒப்பந்தத்தின் விஷயம் சட்டப்படி இருக்கவேண்டும். உதாரணமாக, சட்டவிரோதமற்ற செயல்களுக்கு எந்த காப்பீடும் கிடைக்காது. விஷயம் அல்லது கருதுகை சட்டவிரோதமாக உள்ள எந்த உடன்பாடுமே சட்டப்படி செல்லுபடியாகாது. ஒரு காப்பீடு ஒப்பந்தத்தின் விஷயம் ஒரு சட்டப்பூர்வமான விஷயம் ஆகும்.

மேலும் ஒருவர் காப்பீட்டு ஒப்பந்தத்தில் நுழையும்போது, அதை எந்த விதமான வற்புறுத்தலும், பயமும், தவறும் இல்லாமல் ஒருவரின் சுய-விருப்பத்துடன் செய்ய வேண்டும்.

## C. பிரீமியத்தை முன்கூட்டியே செலுத்துதல்

இந்தியச் சட்டங்களின்படி, காப்பீட்டாளர்கள் முன்கூட்டியே பிரீமியத்தைப் பெறாத வரையில் அபாயத்திற்கு காப்பீடை தர அனுமதிக்கப்பட மாட்டார்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், காப்பீட்டு பாதுகாப்பை இந்தியாவில் கடன் அடிப்படையில் விற்க முடியாது.

காப்பீட்டுச் சட்டம் 1938 இன் பிரிவு 64 VB கூறுகிறது, "முன்கூட்டியே பிரீமியத்தைப் பெறாவிட்டால் எந்த அபாயமும் காப்பிடப்படாது" .பிரீமியம் முன்கூட்டியே பெறப்படும் வரை அல்லது அளிப்பதாக அச்சாரம் கொடுப்பது வரை அல்லது குறிப்பிடப்பட்ட வகையில் முன்கூட்டியே வைப்புத்தொகை வைக்கப்படும் வரை எந்த காப்பீட்டாளரும் எந்த அபாயத்தையும் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளமாட்டார். இது இந்தியாவின் காப்பீட்டுத் துறையின் முக்கியமான அம்சமாகும்.

காப்பீட்டு விதிகள், 1939, குறிப்பிட்ட வகை காப்பீடுகளைப் பொறுத்தவரை, பிரீமியத்தை முன்கூட்டியே செலுத்துவதற்கான இந்த நிபந்தனைக்கு சில விதிவிலக்குகளை வழங்குகிறது. காப்பீட்டு விதிகளின் பிரிவு 59, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, நோய்க் காப்பீடு, குழு தனிநபர் விபத்துக் காப்பீடு மருத்துவப் பலன்கள் காப்பீடு மற்றும் மருத்துவமனையில் சேர்க்கவேண்டிய

காப்பீட்டுத் திட்டங்கள் தொடர்பான பிரீமியங்களை தவணைகளில் ஏற்க அனுமதிக்கிறது. காப்பீட்டு விதிகளின் பிரிவு 59, அரசு மற்றும் அரை-அரசு அமைப்புகளுக்கு வழங்கப்படும் பாலிசிகள், அரசு மற்றும் அரை-அரசு ஊழியர்களை உள்ளடக்கிய நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீட்டுக் கொள்கைகள், பணியாளர் இழப்பீடு பாலிசிகள், இடைவழிப் பண பாலிசிகள் மற்றும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேறு சில வகை காப்பீடுகளுக்கு தளர்வுகளை அனுமதிக்கிறது.

**கோருதல்** **(Solicitation)**

காப்பீடு என்பது எப்போதுமே தயாரிப்பை சரியாகப் புரிந்து கொண்ட பிறகு வாங்கப்பட வேண்டிய ஒன்றாகவே கருதப்படுகிறது மற்றும் அதை அப்படியே வாங்கவோ/விற்கவோ முடியாது. எனவே, காப்பீடை 'கோரவேண்டும்' அல்லது அது வாடிக்கையாளரால் கேட்கப்பட வேண்டும். பாரம்பரியமாக, காப்பீட்டாளர்கள் "காப்பீடு என்பது கோரப்படவேண்டிய விஷயம்" என்று அறிவிக்கின்றனர். தெளிவாக கூறவேண்டுமென்றால், காப்பீடு என்பது பிஸ்கட் பாக்கெட் அல்லது சாக்லேட் போன்ற தயார் நிலையில் கிடைக்கும் தயாரிப்பு அல்ல. வாடிக்கையாளர்கள் தங்களின் காப்பீட்டுத் தேவைகளை அதைப் பற்றி தெரிந்த தகுதியான ஒருவருடன் விவாதிக்க வேண்டும் மற்றும் தொழில்முறை ஆலோசனையின் அடிப்படையில், சரியான காப்பீட்டுத் தயாரிப்பை வாங்க வேண்டும். காப்பீட்டுத் தயாரிப்பு புரிந்து கொள்ளப்பட வேண்டும் மற்றும் பாலிசியின் காப்பு, விலக்குகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் வாடிக்கையாளரின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் அவசியங்களை கவனமாக பரிசிலித்து, அவருக்காக மிக பொருத்தமான தயாரிப்பு பரிந்துரைக்கப்பட வேண்டும்.

ஒரு காப்பீட்டாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட இடைத்தரகர் வாய்ப்பாளரின் காப்பீட்டுத் தேவைகளைப் புரிந்துகொள்வதற்காக அவரை அணுகி, பொருத்தமான காப்பீட்டுத் தயாரிப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் தொழில்முறை ஆலோசனைகளை வழங்கும் போது 'கோருதல்' பொதுவாக தொடங்குகிறது. வாய்ப்பாளர் சரியான தீர்வைக் கோருகிறார் மற்றும் அதற்காக ஆலோசகருக்கு தேவையான அனைத்து விவரங்களையும் வழங்குகிறார். ஐஆர்டிஏஐயின் ஒழுங்குவிதிகளின்படி, காப்பீட்டு பாலிசிகளின் தொடர்ச்சி, புதுப்பித்தல் அல்லது மீட்டுயிர்ப்பித்தல் தொடர்பான வணிகம் உட்பட, காப்பீடை கோருதல் செயல்முறையில் ஈடுபடுவதற்கும், காப்பீட்டு வணிகத்தைப் பெறவும் காப்பீட்டாளர் மூலம் காப்பீட்டு முகவர்கள் நியமிக்கப்படுகின்றனர். காப்பீட்டு நிறுவனங்களின் பயிற்சி பெற்ற மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் உரிமம் பெற்ற இடைத்தரகர்களின் பயிற்சி பெற்ற மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட நபர்கள் மட்டுமே, காப்பீட்டை கோரும் மற்றும் விற்கும் செயல்முறையின் ஒரு பகுதியாக இருக்க முடியும்.

## D. செயலாக்கும் விதிகள்

### 1. சலுகை காலம்

சலுகை காலம் என்பது பிரீமியம் கட்டவேண்டிய தேதியை தொடர்ந்து உடனடியாக உள்ள காலப்பகுதியாகும், இந்த சமயத்தில் காத்திருப்பு காலங்கள் மற்றும் ஏற்கனவே இருக்கும் நோய்களின் பாதுகாப்பு போன்ற தொடர்ச்சியான நன்மைகளை இழக்காமல் பாலிசியைப் புதுப்பிக்க அல்லது நடைமுறையில் தொடர பணம் செலுத்தலாம். பிரீமியம் கட்டப்படாத காலத்திற்கு மட்டும் காப்பு கிடைக்காது. பிரீமியம் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்கு அடுத்த நாளிலிருந்து சலுகை நாட்கள் கணக்கிடப்படுகின்றன.

**ஆயுள் காப்பீட்டில்** சலுகைக் காலம் மட்டும் இல்லை என்றால், பணம் செலுத்துவதில் ஒரு முறை தாமதம் ஏற்பட்டால் கூட பாலிசி காலாவதியாகி விடும். இது பாலிசிதாரர், காப்பீட்டாளர் மற்றும் பொதுவாக காப்பீட்டுத் துறையையே பாதிக்கும். மாதாந்திர பிரீமிய வசூல் முறையில் 15 நாட்களையும், மற்ற முறைகளில் 30 நாட்களையும் சலுகை காலமாக ஐஆர்டிஏஐ ஒழுங்குவிதிகள் அனுமதிக்கின்றன.

**உடல்நலக் காப்பீட்டைப்** பொறுத்தமட்டில், தனிப்பட்ட உடல்நலப் பாலிசிகளை புதுப்பிப்பதற்கு சில நாட்கள் சலுகைக் காலமாக அனுமதிக்கப்படுகிறது. இந்த காலம் நிறுவனத்தின் கொள்கை மற்றும் வழங்கப்படும் தயாரிப்பு ஆகியவற்றைப் பொறுத்தது. சலுகை காலத்திற்குள் பாலிசி புதுப்பிக்கப்பட்டால், அனைத்து தொடர்ச்சியான பலன்களும் பராமரிக்கப்படும். இருப்பினும், இடைவேளையின் போது ஏதேனும் ஈடுக்கோரல்கள் இருந்தால் அவை பரிசீலிக்கப்படாது. ஐஆர்டிஏஐ ஒழுங்குவிதிகளின்படி, மாதாந்திர பிரீமியம் வசூல் முறையில் 15 நாட்களும் மற்ற முறைகளில் 30 நாட்களும் சலுகைக் காலம் வழங்கப்படும்.

**வாகன பாலிசிகள்** வழக்கமாக ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும் மற்றும் குறிப்பிட்ட தேதிக்கு முன் புதுப்பிக்கப்பட வேண்டும். பிரீமியம் செலுத்துவதற்கான சலுகை காலம் இதில் பொருந்தாது. ஒரு விரிவான பாலிசி 90 நாட்களுக்கு மேல் காலாவதியானால், திரட்டப்பட்ட ஈடுக்கோரல் பெறாத போனஸ் (NCB) பலனும் இழக்கப்படும்.

கோவிட்-19 தொற்றுநோய்களின் போது சுமுகமாக செயல்படும் வகையில், ஐஆர்டிஏஐ பின்வரும் தளர்வுகளை அனுமதித்தது:

i. ஆயுள் காப்பீட்டுக் கொள்கைகளைப் பொறுத்தவரை, பாலிசிதாரர்கள் விரும்பினால், கூடுதல் 30 நாட்களுக்கு சலுகைக் காலத்தை அதிகரிக்குமாறு காப்பீட்டாளர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

ii. உடல்நலக் காப்பீடு பாலிசிகளைப் பொறுத்தவரை, 30 நாட்கள் வரை புதுப்பித்தலில் ஏற்படும் தாமதங்களை பாலிசியின் முறிவாகக் கருதாமல் புறக்கணிக்க வேண்டும் என்று காப்பீட்டாளர்களிடம் கூறப்பட்டது. காப்பீட்டு இடைநிறுத்தப்படுவதைத் தவிர்க்க, பாலிசிதாரர்களை முன்கூட்டியே தொடர்பு கொள்ளுமாறு காப்பீட்டாளர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

iii. மோட்டார் வாகன மூன்றாம் தரப்பு காப்பீட்டு பாலிசிகள் புதுப்பிக்கவேண்டிய உரிய தேதி வந்திருந்தும், கோவிட்-19 சூழ்நிலை காரணமாக பிரீமியங்களைச் செலுத்த முடியாமல் போனதால், ஐஆர்டிஏஐ மே 15, 2020 வரை சலுகைக் காலத்தை அனுமதித்தது.

## 2. "ஐஆர்டிஏஐ" அறிமுகப்படுத்திய இலவச-தோற்ற காலம்

காப்பீட்டு ஒப்பந்தங்கள் காப்பீட்டாளரால் வடிவமைக்கப்படுகின்றன, மேலும் காப்பீட்டை விரும்பும் மற்ற தரப்பினர் அதை பின்பற்றியாக வேண்டும். எவரும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய மற்றும் அதில் எந்த மாற்றமும் செய்ய முடியாத ஒப்பந்தங்கள், சட்டப்பூர்வமாக ஒட்டுதல் ஒப்பந்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்த ஒருதலைப்பட்ச சூழ்நிலையின் காரணமாக, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விளக்குவதில் எழக்கூடிய தெளிவின்மை அல்லது குழப்பத்திற்கு நீதிமன்றங்கள் எப்போதும் காப்பீட்டாளர்களையே பொறுப்பாக்குகின்றன.

இந்த ஒருதலைப்பட்சத்தைக் குறைப்பதற்கும், காப்பீட்டுப் பரிவர்த்தனைகளை வாடிக்கையாளர்களுக்கு ஏற்ப மாற்றுவதற்கும், ஐஆர்டிஏஐ தனது விதிமுறைகளில் 'இலவச-தோற்ற காலம்' எனப்படும் நுகர்வோருக்கு சாதகமான ஏற்பாட்டை உருவாக்கியுள்ளது. இந்த காலத்திற்குள் பாலிசியின் எந்தவொரு விதிமுறை மற்றும் நிபந்தனைகளிலும் வாடிக்கையாளர் திருப்தி அடையவில்லை என்றால், அவர் அதைத் திருப்பிக் கொடுத்து பணத்தைத் திரும்பப் பெறலாம். ஆயுள் காப்பீடு மற்றும் உடல்நலக் காப்பீட்டு பாலிசிகளுக்கு (குறைந்தபட்சம் ஒரு வருட காலம் கொண்டவை). பாலிசிதாரர்கள் பாலிசியால் திருப்தி அடையவில்லை என்றால், பாலிசி ஆவணத்தைப் பெற்ற 15 நாட்களுக்குள் (எலக்ட்ரானிக் பாலிசிகள் மற்றும் தொலைதூர பயன்முறையில் பெறப்பட்ட பாலிசிகளுக்கு 30 நாட்களுக்குள்) பாலிசியை ரத்து செய்வதற்கான விருப்பம் அளிக்கப்படும் இந்த விதிமுறை

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதை நிறுவனத்திற்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கப்பட வேண்டும் மற்றும் காப்பீடு செய்யப்பட்டிருந்த காலத்திற்கான விகிதாச்சார அபாய பிரீமியம் செலவுகள் மற்றும் கட்டணங்களை கழித்து பிரீமியம் திரும்பப் வழங்கப்படும்.

**பாலிசிகளை ரத்து செய்தல்:** காப்பீட்டாளரால் பாலிசிகள் ரத்து செய்யப்பட்டால், காப்பீட்டின் காலாவதியான காலத்திற்கான பிரீமியத்தின் விகிதம் காப்பீட்டாளரால் வசூலிக்கப்படும்/ தக்கவைக்கப்படும் மற்றும் பாலிசியின் கீழ் எந்த ஈடுக்கோரலும் செலுத்தப்படவில்லை எனில் காப்பீட்டாளரின் காலாவதியான காலகட்டத்துடன் தொடர்புடைய விகிதாச்சார தொகை காப்பீடு பெறுபவரிடம் திருப்பித் தரப்படும். பிரீமியத்தின் இத்தகைய விகிதாசார கணக்கீடு ப்ரோ-ரேட்டா பிரீமியம் என்று அழைக்கப்படுகிறது.

காப்பீடு செய்பவரே வருடாந்திர பாலிசிகளை ரத்து செய்தால், காப்பீட்டாளர்கள் விகிதாசாரமாக பிரீமியங்களைக் கணக்கிடுவதற்குப் பதிலாக வழக்கமாக அதிக விகிதத்தில் பிரீமியங்களை வசூலிக்கிறார்கள்/தக்கவைத்து கொள்கிறார்கள், மற்றும் அதிக விகிதத்தில் பிரீமியங்களைத் திரும்ப செலுத்துகிறார்கள். இது காப்பீட்டாளர்களுக்கு எதிரான தேர்வைத் தடுக்கும் மற்றும் காப்பீட்டாளரின் ஆரம்ப செலவுகளைக் கவனித்துக்கொள்ளும். அத்தகைய விகிதங்கள் காப்பீட்டு ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் ஒரு பகுதியாக வெளிப்படுத்தப்படுகின்றன மற்றும் குறுகிய கால அளவைகள் என குறிப்பிடப்படுகின்றன.

**முக்கிமானவை**

i. **அச்சுறுத்தல்-** இதில் குற்ற வழிமுறைகள் மூலம் அழுத்தத்தை தருவது அடங்கும்.

ii. **தகாத ஆதிக்கம்** -மற்றொருவர் மீது ஆதிக்கம் செலுத்த முடிகின்ற ஒரு நபர், தகாத ஆதாயத்தை பெற தனது பதவியை பயன்படுத்துவது.

iii. **மோசடி-** ஒரு நபர், அவர் அல்லது அவள் உண்மை என்று நம்பாததை எடுத்துரைத்து தவறான நம்பிக்கையை ஏற்படுத்த மற்றொருவரை தூண்டி விடுகிறார். இது உண்மைகளை வேண்டுமென்றே மறைப்பதால் அல்லது தவறாக எடுத்துரைப்பதால் ஏற்படலாம்.

iv. **தவறு-** ஒரு நிகழ்வை பற்றிய தீர்ப்பு அல்லது விளக்கத்தில் தவறு. இதனால் ஒப்பந்தம் செய்யப்படும் விஷயத்தை பற்றிய புரிதல் மற்றும் உடன்பாட்டில் தவறு ஏற்படலாம்

பின்வருவதில் எது செல்லுபடியாகும் காப்பீட்டு ஒப்பந்தத்தின் ஆக்கக்கூறாக இருக்க முடியாது?

I. அளித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல்

II. அச்சுறுத்தல்

III. கருதுகை

IV. சட்ட உரிமை

---

**சுருக்கம்**

i. காப்பீடு என்பது, காப்பீட்டு நிறுவனம் பிரீமியம் என அழைக்கப்படும் ஒரு விலை அல்லது கருதுகை மூலம் குறிப்பிட்ட அபாயங்களுக்கு எதிராக நிதி பாதுகாப்பை வழங்க ஒப்புக்கொள்ளும் ஒரு ஒப்பந்த உடன்பாடு ஆகும்.

ii. ஒரு ஒப்பந்தம் என்பது இரு கட்சிகள் இடையே சட்டத்தால் அமல்படுத்தப்பட்ட ஒரு உடன்பாடாக இருக்கிறது.

iii. செல்லுபடியாகும் ஒப்பந்தத்தின் ஆக்கக்கூறுகளில் அடங்குபவை:

- அளித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல்
- சட்டப்பூர்வமான கருதுகை
- கருத்தொருமித்தல் (Consensus ad idem)
- தடையற்ற ஒப்புதல்
- கட்சிகளின் தகுதி
- விஷயத்தின் சட்ட உரிமைt

**முக்கிய வார்த்தைகள்**

1. அளித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல்
2. சட்டப்பூர்வமான கருதுகை
3. கருத்தொருமித்தல் (Consensus ad idem)

**சுய-பரீட்சை** 2

இலவச-தோற்ற காலகட்டத்தில், ஒரு முகவர் மூலம் பாலிசியை வாங்கிய பாலிசிதாரர், அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எதற்கேனும்

உடன்படவில்லை என்றால்., பின்வரும் நிபந்தனைகளின்கீழ் அவர் அதை திருப்பலாம் மற்றும் பணத்தை திரும்ப பெறமுடியும்:

I. அவர் பாலிசி ஆவணத்தை பெற்ற 15 நாட்களுக்குள் இந்த விருப்பத்தை பயன்படுத்தமுடியும்

II. அவர் எழுத்துமூலம் நிறுவனத்திற்கு இதை தெரிவிக்கவேண்டும்

III. விகிதாசார முறையில் காப்பளிக்கப்பட்ட காலத்திற்கான பிரீமியம், மருத்துவ பரிசோதனை மற்றும் முத்திரை தீர்வைக்காக காப்பீட்டு நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பிரீமியம் தொகையில் கழிக்கப்படும்..

IV. மேலுள்ள அனைத்தும்

**சுய-பரீட்சை** 3

பாலிசிதாரர் ஒரு பாலிசியை வாங்கி அதை விரும்பவில்லை என்றால், ________ காலத்திற்குள், அதை திருப்பி மற்றும் பணத்தை திரும்ப பெற முடியும்.

I. இலவச மதிப்பீடு

II. இலவச-தோற்றம்

III. ரத்து செய்யும்போது

IV. இலவச சோதனை

**சுய-பரீட்சைக்கான பதில்கள்**

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் II.

**பதில் 2** - சரியான பதில் விருப்பம் IV.

**பதில் 3** - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் C-05

# ஏற்பளிப்பு மற்றும் விலையின் மதிப்பீடு

## அத்தியாய அறிமுகம்

இந்த அத்தியாயத்தில் ஏற்பளிப்பு மற்றும் விகிதத்தின் நிர்ணயம் ஆகியவற்றின் அடிப்படைகள் குறித்து நீங்கள் கற்பீர்கள். அபாயங்களின் மதிப்பீட்டுச் செயல்முறையில் இடையூறுகளைக் கையாள்வதற்கான பல்வேறு முறைகள் குறித்தும் நீங்கள் கற்பீர்கள். ஏற்பளிப்பு, தயாரிப்பின் ஒப்புதல் மற்றும் விகிதத்தின் நிர்ணயம் ஆகியவற்றின் பொதுவான அம்சங்களை நீங்கள் பாராட்ட முடியும்.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. ஏற்பளிப்பு அடிப்படைகள்

B. ஐஆர்டிஏஐ இடம் தயாரிப்பை ஒப்புதலுக்காக தாக்கல் செய்வது

C. விகித உருவாக்குதலின் அடிப்படைகள்

D. விகிதத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, நீங்கள்:

1. ஏற்பளிப்பின் அடிப்படைகளை வரையறுக்க முடியும்
2. இந்தியாவில் தயாரிப்புகளுக்கு ஒப்புதலை பெறுவதற்கான அடிப்படைகளைப் புரிந்து கொள்ளமுடியும்
3. விகிதம் நிர்ணயிக்கப்படுவதில் உள்ள காரணிகள் மற்றும் விகித உருவாக்குதலின் முக்கியத்துவத்தை மதிப்பிட முடியும்

## A. ஏற்பளிப்பின் அடிப்படைகள்

முந்தைய அத்தியாயங்களில் காப்பீடு எனும் கருத்து, சேர்மத்தின் வாயிலாக அபாய மேலாண்மை செய்வது என்பதை நாம் பார்த்துள்ளோம். தனிநபர்கள் / வணிகம் / தொழில்துறை நிறுவனங்கள் / அமைப்புகள் ஆகியவர்கள் செலுத்தும் பிரீமியங்களை கொண்டு காப்பீடை அளிப்பவர்கள் ஒரு சேர்மத்தை உருவாக்குகிறார்கள்.

அபாயங்களைப் புரிந்துகொண்டு, அபாயங்களை வகைப்படுத்துவது, அவை எந்த வகையைச் சேர்ந்தவை என்பதைக் கண்டறிதல், **அபாயத்தை ஏற்கலாமா வேண்டாமா என்பதைத் தீர்மானித்தல்** மற்றும் ஏற்றால், காப்பீட்டாளர் அபாயத்தை ஏற்க எவ்வளவு பிரீமியத்தை வசூலிக்க தேவை மற்றும் ஏதேனும் கூடுதல் நிபந்தனைகள் விதிக்கப்பட வேண்டுமா என்பவை - இவை அனைத்தும் **ஏற்பளிப்பின்** ஒரு பகுதியாகும்.

என்ன விலை வசூலிக்கப்பட வேண்டும் மற்றும் விலைகள் எவ்வாறு நிரணயிக்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்வதும் முக்கியமானவை.

## வரையறை

ஏற்பளிப்பு என்பது காப்பீட்டுக்காக வழங்கப்பட்டுள்ள ஒரு அபாயம் ஏற்கத்தக்கதுதானா என்பதையும், ஆம் எனில், என்ன வீதத்தில், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் அந்த காப்பீட்டுப் பாதுகாப்பு ஏற்கத்தக்கது என்பதையும் தீர்மானிக்கக்கூடிய செயல்முறை ஆகும்.

---

ஏற்பளிப்பு பின்வரும் படிகளை உள்ளடக்கியது:

i. இழப்பின் நிகழ்தகவு மற்றும் தீவிரத்தைப் பொறுத்து இடையூறு மற்றும் இடையூறின் மதிப்பீடு மற்றும் கணிப்பாய்வு

ii. பாலிசியால் காப்பீடு செய்வதையும் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் உருவாக்குதல்

iii. பிரீமிய வீதங்களை நிர்ணயித்தல்

காப்பீட்டு ஏற்பாளர் இந்த அபாயத்தை ஏற்பதா அல்லது வேண்டாமா என்பதை முதலில் தீர்மானிக்கிறார்.

அடுத்த படி இந்த அபாயம் ஏற்கப்பட வேண்டிய விகிதங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை தீர்மானிப்பதாக இருக்கும்.

போதுமான பயிற்சி, கள வெளிப்பாடு மற்றும் ஆழ்ந்த அறிவுக்கூர்மை ஆகியவற்றை உள்ளடக்கிய தொடர்ச்சியான கற்றல் செயல்முறை வாயிலாக ஏற்பளிப்பு திறன்களைப் பெற முடியும். ஒரு தீ விபத்து காப்பீட்டு ஏற்பாளராவதற்கு ஒருவர் தீ விபத்து ஏற்படுவதற்கு சாத்தியமுள்ள காரணங்கள், பல்வேறு உடல்சார் பொருட்கள் மற்றும் சொத்துக்களின் மீது தீயின் தாக்கம், ஒரு தொழிற்சாலை தொடர்புடைய நடைமுறைகள், நிலவியல், காலநிலை நிலைமைகள் போன்றவை பற்றிய சிறந்த அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.

இதேபோன்று ஒரு கப்பல் காப்பீட்டு ஏற்பாளருக்கு துறைமுகம் / சாலை நிலைமைகள், சரக்குகளை / பொருட்களை எடுத்துச் செல்லும்போது அல்லது சேமிக்கும்போது எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகள், கப்பல்கள் மற்றும் கடற்பயணத்துக்கு அவைகளின் பொருத்தம் போன்றவை பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.

ஒரு உடல்நலக் காப்பீட்டு ஏற்பாளர் காப்பீடு செய்துகொண்டவரின் அபாய விவரம், வயது, மருத்துவக் கூறுகள், உடல்தகுதி நிலைமைகள் மற்றும் குடும்ப வரலாறு ஆகியவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும், மேலும் அபாயத்தைப் பாதிக்கக்கூடிய ஒவ்வொரு காரணியின் விளைவையும் அளவிட வேண்டும்.

**ஏற்பளிப்புக்கான தகவல் ஆதாரங்கள்**

எந்த ஒரு எண்சார்ந்த (அல்லது புள்ளியியல்) பகுப்பாய்வுக்கான முதல் நிலை, தரவுகளைச் சேகரித்தல் ஆகும். ஒரு அபாயத்துக்கான விலையை நிர்ணயிக்கும்போது, ஒரு காப்பீட்டு ஏற்பாளர் துல்லியமான மதிப்பீட்டுக்கு உதவும் வகையில் கூடுமான அளவுக்கு அதிகமான விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.

**தகவல் ஆதாரங்களாவன:**

i. **முன்மொழிவுப் படிவம் அல்லது ஏற்பளிப்பு விளக்கம்**

ii. **அபாய ஆய்வுகள்**

iii. **வரலாற்று ஈடுக்கோரல் அனுபவ தரவு:** தனிநபர் மற்றும் மோட்டார் வாகனம் போன்ற சில வகை வணிகங்களுக்கு, சாத்தியமுள்ள எதிர்கால ஈடுக்கோரல் அனுபவங்களுக்கான குறிப்பினை வழங்குவதற்கும், பொருத்தமான பிரீமியத்தை முடிவு செய்வதற்கும் காப்பீட்டு ஏற்பாளர்கள் பெரும்பாலும் வரலாற்று ஈடுக்கோரல் அனுபவ தரவுகளைப் பயன்படுத்துகின்றனர்.

## ஏற்பளிப்பு, சமப்பங்கு மற்றும் வணிக நிலைப்புத்தன்மை

காப்பீட்டில் கவனமான ஏற்பளிப்பு மற்றும் அபாய வகைப்பாடிற்கான தேவை **அனைத்து அபாயங்களும் சமமானவையல்ல** என்ற எளிமையான கருத்திலிருந்து எழுகின்றன. எனவே ஒவ்வொரு அபாயமும் இழப்பு நிகழ்வதற்கான சாத்தியக்கூறு மற்றும் தீவிரத்தன்மை ஆகியவற்றைப் பொறுத்து பொருத்தமாக மதிப்பிடப்பட்டு விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

அனைத்து அபாயங்களும் சமமானவையல்ல என்பதால், காப்பீடு செய்துகொண்டுள்ள அனைவரையும் சமமான ப்ரீமியம் செலுத்துமாறு கேட்பது நியாயமானதாக இருக்காது. **ஏற்பளிப்பின் நோக்கம் அபாயங்களின் பண்புகள் மற்றும் முன்வைக்கப்படும் அபாயத்தின் அளவு ஆகியவற்றைப் பொறுத்து சரியான பிரீமிய வீதம் விதிக்கப்படுகிற மாதிரி அபாயங்களை வகைப்படுத்துதல் ஆகும்.** அபாய மதிப்பீடு சரியாக செய்யப்பட்டு. வசூலிக்கப்படும் பிரீமியம் அபாயத்தை ஈடுகட்ட மிகக் குறைவாகவோ அல்லது போட்டித்தன்மையற்றதாக மாற்றுகிற மாதிரி அதிகமாகவோ இல்லை என்பதை ஏற்பாளர் முக்கியமாக உறுதிசெய்யவேண்டும்.

ஏற்பளிப்பின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு

i. சிறப்பியல்புகளின் அடிப்படையில் **அபாயத்தை அடையாளம் காணுதல்**

ii. முன்மொழிபவர் தெரிவித்த **அபாயத்தின் நிலையை தீர்மானித்தல்**

சுருக்கமாக, ஏற்புத்தன்மையின் நிலை, பிரீமியத்தின் போதுமான அளவு மற்றும் இதர விதிமுறைகளை முடிவு செய்வதன் மூலம் ஏற்பளிப்பின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

## B. ஐஆர்டிஏஐ இடம் தயாரிப்பை ஒப்புதலுக்காக தாக்கல் செய்வது

ஒவ்வொரு காப்பீட்டுத் தயாரிப்பும் விற்பனைக்கு வழங்கப்படுவதற்கு முன், ஒப்புதலுக்காக ஐஆர்டிஏஐயிடம் தாக்கல் செய்யப்பட வேண்டும். ஐஆர்டிஏஐ ஒவ்வொரு காப்பீட்டுத் தயாரிப்புக்கும் ஒரு தனித்துவமான அடையாள எண்ணை (UIN) வழங்குகிறது. சந்தையில் தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டதும், தயாரிப்புகளைத் திரும்பப் பெறுவதற்கும் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் உள்ளன.

1. பாலிசியில் உள்ள அபாயங்களை ஏற்கத் தயார் மற்றும் ஈடுக்கோரல்களைச் செலுத்த ஒப்புக்கொள்வதற்கும் காப்பீட்டு நிறுவனத்தின் போர்டின் தெளிவான உறுதிப்பாட்டை ரெகுலேட்டர் கோருகிறார். பாலிசி வாசகங்கள் வாடிக்கையாளருக்கு நியாயமாக இருக்கவேண்டும் மற்றும், அறிவியல்

அடிப்படையில் விலைகள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்றும் காப்பீட்டாளரிடம் அவர் கேட்டுக்கொள்கிறார்.

2. காப்பீட்டாளர் எதிர்காலத்தில் தயாரிப்புகளைத் திரும்பப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் தயாரிப்பை திரும்பப் பெறும்போது பாலிசிதாரருக்கு கிடைக்கக்கூடிய விருப்பங்களைத் திட்டமிட வேண்டும்.
3. திரும்பப் பெறப்பட்ட தயாரிப்பு வாய்ப்பாளர்களுக்கு வழங்கப்படாது.

## C. விலை நிர்ணயிப்பின் அடிப்படைகள்

காப்பீடு என்பது அபாயத்தை காப்பீட்டு நிறுவனத்துக்கு கைமாற்றம் செய்வதன் அடிப்படையில் உள்ளது. காப்பீட்டு பாலிசியை வாங்குவதன் மூலம், காப்பீடு செய்துகொண்ட சொத்துக்கு எதிரான ஆபத்திலிருந்து விளையும் நிதி இழப்புகளின் பாதிப்பை பாலிசிதாரர் குறைத்துக்கொள்ள முடியும். எதிர்கால காப்பீட்டு ஈடுக்கோரல்கள் மற்றும் செலவுகளுக்கான கட்டணங்களை உள்ளடக்கிய ஒரு விலையைக் கணக்கிடும் ஒரு செயல்முறையை காப்பீட்டாளர் பின்பற்ற தேவை. இது **விகித நிர்ணயம்** எனப்படுகின்றது.

**விகிதம் என்பது கொடுக்கப்பட்ட காப்பீட்டு அலகின் விலை ஆகும்**. எடுத்துக்காட்டாக, விகிதம் என்பது நிலநடுக்கப் பாதுகாப்புக்கு மில்லேக்கு (ஒரு ஆயிரத்திற்கு) ரூ. 1.00 எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஒவ்வொரு விகிதமும் எதிர்காலத்தில் சாத்தியமான இழப்புகளை பாதிக்கக்கூடிய தற்போதைய சூழ்நிலையில் கடந்தகால போக்குகள் மற்றும் மாற்றங்களின் பாதிப்பை பார்த்த பிறகு நிறுவப்பட்டுள்ளது.

**இந்த விகிதங்கள் பிரீமியங்களுக்குச் சமமானவை அல்ல என்பதை கவனிக்கவும்.**
**பிரீமியம் = (காப்பீட்டுத் தொகை)** x (**விகிதம்)**

## எடுத்துக்காட்டு

உடல்நலக் காப்பீட்டை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு அபாயக் கூறின் மீதும் எண்சார்ந்த அல்லது சதவீத மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. வயது, இனம், தொழில், பழக்கங்கள் போன்ற காரணிகள் முன்தீர்மானிக்கப்பட்ட அளவுகோலின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு எண் மதிப்புகள் கொடுக்கப்படுகின்றன.

ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய பிரீமியம் தொகையானது இரண்டு காரணிகளால் தீர்மானிக்கப்படும் ஒரு விகிதத்தைச் சார்ந்துள்ளது;

- ✓ ஒரு இழப்பு நிகழ்வின் காரணமாக ஏற்படும் இழப்புக்கான சாத்தியக்கூறு (காப்பீடு செய்யப்பட்ட ஆபத்தினால் ஏற்படுவது) மற்றும்
- ✓ இழப்பு நிகழ்வின் காரணமாக எழக்கூடிய மதிப்பிடப்பட்ட இழப்பு அளவு

**எடுத்துக்காட்டு**

தீ விபத்தின் காரணமாக ஏற்பட்ட சராசரி இழப்புத் தொகை ரூ. 1,00,000 என கருதவும்

100 இல் 1 [அல்லது 0.01] வீடு தீயினால் அழியும் நிகழ்தகவு உள்ளது. அதாவது, 100 காப்பீடு செய்யப்பட்ட வீடுகளில் ஒரு வீடு தீயில் எரிந்து நாசமானதாக அனுபவம் கூறுகிறது.

எதிர்பார்க்கப்படும் சராசரி இழப்பு ரூ.1,00,000 x 0.01 = ரூ. 1000

அதனால், ரூ.1,00,000 மதிப்புள்ள வீட்டை காப்பீடு செய்ய காப்பீட்டாளர்கள் குறைந்தபட்சம் ரூ.1000 வசூலிக்க வேண்டும்.

---

உண்மையில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்வதற்கு சேர்மம் போதுமா என்பதை காப்பீடு அளிப்பவர் எவ்வாறு உறுதி செய்ய முடியும்?

நாம் ஏற்கனவே பார்த்ததுபோல், முழுக் காப்பீட்டு இயங்குமுறையும் புள்ளிவிவர ரீதியாக ஒரே மாதிரியான அபாயங்களைக் கொண்ட பெரும் எண்ணிக்கையிலான நிகழ்வுகளுக்கான சேர்மத்தை உருவாக்குவதை உள்ளடக்கியுள்ளது, அதனால் இழப்புகளின் எண்ணிக்கையின் நிகழ்தகவு (அதிர்வெண்) மற்றும் இழப்பின் அளவு (கடுமை) கணிக்கக்கூடியதாகிறது. 'பெரிய எண்ணிக்கைகளின் விதி' என்று குறிப்பிடப்படும் இந்தக் கோட்பாடு, மாதிரி அளவு வளரும்போது, முடிவுகள் எதிர்பார்க்கப்படும் மதிப்பிற்கு நெருக்கமாக வரும் என்று கூறுகிறது. காப்பீட்டு நிறுவனங்கள் தங்கள் எதிர்பார்ப்புகள்/கணிப்புகளைச் செயல்பட வைப்பதற்கு அதிகமான பாலிசிகளை அதிகமான மக்களுக்கு விற்க வேண்டும்.

ஒரு எடுத்துக்காட்டாக, ஒரு நாணயத்தை சுண்டி எறிந்தால், 'தலைகள்' அல்லது 'வால்களை' பெறுவதற்கான வாய்ப்பு 50:50 ஆகும். இருப்பினும், நாணயத்தை ஒருமுறை மட்டுமே சுண்டி எறிந்தால், அதன் விளைவாக 100% தலைகள் மற்றும் 0% 'வால்கள்' அல்லது 0% 'தலைகள்' மற்றும் அல்லது 100% வால்கள் கூட வரலாம். இருப்பினும், ஒருவர் நாணயத்தை பலமுறை சுண்டி எறிந்தால், 'தலைகள்' மற்றும் 'வால்கள்' வருவதற்கான சராசரி எண்ணிக்கை 100% மற்றும் 0% வருவதற்கான வாய்ப்பு குறைந்து அதன் வாய்ப்பு 50:50 க்கு அருகில் இருக்கும்.

**எடுத்துக்காட்டு**

சொத்துக் காப்பீட்டுத் துறையில், கல் கட்டமைப்புகளை விட மரக் கட்டமைப்புகள் தீப்பிடிப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது; எனவே, மரக் கட்டமைப்புகளைக் காப்பீடு செய்வதற்கு அதிகமான பிரீமியம் வசூலிக்கப்படுகின்றது.

இதே கருத்து ஆயுள் மற்றும் உடல்நலக் காப்பீட்டுக்கும் பொருந்துகின்றது. உயர் இரத்த அழுத்தம் அல்லது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ள ஒருவருக்கு மாரடைப்பு வருவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது.

**சுய-பரீட்சை** 1

காப்பீட்டு விகிதம் உருவாக்குதலைப் பாதிக்கக்கூடிய இரண்டு காரணிகளைக் கண்டறியவும்.

I. அபாயத்தின் சாத்தியக்கூறு மற்றும் தீவிரத்தன்மை
II. அபாயத்தின் ஆதாரம் மற்றும் இயல்பு
III. அபாயத்தின் ஆதாரம் மற்றும் நேரம்
IV. அபாயத்தின் இயல்பு மற்றும் பாதிப்பு

---

1. **பிரீமியம் விகிதத்தைத் தீர்மானித்தல்**

பிரீமியத்தின் துல்லியமான விகிதம் கடந்த கால இழப்பு அனுபவத்தின் அடிப்படையில் பெறப்படுகின்றது. எனவே, கடந்தகால இழப்புகளின் புள்ளிவிவரத் தரவுகள் விகிதங்களைக் கணக்கிடும் நோக்கத்துக்கு மிகவும் அத்தியாவசியமானவை ஆகும்.

**எடுத்துக்காட்டு**

சுமார் 10 வருட காலத்துக்கு பெரும் எண்ணிக்கையிலான மோட்டார் சைக்கிள்களின் இழப்பு அனுபவம் சேகரிக்கப்பட்டிருந்தால், அந்த வாகனங்களுக்கு சேதத்தின் விளைவாக ஏற்பட்ட இழப்புகளின் மொத்தத் தொகையை பெற முடியும். இந்த இழப்புத் தொகையை மோட்டார் சைக்கிள்களின் மொத்த மதிப்பின் சதவீதமாக குறிப்பிடுவதன் மூலம், அபாயத்தின் 'கணிதவியல் மதிப்பை' நாம் நிர்ணயிக்க முடியும். இது கீழே கொடுக்கப்பட்டுள்ள சூத்திரத்தின் மூலம் குறிப்பிடப்படுகின்றது:

| | |
|---|---|
| $M = \frac{L \times 100}{V}$ | L என்பது இழப்புகளின் மொத்தத் தொகையையும், V அனைத்து மோட்டார் சைக்கிள்களின் மொத்த மதிப்பையும் மற்றும் M சராசரி இழப்பு சதவீதத்தையும் குறிக்கிறது. |

பின்வருமாறு கருதலாம்:

- ✓ ஒரு மோட்டார் சைக்கிளின் விலை ரூ. 50,000/-
- ✓ இழப்பு அனுபவம்: 10 வருடங்களில் 1000 மோட்டார் சைக்கிள்களில் 50 மோட்டார் சைக்கிள்கள் திருடு போய்விட்டன
- ✓ சராசரியாக, ஒவ்வொரு வருடமும் திருட்டின் காரணமாக ஐந்து மோட்டார் சைக்கிள்கள் மொத்த இழப்பில் சேர்ந்துள்ளன.

சூத்திரத்தைப் பயன்படுத்தும்போது, இந்த முடிவு கிடைக்கின்றது:

ஒரு வருடத்திற்கான இழப்புகள் (ரூ. 50,000 X 5) = ரூ. 2,50,000

**1000 மோட்டார் சைக்கிள்களின் மொத்த மதிப்பு (ரூ. 50,000 X 1000) = ரூ. 5,00,00,000**

இதன் பொருள் ஒரு வாகனத்தின் சராசரி இழப்பு சதவீதம், (L / V) x 100 = [2,50,000 / 5,00,00,000] x 100 = 0.5%

எனவே, ஒரு மோட்டார் சைக்கிள் உரிமையாளர் செலுத்தக்கூடிய பிரீமீயம் விகிதம் வருடம் ஒன்றுக்கு ரூ. 50,000/-இல் அரை சதவீதம், அதாவது ரூ. 250/- ஆகும். இது **'முழு' பிரீமியம்** எனப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு ரூ. 250 என்ற விகிதத்தில், ரூ. 2.5 இலட்சம் வசூல் செய்யப்பட்டு, அந்தத் தொகை 5 வாகனங்களின் மொத்த இழப்புகளுக்கான ஈடுக் கோரல்களுக்கு வழங்கப்படுகின்றது.

மேலே பெற்ற முழு ப்ரீமியத்தை வசூல் செய்வதன் மூலம் அமைக்கப்படும் நிதியானது இழப்புகளுக்குச் செலுத்துவதற்கு மட்டுமே போதுமானதாக இருக்கும்

---

மேலுள்ள உதாரணத்தில், உபரித்தொகை ஏதும் இல்லை என்பதை நாம் காண முடியும். ஆனால் நிர்வாகச் செலவுகள் (மேலாண்மைக்கான செலவுகள்) மற்றும் வணிக கொள்முதல் செலவுகளும் (முகமை கமிஷன்) காப்பீட்டு நடைமுறைகளில் உள்ளன. எதிர்பாராதவிதமாக ஏற்படும் பெரிய இழப்புகளுக்காக ஒரு வரம்பளவிற்கு தொகையை ஒதுக்கி வைப்பதும் அவசியமானதாக உள்ளது.

இறுதியாக, காப்பீட்டுப் பரிவர்த்தனை வணிக அடிப்படையில் நிகழ்வதால், வணிகத்தில் செய்யப்பட்டுள்ள முதலீட்டிற்காக கிடைக்கவேண்டிய இலாபத்திற்காக குறிப்பிட்ட இலாப விகிதம் அளிப்பது அத்தியாவசியமானதாகும்.

**எனவே, செலவினங்கள், ஒதுக்கீடுகள் மற்றும் இலாபம் ஆகியவற்றுக்கு வழங்குவதற்காக குறிப்பிட்ட சதவீதங்களைச் சேர்ப்பதன் மூலம் 'முழு பிரீமியம்' பொருத்தமான முறையில் ஏற்றப்படுகின்றது அல்லது அதிகரிக்கப்படுகின்றது**

**இறுதி ப்ரீமிய விகிதம் பின்வரும் கூறுகளைக் கொண்டிருக்கும்:**

- ✓ செலுத்துகை இழப்புகள்
- ✓ செலவின இழப்புகள் (எ.கா. ஆய்வுக் கட்டணங்கள்)
- ✓ முகமை கமிஷன்
- ✓ மேலாண்மைச் செலவுகள்
- ✓ எதிர்பாராத பெரும் இழப்புகளுக்கான ஒதுக்கீட்டு வரம்பு எ.கா. அனுமானிக்கப்பட்ட 5 இழப்புகளுக்கு எதிராக 7 மொத்த இழப்புகள்
- ✓ இலாபத்திற்கான வரம்பு

தொடர்புடைய விகிதம் நிர்ணயிக்கும் காரணிகள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒத்த வகை மற்றும் தரத்தைக் கொண்ட அபாயங்களுக்கிடையே விகிதங்களின் அளவு பற்றாக்குறையாக, அதிகப்படியாக அல்லது நியாயமற்ற வகையில் பாரபட்சமானதாக இல்லாததை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

**சுய-பரீட்சை** 2

முழு ப்ரீமியம் என்றால் என்ன?

I. இழப்புகளுக்கு மட்டுமே செலுத்தக்கூடிய அளவுக்கு பிரீமியம் போதுமான அளவுக்கு பெரியதாக உள்ளது

II. சமுதாயத்தின் இறுதிநிலை உறுப்பினர்களுக்குப் பொருந்தக்கூடிய பிரீமியம்

III. நிர்வாகச் செலவுகளுக்கு ஏற்றிய பின்னர் உள்ள பிரீமியம்

IV. மிக சமீபத்திய இழப்பு அனுபவ காலத்திலிருந்து பெறப்பட்ட பிரீமியம்

---

## 2. கழிவுத் தொகைகள்

'கழிவுத் தொகைகள்' அல்லது 'உபரி' என்பது காப்பீட்டாளர் மற்றும் காப்பீடு செய்பவர் இடையேயான செலவு-பகிர்வு ஏற்பாடு ஆகும். ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு மேல் உள்ள ஈடுக்கோரல்கள் மட்டுமே காப்பீட்டாளரால் செலுத்தப்படும் என்று கழிவுத் தொகைகள் வழங்குகின்றன. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், குறிப்பிட்ட நிலைக்குக் கீழே உள்ள

ஈடுக்கோரல்களுக்கு காப்பீட்டாளர் பொறுப்பேற்க மாட்டார். அதற்கான நிலை அல்லது வரம்பு ஒரு நிலையான தொகையாகவோ, சதவீதமாகவோ அல்லது குறிப்பிட்ட கால அளவாகவோ அமைக்கப்படும் (அது உபரி காலம் என்று அழைக்கப்படும்.) உடல்நல பாலிசிகளில், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நாட்கள்/ மணிநேரத்திற்கு அப்பால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே .ஈடுக்கோரல்கள் செலுத்தப்படும் என்ற நிபந்தனை இருக்கலாம். கழிவுகள் ஆயுள் பாலிசிகளில் பயன்படுத்தப்படுவதில்லை. சொத்து, மோட்டார் மற்றும் வீட்டுக் காப்பீடுகள் போன்ற தயாரிப்புகளில், கழிவுகள் முன்னரே தீர்மானிக்கப்பட்டு காப்பீடு செய்பவர் இழப்பீட்டுத் தொகைக்காக ஏற்க வேண்டிய தொகைகளாகும். சில பாலிசிகளில் கழிவுகள் கட்டாயமானதாக இருக்கலாம். காப்பீடு செய்பவர் தானாக முன்வந்து அதிக கழிவுகளைத் தேர்ந்தெடுக்கும்போது, காப்பீட்டாளர்கள் பொதுவாக குறைந்த பிரீமியங்களை வசூலிக்கிறார்கள். குறிப்பிட்ட கழிவுகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஒரு முகவர் ஆய்வு செய்து காப்பீடு செய்தவருக்கு 'வருடத்திற்கு' அல்லது 'ஒரு நிகழ்வுக்கு' என்ற அடிப்படையில் கழிவு பொருந்துமா என்பதை தெரிவிக்க வேண்டும்.

கழிவுகள் இருப்பதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. தொழிற்சாலைகள், பல சரக்கு அனுப்புதல்கள், பணியாளர்களின் பெரிய குழுக்கள், பொதுப் பொறுப்பு வெளிப்பாடுகள் உள்ள பெருநிறுவன வாடிக்கையாளர்களோ மற்றும் பெரிய அளவிலான காப்பீட்டுத் தொகை இருக்கும்போது, அவர்கள் சுயமாக சிறிய ஈடுக்கோரல்களைச் சுமக்க விரும்பி ஈடுக்கோரல்களை நிரூபிக்க தேவையான ஆவணங்களைத் தவிர்க்கலாம். எடுத்துக்காட்டுக்கு, இலட்சங்களை பிரீமியமாக செலுத்தும் ஒரு பெரிய தொழிற்சாலை உரிமையாளர், சுமார் ரூ. 2,000 செலவை வைக்கும் ஒரு இயந்திரத்தின் சிறிய பழுதுபார்க்கும் செலவை பற்றி கவலைப்பட மாட்டார்.

சில வகையான பாலிசிகளுக்கு, காப்பீடு செய்தவரும் சரியாக கவனித்துக்கொள்வதை உறுதிசெய்ய, அவர்கள் இழப்பின் ஒரு பகுதியை ஏற்க வேண்டும். உதாரணமாக, உடல்நலக் காப்பீட்டாளர்கள் கழிவுகளை வலியுறுத்தலாம், இதனால் காப்பீடு இருக்கிறது என்பதற்காக விலையுயர்ந்த மருத்துவமனை அறைகளுக்காக அதிகமாகச் செலவு செய்யமாட்டார்கள். சில காப்பீட்டாளர்கள் சிறிய ஈடுக்கோரல்களைச் செயலாக்க நேரத்தைச் செலவிட விரும்ப மாட்டார்கள். மேலும், சில சூழ்நிலைகளில், காப்பீட்டாளர்கள் ஒரே இடத்தில் அதிக எண்ணிக்கையிலான சிறிய இழப்புகள் குவிவதால் ஏற்படும் நிதி அழுத்தத்திற்கு உள்ளாக விரும்ப மாட்டார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு தொழில்துறை எஸ்டேட் பகுதியில் வருகின்ற சிறிய வெள்ளம், அப்பகுதியில்

உள்ள அனைத்து கிடங்குகளிலிருந்தும் பல குறைந்த மதிப்புள்ள ஈடுக்கோரல்களுக்கு வழிவகுக்கும்.

**வரம்புகள் (ஃபிரான்சைசஸ்)**: ஃபிரான்சைஸ் என்பது வரம்பின் தொகுப்பைக் குறிக்கிறது, அது வழக்கமாக காப்பீடு செய்யப்பட்ட தொகையின் சதவீதமாக இருக்கும், கழிவுகளில் உள்ளதை போலவே அந்த வரம்பிற்கு கீழே எந்த ஈடுக்கோரலும் ஏற்கப்படாது. இருப்பினும், ஈடுக்கோரல் அந்த வரம்பை மீறும் போது, முழு ஈடுக்கோரலும் காப்பீட்டாளரால் ஏற்கப்படும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், காப்புறுதி நிறுவனங்களின் நிதிப் பொறுப்பின் குறைந்தபட்ச வரம்பை ஃபிரான்சைஸ் வரம்பு தீர்மானிக்கிறது. ஃபிரான்சைஸும் கழிவுகள் மாதிரியே பாலிசிமீது அதே வழியில் பொருந்தும் மற்றும் அதே காரணங்களுக்காக ஈடுக்கோரல்கள் வரம்புக்கு கீழே இருந்தால் ஏற்கப்படாது, ஆனால் வரம்பை மீறும் போது, இழப்பின் முழுத் தொகையும் செலுத்தப்படும்.

## D. விகித நிர்ணய காரணிகள்

விகிதங்களை கூட்டுவதற்கும், விகித நிர்ணய திட்டங்களைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படும் தொடர்புடைய கூறுகள் **விகித நிர்ணய காரணிகள்** எனப்படுகின்றன. அபாயத்தைத் தீர்மானிப்பதற்கும், விதிக்கும் கட்டணங்களை முடிவு செய்வதற்கும் காப்பீட்டு நிறுவனங்கள் 'விகித நிர்ணய காரணிகளை' பயன்படுத்துகின்றன.

- ✓ ஒரு அடிப்படை விகிதத்தை முதலில் நிறுவுவதற்கு காப்பீடு அளிப்பவர் அவருடைய மதிப்பீடுகளைப் பயன்படுத்துகிறார்.
- ✓ பின்பு, காப்பீட்டாளர் இந்த விகிதத்தில் இருந்து சொத்து அபாயத்தின் மீதான சிறந்த தீ விபத்து பாதுகாப்பு போன்ற ஏற்பாடுகளின் நேர்மறை அம்சங்களுக்குப் பொருந்தக்கூடிய தள்ளுபடிகளை கழித்து மற்றும் வளாகத்தில் எரியக்கூடிய பொருட்கள் இருப்பது போன்ற பாதகமான அம்சங்களுக்கு ஏற்றுதலை சேர்ப்பது போன்றதை கொண்டு சரிசெய்கிறார்.
- ✓ ஆயுள் காப்பீட்டில் மோசமான உடல்நலம், பழக்கவழக்கங்கள், பரம்பரை அல்லது தொழில் சார்ந்த காரணிகளுக்கு ஏற்றுதலை பயன்படுத்துவது வழக்கமான நடைமுறையாகும்.

## முக்கிய வார்த்தைகள்

- கழிவுகள்
- வரம்புகள் (ஃபிரான்சைஸ்)

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

பதில் 1 - சரியான பதில் விருப்பம் I.

பதில் 2 - சரியான பதில் விருப்பம் I.

# அத்தியாயம் C-06

# ஈடுக்கோரல்களின் செயலாக்கம்

## அத்தியாய அறிமுகம்

காப்பீடு செய்தவர்கள் இழப்பினால் பாதிக்கப்படும்போதுதான் காப்பீட்டின் பலனை அனுபவிக்கிறார்கள். முழு காப்பீட்டுத் துறையும் காப்பீடு பெற்றவர்கள் எதிர்கொள்ளும் இழப்புகளை தீர்க்க உணர்திறனுடன் செயல்படுகிறது மற்றும் எழும் ஈடுக்கோரல்களை முடிந்தவரை இணக்கமாகவும் முடிந்தவரை விரைவாகவும் தீர்க்க முயற்சிக்கிறது.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. இழப்பு மதிப்பீடு மற்றும் ஈடுக்கோரல் தீர்வு

B. ஈடுக்கோரல் வகைகள்

C. மத்தியஸ்தம் (***Arbitration)***

D. இதர சர்ச்சை தீர்ப்பு நுட்பங்கள்

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, நீங்கள் பின்வருவதை புரிந்து கொள்ள முடியும்:

1. ஈடுக்கோரல் தீர்வு
2. ஈடுக்கோரல் தீர்வின் முக்கியத்துவம்

## A. இழப்பு மதிப்பீடு மற்றும் ஈடுக்கோரல் தீர்வு

ஈடுக்கோரல் மதிப்பீடு (இழப்பு மதிப்பீடு) என்பது காப்பீடு பெற்றவருக்கு நேர்ந்துள்ள இழப்பு காப்பீடு செய்யப்பட்டுள்ள அபாயத்தினால் ஏற்பட்டுள்ளதா என்பதை தீர்மானிக்கும் செயல்முறை ஆகும், அதாவது இழப்பு எந்த விலக்கின் கீழும் வரவில்லை மற்றும் உத்தரவாதத்தை மீறாததை உறுதி செய்வது.

நியாயம் மற்றும் நடுநிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் ஈடுக்கோரல் தீர்வுகள் அமைந்திருக்க வேண்டும். ஈடுக்கோரலின் விரைவான தீர்வு என்பது, ஒரு பொதுக் காப்பீட்டு நிறுவனத்துக்கு அதன் சேவைகளுக்கான செயல்திறனின் அளவுகோலாக உள்ளது. ஒவ்வொரு நிறுவனமும் ஈடுக்கோரல்களைச் செயல்படுத்துவதில் எடுத்துக்கொள்ள வேண்டிய நேரம் குறித்த உள்ளக வழிகாட்டுதல்களைக் கொண்டுள்ளது, மற்றும் அதன் பணியாளர்கள் அவற்றைப் பின்பற்றுகிறார்கள்.

இது பொதுவாக "மீள்வரு (டர்ன்அரவுண்ட்) நேரம்" (TAT) எனப்படுகின்றது. சில காப்பீட்டு நிறுவனங்கள் ஈடுக்கோரல் நிலைமைகளை இணையவழியில் அவ்வப்போது பார்த்துக்கொள்வதற்கான வசதியையும் காப்பீடு பெற்றவர்களுக்காக ஏற்பாடு செய்துள்ளன. ஈடுக்கோரல்களை விரைவாகச் செயல்படுத்துவதற்காக சில பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் ஈடுக்கோரல் மையங்களையும் அமைத்துள்ளன.

### ஒரு காப்பீட்டு ஈடுக்கோரலின் முக்கியமான அம்சங்கள்

பெரும்பாலான நிறுவனங்கள் தங்கள் TAT மூலம் பிணைக்கப் பட்டிருந்தாலும், ஈடுக்கோரலைத் தீர்ப்பதற்கு கவனிக்க வேண்டிய அம்சங்களை ஒரு முகவர் அறிந்துகொள்வது முக்கியம். பொது காப்பீடு ஈடுக்கோரல்களின் மிக முக்கியமான ஆறு அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

i. இழப்பு ஏற்படுத்திய நிகழ்வு பாலிசியின் நோக்கத்திற்குள் உள்ளதா.

ii. காப்பீடு செய்தவர் பாலிசி நிபந்தனைகளில் தனது பங்கை பொறுத்தவரை இணங்கி நடந்துள்ளாரா.

iii. உத்தரவாதங்களைப் பின்பற்றுவது. உத்தரவாதங்கள் பின்பற்றப்பட்டனவா இல்லையா என்பதை ஆய்வு அறிக்கை தெரிவிக்கும்.

iv. பாலிசி காலத்தின்போது முன்மொழிபவர் உன்னத நன்னம்பிக்கையை வெளிப்படுத்தினாரா.

v. இழப்பு ஏற்பட்டால், காப்பீடு பெற்றவர் காப்பீடு பெறாதவரைப் போன்று நடந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றார். வேறுவிதமாகக்

கூறினால், இழப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான கடமை அவருக்கு உள்ளது.

vi. கொடுக்க வேண்டிய தொகையைத் தீர்மானிப்பது. கொடுக்க வேண்டிய இழப்புத் தொகை காப்பீட்டுத் தொகையைச் சார்ந்து இருக்கும். இருப்பினும், கொடுக்க வேண்டிய தொகை பின்வருவனவற்றையும் சார்ந்திருக்கும்:

- ✓ பாதிக்கப்பட்ட சொத்தில் காப்பீடு பெற்றவரின் காப்பீட்டுப் பற்றின் அளவு
- ✓ இடர்க்காப்பின் மதிப்பு
- ✓ குறைக்காப்பீட்டு விண்ணப்பம்
- ✓ அதில் பங்களிப்பு மற்றும் கடன்பற்றுரிமை (subrogation) நிலைமைகளின் பயன்பாடு

ஆயுள் காப்பீடு தொடர்பான ஈடுக்கோரல்களின் விஷயத்தில், காப்பீட்டாளர் பின்வருவதை சரிபார்க்கிறார்-

1) பாலிசியின் நிபந்தனைகள் மீறப்படவில்லை
2) உன்னத நன்னம்பிக்கை பின்பற்றப்பட்டது மற்றும்
3) அடிப்படை உண்மைகள் எதுவும் மோசடியாக மறைக்கப்படவில்லை.

## B. ஈடுக்கோரல் வகைகள்

ஈடுக்கோரல்கள் பின்வரும் வகைகளின் கீழ் பிரிக்கப்படுகின்றன:

### i. நிர்ணயிக்கப்பட்ட ஈடுக்கோரல்கள்

இவை பாலிசியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குள் தெளிவாக இருக்கும் ஈடுக்கோரல்கள் ஆகும். நோக்கம் மற்றும் தேர்வு செய்யப்படும் காப்பீட்டுத் தொகை மற்றும் பல்வேறு காப்பீட்டு வகைகளில் வழங்கப்பட்டுள்ள மற்ற ஈட்டுறுதி வகைகள் ஆகியவற்றை மனதில் கொண்டு இந்த ஈடுக்கோரல் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

### II. சராசரி அல்லது சராசரி விதியின் நிலைமை

இது, காப்பீடு பெறுபவரை தன்னுடைய சொத்தை குறைக்காப்பீடு எனப்படும் அதன் உண்மையான மதிப்புக்குக் குறைவான மதிப்புக்கு காப்பீடு செய்ததற்காக தண்டிக்கக்கூடிய நிலை ஆகும். ஒரு ஈடுக்கோரல் நிகழ்வில், பாலிசிதாரர் குறைக்காப்பீட்டுத் தொகைக்கேற்ப அவருடைய உண்மையான தொகையிலிருந்து விகிதாச்சார முறையில் குறைக்கப்பட்ட ஒரு தொகையைப் பெறுகிறார். பொது காப்பீடு விஷயத்தில் இதுபோன்ற சூழ்நிலைகள் அதிகம்.

III. **கடவுளின் செயல் எனப்படும் ஆபத்துகள் - பேரிடர் இழப்புகள்**

புயல், சூறாவளி, வெள்ளம், வெள்ளப்பெருக்கு, மற்றும் நிலநடுக்கம் என்பன போன்ற இயற்கை ஆபத்துகள் "கடவுளின் செயல்" எனப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்த ஆபத்துகள் காப்பீடு அளிப்பவரின் பல பாலிசிதாரர்களுக்கு இழப்பை விளைவிக்கின்றன. பொது காப்பீட்டு ஈடுக்கோரல்களின் சில வகைகளை மதிப்பிடுவதற்கு ஆய்வாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

அத்தகைய பெரிய மற்றும் பேரழிவு இழப்புகளில், முந்தைய மதிப்பீட்டுக்காகவும் இழப்புக் குறைப்பு முயற்சிகளுக்காகவும் ஆய்வாளர் உடனடியாகத் தளத்துக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். அதேசமயத்தில், உள்ளடங்கியுள்ள தொகை பெரிதாக இருக்கும்போதும் இழப்பு ஏற்பட்ட இடத்தை காப்பீட்டாளர்களின் அதிகாரிகளும் சென்று பார்ப்பார்கள். பார்வையிடலின் நோக்கம் இழப்பின் தன்மை மற்றும் அளவு குறித்து உடனடி நிகழிட கருத்தைப் பெறுவது ஆகும்.

மதிப்பீடு தொடர்பாக ஆய்வாளர்கள் சில பிரச்சினைகளை எதிர்கொண்டால், பூர்வாங்க அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படுகின்றன. மேலும், அதற்காக காப்பீட்டாளர்களிடமிருந்து வழிகாட்டுதலையும் நெறிமுறைகளையும் பெற விரும்பலாம், தேவைப்பட்டால், காப்பீடு பெற்றவருடன் பிரச்சினைகளை விவாதிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

IV. **கணக்கில் செலுத்துதல்** (On account payment)

பொது காப்பீட்டு ஈடுக்கோரல்களுக்கு, பூர்வாங்க அறிக்கைகளைத் தவிர, நீண்ட காலத்துக்கு பழுதுபார்ப்புகள் மற்றும்/அல்லது மாற்றல் வேலைகள் நடைபெறும்போது அவ்வப்போது இடைக்கால அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படுகின்றன. இடைக்கால அறிக்கைகள் இழப்பு மதிப்பீட்டு முன்னேற்றம் குறித்த கருத்தையும் காப்பீட்டாளருக்கு வழங்குகின்றன. பாலிசிதாரர் விரும்பினால், இழப்பை "கணக்கில் செலுத்துதலை" (On account payment) பரிந்துரைக்கவும் இது உதவுகின்றது. வழக்கமாக இழப்பு பெரிதாக இருக்கும்போதும், மதிப்பீடு நிறைவடைவதற்கு சிறிது காலம் ஆகும் போதும் இது நிகழ்கின்றது.

ஈடுக்கோரலானது ஒழுங்குமுறைகளின் படி இருப்பதாக கண்டறியப்பட்டால், ஈடு கோருபவருக்கு தொகை வழங்கப்பட்டு, அது நிறுவனத்தின் பதிவேடுகளில் பதிவு செய்யப்படுகின்றது. இணைக் காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் மறுகாப்பீடு அளிப்பவர்களிடமிருந்து பெறவேண்டிய பொருத்தமான மீட்புகள்

ஏதேனும் இருந்தால் அவை மேற்கொள்ளப்படுகின்றன. சில நிகழ்வுகளில், காப்பீடு பெற்றவர் பணம் பெறுபவராக இருக்க மாட்டார்.

V. **விடுவிப்பு வவுச்சர்கள் (Discharge vouchers)**

பாலிசியின் கீழ் ஒரு விடுவிப்பு வவுச்சரைப் பெற்ற பிறகு மட்டுமே ஈடுக்கோரல் தீர்வு மேற்கொள்ளப்படுகின்றது. காயங்களுக்கான ஈடுக்கோரல்களுக்கான விடுவிப்பு இரசீதின் மாதிரி (தனிப்பட்ட விபத்துக் காப்பீட்டின் கீழ்) ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது: (அது நிறுவனத்துக்கு நிறுவனம் வேறுபடக்கூடும்)

> பாலிசிதாரர் பெயர்
>
> ஈடுக்கோரல் எண். பாலிசி எண்.
>
> கம்பெனி லிமிடெட் நிறுவனத்திலிருந்து ________ தொகை பெற்றோம்.
>
> இது ________ அன்று அல்லது அது குறித்து நடந்த விபத்து காரணமாக எனக்கு/எங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் காரணமாக எனக்கு/எங்களுக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டின் முழுமையான மற்றும் இறுதித் தீர்வு தொகையான ரூ ________ ஆகும். இந்த தொகையை பெற்றதற்காக கூறப்பட்ட ஈடுக்கோரல் தொடர்பாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எழும் எனது/எங்களின் அனைத்து தற்போதைய அல்லது எதிர்கால ஈடுக்கோரல்களுக்காக, நான்/நாங்கள் இந்த விடுவிப்பு ரசீதை நிறுவனத்திற்கு வழங்குகிறோம்.
>
> தேதி (கையொப்பம்)

VI. **கணக்குத் தீர்ப்புக்குப் பிந்தைய நடவடிக்கை**

ஏற்பளிப்பு தொடர்பாக பொது ஈடுக்கோரலுக்கு தீர்வு காணப்பட்ட பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கை வணிகத்தின் ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகைக்கு மாறுபடும்.

**எடுத்துக்காட்டு**

வழங்கப்படும் ஈடுக்கோரல் தொகையின் அளவைப் பொறுத்து, ஒரு தீ விபத்து பாலிசியின் கீழ் காப்பீட்டுத் தொகை குறைக்கப்படுகின்றது. இருப்பினும், விகிதப்படி பிரீமியத்தை செலுத்தி அதை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர முடியும். இது வழங்கப்படும் ஈடுக்கோரல் தொகையிலிருந்து கழித்துக்கொள்ளப்படும்.

ஒரு தனிநபர் விபத்துக் காப்பீட்டின் கீழ் மூலதனக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும்போது, பாலிசி இரத்து செய்யப்படுகின்றது.

இதேபோல், தனிநபர் நம்பகத்தன்மை உத்தரவாத பாலிசியின் கீழ் ஈடுக்கோரல் வழங்கப்பட்டால், பாலிசி தானாகவே முடிவுக்கு வந்துவிடும்.

VII. **அழிவுக்காப்பு (**Salvage)

அழிவுக்காப்பு என்பது பொதுவாக சேதமடைந்த சொத்தைக் குறிக்கின்றது. இழப்புத் தொகை வழங்கப்பட்ட பிறகு, அழிவுக்காப்பு அதாவது காப்பளிக்கப்பட்ட சொத்து காப்பீடு அளிப்பவரைச் சேர்கின்றது.

**எடுத்துக்காட்டு**

மொத்த இழப்பு அடிப்படையில் வாகன ஈடுக்கோரல்கள் தீர்க்கப்பட்டால், சேதமடைந்த வாகனத்தை காப்பீட்டாளரால் எடுத்துக் கொள்கிறார். தீ விபத்து ஈடுக்கோரல்கள், கப்பல் சரக்கு ஈடுக் கோரல்கள் போன்றவற்றிலும் கூட சொத்துக்களின் அழிவுக்காப்பு (**Salvage)** என்பது நிகழக்கூடும்.

அழிவுக்காப்பு (**Salvage)** சொத்தானது அந்த நோக்கத்துக்கென நிறுவனங்களால் வகுக்கப்பட்ட நடைமுறைகளுக்கேற்ப அகற்றப்படுகின்றது. இழப்பை மதிப்பீடு செய்துள்ள ஆய்வாளர்களும் அதை அகற்றுவதற்கான முறைகளைப் பரிந்துரை செய்வார்கள்.

VIII. **பணமீட்புகள்**

ஈடுக்கோரல்கள் தீர்க்கப்பட்ட பிறகு, காப்பீட்டு ஒப்பந்தங்களில் பொருந்தும் கடன்பற்றுரிமைகளின் (subrogation) கீழ் காப்பீடு அளிப்பவர்கள், காப்பீடு பெற்றவர்களின் உரிமைகளுக்கும் தீர்வுகளுக்கும் தகுதி பெறுகின்றனர், மேலும் பொருந்தும் சட்டங்களின் கீழ் பொருந்தக்கூடிய இழப்புக்குப் பொறுப்புடைய மூன்றாம் தரப்பினரிடமிருந்து கொடுக்கப்பட்ட இழப்புகளை மீட்டுப் பெறும் உரிமையை பெறுகின்றனர். எனவே, கப்பல் நிறுவனங்கள், இரயில்வேக்கள், சாலை ஊர்திகள், விமானங்கள், துறைமுகப் பொறுப்பு அதிகாரிகள் போன்றோரிடமிருந்து காப்பீட்டாளர்களால் இழப்பினை மீட்டுப்பெற முடியும்.

**எடுத்துக்காட்டு**

அனுப்பிய சரக்கு விநியோகிக்கப்படாதபோது, பொருள் எடுத்துச் செல்பவர்களே இழப்புக்குப் பொறுப்பாவர். இதேபோல், பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டு அதைத் தொடர்ந்து காணாமல் போய்விட்ட பொருட்களுக்கு துறைமுகப் பொறுப்புக் கழகம் பொறுப்புடையதாகும். இதற்காக, ஈடுக்கோரல் கணக்குத்

தீர்க்கப்படுவதற்கு முன்பு காப்பீடு பெற்றவரிடமிருந்து முறையாக முத்திரையிடப்பட்ட கடன் பற்றுரிமை (subrogation) கடிதம் பெறப்படுகின்றது.

### IX. **ஈடுக்கோரல் தொடர்பான சர்ச்சைகள்**

முயற்சிகள் சிறப்பாக இருந்த போதிலும், ஈடுக்கோரலின் தாமதம் அல்லது செலுத்தாமை (மறுத்தல்) ஏற்படக்கூடும் அல்லது குறைந்த தொகைக்கு ஈடுக்கோரல் ஒப்புக்கொள்ளப்படலாம், இது காப்பீட்டாளருக்கும் காப்பீடு பெறுபவருக்கும் இடையே அதிருப்தி மற்றும் சர்ச்சைக்கு வழிவகுக்கும். .

இவை தவிர, மிகவும் பொதுவான காரணங்களாவன:

- ✓ அடிப்படை தகவல்களை வெளிப்படுத்தாமை
- ✓ காப்பு இன்மை
- ✓ விலக்கப்பட்ட ஆபத்துகளால் ஏற்பட்ட இழப்பு
- ✓ போதுமான காப்பீட்டுத் தொகை இன்மை
- ✓ உத்தரவாதத்தின் மீறல்
- ✓ குறைக்காப்பீடு, தேய்மானம் ஆகிய காரணங்களினால் அளவு தொடர்பான பிரச்சினைகள்

இழப்புகள் காரணமாக எழும் நிதி பிரச்சினையால் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் சமயத்தில் இவை அனைத்தும் காப்பீடு பெற்றவருக்கு கணிசமான அளவு வருத்தத்தை ஏற்படுத்தும். அவர் துன்பங்களைக் குறைப்பதற்கு, குறை தீர்த்தல் மற்றும் பிரச்சினைகளை கையாளுதல் ஆகியவை பாலிசியிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. தீ விபத்து அல்லது சொத்து பாலிசிகளில் ”மத்தியஸ்த” நிபந்தனைகள் பாலிசியிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன.

## C. **மத்தியஸ்தம்** **(Arbitration)**

மத்தியஸ்தம் என்பது ஒப்பந்தங்களின் வாயிலாக எழும் சர்ச்சைகளை தீர்க்கக்கூடிய ஒரு முறை ஆகும். மத்தியஸ்தம் மற்றும் இணக்கச் சட்டம் (Arbitration and Conciliation Act), 1996-இன் விதிகளுக்கேற்ப மத்தியஸ்தம் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் கீழ், ஒரு ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதற்கான அல்லது ஒரு சர்ச்சைக்குத் தீர்வு காண்பதற்கான வழக்கமான முறை நீதிமன்றத்துக்குச் செல்வதாக இருக்கும். இருந்தபோதிலும், அத்தகைய வழக்கு குறிப்பிடத்தக்க அளவு தாமதத்தையும் செலவையும்

உள்ளடக்கியதாக உள்ளது. மத்தியஸ்தச் சட்டமானது மிகவும் முறைசாராத, குறைந்த செலவுடைய மற்றும் தனிப்பட்ட மத்தியஸ்தச் செயல்முறை மூலம் ஒப்பந்தத்தின் கீழ் சர்ச்சைகளைச் சமர்ப்பிப்பதற்கு நபர்களுக்கு அனுமதியளிக்கின்றது.

சர்ச்சையில் சம்பந்தப்பட்ட நபர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மத்தியஸ்தர்கள் மூலம் மத்தியஸ்தம் செய்யப்படலாம். ஒரே ஒரு மத்தியஸ்தர் இருக்கும் நிகழ்வில், அந்த நபரை இரண்டு தரப்பினரும் ஒப்புக்கொள்ள வேண்டும். பல வர்த்தக காப்பீட்டு பாலிசிகள், சர்ச்சைகள் மத்தியஸ்தத்துக்கு உட்பட்டதாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கும் **மத்தியஸ்த விதிக்கூறினைக்** (arbitration clause) கொண்டுள்ளன. பாலிசியின் கீழான பொறுப்பு நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், செலுத்த வேண்டிய அளவு குறித்து ஏதேனும் வேறுபாடு வரும்போது, அத்தகைய வேறுபாடு மத்தியஸ்தரிடம் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதை குறிப்பிடும் மத்தியஸ்த விதிக் கூறினையும், தீ விபத்து மற்றும் பல இதர பாலிசிகள் கொண்டுள்ளன. வழக்கமாக மத்தியஸ்தரின் தீர்ப்பு இறுதியானதாகவும், இரண்டு தரப்பினரையும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

நிபந்தனைச் சொற்கள் ஒவ்வொரு பாலிசிக்கும் வேறுபடுகின்றன. பொதுவாக, அது பின்வரும் கருத்துக்களைத் தெரிவிக்கின்றது:

i. இரண்டு தரப்பினராலும் நியமிக்கப்பட்ட பொது மத்தியஸ்தரின் முடிவுக்கோ, அல்லது ஒரு பொது மத்தியஸ்தரை நியமிப்பதில் அவர்களுக்கிடையே ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அவர்கள் தனித்தனியாக நியமித்த இரண்டு மத்தியஸ்தர்களின் முடிவுக்கோ இந்த சர்ச்சை சமர்ப்பிக்கப்படுகிறது.

ii. இந்த இரண்டு மத்தியஸ்தர்களும் ஒரு நடுவரை நியமிப்பார்கள், அவர் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார். இந்தக் கூட்டங்களின் நடைமுறை நீதிமன்றத்தை ஒத்துள்ளது. தேவைப்பட்டால், ஒவ்வொரு தரப்பும் வழக்கறிஞர் உதவியுடன் தன்னுடைய வழக்கினைத் தெரிவிக்கிறது, மற்றும் சாட்சிகள் விசாரணை செய்யப்படுகின்றனர்.

iii. இரண்டு மத்தியஸ்தர்களும் ஒரு முடிவினை ஒத்துக்கொள்ளவில்லை எனில், அந்த விஷயம் நடுவருக்கு முன்பு சமர்ப்பிக்கப்படுகிறது, அவர் தனது தீர்ப்பினைக் கூறுகிறார்.

iv. தீர்ப்பு வழங்கும் மத்தியஸ்தர் / மத்தியஸ்தர்களின் அல்லது நடுவரின் விருப்புரிமையின் படி செலவுத் தொகைகள் வழங்கப்படுகின்றன

கடன்பாடு கேள்வி தொடர்பான சர்ச்சைகள் நீதிமன்ற வழக்கு வாயிலாக தீர்க்கப்படுகின்றன.

**எடுத்துக்காட்டு**

பாலிசியில் காப்பீடப்பட்டதின் கீழ் வராததால், இழப்புத் தொகையை செலுத்த முடியாது என காப்பீட்டு நிறுவனங்கள் வாதிட்டால், அந்த விஷயம் சட்ட நீதிமன்றத்தின் கீழ் தீர்மானிக்கப்பட வேண்டும். மீண்டும், அடிப்படை தகவல்களைத் தெரிவிக்காமல் மோசடி மூலம் காப்பீடு பெறப்பட்டதால் அந்தப் பாலிசி செல்லாது எனத் தெரிவித்து காப்பீடு அளிப்பவர்கள் ஈடுக்கோரலை மறுத்தால் ('உன்னத நன்னம்பிக்கை' என்ற சட்டக் கடமையின் மீறல்), அந்தப் பிரச்சினை நீதிமன்ற வழக்கின் மூலமாக தீர்க்கப்பட வேண்டும்.

## D. இதர சர்ச்சை தீர்ப்பு நுட்பங்கள்

ஐஆர்டிஏஐ ஒழுங்குவிதிகளின்படி, ஏதேனும் ஒரு காரணத்துக்காக காப்பீடு அளிப்பவரின் சேவை குறித்து காப்பீடு பெறுபவர் அதிருப்தியடையும் பட்சத்தில், காப்பீடு பெறுபவருக்குக் கிடைக்கும் குறை தீர்ப்பு (grievance redressal) முறை குறித்து அனைத்து பாலிசிகளும் தெரிவிக்க வேண்டும்.

தனிப்பட்ட தொழில் வகைகளின் கீழ் ஈடுக்கோரல்கள் ஏற்படும் நிகழ்வில், அதிருப்தியடைந்த பாலிசிதாரர் காப்பீடு குறைதீர் அதிகாரியை அணுக முடியும், இந்த செயல்முறை அத்தியாயம் 9 இல் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. அவரின் அலுவலகம் குறித்த விவரங்கள் பாலிசியில் வழங்கப்பட்டுள்ளன. காப்பீடு குறைதீர் அதிகாரியின் முடிவு காப்பீட்டாளரை கட்டுப்படுத்தும் ஆனால் காப்பீடு பெறுபவரை அல்ல

நிதி அதிகாரம் மற்றும் காப்பீடு குறைதீர் அதிகாரிகளின் வரம்புகள் போன்ற விஷயங்களும் அத்தியாயம் 9 இல் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன.

**சுய-பரீட்சை 1**

பின்வருவனவற்றில் எந்த நடவடிக்கைகள் ஈடுக்கோரல்களின் தொழில்முறைத் தீர்வுகளின் கீழ் வகைப்படுத்தப்படவில்லை?

I. இழப்பின் காரணத்துடன் தொடர்புடைய தகவல்களைக் கேட்டல்

II. ஈடுக்கோரலை பாரபட்சமாக அணுகுதல்

III. காப்பீட்டுக்குட்பட்ட ஆபத்தினால் இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல்

IV. ஈடுக்கோரலின் கீழ் செலுத்த வேண்டிய தொகையின் அளவை உறுதி செய்தல்

**சுய-பரீட்சைக்கான பதில்கள்**

**பதில்** 1 - சரியான பதில் விருப்பம் II.

**முக்கிய வார்த்தைகள்**

மீள்வரு (டர்ன்அரவுண்ட்) நேரம்” (TAT)

அழிவுக்காப்பு (Salvage)

பணமீட்புகள்

ஈடுக்கோரல் மதிப்பீடு

# அத்தியாயம் C-07

# ஆவணமாக்குதல்

**அத்தியாய அறிமுகம்**

காப்பீட்டுத் துறையில், நாம் நிறைய படிவங்கள், ஆவணங்கள் போன்றவற்றை பயன்படுத்துவோம். இவை காப்பீடு பெறுபவர் மற்றும் காப்பீட்டாளருக்கு மத்தியில் உள்ள உறவில் ஒரு தெளிவான புரிதலை ஏற்படுத்துவதற்காக தேவைப்படுகிறது இந்த அத்தியாயத்தில், முன்மொழிவு கட்டத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு ஆவணங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை பற்றி நாம் கற்றுக்கொள்வோம்.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

பின்வருவதின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வோம்.

A. தகவல் ஏடு

B. முன்மொழிவு படிவம்

C. உங்கள் வாடிக்கையாளரை அறியவும் (Know your Customer -KYC) ஆவணங்கள்

---

**இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களுக்கு:**

- முன்மொழிவு நிலையில் உள்ள ஆவணங்கள் மற்றும் அதன் முக்கியத்துவம் புரிந்துவிடும்
- தகவல் ஏடின் நோக்கங்கள் நன்றாக புரிந்துவிடும்
- முன்மொழிவு படிவத்தின் முக்கியத்துவம் புரிந்துவிடும்
- பொதுவாக நடைமுறையில் உள்ள அனைத்து பாலிசிகளுக்கும் பொருந்தும் பணமோசடி தடுப்பு (AML) மதிப்பாய்வு, உங்கள் வாடிக்கையாளரை அறியவும் (KYC) போன்ற விதிமுறைகள் மற்றும் முக்கியமான ஆவணங்களை எல்லாம் கற்று பாராட்டுவீர்கள்.
- வயதுச் சான்று மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்களின் முக்கியத்துவம் புரிந்துவிடும்.

## A. தகவல் ஏடு

தகவல் ஏடு என்பது ஒரு முன்மொழிவு நிலை ஆவணமாகும். தகவல் ஏடு என்பது தயாரிப்பு பற்றிய விவரங்களை வழங்குவதற்காக காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் பயன்படுத்தப்படும் முறையான சட்ட ஆவணமாகும். காப்பீட்டுத் தயாரிப்புகளை விற்க அல்லது விளம்பரப்படுத்த, காகித ஆவணமாக, மின்னணு அல்லது வேறு எந்த வடிவத்திலும் காப்பீட்டாளரால் வழங்கப்பட்ட ஆவணத்தை இது குறிக்கலாம். இந்த நோக்கத்திற்காக, காப்பீட்டுத் தயாரிப்புகளில் கூடுதல் காப்புகள்/ ரைடர்கள் ஏதேனும் இருந்தால் அவை சேர்க்கப்படும். தகவல் ஏடு என்பது ஒரு அறிமுக ஆவணம் போன்றது, இது நிறுவனத்தின் தயாரிப்புகளை நன்கு அறிய வருங்கால பாலிசிதாரருக்கு உதவுகிறது.

ஐஆர்டிஏஐ-இன் (பாலிசிதாரர்களின் நலன்களைப் பாதுகாத்தல்) ஒழுங்குவிதிகள், 2017இன் படி, பாலிசியை வாங்குவது தொடர்பான தகவலறிந்த முடிவெடுக்க வருங்கால பாலிசிதாரருக்குத் தேவையான அனைத்து உண்மைகளும் தகவல் ஏடில் இருக்க வேண்டும். ஒவ்வொரு காப்பீட்டுத் திட்டத்தை பற்றியும் இது பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்:

- சம்பந்தப்பட்ட காப்பீட்டுத் தயாரிப்புக்காக ஆணையத்தால் ஒதுக்கப்பட்ட தனித்துவமான அடையாள எண் (UIN)
- காப்பீட்டுத் திட்டத்தின் அளவு
- நன்மைகள்/உரிமைகளின் நோக்கம் - உத்தரவாதம் மற்றும் உத்தரவாதமில்லாதது
- விளக்கங்களுடன் காப்பீட்டுத் தொகைக்கான உத்தரவாதங்கள், விலக்குகள்/விதிவிலக்குகள்
- காப்பீட்டுத் திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்
- காப்பீடு மூலம் காப்பளிக்கப்படும் தற்செயல் அல்லது தற்செயல் நிகழ்வுகளின் விளக்கம்
- அத்தகைய தகவல் ஏடின் விதிமுறைகளின் கீழ் காப்பீட்டுக்கு தகுதியான வாழ்க்கை அல்லது சொத்துக்களின் வகுப்பு அல்லது வகுப்புகள்
- திட்டம் பங்கேற்புடன் உள்ளதா அல்லது பங்கேற்பு இல்லாததா

தயாரிப்பு மீது அனுமதிக்கப்படும் கூடுதல் காப்புகள் (ஆயுள் காப்பீட்டில் ரைடர்ஸ் என்றும் அழைக்கப்படுகிறது) மற்றும் அவற்றின் நன்மைகளும் குறிப்பிடப்பட வேண்டும்.

தகவல் ஏட்டில் உள்ள மற்ற முக்கியமான தகவல்கள்:

1. காப்புகள் மற்றும் பிரீமியத்தில் உள்ள ஏதேனும் வேறுபாடுகள். எ.கா. வெவ்வேறு வயதினருக்கான அல்லது வெவ்வேறு நுழைவு வயதினருக்கான காப்பீட்டில்
2. பாலிசியின் புதுப்பித்தல் விதிமுறைகள்
3. சில சூழ்நிலைகளில் பாலிசியை ரத்து செய்வதற்கான விதிமுறைகள்
4. வெவ்வேறு சூழ்நிலைகளில் பொருந்தக்கூடிய தள்ளுபடிகள் அல்லது ஏற்றுதல் பற்றிய விவரங்கள்
5. பிரீமியம் உட்பட பாலிசியின் விதிமுறைகளில் ஏதேனும் திருத்தம் அல்லது மாற்றத்திற்கான சாத்தியம்
6. அதே காப்பீட்டாளரிடம் சீக்கிரமாகவே சேர்ந்ததற்காக, தொடர்ந்து புதுப்பித்தலுக்காக, சாதகமான ஈடுக்கோரல் அனுபவம் போன்றவற்றிற்காக பாலிசிதாரர்களுக்கு வெகுமதி வழங்கும் ஏதேனும் ஊக்கத்தொகைகள்.
7. தகவல் ஏட்டில் ஐஆர்டிஏஜ ஒதுக்கிய தயாரிப்பு UIN அவசியம் இருக்க வேண்டும்
8. ஐஆர்டிஏஜ விதிமுறைகள், தகவல் ஏட்டில் பிரிவு 41 இன் நகல் வழங்கப்பட்டிருப்பதை கட்டாயமாக்குகிறது. இந்தியாவில் உள்ள ஆயுள் அல்லது சொத்துக்கள் தொடர்பான எந்தவொரு காப்பீடை தொடர்வதற்காக அல்லது புதுப்பிப்பதற்காக, பாலிசியில் கிடைக்கக்கூடிய கமிஷனில் முழுமையாக அல்லது பகுதியை தருவதாகவோ கூறி, எந்தவொரு நபரையும் நேரடியாக அல்லது மறைமுகமாக தூண்டுவதை இந்தப் பிரிவு தடை செய்கிறது.

குறிப்பாக, தகவல் ஏடு நியமனம் செய்வதற்கான வசதியைப் பற்றி முன்மொழிபவருக்கு தெரிவிக்கிறது

**சுய-பரீட்சை 1**

பின்வருவதில் எது பொதுவாக காப்பீட்டு தகவல் ஏட்டின் பகுதியாக இருக்காது?

I. காப்பீடு குறைதீர் அதிகாரியின் பெயர்
II. நன்மைகளின் நோக்கத்தின் தேதி
III. உரிமைகள்
IV. விதிவிலக்குகள்

## B. முன்மொழிவு படிவம்

காப்பீடு பாலிசி என்பது காப்பீடு நிறுவனம் மற்றும் பாலிசிதாரருக்கும் இடையே ஏற்படும் ஒரு சட்ட ஒப்பந்தம் ஆகும். எந்த ஒப்பந்தத்திற்கும் தேவைப்படுகிற மாதிரி, இதில் ஒரு முன்மொழிவும் மற்றும் அதன் ஏற்பும் உள்ளது.

முன்மொழிவை தயாரிக்க பயன்படுகிற ஆவணம் பொதுவாக 'முன்மொழிவு படிவம்' என அறியப்படுகிறது. இது எழுதப்பட்ட அல்லது மின்னணு அல்லது ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்த வடிவத்திலும் முன்மொழிபவரால் நிரப்பப்பட வேண்டிய படிவமாகும். காப்பீட்டாளர் அபாயத்தை ஒப்புக்கொள்வதா அல்லது மறுப்பதா மற்றும் அபாயத்தை ஏற்றால், அளிக்கப்படவேண்டிய காப்பீடின் விலை, விதிமுறைகள் மற்றும் வரையறைகளை நிர்ணயிக்க இது தேவைப்படுகிறது.

காப்பீடிற்கான உன்னத நன்னம்பிக்கை மற்றும் தகவல்களை வெளிப்படுத்தும் கடமை போன்ற கோட்பாடுகள் முன்மொழிவு படிவத்திலிருந்து தொடங்கும். காப்பீட்டை வழங்குவதற்கான அடிப்படையாக இந்த ஆவணம் அமைவதால் முன்மொழிபவர் அனைத்துத் தகவலையும் சரியாகவும் முழுமையாகவும் வழங்க வேண்டும் மற்றும் ஏதேனும் தவறான அல்லது மறைக்கப்பட்ட தகவல் ஈடுக்கோரலை நிராகரிக்க காரணமாகலாம்.

முன்மொழிவு நிலை முடிந்து காப்பீட்டு ஒப்பந்தத்தை இறுதி செய்த பிறகும் இவ்வாறு தகவலை வெளிப்படுத்த வேண்டிய கடமை தொடர்கிறது. அதாவது, காப்பீட்டு காலத்தில் எந்த நேரத்திலும் நிகழும் எந்தவொரு அடிப்படை மாற்றமும் பொது காப்பீட்டு பாலிசிகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

காப்பீட்டு பாலிசியை கோரும் போது அல்லது காப்பீட்டு பாலிசியை வழங்கும்போது முன்மொழிவுப் படிவத்தில் இருந்து சேகரிக்கப்படும் தகவல்கள் இரகசியமானவை மற்றும் மூன்றாம் தரப்பினருடன் பகிரப்படக் கூடாது. எந்தவொரு காரணத்திற்காகவும் ஒரு முன்மொழிவு வைப்புத் தொகையானது ஒரு வாய்ப்பாளருக்குத் திருப்பித் தரப்படும் பட்சத்தில், முன்மொழிவுக்கான ஏற்பளிப்பு முடிவு தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் அது திருப்பி வழங்கப்பட வேண்டும்.

ஐஆர்டிஏஐ வழிகாட்டுதல்களின்படி, ஒரு திட்டத்தை ஏற்றுக்கொண்ட 30 நாட்களுக்குள், காப்பீடு செய்தவருக்கு காப்பீட்டாளர் சமர்ப்பித்த முன்மொழிவின் நகலை இலவசமாக வழங்குவது காப்பீட்டாளரின் கடமையாகும். முகவர் இந்த காலக்கெடுவை கவனித்து பின்பற்றி,

தேவைப்படும் போது, வாடிக்கையாளர் சேவை மூலம் வாய்ப்பாளர்/காப்பீட்டு பெறுபவரை தொடர்பு கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### a) முன்மொழிவு படிவம் - விவரங்கள்

ஆவணமாக்குதலின் முதல் கட்டம் முன்மொழிவு படிவங்களாகும், இதன் மூலம் காப்பீடு பெறுபவர் பினவருவதை தெரிய வைக்கிறார்:

- ✓ அவர் யார்,
- ✓ அவருக்கு எந்த காப்பீடு தேவை,
- ✓ அவர் காப்பீடு பெற விரும்புவதை பற்றிய விவரங்கள், மற்றும்
- ✓ அதற்கான கால அளவு
- ✓ அபாயத்தின் விவரங்கள் (எ.கா., ஆயுள் மற்றும் உடல்நலக் காப்பீடுகளுக்கு - உடல்நலம் அல்லது பாதிக்கப்பட்ட ஏதேனும் நோய்களின் விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும்)
- ✓ காப்பீடு செய்யப்படும் விஷயத்தின் மீது முன்மொழியப்பட்ட பண மதிப்பு மற்றும் முன்மொழியப்பட்ட காப்பீட்டுடன் தொடர்புடைய அனைத்து **அடிப்படை உண்மைகளும்** விவரங்களில் அடங்கும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பெயர், தந்தையின் பெயர், முகவரி மற்றும் பிற அடையாளம் காணும் உள்ளீடுகள் போன்ற முன்மொழிபவரின் அடையாளத்தின் விவரங்களை முன்மொழிவு படிவம் சேகரிக்கிறது. வாடிக்கையாளர்களின் உண்மையான அடையாளத்தைத் தீர்மானிக்க, முகவரிச் சான்று, பான் கார்டு, புகைப்படங்கள் போன்ற ஆவணங்கள் முன்மொழிவுடன் வாங்கப்படுகின்றன.

ஆயுள் மற்றும் உடல்நலக் காப்பீடுகளைப் பொறுத்தமட்டில், முன்மொழிபவர்களின் குடும்ப உறுப்பினர்களின் (பெற்றோர்கள் உட்பட) அவர்களின் ஆயுள் காலம், உடல்நிலை மற்றும் அவர்களில் எவருக்கும் ஏற்பட்ட நோய்களைக் குறிக்கும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. தயாரிப்பைப் பொறுத்து, காப்பீட்டுக்காக முன்மொழியப்பட்ட நபரின் மருத்துவ விவரங்கள், தனிப்பட்ட குணாதிசயங்கள் மற்றும் அவரது தனிப்பட்ட நோய் வரலாறு ஆகியவையும் கேட்கப்படலாம்.

காப்பீட்டின் விஷயத்தின் மீது முன்மொழியப்பட்ட பண மதிப்பின் விவரங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட காப்பீட்டுடன் தொடர்புடைய அடிப்படை உண்மைகளும் பல காப்பீட்டு வகைகளுக்காக சேகரிக்கப்படும்.

காப்பீட்டு ஆலோசகரின் பரிந்துரைகளும் அத்தகைய பரிந்துரைக்கான காரணங்களுடன் சேர்த்து முன்மொழிவு படிவத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். பரிந்துரைக்கப்பட்ட பாலிசியின் விவரங்கள் முன்மொழிபவருக்கு முழுமையாக விளக்கப்பட்டு, அவரும் அதை ஒப்புக்கொண்டதாக ஒரு பிரகடனம் இருக்கும்.

ஒரு முன்மொழிவு படிவம் காப்பீட்டாளர், முகவர், தயாரிப்பின் விவரங்கள், காப்பீட்டுத் தொகை, பிரீமியங்களை செலுத்தும் முறை போன்ற விவரங்களுடன் தொடங்கும் பின்வரும் பிரிவுகள் இருக்கலாம். படிவத்தை பூர்த்தி செய்து முன்மொழிவை சமர்ப்பித்ததை நிரூபிக்கிற வகையில் முன்மொழிபவரின் கையொப்பமும் அதில் இருக்கும்.

முன்மொழிபவரின் பெயர், பிறந்த தேதி, தொடர்பு விவரங்கள், திருமண நிலை, குடியுரிமை, பெற்றோர் மற்றும் துணைவரின் பெயர்கள், கல்வித் தகுதிகள், பழக்கவழக்கங்கள் மற்றும் அடையாளச் சான்று, குடும்ப விவரங்கள், வேலை விவரங்கள், வங்கி விவரங்கள், நியமனதாரர்/ நியமனம் செய்பவரின் பெயர், தற்போதுள்ள காப்பீட்டின் விவரங்கள் மற்றும் பாலிசியைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணங்கள் ஆகியவை கேட்கப்படும் பிற விவரங்கள் ஆகும்.

தயாரிப்பைப் பொறுத்து, காப்பீட்டுக்காக முன்மொழியப்பட்ட நபரின் மருத்துவ விவரங்கள், தனிப்பட்ட சிறப்பியல்புகள் மற்றும் அவரது தனிப்பட்ட நோய் வரலாறு ஆகியவை கேட்கப்படலாம்.

ஆயுள் காப்பீடிற்காக முன்மொழியப்படும் நபரின் பணிக்காலம், திட்டமிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் உட்பட அவரது தனிப்பட்ட நிதித் திட்டமிடல் தொடர்பான அம்சங்கள், அத்துடன் சேமிப்பு மற்றும் முதலீடு, உடல்நலம், ஓய்வு மற்றும் காப்பீட்டுத் தேவைகள் ஆகியவற்றைப் பற்றியும் விசாரிக்கப்படலாம்.

முகவர்களின் பரிந்துரைகளும் அத்தகைய பரிந்துரைக்கான காரணங்களுடன் சேர்த்து முன்மொழிவு படிவத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். மேலே குறிப்பிட்டுள்ள ஐஆர்டிஏஐ ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, பரிந்துரைக்கப்பட்ட பாலிசியின் விவரங்கள் முன்மொழிபவருக்கு முழுமையாக விளக்கப்பட்டு மற்றும் அவர் அதை ஒப்புக்கொண்டதாகவும் முகவர் ஒரு பிரகடனத்தை சேர்ப்பார்.

முன்மொழிவு படிவங்கள் வழக்கமாக, காப்பீட்டு நிறுவனத்தின் பெயர், சின்னம், முகவரி மற்றும் பிரிவு/ காப்பீடின் வகை/பயன்படுத்தப்படும் பாலிசி ஆகியவற்றுடன் காப்பீட்டாளரால் அச்சடிக்கப்படும். இதற்கு தரமான வடிவம்

அல்லது நடைமுறை இல்லாவிட்டாலும், காப்பீட்டு நிறுவனங்கள், முன்மொழிவு படிவத்தில் இதை பற்றி ஒரு அச்சடித்த குறிப்பை கண்டிப்பாக சேர்க்கவேண்டும்.

b) **முன்மொழிவு படிவத்தில் பிரகடனம்**:

காப்பீட்டு நிறுவனங்கள், வழக்கமாக முன்மொழிபவர் கையொப்பம் இடவேண்டிய பிரகடனத்தை முன்மொழிவு படிவத்தின் இறுதியில் சேர்ப்பார்கள். இது காப்பீடை பெறுபவர், படிவத்தை முயற்சி செய்து துல்லியமாக பூர்த்தி செய்ததையும், அதில் அளிக்கப்பட்ட உண்மைகளை புரிந்துகொண்டதையும் உறுதிப்படுத்தும். இதனால் ஈடுக்கோரலின் போது உண்மைகளைத் தவறாகச் சித்தரிப்பதால் எழக்கூடிய கருத்து வேறுபாடுகளுக்கு வாய்ப்பில்லை. இத்தகைய பிரகடனம் உன்னத நன்னம்பிக்கையின் பொதுவான கோட்பாடை உன்னத நன்னம்பிக்கையின் ஒப்பந்தக் கடமையாக மாற்றுகிறது.

**எடுத்துக்காட்டு**

இதுபோன்ற பிரகடனங்களின் எடுத்துக்காட்டுகள்:

'நான்/நாங்கள் மேலேயுள்ள கூற்றுகள் உண்மையானவை மற்றும் எல்லா ரீதியிலும் முழுமையானவை என்றும், காப்பீடிற்கான விண்ணப்பத்தில் காப்பீடிற்கு சம்பந்தப்பட்ட எந்த முக்கியமான விஷயத்தையும் உங்களிடம் நான் வெளிப்படுத்தாமல் இல்லை என்பதற்கு இந்த பிரகடனத்தை மற்றும் உத்திரவாதத்தை அளிக்கிறேன்.'

'நான்/நாங்கள் இந்த முன்மொழிவு மற்றும் பிரகடனங்கள் எனக்கும்/எங்களுக்கும் மற்றும் (காப்பீட்டாளரின் பெயருக்கும்) மத்தியிலான ஒப்பந்தத்தின் அடிப்படை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.'

சுய-பரீட்சை 2

முன்மொழிவு படிவத்தைப் பொறுத்தமட்டில் பின்வருவனவற்றில் எது பொருந்தாது?

I. உன்னத நன்னம்பிக்கை

II. II. கோரப்படும் என்று எதிர்பார்க்கப்படும் தொகை

III. அடிப்படை உண்மைகளை வெளிப்படுத்த வேண்டிய கடமை

IV. கொடுக்கப்பட்ட விவரங்களின் ரகசியத்தன்மை

**இது போன்ற குறிப்புகளின் சில எடுத்துக்காட்டுகள்**:

'அபாயத்தை மதிப்பிடுவதற்காக உண்மைகளை சரியாக வெளிப்படுத்தாமல் இருத்தல், தவறாக வழிநடத்தும் தகவல்களை அளித்தல், மோசடி அல்லது காப்பீடு பெறுபவர் ஒத்துழைக்காமல் இருத்தல், ஆகியவை அளிக்கப்பட்ட பாலிசியின் காப்பை செல்லாததாக ஆக்கிவிடும்',

'முன்மொழிவு நிறுவனத்தால் ஏற்கப்பட்டு, முழு பிரீமியம் தொகையும் அளிக்கப்படுவது வரை நிறுவனத்திற்கு எந்த அபாயத்திற்கு காப்பளிக்க தேவையில்லை'.

## C. உங்கள் வாடிக்கையாளரை அறியவும் (Know your Customer -KYC) விதிகள்

### பணச்சலவை எதிர்ப்பு (AML) மற்றும் KYC விதிகள்

பணமோசடி என்பது குற்றச் செயல்களின் உண்மையான தோற்றம் மற்றும் உரிமையை மறைக்க குற்றவாளிகள் நிதியை மாற்றும் செயல்முறையாகும். சட்டவிரோத நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட நிதியை சட்டப்பூர்வ பணமாக தோன்ற வைப்பதற்கு பணமோசடி செயல்முறைகள் குற்றவாளிகளால் பயன்படுத்தப்படுகின்றன. இந்த செயல்பாட்டில், அவர்கள் பணத்தின் குற்ற மூலத்தை மறைத்து அதை சட்டப்படி வந்த பணமாக தோன்ற வைக்க முயற்சி செய்கிறார்கள்.

குற்றவாளிகள் தங்கள் பண மோசடிகளை செய்ய வங்கிகள் மற்றும் காப்பீடு உள்ளிட்ட நிதிச் சேவைகளைப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். அவர்கள் தவறான அடையாளங்களைப் பயன்படுத்தி பரிவர்த்தனைகளைச் செய்கிறார்கள், உதாரணமாக, அந்த பணத்தால் சில வகையான காப்பீட்டை வாங்கி அந்தப் பணத்தை எப்படியாவது திரும்பப் பெற்றவுடன், அவர்களின் நோக்கம் நிறைவேறிவிடுவதால் மறைந்துவிடுகிறார்கள். இந்தியா உட்பட உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் இதுபோன்ற பணமோசடி முயற்சிகளைத் தடுக்க தொடர்ந்து முயற்சி செய்கின்றன.

**வரையறை**

பணச்சலவை என்பது சட்டவிரோதமான பணத்தை அதன் சட்டவிரோத தோற்றத்தை மறைத்து ஒரு பொருளாதாரத்தில் சட்டப்பூர்வமான தோற்றத்துடன் கொண்டுவரும் செயல்முறை ஆகும். பணச்சலவை நடவடிக்கைகளை பிடிக்க இந்திய அரசு மூலம் (Prevention of Money Laundering Act, PMLA), 2002 என்ற சட்டம் தொடங்கப்பட்டது.

பணச்சலவை தடுப்பு சட்டம் (PMLA), 2002 பணச்சலவை நடவடிக்கைகளை கட்டுப்படுத்த மற்றும் பணச்சலவை மூலம் பெறப்பட்ட சொத்தை பறிமுதல் செய்வதை சட்டமாக்குவதற்காக 2005 முதல் அமலுக்கு வந்தது.

அதற்கு பிறகு உடனே வந்த ஐஆர்டிஏஐ ஆல் வெளியிடப்பட்ட பணமோசடி தடுப்பு வழிகாட்டுதல்கள், காப்பீட்டுச் சேவைகளைக் கோரும் வாடிக்கையாளர்களின் உண்மையான அடையாளத்தை உறுதி செயவது, சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகளைப் புகாரளித்தல் மற்றும் பணமோசடி சம்பந்தப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படும் வழக்குகளை முறையாகப் பதிவுசெய்தல் ஆகியவற்றைக் கண்டறிவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை சுட்டிக்காட்டியுள்ளன. ஒப்பந்தத்தின் தொடக்கத்திலேயே எந்த வகையிலும் பணமோசடி செய்வதற்கான ஒரு கருவியாக காப்பீடு பயன்படாததை விழிப்புடன் கவனிப்பது மற்றும் உறுதி செய்வது அவசியம்,

பணமோசடி தடுப்புச் சட்டம், 2002 (PMLA) இந்திய அரசால் 1 ஜூலை 2005 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இந்த சட்டத்தின்படி, ஒவ்வொரு வங்கி நிறுவனமும், நிதி நிறுவனமும் (இதில் காப்பீட்டு நிறுவனங்களும் அடங்கும்) மற்றும் இடைத்தரகர்களும் PMLA இன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து பரிவர்த்தனைகளின் பதிவையும் பராமரிக்க வேண்டும். அதன்படி, ஐஆர்டிஏஐ பணமோசடி தடுப்பு /பயங்கரவாதத்திற்கு எதிரான நிதியுதவி (AML/ CFT) பற்றிய வழிகாட்டுதல்களை மார்ச் 31, 2006 அன்று வெளியிட்டது.

உங்கள் வாடிக்கையாளரை அறியவும் என்பது தங்கள் வாடிக்கையாளர்களின் அடையாளத்தை சரிபார்க்க ஒரு வணிகம் மூலம் பயன்படுத்தப்படும் செயல்முறை. அடையாள திருட்டு, நிதி மோசடி மற்றும் பணச்சலவையை தடுக்க வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் பெருகிய முறையில் தங்கள் வாடிக்கையாளர்களிடம் விரிவான தகவலை வழங்குமாறு கோரி வருகின்றனர். KYC வழிகாட்டு நெறிகளின் நோக்கம் பணச்சலவை நடவடிக்கைகளுக்காக குற்றவியல் உறுப்புகள் நிதி நிறுவனங்களை தவறாக பயன்படுத்துவதை தடுப்பது தான்.

எனவே, தங்கள் வாடிக்கையாளரின் உண்மையான அடையாளத்தை காப்பீட்டாளர்கள் தீர்மானிப்பது அவசியம். KYC நடைமுறையின் ஒரு பகுதியாக, முன்மொழிபவர்கள் பின்வருவதுடன் சேர்த்து முன்மொழிவு படிவத்தை சமர்ப்பிப்பதை முகவர்கள் உறுதி செய்யவேண்டும்:

i. அடையாள சான்றாக- ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட், வாக்காளர் அடையாள அட்டை, நிரந்தர கணக்கு எண் அட்டை, புகைப்படங்கள் முதலியன

ii. முகவரி சான்று -ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட், தொலைபேசி பில், மின்சார கட்டணம், வங்கி கணக்கு புத்தகம், முதலியன. தனிநபர்கள், பெருநிறுவனங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள், அறக்கட்டளைகள் மற்றும் அறநிலையங்களுக்காக வெவ்வேறு ஆவணங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

iii. குறிப்பாக உயர்-மதிப்பு பரிவர்த்தனைகளில் வருமான ஆதார ஆவணங்கள் மற்றும் மற்றும் நிதி நிலை

iv. காப்பீட்டு ஒப்பந்தத்தின் நோக்கம்

**a) வயதுச் சான்று - தனிநபர் வகைகளுக்கு**

ஆயுள், உடல்நலம், தனிப்பட்ட விபத்து போன்ற நபர் தொடர்பான காப்பீடுகளைக் கையாளும் போது, காப்பீட்டு நிறுவனங்கள், காப்பீட்டாளரின் அபாய விவரங்களைத் தீர்மானிக்க வயதை ஒரு முக்கிய காரணியாகப் பயன்படுத்துகின்றன. ஆயுள் காப்பீடு வணிகத்தில், வயது முக்கியத்துவம் பெறுவதால், ஆயுள் காப்பீட்டாளர்கள் வயது தொடர்பான ஆவணங்களுக்காக விரிவான விதிமுறைகளைப் பின்பற்றுவார்கள். [இருப்பினும், அரசு, இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் ஐஆர்டிஏஐ ஆகியவை KYC விதிமுறைகளைப் பின்பற்றுவதில் கடுமையாகி வருகின்றன.] வயதுச் சான்றிதழைச் சரிபார்த்த பிறகு, ஏற்பளிப்பு செயல்பாட்டின் முக்கியப் பகுதி வயது சேர்க்கை ஆகும்.

**i. தரமான வயதுச் சான்றுகள்**

- ✓ காப்பீட்டாளர்கள வயதை நிரூபிக்கிறதாக கருதும் இரண்டு வகையான வயதுச் சான்றுகள் உள்ளன. .செல்லுபடியாகும் வயதுச் சான்றுகளை தரமானதாக அல்லது தரமற்றதாகவும் இருக்கலாம்.
- ✓ தரமான **வயதுச் சான்றுகள்** பொதுவாக ஒரு பொது அதிகாரத்தால் வழங்கப்படும், அதாவது நகராட்சி அல்லது பிற அரசு அமைப்பு மூலம் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ், பள்ளி வெளியேறும் சான்றிதழ், பாஸ்போர்ட் போன்றவை.
- ✓ தரமற்ற சான்று, தரமான வயதுச் சான்று கிடைக்காதபோது (உடனடியாக ஏற்றுக்கொள்ளக் கூடாது)

தரமான வயதுச் சான்றுகளாக கருதப்படுகின்ற சில ஆவணங்கள்:

i. பள்ளி அல்லது கல்லூரி சான்றிதழ்

ii. நகராட்சி பதிவுகளில் இருந்து பெறப்படும் பிறப்பு சான்றிதழ்

iii. பாஸ்போர்ட்

iv. நிரந்தர கணக்கு எண் (PAN) அட்டை

v. சேவை பதிவேடு

vi. பாதுகாப்பு பணியாளர்கள் வழக்கில் அடையாள அட்டை

vii. தகுந்த அதிகாரம் மூலம் வழங்கப்பட்ட திருமண சான்றிதழ்

ii. **தரமற்ற வயதுச் சான்றுகள்**

மேலே குறிப்பிடப்பட்ட தரமான வயதுச் சான்றுகள் இல்லாத போது, ஆயுள் காப்பீட்டு நிறுவனம் ஒரு தரமற்ற வயதுச் சான்றை சமர்ப்பிக்க அனுமதிக்கலாம். தரமற்ற வயதுச் சான்றுகளாக கருதப்படுகின்ற சில ஆவணங்கள்:

i. ஜாதகம்

ii. ரேஷன் அட்டை

iii. சுய-பிரகடனம் மூலம் ஒரு வாக்குமூலம்

iv. கிராம பஞ்சாயத்திடம் இருந்து பெற்ற சான்றிதழ்

**சுய-பரீட்சை 3**

பின்வருவதில் எது சரியான வயதுச் சான்றாக ஏற்கப்படவில்லை?

I. முனிசிபல் பதிவுகளில் இருந்து எடுக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்

II. சட்டமன்ற உறுப்பினர் வழங்கிய பிறப்புச் சான்றிதழ்

III. பாஸ்போர்ட்

IV. பான் கார்டு

**சுய-பரீட்சைக்கான பதில்கள்**

**பதில் 1** -சரியான பதில் விருப்பம் I.

**பதில் 2** - சரியான பதில் விருப்பம் II.

**பதில் 3** - சரியான பதில் விருப்பம் II.

**சுருக்கம்**

- தகவல் ஏடு என்பது தயாரிப்பு பற்றிய விவரங்களை வழங்க காப்பீட்டு நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் முறையான சட்ட ஆவணமாகும்.

- முன்மொழிவு செய்ய பயன்படுத்தப்படும் விண்ணப்ப ஆவணம் பொதுவாக 'முன்மொழிவு படிவம்' என அறியப்படுகிறது.
- தரமான வயதுச் சான்றுகளாகக் கருதப்படும் சில ஆவணங்களில் பள்ளி அல்லது கல்லூரிச் சான்றிதழ், நகராட்சிப் பதிவுகளிலிருந்து எடுக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் போன்றவை அடங்கும்.
- காப்பீட்டாளர்கள் தங்கள் வாடிக்கையாளர்களின் உண்மையான அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். KYC நடைமுறையின் ஒரு பகுதியாக முகவரி ஆதாரம், பான் அட்டை மற்றும் புகைப்படங்கள் போன்ற KYC ஆவணங்கள் சேகரிக்கப்பட வேண்டும்.

**முக்கிய வார்த்தைகள்**

1. தகவல் ஏடு
2. முன்மொழிவு வடிவம்
3. நெறிமுறைசார்ந்த இடையூறு
4. உங்கள் வாடிக்கையாளரை அறியவும் (KYC)
5. வயதுச் சான்று
6. தரமான மற்றும் தரமற்ற வயதுச் சான்றுகள்
7. இலவச-தோற்ற காலம்

# அத்தியாயம் C-08

# வாடிக்கையாளர் சேவை

## அத்தியாய அறிமுகம்

இந்த அத்தியாயத்தில் வாடிக்கையாளர் சேவையின் முக்கியத்துவம் பற்றி நீங்கள் கற்பீர்கள். வாடிக்கையாளருக்கு சேவை வழங்குவதில் முகவர்களின் பங்கு குறித்து தெரிந்து கொள்வீர்கள். வாடிக்கையாளர்களுடன் எவ்வளவு தொடர்பு கொள்வது மற்றும் தகவல் தெரிவிப்பது என்பதை பற்றி நீங்கள் கற்பீர்கள்.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. வாடிக்கையாளர் சேவை - பொதுக் கருத்துக்கள்

B. சிறப்பான வாடிக்கையாளர் சேவை வழங்குவதில் காப்பீட்டு முகவரின் பங்கு

C. வாடிக்கையாளர் சேவையில் தகவல் தொடர்பு திறன்

D. சொல்லிலா தகவல்தொடர்பு

E. நன்னெறி நடத்தை

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, நீங்கள்:

வாடிக்கையாளர் சேவைகளின் முக்கியத்துவத்தை விளக்க முடியும்

1. சேவையின் தரத்தை விவரிக்க முடியும்
2. காப்பீட்டுத் துறையில் சேவையின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்ய முடியும்
3. சிறந்த சேவை வழங்குவதில் காப்பீட்டு முகவரின் பங்கு குறித்து விவாதிக்க முடியும்
4. தகவல்தொடர்புச் செயல்முறையை விளக்க முடியும்
5. சொல்லில்லா தகவல்தொடர்பின் முக்கியத்துவத்தை விவரிக்க முடியும்
6. நன்னெறி நடத்தையைப் பரிந்துரைக்க முடியும்

## A. வாடிக்கையாளர் சேவை - பொதுக் கருத்துக்கள்

### 1. வாடிக்கையாளர் சேவை ஏன் தேவைப்படுகின்றது?

எந்தவொரு தொழில்துறையிலும் வாடிக்கையாளர்கள் மிக முக்கியமான பகுதியாக உள்ளனர், மேலும் எந்த ஒரு நிறுவனமும் அவர்கள் மீது அக்கறையில்லாமல் நடந்துகொள்ள முடியாது. மற்ற துறைகளை விட காப்பீட்டுத் துறையில் வாடிக்கையாளர் சேவை மற்றும் உறவுகளின் பங்கு என்பது மிக முக்கியமானதாக உள்ளது.

ஒவ்வொரு நிறுவனமும் அதன் வாடிக்கையாளர்களை மகிழ்விக்க ஒரு இலக்கை கொண்டுள்ளது. கார் வாங்குவதில் இருந்து காப்பீடு வாங்குவது எப்படி வேறுபடுகிறது என்பதை ஆராய்வதன் மூலம் இதை விளக்கலாம்.

ஒரு காரைப் பார்க்கவும், தொடவும், சோதனை செய்வதற்காக ஓட்டவும் மற்றும் அனுபவிக்கவும் முடியும், அதேசமயம் காரின் காப்பீடு என்பது விபத்து காரணமாக காருக்கு இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால் பணம் செலுத்துவதற்கான வாக்குறுதி மட்டுமே. இந்த வாக்குறுதி தொட்டுணர முடியாதது - அதை பார்க்கவோ, தொடவோ அல்லது அனுபவிக்கவோ முடியாது.

காரின் வாடிக்கையாளருக்கு காரைப் புரிந்துகொள்வதும், மற்றும் அதன் அனுபவத்தைப் பெறுவதும் எளிதாக இருக்கும் அதே வேளையில், காப்பீட்டின் வாடிக்கையாளர், நஷ்டம் ஏற்பட்டு, காப்பீட்டு நிறுவனம் ஈடுக்கோரலை வழங்கும் போது மட்டுமே அவர் வாங்கும் காப்பீட்டின் பாதுகாப்பை மதிப்பீடு செய்து அனுபவிக்க முடியும். அனைத்து வாடிக்கையாளர்களும் இதை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுவதில்லை. காப்பீட்டில், அத்தகைய சூழ்நிலை ஏற்படும் போது, வழங்கப்படும் சேவை எதிர்பார்ப்புகளை மீறினால், வாடிக்கையாளர் மகிழ்ச்சியடைவார்.

### 2. சேவையின் தரம்

வாடிக்கையாளர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்கு காப்பீட்டு நிறுவனங்களும், அவர்களின் ஊழியர்களும், முகவர்களும் உயர் தரமுடைய சேவையை வழங்குவது அத்தியாவசியமானதாகும்.

**ஆனால் உயர்தரமிக்க சேவை என்பது என்ன? அதன் தனியியல்புகள் யாவை?**

சேவைத் தரத்திற்காக ஜெய்தாமி, பரசுராமன் மற்றும் பெர்ரியின் நன்கு அறியப்பட்ட SERVQUAL அணுகுமுறை சேவைத் தரத்தின் ஐந்து முக்கியமான குறிகாட்டிகளை சிறப்பித்துக் கூறுகின்றது:

i) **நம்பகத்தன்மை**: உறுதியளிக்கப்பட்ட சேவைகளை நம்பிக்கையுடனும் துல்லியமாகவும் மேற்கொள்ளும் திறன். பெரும்பாலான வாடிக்கையாளர்கள் நம்பகத்தன்மையை சேவைத் தரத்தின் ஐந்து பரிமாணங்களில் முக்கியமானதாகக் கருதுகின்றனர். இது நம்பிக்கையை உருவாக்குவதற்கான அடித்தளமாக உள்ளது.

ii) **உடனடியாகச் செயல்படுதல்** : இது வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்கும், வாடிக்கையாளரின் தேவைகளுக்கு உடனடி பிரதிச்செயல் வழங்குவதற்கும் சேவைப் பணியாளர் காண்பிக்கின்ற ஆர்வம் மற்றும் திறமையைக் குறிப்பிடுகின்றது. சேவை வழங்கும்போது வேகம், துல்லியம் மற்றும் மனப்பான்மை ஆகிய குறிகாட்டிகளால் இதை அளவிட முடியும்.

iii) **உறுதி**: ஒரு வாடிக்கையாளரின் தேவைகளைப் புரிந்துகொண்டு பூர்த்தி செய்வதில் ஒரு பணியாளர் அல்லது முகவரால் காட்டப்படும் அறிவு, திறமை மற்றும் மரியாதை ஆகியவற்றைக் குறிக்கிறது, இது நம்பிக்கையையும் உறுதியையும் வெளிப்படுத்துகிறது

iv) **பரிவு**: இது மனிதத்தன்மை என வரையறுக்கப்படுகின்றது. இது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கரிசனை மற்றும் தனிப்பட்ட கவனம் ஆகியவற்றில் பிரதிபலிக்கின்றது.

v) **தொட்டு உணரக்கூடியவை**: இருப்பிடம், தளவமைப்பு மற்றும் தூய்மை போன்ற பார்க்க முடிகின்ற இயற்பியல் சூழல் காரணிகளையும், சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ளும்போது வாடிக்கையாளர் உணரும் தொழில்முறை உணர்வையும் ஏற்படுத்துங்கள். முதல் பார்வை நீடித்துழைக்கும் எண்ணங்களை உருவாக்குகின்றது.

### 3. வாடிக்கையாளர் சேவையும் காப்பீடும்

காப்பீட்டுத் துறையில் உள்ள முன்னணி விற்பனையாளர்கள், வணிகத்தை வளர்க்க உதவிய தற்போதுள்ள ஏராளமான வாடிக்கையாளர்களின் ஊக்கமும் ஆதரவும் தான் அவர்கள் உயர்மட்டத்தை அடைந்து அதில் நீடித்து நிலைத்திருக்க காரணம் என்று கூறுகின்றனர். அவர்களுடைய வருமானத்தின் பெரும்பகுதி ஒப்பந்தங்களைப் புதுப்பித்தலிலிருந்து பெறப்படும் கமிஷன்களிலிருந்து வருகின்றது. மேலும் அவர்கள் தான் புதிய வாடிக்கையாளர்களைப் பெறுவதற்கான மதிப்புமிக்க ஆதாரமாகவும் விளங்குகின்றனர்.

காப்பீட்டு விற்பனையில் வெற்றிக்கான ஒரு சிறந்த மந்திரம், வாங்குபவர்களை வாடிக்கையாளர்களாக மாற்றுவது தான். ஒரு தரம் வாங்கினால் அவர்கள் வாங்குபவர்கள். மறுபுறம், வாடிக்கையாளர்கள் ஒரு முகவருடன் வாழ்நாள்

முழுவதும் தொடர்புடையவர்கள், அவரிடம் தொடர்ந்து வாங்குபவர்கள், மற்றும் அவர் பிற வாடிக்கையாளர்களை அணுகி விற்பனை செய்வதிலும் அவருக்கு உதவி ஆதரிக்கலாம்.

தன்னிடம் வாங்கியவர்களுக்கு ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் சேவை செய்வதின் மூலம் வாடிக்கையாளர்கள் உருவாக்கப்படுகிறார்கள். வாடிக்கையாளரை மகிழ்ச்சியாக வைத்திருப்பது முகவருக்கும் நிறுவனத்திற்கும் எவ்வாறு பயனளிக்கிறது என்பது புரிய, வாடிக்கையாளரின் வாழ்நாள் மதிப்பின் கருத்தை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும்.

**வாடிக்கையாளர் வாழ்நாள் மதிப்பு** என்பது நீண்ட கால அடிப்படையில் வாடிக்கையாளருடன் ஒரு வலுவான உறவை உருவாக்குவதிலிருந்து பெறப்படும் பொருளாதார பலன்களின் கூட்டலை குறிக்கிறது.

**வரைப்படம்** 1: **வாடிக்கையாளர் வாழ்நாள் மதிப்பு**




தன் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குவதுடன் நெருக்கமான உறவுகளையும் வளர்த்துக்கொள்ளும் ஒரு முகவர், நல்லெண்ணத்தையும் வர்த்தக மதிப்பையும் உருவாக்குகிறார், இது அவருடைய வணிகத்தை விரிவுபடுத்துவதற்கு உதவுகின்றது.

**சுய-பரீட்சை 1**

வாடிக்கையாளர் வாழ்நாள் மதிப்பு என்பது என்ன?

I. வாடிக்கையாளரின் வாழ்நாள் முழுவதும் சேவை செய்வதன் மூலம் ஏற்படும் செலவுகளின் கூட்டல்

II. உருவாக்கப்படும் வணிகத்தின் அடிப்படையில் வாடிக்கையாளருக்குக் கொடுக்கப்படும் தரம்

III. வாடிக்கையாளருடன் நீண்ட கால உறவை உருவாக்குவதன் மூலம் பெறப்படும் பொருளாதார பலன்களின் கூடுதல்


IV. வாடிக்கையாளருக்குப் பரிந்துரைக்கக்கூடிய அதிகபட்ச காப்பீடு

## 4. வாடிக்கையாளர் உறவுகளும் சேவையும்

திருப்திகரமான மற்றும் விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்குவதில் உள்ள முக்கியக் கூறுகளில் வாடிக்கையாளர் சேவையும் ஒன்றாகும். அதனுடன் அவர்களுடன் வலுவான உறவை உருவாக்குவதும் அவசியம். காப்பீட்டாளரைப் பற்றிய வாடிக்கையாளரின் கருத்துக்கள் காப்பீட்டாளர் வழங்கும் சேவை மற்றும் உறவுகளின் அனுபவத்தைப் பொறுத்தது..

ஆரோக்கியமான உறவினை உருவாக்கப்போவது எது? அதன் மையமாக உள்ளது நிச்சயமாக நம்பிக்கை தான். அதே சமயம், அந்த நம்பிக்கையை வலுப்படுத்தி மேம்படுத்தக்கூடிய இதர கூறுகளும் உள்ளன. அந்தக் கூறுகளில் சிலவற்றுக்கான விளக்கத்தை நாம் காண்போம்

**வரைப்படம்** 2: **நம்பிக்கையின் கூறு**




i. ஒவ்வொரு உறவும் **கவர்தலில்** தொடங்குகின்றது: கவர்தல் என்றால் விரும்பப்படுபவராக இருப்பது, மற்றும் வாடிக்கையாளருடன் இணக்கமான உறவு ஏற்படுத்தக்கூடிய திறன் பெற்றவராக இருக்க வேண்டும். இது முதல் தொடர்பில் பெறப்படும் முதல் பாதிப்பின் விளைவாக உள்ளது. கவர்தல் என்பது ஒவ்வொரு இதயத்தையும் திறக்கும் திறவுகோலாக உள்ளது. அது இன்றி ஒரு உறவு ஏற்படுவது என்பது சாத்தியமில்லை. வாடிக்கையாளர் விரும்பாத ஒரு விற்பனையாளரால் தன் விற்பனைத் துறையில் அதிகமாக முன்னேற முடியாது.

ii. உறவின் இரண்டாவது கூறு - தேவைப்படும்போது ஒருவரின் முன்னிலையில் இருப்பதை குறிக்கிறது:

iii. **தகவல்தொடர்பு**: ஒருவர் எப்பவுமே இருந்து, ஒருவரின் வாடிக்கையாளர்களின் அனைத்து எதிர்பார்ப்புகளையும் முழுமையாக நிறைவேற்ற முடியாவிட்டாலும், ஒருவர் **உறுதியளிக்கும்**, **பரிவுடன் மற்றும் பொறுப்பு உணர்வை வெளிப்படுத்தும் விதத்தில் தொடர்புகொள்வதன் மூலம் ஒரு வலுவான உறவைப் பராமரிக்க முடியும்.**

மேலுள்ள அனைத்து தகவல் தொடர்பின் பரிமாணங்களுக்கும் ஒழுக்கம் மற்றும் திறன்கள் தேவை. இறுதியில் ஒருவர் என்ன நினைக்கிறார் மற்றும் கவனிக்கிறார் என்பதை அவை பிரதிபலிக்கின்றன.

தற்போதுள்ள வாடிக்கையாளரைத் தக்கவைப்பதற்கான செலவு புதிய வாடிக்கையாளரைப் பெறுவதற்கான செலவை விட மிகவும் குறைவு என்பதால் வாடிக்கையாளர் உறவு மேலாண்மையில் நிறுவனங்கள் மிகவும் கவனம் செலுத்துகின்றன. பல்வேறு சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளர் உறவு ஏற்படுகின்றது, எ.கா. வாடிக்கையாளரின் காப்பீட்டுத் தேவைகளைப் புரிந்துகொள்ளும்போது, காப்பீடு குறித்து விளக்கும்போது, படிவங்களைச் சமர்ப்பிக்கும்போது போன்றவை.

## B. சிறப்பான வாடிக்கையாளர் சேவை வழங்குவதில் காப்பீட்டு முகவரின் பங்கு

இப்பொழுது, ஒரு முகவர் எவ்வாறு வாடிக்கையாளருக்கு சிறந்த சேவையை வழங்க முடியும் என்பதை கருதுவோம். ஒரு விற்பனையாளர் ஒரு வாடிக்கையாளரை தொடர்பு கொண்ட தருணத்திலிருந்து, ஈடுக்கோரலுக்கான தீர்வை பெறும் இறுதிப் புள்ளி வரை, வாடிக்கையாளர் ஒரு அனுபவப் பயணத்தை மேற்கொள்கிறார் என்பதை நாம் உணர வேண்டியது அவசியம். அதை நாம் 'வாடிக்கையாளர் பயணம்' என அழைக்கலாம். பயணத்தின் ஒவ்வொரு படியிலும் மறக்கமுடியாத அனுபவங்களை உருவாக்க, ஒப்பந்தத்தின் முழு காலப்பகுதியிலும் முகவர் வாடிக்கையாளருக்கு துணையாக இருந்து ஒவ்வொரு படியிலும் உதவ வேண்டும்.

இந்த பயணத்தில் உள்ள சில முக்கியக் கூறுகளையும், ஒவ்வொரு படியிலும் மேற்கொள்ளப்படும் முக்கியப் பணிகளையும் நாம் பார்ப்போம்.

### 1. விற்பனை

விற்பனை செய்தலை ஒரு கலை மற்றும் அறிவியல் என கூறலாம். இதில் அறிவியலில் உள்ள மாதிரியே படிப்படியாக வகுக்கப்பட்ட செயல்முறையை தொடர்ச்சியாக மற்றும் சரியான முறையில் பின்பற்றினால் வெற்றிக்கு

வழிவகுக்கும். தனக்கே உரித்தான தனித்த பாணியை ஒவ்வொரு விற்பனையாளரும் வெளிக் கொணர்வது காரணமாக இது ஒரு கலை மற்றும் முடிவுகள் ஒவ்வொரு நபரின் செயல்பாட்டிலும் உள்ளதை பொறுத்து இருக்கும்.

- **சாத்தியங்களை ஆய்வு செய்தல்:** . விற்பனை செயல்முறை சாத்தியங்களை ஆய்வு செய்தலில் தொடங்குகிறது, இதன் பொருள் வருங்கால வாடிக்கையாளருக்கான 'தேடல்'. தேடுதல் முக்கியமானது, ஏனெனில ***'தேடினாலே தவிர ஒருவருக்கு எதுவும் கிடைக்காது'***, இது செயல்பாட்டின் மிக முக்கியமான படியாகும். ஒரு முகவர் பொதுவாக அறியப்பட்ட மற்றும் எளிதில் அணுகக்கூடிய நபர்களால் உருவாக்கப்பட்ட அவரது இயற்கை சந்தையை வைத்து தொடங்குகிறார். ஒருவரின் உடனடி வட்டத்திற்கு வெளியே உள்ள நபர்களின் பல நெட்வொர்க்குகளைப் பெறுவதில் தான் சவால் உள்ளது - அவர்களை தெரிந்துகொள்வது மற்றும் அவர்களுக்கும் முகவரை தெரிய வருவது.

  ஒருவருக்குத் தெரிந்தவர்கள் மற்றும் அணுகும் நபர்கள் அனைவரும் காப்பீட்டுக்கு தகுந்த விண்ணப்பதாரர்களாக இல்லாமல் இருக்கலாம் அல்லது அவர்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டாமல் இருக்கலாம். காப்பீடு வாங்க வாய்ப்புள்ளவர்களை மட்டுமே குறிவைக்கும் வகையில், அவர்களைத் **தகுதிப்படுத்துவது** அவசியம். ஒரு முகவரால் வாய்ப்பாளருடன் வலுவான உறவுகளை உருவாக்க முடிந்தால் மட்டுமே சாத்தியங்களை ஆய்வு செய்யும் செயல்முறை வெற்றியடைகிறது. எந்தவொரு விற்பனையாளரின் முதல் பணியும் **நம்பகத்தன்மையை விற்று நம்பிக்கையை வளர்ப்பதாகும்**.

- ***நேர்காணலுக்கு அழைக்கவும்:*** தனிப்பட்ட உறவுகள் காப்பீட்டு வணிகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்தாலும், ஒருவர் சம்பாதிக்கும் நல்லெண்ணத்தை விற்பனையாக மாற்றுவது அவசியம். விற்பனையாளர் ஒரு விரிவான விற்பனை நேர்காணலுக்காக முறையான சந்திப்பை அமைக்கும் போது இது தொடங்குகிறது. ஒருவரின் தொழில்முறை நற்சான்றிதழ்களை நிறுவுவதற்கும், சாதாரண விவாதங்களிலிருந்து வணிகத்தைப் பிரிக்கவும் இந்தப் படி முக்கியமானது.

- ***தேவைகளைத் தீர்மானித்தல் மற்றும் தீர்வைப் பரிந்துரைத்தல்***: காப்பீடு தீர்வாக அமையக்கூடிய சரியான தேவைகளைப் பற்றி விற்பனை முகவர் தீர்மானித்து, அதை வருங்கால வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்தும் படிகளே விற்பனை நேர்காணலின் மையமாகும். ஒரு முன்னோடியான விற்பனையாளர் வாடிக்கையாளரை திறமையாக வழிநடத்தி,

மென்மையான கேள்விகளைக் கேட்பதன் மூலம், பாதுகாப்பில் உள்ள இடைவெளிகளை கண்டுபிடிக்கிறார் மற்றும் அந்த இடங்களில் காப்பீட்டுத் தேவைகள் உள்ளதை வாடிக்கையாளருக்கு புரியவைக்கிறார்.

வாய்ப்பாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சரியான வகையான காப்பீட்டுத் தீர்வுகளைப் பற்றிய சிறந்த ஆலோசனையை வழங்கும் பொறுப்பு முகவருக்கு உள்ளது. முதலாவதாக, காப்பீடு ஒரு தீர்வாக இருக்கும் சரியான தேவைகளைப் பற்றி வருங்கால வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்த வேண்டும். இதில் வாங்க வேண்டிய காப்பீட்டின் அளவு குறித்து முறையான ஆலோசனை வழங்குவதும் அடங்கும். எடுத்துக்காட்டாக, தனிநபர் ஒருவர் வாங்கும் ஆயுள் காப்பீட்டின் அளவு அவரது வருமானம் மற்றும் பிரீமியம் செலுத்தும் திறனுடன் இணைக்கப்பட வேண்டும்.

குறிப்பாக பொது காப்பீடு விஷயத்தில் இந்த அடிப்படை கருத்தை மனதில் வைத்துக் கொள்வது முக்கியம். மற்றபடி அபாயத்தை வேறு விதத்தில் நிர்வகிக்க முடியும் இடத்தில் காப்பீடை பரிந்துரைக்க வேண்டாம்.

காப்பீடு தேவையா இல்லையா என்பது சூழ்நிலையைப் பொறுத்தது. இழப்புடன் ஒப்பிடும்போது பிரீமியம் தொகைகள் அதிகமாக இருந்தால், அபாயத்தைத் தாங்கிக் கொள்வது தான் நல்ல ஆலோசனை. மறுபுறம், அபாயம் மூலம் வரக்கூடிய இழப்பு விளைவுகள் கடுமையானதாக இருந்தால், அதற்கு எதிராக காப்பீடு செய்வது புத்திசாலித்தனம்.

**எடுத்துக்காட்டு**

வெள்ளம் ஏற்படும் பகுதியில் வசிக்கும் வீட்டு உரிமையாளருக்கு, வெள்ளத்திற்கு எதிரான கூடுதல் காப்பை வாங்குவது உதவிகரமாக இருக்கும். மறுபுறம், வெள்ள அபாயம் மிகக் குறைவாக இருக்கும் இடத்தில் வீட்டு உரிமையாளர் ஒரு வீட்டை வைத்திருந்தால், அத்தகைய காப்பு தேவையில்லை.

பல வாடிக்கையாளர்கள் செலவழித்த ஒரு ரூபாய்க்கு அதிகபட்ச காப்பீடு பெறுவது பற்றி அதிகம் கவலைப்படாமல் இருக்கலாம், ஆனால் அவர்களுக்கு **அபாயத்தைக் கையாளும் செலவைக் குறைப்பதில்** ஆர்வமிருக்கும். தன்னிடமே தக்கவைக்க முடியாத அபாயங்களைக் கண்டறிந்து, அதற்காக காப்பீடு செய்வதில் எந்த வாடிக்கையாளரும் விரும்புவார்.

சிறந்த ஆலோசனையை வழங்கும் முகவர் வெற்றி பெறுகிறார். வாடிக்கையாளரை பொறுத்தவரை முகவர் தொடர்ந்து தனக்குள்ள பங்கை

பற்றி தன்னையே கேட்டுக்கொள்ள வேண்டும். அவர் வாடிக்கையாளரிடம் விற்கும் நோக்கத்துடன் மட்டும் செல்லாமல், தன் அபாயங்ககளை மிகவும் திறம்பட நிர்வகிக்க அவருக்கு உதவுகின்ற ஒரு பயிற்சியாளராகவும், கூட்டாளராகவும் வாடிக்கையாளரை தொடர்பு கொள்ள வேண்டுமா?

- ***ஆட்சேபணைகளை எதிர்கொள்வது மற்றும் விற்பனை உடன்பாட்டை முடித்தல்:*** வாங்குவதற்கு சரியான தயாரிப்புகளைப் பற்றி வாடிக்கையாளருக்கு சிறந்த ஆலோசனை மற்றும் பரிந்துரைகளை வழங்குவது மட்டும் போதுமானதாக இருக்காது. வாங்குவதற்கான முடிவை எடுக்க அவரிடம் வலியுறுத்த வேண்டும். பெரும்பாலும் வாடிக்கையாளருக்கு பல கேள்விகள் இருக்கலாம் மற்றும் அவர் வாங்க முடிவு செய்வதற்கு முன் அவருக்குள்ள ஆட்சேபணைகளை எதிர்கொள்ள வேண்டி வரலாம். இந்த ஆட்சேபனைகளைக் கையாளும் போது, அதற்கு பின்னணியில் அடையாளம் காணப்பட வேண்டிய மற்றும் தீர்க்கப்பட வேண்டிய அடிப்படை கவலைகளை புரிந்துகொள்வது மிகவும் முக்கியம்.

காப்பீட்டு முகவரின் பணி வெறுமனே விற்பனை நபர் என்பதை விட மேலானதாகும். அவர் **அபாய மதிப்பீட்டாளர், காப்பீட்டு ஏற்பாளர், அபாய மேலாண்மை ஆலோசகர், தனிப்பயனாக்கப்பட்ட தீர்வுகளின் வடிவமைப்பாளர் மற்றும் உறவுகளை உருவாக்குபவர்** (நம்பிக்கை மற்றும் நீண்ட கால உறவுகளை வளர்ப்பதில் வல்லுநராக இருந்து செழித்து வளர்பவர்) போன்ற அனைத்துத் திறன்களையும் ஒருங்கே கொண்டவராக இருக்க வேண்டும்.

## 2. முன்மொழிவு கட்டம்

காப்பீட்டுக்கான முன்மொழிவை நிரப்புவதில் முகவர் வாடிக்கையாளருக்கு உதவ வேண்டும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுக்கு காப்பீடு பெறுபவர் பொறுப்பேற்க வேண்டும். முன்மொழிவுப் படிவத்தின் முக்கிய அம்சங்கள் பின்னால் வருகின்ற ஒரு அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன.

முன்மொழிவுப் படிவத்தில் உள்ள ஒவ்வொரு கேள்விக்கும் விடையளிப்பதன் வாயிலாக நிரப்பப்பட வேண்டிய விவரங்கள் குறித்து முன்மொழிபவருக்கு முகவர் விளக்கித் தெளிவுபடுத்த வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும். ஈடுகோரல் நிகழ்வில், முறையான மற்றும் முழுமையான தகவல்களைக் கொடுக்கத் தவறுவது வாடிக்கையாளரின் ஈடுகோரலுக்கு ஆபத்தானதாக அமையக்கூடும்.

சில சமயங்களில், பாலிசியைப் பூர்த்தி செய்வதற்கு கூடுதல் தகவல்கள் தேவைப்படலாம். அத்தகைய நிகழ்வுகளில் நிறுவனமானது நேரடியாகவோ

அல்லது முகவர் / ஆலோசகர் வாயிலாகவோ வாடிக்கையாளருக்குத் தெரிவிக்கலாம். முகவர் தேவையான அனைத்து நடைமுறைகளையும் பூர்த்தி செய்வதற்கு வாடிக்கையாளருக்கு உதவி, அவை ஏன் தேவைப்படுகின்றன என்பதை அவருக்கு விளக்க வேண்டும்.

காகித வடிவ முன்மொழிவு படிவத்தைப் போன்றே ஐஆர்டிஏஐ (இ-இன்சூரன்ஸ் பாலிசிகளை வழங்குதல்) ஒழுங்குவிதிகள், 2016, இ-முன்மொழிவு படிவங்களை வழங்குகின்றன மற்றும் அதில் வாய்ப்பாளர் முன்மொழிவுக்கு ஒப்புதலை வழங்குவதை ஒரு முறை கடவுச்சொல் மூலம் சரிபார்க்கப்படும் (மொபைல் போன் OTP). ஏற்பாடும் உள்ளது.

### 3. ஏற்புக் கட்டம் (Acceptance stage)

#### a) உறைக் குறிப்புகள் / காப்பீட்டு சான்றிதழ்

காப்பீடு ஏற்பளிப்பு பூர்த்தியடைந்த பின்னர் பாலிசி வழங்கப்பட சிறிது காலம் எடுக்கும். பாலிசி தயாரிப்பில் இருக்கும்போது அல்லது காப்பீடிற்கான ஒப்பந்தப் பேச்சு நடக்கும்போது, தற்காலிக அடிப்படையில் பாதுகாப்பு அளிக்கப்படுவது அவசியம் அல்லது சரியான விலையை நிர்ணயிப்பதற்காக வளாகம் பரிசோதனை செய்யப்படும்போது பாலிசியினால் பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்தும் விதமாக ஒரு உறைக் குறிப்பு அளிக்கப்படும்

உறைக் குறிப்புகள் முக்கியமாக கடல் சார்ந்த மற்றும் வாகன வகை வணிகங்களில் பயன்படுத்தப்படுவதால், பொது காப்பீட்டு பிரிவின் கீழ் உறை குறிப்பு விரிவாக விவாதிக்கப்படுகிறது.

காப்பீடு செய்தவருக்குப் பொருந்தக்கூடிய இடத்தில் நிறுவனத்தால் உறைக் குறிப்பு வழங்கப்படுவதை உறுதிசெய்வது முகவரின் பொறுப்பாகும். இது சம்பந்தமாக உடனடியாக செயல்படுவது வாடிக்கையாளருக்கு அவரது நலன்கள் முகவர் மற்றும் நிறுவனத்தின் கைகளில் பாதுகாப்பாக இருப்பதை தெரிவிக்கிறது.

#### b) பாலிசி ஆவணம்

பாலிசி என்பது காப்பீடு ஒப்பந்தத்திற்கு சான்றாக அளிக்கப்படும் முறைப்படியான ஆவணமாகும். இந்த ஆவணத்தில் இந்திய முத்திரை சட்டம், 1899-இன் விதிகளின் படி முத்திரை போடப்பட வேண்டும். காப்பீடு பெறுபவருக்கு பாலிசி ஆவணத்தை வழங்குவதற்கு காப்பீட்டாளர் கடமைப்பட்டிருக்கிறார்.

4. **பிரீமியம் செலுத்துதல்**

பிரீமியம் என்பது, காப்பீடு ஒப்பந்தத்தின் கீழ், ஒரு பொருளை காப்பீடு செய்வதற்காக காப்பீட்டாளருக்கு காப்பீடு பெறுபவரால் செலுத்தப்படும் கருதுகை அல்லது தொகையாகும்.

ஒரு நல்ல முகவர், காப்பீடு செய்தவர் தனது பாலிசியை எடுப்பதற்கு அல்லது தொடர்வதற்கு அல்லது புதுப்பிப்பதற்கான பிரீமியத்தை செலுத்துவதை உறுதி செய்கிறார், மேலும் பிரீமியம் செலுத்துவதற்கான பல்வேறு விருப்பங்களை வாடிக்கையாளர்களுக்குத் தெரியப்படுத்துவார்.

5. **பிரீமியம் செலுத்தும் முறை**

காப்பீட்டு பாலிசி எடுக்க விரும்பும் நபரால் செலுத்தப்படவேண்டிய அல்லது பாலிசிதாரர் காப்பீட்டாளருக்கு செலுத்தவேண்டிய பிரீமியத்தை பின்வரும் ஏதேனும் ஒரு முறையில் செலுத்தலாம்:

a) ரொக்கமாக

b) அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது வங்கியின் செலாவணிக்கருவிகளான காசோலை, கேட்புக் காசோலைகள், பணக் கொடுப்பாணை, இந்தியாவின் ஏதாவது பட்டியல் வங்கியின் வங்கிக் காசோலை;

c) தபால் பண அஞ்சல்;

d) கடன் அல்லது பற்று அட்டைகள் (Credit or debit cards);

e) வங்கி உத்திரவாதம் அல்லது ரொக்க வைப்பு;

f) இணையம்;

g) ஈ-டிரான்ஸ்பர்

h) முன்மொழிபவரின் அல்லது பாலிசிதாரரின் அல்லது ஆயுள் காப்பீடு செய்தவரின் கட்டளைக்கு ஏற்ப வங்கி டிரான்ஸ்பர் மூலம் நேரடி க்ரெடிட்கள்;

i) அவ்வப்போது ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் பணம் செலுத்தும் முறை;

ஐஆர்டிஏ ஒழுங்குவிதிகளின்படி, முன்மொழிபவர் /பாலிசிதாரர் பிரீமியம் செலுத்துவதற்கு நெட் பேங்கிங் அல்லது க்ரெடிட்/டெபிட் அட்டையை தேர்ந்தெடுத்தால், முன்மொழிபவர்/பாலிசிதாரர் பெயரில் வழங்கப்பட்டுள்ள

நெட் பேங்கிங் அல்லது க்ரெடிட்/டெபிட் அட்டை மூலமாக மட்டும்தான் பிரீமியத்தை செலுத்தவேண்டும்.

## 6. பாலிசி ஆவணம் மற்றும் பிரீமியத்திற்கான ரசீது வழங்கப்பட்ட பிறகு சேவை

வாடிக்கையாளர் பிரீமியத்தை செலுத்தியவுடன், காப்பீட்டாளர் ரசீதை வழங்கியாக வேண்டும். பிரீமியம் முன்கூட்டியே செலுத்தப்பட்டாலும் கூட ரசீது வழங்கப்பட வேண்டும்.

காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பாலிசி ஆவணத்தை பெற்றதை பற்றி காப்பீடு செய்தவரை அணுகி முகவர் விசாரிக்கலாம். வாடிக்கையாளருடன் தொடர்பு கொள்ள முகவருக்கு இது ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது. முகவர் ஏதேனும் சந்தேகங்களைத் தீர்த்து, மற்றும் பாலிசியின் பல்வேறு விதிகள் மற்றும் பாலிசிதாரர்களின் உரிமைகள் மற்றும் சலுகைகளை விளக்கவும் முடியும். இது வாடிக்கையாளரிடம் அவருக்குள்ள பொறுப்புணர்வை நிரூபிக்கிறது மற்றும் தொடர்ச்சியான ஆதரவையும் சேவையையும் வழங்குவதாக உறுதியளிக்கும் வாய்ப்பையும் வழங்குகிறது. வாடிக்கையாளருக்கு இலவச-தோற்ற காலத்தின் ஏற்பாடு குறித்தும் அவர் தெரிவிக்க வேண்டும், அந்த காலகட்டத்தில் பாலிசியைத் திருப்பித் தரலாம் மற்றும் பிரீமியத்தைத் திரும்பப் பெறலாம்.

வாங்கப்படும் பாலிசி மின்னணு காப்பீடு பாலிசியாக இருந்தால், பதிவுசெய்யப்பட்ட இன்ஷ்யூரன்ஸ் ரிபாசிட்டரி மூலம் இ-இன்சூரன்ஸ் அக்கவுண்டை (e-I-A) திறக்க முகவர் வாடிக்கையாளருக்கு உதவலாம்.

அடுத்த கட்டமாக வாடிக்கையாளரிடம் அவருக்குத் தெரிந்த பிற நபர்களின் பெயர்கள் மற்றும் விவரங்களைக் கேட்பதற்கும் இது வழி வகுக்கிறது. வாடிக்கையாளர் தானாக தொடர்பு கொண்டு முகவரை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

## 7. பாலிசியை புதுப்பித்தல்

பெரும்பாலான பொதுக் காப்பீட்டு பாலிசிகள் வருடாந்திர அடிப்படையில் காப்பீடு செய்யப்பட வேண்டும். பொதுக் காப்பீட்டுக் கொள்கைகளுக்கு, ஒவ்வொரு புதுப்பித்தலின் போதும், வாடிக்கையாளர் அதே நிறுவனத்தில் காப்பீடு செய்வதைத் தொடரலாம் அல்லது வேறு நிறுவனத்திற்கு மாறும் தேர்வு உள்ளது. ஆயுள் காப்பீட்டில், வாடிக்கையாளர் பிரீமியம் செலுத்தும் காலத்தின் அடிப்படையில் வழக்கமான இடைவெளியில் பிரீமியத்தை

செலுத்தும்போது அந்த பாலிசி தொடர்ந்து அமலில் இருக்கும். ஒரு முறை பிரீமியம் செலுத்தும் முறைக்கு இது பொருந்தாது.

பிரீமியம் செலுத்தவேண்டிய தேதி காலாவதியாக பல நாட்கள் இருக்கும்போதே முன்கூட்டியே, பாலிசியை புதுப்பித்துக்கொள்ளுமாறு நினைவூட்ட பொது காப்பீட்டாளர்கள் வழக்கமாக புதுப்பித்தல் அறிவிப்பை அனுப்புவார்கள்.

வாடிக்கையாளரின் பாலிசியைப் புதுப்பித்தல் அல்லது தொடர்வது என்பது பெரும்பாலும் முகவர் மற்றும் நிறுவனத்தால் உருவாக்கிய நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தை சார்ந்து இருக்கலாம், மேலும் குறிப்பிட்ட தேதிக்கு முன்பே பாலிசியின் புதுப்பித்தல் அல்லது தொடர்ச்சி குறித்து வாடிக்கையாளருக்கு நினைவூட்ட முகவர் அவருடன் தொடர்பில் இருக்க வேண்டும்.

பெரும் அளவில் விற்பனை செய்யும் முகவர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதோடு, பல்வேறு சேவைகள் மற்றும் உறவுகளின் மூலம் அவர்களின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வெல்கிறார்கள் - அதாவது பண்டிகைகள் அல்லது குடும்ப நிகழ்வுகள் போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்கள் வாடிக்கையாளர்களை வாழ்த்துவது மற்றும் அவர்களின் மகிழ்ச்சிகளையும் துக்கங்களையும் அவர்களுடன் இருந்து பகிர்ந்து கொள்வது போன்றவை

8. **ஈடுக்கோரல் கட்டம்**

ஈடுக்கோரல் தீர்வு நேரத்தில் தான் மிக முக்கியமான சோதனை வருகிறது. ஈடுக்கோரலுக்கு வழிவகுக்கும் சம்பவம் உடனடியாக காப்பீட்டாளருக்குத் தெரிவிக்கப்படுவதையும், அனைத்துச் சம்பிரதாயங்களையும் வாடிக்கையாளர் கவனமுடன் பின்பற்றுவதையும் உறுதிப்படுத்துவது முகவரின் வேலையாகும். மேலும் இழப்பை மதிப்பீடு செய்வதற்காக செய்யத் தேவையான அனைத்து விசாரணைகளிலும் முகவர் உதவலாம். ஒரு நல்ல முகவர் வாடிக்கையாளர்கள் அல்லது அவரது பிரதிநிதிகளுக்கு ஈடுக்கோரல் பதிவு முறைகளை விரைவாகவும், சரியாகவும் முழுமையாகவும் நிறைவேற்ற உதவுகிறார்.

**சுய-பரீட்சை 2**

காப்பீட்டின் தேவை குறித்த விவாதம் தேவைப்படாத சூழ்நிலையை அடையாளம் காணவும்.

I. சொத்து காப்பீடு

II. வணிக கடன்பாடு காப்பீடு

III. மூன்றாம் தரப்பு கடன்பாடுக்கான மோட்டார் காப்பீடு

IV. தீ காப்பீடு

## C. வாடிக்கையாளர் சேவையில் தகவல் தொடர்பு திறன்

பணியிடத்தில் திறமையுடன் செயல்படுவதற்கு ஒரு முகவருக்கு மென் திறன்கள் (soft skills) இருக்கவேண்டும்.


மென் திறன்கள் என்பவை பணியிடத்திலும் வெளியிடத்திலும் இதர ஊழியர்களுடனும் வாடிக்கையாளர்களுடனும் திறம்பட தொடர்பு கொள்வதற்கான ஒருவருடைய திறனுடன் தொடர்புடையதாகும். அத்தகைய மென் திறன்களில் மிக முக்கியமான ஒன்று தகவல்தொடர்புத் திறனாகும்.

### 1. தகவல்தொடர்புச் செயல்முறை

**தகவல்தொடர்பு என்பது என்ன**?

அனைத்துத் தகவல்தொடர்புகளிலும்ம், செய்திகளை அனுப்பக்கூடிய அனுப்புநர், மற்றும் செய்தியைப் பெற்ற பெறுநரும் உள்ளனர். அனுப்புநர் அனுப்பும் செய்தியை பெறுநர் புரிந்துகொள்ளும்போது இந்தச் செயல்முறை நிறைவு பெறுகின்றது.

**வரைப்படம்** 3: **தகவல்தொடர்பின் வகைகள்**




அது நேருக்கு நேரானதாகவோ, தொலைபேசி வாயிலாகவோ, அல்லது மின்னஞ்சல் அல்லது இணையதளம் மூலமாகவோ இருக்கலாம். அது முறைசார்ந்ததாகவோ அல்லது முறை சாராததாகவோ இருக்கலாம். செய்தியின் உள்ளடக்கம் அல்லது வடிவம் அல்லது பயன்படுத்தப்படும் ஊடகம் எதுவாக இருந்தாலும், தெரிவிக்கப்படும் செய்தியை பெறுநர் புரிந்து கொண்டாரா இல்லையா என்பதைப் பொறுத்து தகவல்தொடர்பு செயல்திறனை மதிப்பிடலாம்.

காப்பீட்டு பாலிசியானது அடிப்படையில் ஒரு வாக்குறுதியாக இருப்பதால், காப்பீட்டாளர் அளித்த வாக்குறுதியை காப்பீடு செய்தவர் தெளிவாக

புரிந்துகொள்வது முக்கியம். ஒரு இடைத்தரகராக உள்ள முகவர், வாடிக்கையாளருக்கு காப்பீட்டு விதிமுறைகளின் முழுமையான, துல்லியமான மற்றும் தெளிவான விளக்கத்தை வழங்கி, அத்துடன் வாடிக்கையாளருக்கு ஏற்படக்கூடிய சந்தேகங்கள் அல்லது கேள்விகளுக்கு பதலளித்து தெளிவுபடுத்தவும் வேண்டும்.

### 2. திறன்மிக்க தகவல்தொடர்புக்கான தடைகள்

திறன்மிக்க தகவல்தொடர்பிலுள்ள தடைகள் மேற்கண்ட செயல்முறையின் ஒவ்வொரு படியிலும் எழக்கூடும், மற்றும் அதனால் செய்தியின் தெளிவு சிதைக்கப்படலாம். இந்தத் தடைகளை முன்நோக்கி, புரிந்துகொண்டு மற்றும் அகற்றுவது ஒரு சவாலான செயலாகும்

**சுய-பரீட்சை 3**

பின்வருவனவற்றில் எது ஆரோக்கியமான உறவை உருவாக்காது?

I. கவர்ச்சி

II. நம்பிக்கை

III. தகவல்தொடர்பு

IV. பிடிக்காதது

## D. சொல்லிலா தகவல்தொடர்பு

முகவர் புரிந்துகொள்ள வேண்டிய சில கருத்துக்களை நாம் இப்பொழுது காண்போம்.

**முக்கியமானவை**

### 1. சிறப்பான முதல் அபிப்பிராயத்தை உருவாக்குதல்

உங்களுடைய தோற்றம், உங்களுடைய உடலசைவு, உங்களுடைய செய்கைகள், மற்றும் நீங்கள் எவ்வாறு உடையணிகிறீர்கள் மற்றும் பேசுகிறீர்கள் என்பதன் அடிப்படையில் உங்களைப் பற்றி வாய்ப்பாளர் தீர்மானிக்கிறார். கவர்தல் ஒரு உறவின் முதல் தூண் ஆகும் மற்றும் முதலாவது அபிப்பிராயமே நீண்ட நாட்கள் நீடித்து நிற்கின்றது. சிறப்பான முதலாவது அபிப்ராயத்தை உருவாக்குவதற்கான சில பயனுள்ள குறிப்புகள்:

i. **எப்பொழுதும் சரியான நேரத்துக்குச் செல்லவும்**. சாத்தியமுள்ள அனைத்து வகையான தாமதங்களையும் தவிர்க்கும் விதத்தில், சில நிமிடங்கள் முன்னதாகவே வருவதற்குத் திட்டமிடவும்

ii. **பொருத்தமான தோற்றத்துடன் உங்களை முன்வைக்கவும்.**

- ✓ உங்களுடைய தோற்றம் சரியான முதலாவது அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டும்
- ✓ உங்களுடைய ஆடை சந்திப்புக்கு அல்லது நேரத்துக்குப் பொருத்தமாக இருக்கவேண்டும்
- ✓ உங்களுடைய ஒப்பனை தூய்மையானதாகவும் நேர்த்தியானதாக இருக்கவேண்டும் - நன்கு முடிவெட்டி சவரம் செய்து, தூய்மையான மற்றும் நேர்த்தியான உடைகளை அணிந்து, அலங்காரம் சுத்தமானதாகவும் நேர்த்தியாகவும் இருக்கவேண்டும்.

iii. **வரவேற்கத்தக்க, நம்பிக்கையான மற்றும் வெற்றி தரக்கூடிய புன்னகை** எப்பவுமே நீங்களும் உங்களுடைய வாடிக்கையாளரும் ஒருவரை ஒருவர் எளிதாகப் புரிந்துகொள்ள உதவுகின்றது

iv. **வெளிப்படையாக, நம்பிக்கையுடன் மற்றும் நேர்மறையான எண்ணங்களுடன் இருப்பது**

- ✓ உங்களுடைய உடலசைவு நம்பிக்கையையும் சுய-உறுதிப்பாட்டையும் தெரிவிக்க வேண்டும்
- ✓ நிமிர்ந்து நின்று, புன்னகை செய்து, நேருக்கு நேராகப் பார்த்து, உறுதியாக கைகுலுக்கி வாழ்த்துத் தெரிவிக்க வேண்டும்
- ✓ ஏதேனும் குறைகள் தெரிவிக்கப்பட்டாலும் கூட அல்லது எதிர்பார்த்தபடி சந்திப்பு நடைபெறாவிட்டாலும் கூட, நீங்கள் நேர்மறையாக இருக்கவேண்டும்.

v. **மற்றவர்களிடம் ஆர்வமாக இருத்தல்**- மிகவும் முக்கியமான விஷயம் மற்றவர்களிடம் உண்மையான ஆர்வம் கொண்டிருப்பது பற்றியதாகும்.

- ✓ வாடிக்கையாளரைப் பற்றி அறிய சிறிது நேரம் எடுத்துக்கவும்.
- ✓ அவர் சொல்வதை அக்கறையுடனும் கவனத்துடனும் கேளுங்கள்.
- ✓ உங்கள் வாடிக்கையாளரை பொறுத்தவரை நீங்கள் எப்பவுமே கிடைக்கிற மற்றும் அணுகுகிற நிலையில் இருக்க வேண்டும்.

- ✓ நேர்காணல் சமயத்தில் மொபைல் ஃபோனிலேயே கவனம் செலுத்தாமல் இருக்க வேண்டும்.

## 2. உடல்மொழி

உடல்மொழி என்பது இயக்கங்கள், சைகைகள், முக பாவனைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. நாம் பேசக்கூடிய, நடக்கக்கூடிய, உட்காரக்கூடிய மற்றும் நிற்கக்கூடிய முறை அனைத்துமே நம்மைப் பற்றியும், நமக்குள்ளே என்ன நிகழ்கின்றன என்பது பற்றியும் கூறுகின்றன.

உண்மையிலேயே கூறப்பட்டது என்ன என்பது குறித்து மக்கள் மிகச்சிறிய சதவீதமே கவனிக்கிறார்கள் என்பது அடிக்கடி கூறப்படுகின்றது. நாம் சொல்லாத விஷயங்கள் தான் அதிகமாகவும், உரக்கவும் நம்மைப் பற்றிக் கூறுகின்றன. தெளிவாக, ஒருவருடைய உடலசைவு குறித்து மிகவும் கவனமாக இருப்பது அவசியம்.

### a) தன்னம்பிக்கை

ஒருவர் சொல்வதை தீவிரமாக கவனிக்கின்றோம் என்ற அபிப்பிராயத்தைக் கொடுப்பதன் மூலம் நம்பிக்கை உடையவராகவும் சுய-உறுதியுடையவராகவும் இருப்பது எவ்வாறு என்பது பற்றிய சில குறிப்புகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

- ✓ தோரணை - தோள்பட்டையை நிமிர்த்தி உறுதியுடன் நிற்பது.
- ✓ உறுதியான கண் தொடர்பு - “புன்னகை” நிறைந்த முகத்துடன்
- ✓ பொருள் நிறைந்த மற்றும் திட்டமிட்ட சைகைகள்

### b) நம்பிக்கை

- ✓ பெரும்பாலும், ஒரு விற்பனையாளர் சொல்வதை யாரும் கேட்பதில்லை, ஏனெனில் - அவர் கூறுவது உண்மை என்பதை அவருடைய உடலசைவு உறுதிப்படுத்தாதால், கேட்போர் அவரை நம்புவதில்லை

## 3. கேட்டல் திறன்கள்

ஒருவர் விழிப்புடன் பேணி வளர்க்க வேண்டிய தகவல்தொடர்புத் திறன்களின் மூன்றாவது தொகுப்பு கேட்டல் திறன்கள் ஆகும். இது ‘உங்களை புரிந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கு முன்பு முதலில் நீங்கள் புரிந்துகொள்ளுங்கள்’- என்ற தனிப்பட்ட திறன்களின் நன்கு அறியப்பட்ட கோட்பாடை பின்பற்றுகின்றது.

ஆர்வத்துடன் கேட்டலில் தேவைப்படுவது:

- ✓ கேள்விகள் கேட்பதற்கு முன்பாக பேசுபவரை ஒவ்வொரு கருத்தையும் சொல்லி முடிப்பதற்கு அனுமதித்தல்
- ✓ எதிர் வாதங்கள் வாயிலாக பேசுபவருக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருத்தல்
- ✓ இங்கே செய்தியை பற்றி நாம் நினைப்பதை சொல்வது தேவைப்படலாம், மேலும் கூறப்பட்டதை தெளிவுபடுத்திக்க கேள்விகளை கேட்கவும்
- ✓ கருத்தை வழங்குவதற்கான மற்றொரு வழி, அவ்வப்போது அல்லது பேச்சு முடியும்போது, பேசுபவர் என்ன கூறியிருக்கிறார் என்பதை சுருக்கமாகக் கூறுதல் மற்றும் அதை அவருக்குத் திரும்பக் கூறுதல்.

**செயல்திறன்மிக்க கேட்டலின் சில கூறுகளை நாம் பார்ப்போம்**. **அவையாவன**:-

a) **கவனம் செலுத்துதல்**

- ✓ நீங்கள் கேட்டுக்கொண்டிருப்பதை காண்பிப்பது, எடுத்துக்காட்டாக ஒருவர்
- ✓ அவ்வப்போது தலையாட்டலாம் மற்றும் புன்னகைக்கலாம்
- ✓ எப்போதும் வெளிப்படையான ஒரு தோரணை மூலம்,, மற்றவர்களைத் தடையின்றிப் பேச தூண்டவும்
- ✓ புரிந்தது, அப்படியா, ஆம் மற்றும் ஹூம் என்பன போன்ற சிறிய வாய்மொழிக் கருத்துக்களைக் கூறலாம்.

b) **கவனம் செலுத்துதல்**

நம்முடைய கவனத்தைச் சிதறவிடாமல் பேசுபவர் கூறுவதைக் கேட்டு, செய்தியைப் புரிந்துகொள்ள வேண்டும். கவனம் செலுத்துவதன் சில அம்சங்கள் பின்வருமாறு:

பேசுபவரை நேருக்கு நேராகப் பார்த்தல்

- ✓ கவனத்தைச் சிதறடிக்கும் எண்ணங்களை ஒதுக்கிவைத்தல்
- ✓ மறுத்துரைக்க மனதளவில் தயாராக இல்லாமலிருத்தல்
- ✓ அனைத்து வெளிப்புற கவனச்சிதறல்களையும் தவிர்த்தல் [எடுத்துக்காட்டாக, உங்களுடைய மொபைலை அமைதி முறைமையில் (சைலண்ட் மோட்) வைத்திருக்கவும்.]

✓ பேசுபவரின் உடலசைவினைக் "கவனிக்கவும்"

c) **வடிப்பான்களை நீக்குகிறது**:

அனுமானங்கள், தீர்ப்புகள் மற்றும் நம்பிக்கைகள் போன்ற ஒருவரின் தனிப்பட்ட வடிப்பான்களால் நாம் கேட்கும் பல விஷயங்கள் சரியாக புரியாமல் போகலாம்.

முன்கூட்டியே தீர்மானிக்கக்கூடாது:: **கேட்பவர் முன்கூட்டியே தீர்மானித்திருந்தால்** என்ன நடக்கும் என்றால், பேசுபவர் சொல்வதை கேட்பவர் கேட்டாலும், முன்கூட்டியே தவறாக மனதில் நினைத்திருப்பதை தான் அவர் புரிந்து கொள்வார்.

d) **பரிவுடன் கேட்டல்:**

**பரிவு என்றாலே உங்களுக்கு உடன்பாடு இல்லையென்றாலும் கூட மற்றவர் என்ன சொல்கிறார் என்பதை அமைதியாகவும், முழுமையான கவனத்துடனும் கேட்டல் மற்றும் கவனித்தல் என்று பொருள். பேசுபவர் சொல்வதை ஏற்றுக்கொள்வதைக் காட்டுவது முக்கியமானது**, **அதற்கு உடன்படுவது அவசியமில்லை.**

e) **பொருத்தமாக பதிலளித்தல்:**

செயல்திறன்மிக்க கேட்டல் என்பது பேசுபவர் என்ன சொல்கிறார் என்பதை கேட்பதுடன நிற்பதில்லை. கேட்பவர் சொல்லிலோ அல்லது செயலிலோ, ஏதேனும் ஒரு வகையில் பதிலளிக்கும்போது மட்டுமே தகவல்தொடர்பு நிறைவுறும். பேசுபவரை பலவந்தமாக அடக்காமல்,, அவர் மரியாதையுடனும் பணிவுடனும் நடத்தப்பட்டார் என்பதை உறுதிப்படுத்துவதற்கு குறிப்பிட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டும். அவையாவன:

✓ உங்களுடைய பதில் சார்பற்று, வெளிப்படையாக மற்றும் நேர்மையாகவும் இருத்தல்

✓ ஒருவருடைய கருத்துக்களை மரியாதையுடன் வலியுறுத்துதல்

✓ நீங்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென விரும்புகிறீர்களோ, அதேபோன்று மற்றவர்களையும் நடத்துதல்

**எடுத்துக்காட்டு**

**விளக்கம் கேட்கவும்** - நான் கேட்டதிலிருந்து, நம்முடைய உடல்நலத் திட்டங்களின் பலன்கள் குறித்து உங்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன என நான் கருதியது சரிதானா, இன்னும் குறிப்பாக நீங்கள் கூற முடியுமா?

**பேசுபவரின் உண்மையான சொற்களை பொழிப்புரைத்தல்** - எனவே, 'நம்முடைய உடல்நலத் திட்டங்கள் போதுமான அளவுக்குக் கவர்ச்சிகரமான பலன்களை வழங்குவதில்லை' என நீங்கள் கூறுகிறீர்கள் - நீங்கள் கூறியதை நான் சரியாகப் புரிந்துகொண்டேனா?

**சுய-பரீட்சை 4**

பின்வருவனவற்றில் எது செயல்திறன்மிக்க கேட்டலின் ஒரு கூறு அல்ல?

I. சிறப்பாக கவனம் செலுத்துதல்

II. மிக அதிமாக முன்கூட்டியே தீர்மானிப்பவராக இருத்தல்

III. பரிவுடன் கேட்பது

IV. பொருத்தமாக பதிலளித்தல்

## E. நன்னெறி நடத்தை

சமீபத்திய ஆண்டுகளில், தவறான நடத்தை பற்றிய பல அறிக்கைகள் வந்துள்ளன, மேலும் நம்பிக்கைத் துரோகத்தை ஏற்படுத்தும் வணிகத்தில் நெறிமுறை நடத்தை குறித்து தீவிர கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன.

அதன் விளைவாக, காப்பீட்டில் பொறுப்புக்கூறல், கார்ப்பரேட் நிர்வாகம் ற்றும் வாடிக்கையாளர்களை நியாயமாக நடத்துதல் பற்றிய விவாதங்கள் அதிகரித்து வருகின்றன, இவை அனைத்தும் ஒன்றிணைந்து வணிகத்தில் "நன்னெறி" எனப்படுகின்றன.

ஒருவருடைய நலன்களைக் கவனித்துக்கொள்வதில் தவறில்லை. ஆனால் மற்றவர்களுடைய நலன்களை விலைகொடுத்து அவ்வாறு செய்வது தவறானதாகும். ஒருவருடைய சுய பலன்கள் மற்றவர்களுடைய பலன்களை விட முக்கியமானதாகக் கருதப்படும்போது நன்னெறியற்ற நடத்தை நிகழ்கின்றது.

**காப்பீடு என்பது நம்பிக்கையின் வணிகம் ஆகும்.** நம்பிக்கையை மீறுவது ஏமாற்றுவதற்கு சமம். வருங்கால வாடிக்கையாளர்கள் காப்பீட்டை வாங்குவதற்குத் தூண்டும் வகையில் தவறான தகவல் கொடுக்கும்போதோ அல்லது வருங்கால வாடிக்கையாளரின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய காப்பீட்டுத் திட்டம் பரிந்துரைக்கப்படவில்லை என்றாலோ விஷயம் தவறாகிவிடுகின்றது.

ஐஆர்டிஏஐ ஆல் பல்வேறு ஒழுங்குவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நன்னெறிக் கோட்பாடு, நன்னெறி நடத்தைக்கு வழிகாட்டி உள்ளது கோட்பாடுகளை அறிந்தால் மட்டும் போதாது. காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் வாய்ப்பாளர்கள்/ பாலிசிதாரரின் நலன்களை எப்போதும் முதன்மையாக வைத்திருப்பது தான் முக்கியமாக செய்யப்பட வேண்டும்.

**சிறப்பியல்புகள்**-நன்னெறி நடத்தையின் சில சிறப்பியல்புகளாவன:

a) ஒருவருடைய நேரடி அல்லது மறைமுக பலன்களுக்கு மேலாக வாடிக்கையாளரின் சிறப்பான நலன்களில் கவனம் செலுத்துதல்

b) வாடிக்கையாளர் குறித்து அனைத்து வணிக மற்றும் தனிப்பட்ட தகவல்களையும் மிக நம்பிக்கையாக வைத்திருத்தல் மற்றும் முக்கியமானதாக கருத்தில் கொள்ளுதல்

c) வாடிக்கையாளர்கள் தங்களுடைய தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவுவதற்காக, அனைத்து உண்மைகளையும் முழுமையாகவும் போதுமான அளவிலும் வெளிப்படுத்துதல்

பின்வரும் சூழ்நிலைகளில் நன்னெறிகளை விட்டுக்கொடுப்பதற்கான சாத்தியம் இருக்கலாம்:

a) இரண்டு திட்டங்களுக்கிடையே தேர்ந்தெடுக்கும் நிலை, இவற்றில் ஒன்று மற்றதை விட குறைவான பிரீமியம் அல்லது கமிஷன் தருகின்றது

b) தற்போதுள்ள ஒரு பாலிசியை இடைநிறுத்திவிட்டு புதிய ஒன்றை எடுப்பதற்காக பரிந்துரை செய்யத் தூண்டுதல்

c) காப்பீட்டு நிறுவனத்துக்குத் தெரிந்துவிட்டால் வாடிக்கையாளரின் அல்லது ஈடுக்கோரல் பயனாளிகளின் நலன்களில் எதிர்மறையான பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகள் குறித்து அறிந்திருத்தல்

**சுய-பரீட்சை 5**

பின்வருவனற்றில் எது நன்னெறி நடத்தையின் சிறப்பியல்பு அல்ல?

I. ஒரு தகவலறிந்த முடிவெடுக்க வாடிக்கையாளர்களுக்கு உதவுவதற்கு போதுமான செய்திகளைத் தெரிவித்தல்

II. வாடிக்கையாளரின் வணிகம் மற்றும் தனிப்பட்ட தகவல்களின் இரகசியத்தன்மையைப் பராமரித்தல்

III. வாடிக்கையாளரின் நலன்களை விட தன்னுடைய சுய-நலனை பெரிதாகக் கருதுதல்

IV. தன்னுடைய நலனை விட வாடிக்கையாளரின் நலனைப் பெரிதாகக் கருதுதல்

**சுருக்கம்**

a) மற்ற துறைகளை விட காப்பீட்டுத் துறையில் வாடிக்கையாளர் சேவை மற்றும் உறவுகளின் பங்கு என்பது மிக முக்கியமானதாக உள்ளது.

b) சேவைத் தரத்தின் முக்கியமான ஐந்து குறிகாட்டிகளில் நம்பகத்தன்மை, உறுதி, உடனடியாகச் செயல்படுதல், பரிவு மற்றும் தொட்டு உணரக்கூடியவை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

c) வாடிக்கையாளர் வாழ்நாள் மதிப்பு என்பது நீண்ட கால அடிப்படையில் வாடிக்கையாளருடன் ஒரு வலுவான உறவை உருவாக்குவதிலிருந்து பெறப்படும் பொருளாதார பலன்களின் கூட்டல் ஆகும்.

d) வாடிக்கையாளர் சேவையைப் பொறுத்தவரை ஒரு காப்பீட்டு முகவரின் பங்கு முற்றிலும் முக்கியமானதாகும்.

e) செயல்திறன்மிக்க கேட்டல் என்பது கவனம் செலுத்துதல், கருத்துக்களைத் தெரிவித்தல் மற்றும் அதற்கேற்பச் செயல்படுதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

f) நன்னெறி நடத்தை என்பது தன் நலன்களுக்கு முன் வாடிக்கையாளரின் நலன்களை முன்னிலைப்படுத்துவது.

**முக்கிய வார்த்தைகள்**

a) சேவைத்தரம்

b) பரிவு

c) உடல்மொழி

d) செயல்திறன்மிக்க கேட்டல்

e) நன்னெறி நடத்தை

**சுய-பரீட்சைக்கான பதில்கள்**

**பதில் 1** -சரியான பதில் விருப்பம் III.

**பதில் 2** - சரியான பதில் விருப்பம் III.

**பதில் 3** - சரியான பதில் விருப்பம் IV.

**பதில் 4** - சரியான பதில் விருப்பம் II.

**பதில் 5** - சரியான பதில் விருப்பம் III.

# அத்தியாயம் C-09

# குறை தீர்க்கும் நுட்பம்

## அத்தியாய அறிமுகம்

காப்பீட்டு துறை அடிப்படையில் ஒரு சேவை துறையாகவே உள்ளது, இதில் இன்றைய சூழலில் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகள் தொடர்ந்து அதிகரிக்கிறது. சேவை தரத்தில் அதிருப்தி உள்ளது. அங்கு தொடர்ச்சியான தயாரிப்பு கண்டுபிடிப்பு மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் வாடிக்கையாளர் சேவை தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் வந்த போதிலும், வாடிக்கையாளர் அதிருப்தி மற்றும் தாழ்வான பிரதிபலிப்பு மூலம் இந்த துறை மோசமாக பாதிக்கப்படுகிறது. இந்த நிலைமையை சரிசெய்ய அரசு மற்றும் ரெகுலேட்டர் பல முயற்சிகளை எடுத்துள்ளனர்.

பாலிசிதாரர்களின் நலன்களைப் பாதுகாத்தல் 2017 இன் கீழுள்ள ஐஆர்டிஏஐ ஒழுங்குவிதிகள் பாலிசிதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு காப்பீட்டாளரும் அவர்களது நிறுவன போர்ட் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாலிசியை வைத்திருக்க வேண்டும் என்பதை கட்டாயப்படுத்துகிறது.

i. வழங்கப்பட்ட பல்வேறு சேவைகளுக்கான "மீள்வரு (டர்ன்அரவுண்ட்) நேரங்கள்" (TAT) உட்பட சேவை அளவுருக்கள்.

ii. புகார்களை விரைவாகத் தீர்ப்பதற்கான நடைமுறை.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. குறை தீர்க்கும் நுட்பம்

B. ஒருங்கிணைந்த குறைதீர் மேலாண்மை அமைப்பு (*Integrated Grievance Management System -IGMS)*

C. நுகர்வோர் நீதிமன்றங்கள்

D. நுகர்வோர் வழக்கு குறைதீர்த்தல் முகமைகள்

E. காப்பீட்டு குறைதீர் அதிகாரி (*The Insurance Ombudsman)*

F. தகவலறியும் உரிமை

## A. குறை தீர்க்கும் நுட்பம்

வாடிக்கையாளர் ஒரு புகார் தெரிவிக்கும்போது உயர் முன்னுரிமை (high priority) நடவடிக்கை தேவைப்படுகின்றது. ஒரு புகார் தெரிவிக்கப்படும் நிகழ்வில், சேவையின் தோல்வியால் வாடிக்கையாளர் கோபப்படுகிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இது கதையின் ஒரு பகுதி மட்டுமே.

பெரும்பாலும், வாடிக்கையாளர்கள் சூழ்நிலையை தவறாக புரிந்து கொள்வதால் கோபம் அடைகின்றனர். ஒவ்வொரு சேவைத் தோல்வியும் இரண்டு வகையான உணர்வுகளை தூண்டலாம்:

1. காப்பீட்டாளர் நியாயமில்லாமல் நடந்தார் என்ற உணர்வு (ஏமாற்றப்பட்ட உணர்வு)
2. தன்மானம் காயப்பட்ட(hurt ego) உணர்வு - தான் சிறியவனாகத் தோன்ற மற்றும் உணரச் செய்யப்படுகிறோம் என்ற உணர்வு.

இந்த சூழ்நிலையில் வாடிக்கையாளர்கள் மதிப்பளிக்கப்பட வேண்டுமென விரும்புகிறார்கள் மற்றும் இதில் மனிதத்தன்மை என்பது முக்கியமானதாகும். ஒரு தொழில்முறை காப்பீட்டு ஆலோசகராக, முகவர் முதலில் அத்தகைய புகார் சூழ்நிலை ஏற்படுவதையே அனுமதிக்க மாட்டார். அவர் இந்த விஷயத்தை நிறுவனத்தின் பொருத்தமான அதிகாரியிடம் தீர்வுக்காக எடுத்துச் சொல்வார்.

ஒரு புகார் என்பது வாடிக்கையாளர் உறவில் உள்ள முக்கியமான "உண்மையின் நேரம்" ஆகும்; முகவர்/நிறுவனம் அதைச் சரியான விதத்தில் கையாண்டால், வாடிக்கையாளரின் விசுவாசத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியமுள்ளது.

**முகவருக்கு இருக்கின்ற அளவிற்கு வேறு யாருக்கும் வாடிக்கையாளர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறுப்பில்லை என நினைவில் கொள்ளுங்கள்.**

வாடிக்கையாளரின் உரிமைகளில் எந்த அளவுக்கு கவனம் எடுத்துக்கொள்கிறோம் என்பதை நிரூபிப்பதற்கான ஒரு வாய்ப்பினை புகார்கள் / குறைகள் நமக்கு வழங்குகின்றன. உண்மையில் அவை காப்பீட்டு முகவரின் நற்பெயரையும் வணிகத்தையும் உருவாக்கக்கூடிய வலுவான தூண்களாகும். **விற்பனை செய்வதிலும் சேவை செய்வதிலும் வாய்ச்சொல் விளம்பரம் (நல்லது/மோசமானது) முக்கியப் பங்காற்றுகின்றது.**

ஒவ்வொரு பாலிசி ஆவணத்தின் இறுதியிலும், குறைதீர் நடைமுறை குறித்து காப்பீட்டு நிறுவனங்கள் விரிவாக விவரித்துள்ளன, ஆவணத்தின் விதிகள்

குறித்து விளக்கப்படும் சமயத்தில் இவற்றை வாடிக்கையாளர்களின் கவனத்துக்கு நாம் கொண்டுவர வேண்டும். ஒழுங்குவிதிகளின்படி, பாலிசிதாரரின் எந்தக் குறையும் முதலில் காப்பீட்டாளரின் குறை தீர்த்தல் பிரிவுக்கு அனுப்பப்பட வேண்டும். இது திருப்திகரமாக தீர்க்கப்படாவிட்டால், புகார்தாரர் ஒருங்கிணைந்த குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு மூலம் ரெகுலேட்டரை அணுகலாம்.

**B. ஒருங்கிணைந்த குறைதீர் மேலாண்மை அமைப்பு (Integrated Grievance Management System -IGMS)**

ஒவ்வொரு காப்பீட்டாளருக்கும் அவர்களுக்கு என்று சொந்த குறை தீர்க்கும் செயல்முறை உள்ளது. காப்பீட்டு நிறுவனங்களின் அனைத்து இயக்க/ கட்டுப்படுத்தும்/கார்ப்பரேட் அலுவலகங்களிலும் குறை தீர்க்கும் அதிகார்கள் இருப்பார்கள். ஏதேனும் குறைகளுக்கு அவர்களை நேரடியாகவே பாலிசிதாரர் அணுகலாம்.

ஒருங்கிணைந்த குறைதீர் மேலாண்மை அமைப்பு (IGMS) ஐஆர்டிஏ-வால் தொடங்கப்பட்டுள்ளது, இது ஆன்லைனில் நுகர்வோர் புகார்களை பதிவு செய்யும் அமைப்பாக செயல்படுகிறது. ஐஆர்டிஏஜயின் ஐஜிஎம்எஸ் (IGMS) உடன் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பில் காப்பீட்டாளர்கள் தாங்கள் பெறும் அனைத்து குறைகளையும் பதிவு செய்ய வேண்டும். ஐஜிஎம்எஸ் தொழில்துறையில் உள்ள குறைகளைக் கண்காணிப்பதில் ஐஆர்டிஏஜ-க்கு உதவுகிறது மற்றும் .அது காப்பீட்டுக் குறைதீர் தகவலின் மையக் களஞ்சியமாகவும் செயல்படுகின்றது.

பாலிசிதாரர்கள் ஏதேனும் குறைகளுக்கு முதலில் சம்பந்தப்பட்ட காப்பீட்டாளரை அணுகலாம். காப்பீட்டாளரிடம் இருந்து அவர் பதிலை பெறாவிட்டால் அல்லது பெறப்பட்ட பதில்/தீர்மானம் அவருக்கு திருப்திகரமாக இல்லை என்றால், அவர் ஐஜிஎம்எஸ் இன் கீழ் ரெகுலேட்டரை அணுகலாம். புகார் பதிவு செயல்முறை இரண்டு படிகளை உள்ளடக்கியது - (i) ஒருவரின் பாலிசி விவரங்களை உள்ளிடுவதன் மூலம் தன்னைப் பதிவு செய்தல் மற்றும் (ii) ஒருவரின் புகார்களைப் பதிவுசெய்தல் மற்றும் புகார்களின் நிலையைப் பார்ப்பது. புகார்கள் பிறகு சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறது மற்றும் குறைகளை தீர்ப்பதற்கு ஐஆர்டிஏஜ உதவுகிறது.

புகார்கள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்காக எடுத்துக்கொள்ளப்படும் நேரம் ஆகியவை குறித்து ஐஜிஎம்எஸ் கண்காணிக்கின்றது. புகார்களை பின்வரும் இணையதள இணைப்புக்குச் சென்று பதிவு செய்யலாம்:URL: http://www.policyholder.gov.in/Integrated_ Grievance_Management.aspx

## c. நுகர்வோர் பாதுகாப்பு

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 2019: இந்த அசல் சட்டம் **1986** "*நுகர்வோரின் உரிமைகளுக்குச் சிறந்த பாதுகாப்பு வழங்குவதற்காகவும், நுகர்வோர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், நுகர்வோர் குழுக்கள் மற்றும் இதர ஆணையங்களை ஏற்படுத்துவதற்கான விதிகளை வகுப்பதற்காகவும்*" நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டம் நுகர்வோர் பாதுகாப்பு (திருத்தம்) சட்டம், 2002 மற்றும் பின்னர் 2019லும் சட்டம் திருத்தப்பட்டது. இந்த சட்டத்தில் வழங்கப்பட்ட சில வரையறைகள் பின்வருமாறு:

**"சேவை"** என்பது சாத்தியமுள்ள பயனர்களுக்கு கிடைக்கக்கூடிய எந்த ஒரு சேவையையும் குறிக்கிறது, மேலும் இது வங்கி, நிதி நிறுவனம், **காப்பீடு**, போக்குவரத்து, செயலாக்கம், மின்சாரம் அல்லது இதர ஆற்றல் வழங்கல், உணவுவிடுதி அல்லது தங்குமிடம் அல்லது இரண்டும் உள்ள இடம், வீட்டு கட்டுமானம், பொழுதுபோக்கு, கேளிக்கை அல்லது செய்திகள் அல்லது இதர தகவல்களை தருவித்துக் கொடுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. **காப்பீடு ஒரு சேவையாக சேர்க்கப்பட்டுள்ளது**. இருப்பினும், "சேவை" என்பது இலவசமாக அல்லது தனிப்பட்ட சேவை ஒப்பந்தத்தின் கீழ் வழங்கக்கூடிய எந்த ஒரு சேவையையும் உள்ளடக்காது.

"**நுகர்வோர்**" என்பவர்:

- ✓ கருதுகை நிமித்தமாக பொருளை வாங்கக்கூடியவர். இதில் அத்தகைய பொருட்களை பயன்படுத்தக்கூடிய எந்த பயனரையும் சேர்க்கலாம். (மறுவிற்பனைக்காகவோ அல்லது வேறு ஏதேனும் வணிக நோக்கத்துக்காகவோ அத்தகைய பொருட்களைப் பெறக்கூடிய ஒரு நபர் இதில் சேர்க்கப்படவில்லை), அல்லது
- ✓ ஏதேனும் ஒரு கருதுகைக்காக அத்தகைய சேவைகளை வாடகைக்கு அமர்த்துபவர் அல்லது பெறக்கூடியவர், மேலும் இது அத்தகைய சேவைகளினால் பலன் பெறுபவர்களையும் உள்ளடக்கியுள்ளது. (எந்தவொரு வணிக நோக்கத்திற்காகவும் அத்தகைய சேவையைப் பெறும் எந்தவொரு நபரையும் இது உள்ளடக்காது.)

'**குறைபாடு**' என்பது ஏதேனும் ஒரு சட்டம் மூலம் அல்லது சட்டத்தின் கீழ் பராமரிக்க வேண்டிய, அல்லது ஒரு ஒப்பந்தத்தைப் பின்பற்றும் வகையில் அல்லது வேறு ஏதேனும் சேவை தொடர்பாக ஒரு நபர் பராமரிக்க தேவைப்படும் செயல்திறனின் தரத்திலும், இயல்பிலும் மற்றும் முறையிலும்

ஏற்படும் ஏதேனும் தவறு, நிறைவின்மை, பற்றாக்குறை ஆகியவற்றைக் குறிக்கின்றது.

'**புகார்**' என்பது ஒரு புகார்தாரர் மூலம் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்படும் பின்வரும் குற்றச்சாட்டுகளைக் குறிப்பிடுகின்றது:

- ✓ நேர்மையற்ற வர்த்தக நடைமுறை அல்லது தடை செய்யக்கூடிய வர்த்தக நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது
- ✓ அவர் வாங்கிய பொருட்களில் இருக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறைபாடுகளால் அவர் பாதிக்கப்பட்டுள்ளார்
- ✓ அவர் வாடகைக்கு அமர்த்திய அல்லது பெற்ற சேவைகளில் இருந்த குறைபாட்டினால் ஏதேனும் ஒரு வகையில் அவர் பாதிக்கப்பட்டுள்ளார்.
- ✓ சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டதை விட அல்லது பாக்கெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதை விட அதிக விலை வசூலிக்கப்பட்டது.
- ✓ பயன்படுத்தும்போது உயிர் மற்றும் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருட்களின் உள்ளடக்கங்கள், அவற்றைப் பயன்படுத்தும் முறை மற்றும் விளைவுகள் ஆகியவை தொடர்பான தகவல்களை வர்த்தகர் வெளிப்படையாக காண்பிக்க வேண்டும் என்ற சட்ட விதிகளை மீறி அவை பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.

'**நுகர்வோர் வழக்கு**' என்பது யாருக்கு எதிராக புகார் செய்யப்பட்டுள்ளதோ, அவர் புகாரில் உள்ள குற்றச்சாட்டுகளை மறுக்கக்கூடிய அல்லது எதிர்த்து வாதிடக்கூடிய ஒரு நிகழ்வு ஆகும்.

## D. நுகர்வோர் வழக்கு குறைதீர்த்தல் முகமைகள்

நுகர்வோர் வழக்கு குறைதீர்த்தல் முகமைகள் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு மாநிலத்திலும், மற்றும் தேசிய அளவிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### i. மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்:

- ✓ மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு (மாவட்ட ஆணையம்), பொருட்கள் அல்லது சேவைகளின் ஈடுக்கோரல் மதிப்பு ரூ. 1 கோடிக்கு மிகாமல் இருக்கும் புகார்களை விசாரிக்கும் அதிகார வரம்பு உள்ளது. மாவட்ட ஆணையத்திற்கு குடிமை நீதிமன்றத்தின் **(Civil Court)** அதிகாரம் உள்ளது.

**ii. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்:**


- ✓ மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு (மாநில ஆணையம்), கோரப்படும் பொருட்கள்/சேவையின் மதிப்பு மற்றும் இழப்பீடின், ஈடுக்கோரல் மதிப்பு ரூ.1 கோடிக்கு மேல் ஆனால் ரூ.10 கோடிக்கு மிகாத .புகார்களை விசாரிக்க அசல் அதிகார வரம்பு உள்ளது.
- ✓ இதற்கு மாவட்ட ஆணையத்திடம் இருந்து வரும் புகார்களை விசாரிக்கின்ற மேல்முறையீடு மற்றும் மேற்பார்வை அதிகார வரம்பும் உள்ளது
- ✓ இதனுடைய மற்ற அதிகாரங்களும் ஆற்றல்களும் மாவட்ட குறைதீர் மன்றத்தை ஒத்ததாகும்.

**iii. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்:**

- ✓ தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் (தேசிய ஆணையம்) இந்தச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள இறுதி ஆணையம் ஆகும்.
- ✓ இது பொருட்கள்/சேவைகள் மற்றும் கோரப்படும் இழப்பீடு ரூ.10 கோடிக்கு மேல் இருக்கும் சர்ச்சைகளை நடத்துவதற்கு அசல் அதிகார வரம்பைக் கொண்டுள்ளது.
- ✓ மாநில ஆணையத்தின் தீர்ப்பாணைகளுக்கு எதிராக வரும் மேல்முறையீடுகளை விசாரிக்கும் மேல்முறையீடு மற்றும் மேற்பார்வை அதிகார வரம்பும் இதற்கு உள்ளது.

ஒரு மாவட்ட ஆணையம், மாநில ஆணையம் அல்லது தேசிய ஆணையத்தால் செய்யப்படும் ஒவ்வொரு ஆணையும், நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஆணையைப் போலவே செயல்படுத்தப்படும். தேசிய ஆணையத்தின் உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மட்டுமே மேல்முறையீடு செய்ய வேண்டும்.

**வரைப்படம்** 1: குறை தீர்ப்பதற்கான சேனல்கள்



| மத்திய அரசால் நிறுவப்பட்டது | மாநில அரசால் நிறுவப்பட்டது | மாநில அரசால் நிறுவப்பட்டது |
|---|---|---|
| பொருட்கள் அல்லது சேவைகளின் மதிப்பு ரூ.10 கோடிக்கு மேல் இருக்கும் புகார்களை விசாரிக்கும் அதிகார வரம்பு உள்ளது | பொருட்கள் அல்லது சேவைகளின் மதிப்பு 1 கோடி மற்றும் ரூ.10 கோடிக்கு இடையில் இருக்கும் புகார்களை விசாரிக்கும் அதிகார வரம்பு உள்ளது | பொருட்கள் அல்லது சேவைகளின் மதிப்பு 1 கோடிக்கு மிகாமல் இருக்கும் புகார்களை விசாரிக்கும் அதிகார வரம்பு உள்ளது |
| மாநில ஆணையத்தின் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை ஏற்றுக்கொள்கிறது | மாவட்ட ஆணையத்தின் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை ஏற்றுக்கொள்கிறது | |

**a) ஒரு புகார் பதிவு செய்வதற்கான நடைமுறை**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று குறைதீர் முகமைகளிலும் புகார் பதிவு செய்வதற்கான நடைமுறை மிகவும் எளிதானதாகும். ஒரு புகாரைப் பதிவு செய்வதற்கோ, அல்லது மாநில அல்லது தேசிய ஆணையத்தில் மேல்முறையீடு பதிவு செய்வதற்கோ எந்தக் கட்டணமும் கிடையாது. புகார்தாரர் தானாகவோ அல்லது அவருடைய அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலமாகவோ புகாரைப் பதிவு செய்யலாம். அதை நேரில் வந்து பதிவு செய்யலாம் அல்லது தபாலில் கூட அனுப்பலாம். புகார் பதிவு செய்வதற்கு எந்த ஒரு வழக்கறிஞரும் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**b) நுகர்வோர் குறைதீர் மன்ற ஆணைகள்**

பினவரும் நிலைகளில் (அ) புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள குறைபாடுகளில் ஏதேனும் ஒன்றினால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ள பொருள் பாதிப்படைந்துள்ளதாக, அல்லது (ஆ) புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏதேனும் சேவைகள் குறித்த குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், பின்வருபவைகளில் ஏதேனும் ஒன்றை செய்வதற்கு எதிர்தரப்பினருக்கு உத்தரவிடும் ஆணையை ஆணையம் வெளியிடும்:

i. புகார்தாரர் செலுத்திய **விலை**, (அல்லது காப்பீட்டு எனில் அதற்கான பிரீமியம்), மற்றும்/ அல்லது கட்டணங்களை அவருக்கு **திருப்பிக் கொடுத்தல்**

ii. எதிர்த் தரப்பினரின் கவனக்குறைவின் காரணமாக நுகர்வோருக்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது காயத்துக்காக **இழப்பீடாக** அத்தகைய தொகையை வழங்குதல்

iii. பிரச்சினைக்குரிய சேவைகளில் உள்ள குறைபாடுகள் அல்லது **பற்றாக்குறைகளை அகற்றுதல்**

iv. **நியாயமற்ற வர்த்தக நடைமுறை** அல்லது தடை செய்யக்கூடிய வர்த்தக நடைமுறைகளை **நிறுத்துதல்** அல்லது அவற்றை மீண்டும் செய்யாதிருத்தல்

v. **உரிய செலவுத்தொகையை** முறையீட்டாளருக்கு வழங்குதல்

c) **புகாரின் இயல்புகள்**

காப்பீட்டு வணிகத்தைப் பொறுத்தவரை, மூன்று குறைதீர் மன்றங்களிலும் பதிவு செய்யப்படும் **பெரும்பாலான நுகர்வோர் புகார்கள்** பின்வரும் முக்கிய வகைகளின் கீழ் வருகின்றன:

i. ஈடுக்கோரல் தீர்வுகளில் ஏற்படும் தாமதம்

ii. ஈடுக்கோரல்கள் தீர்க்கப்படாமை

iii. ஈடுக்கோரல்கள் தள்ளுபடி செய்யப்படுதல்

iv. இழப்பு தொகை அல்லது அளவு

v. பாலிசி விதிமுறைகள், நிபந்தனைகள் போன்றவை

## E. காப்பீட்டு குறைதீர் அதிகாரி (The Insurance Ombudsman )

காப்பீட்டுச் சட்டம், 1983-இன் அதிகாரங்களின் கீழ் மத்திய அரசு ஏப்ரல் 25, 2017 அன்று வெளியிட்ட அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையின் மூலம் 2017 இன் இன்சூரன்ஸ் ஒம்புட்ஸ்மேன் (காப்பீட்டு குறைதீர் அதிகாரி) விதிகளை உருவாக்கியது

அனைத்து காப்பீட்டாளர்கள், அவர்களின் முகவர்கள் மற்றும் இடைத்தரகர்களுக்கும் அனைத்து தனிப்பட்ட காப்பீடுகள், குழுக் காப்பீட்டு பாலிசிகள், தனி உரிமையாளர் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் பாலிசிகள் தொடர்பான புகார்களுக்கும் இன்சூரன்ஸ் ஒம்புட்ஸ்மேன் தொடர்பான விதிகள் பொருந்தும். ['தனிப்பட்ட வகைகள்' என்பது கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விற்கப்படும் காப்பீடுகளுக்கு மாறாக தனிநபர் திறனில் எடுக்கப்பட்ட காப்பீடுகளைக் குறிக்கிறது.] புகார்கள் பின்வருவது தொடர்பாக இருக்கலாம்-(அ) ஈடுக்கோரல்களைத் தீர்ப்பதில் ஐஆர்டிஏஐ வகுத்துள்ள நேரத்திற்கு மேலே தாமதம், (ஆ) காப்பீட்டாளர் ஈடுக்கோரல்களை பகுதியாக அல்லது மொத்தமாக நிராகரித்தல், (இ) காப்பீட்டு பாலிசியின் அடிப்படையில் செலுத்தப்பட்ட அல்லது செலுத்த வேண்டிய பிரீமியம் பற்றிய சர்ச்சைகள், (ஈ) பாலிசி ஆவணம் அல்லது பாலிசி ஒப்பந்தத்தில் எந்த நேரத்திலும் பாலிசி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் திரித்துக்கூறப்படுதல், (உ) ஈடுக்கோரலைப் பாதிக்கும் வகையில் காப்பீட்டு பாலிசிகளின் வரிகளில் உள்ள

சட்டப்பூர்வ அமைப்பு; மற்றும் (ஊ) காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் மற்றும் இடைத்தரகர்களுக்கு எதிராக பாலிசி சேவைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குறைகள்.

a) உடல்நலக் காப்பீட்டு பாலிசி உட்பட முன்மொழிபவர் சமர்ப்பித்த முன்மொழிவு படிவத்துடன் இணங்காத வகையில் ஆயுள் காப்பீட்டு பாலிசி, பொதுக் காப்பீட்டு பாலிசியை வழங்குதல்.

b) உடல்நலக் காப்பீடு உட்பட ஆயுள் காப்பீடு. பொதுக் காப்பீடு ஆகியவற்றில் பிரீமியத்தைப் பெற்ற பிறகு காப்பீட்டு பாலிசியை வழங்காதது

c) உட்பிரிவுகள் (அ) முதல் (ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தொடர்புள்ள காப்பீட்டுச் சட்டம், 1938 இன் விதிகள் அல்லது ஐஆர்டிஏஐ அவ்வப்போது வழங்கிய ஒழுங்குமுறைகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டுதல்கள் அல்லது அறிவுறுத்தல்கள் அல்லது பாலிசி ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறுவதால் ஏற்படும் பிற விஷயங்கள்.

ஈடுக்கோரல் தீர்வுகளுடன் தொடர்புடைய மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து புகார்களையும் செலவு குறைந்த, திறன்மிக்க மற்றும் பாரபட்சமற்ற முறையில் தீர்ப்பதே இந்த விதிகளின் நோக்கம் ஆகும்.

**காப்பீடு பெற்றவருக்கும் காப்பீடு அளிப்பவருக்கும் இடையேயான பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலம், குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்குள் காப்பீடு குறைதீர் அதிகாரி ஒரு மத்தியஸ்தராகவும் ஆலோசகராகவும் செயல்படுகிறார்.**

**புகாரை ஏற்பதா அல்லது நிராகரிப்பதா என்பது குறித்த காப்பீடு குறைதீர் அதிகாரியின் முடிவு இறுதியானதாகும்.**

**a) காப்பீடு குறைதீர் அதிகாரியிடம் புகார் செய்தல்**

காப்பீடு குறைதீர் அதிகாரியிடம் பதிவு செய்யப்படும் எந்தவொரு புகாரும் எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும், மேலும் காப்பீட்டாளர் அல்லது அவரது சட்டப்பூர்வ வாரிசுகள், நியமனதாரர் அல்லது உரிமை மாற்றம் செய்யப்பட்டவர் ஆகியோரால் கையொப்பமிடப்பட வேண்டும், மேலும் காப்பீட்டாளரின் கிளை/அலுவலகம் உள்ள அதிகார வரம்பிற்குள் இருக்கும் காப்பீடு குறைதீர் அதிகாரியிடம் தெரிவிக்கப்பட வேண்டும். ஆதரிக்கும் ஆவணங்களுடன் புகாருக்கு வழிவகுத்த காரணங்கள், புகார்தாரருக்கு ஏற்பட்ட இழப்பின் தன்மை மற்றும் அளவு மற்றும் கோரப்பட்ட நிவாரணம் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்.

பின்வரும் நிகழ்வுகளில் காப்பீடு குறைதீர் அதிகாரியிடம் புகார் செய்ய முடியும்:

i. புகார்தாரர், காப்பீட்டு நிறுவனத்துக்கு முன்னதாகவே எழுத்து மூலமாகத் தெரிவித்திருந்து, மற்றும்:
   - ✓ காப்பீட்டு நிறுவனம் புகாரை நிராகரித்திருந்தால், அல்லது
   - ✓ காப்பீட்டு நிறுவனம் காப்பீடு பெற்றவரின் புகாரை பெற்ற ஒரு மாதத்திற்குள் எந்த பதிலையும் புகார்தாரர் பெறவில்லை எனில்

ii. காப்பீடு நிறுவனம் அளித்த பதிலால் புகார்தாரர், திருப்தி அடையவில்லை எனில்.

iii. காப்பீட்டு நிறுவனம் நிராகரித்த தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் புகார் செய்யப்பட்டுள்ளது.

iv. எந்த ஒரு நீதிமன்றத்திலும் அல்லது நுகர்வோர் மன்றத்திலும் அல்லது தீர்ப்புக்காகவும் அந்த புகார் நிலுவையில் இல்லை.

v. கோரப்பட்ட செலவுகள் உட்பட ஈடுக்கோரலின் மதிப்பு ரூ. 30 லட்சத்திற்கு மேல் இல்லை.

**b) காப்பீடு குறைதீர் அதிகாரியின் பரிந்துரைகள்**

புகார்தாரர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்திற்கு புகார்களின் நகல்களை காப்பீடு குறைதீர் அதிகாரி அனுப்புவார். புகாரை பெற்ற ஒரு மாதத்திற்குள் காப்பீடு குறைதீர் அதிகாரி தனது பரிந்துரைகளை வழங்குவார்.

**c) தீர்ப்பு**

மத்தியஸ்தம் மூலமாக பிரச்சினை தீர்க்கப்படலாம். அது சாத்தியமில்லை என்றால், புகார்தாரரிடமிருந்து அனைத்துத் தேவைகளும் பெறப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் காப்பீடு செய்தவருக்கு நியாயமானதாக கருதக்கூடிய ஒரு தீர்ப்பை காப்பீடு குறைதீர் அதிகாரி வழங்குவார் மற்றும் புகாரின் நகலை புகார்தாரர் மற்றும் காப்பீட்டாளருக்கு அனுப்புவார்.

காப்பீட்டாளர் தீர்ப்பை பெற்று 30 நாட்களுக்குள் தீர்ப்பிற்கு இணங்க வேண்டும் மற்றும் அதற்கு இணங்கியதை காப்பீட்டு குறைதீர் அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும். காப்பீட்டு குறைதீர் அதிகாரியின் தீர்ப்பு காப்பீட்டாளரைக் கட்டுப்படுத்தும்.

## F. தகவலறியும் உரிமை

காப்பீட்டில் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக உள்ள குறிப்பிட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கூடுதலாக, நாட்டில் உள்ள அனைவருக்கும் பொதுவான சில பொதுவான சட்டங்கள் உள்ளன. அரசால் இயற்றப்பட்ட இந்தியாவின் முக்கியமான சட்டமான தகவலறியும் உரிமைச் சட்டம், 2005 மூலம் நிறுவனங்களில் பொது அதிகாரிகளிடம் கிடைக்கும் தகவல்களை அணுக இந்திய குடிமக்களை அனுமதிப்பது, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கிறது. இந்த சட்டத்தின்படி தகவலுக்கான கோரிக்கைகளை கையாள்வதற்காக ஒரு தலைமை பொது தகவல் அதிகாரியை (CPIO) நியமிக்க வேண்டும். கூறப்பட்ட சட்டத்தின் விதிகளின்படி ஐஆர்டிஏஐ பொது உறுப்பினர்களுக்கு தகவல்களை வழங்க கடமைப்பட்டுள்ளது. அந்த சட்டத்தின்படி, ஐஆர்டிஏஐ மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் சில தகவல்களை வெளிப்படுத்தியாக வேண்டும் என்பதை முகவர்கள் அறிந்திருக்க வேண்டும்; மேலும் அவர்கள் வேலை, ஆவணம், பதிவுகள், குறிப்புகள் அல்லது ஆவணங்கள்/பதிவுகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களையும் மின்னணு வடிவத்தில் சேமிக்கப்பட்ட தகவல்களையும் ஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டும். இருப்பினும், வெளிப்படுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்ட சில வகை தகவல்கள் உள்ளன.

## சுய-பரீட்சை 1

____________ -ற்கு ரூ. 20 இலட்சம் ரூபாய் வரை மட்டுமே பொருட்கள் அல்லது சேவைகள் மற்றும் கோரப்படும் இழப்பீடு உள்ள புகார்களை மட்டுமே ஏற்றுக்கொள்கின்ற அதிகாரம் உள்ளது.

I. மாவட்ட ஆணையம்

II. மாநில ஆணையம்

III. ஜில்லா பரிஷத்

IV. தேசிய ஆணையம்

---

## சுருக்கம்

- ஒருங்கிணைந்த குறைதீர் மேலாண்மை அமைப்பு (IGMS) ஐஆர்டிஏ-வால் தொடங்கப்பட்டுள்ளது, அது காப்பீட்டுக் குறைதீர் தகவலின் மையக் களஞ்சியமாகவும், துறையிலுள்ள குறைதீர்ப்பு முறைகளை கண்காணிப்பதற்கான ஒரு கருவியாகவும் செயல்படுகின்றது.

- “நுகர்வோர் குறைதீர்த்தல் முகமைகள்” ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு மாநிலத்திலும், மற்றும் தேசிய அளவிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- காப்பீட்டு வணிகத்தைப் பொறுத்தவரை, பெரும்பாலான நுகர்வோர் புகார்கள்- ஈடுக்கோரல் தீர்வுகளில் ஏற்படும் தாமதம், ஈடுக்கோரல்கள் தீர்க்கப்படாமை, ஈடுக்கோரல்கள் தள்ளுபடி செய்யப்படுதல், இழப்பு அளவு, பாலிசி விதிமுறைகள், நிபந்தனைகள் போன்றவற்றின் கீழ் வருகின்றன
- காப்பீடு பெற்றவருக்கும் காப்பீடு அளிப்பவருக்கும் இடையேயான பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலம், குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்குள் காப்பீட்டு குறைதீர் அதிகாரி ஒரு மத்தியஸ்தராகவும் ஆலோசகராகவும் செயல்படுகிறார்.
- மத்தியஸ்தம் மூலமாக பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், நியாயமானதாகவும், காப்பீடு பெற்றவரின் இழப்பை ஈடு செய்யத் தேவையானதை விட அதிகமாக இல்லாத கருதக்கூடிய ஒரு தீர்ப்பினை காப்பீடு குறைதீர் அதிகாரி வழங்குவார்.

**முக்கிய வார்த்தைகள்**

1. ஒருங்கிணைந்த குறைதீர் மேலாண்மை அமைப்பு (IGMS)
2. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986
3. மாவட்ட ஆணையம்
4. மாநில ஆணையம்
5. தேசிய ஆணையம்
6. காப்பீடு குறைதீர் அதிகாரி

**சுய-பரீட்சைக்கான பதில்கள்**

**பதில்** 1 -சரியான பதில் விருப்பம் I.

# அத்தியாயம் C-10

## வலைதிரட்டிகளுக்கான கட்டுபாட்டு அம்சங்கள்

**அத்தியாய அறிமுகம்**

இந்த அத்தியாயத்தில் (பாடத்தில்) வலைதிரட்டிகளுக்கான கட்டுபாட்டு அம்சங்களை விவாதிக்க உள்ளோம்.

**கற்றல் விளைவுகள்**

**A.** வலைதிரட்டிகளுக்கான கட்டுபாடுகள்.

## A. வலை திராட்டியாளர்கள்

வலைதிரட்டிகளுக்கான கட்டுபாட்டு விதிகள் 3ஆம் தேதி டிசம்பர்-2013 முதல் அமலுக்கு வந்தன.

### 1. வரையறைகள்

a) "சட்டம்" என்றால் இன்சூரனஸ் சட்டம்,1938 (1938 இன் 4) அவ்வப்போது திருத்தப்பட்டது.
b) கட்டுபாடுகளுக்கான "ஒப்பந்தம்" என்றால் வலைதிரட்டியாளர்கள் மற்றும் இன்சூரனஸ் நிறுவனத்துக்கிடையேயான ஒப்பந்தம்.
c) அங்கீகரிக்கப்பட்ட ஆய்வாளர் என்பவர் காப்பீட்டு வலைதிரட்டியாளர்கள் அல்லது டெலிமார்க்கெட்டிங் விற்பனையாளர்கள் மற்றும் தொலைதூர மார்கெட்டிங் செய்பவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் இந்த துறைக்கான அங்கீகாரம் பெற வேண்டிய பயிற்சி மற்றும் தேர்வில் வெற்றி பெற்றவர்களாவர்.
d) ஆணையம் என்பது காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு ஆணைய சட்டத்தின் 1999 (1999தின் 41) பிரிவு 3 கீழ் உருவாக்கப்பட்ட காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தை குறிக்கிறது.
e) தொலைதூர சந்தைப்படுத்துதல் என்பது காப்பீட்டு பொருட்கள் அல்லது சேவைகளை கோருதல் அல்லது விற்பனை செய்யும் செயல்முறையை குறிக்கிறது இங்கு நுகர்வோர் கோரிக்கை அல்லது விற்பனை அல்லது விற்பனை நிறைவு நடக்கும் இடத்தில் நுகர்வோர் நேரடியாக இருப்பதில்லை, மேலும் செயல்முறை தொலைபேசி அல்லது குறுந்தகவல் மூலம் நிறைவேற்றப்படுகிறது.
f) "முக்கிய மேலாண்மை பணியாளர்கள்" (விதிமுறையின் காரணங்களுக்காக) என்பது தலைமை நிர்வாக அதிகாரி, தலைமை இயக்க அதிகாரி, தலைமை சந்தைப்படுத்துதல் அதிகாரி, தலைமை நிதி அதிகாரி, தலைமை – தொழில்நுட்பம் தலைமை – IT
g) (லீட்) வழிகாட்டி தகவல் (விதிமுறையின் காரணங்களுகாக) என்பது இணைதளத்தை அணுகி காப்பீட்டு தயாரிப்புகளின் விலைகள் / பயன்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்காக, தன்னை தொடர்பு கொள்வதற்கான எந்தவொரு தகவல்களை சமர்ப்பித்த நபரை பற்றிய தகவலை குறிக்கிறது.
h) லீட் ஜெனரேஷன் (விதிமுறையின் காரணங்களுக்காக) என்பது காப்பீடுகளுக்கான தேவை இருக்கக்கூடிய நபர்களை அணுகி அவர்களுக்கு காப்பீட்டுத் தயாரிப்புக்களை அவர்களின் விருப்பத்திற்கு கொண்டு செல்வதற்கு முன் அவர்களின் காப்பீடு வாங்குவதற்கான ஏற்ப்பை அறிய முற்படுவதேயாகும்.
i) லீட் மேனேஜ்மெண்ட் சிஸ்டம் (விதிமுறைகளின் காரணத்திற்காக) என்பது இணைய திரட்டியாளர்களின் இணையதளத்திலிருந்து வரும் விசாரணைகளின் தடங்களை பதிவு செய்து, வடிகட்டி, சரிபார்த்து, தரம் பிரித்து, விநியோகித்து, பின் தொடர்ந்து அவற்றை நிறைவு செய்யும் மென்பொருளைக் குறிக்கிறது. இது இணைய ஒருங்கிணைப்பாளரால் நிறுவப்பட்டதாகும்.
j) அவுட்சோர்கிங் (ஒழுங்கு விதிகளின் நோக்கத்திற்காக) என்பது காப்பீட்டு ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட அளவிற்கு இணைய திரட்டியாளர்களால் மேற்கொள்ளப்படக்கூடிய செயற்பாடுகளை குறிக்கிறது.
k) நபர் என்றால்
   1. கம்பெனிகள் சட்டம், 2013 (2013 இன் 18)இன் கீழ் உருவாக்கப்பட்ட நிறுவனம

அல்லது

1. வெளிநாட்டுச் செலாவணி மேலாண்மைச் சட்டம் (FEMA) 1999 (1999 இன் 42) இன் பிரிவு (W) இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி, வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மைச் சட்டம், 2008 (2009 இன் 6) இன் கீழ் உருவாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை மற்றும் அதன் கீழ் பதிவு செய்யப்பட்ட பொறுப்பு கூட்டாண்மையாக இல்லாமல், எந்தவொரு கூட்டாளியும் இந்தியாவுக்கு வெளியே வகிக்கும் ஒரு வதிவதற்ற நிறுவனம் / நபராக இருக்கக்கூடாது.

அல்லது

2. வலை திரட்டிகளராக செயற்படுவதற்கு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எவரேனும் நபர் ஒருவர்.

l) முதன்மை அலுவலர் என்றால்
  1. ஒரு கார்ப்பரேட் அங்கத்தில் வலை திரட்டியாளர்களின் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான ஒரு இயக்குனர் / பங்குதாரர் ஆவார்.
     அல்லது
  2. வலை திரட்டியாளர்களின் பணிகளை மேற்கொள்வதற்காக பிரத்யேகமாக நியமிக்கப்பட்ட தலைமை நிர்வாக அதிகாரி.

m) வேண்டுதல் (விதிமுறைகளின் காரணங்களுக்காக) என்பது ஒரு பிராஸ்பெக்டை காப்பீட்டு பாலிசியை வாங்க வைப்பதற்கான ஒரு அனுகுமுறை.
n) டெலிமார்க்கெட்டர் (விதிமுறைகளின் காரணங்களுக்காக) என்பது தொலைத் தொடர்பு வணிக தகவல் தொடர்பின் வாடிக்கையாளர் முன்னுரிமை ஒழுங்குமுறைகள், 2010 (அவ்வப்போது திருத்தத்தப்பட்டதுமான) இன் அத்தியாயம் III இன் கீழ் இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும்.
o) வலை திரட்டி (விதிமுறைகளின் நோக்கத்திற்காக) என்பவர் ஒழுங்கு விதிகளின் கீழ் ஆணையத்திடம் உரிமம் பெற்ற ஒரு நபர் ஆவார்.
p) வலைதலம்
   வலைதலம் என்பது ஒரு வலைடொனமனில் இருந்து வழங்கப்படும் தொடர்புடைய வரைப்பங்களின் தொகுப்பாகும். வலைத்தளம் குறைந்தது ஒரு வலை சேவையத்தில் நிறுவப்பெற்று, இணையம் அல்லது தனியார் உள்ளூர் பகுதி நெட்வொர்க் வழியாக யூனிபார்ம் ரிசோர்ஸ் அலோகேட்டர் எனும் இணைய முகவரி மூலமாக அனுகக் கூடியது.
   வலைத்தளம் எனும் சொல் விதிமுறைகளின் காரணங்களுக்காக வலை போர்டல் அல்லது மொனால் தளத்தை உள்ளடக்கியது.

q) நியமிக்கப்பட்ட வலைதளம் (விதிமுறைகளின் காரணங்களுக்காக) என்பது வலை திரட்டியாளர்களுக்கு சொந்தமானதும் டொமைன் பெயர்(கள்) உடன் பதிவு செய்யப்பட்ட மற்றும் வலை திரட்டியாளர்களின் செயல்பாடுகளுக்காக பிரத்யேகமாக நிறுவப்பட்ட வலைத்தளமாகும்.

r) இந்த ஒழுங்கு விதிகளின் பயன்படுத்தப்படும் மற்றும் வரையறுக்கப்படாத ஆனால்

காப்பீடுச் சட்டம், 1938 (1938 இன் 4), காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணைய சட்டம், 1999 அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் எதிலும் வரையறுக்கப்பட்ட சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் முறையே அந்தச் சட்டங்கள் அல்லது ஒழுங்கு விதிகளில் அவற்றிக்கு ஒதுக்கப்பட்டுள்ள அர்த்தங்களைக் கொண்டிருக்கும்.

## 2. வலை திரட்டியாளர் உரிமத்திற்கான தகுதி அளவுகோல்கள்

a) வலை திரட்டியாளர் உரிமம் பெறுதல்/புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு, விண்ணப்பதாரர் பின்வரும் நிபந்தனைகளை மற்றும் அவை மட்டும் அல்லாத நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதை உறுதி செய்தல் வேண்டும்.

i. விண்ணப்பதாரர் ஒழுங்குமுறை 1(i) இன்கீழ் வரையறுக்கப்பட்ட நபர் ஆவார்.

ii. கம்பனியன் சங்கக் குறிப்பாணை அல்லது விண்ணப்பதாரரின் அத்தகைய ஏனைய ஆவணங்கள் காப்பீட்டு தயாரிப்புக்களை இணையதளத்தில் திரட்டும் வியாபராத்தை அதன் பிரதான நோக்கமாக மட்டுமே கொண்டிருக்க வேண்டும்.

iii. விண்ணப்பதாரர் தன் பிரதான வியாபரம் (விலையில் ஒருங்கிணைப்பு) தவிர்த்து வேறெந்த வியாபாரத்திலும் ஈடுபட கூடாது.

iv. விண்ணப்பதாரர் காப்பீட்டு முகவர், கார்ப்பரேட் முகவர், நுன்காப்பீட்டு முகவர், TPA, சர்வேயர் நட்ட மதிப்பீட்டாளாலரும் ஆணையத்தினால் வகுக்கப்பட்ட தொடர்புடைய ஒழுங்கு விதிகளின் கீழ் வேறு ஏதேனும் காப்பீடு இடைத்தரகராக உரிமம் / பதிவு செய்யப்படுதல் ஆகாது.

v. விண்ணப்பதாரருக்கு காப்பீட்டாளருடன் பரிந்துரை ஏற்பாடு இருக்கக்கூடாது.

vi. விண்ணப்பதாரர் எந்த நேரத்திலும் காப்பீட்டாளர், காப்பீட்டு தரகர், கார்ப்பரேட் முகவர், நுண்காப்பீட்டு முகவர், TPA, சர்வேயர் அல்லது இழப்பு மதிப்பீட்டாளர் அல்லது பிற காப்பீட்டு இடைத்தரகர் ஆகியோரின் தொடர்புடைய தரப்பினராக இருக்கக்கூடாது.

b) முதன்மை அலுவலர் ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்ட தேவையான தகுதிகளை கொண்டிருத்தல் வேண்டும்

c) இணைய ஒருங்கிணைப்பாளரின் முதன்மை அலுவலர் ஆரம்பத்தில் 50 மணி நேரப் பயிற்சியையும், அதன் பின்னர் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை முடிவில் 25 மணி நேரம் புதுப்பிக்கும் பயிற்சியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

d) முதன்மை அலுவலர் / இயக்குனர்கள் / ஸ்தாபகர்கள் / பங்குதரார்கள் முக்கிய மேலாண்மை பணியாளர்கள் அவ்வப்போது ஆணையத்தால் அறிவிக்கப்படும் FIT மற்றும் PROPER அளவுகோல்களில் உள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

e) அங்கீகரிகப்பட்ட சரிபார்பாளர் பரிந்துரைக்கப்பட்ட பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டு ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்ட பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

f) வலை திரட்டியாளர் ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கடமைகள் மற்றும் நடத்தை விதிகளை மீறியிருக்கக் கூடாது.

g) உரிமம் வழங்குவது பாலிசிதாரர்களின் நலனுக்காகவே இருக்கும் என்று ஆணையம் கருதுகிறது.

## 3. ரிமம் கோரும் விண்ணப்பம்

a) வலைதிரட்டியாளராக உரிமம் வழங்கக் கோரும் ஒரு விண்ணப்பதாரர், இந்த

ஒழுங்குவிதிகளின் அட்டவணை-1 இன் விண்ணப்பப் படிவம் A (காப்பீட்டு வலை திரட்டியாளருக்கு பதிவுச் சான்றிதழை வழங்குவதற்கான விண்ணப்பம்) இல் ஆணையத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும்.

b) ஹைதராபாத்தில் செலுத்த வேண்டிய இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் என்ற பெயரில் வரையப்பட்ட கோரிக்கை வரைவோலை அல்லது குறிப்பிடப்பட்ட இந்த ஆணையத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட மின்னனு நிதி பரிமாற்றம் மூலம் செலுத்தப்படும் பொருந்தக்கூடிய வரிகள் உடனான திரும்பப்பெற முடியாத ரூ.10,000 விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம் இல்லாமல் எந்த விண்ணப்பமும் பரிசீலிக்கப்படமாட்டாது.

c) அவுட்சோர்சிஸ் மற்றும் டெலிமார்க்கெட்டிங் செயல்பாடுகள் / வசதிக்கு அனுமதி கோரும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பாக அதை குறிப்பிட வேண்டும்.

காப்பீட்டு வலை திரட்டியாளராக பதிவு சான்றிதழ் வழங்குவதற்கான விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் அட்டவணை-1 இன் படிவம் B (விண்ணப்பப்படிவம் A உடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்) இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

காப்பீட்டு வலை திரட்டியாளராக பதிவு சான்றிதழை வழங்கக் கோரும் விண்ணப்பதாரர் ஒழுங்குவிதி 7 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பத்தை பரிசீலிப்பதற்கான அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும் மற்றும் இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

d) வலைதிரட்டியாளராக உரிமம் வழங்குவதற்கான விண்ணப்பம் பொருந்தக்கூடிய ஏற்பாடுகளின்படியும் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழும் ஆணையத்தால் கையாளப்படும்.

e) ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகுதி அளவுகோல்களையும் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரருக்கு ஆணையம் ஒரு வலை திரட்டியாளராக செயல்பட உரிமம் வழங்கும்.

f) ஒருமுறை வழங்கப்பட்ட உரிமம், இந்த ஒழுங்கு விதிகளுக்கு இணங்க இடைநிறுத்தப்படாலொழிய அல்லது ரத்து செய்யப்பட்டாலொழிய, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகளுக்கு செல்லுபடியாகும்.

g) அனைத்து விதங்களிலும் பூர்த்தி செய்யப்படாத ஒரு விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

## 4. உரிமத்தை புதுப்பிக்க கோரும் விண்ணப்பங்கள்

a) வியாபாரத்தை தொடர்வதில் ஆர்வமுள்ள இணையத்திரட்டிகள் முன்னைய உரிமம் காலாவதியாவதற்கு குறைந்து முப்பது நாட்களுக்கு முன்னதாகவே உரிமத்தை புதுப்பிப்பதற்கு ஆணையத்திடம் விண்ணப்பிக்க வேண்டும். உரிமத்தை புதுப்பிப்பதற்காக விண்ணப்பத்துடன் கட்டண பணமாக ரூபாய் 10,000/- இணைக்கப்படவேண்டும். அவுட்சோர்சிஸ் மற்றும் டெலிமார்க்கெட்டிங் செயல்பாடுகளுக்கு அனுமதி கோரும் விண்ணப்பதாரர்கள் அதை

விண்ணப்பபடிவத்தில் குறிப்பாக குறிப்பிட வேண்டும்.

b) எந்த வலை திரட்டியும் உரிமம் காலாவதியானபின் தங்கள் செயல்பாடுகளை தொடர அனுமதிக்கப்படமாட்டார்கள்

குறிப்பு: ஒரு வலை திரட்டி உரிமம் காலாவதியாவதற்கு தொண்ணுறு நாட்களுக்கு முன்னர் புதுப்பித்தல் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுகிறார்.

c) வலைதிரட்டியாக உரிமத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், பொருந்தக்கூடிய ஏற்பாடுகளின் படியும் இந்த ஒழுங்கு விதிகளின் கீழும் ஆணையத்தால் கையாளப்படும்.

d) ஒரு வலைதிரட்டி, உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு முன்னர், தமது முதன்மை அலுவலர், ஆணையத்தால் அவ்வப்போது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இருபத்தைந்து மணிநேரங்கள் தத்துவார்த்த மற்றும் நடைமுறைப் பயிற்சியைப் பெற்றிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

e) உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்காக குறித்துரைக்கப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் விண்ணப்பதாரர் பூர்த்தி செய்கிறார் என்று ஆணையம் திருப்தியடைந்ததின் பேரில் உரிமத்தை மூன்று வருட காலத்திற்கு புதுப்பித்து அதற்கான தகவலை விண்ணப்பதாரருக்கு அனுப்புதல் வேண்டும்.

f) முன்னைய உரிமமளிக்கப்பட்ட காலப்பகுதியின் முழு/பகுதி முழுவதிலும் வலைதிரட்டி ஏற்றவொரு வியாபாரத்தையும் செய்யவில்லை என கண்டறியப்பட்டால் ஆணையம் உரிமம் புதுப்பித்தலை மறுக்கலாம்.

## 5. வலைதிரட்டியின் ஊழியர்கள்

a) காப்பீட்டு கோரல் மற்றும் சரிபார்த்தலில் ஈடுபட்டுள்ள இணையத் திரட்டியின் ஊழியர்கள் ஆணையத்தால் அவ்வப்போது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து காப்பீட்டு தொடர்பான ஐம்பது மணி நேர தத்துவார்த்த மற்றும் நடைமுறை பயிற்சியை நிறைவு செய்திருத்தல் வேண்டும் மேலும் பூனேயிலுள்ள தேசிய காப்பீட்டு கல்விக்கழகத்ததால் அல்லது ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேர்வு அமைப்பினால் நடத்தப்படும் பரீட்சையில் தேர்ச்சிப் பெற்றிருத்தல் வேண்டும்.

b) வியாபாரத்தை கோர இணைய திரட்டிகளால் பணியமர்த்தப்பட்ட டெலி அழைப்பாளர்கள், இணைய திரட்டியின் பட்டியலில் உள்ள ஊழியர்களாக இருக்க வேண்டும் மற்றும் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டபடி பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

c) வலைதிரட்டிகள் தங்கள் சார்பாக பணியமர்த்தும் ஊழியர்களின் அனைத்து செயல்களுக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

## 6. வருடாந்தர கட்டணங்கள்

a) ஒவ்வொரு வலைதிரட்டியும் ஆண்டு உரிமக் கட்டணமாக ரூ.5000/- செலுத்த வேண்டும்

b) வருடாந்திர உரிமக் கட்டணம், வலைத்திரட்டியின் ஆண்டு கணக்குகள் தணிக்கை முடியப் பெற்ற 15 நாட்களுக்குள் அல்லது செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள், இவற்றில் எது முந்தையதோ அதற்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

c) ஹதராபாத்தில் செலுத்தப்பட வேண்டிய “காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்” என்ற பெயரில் கணக்குப் பணம் பெறுபவர் வரைவோலை மூலம் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

## 7. மூலதனம் மற்றும் நிகர மதிப்பின் தேவைகள்

## a) மூலதன தேவைகள்

i. காப்பீட்டு வலைத்திரட்டியாக மாற விரும்பும் ஒரு விண்ணப்பதாரர், ஒழுங்கு விதிகள் கீழ் செலுத்தப்பட்ட மூலதனம் / பங்களிப்புத் தொகையாக ரூபாய் இருபத்தைந்து லட்சம் ரூபாய் கொண்டிருக்க வேண்டும்.

ii. கம்பெனி சட்டம் 2013 இன் கீழ் கம்பெனியாக பதிவு செய்யப்பட்ட ஒரு வலைத்திரட்டி, தனது மூலதனத்தை செலுத்தப்பட்ட சமபங்கு பங்குகள் வாயிலாக பெற்றிருக்க வேண்டும்.

iii. LLP எனில் கூட்டாளர்களின் பங்களிப்பு ரொக்கமாக மட்டுமே இருக்க வேண்டும்.

iv. விண்ணப்பதாரர், இந்தியருக்கு சொந்தமான மற்றும் கட்டுப்படுத்தப்படுபவை தொடர்பாக வெளியிடப்பட்ட விதி, ஒழுங்கமுறை, சுற்றறிக்கை, வழிகாட்டுதல்கள் போன்றவற்றுக்கும் இணங்க வேண்டும்.

v. மூலதனமாக வைக்கப்பட்டிருக்கும் வலைதிரட்டியின் பங்குகளை எந்தவொரு வடிவத்திலும் அல்லது முறையிலும் கடன் அல்லது வேறு எந்த வசதியையும் பெறுவதற்கு அடகு வைக்கப்படாது மற்றும் எல்லா நேரங்களிலும் சிக்கலில்லாமல் இருக்க வேண்டும்.

## b) வெளிநாட்டு முதலீட்டாளர்களால் வைக்கப்பட்டிருக்கும் சமபங்கு மூலதனத்தைக் கணக்கிடும் விதம்

போர்ட்போலியோ முதலீட்டாளர்கள் உட்பட வெளிநாட்டு முதலீட்டாளர்களின் சமபங்கு பங்குகளின் மொத்த பங்குகள் அல்லது காப்பீட்டு வலைத் திரட்டியின் பங்களிப்பு, எந்த நேரத்திலும் காப்பீட்டு வலைத்திரட்டியின் செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனத்தில் நாற்பத்தொன்பது சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் அல்லது மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய வெளிநாட்டு முதலீட்டு வரம்புக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

## c) நிகர மதிப்பு தேவைகள்

i. காப்புறுதி வலை திரட்டியின் நிகர பெறுமதிப்பானது, பதிவுச் சான்றிதழின் காலப் பகுதியின் போது, மேலே உள்ள உபஒழுங்கு விதிகளின் (a) (i) கீழ் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடுகளில் அல்லது பங்களிப்பு தொகையில் 100%ற்கு குறையாது இருந்தல் வேண்டும்.

**(விளக்கம்** இந்த ஒழுங்கு விதிகளின் நோக்கங்களுக்காக “நிகர மதிப்பு” என்பது நிறுவனங்கள் சட்டம் 2013 இல் ஒதுக்கப்பட்ட மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட பொருளைக் கொண்டிருக்கும்)

ii. ஒவ்வொரு காப்பீட்டு வலைதிரட்டியும் மேலே உள்ள துணை ஒழுங்குவிதி (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகர மதிப்பின் நிலையை ஒவ்வொரு அரையாண்டும் செப்டம்பர் 30 ஆம் தேதியிலும் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆம் தேதியிலும் மதிப்பாய்வு செய்து, ஏதேனும் இணைக்கமின்மை இருந்தால், 15 நாட்களுக்குள் ஆணையத்திற்கு புகாரிளித்தல் வேண்டும். அதன் பின்னர் 30 நாட்களுக்குள் தேவைகளை மீட்டெடுத்தல் மற்றும் இணக்கத்தை ஆணையத்திற்கு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

iii. காப்பீட்டு இணையதிரட்டியால் 30 நாட்களுக்குப் பிறகும் குறைந்தபட்ச நிகர மதிப்பை பராமரிக்க முடியாவிட்டால், அவர் உடனடியாக காப்பீடு தொடர்பான வணிகம் / செயல்பாட்டை நிறுத்த வேண்டும்.

iv. காப்பீட்டு இணையதிரட்டி ஒவ்வொரு ஆண்டும் கணக்குப் புத்தகங்களை இறுதி செய்ததன் பின்னர் பட்டய கணகக்காளரினால் முறையாக அத்தாட்சிப் படுத்தப்பட்ட நிகர மதிப்பு சான்றிதழை ஆணையகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**d) பங்குகளை மாற்றுதல்**

i. பங்குகள் அல்லது பங்களிப்பில் நன்மை பயக்கும் உரிமையும், கட்டுப்பாடும் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் / தனி நபரிடம் முழுமையாக இருத்தல் வேண்டும்.

ii. இந்த ஒழுங்கு விதிகளின் XII அட்டவணையின் படிவம் AB (பங்குகளை மாற்றுதல்) இல் கொடுக்கப்பட்டுள்ளபடி இணைய திரட்டியின் பங்குகள் மற்றும் செயல்முறை இருக்க வேண்டும்.

## 8. IRDA மூலம் பதிவு சான்றிதழ் வழங்குதல்

i. தேவையான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து, தேவையான அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்தப்பிறகு சமர்ப்பிக்கப்படும். ஆவணத்தை, IRDA ஏற்றுக் கொண்டு விண்ணப்பதாரருக்கு தகுதி சான்றிதழை வழங்கும்.

ii. வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழானது IRDA-வால் இடைநிறுத்தப்பட்டாலோ அல்லது ரத்து செய்யப்பட்டாலோழிய வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்.

iii. ஒரு முழுமையடையாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும் இருப்பினும் நிராகரிப்பதற்கு முன் 30 நாட்களுக்குள் சம்பிரதாயங்களை முடிக்க அவகாசம் வழங்கப்படும் 30 நாட்களுக்குள் எந்த தகவலும் வராத பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

## 9. வாரியத்தின் கொள்கை

ஒவ்வொரு காப்பீட்டு வலைதிரட்டியும் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட "காப்பீட்டு தயாரிப்புகளை கோரும் விதம்" பற்றிய கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும் இது மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பதிப்பாய்வு செய்யப்படும்.

## 10. தொழில்முறை இழப்பீட்டு காப்பீடு

ஒவ்வொரு வலைத் திரட்டியும் ஆணையத்தால் தங்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்தின் செல்லுபடியாகும் காலம் முழுவதும் தொழில்முறை இழப்பீட்டு காப்பீட்டை எடுத்துக்கொண்டு அதை பாராமரிக்க வேண்டும். ஆணையத்தால் உரிமம் பெற்ற காப்பீட்டாளரிடமிருந்து தொழில்முறை இழப்பீட்டு பாலிசியை பெற்றுக்கொள்ளலாம்.

ஆனால் ஆணையானது பொருத்தமான சந்தர்ப்பங்களில் புதியதாக உரிமம் பெற்ற வலைத்திரட்டியை அசல் உரிமம் வழங்கப்பட்ட ஆறு மாதத்திற்குள் அத்தகைய உத்திரவாதத்தை சமர்ப்பிக்க அனுமதிக்கலாம்.

## 11. காப்பீட்டு வலைதிரட்டியின் பெயரில் மாற்றம்

ஒரு காப்பீட்டு வலை திரட்டி தனது பெயரை மாற்றுவதற்கும் ஆணையத்தின் முன் அனுமதியை பெறுதல் வேண்டும்.

### 12. தயாரிப்புகளை விநியோகிப்பதற்கான காப்பீட்டாளர்களுடலான ஏற்பாடுகள்

பாலிசிதாரர்களின் நலன்களுக்கு எதிரான எந்த ஏற்பாடுகளையும் காப்பீட்டாளர்களுடன் காப்பீட்டு வலை திரட்டிகள் செய்யக்கூடாது.

### 13. கருத்து வேற்றுமை

காப்பீட்டு வணிகத்தை கோரும் போது மற்றும் கொள்முதல் செய்யும்போது காப்பீட்டு வலை திரட்டி பின்வருவனவற்றிற்கு இணங்க வேண்டும்.

a) ஒரு குறிப்பிட்ட வணிக வரிசையில் ஒன்றுக்கும் மேற்பட்ட காப்பீட்டாளர்களுடன் ஒப்பந்தம் செய்துள்ள காப்பீட்டு வலை திரட்டி வருங்கால வாடிக்கையாளருக்கு தாங்கள் ஒப்பந்தம் கொண்டுள்ள காப்பீட்டாளர்களின் பட்டியலை காண்பிக்க வேண்டும். மேலும் கவரேஜ் பாலிசியின் காலம், செலுத்த வேண்டிய பீரிமியம், பீரிமிய விதிமுறைகளின் விவரங்களையும் மற்றும் வாடிக்கையாளர் கோரும் தங்களிடமுள்ள அனைத்து தயாரிப்புகளின் தகவல்களையும் அளிக்க வேண்டும்.

b) விற்பனை செய்யப்படும் தயாரிப்பு, பிராஸ்பெக்டின் தேவைப் பகுப்பாய்வின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

c) எந்த ஒரு காப்பீட்டு வலை திரட்டியும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் குறிப்பிட்ட தயாரிப்பை அதன் வலைத் தளத்தின் மூலமாகவோ தொலைதூர சந்தைப்படுத்துதல் அனுகுமுறைகள் மூலமாகவோ ஊக்குவிக்கவோ அல்லது நிர்பநத்திக்கவோ கூடாது.

### 14. அங்கீகரிக்கப்பட்ட சரிபார்பாளரின் பங்கு மற்றும் பொறுப்புகள்

a) காப்பீட்டு வலை திரட்டி, தன் சார்பாக பணியமர்த்தப்பட்ட அங்கீகாரமுள்ள சரிபார்பாளரின் தவறு மற்றும் கவனக் குறைவான செயல்பாடுகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

b) ங்கீகரிக்கப்பட்ட சாரிபார்பாளர்

i. காப்பீட்டு வலை தரட்டி அல்லது டெலிமார்க்கெட்டரின் பட்டியலுள்ள ஊழியராக இருத்தல் வேண்டும்.
ii. டெலி-மார்க்கெட்டிங் முறையில் மட்டுமே காப்பீட்டு வணிகத்தை கோர வேண்டும்.
iii. பிராஸ்பெக்ட்கள் / பாலிசிராரர்கள் வாங்க விரும்பும் காப்பீட்டு தயாரிப்புகள் பற்றிய உதவி மற்றும் தெளிவு படுத்துதலுக்கான தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலுரைக்க வேண்டும்.
iv. பிராஸ்பெக்ட் (வாடிக்கையாராக வாய்ப்புள்ள ஒரு நபர்)-க்கான தேவை பகுப்பாய்வின் அடிப்படையில் காப்பீட்டு தயாரிப்புகளை விற்க வேண்டும்.
v. வாடிக்கையாளருக்கு தேர்வு செய்வதற்கு உதவும் விதமாக மற்ற நிறுவனங்களின் ஒத்த காப்பீட்டு தயாரிப்பின் முக்கிய அம்சங்களை விளக்க வேண்டும்.
vi. காப்பீட்டு தயாரிப்புகளை கோருவதற்காக கோரப்படாத எந்தவொரு வெளிச் செல்லும் தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளக்கூடாது.
vii. காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கிடைக்கும் நன்மைகளை மிகைப்படுத்தி பொய்யான வாக்குறுதிகளை வழங்கவோ அல்லது வாடிக்கையாளர்களை கவரவோ கூடாது.

c) ஒரு காப்பீட்டு வலைத்திரட்டி, அங்கீகரிக்கப்பட்ட சரிபார்ப்பாளரால் விற்கப்படும் ஒரு இன்சூரன்ஸ் பாலிசியையும், அவரது விற்பனை மற்றும் குறைபாடுகளை கண்காணிப்பதற்காக, அவருடைய அடையாளத்துடன் இணைத்து தொலைதூர அடிப்படையில் ஆணையத்திற்கு இணைக்கப்படுவார்.

d) ஒரு அங்கீகரிக்கப்பட்ட சரிபார்ப்பாளர் ஒரு வலைத்திரட்டி / டெலிமார்க்கெட்டர்லிருந்து இருந்து மற்றொன்றிற்கு மாறுவதற்கு தன்னுடைய முந்தைய நிறுவனத்திடமிருந்து தடையில்லா சான்றிதழ் அல்லது அதை கோரியபிறகு 30 நாட்களில், இவற்றில் எது முந்தியதோ அதை பெற்றிருக்க வேண்டும்.

## 15. வலைத்திரட்டிகளின் பணிகள் மற்றும் செயல்பாடுகள்

### a) வலை திரட்டி

i. வலை திரட்டிகளுடன் ஒப்பந்தத்தில் கையொழுத்திட்ட காப்பீட்டாளர்கள் தொடர்பான தகவலை காண்பிக்க வேண்டும்.

ii. காப்பீட்டாளர்களுக்கான லீட்ஜெனரேஷன் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

iii. தகவல் அமைப்புகள் (வன்பொருள் மற்றும் மென்பொருள் ஆகிய இரண்டும்) திரட்டல் இணையதளம்(கள்) / போர்ட்டல்கள் லீட்மேனேஜ்மென்ட் சிஸ்டம் ஆகியவற்றை ஹோஸ்ட் செய்யும் டேட்டா சென்டர்கள் ஆகியவை பொதுவாக இந்தியாவில் அவ்வப்போது நடைமுறையில் உள்ள பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்கி இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

iv. 128 பிட் என்க்ரிப்ஷன் போன்ற பாதுகாப்பான லேயர் டேட்டா என்க்கிரப்ஷன் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி லீட்கள் மற்றும் டேட்டாக்களை காப்பீட்டாளர்கள் மற்றும் பிறருக்கு அனுப்பப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

v. காப்பீட்டாளரின் சார்பாக பீரிமியத்தை வசூலிக்க வலை திரட்டி காப்பீட்டாளரால் அங்கீகரிக்கப்படும் போது, காப்பீட்டாளர்களுக்கு பிரீமியத்தை வசூலிப்பதற்கும் மாற்றுவதற்கும் ரிசர்வ் வங்கி உரிமம் பெற்ற கட்டண துறைவாயில்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

vi. திரட்டல் வலைத்தளம்(கள்) / போர்ட்டல்கள், லீட்மேனாஜ்மெண்ட் அமைப்பு ஆகியவற்றை ஹோஸ்டிங் செய்யும் டேட்டா மையங்கள் உட்பட்ட தகவல் அமைப்புகள் (வன்பொருள் மற்றும் மென்பொருள் இரண்டும்) நிதியாண்டிற்கு ஒருமுறை CERT-ல் பட்டியலிடப்பட்ட தகவல் பாதுகாப்பு தணிக்கை நிறுவனங்களால் தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கை சான்றிதழ் / அறிக்கையில் நகலை, அது பெறப்பட்ட 15 நாட்களில் IRDA மற்றும் வலைதிரட்டி ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள காப்பீட்டாளர்களுக்கு சமர்ப்பிப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

### b) வலை திரட்டிகள் செய்யக் கூடாதவை

i. ஏனைய நிதி நிறுவனங்கள் / FMCER அல்லது ஏதேனும் தயாரிப்பு அல்லது சேவையின் தொடர்பான ஏதேனும் தகவலை இணையத்தளங்களில் காட்சிப்படுத்தல் கூடாது.

ii. காப்புறுதித் தயாரிப்பு அல்லது சேவை, பிற நிதி தயாரிப்புகள் அல்லது சேவை / அல்லது வேறு ஏதேனும் தயாரிப்பு அல்லது சேவையுடனும் தொடர்புடைய எந்தவொரு வகையான விளம்பரத்தையும் வலை திரட்டிகளின் வலைத்தளத்தில்

காட்சிப் படுத்துதல் கூடாது.

iii. லீட் ஜெனரேஷன் / தாயரிப்புகளின் ஒப்பீடு போன்றவற்றிற்காக பல வலைத்தளங்களை இயக்கவோ அல்லது பிற அங்கீகரிக்கப்பட்ட / அங்கீகரிக்கப்படாத / உரிமம் பெறாத நிறுவனங்கள் / வலைத்தளங்களுடன் இணைந்திருக்கவோ கூடாது. இது சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டது.

iv. தயாரிப்புகள் முதலியவற்றின் ஒப்பீட்டிற்காக பிற நிதி / வணிக / சந்தைப்படுத்தல் அல்லது விற்பனை அல்லது சேவை நிறுவனங்களின் வலைத்தளங்களை இயக்குநதல் அல்லது பிற சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்துதல் போன்றவை கூடாது.

v. பின்வரும் விதிமுறைகளைத் தவிர காப்பீட்டு வணிகத்தில் ஈடுபட்டுள்ள எந்த ஒரு நிறுவனத்திற்கும் லீட்களை அனுப்பும் நோக்கத்திற்காக வேறு எந்த வகையிலும் செயல்படுதல் கூடாது.

**c) வலை திரட்டிகளின் பெயரிடல்**

i. அனைத்து வலை திரட்டிகளும் இன்சூரன்ஸ் புரோக்கிங் நிறுவனத்தின் பெயரில் "இன்சூரன்ஸ் வலை திரட்டி" அல்லது "இன்சூரன்ஸ் வெப் திரட்டிகள்" என்ற வார்த்தையை கொண்டிருக்க வேண்டும். இது அதன் செயல்பாட்டை பிரதிபலிப்பதற்கும், IRDA உரிமம் பெற்ற காப்பீட்டு வலை திரட்டியை மற்ற உரிமம் பெறாத காப்பீட்டு தொடர்பான நிறுவனங்களிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதற்கும் பொதுமக்களுக்கு உதவும். வலை திரட்டியாக செயற்படுவதற்கான உரிமத்தைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்யும் புதிய விண்ணப்பதாரி கம்பெனிகளின் விண்ணப்பம் பெயரிடல் தேவைப்பாடுகளுக்கு இணங்காத நிலையில் பரிசீலிக்கப்பட மாட்டாது.

ii. ஒவ்வொரு உரிமம் பெற்ற காப்பீட்டு வலை திரட்டியும் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட அதன் பெயர், பதிவு செய்யப்பட்ட மறறும் கார்ப்பரேட் அலுவலகத்தின் முகவரி IRDA உரிம இலக்கம் மற்றும் உரிமத்தின் செல்லுபடியாகும் காலம் ஆகியவற்றை அனைத்து பங்குதாரர்களுடான அதன் கடிதப் போக்குவரத்துகளிலும் காட்சிப் படுத்துதல் வேண்டும்.

iii. காப்பீட்டு வலை திரட்டிகள் ஆணையத்தின் முன் அனுமதியின்றி தமது கடிதப் போக்குவரத்து / விளக்கவுரை / கடிதத் தலைப்புகளில் வேறு எந்தப் பெயரையையும் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டாது.

## 16. ஒரு வலை திரட்டியுடனான காப்பீட்டாளரின் ஒப்பந்தம்

a) ஒரு வலை திரட்டியிடமிருந்து லீட்களை பெற விரும்பும் ஒரு காப்பீட்டாளர், ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட வலை திரட்டியுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் பின்வருவனவற்றுடன் மட்டும் அல்லாமல் அவை தொடர்பான விவரங்களை உள்ளடக்கி இருக்க வேண்டும்.

i. நேரக்கட்டுபாடு மற்றும் லீட் பரிமாற்ற முறை பகிரப்பட வேண்டும்.

ii. ஒழுங்குமுறை மற்றும் பிற சட்டத் தேவைகளுக்கு இணங்கும் பொறுப்பு ஒப்பந்தத்தில் உள்ள இரு தரப்பினரையும் சாரும்.

iii. பகிரப்பட வேண்டிய பல்வேறு தரவு கூறுகளை அடையாளம் காணுதல் (அதாவது பிராஸ்பெக்ட் / வாடிக்கையாளர் (இணைய தளத்தின் பார்வையாளர்) தொடர்பு விவரங்கள் போன்றவை.

iv. ஒப்புக்கொள்ளப்பட்ட தயாரிப்புகளின் பிரீமியம் மற்றும் அம்ச அட்டவணைகளை ஒப்பந்தத்தை முடித்து மற்றும் புதுப்பித்த பிறகு வலை திரட்டிக்கு

வழங்குவதற்கான காலக்கெடு.

b) ஒரு காப்பீட்டாளருக்கும் வலை திரட்டிக்கும் இடையிலான ஒப்பந்தம், வலைத்திரட்டியின் உரிமத்தின் செல்லுபடியாகும் தன்மைக்கு உட்பட்டு, அதன் தேதியிலிருந்து மூன்ற ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்.
c) வலைதிரட்டி ஆணையத்துடனான ஒப்பந்தத்தை ஒப்பந்தமிட்ட பதினைந்து நாட்களுக்குள் ஆணையத்திடம் தாக்கல் செய்ய வேண்டும்.

## 17. வலைத் தளத்தில் தயாரிப்புகள் ஒப்பீட்டை காட்சி படுத்துதல்

a) இணையத் திரட்டிகள் முகப்பு பக்கத்தில் முக்கியமாக வெளிப்படுத்த வேண்டிய ஒரு அறிவிப்பு
   i. பிராஸ்பக்ஷன் / பார்வையாளரின் விவரங்கள் காப்பீட்டாளர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படலாம்.
   ii. காப்பீடு என்பது கோரிக்கையின் பொருள்.
   iii. இந்த இணையதளத்தில் காட்டப்படும் தகவல் எங்கள் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ள காப்பீட்டாளர்களின் தகவல்.

b) வலை திரட்டிகளால் காட்டப்படும் தயாரிப்புத் தகவல் உண்மையானதாகவும் மற்றும் காப்பீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை மட்டுமே அடிப்படையாக கொண்டதாக இருக்கும்.
c) வலை திரட்டிகள் தங்கள் வலைத் தளத்தில் காப்பீட்டு தயாரிப்புகளின் மதிப்பீடுகள், தரவரிசைகள், ஒப்புதல்கள் அல்லது சிறந்த விற்பனையாளர்களைக் காண்பிக்கக்கூடாது. வலை திரட்டிகளின் வலைத்தளங்களின் தகவல்கள் பக்க சார்பற்றதாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டும். காப்பீட்டாளர்கள் அல்லது அவர்களின் தலையங்களில் அல்லது அவர்களின் வலைத் தளங்களில் அல்லது வேறு எந்த இடத்திலும் கருத்து தெரிவிப்பதை அவர்களை தவிர்க்க வேண்டும்.

## 18. ஊதியம்

பின்வரும் விதிமுறைகளுக்கு இணங்க காப்பீட்டாளர்கள் ஊதியத்தை எந்தவொரு வடிவத்திலும் வலை திரட்டுபவர்களுக்கு செலுத்த வேண்டும்.

a) மேலே உள்ள ஒழுங்குமுறை 14 இல் கோடிட்டு காட்டியுள்ளபடி வலை திரட்டி ஒரு LMS-யை நிறுவி மற்றும் லீட்களை காப்பீட்டாளர்களுக்கு அனுப்பும் அத்தகைய லீட்களுக்கு காப்பீட்டாளர் எந்த கட்டணமும் செலுத்தக் கூடாது.
b) வலைத்தளத்தின் ஒப்பீட்டு வரைபடங்களில் வலை திரட்டியால் காட்டப்படும் ஒவ்வொரு தயாரிப்புக்கும் வருடத்திற்கு ஐம்பதாயிரத்திற்கு மிகாமல் கட்டணம்.
c) வலைத் திரட்டி மூலம் பெறப்படும் பாலிசிகளைப் பொறுத்தமட்டில் காப்பீட்டுச் சேவைகளை வழங்குவதற்கு அவுட்சோர்சிஸ் செயல்பாடுகளை மேற்கொள்ளலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில், வலை திரட்டிகளுடனான சேவை ஒப்பந்தங்களில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் வலை திரட்டிகளுக்கு நியாயமான சேவை கட்டணங்களை காப்பீட்டாளர் செலுத்தலாம்.
d) வலைத்திரட்டி அதன் திரட்டல் இணைய தளத்தில் இருந்து உருவாக்கப்படும் லீட்களின் காப்பீட்டை கோருவதற்கு, ஆணையத்தால் கோடிட்டு காட்டப்பட்டுள்ள வழிமுறைகளின்படி, டெலிமார்க்கெட்டிங் / தொலைதூர சந்தைப்படுத்தல் முறைகளை பயன்படுத்தலாம். வலைத்திரட்டியின் அத்தகைய சேவைகள் மூலம்

பெறப்பட்ட பாலிசிக்கு காப்பீட்டாளரால் வழங்கப்படும் ஊதியம் காப்பீட்டாளரால் பணியமர்த்தப்பட்ட எந்தவொரு காப்பீட்டு இடைத்தரகர்களுக்கும் அத்தகைய பாலிசியைப் பெறுவதற்கான ஊதியம் உட்பட, இன்சூரன்ஸ் சட்டம் 1938, பகுதி 42 இன்படி ஆணையத்தால் பரிந்துரைக்கப்படும் வரம்புகளை மீறக்கூடாது.

## 19. அறிவிப்புடன் உரிமத்தை ரத்து செய்தல் அல்லது இடைநிறுத்துதல்

a) ஒரு வலைத் திரட்டியின் உரிமம் பின்வரும் செயல்களுக்காக உரிய அறிவிப்புக்கு பிறகு மற்றும் அவரின் நிலைப்பாட்டை கேட்கும் நியாயமான வாய்ப்பை வழங்கிய பிறகு ரத்து செய்யப்படலாம். அல்லது இடை நிறுத்தப்படலாம்.

i. காப்பீட்டுச் சட்டம் 1938 (1938 இன் 4) காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையச் சட்டம 1999 (1999 இன் 41) ஏற்பாடுகள் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் மற்றம் ஒழுங்கு விதிகளை மீறுதல்.

ii. வலைத் திரட்டிகளின் கடமைகளுக்கு ஏற்ப செயல்படத் தவறியது மற்றும் டெலிமார்கெட்டிங் மற்றும் தொலைதூர சந்தைப்படுத்துதல் நடத்துவதில் தோல்வி.

iii. மேலே குறிப்பிட்டுள்ள நடத்தை விதிகளை கடைபிடிக்க தவறுதல்.

iv. உரிமத்தை பெறுவதற்கு தவறான அல்லது பொய்யான தகவல்களை வழங்குதல் அல்லது உரிமமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்தில் முக்கியமான தகவல்களை வெளிப்படுத்த தவறுதல்.

v. ஆணையத்தால் கோரப்பட்டவாறு காப்பீட்டு வலைத் திரட்டியாக அவரது செயற்பாடுகள் தொடர்பான எந்தவொரு தகவலையும் வழங்க தவறுதல் அல்லது தவறான அல்லது பொய்யான தகவல்களை வழங்குதல் அல்லது உரிமத்தின் செல்லுபடியாகும் காலப் பகுதியில் ஆணையத்திற்கு முக்கியமான தகவல்களை மறைத்தல் அல்லது வெளிப்படுத்த தவறுதல்.

vi. ஆணையத்தால் கோரப்பட்டவாறு காலமுறை வருமானத்தை சமர்பிக்காமல் இருப்பது.

vii. ஆணையத்ததால் நடத்தபடும் எந்தவொரு ஆய்வு விசாரணைக்கும் ஒத்துழைக்காதிருத்தல்.

viii. பாலிசிதாரர்களின் புகார்களைத் தீர்க்க தவறுதல் அல்லது இது தொடர்பாக ஆணையத்திற்கு திருப்திகரமான பதிலை தர தவறுதல்.

ix. பிராஸ்பெக்ட் அல்லது பிராஸ்பெக்டின் இயக்குநர்கள் அல்லது பிற ஊழியர்கள் அல்லது அறிமுகதாராக செயல்படும் எவருக்கும் பணமாகவோ அல்லது பொருளாகவோ தள்ளுபடிகள் அல்லது தூண்டுதல்களில் ஈடுபடுதல்.

x. ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணங்களை செலுத்த தவறுதல்

xi. ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட விதிகளின்படி மூலதனத் தேவைகளை பராமரிக்க தவறுதல்

xii. முதன்மை அதிகாரி விதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதிருத்தல்

xiii. தவறான அழைப்புகள் அல்லது போலியான அழைப்புகள் மூலம் வலை திரட்டி தாங்களாகவே அல்லது அழைப்பு மையங்கள் மூலமாகவோ வணிகத்தை தேடுவதில் ஈடுபடுதல்

b) ஒரு வலைத் திரட்டியை நிறுவுவது என்பது நிறுவனங்கள் அல்லது அவற்றின் கூட்டாளிகளுக்குள் நிதியை திருப்புவதற்காக மட்டுமே என்று ஆணையம் கருதும் சூழ்நிலையில் உரிய விசாரணைகளுக்கு பிறகு வலைத் திரட்டிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யலாம்.

c) உரிய அறிவிப்பு மற்றும் அவருக்கு கேட்கப்படுவதற்காக நியாயமான சந்தர்ப்பத்தை வழங்கிய பின்னர் உரிமம் இடைநிறுத்தப்பட்டுள்ள ஒரு வலை திரட்டி எந்தவொரு புதிய வியாபாரத்தையும் கோரவோ அல்லது உரிமம் வழங்கப்பட்ட வலைத் திரட்டியின் வேறு எந்த செயல்பாடுகளையும், இடைநீக்க ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து இடைநீக்கம் திரும்ப பெறப்படும் காலம் வரை மேற்கொள்ளவோ கூடாது.

## 20. கணக்கு புத்தகங்கள், பதிவேடுகள் போன்றவற்றை பராமரித்தல்

a) ஒவ்வொரு வலைத் திரட்டியும் ஒவ்வொரு கணக்கியல் ஆண்டிற்கும் தயாராக வேண்டும்

i. ஒவ்வொரு கணக்கீட்டுக் காலத்தின் முடிவிலும் உள்ள இருப்புநிலைக் குறிப்பு அல்லது அலுவல்கள் பற்றிய அறிக்கை

ii. அக்காலத்திற்கான இலாப நட்டக் கணக்கு

iii. ரொக்கம் / நிதி புழக்கத்தின் அறிக்கை

iv. ஆணையத்திற்கு தேவைப்டும் வலைத் திரட்டிகளின் வணிகத்தை பற்றிய கூடுதல் அறிக்கைகள்

குறிப்பு : இந்த ஒழுங்கு விதிகளின் நோக்கங்களுக்காக கணக்கீட்டு ஆண்டு என்பது ஒரு வருடத்தின் ஏப்ரல் மாதத்தின் முதல் நாளில் தொடங்கி, பின்வரும் வருடத்தின் மார்ச் மாதம் 31 ஆம் தேதியில் முடிவடையும் 12 மாத காலப்பகுதியாக (அல்லது ஏப்ரல் 1 ஆம் தேதிக்கு பின்னர் ஒரு வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு குறைவாக) இருத்தல் வேண்டும் என்பதுடன் திரட்டல் அடிப்படையில் கணக்குகள் பராமரிக்கப்பட வேண்டும்

b) ஒவ்வொரு வலைத் திரட்டியும் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கைகளின் நகலையும், கணக்கியல் ஆண்டு முடிவடைந்ததிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் தணிக்கையாளரின் அறிக்கையுடன் தணிக்கையாளர்களின் கருத்துகள் அல்லது அவதானிப்புகள் ஏதேனும் இருந்தால் வணிகம், கணக்குகளின் நிலை போன்றவை மற்றும் அத்தகைய அவதானிப்புகள் பற்றிய தகுந்த விளக்கங்கள் ஆணையத்தில் தாக்கல் செய்யப்பட்ட கணக்குகளுடன் இணைக்கப்பட வேண்டும்

c) ஒவ்வொரு வலைத் திரட்டியும் தணிக்கையாளரின் அறிக்கையின் தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் தணிக்கையாளரின் அறிக்கையில் உள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்து அதற்கேற்ப ஆணையத்திற்கு தெரிவிக்க வேண்டும்

d) அனைத்து கணக்கு புத்தகங்கள் அறிக்கைகள் ஆவணம் முதலியன வலை திரட்டியின் தலைமை அலுவலகத்தில் அல்லது அவற்றால் நியமிக்கப்பட்ட கிளை அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு ஆணையத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். மேலும் அவையனைத்தும் அனைத்து வேலை நாட்களிலும் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட இதற்கான அதிகாரிகளுக்கு ஒரு ஆய்வுக்காக கிடைக்கபெறுதல் வேண்டும்

e) இந்த ஒழுங்குமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் வலை திரட்டியால் பராமரிக்கப்படும் அனைத்து மின்னணுப் பதிவுகள், புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள், அறிக்கைகள், ஒப்பந்தக் குறிப்புகள் போன்றவை அவை சம்பந்தப்பட்ட ஆண்டின் இறுதியில் இருந்து குறைந்தபட்சம் பத்து ஆண்டுகளுக்கு பாதுகாக்கப்படவேண்டும். எவ்வாறாயினும் நீதிமன்றத்தின் முடிவுக்காக நிலுவையில் உள்ள சட்ட தகராறுகளின் வழக்குகள் தொடர்பான டிஜிட்டல் பதிவுகள் / ஆவணங்கள் நீதிமன்றத்தால் தீர்க்கப்படும் வரை பராமரிக்கப்பட

வேண்டும்.

f) ஒவ்வொரு வலை திரட்டியும் பின்வருவன தொடர்பான காப்பீட்டாளர் வாரியான பதிவுகளை பராமரிக்க வேண்டும்.
   i. உருவாக்கப்பட்ட மற்றும் அனுப்பப்பட்ட லீட்கள்.
   ii. பாலிசிகளாக மாற்றப்பட்ட லீட்கள்.
   iii. பெறப்பட்ட மற்றும் தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள்.
   iv. ஒப்பீடுக்காக வலைதளத்தில் காட்டப்படும் தயாரிப்புகள்.
   v. காட்சிப்படுத்தப்பட்ட தயாரிப்புகளுக்கு பெறப்பட்ட ஊதியம்.
   vi. பாலிசிகளாக மாற்றப்பட்ட லீட்களுக்கு பெறப்பட்ட ஊதியம்.
   vii. அவுட்சோர்சிஸ் நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட ஊதியம்.
   viii. காப்பீட்டாளர்களிடமிருந்து பெறப்பட வேறு ஏதேனும் ஊதியம் (விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்)

## 21. செல்லுபடியாகும் உரிமம் இல்லாமல் வலை திரட்டியாக செயற்படும் நபருக்கு எதிரான நடவடிக்கை

i. இந்த ஒழுங்கு விதிகள் ஆரம்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் ஆணையத்தால் உரிமம் வழங்கப்பட்டாலொழிய எந்தவொரு நபரும் வலைத் திரட்டியாக செயற்பட முடியாது

ii. இந்த ஒழுங்கு விதிகளின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் உரிமம் இல்லாமல் வலைத் திரட்டியாக செயல்படும் எந்தவொரு நபருக்கு எதிராகவும் எந்த ஒரு குற்றவியல் நடவடிக்கைகளையும் தொடங்குவதற்கு எந்தவித பராபட்சமும் இல்லாமல் ஆணையம் அத்தகைய நபருக்க எதிராக சட்டத்தின் கீழ் தண்டனை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

## 22. இணக்கத்திற்கான சான்றிதழ்

ஒவ்வொரு வலைத் திரட்டியின் முதன்மை அலுவலரும் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் நிதியாண்டின் போது இந்த ஒழுங்கு விதிகளின் அனைத்து ஏற்பாடுகளுக்கும் வலை திரட்டி இணங்கியதை உறுதிப்படுத்தும் சான்றிதழை ஆணையத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

# பிரிவு

# ஆயுள் காப்பீடு

# அத்தியாயம் L-01

# ஆயுள் காப்பீடில் சம்பந்தப்பட்டவை

## அத்தியாய அறிமுகம்

காப்பீடு தொடர்பான சில அம்சங்களை பொதுவான அத்தியாயங்களில் பார்த்தோம். இருப்பினும், ஆயுள் காப்பீடு என்று வரும்போது, பின்வருவதை இன்னும் ஆழமாகப் பார்க்க தேவை.

- ✓ ஒரு சொத்து
- ✓ காப்பீடு செய்யப்பட்ட அபாயம்
- ✓ நிதி சேர்ம கொள்கை
- ✓ ஒப்பந்தம்

இப்போது நாம் ஆயுள் காப்பீட்டின் அம்சங்களை ஆராய்வோம். இந்த அத்தியாயம் மேலே குறிப்பிட்டுள்ள ஆயுள் காப்பீட்டின் பல்வேறு கூறுகளை சுருக்கமாக விளக்குகிறது.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. ஆயுள் காப்பீட்டு வணிகம் -கூறுகள், மனித வாழ்வின் மதிப்பு, நிதிபரிமாற்றம்

B. அபாயங்கள் மற்றும் ஆயுள் காப்பீடு

## A. ஆயுள் காப்பீட்டு வணிகம் -கூறுகள், மனித வாழ்வின் மதிப்பு, நிதிபரிமாற்றம்

**a) சொத்து - மனித வாழ்வின் மதிப்பு (Human Life Value -HLV)**

ஒரு சொத்து என்பது மதிப்பு அல்லது வருவாய் விளைவிக்கும் ஒன்று என்பதை ஏற்கனவே பார்த்தோம். பெரும்பாலான சொத்து வகைகளுக்கான மதிப்பையும் மற்றும், மதிப்பின் இழப்பு அளவுகளை துல்லியமான பண அடிப்படையில் அளவிடமுடியும்.

**எடுத்துக்காட்டு**

ஒரு கார் விபத்து நேரிடும் போது, சேதத்தின் அளவு ரூ. 50,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. காப்பீட்டு நிறுவனம் உரிமையாளருக்கு இந்த இழப்பீடை வழங்கும்.

ஒரு நபர் இறந்தால். நாம் எப்படி இழப்பு தொகையை மதிப்பிடவேண்டும்?

அவரது மதிப்பு 50,000 ரூபாய்களா அல்லது 5,00,000 ரூபாய்களா?

---

வாடிக்கையாளரை சந்திக்கும் போது ஒரு முகவரால் மேலுள்ள கேள்விக்கு பதிலளிக்க முடியவேண்டும். இதன் அடிப்படையில், வாடிக்கையாளருக்கு பரிந்துரை செய்யவேண்டிய காப்பீட்டு தொகையை முகவர் தீர்மானிக்க முடியும் இதுதான் உண்மையில் ஒரு ஆயுள் காப்பீட்டு முகவர் கற்க வேண்டிய முதல் பாடம்.

அதிர்ஷ்டவசமாக, பேராசிரியர் ஹ்யூப்னர் கிட்டத்தட்ட எழுபது ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கிய ஒரு அளவு நம்மிடம் உள்ளது. **மனித வாழ்வின் மதிப்பு (HLV)** என அழைக்கப்படும் இந்த அளவு, உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது.

HLV கருத்து வருமானம் தருகிற சொத்தாக அல்லது உடைமையாக மனித வாழ்வை கருதுகிறது. ஒரு தனிப்பட்டவர் எதிர்பார்க்கும் நிகர எதிர்கால வருவாயின் அடிப்படையில் மனித வாழ்வின் மதிப்பு அளவிடப்படுகிறது. நிகர வருவாய் என்பது, ஒரு நபர் எதிர்காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் சம்பாதிப்பார் என்ற எதிர்பார்க்கிற மதிப்பில் இருந்து, அவர் சுய செலவுக்கு ஆகும் மதிப்பை கழித்து கிடைக்கும் மதிப்பு இது. இது ஊதியம் பெறுபவர் அகாலமாக இறந்தால் ஒரு குடும்பத்திற்கு ஏற்படும் பொருளாதார இழப்பின் அளவை குறிக்கிறது. இந்த வருவாய்கள் மூலதனமாக கருதப்பட்டு, தள்ளுபடி செய்ய பொருத்தமான வட்டி விகிதம் மூலம் கணக்கிடப்படுகின்றன.

பணவீக்கம், ஊதிய உயர்வு, எதிர்கால வருவாய் திறன் போன்றவற்றை கணக்கில் எடுத்துக்கொள்வது உட்பட HLVஐக் கணக்கிடுவதற்கு பல அளவுருக்கள் பயன்படுத்தப்பட்டாலும், HLVஐக் கணக்கிடுவதற்கான எளிய கட்டைவிரல் விதி, வட்டி மூலமாக குடும்பத்திற்குத் தேவைப்படும் ஆண்டு வருமானத்தை வழங்கும் தொகை அளவை தீர்மானிப்பதாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், HLV குடும்பத்தில் சம்பாதிப்பவர் ஒரு குடும்பத்திற்கு பங்களிக்கும் ஆண்டு வருமானத்தை, தற்போது நடைமுறையில் உள்ள வட்டி விகிதம் மூலம் வகுத்தால் கிடைக்கும் மதிப்பாக உள்ளது.

### எடுத்துக்காட்டு

திரு ராஜன் ஒரு ஆண்டில் ரூ 1,20,000 சம்பாதிக்கிறார். மற்றும் தனக்காக ரூ 24,000 செலவழிக்கிறார். அவர் அகாலமாக இறந்தால், அவரது குடும்பம் இழக்கும் நிகர வருவாய் ரூ 96,000- ஆக இருக்கும். வட்டி விகிதத்தை 8% (0.08 என குறிப்பிடலாம்) என்று கருதினால்

**மனித-வாழ்க்கை-மதிப்பு (HLV) = சார்ந்திருப்பவர்களுக்கான வருடாந்திர பங்களிப்பு ÷ வட்டி விகிதம்**

HLV = 96000 / 0.08 = ரூ. 12,00,000


முழு பாதுகாப்பிற்கு எவ்வளவு காப்பீடு தேவை என்பதை HLV தீர்மானிக்க உதவுகிறது. இது எந்த மேல் வரம்பை தாண்டினால் ஆயுள் காப்பீடு ஊகமானதாகி விடும் என்பதையும் சொல்கிறது.

பொதுவாக, காப்பீட்டின் அளவு ஆண்டு வருமானத்தில் சுமார் 10-லிருந்து 15 மடங்கு இருக்க வேண்டும். மேலுள்ள உதாரணத்தில், ரூ 1.2 லட்சம் சம்பாதிக்கும் திரு ராஜன் 2 கோடிக்கு காப்பீடை கோரினால், நமக்கு சந்தேகம் வர வேண்டும். காப்பீடின் உண்மையான அளவு ஒருவரால் எந்த அளவுக்கு காப்பீடை வாங்கி அதற்கான பிரீமியத்தையும் கட்ட முடியும் என்பதை போன்ற காரணிகளை சார்ந்ததாக இருக்கும்.

### B. அபாயங்கள் மற்றும் ஆயுள் காப்பீடு

நாம் மேலே பார்த்த மாதிரி, ஆயுள் காப்பீடு ஒரு சொத்தாக மனித வாழ்வின் மதிப்பை அழிக்கும் அல்லது குறைக்கும் அபாய நிகழ்வுகளுக்கு எதிராக பாதுகாப்பு வழங்குகிறது. இத்தகைய இழப்பு ஏற்படும் சூழ்நிலைகள் மூன்று வகையாக உள்ளன. இவை எல்லாமே சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள்.

**வரைப்படம் 1:சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள்**




மற்றொரு பக்கம், பொது காப்பீடு பொதுவாக - தீ, கடலில் இருக்கும்போது சரக்கு இழப்பு, திருட்டு மற்றும் கொள்ளை மற்றும் மோட்டார் விபத்துக்கள் போன்ற அபாயங்களுக்கு எதிராக காப்பளிக்கிறது. அதில் நல்ல பெயர் மற்றும் நல்லெண்ணத்தின் இழப்பிற்கும் காப்பீடு கிடைக்கிறது. கடப்பாடு காப்பீடு என்று அழைக்கப்படும் காப்பீட்டின் வர்க்கம் மூலம் இவற்றிற்கு காப்பளிக்கப்படுகிறது.

இறுதியாக தனிநபரை பாதிக்கும் அபாயங்கள் உள்ளன. அவை தனிப்பட்ட அபாயங்கள் என குறிப்பிடப்பட்டு, அவற்றிற்கும் பொது காப்பீடு மூலம் காப்பளிக்கப்படுகிறது.

**எடுத்துக்காட்டு**

ஒரு விபத்து காரணமாக ஏற்பட்ட இழப்புகளுக்கு எதிராக விபத்து காப்பீடு காப்பளிக்கிறது.

---

**a)** ஆயுள் காப்பீடு மற்றும் பொது காப்பீடு இடையில் உள்ள சரியான வேறுபாடுகள் என்ன?

| பொது காப்பீடு | ஆயுள் காப்பீடு |
|---|---|
| • ஈட்டுறுதி: தனிநபர் விபத்து காப்பீடை தவிர மற்ற பொது காப்பீட்டு பாலிசிகள், வழக்கமாக ஈட்டுறுதி ஒப்பந்தங்களாகும். அதாவது தீ போல ஒரு நிகழ்வுக்கு பின்னர், காப்பீட்டு நிறுவனம் ஏற்பட்ட இழப்பின் சரியான அளவை மதிப்பிட்டு இழப்பின் அளவிற்கு மட்டுமே இழப்பீடு வழங்கும்- அதிகமாகவும் இல்லை, குறைவாகவும் இல்லை. | • உத்தரவாதம்: ஆயுள் காப்பீட்டு பாலிசிகள் உத்தரவாத ஒப்பந்தங்கள்.<br>• மரணம் நேர்ந்தால் கிடைக்கும் பலன்களின் அளவை ஒப்பந்தத்தின் தொடக்கத்திலேயே, முடிவு செய்யவேண்டும்.<br>• ஒருவர் இறந்துவிட்டால். உறுதி செய்யப்பட்ட ஒரு தொகை நியமித்தவர்கள் அல்லது காப்பீடு பெற்றவரின் பயனாளிகளுக்கு வழங்கப்படும். |
| • கால அளவு: ஒப்பந்தம் பொதுவாக குறுகிய காலம் அல்லது வருடா- | • பொதுவாக நீண்ட கால ஒப்பந்தம் தான் என்றாலும் சில வருடா- |

| | |
|---|---|
| வருடம் புதுப்பிக்கத்தக்க அடிப்படையில் இருக்கும் | வருடம் புதுப்பிக்கத்தக்க ஒப்பந்தங்களும் நடைமுறையில் உள்ளன |
| • நிச்சயமின்மை: பொது காப்பீட்டு ஒப்பந்தங்களில், காப்பீடு செய்யப்படும் அபாய நிகழ்வு நிச்சயமில்லாத ஒன்று. யாருமே வீடு தீப்பற்றி எரியும் அல்லது ஒரு கார் விபத்து ஏற்படும் என்று உறுதியாக கூறமுடியாது. | • ஆயுள் காப்பீட்டில், மரணம் ஏற்படுமா அல்லது இல்லையா என்ற கேள்வியே எழாது. ஒரு நபர் பிறந்தவுடனேயே, அவனுக்கு என்றாவது மரணம் ஏற்படும் என்பதும் உறுதி. நிச்சயமற்றதாக இருப்பது மரண நேரம் மட்டுமே. ஆயுள் காப்பீடு இதனால் அகால மரணத்தின் அபாயத்திற்கு எதிராக பாதுகாப்பை வழங்குகிறது. |
| • நிகழ்தகவு அதிகரிப்பு: பொது காப்பீட்டில், தீ அல்லது பூகம்பம் போன்ற ஆபத்துகள் ஏற்படக்கூடிய நிகழ்தகவு காலத்துடன் அதிகரிப்பதில்லை | • ஆயுள் காப்பீடு வழக்கில் மரணத்தின் நிகழ்தகவு வயதுடன் அதிகரிக்கிறது. |

### b) ஆயுள் காப்பீட்டின் அபாயத்தின் இயற்கை


இறப்பின் நிகழ்தகவு வயதை சார்ந்துள்ளதால் இளம் வயதினருக்கு குறைந்த பிரீமியமும் மற்றும் வயது அதிகமுள்ளவர்களுக்கு அதிக பிரீமியமும் விதிக்கப்படும் என்று பொருள். இதன் ஒரு விளைவாக, ஆரோக்கியமற்ற உறுப்பினர்கள் திட்டத்தில் நீடித்து, வயது அதிகமானாலும் நல்ல ஆரோக்கியமுள்ள நபர்கள் திட்டத்திலிருந்து விலகிவிட்டனர். இதன் காரணமாக காப்பீட்டு நிறுவனங்கள் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொண்டனர். அதனால் தனிநபர்கள் எப்பவுமே பிரீமியங்களை கட்ட முடிகின்ற விலையில் ஒப்பந்தங்களை உருவாக்கும் அவர்களது முயற்சி, லெவல் அதாவது நிலை பிரீமியங்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

### c) நிலை பிரீமியங்கள்

வயதுக்கு ஏற்ப அதிகரிக்காமல் ஒப்பந்த காலம் முழுவதும் மாறாமல் இருக்கிற மாதிரி நிலை பிரீமியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு அர்த்தம் முதல் சில வருடங்களில் சேகரிக்கப்பட்ட பிரீமிய அளவு அந்த இள வயதில் மரண ஈடுக்கோரலுக்கு தேவைப்படும் தொகையை விட கூடுதலாக இருக்கும், ஆனால் வயதாகும் போது சேகரிக்கப்படும் பிரீமிய அளவு மரண ஈடுக்கோரலுக்கு தேவைப்படும் தொகையை விட குறைவாக இருக்கும், நிலை

ப்ரீமியம் இந்த இரண்டு நிலைக்கும் இடையேயுள்ள சராசரியாக உள்ளது. இதற்கு இள வயதில் கட்டப்பட்ட கூடுதல் பிரீமிய தொகை பிந்தைய வயதில் பிரீமிய தொகை பற்றாக்குறையை ஈடு செய்கிறது. நிலை ப்ரீமியத்தின் அம்சம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது

**வரைப்படம் 2: நிலை ப்ரீமியம்**




ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்கள் பொதுவாக நீண்ட கால காப்பீட்டு ஒப்பந்தங்களாக இருக்கும் மற்றும் 10, 20 அல்லது பல ஆண்டுகளுக்கு அமலில் இருப்பதால் நிலை பிரீமியங்கள் தேவை. மறுபுறம், பொது காப்பீடு பொதுவாக குறுகிய கால திட்டமாக உள்ளது மற்றும் ஒவ்வொரு ஆண்டும் காலாவதியாவதால், நிலை பிரீமியம் என்ற கருத்து, பொதுக் காப்பீட்டு பாலிசிகளில் எழுவதில்லை .

**எடுத்துக்காட்டு**

ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டாளரின் வயது அதிகரிக்கும் என்பதால், பாலிசியின் காலப்பகுதியில் இறப்பு (இறப்பு நிகழ்தகவு) அடிப்படையில் காப்பீட்டாளர்களால் நிலை பிரீமியம் விகிதம் கணக்கிடப்படுகிறது. ஒருமுறை முடிவு செய்யப்பட்ட விகிதம் பாலிசியின் முழு காலத்திற்கும் நிலையானதாக இருக்கும்.

### d) அபாய சேர்மத்தின் கோட்பாடு மற்றும் ஆயுள் காப்பீடு

அபாய சேர்மத்தின் கோட்பாடு மற்றும் நிதி பரிமாற்றம் பற்றி ஏற்கனவே விவாதித்தோம். ஆயுள் காப்பீட்டில் சேர்ம கோட்பாடிற்கு இரண்டு குறிப்பிட்ட பங்கு உள்ளது.

i. **ஒரு நபரின் அகால மரணத்தின் விளைவாக எழும் பொருளாதார இழப்பிற்கு எதிரான பாதுகாப்பை இது வழங்குகிறது**. ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தத்தை வாங்கிய பலரின் பங்களிப்புகளை சேர்த்து ஒரு நிதியை உருவாக்குவதன் மூலம் இது செய்யப்படுகிறது.

## e) ஆயுள் காப்பீடு ஒப்பந்தம்

பாலிசி ஆவணம் என்பது **காப்பீட்டு ஒப்பந்தத்தின் சான்றாகும்**, இது **காப்பீட்டின்** அனைத்து விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் விவரிக்கிறது.

ஆயுள் காப்பீட்டு பாலிசியின் காப்பீட்டுத் தொகையை ஒப்பந்தம் குறிப்பிடுகிறது. ஆயுள் காப்பீடு ஒரு **நிதிப் பாதுகாப்பாகக்** கருதப்படுகிறது, ஏனெனில் காப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தம் மூலம் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. ஆயுள் காப்பீடு திறமையாகவும் எச்சரிக்கையாகவும் நிர்வகிக்கப்படுவதையும், கடுமையாக ஒழுங்குபடுத்தப்பட்டு கண்டிப்பாக கண்காணிக்கப்படுவதையும் இந்த உத்தரவாதம் குறிக்கிறது; .

ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்களில், அபாய காப்புடன் சேர்த்து ஒரு சேமிப்பு உறுப்பும் உள்ளதால், அவை பெரும்பாலும் நிதித் தயாரிப்புகளுடன் ஒப்பிடப்படுகின்றன. அவை பாதுகாப்பை விட செல்வத்தை வைத்திருக்கும் ஒரு வழியாகவும் பார்க்கப்படுகின்றன. உண்மையில், பல ஆயுள் காப்பீட்டுத் தயாரிப்புகள் பெரிய பண மதிப்பு அல்லது சேமிப்புக் கூறுகளைக் கொண்டிருக்கின்றன, மற்றும் இது ஒரு தனிநபரின் சேமிப்பில் குறிப்பிடத்தக்க பகுதியை உருவாக்குகிறது. காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து கால காப்பீடை மட்டும் வாங்கி, மீதிப் பிரீமியத்தை அதிக வருமானம் தரும் கருவிகளில் முதலீடு செய்வதும் நல்லது என்று சிலர் வாதிடுகின்றனர்.

பாரம்பரிய பண மதிப்பு காப்பீட்டு ஒப்பந்தங்களுக்கு எதிராக இந்த வாதங்களை கருதுவோம்.

### a) அனுகூலங்கள்

i. வரலாற்றுபடி இது **பாதுகாப்பான மற்றும் பத்திரமான** முதலீடு என நிரூபிக்கப்பட்டுள்ளது. அதன் பண மதிப்புகள் ஒரு குறைந்தபட்ச விகிதத்தில் பலன் கிடைப்பதற்கு உத்தரவாதம் அளிக்கிறது, மேலும் அது ஒப்பந்த காலத்துடன் அதிகரிக்கலாம்.

ii. முறையான பிரீமியம் செலுத்தல்கள் சேமிப்பின் திட்டமிடலை கட்டாயப்படுத்தி மற்றும் **சேமிப்பாளர்களுக்கு தேவைப்படும்** ஒழுக்கத்தை வழங்குகிறது.

iii. காப்பீட்டாளர் முதலீட்டு மேலாண்மையை கவனிப்பதால் இந்த பொறுப்பிலிருந்து **தனிப்பட்டவரை விடுவிக்கிறது.**

iv. **பணப்புழக்கத்தை சுலபமாக்குகிறது**. காப்பீடு பெற்றவர் பாலிசி மீது கடன் எடுக்கலாம் அல்லது பாலிசியை திரும்பி தந்து அதனை பணமாக மாற்றமுடியும்.

v. பண மதிப்பு வகை ஆயுள் காப்பீடு மற்றும் ஓய்வூதிய தொகைகளுக்கு சில **வருமான வரி சலுகைகளை** அனுபவிக்கலாம்.

vi. காப்பீடு பெற்றவர் திவாலானால் அல்லது மரணம் ஏற்பட்டால், கடன் **வழங்கியவர்களின் ஈடுக்கோரல்களிடம் இருந்து** பாதுகாக்கப்படலாம்.

b) **பிரதிகூலங்கள்**

i. ஒப்பீட்டளவில் நிலையான வருமானத்தை தரும் கருவியாக இருந்தாலும், பணவீக்கத்தின் விளைவால் இதுவும் தீவிரமாக பாதிக்கப்படலாம்.

ii. உயர் சந்தைப்படுத்தல் மற்றும் ஆயுள் காப்பீட்டு பாலிசிகளின் மற்ற தொடக்க செலவுகள், முதல் சில ஆண்டுகளில் திரட்டப்படும் ரொக்க அளவை குறைக்கிறது.

iii. உத்தரவாதம் அளிக்கப்பட்டாலும், கிடைக்கும் பயன், மற்ற நிதி சந்தை கருவிகளை விட குறைவாகவே இருக்கலாம்.

**சுய-பரீட்சை 1**

பல்வகைப்படுத்துதல் (**Diversification**) நிதி சந்தைகளில் அபாயங்களை எப்படி குறைக்கிறது?

I. பல ஆதாரங்களில் இருந்து நிதி சேகரித்தல் மற்றும் ஒரே இடத்தில் அவற்றை முதலீடு செய்வது

II. பல்வேறு சொத்து வகைகளில் நிதிகளை முதலீடு செய்வது

III. முதலீடுகள் இடையே நேர வித்தியாசத்தை பராமரித்தல்

IV. பாதுகாப்பான சொத்துக்களில் முதலீடு செய்வது

**சுருக்கம்**

a) ஒரு சொத்து என்பது மதிப்பு அல்லது வருவாய் விளைவிக்கும் ஒன்று

b) HLV கருத்து வருமானம் தருகிற சொத்தாக அல்லது உடைமையாக மனித வாழ்க்கையை கருதுகிறது. அவ்வாறு, ஒரு தனிப்பட்டவர் எதிர்பார்க்கும்

நிகர எதிர்கால வருவாயின் அடிப்படையில் மனித வாழ்வின் மதிப்பை இது அளவிடுகிறது

c) நிலை ப்ரீமியம் என்பது வயதுடன் அதிகரிக்காத மாதிரி நிர்ணயிக்கப்பட்ட ப்ரீமியம் அளவு மற்றும் ஒப்பந்த காலம் முழுவதும் தொடர்ந்து இது நிலையானதாக இருக்கும்.

d) **நிதிபரிமாற்றம் (Mutuality)** என்பது நிதி சந்தைகளில் அபாயத்தை குறைக்கும் முக்கியமான வழிகளில் ஒன்று, மற்றொன்று பல்வகைப்படுத்துதலாக உள்ளது.

e) ஆயுள் காப்பீடின் உத்தரவாத உறுப்பு, அது கடுமையான கட்டுப்பாடு மற்றும் முழுமையான கண்காணிப்பிற்கு உட்பட்டது என்பதற்கும் உறுதியளிக்கிறது.

## முக்கிய வார்த்தைகள்

1. சொத்து
2. மனித வாழ்வின் மதிப்பு
3. நிலை ப்ரீமியம்
4. நிதிபரிமாற்றம்
5. பல்வகைப்படுத்துதல்

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் L-02

# நிதி திட்டமிடல்

## அத்தியாய அறிமுகம்

முந்தைய அத்தியாயங்களில் நாம் ஆயுள் காப்பீட்டில் சம்பந்தப்பட்ட விஷயங்கள் மற்றும் நிதி பாதுகாப்பு வழங்குவதில் அதன் பங்கை பற்றி விவாதித்தோம். தற்போதுள்ள தேவைகள் மற்றும் எதிர்காலத்தில் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்ய தங்களது வருமானம் மற்றும் செல்வத்தை ஒதுக்க தனிநபர்களுக்கு உள்ள கவலைகளில் நிதி பாதுகாப்பும் ஒன்றாகும். இதனால், ஆயுள் காப்பீடை “தனிப்பட்ட நிதி திட்டமிடல்” என்ற பரந்த சூழலில் புரிந்து கொள்ள வேண்டும். நிதி திட்டமிடல் பற்றிய பாடத்தை அறிமுகப்படுத்துவது இந்த அத்தியாயத்தின் நோக்கமாக உள்ளது.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. நிதி திட்டமிடல் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை சுழற்சி

B. நிதி திட்டமிடலின் பங்கு

C. நிதி திட்டமிடல் - வகைகள்

## A. நிதி திட்டமிடல் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை சுழற்சி

### 1. நிதி திட்டமிடல் என்றால் என்ன?


நம்மில் பலர் பணம் சம்பாதிப்பதற்காக உழைப்பதில் நம் வாழ்வின் பெரும் பகுதியை செலவிடுகிறோம். அந்த பணத்தையே நமக்காக வேலை செய்ய வைக்கும் சாமர்த்தியமான வழிதான் நிதி திட்டமிடல்.

**வரையறை**

நிதி திட்டமிடல் என்பது வாழ்க்கையின் இலக்குகளை அடையாளம் கண்டு, அந்த இலக்குகளை நிதி இலக்குகளாக உருமாற்றி, அந்த இலக்குகளை அடைய நிதியை மேலாண்மை செய்யும் செயல்முறை ஆகும்.

நிதி திட்டமிடல், ஒருவரின் எதிர்நோக்க முடியாத தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஒரு வரைபடத்தைத் தயாரிப்பதை குறிக்கிறது. கவனமான திட்டமிடல் மூலம், குறைந்த கவலையுடன் வாழ்க்கையை உருவாக்குவதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. உங்கள் முன்னுரிமைகளை அமைத்து மற்றும் உங்களது பல்வேறு இலக்குகளை அடைய படிப்படியாக வேலை செய்ய முடியும்

வரைப்படம் 1: **இலக்குகளின் வகைகள்**




i. இந்த **இலக்குகள் குறுகிய கால இலக்குகளாக இருக்கலாம்**: ஒரு எல்சிடி டிவி வாங்குவது அல்லது ஒரு குடும்பம் விடுமுறைக்கு செல்வது

ii. இந்த இலக்குகள் **மத்திய-கால இலக்குகளாக இருக்கலாம்**: ஒரு வீடு வாங்குவது அல்லது வெளிநாட்டில் விடுமுறைக்கு செல்தல்


iii. நீண்ட-காலத் இலக்குகளில்: ஒரு குழந்தையின் கல்வி அல்லது திருமணம் அல்லது ஓய்வுக்கு-பிறகுள்ள தேவைகளுக்கு நிதி

iv. ஒதுக்குவது இருக்கலாம்.

## 2. தனிநபரின் வாழ்க்கை சுழற்சி

ஒரு நபர் பிறந்ததில் இருந்து அவரது மரண நாள்வரை வாழ்வில் பல பாத்திரங்களை வகிக்கிறார், அந்த பயணத்தில் அவர் தொடர்ச்சியாக பல்வேறு கட்டங்களில் பல பாத்திரங்களை நிர்வகிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலைகளை கீழே கொடுக்கப்பட்ட வரைபடம் விளக்குகிறது.

### பொருளாதார வாழ்க்கை சுழற்சி




[கற்பவர்][சம்பாதிப்பவர்][துணைவர்][பெற்றோர்][வழங்குநர்] [காலிகூடு(Empty Nestor]][ஓய்வு நாட்கள்]

**வாழ்க்கை கட்டங்கள் மற்றும் முன்னுரிமைகள்**

a) **கற்பவர் (வயது 20 -25 வரை)**: இந்த கட்டத்தில் அறிவு மற்றும் திறன்களை அதிகரிப்பதன் மூலம் எதிர்காலத்திற்காக தயாராகிறார். ஒருவரின் கல்விக்கு நிதி தேவைப்படுகிறது. உதாரணமாக, மதிப்புமிக்க மெடிக்கல் அல்லது மானேஜ்மென்ட் கல்விக்கான அதிக கட்டணத்தை கட்ட முடிவது.

b) **சம்பாதிப்பவர்** (25 **வயதிலிருந்து**): இது வேலை கிடைத்துவிட்ட கட்டம் மற்றும் அவரது தேவைகளை பூர்த்தி செய்ய போதுமான அளவு சம்பாதிக்கிறார் மற்றும் உபரியாக கொஞ்சம் பணம் உள்ளது. இந்த கட்டத்தில் தனிப்பட்டவருக்கு குடும்ப பொறுப்புகள் இருக்கலாம் மற்றும் உடனடியாக எதிர்காலத்தில் எழும் தேவைகளை பூர்த்தி செய்ய சேமிப்பு மற்றும் முதலீடை உருவாக்குவதிலும் ஈடுபடலாம். உதாரணமாக, வேலை செய்யும் ஒரு இளைஞன் வீட்டு கடன் எடுத்து மற்றும் ஒரு

வீட்டில் முதலீடு செய்யலாம்.

c) **துணைவர்** (28 - 30 **வயதில் திருமணத்திற்கு பிறகு**): இது திருமணமான கட்டம் மற்றும் ஒருவருக்கு சொந்த குடும்பம் இருக்கும். இந்த கட்டம் - சொந்த வீடு இருப்பது, கார், நுகர்வோர் சாதனங்கள், குழந்தைகளின் எதிர்காலத்தை திட்டமிடுவது போன்ற பல தேவைகளை கொண்டு வருகிறது.

d) **பெற்றோர்** (28 **-லிருந்து** 35 **வயது வரை**): இந்த வருடங்களில் ஒன்று அல்லது அதிக குழந்தைகளின் பெற்றோராகினற கட்டம் வருகிறது. இந்த வருடங்களில் ஒருவர் தன் குழந்தைகளின் கல்வி மற்றும் ஆரோக்கியத்தை பற்றி கவலைப்பட வேண்டும் - நல்ல பள்ளிகளில் குழந்தைகளை சேர்ப்பது முதலியன.

e) **வழங்குநர் (35 -லிருந்து 55 வயது வரை):** இந்த வயதில் குழந்தைகள் இளைஞர்களாக வளர்ந்துவிட்டனர், மற்றும் அவர்களின் முக்கியமான உயர்நிலை பள்ளி மற்றும் கல்லூரி ஆண்டுகள் வந்துவிடுகின்றன. வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள குழந்தையை தகுதியுடையவர்களாக மாற்றுவதற்கு அதிக கல்விச் செலவு பற்றிய கவலை எழுகிறது. உதாரணமாக, ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்கும் மருத்துவ கல்விக்கு ஒதுக்க வேண்டிய நிதியின் அளவை கருதவும். பல இந்திய வீடுகளில், பெண் குழந்தைகளின் திருமணம் மற்றும் வாழ்க்கையை ஸ்திரமாக்க தேவையான ஏற்பாடுகள் ஒரு முக்கியமான பகுதியாகும். உண்மையில், பெரும்பாலான இந்திய குடும்பங்களின் சேமிப்புக்கு தூண்டிவிடும் ஒரு நோக்கமாக குழந்தைகளின் திருமணம் மற்றும் கல்வி இன்று உள்ளது.

f) **காலிக்கூடு நிலை** (55**-லிருந்து** 65 **வயது வரை**): கூடு காலி என்பதற்கு அர்த்தம் குழந்தைகள் கூடையை [வீட்டை] காலியாக்கி விட்டு இந்த கட்டத்தில் பறந்து சென்றுவிட்டனர். இந்த கட்டத்தில் குழந்தைகளின் திருமணம் முடிந்திருக்கும் மற்றும் சில நேரங்களில் அவர்கள் பெற்றோரை விட்டு விலகி, வேலைக்காக வேறு இடங்களில் குடிபெயர்ந்துவிட்டனர். இந்த கட்டத்தில், ஒருவர் தன் பொறுப்புகளை [வீட்டு கடன் மற்றும் பிற அடமானங்கள் போன்றவை] முடித்திருந்து, தன்

ஓய்விற்காக நிதி சேகரித்திருப்பார் என்று நம்பலாம். இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்ற சிதைக்கும் வியாதிகளும் தாக்கி ஒருவரின் வாழ்க்கையை ஆட்டிப்படைக்க தொடங்கி உடல்நலப் பராமரிப்பு தேவைப்படும் இந்த சமயத்தில், நிதி சுதந்திரம் மற்றும் வருமான பாதுகாப்பு மிகவும் அத்தியாவசியமாகிறது.

g) **ஓய்வு காலம்- அந்தி ஆண்டுகள்** (**வயது** 60 **மற்றும் அதற்கு மேலே**): இது பணியிலிருந்து ஓய்வு பெற்ற வயது மற்றும் இப்போது வாழ்க்கை தேவைகளை பூர்த்தி செய்ய பெரும்பாலும் தன் சேமிப்பிலிருந்து பணத்தை எடுக்கிறார். இங்கே கவனம் ஒருவரது வாழ்வின் இறுதி வரை தன்னுடைய மற்றும் தன் வாழ்க்கை துணையின் தேவைகளை தீர்த்துவைப்பது தான். உடல்நல பிரச்சினைகள், போதுமான வருமானம் இல்லாத நிலை மற்றும் தனிமை ஒருவரின் கவலைகளாக உள்ளன. இந்த கட்டத்தில்தான் ஒருவர் தன் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த முயற்சி செய்யவேண்டும் மற்றும் ஒரு பொழுதுபோக்கை தொடர்வது அல்லது விடுமுறைக்கு அல்லது புனித யாத்திரைக்கு செல்வது போன்ற வாழ்க்கையில் கனவு கண்டும் நிறைவேற்றமுடியாத பல விஷயங்களை அனுபவிக்க வேண்டும். ஒருவர் நேர்த்தியாக வயதான நிலையை எட்டுவாரா அல்லது பற்றாகுறைகளுடனா என்பது அந்த வயதான ஆண்டுகளில் தேவைகளை பூர்த்தி செய்ய எந்த அளவு நிதிகளை அவர் ஏற்பாடு செய்துள்ளார் என்பதை சார்ந்துள்ளது.

மேலே காண்கிற மாதிரி, பொருளாதார வாழ்க்கை சுழற்சியில் மூன்று கட்டங்கள் உள்ளன, மாணவர் அல்லது பணிக்கு முந்தைய கட்டம்; 18 முதல் 25 வயதிற்குள் தொடங்கி 35 முதல் 40 ஆண்டுகள் வரை நீடிக்கும் பணி செய்யும் கட்டம்; ஒருவர் பணி செய்வதை நிறுத்திய பிறகு தொடங்கும் ஓய்வு கட்டம்.

## 3. ஒருவர் ஏன் சேமிக்க வேண்டும் மற்றும் பல்வேறு நிதி சொத்துக்களை வாங்க வேண்டும்?

காரணம் அவர் ஒரு குறிப்பிட்ட பங்கை வகிக்கின்ற தனிப்பட்ட வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், நிதிகள் வழங்கப்பட வேண்டிய பல தேவைகள் வருகின்றன.

**எடுத்துக்காட்டு**

ஒரு நபர் திருமணம் செய்து கொண்டு மற்றும் அவரது சொந்த குடும்பத்தை துவங்கும் போது, அவருக்கு சொந்த வீடு வேண்டியிருக்கலாம். குழந்தைகள் வளரும்போது, அவர்களது உயர்கல்விக்கு நிதி தேவைப்படும். ஒரு தனிப்பட்டவர் நடுத்தர வயதை தாண்டி மேலும் வயதாகும் போது, குழந்தைகளை சார்ந்து அவர்களுக்கு ஒரு சுமையாக மாறாமல் இருக்க, அவரது உடல்நலப் பராமரிப்பு செலவுகளை சந்திக்க தேவையான நிதிகள் மற்றும் ஓய்வூதிய சேமிப்புக்கள் போன்ற கவலைகள் வரும், சுதந்திரமாக மற்றும் மேன்மையுடன் வாழ்வது மிக முக்கியமாகிறது.

---

சேமிப்பு -முதலீடு செயல்முறை இரு முடிவுகளால் உருவாகுவதாக கருதலாம்.

i. **நுகர்வை தள்ளிவைப்பது**: தற்போதைய மற்றும் எதிர்கால நுகர்வுகளுக்கு இடையே வளங்களை ஒதுக்கீடு செய்வது.

ii. **எளிதில் பணமாக்கக்கூடியதை தவிர்த்து** (அல்லது கொள்முதல் சக்தியின் தயார்நிலை) எளிதில் எடுக்கமுடியாததை வாங்குவது. உதாரணமாக, ஒரு ஆயுள் காப்பீட்டு பாலிசியை வாங்குவதன் அர்த்தம், எளிதில் பணமாக்கமுடியாத ஒப்பந்தத்தை வாங்குகிறோம்.

நிதி திட்டமிடலில் இரண்டு முடிவுகள் தேவை. எதிர்கால சேமிப்பிற்கும் திட்டமிட வேண்டும் மற்றும் எதிர்காலத்தில் எழும் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்ய பொருத்தமான சொத்துகளில் புத்திசாலித்தனமாக முதலீடு செய்யவேண்டும்.

### 4. தனிப்பட்ட தேவைகள்

மேலே விவாதிக்கப்பட்ட வாழ்க்கைச் சுழற்சியின் நிலைகளைப் பார்த்தால், மூன்று வகையான தேவைகள் எழுவதைக் காணலாம். இவை மூன்று வகையான நிதி தயாரிப்புகளை உருவாக்குகின்றன.

#### a) எதிர்கால நிதி பரிவர்த்தனைகளை செயலாக்குவது

வாழ்க்கை சுழற்சியின் பல்வேறு கட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட தொடர் செலவுகளை சந்திக்க தேவையான நிதிகளில் இருந்து முதல் தேவைகளின் தொகுப்பு தொடங்குகிறது. அது போன்ற தேவைகளில் இரண்டு வகைகள் உள்ளன:

i. **குறிப்பிட்ட பரிவர்த்தனை தேவைகள்:** நிதிவளங்கள் தேவையான குறிப்பிட்ட வாழ்க்கை நிகழ்வுகளுக்காக ஒதுக்கீடு செய்வதுடன் இணைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக சார்ந்தவர்களின் உயர் கல்வி / திருமண ஏற்பாடுகள்; ஒரு வீடு அல்லது நுகர்வோர் பொருட்களை வாங்கும் தேவைகள்.

ii. **பொதுவான பரிவர்த்தனை தேவைகள்**: எந்த குறிப்பிட்ட நோக்கங்களுக்காகவும் ஓதுக்கீடு செய்யாமல் தற்போதைய நுகர்விலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்ட தொகை - இவை பிரபலமாக 'எதிர்கால ஏற்பாடுகள்' என குறிப்பிடப்படுகிறது

b) **எதிர்பாராத தேவைகளை சந்திப்பது**

எதிர்பாராத நடப்புகள் என்பது பெரிய நிதி தேவைப்படும் எதிர்பாராத வாழ்க்கை நிகழ்வுகள். தற்போதைய வருவாயில் இருந்து இவைகளை பூர்த்தி செய்ய முடியாது மற்றும் முன்கூட்டியே நிதி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இந்த நிகழ்வுகளில், மரணம் மற்றும் இயலாமை அல்லது வேலையின்மை போன்றவை வருமான இழப்பை ஏற்படுத்தும். தீ போன்ற மற்ற நிகழ்வுகள் மூலம், செல்வ இழப்பு ஏற்படலாம்.

அத்தகைய நிகழ்வுகளின் நிகழ்தகவு குறைந்ததாக ஆனால் செலவின் தாக்கம் அதிகமாக இருந்தால், அவற்றை காப்பீடு மூலம் தீர்க்கமுடியும், மாற்றாக, எளிதில் பணமாக்கக்கூடிய இருப்புகளாக சொத்துக்களின் ஒரு பெரிய அளவை ஒதுக்கி, அத்தகைய எதிர்பாராத நிகழ்வுகளை சமாளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

c) **செல்வ குவிப்பு**

குவிப்பு நோக்கம் என்பது சாதகமான சந்தை வாய்ப்புகளில் இருந்து கிடைக்கும் நன்மைகளை லாபகரமாக பயன்படுத்தி அதன் மூலம் செல்வத்தை குவிக்க விரும்பும் முக்கிய நோக்கத்துடன் முதலீடு செய்யும் ஒரு தனிநபரின் ஆசையை குறிக்கிறது. சில தனிநபர்கள் முதலீடு செய்யும் போது எச்சரிக்கையான அணுகுமுறையை எடுக்கலாம், அதே சமயம் சிலர் அதிக லாபம் ஈட்டுவதற்காக அதிக அபாயத்தை எதிர்கொள்ள தயாராக இருக்கலாம். அதிக வருவாயை விரும்புவதற்கான காரணம், அது இன்னும் வேகமாக ஒருவரின் செல்வம் அல்லது நிகர மதிப்பை பெருக்குவதை செயல்படுத்துகிறது. சுதந்திரம், ஊக்கம், சக்தி மற்றும் செல்வாக்கு ஆகியவற்றை தருவதால், செல்வம் விரும்பப்படுகிறது.

## 5. நிதி தயாரிப்புகள்

மேலுள்ள தேவைகளுக்கு பொருந்தும் வகையில் நிதி சந்தையில் மூன்று வகையான தயாரிப்புகள் உள்ளன:

| | |
|---|---|
| **பரிவர்த்தனை தயாரிப்புகள்** | வங்கி சேமிப்புகள் மற்றும் பிற சேமிப்பு வகைகள் ஒருவருக்கு சரியான நேரம் மற்றும் அளவில் போதிய கொள்முதல் சக்தியை (பணப்புழக்கம்) வழங்குகிறது. |
| **காப்பீடு போன்ற தற்செயல் நிகழ்வுகளுக்கான தயாரிப்புகள்** | திடீர் எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்பட்டால் நேரக்கூடிய பெரிய இழப்புகளுக்கு எதிரான பாதுகாப்பை இவை வழங்குகின்றன. |
| **செல்வக் குவிப்பிற்கான தயாரிப்புகள்** | பங்குகள் மற்றும் அதிக லாபம் தரும் கடன் பத்திரங்கள் அல்லது ரியல் எஸ்டேட் போன்ற தயாரிப்புகள் இதற்கான உதாரணங்களாக உள்ளன. இங்கே அதிக பணத்தை சம்பாதிப்பதற்காகவே பணம் முதலீடு செய்யப்படுகிறது |

ஒரு தனிநபருக்கு பொதுவாக மேலுள்ள அனைத்து தேவைகளின் ஒரு கலவை தேவை என்பதால் தயாரிப்புகளின் மூன்று வகைகளுமே அவருக்கு தேவை. சுருக்கமாக கீழுள்ளமாதிரி சொல்லமுடியும்:

i. சேமிக்கும் தேவை - ரொக்க தேவைகளுக்காக

ii. காப்பீடின் தேவை - நிச்சயமின்மைகளுக்கு எதிராக

iii. முதலீடு செய்வதன் தேவை - செல்வம் உருவாக்குவதற்காக

## 6. அபாய வருணனைகள் மற்றும் முதலீடுகள்


வாழ்க்கை சுழற்சியில் பல்வேறு கட்டங்கள் மூலம் ஒரு தனிப்பட்டவர் நகரும் போது, ஒரு இளவயது சம்பாதிப்பவர், நடுத்தர வயதினராக மற்றும் பிறகு பணிசெய்யும் வாழ்வின் இறுதி ஆண்டுகளில் நுழையும் போது, அபாய வருணனை, அல்லது அபாயத்தை எதிர்கொள்ளும் நோக்கிலும் அணுகுமுறையிலும் மாற்றம் உண்டாகிறது.

இளம் வயதில், எதிர்நோக்க பல ஆண்டுகள் உள்ளன என்பதால், ஒருவர் மிகவும் தீவிரமாக மற்றும் முடிந்த அளவுக்கு செல்வத்தை குவிக்கும் பொருட்டு அபாயங்களை எடுக்க தயாராக இருக்கலாம். எனினும் ஆண்டுகள் கடக்கும்போது, ஒருவரது நோக்கம் முதலீடை பாதுகாத்து ஒருங்கிணைப்பதில் இருப்பதால், அவர் மிகவும் விவேகத்துடன் மற்றும் கவனத்துடன் இருப்பவராக மாறலாம்.

இறுதியாக, ஓய்வுபெறும் ஆண்டுகளை நெருங்கும்போது, ஒருவர் மிகவும் எச்சரிக்கையாக மாறுதலை விரும்பாமல் இருக்கலாம். ஓய்வு ஆண்டுகளுக்கு பிறகு செலவுகளுக்கு உதவ ஒரு நிதித்தொகுப்பை (Corpus) உருவாக்குவதில் கவனம் திரும்பிவிடும். அந்த சமயத்தில் தன் குழந்தைகளுக்கு மரண சாசனத்தின் மூலம் சொத்தை பரிசாக வழங்குவது அல்லது தருமத்திற்கு பணத்தை வழங்குவதை பற்றியும் யோசிக்கலாம்

ஒரு முதலீட்டு பாணி கூட அபாய வருணனைக்கு ஈடுகொடுக்கும் வகையில் மாறுகிறது. இது கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**அபாய வருணனை மற்றும் முதலீடு பாணி**




| **சுய-பரீட்சை** 1 |
|---|

முன்னுணரமுடியாத நிகழ்வுகளுக்கு எதிராக பாதுகாப்பை பின்வருவதில் எது வழங்குகிறது?

I. காப்பீடு

II. வங்கி எஃப்டி போன்ற பரிவர்த்தனை பொருட்கள்

III. பங்குகள்

IV. கடன் பத்திரங்கள்

---

## B. நிதி திட்டமிடலின் பங்கு

### 1. நிதி திட்டமிடல்

நிதி திட்டமிடல் செயல்முறையில் ஒரு வாடிக்கையாளரின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகள் கவனமாக கருதப்பட்டு மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டு, அவரது தனிப்பட்ட அபாய வருணனைகள் மற்றும் வருமானம் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், பல்வேறு எதிர்பார்க்கப்பட்ட/ எதிர்பாராத


தேவைகளை பூர்த்தி செய்ய ஒரு வரைபடம் தீட்டப்பட்டு, அவரிடம் பொருத்தமான நிதி பொருட்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

நிதி திட்டமிடலின் ஆக்கக்கூறுகள் பின்வருமாறு:

- ✓ முதலீடு செய்வது - ஒருவர் அபாயத்தை எதிர்கொள்ள விரும்பும் அடிப்படையில் சொத்துக்களை ஒதுக்கீடு செய்வது,
- ✓ அபாய மேலாண்மை,
- ✓ ஓய்விற்கு திட்டமிடல்,
- ✓ வரி மற்றும் எஸ்டேட்டிற்கு திட்டமிடல், மற்றும்
- ✓ ஒருவரின் தேவைகளுக்கு நிதியை திட்டமிடல்

சுருக்கமாக, நிதி திட்டமிடல் 360 டிகிரி திட்டமிடலை ஈடுபடுத்துகிறது.

வரைப்படம் 4: **நிதி திட்டமிடலின் ஆக்கக்கூறுகள்**




## 2. **நிதி திட்டமிடலின் பங்கு**

நிதி திட்டமிடல் ஒரு புதிய ஒழுக்கம் அல்ல. நம் முன்னோர்கள் காலத்திலிருந்தே இது எளிய வடிவில் நடைமுறையில் இருந்தது. அந்த சமயத்தில் வரையறுக்கப்பட்ட சில முதலீடு விருப்பங்களே இருந்தன. சில தசாப்தங்கள் முன்பு பங்கு முதலீடை ஒரு சூதாட்டத்திற்கு ஈடாக பெரும்பாலானவர்கள் கருதினர். சேமிப்பு பெரும்பாலும் வங்கி வைப்பு, தபால் சேமிப்பு திட்டங்கள் மற்றும் பிற நிலையான வருமான கருவிகள் மூலம் செய்யப்பட்டது. இன்று நம் சமூகம் மற்றும் நம் வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பெரிதும் வேறுபட்டவை.. அவற்றில் சில:

**i. சிதைந்த கூட்டு குடும்பங்கள்**

கூட்டு குடும்பம் அப்பா, அம்மா மற்றும் குழந்தைகளை மட்டுமே கொண்ட குடும்பத்திற்கு வழிவிட்டது. குடும்பத்தின் தலைவராக மற்றும் சம்பாதிக்கும் உறுப்பினராக உள்ள ஒருவர் மட்டுமே தன்னுடைய மற்றும் தன் உடனடி குடும்பத்தின் பொறுப்பின் சுமையை தாங்க வேண்டும். இதற்கு குறிப்பிட்ட அளவுக்கு சரியான திட்டமிடல் மற்றும் ஒரு தொழில்முறை நிதி திட்டமிடுபவர் அளிக்கும் ஆதரவு அவசியம்

**ii. பல முதலீட்டு தேர்வுகள்**

செல்வத்தை உருவாக்குவதற்காக பெரிய அளவில் முதலீட்டு கருவிகள் இன்று நமக்கு கிடைக்கின்றன, அவை ஒவ்வொன்றிலும் அபாயம் மற்றும் ஆதாயத்தின் அளவுகள் வெவ்வேறாக உள்ளன. நிதி இலக்குகளை அடைவதை உறுதி செய்ய, ஒருவர் புத்திசாலித்தனமாக தேர்வு செய்து மற்றும் தனது அபாய வெளிப்பாட்டின் அடிப்படையில் சரியான முதலீட்டு முடிவுகளை எடுக்க வேண்டும். நிதி திட்டமிடல் ஒருவரின் சொத்தை ஒதுக்கீடு செய்வதற்கு உதவ முடியும்.

**iii. மாறுகின்ற வாழ்க்கை பாணிகள்**

உடனடி மனநிறைவே தற்போதைய காலத்தின் நோக்கமாக தெரிகிறது. தனி நபர்களுக்கு இப்போது சமீபத்திய மொபைல் ஃபோன்கள், கார்கள், பெரிய வீடுகள், மதிப்புமிக்க கிளப்பின் உறுப்பினர் நிலை முதலியன வேண்டும். இந்த ஆசைகளை பூர்த்தி செய்ய, அவர்கள் நிறைய கடன் வாங்குவதால், வருமானத்தின் ஒரு பெரிய பாகம் கடன்களை செலுத்தவே போய்விடுகிறது மற்றும் சேமிக்கும் நோக்கம் குறைகிறது. நிதி திட்டமிடல் ஒருவரின் செலவை திட்டமிட உதவுவதால் அவர் தேவையற்ற செலவுகளை தவிர்த்து, வாழ்க்கையின் தற்போதைய நிலையை பராமரிக்கவும், காலப்போக்கில் வாழ்க்கை பாணியை மேம்படுத்தும் வழிமுறையாகவும் அது உள்ளது.

**iv. பணவீக்கம்**

பணவீக்கம் என்பது பொருளாதாரத்தில் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் காலப்போக்கில் அதிகரிப்பதை குறிக்கிறது. இதனால் பண மதிப்பில் வீழ்ச்சி ஏற்படுகிறது. இதன் விளைவாக உழைத்து சம்பாதித்த பணத்தின் கொள்முதல் சக்தி குறைகிறது. ஓய்வுபெற்ற காலத்தில் பணவீக்கத்தால் பலத்த பாதிப்பை உண்டாக்கலாம். குறிப்பாக பின்னருள்ள ஆண்டுகளில், பணவீக்கத்தை சமாளிக்கக்கூடிய ஒரு கருவியாக நிதி திட்டமிடல் உறுதியாக உதவ முடியும்.

v. **தற்செயலாக ஏற்படும் சம்பவங்கள் மற்றும் தேவைகள்**

மருத்துவ அவசரநிலைகள் மற்றும் வரிப் பொறுப்புகள் போன்ற பல தேவைகளையும் சவால்களையும் தனிநபர்கள் சந்திக்க நிதி திட்டமிடல் உதவுகிறது. மரணத்திற்கு பிறகு அவரது செல்வம் மற்றும் உடைமைகளை கொண்டுள்ள அவரது எஸ்டேட், அவரது அன்புக்குரியவர்களுக்கு சுமுகமாக சென்றடைவதை தனிநபர்கள் உறுதி செய்ய வேண்டும். நிதி திட்டமிடல், இதனை அடைய வழிவகுக்கிறது.

3. **நிதி திட்டமிடலை தொடங்குவதற்கான சரியான நேரம் எது**?

நிதி திட்டமிடல் என்பது செல்வந்தர்களுக்கு மட்டுமே தேவையானது இல்லை. உண்மையில், திட்டமிடலை உங்கள் முதல் சம்பளத்தை பெறுகின்ற கணமே தொடங்க வேண்டும். எப்போது திட்டத்தை தொடங்கவேண்டும் என்று சொல்லத் தூண்டுதல் புள்ளி எதுவும் இல்லை.

**எனினும் நமக்கு வழிகாட்ட ஒரு முக்கியமான கோட்பாடு உள்ளது - முதலீடுகளின் காலம் எவ்வளவு நீண்டகாலத்திற்கு உள்ளதோ, அவற்றின் பெருக்கமும் அந்த அளவு அதிகமாகும்.**

எனவே, நாம சீக்கிரமே நிதி திட்டமிடலை தொடங்கினால் மட்டுமே. முதலீடுகள் நேரத்தின் அதிகபட்ச நன்மைகளை பெற முடியும். மீண்டும், திட்டமிடல் செல்வந்தர்களுக்கு மட்டுமே தேவை என்று கூறமுடியாது. அது எல்லோருக்குமே பொருந்தும். ஒருவரது நிதி இலக்குகளை அடைய ஒழுக்கமான அணுகுமுறையை பின்பற்ற வேண்டும். ஒரு திட்டமிடாத, திடீர் உந்துதலுடன் செய்யப்படும் நிதி திட்டமிடல் அணுகுமுறைதான் தனிநபர்களை பாதிக்கின்ற நிதி நெருக்கடிகளுக்கான பிரதம காரணங்களில் ஒன்றாக உள்ளது.

**சுய-பரீட்சை** 2

நிதி திட்டமிடலை தொடங்குவதற்கான சரியான நேரம் எது?

I. ஓய்விற்கு பின்னர்

II. முதல் சம்பளத்தை பெற்றவுடனே


III. திருமணத்திற்கு பிறகு

IV. ஒருவர் பணக்காரனாவதற்கு பின்பு

## C. நிதி திட்டமிடல்- வகைகள்

இப்போது ஒரு தனிநபர் செய்ய வேண்டிய நிதி திட்டமிடல் நடைமுறைகளின் பல்வேறு வகைகளை பார்க்கலாம்.

வரைப்படம் 5: **நிதி திட்டமிடல் ஆலோசனை சேவைகள்**




வழங்கப்படுகின்ற பல ஆலோசனை சேவைகளை கருதவும். அத்தகைய ஆறு பகுதிகளை எடுத்துக்கொள்ள போகிறோம்

- ✓ பண திட்டமிடல்
- ✓ முதலீட்டிற்கு திட்டமிடல்
- ✓ காப்பீடிற்கு திட்டமிடல்
- ✓ ஓய்விற்கு திட்டமிடல்
- ✓ எஸ்டேட்டிற்கு திட்டமிடல்
- ✓ வரி திட்டமிடல்

### 1. பண திட்டமிடல்

பண ஓட்ட மேலாண்மையில் இரண்டு நோக்கங்கள் உள்ளன.

i. எதிர்பாராத தேவைகளைப் பூர்த்தி செய்ய எளிதில் பணமாக்கக்கூடிய சொத்துக்களின் இருப்பை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் உட்பட, வருமானம் மற்றும் செலவினங்களின் ஓட்டத்தை நிர்வகிப்பது,

ii. மூலதன முதலீட்டிற்கு தேவையான உபரி பணத்தை ஒழுங்கான முறையில் உருவாக்கி மற்றும் பராமரிக்க வேண்டும்.

பண திட்டமிடலில் பல படிகள் உள்ளன. முதலில், ஒரு வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்து, ஒருவருடைய வருமானம் மற்றும் செலவினப் ஓட்டத்தை பகுப்பாய்வு செய்து, செய்யப்பட்டுள்ள வழக்கமான மற்றும் மொத்தத் தொகைச் செலவுகளை கவனிக்க வேண்டும். நிலையான

செலவினங்களை எளிதாகக் கட்டுப்படுத்த முடியாது, ஆனால் மாறுபடும் செலவுகளைக் குறைக்கலாம், ஒத்திவைக்கலாம் மற்றும் நிர்வகிக்கலாம். அடுத்த படி, ஆண்டு முழுவதும் கிடைக்கும் **எதிர்கால மாத வருமானம் மற்றும் செலவுகளை கணித்து**, இந்த பணத்தை நிர்வகிப்பதற்கான திட்டத்தை வடிவமைப்பது.

பண திட்டமிடல் செயல்பாட்டின் மற்றொரு பகுதி, தன் விருப்பப்படி வருமானத்தை அதிகரிக்கும் உத்திகளை வடிவமைப்பதில் உள்ளது.

**எடுத்துக்காட்டு**

ஒருவர் நிலுவையில் உள்ள தன் கடன்களை சீரமைக்க முடியும்.

நிலுவையில் உள்ள கடன் அட்டை கடன்களை ஒருங்கிணைத்து குறைந்த வட்டியில் வங்கியில் கடன் வாங்கி அவற்றை செலுத்தி தீர்க்கமுடியும்.

அதிக வருமானத்தை ஈட்ட தன் முதலீடுகளை ஒருவர் மறுஒதுக்கீடு செய்யலாம்.

## 2. காப்பீடிற்கு திட்டமிடல்

தங்கள் தனிப்பட்ட நிதி இலக்குகளை அடைவதற்காக தனிநபர்கள் வெளிப்படும் சில அபாயங்களே அவரை அதை அடைய முடியாமல் தடுக்கலாம். அத்தகைய அபாயங்களுக்கு எதிராக போதுமான காப்பளிப்பை வழங்க திட்டமிடுவது தான் காப்பீடு திட்டமிடல்.

இங்குள்ள பணி எவ்வளவு காப்பீட்டு தேவை மற்றும் எந்த வித பாலிசி மிகவும் பொருத்தமானது என்பதை தீர்மானிப்பதில் உள்ளது.

i. குடும்பத்தில் சம்பாதிப்பவருக்கு அகால மரணம் நேர்ந்தால், வருமானம் மற்றும் சார்ந்தவர்களின் செலவு தேவைகளை மதிப்பீடு செய்வதன் மூலம் **ஆயுள் காப்பீடின்** அளவை முடிவு செய்யலாம்.

ii. குடும்பத்தில் மருத்துவ நெருக்கடி ஏற்படும் சமயத்தில் மருத்துவமனையில் ஏற்படக்கூடிய செலவுகளை மதிப்பீடு செய்வதன் மூலம் **உடல்நலக் காப்பீட்டு தேவைகளை** கணக்கிட முடியும்.


a. இறுதியாக , இழப்பு ஏற்படும் அபாயத்தில் இருந்து ஒருவரது வீடு/ வாகனம் / தொழிற்சாலை ஆகியவற்றை பாதுகாக்க தேவையான வகை மற்றும் காப்பளிப்பின் அளவை பொறுத்து **ஒருவரின் சொத்துக்களின் காப்பீடு கருதப்படுகிறது.**

## 3. முதலீட்டு திட்டமிடல்

முதலீடு செய்வதற்கு சரியான வழி என்று எதுவுமில்லை. எது பொருத்தமானது என்பது நபருக்கு நபர் மாறுபடும். ஒரு தனிநபரின் அபாயத்தை எதிர்கொள்ளும் தன்மை, அவரது நிதி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை எந்த கால வரம்பிற்குள் அடைய விரும்புகிறார் என்பதன் அடிப்படையில், மேற்கொள்ளப்படும் மிக பொருத்தமான முதலீடு மற்றும் சொத்து ஒதுக்கீடு உத்திகளை முதலீட்டு திட்டமிடல் என்கிற செயல்முறை நிர்ணயிக்கிறது.

### a) முதலீட்டு அளவுருக்கள்

வரைப்படம் 6: **முதலீட்டு அளவுருக்கள்**




இங்கே முதல் படியாக சில முதலீட்டு அளவுருக்களை வரையறுக்க வேண்டும். இதில் உள்ளவை:

i. **வருவாய்கள்**: பெரும்பாலும் மக்கள் தங்கள் பணத்தை முதலீடு செய்யும் போது கவனிக்கும் மிக முக்கியமான அளவுரு, முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருவாய் ஆகும். காலப்போக்கில் முதலீடுகளில் இருந்து ஒருவரின் செல்வம் எவ்வளவு வேகமாக வளரும் என்பதை வருவாய் விகிதம் தீர்மானிக்கிறது. 'கூட்டு வட்டியின் சக்தியை (Power of compounding'') கருதும்போது வருவாயின் பங்கைப் பாராட்டலாம். உதாரணத்திற்கு, இன்று 8% வட்டி விகிதத்தில் ரூ.1000 முதலீடு செய்தால், ஐந்தாண்டு முடிவில் அது ரூ.1469 ஆகவும், 10 வருட முடிவில் ரூ.2159ஐ எட்டி இது இரட்டிப்பாகிறது. வருவாயை எதிர்பார்ப்பது செல்வத்தை குவிக்க உதவுவதால், அது முதலீட்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அதே நேரத்தில், அதிக

வருவாய் விகிதங்கள் பொதுவாக அதிக அளவு அபாயத்துடன் இருக்கலாம் என்பதை ஒருவர் கவனிக்க வேண்டும். ஒருவர் வருவாய் மற்றும் அபாயத்திற்கு இடையே யோசித்து சரியான பரிவர்த்தனையை செய்ய வேண்டும். இது ஒரு நபரின் அபாய ஏற்பை பொறுத்தது.

ii. **அபாய ஏற்பு**: ஒரு முதலீட்டை வாங்கும் போது ஒருவர் எந்த அளவு அபாயத்தை எதிர்கொள்ள தயாராக இருக்கிறார் என்பதற்கான அளவு.

iii. **கால வரம்பு**: இது ஒரு நிதி நோக்கத்தை அடைய கிடைக்கின்ற நேரத்தின் அளவு. கால வரம்பு எத்தனை அதிகமாக உள்ளதோ, குறுகிய கால கடன் பொறுப்பு பற்றிய கவலையும் அந்த அளவு குறைவாக உள்ளது. இதனால் ஒருவர் நீண்ட கால அடிப்படையில், ஆனால் எளிதில் பணமாக்கமுடியாத மற்றும் அதிக வருவாயை வழங்கும் சொத்துகளில் முதலீடு செய்யலாம்.

iv. **பணப்புழக்கம்**: முதலீடு செய்யும் திறன் வரையறுக்கப்பட்டதாக அல்லது வருமானம் மற்றும் செலவின் ஓட்டம் உறுதியற்றதாக இருக்கும் நபர்கள் அல்லது குறிப்பிட்ட தனிப்பட்ட அல்லது வணிக செலவுகளை சந்திப்பதற்காக முதலீடு செய்யும் நபர்கள் பணப்புழக்கத்தில் [இது மதிப்பை இழக்காமல் முதலீட்டை பணமாக மாற்றும் திறனைக் குறிக்கிறது] அக்கறை காட்டுவார்கள்.

v. **வியாபாரம்**: ஒரு சொத்தை எந்த அளவு எளிதாக வாங்க அல்லது விற்க முடியும்

vi. **பலவகைப்படுத்துதல்**: அபாயங்களை குறைப்பதற்காக எந்த அளவிற்கு முதலீடுகளை பலவகைகளில் அல்லது பரவலாக செய்ய முற்படுகிறார் என்பதை குறிக்கிறது.

vii. வரிகள்: பல முதலீடுகள் சில வருமான வரி சலுகைகளை வழங்குகின்றன மற்றும் பல்வேறு முதலீடுகளின் பிந்தைய-வரி வருமானங்களை ஒருவர் கருத விரும்பலாம்.

### b) பொருத்தமான முதலீட்டு வாகனங்களின் தேர்வு

அடுத்த படி மேலுள்ள அளவுருக்களின் அடிப்படையில் பொருத்தமான முதலீட்டு வாகனங்களை தேர்வு செய்தல் ஆகும். சரியான தேர்வு தனிநபர் எதிர்பார்க்கும் வருவாய் மற்றும் அபாயத்தை சார்ந்துள்ளது.

இந்தியாவில், முதலீடுகளுக்காக கருதக்கூடிய பல்வேறு தயாரிப்புகள் உள்ளன. இதில் அடங்குபவை:

- ✓ வங்கிகள் / நிறுவனங்களின் நிலையான வைப்புகள்,

- ✓ அஞ்சலகத்தின் சிறு சேமிப்பு திட்டங்கள்
- ✓ பங்குகளின் பொது வெளியீடுகள்
- ✓ கடன் பத்திரங்கள் அல்லது மற்ற பத்திரங்கள்
- ✓ பரஸ்பர நிதிகள்
- ✓ ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் யூனிட் இணைக்கப்பட்ட பாலிசிகள் முதலியன

**4. ஓய்விற்கு திட்டமிடல்**

இது ஒரு தனிப்பட்டவர் அவரது ஓய்விற்கு பின்னுள்ள தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான பணத்தின் அளவை தீர்மானிக்கவும் மற்றும் அந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பல்வேறு ஓய்வு திட்டங்களை முடிவு செய்யும் செயல்முறை ஆகும். ஓய்வூதிய திட்டமிடல் மூன்று கட்டங்களை உள்ளடக்கியது-

a) **குவிப்பு:** நிதி குவிக்கும் நோக்கத்திற்காகவே முதலீட்டு பணம் ஒதுக்கப்பட்டு பல்வேறு வகையான உத்திகள் மூலம் முதலீடு செய்யப்படுகிறது.

b) **பாதுகாத்தல்**: பாதுகாத்தல் என்பது ஒரு தனிநபர் வேலை செய்யும் ஆண்டுகளிலேயே அதிகபட்சமாக மூலதனம் பெருகுவதை உறுதி செய்ய ஒரு முதலீடை கடினமாக உழைப்பிற்கு ஈடுபடுத்துவது,.

c) **விநியோகம்**: விநியோகம் என்பது ஓய்வூதியத்திற்குப் பிறகு வருமானத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கார்பஸ் அல்லது அசல் தொகையை திரும்பப் பெறுதல்/ஆண்டுத் தொகை கொடுப்பனவுகளாக மாற்றுவதற்கான உகந்த முறையைக் குறிக்கிறது..

**5. எஸ்டேடிற்கு திட்டமிடல்**

இது அதிகாரப் பகிர்வு மற்றும் ஒருவரின் மரணத்திற்கு பிறகு ஒரு எஸ்டேட்டை மாற்றி தருவதற்கான திட்டம். இதில் பெயர் நியமனம் மற்றும் உரிமை மாற்றம் அல்லது உயில் தயாரிப்பு போன்ற பல்வேறு வழிமுறைகள் உள்ளன. ஒருவரின் உடைமை மற்றும் சொத்துக்கள் அவர் மரணத்திற்கு பிறகு அவர் விருப்பத்திற்கு ஏற்ப சுமூகமாக விநியோகிக்கப்படவேண்டும் மற்றும் / அல்லது பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே இதன் அடிப்படை நோக்கம்.

## 6. வரி திட்டமிடல்

அமலிலுள்ள வரி சட்டங்களை பயன்படுத்தி அதிகபட்ச வரிச்சலுகைகளை பெறும் விதத்தை தீர்மானிக்க மற்றும் வருவாய், செலவுகள் மற்றும் முதலீடுகளை அதிகபட்ச வரி நன்மையை பெறும் வகையில் வரி திட்டமிடல் செய்யப்படுகிறது. இந்தியாவில் உள்ள வரிச் சட்டங்களின்படி, தனிநபர் ஒருவர் அவரது பெயரில், அவரது மனைவி மற்றும் குழந்தைகளின் ஆயுள் காப்பீட்டு பாலிசிக்காக செலுத்தும் ஆயுள் காப்பீட்டு பிரீமியமானது வரி விதிக்கக்கூடிய வருமானத்தை கணக்கிடும் போது வருமான வரிச் சட்டத்தின் 80C பிரிவின் கீழ் வரி விலக்கு பெறத் தகுதி உடையதாகும். தற்போது, இந்த விலக்கு ரூ.1,50,000 வரை நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது. அத்தகைய பாலிசிகளின் முதிர்வுத் தொகைக்கும் (காப்பீட்டுத் தொகை மற்றும் போனஸ்) பிரிவு 10 (10D) இன் கீழ் விலக்கு அளிக்கப்படுகிறது. இதேபோல், பெறுநருக்கு கிடைக்கும் இறப்பு ஈடுக்கோரல் தொகைகளுக்கும் வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இங்குள்ள நோக்கம் வரி ஏய்ப்பு செய்வது இல்லை, வரிகளை குறைப்பதுதான் என்பதை ஒருவர் கவனிக்க வேண்டும்

வாடிக்கையாளர்கள் மற்றும் வருங்கால வாடிக்கையாளர்கள், ஆயுள் காப்பீடு முகவர்களிடம் தங்கள் காப்பீட்டு தேவைகளை பூர்த்தி செய்வதை பற்றி மட்டும் ஆலோசிக்காமல், தங்கள் நிதி தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் ஆதரவு மற்றும் ஆலோசனையை கோருகிறார்கள். மேலே விவரிக்கப்பட்ட நிதி திட்டமிடல் மற்றும் அதன் பல்வேறு வகைகளை பற்றிய சிறந்த அறிவு எந்த காப்பீட்டு முகவருக்கும் பெரிதும் பயன்படும்.

**சுய-பரீட்சை 3**

பின்வருவதில் எது வரி திட்டமிடலின் நோக்கம் இல்லை?

I. அதிகபட்ச வரி நன்மை

II. விவேகமுள்ள முதலீடுகளின் விளைவாக குறையும் வரி சுமை

III. வரி ஏய்ப்பு

IV. வரிச்சலுகைகளின் முழு நன்மைகள்

**சுருக்கம்**

- நிதி திட்டமிடல் என்கிற செயல்முறை என்பது:
  - ✓ ஒருவரது வாழ்க்கை இலக்குகளை அடையாளம் காண்பது

- ✓ இந்த அடையாளங்காணப்பட்ட இலக்குகளை நிதி இலக்குகளாக மாற்றுவது
- ✓ இலக்குகளை அடைய உதவும் வழிகளில் ஒருவரது நிதிகளை மேலாண்மை செய்வது

- தனிநபரின் வாழ்க்கை சுழற்சியின் அடிப்படையில் மூன்று வகையான நிதி பொருட்கள் தேவைப்படுகின்றன. இவை இவ்வாறு உதவுகின்றன:
  - ✓ எதிர்கால நிதி பரிவர்த்தனைகளை செயலாக்குவது
  - ✓ எதிர்பாராத தேவைகளை சந்திப்பது
  - ✓ செல்வ குவிப்பு
- சிதைந்த கூட்டு குடும்பங்கள், தற்போது கிடைக்கின்ற பல முதலீட்டு தேர்வுகள், மாறுகின்ற வாழ்க்கை பாணி போன்ற சமூக இயக்கவியல் மாற்றங்கள் முதலியன நிதி திட்டமிடலுக்கான தேவையை மேலும் அதிகரித்துள்ளன
- உங்கள் முதல் சம்பளத்தை பெறுகின்ற கணமே நிதி திட்டமிடலை தொடங்குவதற்கான மிக சிறந்த நேரம்
- நிதி திட்டமிடல் ஆலோசனை சேவைகளில் உள்ளவை:
  - ✓ பண திட்டமிடல்
  - ✓ முதலீட்டிற்கு திட்டமிடல்
  - ✓ காப்பீடிற்கு திட்டமிடல்
  - ✓ ஓய்வீற்கு திட்டமிடல்
  - ✓ எஸ்டேட்டிற்கு திட்டமிடல்
  - ✓ வரி திட்டமிடல்

---

## முக்கிய வார்த்தைகள்

1. நிதி திட்டமிடல்
2. வாழ்க்கையின் கட்டங்கள்
3. அபாய வருணனை
4. பண திட்டமிடல்

5. முதலீட்டிற்கு திட்டமிடல்
6. காப்பீடிற்கு திட்டமிடல்
7. ஓய்விற்கு திட்டமிடல்
8. எஸ்டேட்டிற்கு திட்டமிடல்
9. பொருந்தக்கூடிய தகவல்
10. வரி திட்டமிடல்

**சுய-பரீட்சைக்கான பதில்கள்**

பதில் **1** - சரியான பதில் விருப்பம் I.

பதில் **2** - சரியான பதில் விருப்பம் II.

பதில் **3** - சரியான பதில் விருப்பம் III.

# அத்தியாயம் L-03

# ஆயுள் காப்பீட்டு தயாரிப்புகள்: மரபுவழி

**அத்தியாய அறிமுகம்**

இந்த அத்தியாயம் உங்களுக்கு ஆயுள் காப்பீடு பாலிசிகளின் உலகத்தை அறிமுகப்படுத்துகிறது. இது பொதுவாக தயாரிப்புகளை பற்றி விவரித்து தொடங்குகிறது, பின்னர் ஆயுள் காப்பீடு தயாரிப்புகளின் தேவை மற்றும் பல்வேறு வாழ்க்கை இலக்குகளை அடைவதில் அவற்றின் பங்கு பற்றியும் ஆராய்கிறது. இறுதியாக சில மரபுவழி ஆயுள் காப்பீடு திட்டங்களை பார்ப்போம்.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

A. ஆயுள் காப்பீட்டு தயாரிப்புகளை பற்றிய கண்ணோட்டம்

B. மரபுவழி ஆயுள் காப்பீடு தயாரிப்புகள்

## A. ஆயுள் காப்பீட்டு தயாரிப்புகளை பற்றிய கண்ணோட்டம்

### 1. ஒரு தயாரிப்பு என்றால் என்ன?

ஒரு தயாரிப்பு என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்வதில் இருந்து தொடங்கலாம். பிரபலமான சொற்களில், ஒரு தயாரிப்பு பொதுவாக சந்தையில் கொண்டு வந்து விற்கப்படும் ஒரு பண்டமாக அல்லது பொருளாக மட்டுமே கருதப்படுகிறது

ஒவ்வொரு தயாரிப்பும் சில பலன்களை வழங்கும் அம்சங்கள் அல்லது பண்புக்கூறுகளின் தொகுப்பு என்பதை புரிந்து கொள்ளவது அவசியம்.

அனைத்து நிறுவனங்களும் தங்கள் தயாரிப்புகளை வாடிக்கையாளர்களை ஈர்க்கும் விதமாக மாற்றி பல்வேறு வகையான அம்சங்கள் மற்றும் நன்மைகளை வழங்குவதன் மூலமும் அவற்றை வேறுபடுத்த முயற்சிக்கின்றன. ஒரு ஆயுள் காப்பீட்டு முகவரின் பங்கு, இந்த அம்சங்கள் மற்றும் நன்மைகளைப் புரிந்துகொண்டு, மற்றவற்றுடன் ஒப்பிடுகையில், தங்கள் நிறுவனங்களின் தயாரிப்புகளின் தனித்துவத்தையும், ஈர்க்கும் அம்சங்களையும் விளக்குவதாகும். .

**எடுத்துக்காட்டு**

கோல்கேட், குளோஸ் அப் மற்றும் பிராமிஸ் ஆகிய அனைத்துமே பற்பசைகள் எனும் ஒரே வகைப்பாட்டில் வரும் பல்வேறு பிராண்டுகளாகும். ஆனால், இவற்றில் ஒவ்வொன்றின் பண்புகளும் மற்றதிலிருந்து மாறுபட்டதாகும்.

---

தயாரிப்புகளின் வகைகளாவன:

i. **தொட்டுணரத்தக்கது**: நேரடியாகத் தொட்டு உணரத்தக்க பருப்பொருட்களைக் குறிக்கிறது (உதாரணமாக ஒரு கார் அல்லது ஒரு தொலைக்காட்சி)

ii. **தொட்டுணர முடியாதது:** தொட்டுணர முடியாத தயாரிப்புகளை மட்டும் குறிக்கிறது.

ஆயுள் காப்பீடு என்பது ஒரு தொட்டுணர முடியாத தயாரிப்பாகும்.

### 2. ஆயுள் காப்பீட்டுத் தயாரிப்புகளின் நோக்கம்.

மனிதர்களிடம் நம்முடைய உற்பத்திப் பூர்வமாக சம்பாதிக்கும் திறனின் ஆதாரமாக உள்ள மிக **உயர்ந்த மதிப்புடைய சொத்தான** - **மனித மூலதனம் உள்ளது**. இருப்பினும், வாழ்க்கையைப் பற்றியும் மனித நலனைப் பற்றியும் ஒரு நிலையற்றதன்மை உள்ளது. மரணம் மற்றும் நோய் போன்றவை

நம்முடைய உற்பத்தித் திறனைப் பாதித்து நம்முடைய மனித மூலதனத்தின் மதிப்பினை வெகுவாகக் குறைக்கலாம் அல்லது சிதைத்து விடலாம். அத்தகைய சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கான பாதுகாப்பை காப்பீடு வழங்குகிறது.

மரணம் அல்லது இயலாமையின் விளைவாக ஒரு தனிமனிதரின் உற்பத்தித் திறனில் ஏற்படும் நிதி மதிப்பு இழப்பிற்கு எதிரான பாதுகாப்பினை ஆயுள் காப்பீடு வழங்குகின்றன. காப்பீடு பெறுபவர் தனது ஆயுள் காப்பீட்டு பாலிசியை எடுத்து தனது முதல் பிரீமியத்தை செலுத்தும் நேரத்தில் காப்பீடு பெறுபவரின் பெயரில் **உடனடி எஸ்டேட் அதாவது மதிப்பினை உருவாக்குவதன் மூலம்** இது நிறைவேற்றப்படுகிறது மற்றும் அதன் நன்மை அவரைச் சார்ந்தவர்கள் அல்லது அன்புக்குரியவர்களுக்குக் கிடைக்கவும் செய்கிறது.

ஒருவர் துரதிர்ஷ்டவசமாக இறந்துவிட்டால், அந்தத் தனிநபரின் நெருங்கிய நபர்களுக்கு மன நிம்மதியையும் பாதுகாப்பையும் ஆயுள் காப்பீடு வழங்குகிறது. அத்தகைய பாதுகாப்பை வழங்குவதை தவிர, ஆயுள் காப்பீடு சந்தையின் பிற தேவைகளான சேமிப்பு, செல்வக் குவிப்பு, பாதுகாப்பு மற்றும் முதலீட்டின் பாதுகாப்பு மற்றும் குறிப்பிட்ட வருவாய் விகிதங்கள் போன்றவற்றையும் பூர்த்தி செய்கிறது.

கடந்த இரு நூற்றாண்டுகளில் திட்டங்களை வழங்குவதில் ஆயுள் காப்பீட்டுத் துறை எண்ணிலடங்காத புதுமைகளைக் கண்டுள்ளது. இறப்புப் பலனை வழங்கும் திட்டங்களிலிருந்து தொடங்கிய இந்தப் பயணத்தில். காலம் செல்லச் செல்ல, என்டோமென்ட், இயலாமை பலன்கள், மோசமான நோய்களுக்கான காப்பு போன்ற பல வாழ்நாள் பலன்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

சமீபத்திய ஆண்டுகளில் செய்யப்பட்ட முக்கிய புதுமைகளில் ஒன்று, சந்தையுடன் இணைக்கப்பட்ட பாலிசிகளை உருவாக்குவது ஆகும், இதில் காப்பீடு செய்தவர் தனது முதலீட்டு சொத்துக்களை தேர்ந்தெடுத்து நிர்வகிப்பதில் பங்கேற்க அழைக்கப்பட்டார். மற்றொரு முக்கிய புதுமை, நெகிழ்வுத்தன்மை கொண்ட பொதியிடப்படாத தயாரிப்புகளின் பரிணாம வளர்ச்சியாகும். இதில் தேவைகளுக்கு ஏற்பவும், தன் வசதிக்கு ஏற்பவும், வாழ்க்கைக் கட்டத்திற்கு ஏற்பவும் பல்வேறு பலன்களையும், விலை கூறுகளையும், பாலிசிதாரர் தேர்ந்தெடுக்கலாம்.

### 3. தகுதி தகவல்

முகவர்கள் மற்றும் தரகர்கள் உள்ளிட்ட காப்பீட்டு இடைத்தரகர்களுக்கு அதிக பொறுப்புணர்வை தருவதற்கும், தவறான விற்பனை நிகழ்வுகளைக் குறைப்பதற்கும், ஐஆர்டிஏஐ ஆனது 'தயாரிப்பின் தகுதி' என்ற கருத்தை

உருவாக்கியுள்ளது. '**தகுதி தகவல்**' என்பது வாய்ப்பாளரின் வயது, வருமானம், குடும்ப நிலை, வாழ்க்கை நிலை, நிதி மற்றும் குடும்ப இலக்குகள், முதலீட்டு நோக்கங்கள், ஏற்கனவே வைத்திருக்கும் காப்பீடு திட்டங்கள் போன்ற தகவலாகும். அதாவது, ஒரு வாடிக்கையாளருக்கு காப்பீட்டு பாலிசியை விற்பதற்கு முன், வாடிக்கையாளரின் தேவைகளுக்கு அந்த தயாரிப்பு தகுதியாக இருப்பதை முகவர் நியாயப்படுத்த வேண்டும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், குறிப்பிட்ட வாய்ப்பாளரின் வயது, வருமானம், குடும்ப நிலை, வாழ்க்கை நிலை, நிதி மற்றும் குடும்ப இலக்குகள், முதலீட்டு நோக்கங்கள், ஏற்கனவே வைத்திருக்கும் காப்பீட்டு திட்டங்கள், காப்பீட்டுத் தேவைகள் போன்ற அபாய வருணனைகளை முகவர் கணக்கில் எடுத்துக்கொள்கிறார் மற்றும் தயாரிப்பு அவருக்கு தகுதியானதா என்பதை தீர்மானிக்கிறார். தயாரிப்பின் தன்மை, பிரீமியத்தின் அளவு, பிரீமியம் செலுத்தும் முறை மற்றும் பாலிசியின் காலம் ஆகியவையும் 'தகுதி' அளவுருக்களின் ஒரு பகுதியாகும்.

சேகரிக்கப்படும் தகுதி தகவல்களில் வாய்ப்பாளர் மற்றும் முகவர் கையொப்பமிட வேண்டும் மற்றும் அது பாலிசி பதிவுகளின் ஒரு பகுதியாக காப்பீட்டாளரால் பாதுகாக்கப்பட்டு, ஆணையத்தின் ஆய்வுக்கு கிடைக்க செய்யப்பட வேண்டும் என்பதையும் ஐஆர்டிஏஜ கட்டாயமாக்குகிறது.

### 4. ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களில் உள்ள ரைடர்கள்

ஒரு ரைடர் என்பது ஒரு மேல்குறிப்பின் மூலம் சேர்க்கப்படும் ஒரு வழிவகையாகும். இது பின்னர் ஒப்பந்தத்தின் அங்கமாக மாறுகிறது. விபத்துக்கள் போன்றதன் காரணமாக கூடுதல் பலனை வழங்குவதற்காக அல்லது ஒரு பாலிசியில் வழங்கப்பட்டுள்ள இறப்புக்கால ஈட்டுத் தொகையை அதிகரிப்பதற்காக ரைடர்கள் பொதுவாக பயன்படுத்தப் படுகின்றன, ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் வழங்குகின்ற பல ரைடர்கள் அவர்களின் சலுகைகளின் மதிப்பை கூட்டுகின்றன. ரைடர்கள் ஒரு நபரின் வெவ்வேறு தேவைகளை ஒரே திட்டத்தில் தனிப்பயனாக்க உதவுகிறது.

நிலையான ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தத்தில் கூடுதல் நன்மைகளாக இயலாமைக்கான காப்பீடு, விபத்துக் காப்பீடு மற்றும் கடுமையான நோய்க் காப்பீடு போன்ற பலன்களை வழங்க ரைடர்கள் வழிவகை செய்கின்றனர். பாலிசிதாரர்கள் கூடுதல் பிரீமியமை செலுத்தி அவற்றைப் பெறலாம்.

**சுய-பரீட்சை** 1

கீழ்க்காண்பவற்றுள் தொட்டுணர முடியாத தயாரிப்பு எது?

I. கார்

II. வீடு


III. ஆயுள் காப்பீடு

IV. சோப்பு

## B. மரபுவழி ஆயுள் காப்பீட்டு தயாரிப்புகள்

நாம் இப்போது சில மரபுவழி ஆயுள் காப்பீட்டு தயாரிப்புகளின் வகைகளை பற்றிப் பார்ப்போம்.

**வரைப்படம் 1:மரபுவழி ஆயுள் காப்பீட்டு தயாரிப்புகள்**




### 1. கால காப்பீட்டுத் திட்டங்கள்

ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே காலக் காப்பீடுகள் செல்லுபடியாகும். கால வரம்பு என்பது ஒரு விமான பயணத்தை நிறைவு செய்யும் குறுகிய காலம் முதல் நாற்பது ஆண்டுகள் வரை நீண்டதாக இருக்கலாம். 65 அல்லது 70 வயதுவரை காப்பு நீட்டிக்கப்படலாம். ஒரு ஆண்டு காலவரம்புக் காப்புகள் ஒரு சொத்து அல்லது அவசரகால காப்பீட்டு ஒப்பந்தத்தைப் போன்றதே. இந்த பாலிசியில் எந்தவித சேமிப்போ அல்லது பண மதிப்போ சேருவதில்லை.

அக்டோபர் 2020 இல், ஐஆர்டிஏஐ ஒரு நிலையான தனிநபர் கால ஆயுள் காப்பீட்டுத் தயாரிப்பான “சரல் ஜீவன் பீமா” (தயாரிப்புப் பெயருடன் காப்பீட்டாளரின் பெயர் முன்னொட்டாக வரும்), இது இணைக்கப்படாத

தனிப்பட்ட தூய அபாய பிரீமியம் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. பாலிசி காலத்தின் போது ஆயுள் காப்பீட்டாளரின் துரதிர்ஷ்டவசமான மரணம் ஏற்பட்டால், இதில் நியமனதாரருக்கு காப்பீட்டுத் தொகையை மொத்தமாக வழங்கும் ஏற்பாடு உள்ளது.

ரெகுலேட்டரால் குறிப்பிடப்பட்ட சில நன்மைகள் மற்றும் ரைடர்களைத் தவிர, வேறு எந்த ரைடர்கள்/பயன்கள்/ விருப்பங்கள்/ மாறுபாடுகள் வழங்கப்பட அனுமதிக்கப்படவில்லை. மேலும், தயாரிப்பின் கீழ் தற்கொலை விலக்கு தவிர வேறு விதிவிலக்குகள் இருக்கக்கூடாது. சரல் ஜீவன் பீமா என்பது பாலினம், வசிக்கும் இடம், பயணம், தொழில் அல்லது கல்வித் தகுதிகள் ஆகிய கட்டுப்பாடுகள் இல்லாமல் தனிநபர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

a) **நோக்கம்**


ஒரு கால காப்பீடு ஆயுள் காப்பீட்டின் முக்கியமான, அடிப்படையான கருத்தை நிறைவேற்றுகிறது. அதாவது, காப்பீடு பெற்றவர் அகாலமாக இறந்து விட்டால், அவருடைய குடும்பத்தைக் கவனித்துக்கொள்ள ஒரு குறிப்பிட்ட தொகை நிரந்தரமாக இருக்கும்.

**ஒரு கால காப்பீட்டுத் திட்டம் ஒரு வருமான மாற்றுத் திட்டமாகவும்கூட செயல்படுகிறது.** இங்கு, பலன் பெறுபவர்களுக்கு அளிக்கப்படும் தொகை ஒரு முன்னரே வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மாதாந்திரமாகவோ, காலாண்டுக்கு ஒரு முறையோ, அல்லது அதுபோன்ற வேறு காலமுறையிலோ அளிக்கப்படலாம்.

b) **இயலாமை**

வழக்கமாக, ஒரு காலக் காப்பீட்டு பாலிசி மரணத்திற்கு மட்டுமே காப்பளிக்கிறது. இருப்பினும், பிரதான பாலிசியின்மீது ஒரு இயலாமை காப்பு ரைடரை வாங்குவது சாத்தியம். அத்தகைய வழக்கில், காலக் காப்பீடு காலத்தின்போது அத்தகைய விரும்பத்தகாத நிகழ்வினால் ஒருவர் துன்பப்பட்டால், பயனாளிகளுக்கோ / காப்பீடு பெற்றவருக்கோ, காப்பீட்டு நிறுவனம் இயலாமை பலனை வழங்கும். காப்பீடு செய்யப்பட்ட நபரின் மரணம் வரை பலன்கள் தொடரும்.

வரைப்படம் 2: **இயலாமை**



### c) ஒரு ரைடராக காலக் காப்பீடு

காலக் காப்பீடு பொதுவாக ஒரு தனித்த பாலிசியாக வழங்கப்படுகிறது. ஆனால், ஒரு பாலிசியின் ரைடராகவும் அது வழங்கப்படலாம்.

| **எடுத்துக்காட்டு** |
| --- |

ஒரு ஓய்வூதியத் திட்டத்துடன் உள்ள ரைடர் ஓய்வூதிய காலம் தொடங்குவதற்கு முன் ஒருவர் இறக்க நேர்ந்தால் இறப்புக் கால நன்மைகளை வழங்குவதற்கான வழிவகையை கொண்டிருக்கலாம்.

### d) மாற்றத்தக்க பண்பு

மாற்றத்தக்க காலக் காப்பீட்டு பாலிசிகள் ஒரு காலக் காப்பீட்டு பாலிசியை எந்த ஒரு புதிய சான்றையும் வழங்காமலேயே 'முழு ஆயுள்' போன்ற ஒரு நிரந்தர திட்டமாக மாற்ற அனுமதிக்கிறது. நிரந்தரமான பண மதிப்புடைய காப்பீட்டைப் பெற விரும்பும் ஆனால், அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் அந்த உயர்ந்த பிரீமியத் தொகையைச் செலுத்த இயலாத நிலையில் உள்ளவர்களுக்கு இந்தச் சலுகை உதவுகிறது. காலக் காப்பீடு நிரந்தர காப்பீடாக மாற்றப்படும்போது அதற்கான புதிய பிரீமிய விகிதம் அதிகமாக இருக்கும்.

### e) சிறப்பு விற்பனை முன்மொழிவு (USP)

மிகக் குறைவான தொகையைக் கொண்டு ஒப்பீட்டளவில் பெரிய ஆயுள் காப்பீட்டுத் தொகையை வாங்குவதற்கு ஒருவருக்கு உதவும் கால காப்பீட்டின் சிறப்பு விற்பனை முன்மொழிவு (USP) என்பது அதன் குறைந்த விலையாகும்.

### f) மாற்றுத் திட்டங்கள்

கால காப்பீட்டில் பல்வேறு மாற்றுத் திட்டங்கள் உள்ளன.

**வரைப்படம் 3: காலக் காப்பிட்டின் பல்வேறு மாற்றுத்திட்டங்கள்**

**காலக் காப்பீடின் பல்வேறு மாற்றுத்திட்டங்கள்**

- குறைகின்ற காலக் காப்பீடு
- அதிகரிக்கும் காலக் காப்பீடு
- பிரீமியம் திரும்ப கிடைக்கும் காலக் காப்பீடு

### i. குறைகின்ற காலக் காப்பீடு

இந்தத் திட்டங்கள் பொதுவாகக் குறைகின்ற காலக் காப்பீட்டைக் கொண்டிருக்கும், இது கடனைச் செலுத்துவதற்கு முன்பே கடன் வாங்கியவர் இறந்துவிட்டால், கடனில் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்கு சமமான இறப்பு நன்மையை இது வழங்குகிறது. இவை பெரும்பாலும் அடமான மீட்பு (அத்தியாயம் 15 இல் விவாதிக்கப்பட்டது) அல்லது கிரெடிட் லைஃப் காப்பீடு என சந்தைப்படுத்தப்படுகின்றன. இந்தத் திட்டங்கள் பொதுவாக கடன் வாங்குபவரின் வாழ்க்கைக்கான குழுக் காப்பீடாக கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு விற்கப்படுகின்றன. அடமான மீட்புக் காப்பீட்டை வாங்குவது பெரும்பாலும் அடமானக் கடனின் நிபந்தனையாக உள்ளது. இத்தகைய திட்டங்கள் வாகன அல்லது பிற தனிநபர் கடன்களுக்கும் கிடைக்கலாம்.

### ii. அதிகரிக்கும் காலக் காப்பீடுகள்

பெயரே குறிப்பிடுவது போன்று, பாலிசி காலம் அதிகரிக்கும் போது இறப்புக்கால நன்மையும் அதிகரிக்கிறது. காப்பீடுத் தொகை அதிகரிப்புடன் பொதுவாக பிரீமியத் தொகையும் அதிகரிக்கலாம்.

### iii. பிரீமியம் திரும்ப கிடைக்கும் காலக் காப்பீடு

பிரிமியத்தைத் திருப்பியளிக்கும் விதத்தில் மற்றொரு வகை காலக் காப்பீட்டுத் திட்டம் (இந்தியாவில் பிரபலமானது) வடிவமைக்கப் பட்டுள்ளது. இதேபோன்ற பிரீமியம் திரும்ப கிடைக்காத காலக் காப்பீட்டுத் திட்டத்தை விட இதில் பிரீமியம் அதிகமாக இருந்தாலும், சில வாடிக்கையாளர்களுக்கு அத்தகைய பாலிசிகள் தேவைப்படலாம்.

### g) தொடர்புடைய சூழல்கள்

கீழ்க்காணும் சூழல்களில் காலக் காப்பீடுகள் அதிக பொருத்தமாக கருதப்படுகின்றன:

i. எங்கே அடமான மீட்பு போல காப்பீட்டின் பாதுகாப்பின் தேவை முழுவதுமே தற்காலிகமானதாக உள்ளதோ.

ii. சேமிப்புத் திட்டத்திற்கு கூடுதல் துணையாக

iii. 'காலத்தை வாங்கு மற்றவற்றை முதலீடு செய்' என்ற தத்துவத்தின் ஒரு பகுதியாக, வாங்குபவர் காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து மலிவான காலக் காப்பீட்டுப் பாதுகாப்பை மட்டுமே நாடுகிறார் மற்றும் பிற கவர்கின்ற முதலீடுகளில் பிரீமியங்களின் வித்தியாசத்தை முதலீடு செய்ய விரும்புகிறார்.

**முக்கியமானவை**

**காலக் காப்பீடு திட்டங்களின் வரம்புகள்:** காலக் காப்பீட்டு திட்டங்கள் குறிப்பிட்ட காலகட்டங்களுக்கு மட்டுமே கிடைக்கும் மற்றும் ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல், அதாவது 65 அல்லது 70க்கு மேல் காப்பீடை தொடர முடியாது

## 2. முழு ஆயுள் காப்பீடு

முழு ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் நிரந்தரக் காப்பீட்டு பாலிசிக்கான உதாரணம். இதில், **காப்பீடு பெற்றவர் எந்தக் காலக் கட்டத்தில் இறந்தாலும் காப்பீடு அளிப்பவர் ஏற்றுக்கொண்ட மரண நன்மையை அளிக்கிறார்,** ஒருவரின் ஆயுள் முழுவதும் அல்லது வரம்புக்குட்பட்ட குறிப்பிட்ட காலத்திற்கு பிரீமியங்கள் செலுத்தப்படலாம்.

முழு ஆயுள் காப்பீட்டுக்கான பிரீமியம் காலக் காப்பீட்டின் பிரீமியங்களைவிட மிக அதிகமாக இருக்கும். ஏனெனில் முழு ஆயுள் காப்பீடு, காப்பீடு பெற்றவர் இறக்கும்வரை நடப்பில் இருந்து, மரண நன்மை எப்போதும் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாலிசிதாரரின் கணக்கில் பண மதிப்பையும் இந்த திட்டம் வழங்குகிறது. அவர் இந்த பண மதிப்பில் இருந்து பாலிசி கடன் வடிவில் பணத்தை எடுக்கலாம் அல்லது அதன் பண மதிப்புக்கு பாலிசியை ஒப்படைப்பதன் மூலம் அதை மீட்டெடுக்கலாம்.

கடன் தொகை பாக்கி இருந்தால், கடன் தொகையும் வட்டியும் கழிக்கப்பட்டு, மரண நன்மை நியமிக்கப்பட்ட பயனாளிகளுக்கு அளிக்கப்படுகிறது.

**அகால மரணம் ஏற்பட்டால் தனது அன்புக்குரியவர்களை பாதுகாக்க விரும்புபவர் மற்றும் கடுமையான நோய் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் இருந்து தனது மூலதனத்தை அழிவதற்கு எதிராக பாதுகாக்க விரும்பும் ஒரு குடும்பத்தின் பிரதான சம்பாதிப்பவராக இருப்பவருக்கு முழு ஆயுள் காப்பீடு ஒரு நல்ல திட்டமாகும்.** தேவைப்பட்டால், முழு ஆயுள் காப்பீட்டின்

பண மதிப்பினை ஓய்வுதிய காலத் தேவைகளுக்கும் அவர் பயன்படுத்தலாம். இந்த வகையில் முழு ஆயுள் காப்பீடு குடும்பச் சேமிப்பிற்கும் அடுத்த தலைமுறைக்கான செல்வத்தை உருவாக்கி அளிப்பதற்கும் முக்கியமான பங்களிப்பினை ஆற்றுகிறது.

### 3. என்டோவ்மென்ட் காப்பீடு

பாலிசியின் காலப்பகுதியில் காப்பீட்டாளர் இறந்தால், காப்பீட்டாளரின் நியமனதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் ஒரு ஒப்பந்தம் இது. காப்பீட்டாளர் காலவரை முடியும்வரை உயிருடன் இருந்தால், காப்பீட்டுத் தொகை காப்பீட்டாளருக்கு வழங்கப்படும்.

தயாரிப்பில் இறப்பு மற்றும் உய்வு நன்மை கூறுகள், இந்த இரண்டுமே உள்ளது. என்டோவ்மென்ட் காப்புறுதி ஒரு பாதுகாப்பான மற்றும் கட்டாய சேமிப்புக் குவிப்பு முறையை வழங்கி ஒருவரின் காப்பீடு மற்றும் சேமிப்பு திட்டங்களை இணைக்கிறது.

முதுமைக்கு எதிராக அல்லது (அ) கல்வி நோக்கங்களுக்காக ஒரு நிதியை வைத்திருப்பது, (ஆ) குழந்தைகளின் திருமணச் செலவுகளைச் சந்திப்பதற்காக அல்லது (சி) அடமானம் (வீட்டுவசதி) கடனைச் செலுத்துவது போன்ற குறிப்பிட்ட நோக்கங்களுக்காக மக்கள் என்டோவ்மென்ட் திட்டங்களை வாங்குகிறார்கள்.

அரசாங்கம் வழக்கமாக செலுத்திய பிரீமியங்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குவதால் இது மக்களை கவர்கிறது. பல என்டோவ்மென்ட் பாலிசிகள் காப்பீடு செய்தவர் தனது ஓய்வை திட்டமிடும் 55 முதல் 65 வயதிற்குள் முதிர்ச்சியடைகின்றன, இதுபோன்ற சந்தர்ப்பங்களில், அத்தகைய பாலிசிகள் ஓய்வூதிய சேமிப்பிற்கு துணைபுரியும்

**மாற்றுத் திட்டங்கள்**: என்டோவ்மென்ட் காப்பீட்டில் உள்ள சில மாற்றுத் திட்டங்கள் கீழே விவரிக்கப்படுகின்றன:

### 4. பண-மீட்சி திட்டம்

பண-மீட்சி பாலிசி இந்தியாவில் பிரபலமான என்டோவ்மென்ட் திட்டமாகும். இதில் காப்பீடுத் தொகையில் ஒரு பகுதியை குறிப்பிட்ட தவணைகளில் பாலிசிக் காலத்தில் திரும்ப வழங்கும் வழிவகை உள்ளது, மீதமுள்ள காப்பீடுத் தொகை பாலிசிக் காலத்தின் இறுதியில் கிடைக்கிறது.

**எடுத்துக்காட்டு**

20 ஆண்டுகளுக்கான பண-மீட்சி திட்டத்தில் காப்பீடுத் தொகையின் 20% தொகை 5, 10 மற்றும் 15 ஆண்டுகளின் முடிவில் உய்வு பலனாகவும், மீதமுள்ள தொகை பாலிசிக் காலத்தின் இறுதியில் அதாவது 20 ஆண்டுகளுக்குப் பின் மீதமுள்ள 40% அளிக்கப்படும். காப்பீடு பெற்றவர் 18 ஆண்டுகள் முடிந்த பின் இறக்க நேரிட்டால், காப்பீடு செய்தவருக்கு ஏற்கனவே முகப்பு மதிப்பில் 60% பலன் அளிக்கப்பட்டிருந்தால் கூட, காப்புறுதி செய்யப்பட்ட முழுத் தொகை மற்றும் போனஸ் (அடுத்த பகுதியில் விளக்கப்பட்டுள்ளது) இறப்புப் பலனாக வழங்கப்படும்.

ரொக்கமாக்கும் (பணம் திரும்பப் பெறும்) அம்சம் இருப்பதால் இந்த பண மீட்சி திட்டங்கள் மிக பிரபலமாக உள்ளன. குறுகிய கால மற்றும் மத்திய-கால தேவைகளை நிறைவேற்ற இவை மிகவும் உதவியாக உள்ளன. பாலிசி காலத்தின்போது எந்த ஒரு கட்டத்திலும் பாலிசிதாரர் இறக்க நேரிட்டால், இத்தகைய திட்டத்தில் முழு மரண நன்மையும் கிடைக்கும்.

### 5. (சமநிலை) அதாவது லாபத்தில் பங்கேற்கும் மற்றும் (சமநிலை அற்ற) அதாவது லாபத்தில் பங்கேற்காத திட்டங்கள்

ஆயுள் காப்பீட்டுத் தயாரிப்புகளை பங்கேற்கும் (சமநிலை) மற்றும் பங்குபெறாத (சமநிலை அற்ற) தயாரிப்புகளாகவும் வகைப்படுத்தலாம். "சமநிலை" என்ற சொல் ஆயுள் காப்பீட்டாளரின் லாபத்தில் பங்குபெறும் பாலிசிகளைக் குறிக்கிறது. மறுபுறம், "சமநிலை அற்ற" என்பது லாபத்தில் பங்கேற்காத பாலிசிகளைக் குறிக்கிறது. இரண்டு வகைகளும் மரபுவழி ஆயுள் காப்பீட்டில் உள்ளன. அனைத்து மரபுவழி திட்டங்களின் கீழும், பாலிசிதாரர்களின் பிரீமியத்திலிருந்து சேகரிக்கப்பட்ட ஆயுள் நிதிகள், ஒழுங்குமுறை விதிமுறைகளின்படி முதலீடு செய்யப்படுகின்றன., **'சமநிலை'** தயாரிப்புகளைத் தேர்ந்தெடுக்கும் பாலிசிதாரர்களுக்கு காப்பீட்டாளரால் உருவாக்கப்படும் உபரிகளில் (போனஸ்) ஒரு பங்கை உத்தரவாதத் தொகையுடன் கூடுதலாகப் பெறும் தகுதி உள்ளது. இவை 'லாபத்துடன் உள்ள' திட்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

### 6. லாபத்தில் பங்கேற்காத தயாரிப்புகள்

லாபத்துடன் இணைக்கப்படாத [**சமநிலை அற்ற**] திட்டங்களை வாங்கும் பாலிசிதாரர்களுக்கு ஒப்பந்தத்தின் தொடக்கத்திலேயே நிலையான மற்றும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பலன்கள் வழங்கப்படும், மற்றும் அதற்கு மேல் எதுவும் கிடைக்காது. பங்கேற்காத தயாரிப்புகள் 'இணைத்த தளம்' அல்லது

'இணைக்காத தளம்' ஆகியவற்றின் கீழ் வழங்கப்படலாம். இவை ‘லாபங்களுடன் இல்லாத’ திட்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

**எடுத்துக்காட்டு**

ஒருவரிடம் உள்ள 20 ஆண்டுகளுக்கான என்டோவ்மென்ட் திட்டத்தில். ஒவ்வொரு ஆண்டும் காப்பீடுத் தொகையில் 2% உத்தரவாதமளிக்கப்பட்ட கூடுதல் தொகை சேர்க்கப்படுகிறது. இதனால், முதிர்வுப் நன்மைகள் காப்பீட்டுத் தொகையுடன் சேர்த்து மொத்தமாக 40% கூடுதலாகும்.

---

மரபுவழி பங்கேற்காத பாலிசிகளின் மீது அமலாகின்ற ஐஆர்டிஐஏ-வின் வழிகாட்டுதல், அந்த பாலிசிகளில் ஒரு குறிப்பிட்ட நிகழ்வு நேர்ந்தால் கிடைக்கும் நன்மைகளை வெளிப்படையாக ஆரம்பத்திலேயே அறிவிக்க வேண்டும் மற்றும் எந்த குறியீட்டுடனும் அவை இணைக்கப்படாது என்பதை வலியுறுத்துகின்றன. இது பாலிசி காலத்தில் குறிப்பிட்ட கால இடைவெளியில் சேர்க்கப்பட்ட ஏதாவது கூடுதல் நன்மைகளுக்கும் பொருந்தும். அதாவது, பாலிசி எடுக்கும்போதே இந்த பாலிசிகளில் கிடைக்கும் வருவாய் தெரிவிக்கப்பட வேண்டும்.

**முக்கியமானவை**

இறப்பு நன்மைகள் அவ்வப்போது வழங்கப்படும் ஐஆர்டிஏஐ இன் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டது. தற்போது, மரபுவழி தயாரிப்புகள் தொடர்பான ஐஆர்டிஏஐ (இணைக்கப்படாத) தயாரிப்புகள் ஒழுங்குவிதி, 2019 இன் புதிய ஒழுங்குவிதி 9 இன் படி, குறைந்தபட்ச இறப்பு பாதுகாப்பு பின்வருமாறு:

இணைக்கப்படாத அனைத்து தனிநபர் ஆயுள் காப்பீட்டுத் தயாரிப்புகளுக்கும், பாலிசியின் முழு காலத்திலும் கிடைக்கும் இறப்புக்கான குறைந்தபட்ச காப்பீட்டுத் தொகையானது, வரையறுக்கப்பட்ட அல்லது வழக்கமான பிரீமியம் தயாரிப்புகளை பொறுத்தவரை வருடாந்திர பிரீமிய தொகையின் 7 மடங்கிற்கு குறைவாகவும், ஒற்றை பிரீமியம் தயாரிப்புகளை பொறுத்தவரை 1.25 மடங்கு பிரீமியத்தை விட அதிகமாகவும் இருக்க வேண்டும்.

பங்கேற்கும் தயாரிப்புகளுக்கு, இறப்பில் உறுதியளிக்கப்பட்ட காப்பீடுத் தொகையோடுகூட பாலிசியில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்ற போனஸ் / கூடுதல் நன்மைகள் ஏற்கனவே செலுத்தப்படாதிருந்தால் இறந்த நாள்வரை சேர்ந்த தொகை செலுத்தப்பட வேண்டும். சுருக்கமாக சொன்னால், பங்கேற்கும் மற்றும் பங்கேற்காத திட்டங்கள் என இரண்டு மாறுபட்ட வகைகள் உள்ளன.

i. பங்கேற்கும் பாலிசிகளில் நிதியின் செயல்திறனொடு போனஸ் இணைக்கப்படுகிறது. இது அறிவிக்கப்படுவதோ அல்லது

உத்தரவாதமளிக்கப்படுவதோ இல்லை. ஆனால், **போனஸ் அறிவிக்கப்பட்டு விட்டால் அது ஒரு உத்தரவாதமாகிறது**. இது பாலிசிதாரர் இறந்தாலோ அல்லது முதிர்வு பலனாகவோ அளிக்கப்படுகிறது. **மாற்றியமைப்பு போனஸ் (reversionary bonus)** எனவும் இந்த போனஸ் அழைக்கப்படுகிறது.

ii. **பங்கேற்காத பாலிசிகளைப்** பொறுத்தவரை, பாலிசிகளில் கிடைக்கும் வருவாய்கள் பாலிசியின் தொடக்கத்திலேயே வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கும்.

## 7. ஓய்வூதிய திட்டங்கள் மற்றும் ஆண்டுத்தொகைகள்

ஓய்வூதியத் திட்டம் என்பது பொதுவாக ஒரு நபர் பணி செய்யும் ஆண்டுகளில் ஒரு நிதியில் செலுத்தப்படும் பணமாகும், மேலும் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, காலமுறை கொடுப்பனவுகளாக அந்த நபருக்கு ஆதரிப்பதற்கு பணம் வழங்கப்படுகிறது.

ஓய்வூதியத் திட்டங்கள் குழுவிற்காக (பொதுவாக முதலாளியால் வழங்கப்படுவது) அல்லது தனிப்பட்ட அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒரு குழு ஓய்வூதியமானது "வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டமாக" இருக்கலாம், அதில் ஒரு நபருக்கு ஒரு நிலையான தொகை தொடர்ந்து வழங்கப்படும் அல்லது "வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாக" இருக்கலாம், இதன் கீழ் ஒரு நிலையான தொகை முதலீடு செய்யப்படுகிறது, மற்றும் இது ஓய்வு பெறும் வயதில் கிடைக்கிறது. ஓய்வூதியங்கள் அடிப்படையில் ஆயுள் முழுவதற்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஆண்டுத்தொகைகள் ஆகும். இதன் மூலம் நீண்ட ஆயுளுக்கான அபாயத்திற்கு எதிராக காப்பீடு செய்யப்படுகிறது. ஒரு பணியாளரின் நலனுக்காக முதலாளியால் உருவாக்கப்பட்ட ஓய்வூதியம் பொதுவாக தொழில்முறை அல்லது முதலாளி ஓய்வூதியம் என குறிப்பிடப்படுகிறது. உறுப்பினர் கணக்கில் உள்ள பணம் ஓய்வூதிய பலன்களை வழங்க பயன்படுத்தப்படுகிறது, பொதுவாக ஆண்டுத்தொகை திட்டத்தை வாங்குவதன் மூலம் வழக்கமான வருமானம் அவருக்கு கிடைக்கிறது. ஆண்டுத்தொகை திட்டத்தில் ஒருவரின் பங்களிப்புகள் ஒருவரின் வருமானத்தை ஆயுள் முழுவதும் நீடிக்கும் காலமுறை கொடுப்பனவுகளாக மாற்றப்படுகின்றன

காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியத் திட்டங்களை வாங்குவதன் மூலம் தனிநபர்கள் ஓய்வூதியப் பலன்களைப் பெறலாம். ஓய்வூதியத் திட்டங்கள் **குவிப்பு அல்லது ஒத்திவைக்கப்பட்ட அடிப்படையில்** இருக்கலாம், இது ஒரு நபரை இரண்டு வழிகளில் பங்களிக்க அனுமதிக்கிறது,

(i) ஒரு தொகையை மொத்தமாக அல்லது (ii) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பணத்தை செலுத்தினால்; அதன் மூலம் அவர் விரும்பிய வயது/தேதியில் இருந்து ஓய்வூதியம் பெற முடியும் ('வெஸ்டிங்' அதாவது பங்கை வழங்கும் தேதி என அழைக்கப்படுகிறது). ஒருவர் மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு அல்லது வருடாந்திர முறைகளில் ஓய்வூதியம்/ ஆண்டுத்தொகைகளைப் பெறலாம். உடனடி ஆண்டுத்தொகை எனப்படும் ஓய்வூதியத் திட்டங்கள், மொத்தத் தொகையைச் செலுத்துவதன் மூலம், வாங்கிய அடுத்த மாதத்திலிருந்து, **உடனடி அடிப்படையில்** கிடைக்கும்.

இந்தியக் காப்பீட்டுத் துறையில் பல ஒத்திவைக்கப்பட்ட மற்றும் உடனடி ஆண்டுத்தொகை தயாரிப்புகள் ஆயுள் காப்பீட்டாளர்களால் விற்கப்படுகின்றன. ஒவ்வொரு தயாரிப்பிலும் அதன் சொந்த அம்சங்கள், விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் வருடாந்திர விருப்பங்கள் உள்ளன.

**சரல் பென்ஷன்:** காப்பீட்டாளர்கள் மத்தியில் சீரான தன்மையை உறுதி செய்யவும், ஆண்டுத்தொகை திட்டங்களைப் பற்றி சந்தையில் உள்ள குழப்பத்தை குறைக்கவும், சராசரி வாடிக்கையாளரின் தேவைகளை பரந்த அளவில் பூர்த்தி செய்கின்ற ஒரு தயாரிப்பை கிடைக்கச் செய்யவும், எளிய அம்சங்கள், தரநிலை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய ஒரு உடனடி ஆண்டுத்தொகை தயாரிப்பை தனிநபர் (குழுவிற்கு அல்ல) அடிப்படையில் அறிமுகப்படுத்துமாறு அனைத்து ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களையும் ஜனவரி 2021 இல், ஐஆர்டிஏஐ கட்டாயப்படுத்தியது, வாடிக்கையாளர்கள் தகவலறிந்த தேர்வை செய்வதை இத்தகைய தரநிலை தயாரிப்பு எளிதாக்குகிறது, காப்பீட்டாளர்கள் மற்றும் காப்பீடு செய்தவர்களிடையே நம்பிக்கையை மேம்படுத்துகிறது மற்றும் தவறான விற்பனை மற்றும் சாத்தியமான மோதல்களையும் குறைக்கிறது.

தரநிலை தனிநபர் உடனடி ஆண்டுத்தொகை தயாரிப்பு, காப்பீட்டாளரின் பெயர் முன்னொட்டுடன் "சரல் பென்ஷன்" என்று அழைக்கப்படுகிறது. தயாரிப்பு இரண்டு (மற்றும் இரண்டு மட்டுமே) ஆண்டுத்தொகை விருப்பங்களை பின்வருமாறு வழங்குகிறது:

a) கொள்முதல் விலை 100% வழங்கப்படும் விருப்பத்துடன் ஆயுள் முழுவதற்குமான ஆண்டுத்தொகை; மற்றும்

b) கூட்டு வாழ்க்கை ஆண்டுத்தொகை திட்டம் முதன்மை பாலிசிதாரர் மரணத்திற்கு பிறகு இரண்டாம் நிலை பாலிசிதாரருக்கு 100% ஆண்டுத்தொகை ஆயுள் முழுவதும் கிடைக்கிறது மற்றும் கடைசியாக

உயிர் பிழைத்தவர் இறந்தவுடன் 100% கொள்முதல் விலை திருப்பி வழங்கப்படும்.

ஆண்டுத் தொகை செலுத்தும் முறை மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்திர அடிப்படையில் இருக்கும். விவரங்கள் ஐஆர்டிஏஐ இன் இணையதளத்தில் பின்வரும் இணைப்பில் கிடைக்கிறது - https://www.irdai.gov.in/ADMINCMS/cms/whatsNew_Layout.aspx?page=PageNo4353&flag=1

**சுய-பரீட்சை 2**

முழு ஆயுள் காப்பீட்டிற்கான ப்ரீமியம் கால காப்பீடிற்கு செலுத்தப்படும் பிரீமியத்தை விட __________ ஆகிறது.

I. அதிகமாக

II. குறைவாக

III. சமமாக

IV. கணிசமாக அதிகமாக

---

**சுருக்கம்**

- ஒரு தனிமனிதரின் உற்பத்தித் திறனுக்கான நிதி மதிப்பு இழப்பிற்கு எதிராக பாதுகாப்பினை அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கோ அல்லது அவருக்கே ஆயுள் காப்பீடு தயாரிப்புகள் வழங்குகின்றன.
- அடிப்படையாக, ஒரு தனிநபருக்கு ஏதாவது விரும்பத்தகாத நிகழ்வு நடந்தால் அவருடைய நெருங்கிய நபர்களுக்கு மன நிம்மதியையும் பாதுகாப்பையும் ஆயுள் காப்பீடு வழங்குகிறது.
- ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே காலக் காப்பீடுகள் செல்லுபடியாகும் காப்பை வழங்குகின்றன
- மிகக் குறைவான தொகையைக் கொண்டு ஒப்பீட்டளவில் பெரிய ஆயுள் காப்பீட்டுத் தொகையை வாங்குவதற்கு உதவும் கால வரம்புக் காப்பீட்டின் சிறப்பு விற்பனை முன்மொழிவு (USP) என்பது அதன் குறைந்த விலையாகும்.
- பாதுகாப்பு ஒரு தற்காலிகமான காலக் கட்டத்திற்கு மட்டுமே கிடைப்பதால், காலக் காப்பீட்டுத் திட்டங்கள் தற்காலிக காப்பீடுகளுக்கான

உதாரணங்களாகும். முழு ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் நிரந்தரக் காப்பீட்டுத் திட்டத்திற்கான உதாரணங்களாகும்.

## முக்கிய வார்த்தைகள்

1. காலக் காப்பீடு
2. முழு ஆயுள் காப்பீடு
3. என்டோமென்ட் காப்பீடு
4. பண-மீட்சி பாலிசி
5. சமநிலை மற்றும் சமநிலை-இல்லாத திட்டங்கள்
6. மாற்றியமைப்பு போனஸ்

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

பதில் **1** -சரியான பதில் விருப்பம் III.

பதில் **2** -சரியான பதில் விருப்பம் I.

# அத்தியாயம் L-04

# ஆயுள் காப்பீட்டு தயாரிப்புகள் : மரபு -சாராத

**அத்தியாய அறிமுகம்**

இந்த அத்தியாயம் உங்களுக்கு மரபுசாராத ஆயுள் காப்பீடு பாலிசிகளின் உலகத்தை அறிமுகப்படுத்துகிறது. முதலில் மரபுவழி ஆயுள் காப்பீட்டுத் தயாரிப்புகளின் வரம்புகளை ஆராய்வதன் மூலம் தொடங்கி, பின்னர் ஆயுள் மரபுசாராத காப்பீடு தயாரிப்புகளின் ஈர்ப்பு சக்தியை பார்ப்போம். இறுதியாக நாம் சந்தையில் கிடைக்கும் சில மரபுசாராத ஆயுள் காப்பீடு திட்டங்களை பார்ப்போம்.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

A. மரபுசாராத காப்பீடு தயாரிப்புகள் பற்றிய கண்ணோட்டம்

B. மரபுசாராத ஆயுள் காப்பீடு தயாரிப்புகள்

## A. மரபுசாராத காப்பீடு தயாரிப்புகள் பற்றிய கண்ணோட்டம்

### 1. மரபுசாராத ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் - நோக்கமும் தேவையும்

முந்தைய அத்தியாயங்களில் காப்பீடும் சேமிப்பும் சேர்ந்து இருந்த சில மரபுவழி ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களைப் பற்றிப் பார்த்தோம்.

மரபுவழி ஆயுள் காப்பீட்டு பாலிசிகளால், நிதிச் சந்தையில் உள்ள மற்ற சொத்துக்களுடன் ஒப்பிடுகிற வகையில் வருமான விகிதத்தை வழங்கும் திறனுள்ளதா என்கு மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர். பலன்கள் மற்றும் பிரீமியங்களின் ஒரு தொகுப்பாக அவை கட்டமைக்கப்பட்ட விதம் குறித்தும் சிக்கல்கள் எழுப்பப்பட்டுள்ளன.

### 2. மரபுவழி திட்டங்களின் குறைகள்

ஒரு ஆழ்ந்த பரிசோதனை கீழ்க்காணும் பிரச்சனைக்குரிய பகுதிகளை வெளிப்படுத்தும்:

**பண மதிப்புக் கூறு:** முதலில், இத்தகைய பாலிசிகளில் சேமிப்புகளோ அல்லது பண மதிப்புக் கூறோ தெளிவாக வரையறுக்கப்படவில்லை. இது இறப்பு, வட்டி விகிதங்கள், செலவுகள் மற்றும் பிற அளவுருக்கள் பற்றி குறைவான வெளிப்படைத்தன்மையை உருவாக்குகிறது.

**வருவாய் விகிதம்:** மரபுவழி பாலிசிகளின் வருவாய் விகிதத்தைக் கண்டறிவது எளிதானது அல்ல, ஏனெனில் ஒப்பந்தம் முடிவடையும் போதுதான் "லாபத்துடன் உள்ள பாலிசிகளின்" நன்மைகளின் மதிப்பை அறிய முடியும். இது மற்ற நிதிக் கருவிகளுடன் இந்த பாலிசிகளை ஒப்பிடுவதை கடினமாக்குகிறது.

**ஒப்படைவு மதிப்பு:** இந்த ஒப்பந்தங்களின் கீழ் பண மற்றும் ஒப்படைவு மதிப்புகள் (எந்த ஒரு நேரத்திலும்) ஆயுள் காப்பீட்டாளரால் அமைக்கப்படுபவை மற்றும் வெளிப்படையானவை அல்ல.

**வருவாய்**: இந்த பாலிசிகள் மூலம் கிடைக்கும் வருவாய் மற்ற முதலீடுகளை விட மிகக் குறைவு.

3. **மரபு-சாரா பாலிசிகளின் அம்சங்கள்**: ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் சில புதுமையான அம்சங்களுடன் பாலிசிகளை வடிவமைக்கத் தொடங்கின, அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

a) **முதலீட்டு நன்மைகளுடன் நேரடி இணைப்பு:** முதலீட்டுச் சந்தையுடன் நேரடி இணைப்புடன் கூடிய பாலிசிகள் முதலீட்டு ஆதாயங்களை உருவாக்கும் முயற்சியில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

b) **பணவீக்கத்தை வெல்லக்கூடிய பாலிசிகள்**: பணவீக்க விகிதங்களுடன் கிட்டத்தட்ட பொருந்துகிற அளவுக்கு வருமானத்தை அளிக்கும் வகையில் பாலிசிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பணவீக்கத்தை முறியடிக்காவிட்டாலும் பலனின் விகிதம் பணவீக்க விகிதத்துடன் குறிப்பிடத்தக்க அளவுக்கு பொருந்த வேண்டும் என்று காப்பீட்டாளர்கள் நினைக்கத் தொடங்கினர்.

c) **நெகிழ்வுத்தன்மை கொண்ட பாலிசிகள்**: வாடிக்கையாளர்கள் தாங்கள் செலுத்த விரும்பும் பிரீமியத் தொகையை (குறிப்பிட்ட வரம்புகளுக்குள்) தீர்மானிக்க அனுமதிக்கும் பாலிசிகள்; மற்றும் அவர்கள் விரும்பிய வகையில் இறப்புப் பலன்கள் மற்றும் பண மதிப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

d) **ஒப்படைவு மதிப்பு**: மரபுவழி பாலிசிகளின் கீழ் சிறந்த ஒப்படைவு மதிப்புகளை வழங்கிய பாலிசிகளும் காப்பீட்டாளர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த பாலிசிகள் மிகவும் பிரபலமாகி இந்தியா உட்பட பல நாடுகளில் மரபுவழி திட்டங்களின் இடத்தைப் பிடித்து விட்டது.

**சுய-பரீட்சை** 1

கீழ்க்காண்பவற்றுள் மரபு சாராத ஆயுள் காப்பீட்டுத் திட்டம் எது?

I. காலக் காப்பீடு
II. உலகளாவிய ஆயுள் காப்பீடு
III. என்டோவ்மென்ட் காப்பீடு
IV. முழு ஆயுள் காப்பீடு

## B. மரபு-சாராத ஆயுள் காப்பீடு தயாரிப்புகள்

### சில மரபுசாரா திட்டங்கள்

இந்த அத்தியாயத்தின் மீதமுள்ள பத்திகளில், இந்தியச் சந்தையிலும் மற்ற இடங்களிலும் வடிவமைக்கப்பட்டுள்ள சில மரபுசாரா திட்டங்களைப் பற்றிப் விவாதிப்போம்.

## 1. உலகளாவிய ஆயுள் மற்றும் மாறக்கூடிய ஆயுள் காப்பீடு

உலகளாவிய ஆயுள் காப்பீடு 1979 இல் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் விரைவில் மிக பிரபலமானது. **நெகிழ்வுத்தன்மை கொண்ட பிரீமியங்கள், முதன்மைத் தொகை மற்றும் இறப்புக் கால பலன் தொகைகள்** இதன் அம்சங்களாக உள்ளன. ஒப்பந்தத்தை நடைமுறையில் வைத்திருக்க நிலையான பிரீமியங்களை அவ்வப்போது செலுத்த வேண்டிய மரபுவழி பாரம்பரிய பாலிசிகள் போலல்லாமல், உலகளாவிய ஆயுள் பாலிசிகளில், பாலிசிதாரர் அவர் காப்புக்காக செலுத்த விரும்பும் பிரீமியத் தொகையினை (ஒரு வரம்புக்குட்பட்டு) முடிவு செய்ய முடியும்.

மாறக்கூடிய ஆயுள் பாலிசி முதலில் அமெரிக்காவில் 1977-ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. மாறக்கூடிய ஆயுள் காப்பீடு என்பது ஒரு 'முழு ஆயுள் காப்பீட்டு' வகையாகும். பிரீமியங்கள் செலுத்தப்பட்ட ஒரு சிறப்பு முதலீட்டு கணக்கில் உள்ள முதலீட்டு செயல்திறனுக்கு ஏற்ப இந்த பாலிசியின் இறப்புக் கால பலன்களும் பண மதிப்பும் மாறுபடும்.

ஐஆர்டிஐஏ (யூலிப்) ஒழுங்குவிதிகள், 2019 வெளியிடப்பட்டதை தொடர்ந்து, மாறக்கூடிய காப்பீடு தயாரிப்புகள் என்று அழைக்கப்பட்ட மேற்கூறிய இரண்டு வகையான தயாரிப்புகளின் வடிவமைப்பு மற்றும் விற்பனை, இவை இரண்டும் 2019 முதல் இந்தியாவில் அனுமதிக்கப்படவில்லை.

## 2. யூனிட் லிங்க்டு அதாவது யூனிட் இணைக்கப்பட்ட காப்பீடு

யூலிப்கள் என்றும் அறியப்படும் யூனிட் லிங்க்டு பிளான்கள், 1960களில் முதன்முதலில் இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று அவை மிகவும் பிரபலமான மற்றும் குறிப்பிடத்தக்க தயாரிப்புகளில் ஒன்றாக வெளிவந்துள்ளன, பல சந்தைகளில் மரபுவழி திட்டங்களின் இடத்தைப் இவை பிடித்தன.

யூனிட் இணைக்கப்பட்ட பாலிசிகள் மரபுவழி தயாரிப்புகளின் வரம்புகளை நீக்க உதவுகின்றன.

பாலிசிதாரர் செலுத்தும் பிரீமியம் இரண்டு முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்படும்-


- காப்பீட்டு மூலம் காப்பை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் முதல் பாகம், மற்றும்
- காப்பீடு செய்தவர் தேர்ந்தெடுத்த நிதியில் முதலீடு செய்யப்படும் இரண்டாவது பாகம்.

இந்த ஒப்பந்தங்களின்கீழ் கிடைக்கும் பலன்கள் பாலிசிதாரரின் கணக்கில் பணம் செலுத்த வேண்டிய உரிய நாளில் வைக்கப்படும் வரவின் மதிப்பினால் முழுமையாகவோ பகுதி அளவிலோ தீர்மானிக்கப்படுகிறது.

பல சந்தைகளில் இந்த பாலிசிகள் இணைக்கப்பட்ட காப்பீட்டு கூறுகளுடன் முதலீட்டு வாகனங்களாக நிலைநிறுத்தப்பட்டு விற்கப்பட்டன.

பொதியிடப்பட்ட மரபுவழி சேமிப்பு பாலிசிகளை போலன்றி, யூனிட் இணைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் பொதியிடப்படவில்லை. அவர்களுடைய அமைப்பு வெளிப்படையானது மற்றும் காப்பீட்டுக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களும் செலவுகளும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**வரைப்படம்** 1: **பிரீமியத்தின் பாகங்கள்**




பிரீமியத்திலிருந்து இந்தக் கட்டணங்கள் கழிக்கப்பட்டதும், கணக்கின் நிலுவைத் தொகையும் வரவும் **யூனிட்டுகளாக** முதலீடு செய்யப்படுகின்றன.

### யூனிட்டுகளின் மதிப்பு

இந்த மதிப்பு தொடக்கத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ள விதியின்படி வரையறுக்கப்படுகிறது. உண்மையில் மொத்த சொத்தின் மதிப்பு (Net Asset Value -NAV) அதன் மதிப்பை தருகிறது. இது நிதி முதலீடு செய்யப்பட்ட சொத்துக்களின் சந்தை மதிப்பினைப் பிரதிபலிக்கிறது. இரு தனித்தனி மனிதர்கள் விதியைப் பின்பற்றி வழங்கப்பட வேண்டிய ஒரே பலன்களைப் பெறலாம்.

சூத்திரம் பின்வருமாறு :

நிகர சொத்து மதிப்பு [NAV]= நிதியின் சொத்துகளின் சந்தை மதிப்பு/ நிதிகளில் உள்ள யூனிட்களின் எண்ணிக்கை.

இவ்வாறு பாலிசிதாரருக்கு கிடைக்கும் நன்மைகள் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் ஊகங்கள் மற்றும் முடிவுகளைச் சார்ந்திருக்காது.

யூனிட்டை வைத்திருக்கும் ஒருவர் பல்வேறு வகையான நிதிகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வசதியை யூனிட் லிங்க்டு பாலிசிகள் அளிக்கின்றன. முதலீட்டாளருக்கு இவ்வாறு ஒரு பரந்த கடன், சமன் செய்யப்பட்ட பங்கு

நிதிகளிடையே தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இந்த பரந்த வகைக்குள்ளேயே, பிற வகைகளும் இருக்கலாம்.

| பங்கு மூலதன நிதி | கடன் நிதி | சமன் செய்யப்பட்ட நிதி | பணச் சந்தை நிதி |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் மற்றும் பங்கு சார்ந்த பத்திரங்களில் மட்டுமே பணத்தின் பெரும்பகுதியை இந்த நிதி முதலீடு செய்கிறது. | அரசின் பாண்டுகள், பெருவணிக பாண்டுகள், நிரந்தர வைப்புகள் போன்றதில் பணத்தின் பெரும்பகுதியை இந்த நிதி முதலீடு செய்கிறது. | பங்கு மூலதனம் மற்றும் கடன் பத்திரங்கள் இரண்டிலும் கலந்து இந்த நிதி முதலீடு செய்கிறது. | கருவூல பில்கள், வைப்புகளின் பத்திரங்கள், வணிகரீதியான பேப்பர்கள் போன்ற பத்திரங்களில் இந்த நிதி பணத்தை முதலீடு செய்கிறது. |

ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட நிதிகளோ எதிர்பார்த்த அளவிற்கு இல்லை என்றால் ஒருவகையான நிதியிலிருந்து மற்றொரு வகைக்கு மாறும் வழிவகையும் உள்ளது.

யூலிப் பாலிசிகளின் சில குறிப்பிட்ட அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

i. **தனியொன்றாகக் கணி** (Unitising)

யூலிப் பாலிசிகளின் கீழ் உள்ள பலன்கள், பாலிசிதாரரின் கணக்கில் ஈடுக்கோரல் பணம் செலுத்த வேண்டிய உரிய நாளில் வைக்கப்படும் வரவின் மதிப்பினால் முழுமையாகவோ பகுதி அளவிலோ தீர்மானிக்கப்படுகிறது.. முதலீட்டு நிதியை பல சம பாகங்களாகப் பிரிப்பதன் மூலம் ஒரு யூனிட் உருவாக்கப்படுகிறது.

ii. **வெளிப்படையான அமைப்பு**

யூலிப்களில் காப்பீடு மற்றும் செலவுகளுக்கான கட்டணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் கட்டணங்கள் பிரீமியத்திலிருந்து கழிக்கப்பட்டவுடன், கணக்கின் இருப்பு மற்றும் அதிலிருந்து வரும் வருமானம் யூனிட்களில் முதலீடு செய்யப்படும்.

### iii. விலை நிர்ணயம்

யூலிப்களின் கீழ், காப்பீடு செய்தவர் அவர் குறிப்பிட்ட கால இடைவெளியில் பங்களிக்கக்கூடிய பிரீமியத்தின் அளவை தீர்மானிக்கிறார்.

அனைத்து ஆயுள் காப்பீட்டு பாலிசிகளிலும், ஆரம்ப செலவுகள் மிக அதிகம். மரபுவழி பாலிசிகளின் கீழ், இந்தச் செலவுகளைச் சந்திப்பதற்கான பிரீமியம் கட்டணங்கள் பாலிசி காலம் முழுவதும் பரவும்.

யூலிப்களின் விஷயத்தில், அவை ஆரம்ப பிரீமியத்தில் இருந்தே கழிக்கப்படும். இது முதலீட்டிற்காக ஒதுக்கப்படும் தொகையை கணிசமாகக் குறைக்கிறது. அதனால்தான், செலுத்தப்பட்ட பிரீமியங்களின் அடிப்படையில் நன்மைகளின் மதிப்பு, ஒப்பந்தத்தின் ஆரம்ப ஆண்டுகளில் செலுத்தப்பட்ட பிரீமியங்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாக இருக்கும்.

### iv. மரண நன்மை

மரபுவழி பாலிசிகளைப் போலன்றி, யூலிப் பாலிசிகளில் மரண நன்மைகளின் அளவு செலுத்தப்பட்ட பிரீமியத்தின் மடங்காக இருக்கும். பாலிசியின் காலக்கட்டத்தில் மரணம் ஏற்பட்டால், பயனாளிக்கு காப்பீட்டுத் தொகை (இது பிரீமியத்தின் மடங்கு) அல்லது நிதியின் மதிப்பு (யூனிட் விலையை யூனிட்களின் எண்ணிக்கையால் பெருக்கினால் கிடைக்கும் மதிப்பு), இதில் எது அதிகமோ, அது அவருக்கு வழங்கப்படும்.

### v. முதலீட்டு அபாயத்தைத் தாங்குதல்

யூனிட்களின் மதிப்பு ஆயுள் காப்பீட்டாளரின் முதலீடுகளின் மதிப்பைப் பொறுத்தது, அவை உத்தரவாதமளிக்கப்படவில்லை.

ஆயுள் காப்பீட்டாளர் ஒரு திறன்மிக்க பங்கு மூலதனத்தை நிர்வகிக்க வேண்டுமென்று எதிர் பார்க்கப்பட்டாலும், யூனிட் மதிப்புகள் பற்றி எந்த உத்தரவாதத்தையும் அளிப்பதில்லை. எனவே, முதலீட்டு அபாயத்தை பாலிசிதாரர் / யூனிட் வைத்திருப்பவரே ஏற்கிறார்.

**சுய-பரீட்சை** 2

கீழ்க்காண்பவற்றுள் எந்த கூறு தவறானது?

I. மாறக்கூடிய ஆயுள் காப்பீடு ஒரு தற்காலிக ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

II. மாறக்கூடிய ஆயுள் காப்பீடு ஒரு நிரந்தரமான ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

III. பாலிசிக்கு பண மதிப்பு கணக்கு உள்ளது

IV. ஒரு குறைந்தபட்ச இறப்புக்கால நன்மைக்கான உத்தரவாதத்தை பாலிசி வழங்குகிறது.

## சுருக்கம்

- நிதிச் சந்தையில் பிற சொத்துக்களுக்கு கிடைக்கும் போட்டிமிகுந்த பலனின் விகிதத்தைக் கொடுப்பதே ஆயுள் காப்பீட்டு பாலிசிகளைப் பொருத்தவரை கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான கருத்தாகும்
- பிரித்தல், முதலீட்டு இணைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை முதலானவைகளே மரபுசாரா ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் பெருமளவில் வளர்வதற்கு வழிவகுத்த காரணிகளாகும்.
- உலகளாவிய ஆயுள் காப்பீடு என்பது ஒரு நிரந்தர ஆயுள் காப்பீட்டு வடிவமாகும். நெகிழ்வுத்தன்மைகொண்ட ப்ரீமியங்கள், நெகிழ்வுத்தன்மையுள்ள முதன்மைத் தொகை மற்றும் இறப்புக் கால பலன் தொகைகள், மற்றும் பிரிக்கப்பட்ட அதன் விலைக் காரணிகள் ஆகியவை இதற்கான அம்சங்கள்.
- யூலிப்புகள் மிகவும் பிரபலமான, குறிப்பிடத்தக்க திட்டமாக உருவானதால். பல சந்தைகளில் மரபுவழி திட்டங்களின் இடத்தைப் பிடித்தன.
- ஒரு ஆயுள் காப்பீட்டாளரின் முதலீட்டு செயல்திறனின் பலன்களை நேரடியாகவும் உடனடியாகவும் பெறும் வழியாக யூலிப்புகள் உள்ளன.

## முக்கிய வார்த்தைகள்

1. உலகளாவிய ஆயுள் காப்பீடு
2. மாறக்கூடிய ஆயுள் காப்பீடு
3. யூனிட் லிங்க்டு காப்பீடு
4. மொத்த சொத்தின் மதிப்பு (NAV)

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

**பதில் 1** -சரியான பதில் விருப்பம் II.

**பதில் 2** -சரியான பதில் விருப்பம் I.

# அத்தியாயம் L-05

# ஆயுள் காப்பீடின் பயன்பாடுகள்

**அத்தியாய அறிமுகம்**

ஆயுள் காப்பீடின் நோக்கம் அகால மரணத்திற்கு எதிராக தனிநபர்களுக்கு காப்பளிப்பது மட்டுமல்ல. அதன் பலன் பிற பயன்பாடுகளிலும் உள்ளது. இதன் மூலம் நிதியங்களை உருவாக்கி அதனை காப்பீட்டு நலன்களை தருவதற்காக பயன்படுத்தப்படலாம்; இதனை தொழில்களின் பிரதான அதிகாரிகளுக்கு காப்பளிக்கும் பாலிசியை உருவாக்க மற்றும் அடமானங்களின் மீட்பிற்கும் பாலிசியை உருவாக்க பயன்படுத்த முடியும். சுருக்கமாக ஆயுள் காப்பீடின் இந்த பல்வேறு பயன்பாடுகளை விவரிக்கிறோம்.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

A. திருமணமான பெண்களின் சொத்து சட்டம் (Married Women's Property Act - MWP)

B. பிரதான நபரின் காப்பீடு (Keyman Insurance)


C. அடமான மீட்பு காப்பீடு (Mortgage Redemption Insurance -MRI)

## A. ஆயுள் காப்பீடின் பயன்பாடுகள்

### 1. திருமணமான பெண்களின் சொத்து சட்டம் (Married Women's Property Act - MWP)

திருமணமான பெண்களின் சொத்து சட்டத்தின் பிரிவு 6, 1874, ஒரு அறக்கட்டளையை உருவாக்கி மனைவி மற்றும் குழந்தைகளுக்கு ஒரு ஆயுள் காப்பீட்டின் கீழுள்ள நன்மைகள் பாதுகாப்பாக வழங்கப்படுவதை உறுதி செய்கிறது.

**வரைப்படம் 1: MWP சட்டத்தின் கீழ் பயனடைபவர்கள்**




இந்த பிரிவின் விதிப்படி ஒரு திருமணமான நபர் தனது சொந்த ஆயுளின்மீது ஒரு ஆயுள் காப்பீட்டுப் பாலிசி எடுத்து, அதற்கான நன்மைகளை அவரது மனைவி, அல்லது அவரது மனைவி மற்றும் குழந்தைகளுக்கு நன்மைகளை வழங்குவதற்காக மற்றும் அதை அவர்கள் நன்மைக்காக மட்டுமே ஒரு அறக்கட்டளையில் வைக்கப்படவேண்டும் என்று பாலிசி மேலேயே தெளிவாக வெளிப்படுத்தியிருந்தால், அந்த அறக்கட்டளையின் கீழ் அவை இருக்கும்வரை, காப்பீடு செய்தவர் அல்லது அவருக்கு கடனளித்தவர்களால் அதை கட்டுப்படுத்த முடியாது, அல்லது அவரது எஸ்டேட்டின் பகுதியாகவும் இருக்க முடியாது.

MWP சட்டத்தின்கீழ் ஒரு பாலிசியின் அம்சங்கள்

i. ஒவ்வொரு பாலிசியும் ஒரு தனி டிரஸ்டாக அதாவது அறக்கட்டளையாக இருக்கும்.. மனைவி அல்லது குழந்தை (18 வயதுக்கு மேலுள்ளவர்) அதன் அறங்காவலராக இருக்க முடியும்.

ii. பாலிசியானது நீதிமன்ற இணைப்புகள், கடனாளர்கள் மற்றும் ஆயுள் காப்பீடு செய்தவரின் கட்டுப்பாட்டை மீறியிருக்கும்.

iii. ஈடுக்கோரல் பணம் அறங்காவலர்களுக்கு வழங்கப்படும்.

iv. பாலிசியை ஒப்படைக்க முடியாது மற்றும் எந்த நியமனமும் அல்லது உரிமை மாற்றமும் அனுமதிக்கப்படாது.

v. பாலிசிதாரர் பாலிசியின் கீழுள்ள நன்மைகளை நிர்வகிப்பதற்கு ஒரு சிறப்பு அறங்காவலரை நியமிக்கவில்லை என்றால், பாலிசியின் கீழ் பாதுகாக்கப்பட்ட தொகை, காப்பீடு அமலாக்கப்பட்ட அலுவலகம் உள்ள இடத்தின் மாநிலத்தின் அதிகாரப்பூர்வ அறங்காவலருக்கு வழங்கப்பட வேண்டும்

**நன்மைகள்**

அறக்கட்டளை, ஒரு மாற்ற இயலாத, திருத்த இயலாத டிரஸ்ட் பத்திரத்தின்கீழ் அமைக்கப்படுகிறது. அதில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காப்பீட்டு பாலிசிகளை உள்ளடக்க முடியும். காப்பீட்டு நன்மைகளை தொகையை முதலீடு செய்வது உட்பட, அறக்கட்டளை சொத்தை நிர்வகிப்பதற்குப் பொறுப்பான ஒரு அறங்காவலரை பயனாளிகளின் சார்பாக நியமிப்பது முக்கியம். இந்த நன்மைகள் எதிர்கால கடன் கொடுத்தவர்களிடம் போய்விடாமல் பாதுகாக்கப்படுகின்றன

2. **பிரதான நபரின் காப்பீடு** (Key man Insurance)

பிரதான நபர் (Keyman) காப்பீடு, வணிக காப்பீட்டின் ஒரு முக்கிய வடிவம் ஆகும்.

**வரையறை**

பிரதான நபர் (Keyman) காப்பீடை, வணிகத்தின் ஒரு முக்கிய உறுப்பினரின் மரணம் மூலம் அல்லது நீண்ட காலத்திற்கு அவர் திறனற்று செயல்படாமல் இருக்கும்போது எழும் நிதி இழப்புகளை ஈடு செய்ய வணிகம் மூலம் எடுக்கப்படும் காப்பீட்டு பாலிசி என விவரிக்கலாம்.

பல வணிகங்களில் பெரும்பாலான இலாபங்களுக்கான பொறுப்பை வகிக்கும் அல்லது நிறுவனத்திற்கு இன்றியமையாத மற்றும் மாற்றுவதற்கு கடினமான அறிவு மற்றும் திறன்களைக் கொண்டுள்ள முக்கிய நபர்கள் உள்ளனர். வணிகத் தொடர்ச்சியை எளிதாக்குவதற்கும், அந்த பிரதான நபரை இழந்தால் ஏற்படும் செலவுகள் மற்றும் இழப்புகளை ஈடுசெய்வதற்கும், அத்தகைய பிரதான நபர்களின் ஆயுள் மீது முதலாளிகள் பிரதான நபர் (Keyman) காப்பீடை எடுக்கிறார். பிரதான நபர் (Keyman) காப்பீடு உண்மையான இழப்புகளுக்கு இழப்பீடு வழங்காது, ஆனால் காப்பீட்டு பாலிசியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிலையான பணத் தொகை மூலம் ஈடுசெய்கிறது.

பிரதான நபர் (Keyman) ஒரு கால காப்பீட்டு பாலிசியாக அனுமதிக்கப்படுகிறது. இதில், காப்பீடுத் தொகை என்பது பிரதான நபரின் சொந்த வருமானத்துடன் இணைக்கப்படாமல் நிறுவனத்தின் இலாபத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பிரீமியம் நிறுவனம் மூலம் கட்டப்படும். பிரதான நபர் இறந்துவிடும் வழக்கில், நன்மை நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது. பிரதான நபர் (Keyman) காப்பீட்டின் மரண நன்மை நிறுவனத்தின் வரிக்குட்பட்ட வருமானமாக கணக்கிடப்படுகிறது.

**a) யார் ஒரு பிரதான நபராக** (Keyman) **இருக்க முடியும்**?

ஒரு பிரதான நபர் நேரடியாக வணிகத்துடன் தொடர்புடையவராக மற்றும் அவரது இழப்பு வணிகத்திற்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் நபராக இருக்கலாம். உதாரணமாக, இந்த நபர் நிறுவனத்தின் இயக்குனராக, பங்குதாரராக, முக்கிய விற்பனை நபராக, முக்கிய திட்ட மேலாளராக அல்லது நிறுவனத்திற்கு விசேஷமாக தேவைப்படும் மதிப்புமிக்க குறிப்பிட்ட திறன்கள் அல்லது அறிவை கொண்டுள்ள யாராவது இருக்க முடியும்.

**b) காப்பீடு செய்யக்கூடிய இழப்புகள்**

பின்வரும் இழப்புக்கள் பிரதான நபர் காப்பீடு மூலம் இழப்பீடு வழங்கப்படும் இழப்புகளாக உள்ளன:

i. பிரதான நபரால் நீண்ட காலம் வேலை செய்யமுடியாத போது ஏற்படும் இழப்புகளுக்கு, அதாவது தற்காலிக பணியாளர்களுக்காக செய்யப்படும் செலவு மற்றும் ஒரு மாற்றாளை நியமிக்க மற்றும் பயிற்சிக்காக தேவைப்படும் செலவுகள்.

ii. இலாபங்களை பாதுகாக்கும் காப்பீடு. உதாரணமாக, பிரதான நபர் ஈடுபட்டிருந்த இழந்த விற்பனை வருமானத்தை ஈடு செய்ய, பிரதான நபர் ஈடுபட்டிருந்த வணிக திட்டத்தின் தாமதம் அல்லது இரத்து விளைவாக எழும் இழப்புகள், விரிவாக்கும் வாய்ப்பின் இழப்பு, சிறப்பு திறன்கள் அல்லது அறிவின் இழப்பு ஆகியவை.

3. **அடமான மீட்பு காப்பீடு (**Mortgage Redemption Insurance **-**MRI)

ஒரு நபர் ஒரு சொத்தை வாங்க கடன் வாங்கினால், கடன் ஏற்பாட்டின் ஒரு பகுதியாக, வங்கியின் அடமான மீட்புக் காப்பீட்டிற்காகவும் பணம் செலுத்த வேண்டியிருக்கலாம். "அடமான மீட்புக் காப்பீடு" என்பது "கிரெடிட் லைஃப் இன்சூரன்ஸ் பாலிசி" என்று பிரபலமாக குறிப்பிடப்படுகிறது.

**a) MRI என்றால் என்ன?**

இது வீட்டு கடன் பெற்றவர்களுக்கு நிதி பாதுகாப்பை வழங்குகின்ற ஒரு காப்பீட்டு பாலிசி. இது அடிப்படையில் அடமானம் வைப்பவர் மூலம் எடுக்கப்படுகின்ற ஒரு குறைகின்ற கால ஆயுள் காப்பீட்டு பாலிசி, மற்றும் கடன் வாங்கியவர் தனது முழு கடனை திருப்புவதற்கு முன்பே இறந்துவிட்டால் மிகுதியுள்ள கடனை மீட்பதற்காக எடுக்கப்படுகிறது. அதை கடன் காப்பாளர் பாலிசி என்று அழைக்கலாம். பாலிசிதாரரின் எதிர்பாராத மரணம் ஏற்படும் வழக்கில் அவரை சார்ந்தவர்களுக்கு அந்த கடன்களை தீர்க்க தேவைப்படும் உதவிக்கு இந்த திட்டம் ஏற்றது.

**b) அம்சங்கள்**

காப்பின் அளவு பாலிசி காலம் முழுவதும் ஒரே மாதிரி இருக்கின்ற கால காப்பீடைப் போல் இல்லாமல், இந்த பாலிசியின் கீழுள்ள காப்பீடின் அளவு ஒவ்வொரு ஆண்டும் குறைகிறது.

**சுய-பரீட்சை 1**

அடமான மீட்பு காப்பீடின் பின்னால் உள்ள நோக்கம் என்ன?

I. மலிவான அடமான விகிதங்களை ஊக்குவிக்கிறது

II. வீட்டு கடன் பெறுபவர்களுக்கு நிதி பாதுகாப்பை வழங்குகிறது

III. அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் மதிப்பை பாதுகாப்பது

IV. தவறு நேரிடும் வழக்கில் வெளியேற்றப்படுவதை தவிர்ப்பது

**சுருக்கம்**

- திருமணமான பெண்களின் சொத்து சட்டத்தின் பிரிவு 6, 1874, மனைவி மற்றும் குழந்தைகளுக்கு ஒரு ஆயுள் காப்பீட்டின்கீழ் நலன்களின் பாதுகாப்பை வழங்குகிறது.
- MWP சட்டத்தின்கீழ் எடுத்த பாலிசி நீதிமன்ற இணைப்புகள், கடனாளர்கள் மற்றும் ஆயுள் காப்பீடு செய்தவரின் கட்டுப்பாட்டை மீறியிருக்கும்.
- பிரதான நபர் (Keyman) காப்பீடு, வணிக காப்பீட்டின் ஒரு முக்கிய வடிவம் ஆகும். பிரதான நபர் (Keyman) காப்பீடை, வணிகத்தின் ஒரு முக்கிய உறுப்பினரின் மரணம் மூலம் அல்லது நீண்ட காலத்திற்கு அவர் திறனற்று செயல்படாமல் இருக்கும்போது எழும் நிதி இழப்புகளை ஈடு செய்ய வணிகம் மூலம் எடுக்கப்படும் காப்பீட்டு பாலிசி என விவரிக்கலாம்.

- அடமான மீட்பு காப்பீடு என்பது அடிப்படையில் அடமானம் வைப்பவர் மூலம் எடுக்கப்படுகின்ற ஒரு குறைகின்ற கால ஆயுள் காப்பீட்டு பாலிசி, மற்றும் கடன் வாங்கியவர் தனது முழு கடனை திருப்பும் முன்னர் இறந்துவிட்டால் மிகுதியுள்ள கடனை திருப்பி தருவதற்காக எடுக்கப்படுகிறது.

## முக்கிய வார்த்தைகள்

1. திருமணமான பெண்களின் சொத்து சட்டம்
2. பிரதான நபர் (Keyman) காப்பீடு
3. அடமான மீட்பு காப்பீடு

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் L-06

# ஆயுள் காப்பீடின் விலை மற்றும் மதிப்பீடு

**அத்தியாய அறிமுகம்**

கற்பவருக்கு ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்களின் விலை மற்றும் நன்மைகளில் பயன்படும் அடிப்படைக் கூறுகளை அறிமுகப்படுத்துவதே இந்த அத்தியாயத்தின் நோக்கமாக உள்ளது. நாம் முதலில் பிரீமியத்தில் உள்ள கூறுகளை விவாதித்துவிட்டு, பின்னர் உபரி மற்றும் போனஸ் கருத்து பற்றி விவாதிப்போம்.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

A. காப்பீடு விலை- அடிப்படைக்கூறுகள்

B. உபரி மற்றும் போனஸ்


## A. காப்பீடு விலை- அடிப்படைக் கூறுகள்

### 1. பிரீமியம்

சாதாரண மொழியில், பிரீமியம் என்ற சொல் ஒரு காப்பீட்டு பாலிசியை வாங்குவதற்காக காப்பீடு பெற்றவர் செலுத்தும் விலையை குறிக்கிறது. பொதுவாக இது காப்பீட்டுத் தொகையில் ஒவ்வொரு ஆயிரம் ரூபாய்க்கும் உள்ள பிரீமியம் விகிதமாக தெரிவிக்கப்படும். பிரீமியம் விகிதங்கள் வாய்ப்பாளரின் வயது மற்றும் திட்டத்தை பொறுத்தது.

இந்த பிரீமியம் விகிதங்கள் காப்பீட்டு நிறுவனங்களிடம் விகிதங்களின் அட்டவணைகளாக கிடைக்கின்றன

**வரைப்படம்** 1: **பிரீமியம்**




இந்த அட்டவணைகளில் அச்சிடப்பட்ட விகிதங்கள் "அலுவலக பிரீமியங்கள்" என்று அழைக்கப்படுகிறது. அவை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் காலம் முழுவதும் ஒரே மாதிரியானவை மற்றும் வருடாந்திர வீதமாக தெரிவிக்கப்படுகின்றன.

**எடுத்துக்காட்டு**

ஒரு குறிப்பிட்ட வயதில் ஒரு இருபது ஆண்டு என்டோமென்ட் பாலிசிக்கான பிரீமியம் ரூ 4,800 என்றால், இதற்கு அர்த்தம் இருபது ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.4,800 கட்டப்பட வேண்டும்.

---

எனினும், முதல் சில ஆண்டுகளில் மட்டுமே பிரீமியங்கள் செலுத்தற மாதிரி சில பாலிசிகள் உள்ளன. ஒரே ஒரு பிரீமியத்தை ஒப்பந்தத்தின் ஆரம்பத்திலேயே செலுத்துகிற ஒற்றை பிரீமியம் ஒப்பந்தங்களும்

நிறுவனங்களிடம் உள்ளன. இந்த பாலிசிகள் பொதுவாக முதலீடு நோக்கத்திற்காக உள்ளன.

**2. தள்ளுபடிகள்**

ஆயுள் காப்பீடு நிறுவனங்கள் செலுத்தப்பட வேண்டிய பிரீமியத்தில் சில வகையான தள்ளுபடிகளையும் வழங்குகின்றன. இத்தகைய இரண்டு தள்ளுபடிகள்:

- ✓ காப்பீட்டுத் தொகைக்கு
- ✓ பிரீமியம் செலுத்தும் முறைக்கு

**காப்பீட்டுத் தொகைக்கான தள்ளுபடி**

காப்பீட்டுத் தொகை அதிகமாக உள்ள பாலிசிகளை வாங்குபவர்களுக்கு தள்ளுபடி வழங்கப்படுகிறது. அதிக மதிப்புள்ள பாலிசிகளுக்கு சேவை வழங்கும்போது காப்பீடு நிறுவனத்திற்கு கிடைக்கும் லாபங்களில் வாடிக்கையாளருக்கும் பங்களிக்கும் ஒரு வழியாக இந்த தள்ளுபடி வழங்கப்படுகிறது, இதற்கான காரணம் மிக எளிது. ஒரு காப்பீட்டு நிறுவனம் சேவையளிக்கும் பாலிசியின் தொகை ரூ.50,000 அல்லது ரூ.5,00,000 என எந்த அளவில் இருந்தாலும் இரண்டிற்கும் தேவைப்படுகின்ற முயற்சியின் அளவு, மற்றும் அதன் விளைவாக இந்த பாலிசிகளை செயல்படுத்துவதற்கான செலவும் அதேதான் இருக்கும். ஆனால் அதிக தொகையுள்ள பாலிசிகளின் மூலம் கிடைக்கும் பிரீமியமும் மற்றும் இலாபங்களும் அதிகமாக உள்ளது.

**பிரீமியம் செலுத்தும் முறையில் தள்ளுபடி**

இதேபோல் பிரீமியம் செலுத்தப்படும் முறையில் தள்ளுபடி வழங்கப்படலாம். ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் ஆண்டிற்கு, அரை ஆண்டிற்கு, காலாண்டிற்கு ஒரு முறை அல்லது மாதாந்திர அடிப்படையில் பிரீமியங்களை கட்ட அனுமதிக்கின்றன. பணம் செலுத்தும் முறை எத்தனை அடிக்கடி உள்ளதோ, பிரீமியத்தை வசூலிப்பதற்கும் கணக்கு வைப்பதற்கும் நிர்வாகச் செலவுகளும் அத்தனை அதிகம். அரையாண்டு அல்லது ஆண்டு பிரீமியங்களில் பணம் வாங்குவதும் அதை கணக்கிடுவதும் ஆண்டிற்கு ஒரு முறை மட்டுமே தேவைப்படும், மேலும், வருடாந்திர முறையில், காப்பீட்டு நிறுவனத்தால் முழு ஆண்டு காலத்திற்கும் இந்தத் தொகையை பயன்படுத்தி மற்றும் அதில் வட்டி சம்பாதிக்க முடியும். எனவே, காப்பீட்டாளர்கள் வருடாந்திர மற்றும் அரையாண்டு முறையில் பணம் செலுத்துவதை ஊக்குவிப்பதற்காக

தள்ளுபடியை அனுமதிக்கின்றனர். தேவைப்படும் கூடுதல் நிர்வாக செலவை ஈடு செய்வதற்காக மாதாந்திர முறை கட்டணத்தில், ஒரு சிறிய கூடுதல் கட்டணத்தையும் அவர்கள் வசூலிக்கலாம்.

## 3. கூடுதல் கட்டணங்கள்

கூடுதல் அபாயத்தை விளைவிக்கும் எந்த குறிப்பிடத்தக்க காரணிகளும் இல்லை என்றால் அட்டவணை பிரீமியம் மட்டுமே காப்பீடு செய்த தனிநபர்களிடம் வசூலிக்கப்படும். இத்தகைய தனிப்பட்ட வாழ்வுகள் **தரமான வாழ்வுகள்** என அழைக்கப்படும் மற்றும் வசூலிக்கப்படும் விகிதங்கள் சாதாரண விகிதங்கள் எனப்படுகின்றன.

காப்பீடிற்காக முன்மொழியும் ஒரு நபர் வாழ்விற்கு அபாயத்தை விளைவிக்க முடிகின்ற இதய நோய்கள் அல்லது நீரிழிவு போன்ற சில உடல்நல பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தால், அவர் தரமில்லாத வாழ்வாக கருதப்படுகிறார். காப்பீட்டு நிறுவனம், உடல்நலத்திற்காக கூடுதல் என்ற முறையில் கூடுதல் பிரீமியத்தை வசூலிக்க முடிவு செய்யலாம் இதேபோல் சர்க்கஸ் கழைக் கூத்தாடி போல அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மீதும் கூடுதல் கட்டணம் சுமத்தப்படும். அட்டவணை பிரீமியத்தை விட இந்த கூடுதல் அதிகமாk இருக்கும்.

மீண்டும், ஒரு காப்பீட்டாளர் கூடுதல் பிரீமியத்தை வசூலித்து, அதற்கு ஒரு பாலிசியின்கீழ் சில கூடுதல் நன்மைளை வழங்க கூடும்.

**எடுத்துக்காட்டு**

ஒரு ஆயுள் காப்பீட்டு நிறுவனம் ஒரு இரட்டை விபத்து நன்மையை அல்லது DAB (மரணம் விபத்து காரணமாக ஏற்பட்டால் காப்பீடுத் தொகையை விட இருமடங்கு தொகை வழங்கப்படும்) வழங்கலாம். இதற்காக, ஒவ்வொரு ஆயிரம் ரூபாய் தொகைக்கும் ஒரு ரூபாய் கூடுதல் கட்டணத்தை வசூலிக்கலாம்.

அதேபோல் நிரந்தர இயலாமை நன்மை (PDB) என அழைக்கப்படும் நன்மையை வழங்க ஒவ்வொரு ஆயிரம் ரூபாய் தொகைக்கும் கூடுதலாக ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படலாம்.


## 4. பிரீமியத்தை கணித்தல்

பிரீமியம் அட்டவணைகளில் வழங்கப்படுகிற விகிதங்களை ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் எவ்வாறு கணிக்கிறார்கள் என்பதை இப்போது ஆராய்வோம். இந்தப் பணி ஒரு மதிப்பீட்டாளர் (actuary) மூலம் செய்யப்படுகிறது. கால காப்பீடு, முழு ஆயுள் மற்றும் என்டோமென்ட்

போன்ற மரபுவழி ஆயுள் காப்பீட்டு விஷயத்தில் பிரீமியத்தை தீர்மானிக்கும் பணியில் பின்வரும் கூறுகள் கருதப்படுகின்றன:

- ✓ இறப்பு
- ✓ வட்டி
- ✓ மேலாண்மை செலவுகள்
- ✓ கையிருப்புகள்
- ✓ போனஸ் ஏற்றுதல்

**வரைப்படம்** 2: **பிரீமியத்தின் கூறுகள்**




முதல் இரண்டு கூறுகள் நிகர பிரீமியத்தை தீர்மானிக்கின்றன மற்றும் மற்ற கூறுகள் மொத்த அல்லது அலுவலக பிரீமியத்தை தர நிகர பிரீமியத்துடன் கூட்டப்படுகிறது ['ஏற்றுதல்' என்றும் அழைக்கப்படுகிறது]

### a) இறப்பு விகிதம் மற்றும் வட்டி

இறப்பு விகிதம் பிரீமியங்களின் முதல் கூறாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட வருடத்தில் ஒரு குறிப்பிட்ட வயதுடைய ஒருவர் இறப்பதற்கான வாய்ப்பு அல்லது நிகழ்தகவு இது. ஒரு நபரின் எதிர்பார்க்கப்படும் இறப்பு வயதை கண்டறிய, "இறப்பு அட்டவணைகள்" பயன்படுத்தப்படுகின்றன.

**எடுத்துக்காட்டு**

35 வயதுக்கான இறப்பு விகிதம் 0.0035 என்றால், 35 வயதில் உயிருடன் உள்ள ஒவ்வொரு 1000 மக்களுக்கு மத்தியில், 3.5 (அல்லது 10,000 பேரில் 35 பேர்) மக்கள் 35 மற்றும் 36 வயதிற்கு இடையே இறந்துவிடுவார் என எதிர்பார்க்கப்படுவதை இது குறிக்கிறது.

அட்டவணையை வெவ்வேறு வயதில் இறப்பு செலவை கணக்கிட பயன்படுத்தலாம். உதாரணமாக, வயது 35-ற்கு 0.0035 என்ற விகிதம், 1000 x 0.0035 = ரூ 3.50 (காப்பீட்டுத் தொகை) என்பது ஒவ்வொரு ஆயிரத்திற்கான காப்பீட்டு செலவு என்பதை குறிக்கிறது.

மேலுள்ள செலவை "அபாயப் பிரீமியம்" என்றும் கூறலாம். வயது அதிகமாக இருந்தால் அபாயப் பிரீமியமும் அதிகமாக இருக்கும்.

**எடுத்துக்காட்டு**

ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் எழும் காப்பீட்டு செலவை சந்திக்க ஒவ்வொரு ஆயிரத்திற்கும் நமக்கு ரூ. 5 தேவை மற்றும் வட்டி விகிதத்தை 6% என கருதினால், தற்போதுள்ள ரூ 5- இன் மதிப்பு ஐந்து வருடத்திற்கு பிறகு $5 \times 1/(1.06)^5 = 3.74$ **என** இருக்கும்.

6%-க்கு பதிலாக 10% என கருதியிருந்தால், தற்போதைய மதிப்பு 3.10 மட்டுமே இருக்கும். வேறுவிதமாக கூறினால் கருதும் வட்டி விகிதம் அதிகமாக இருந்தால், தற்போதைய மதிப்பு குறைகிறது.

இறப்பு மற்றும் வட்டி பற்றி நம் ஆய்விலிருந்து இரண்டு முக்கிய முடிவுகளை கணிக்கமுடியும்

- ✓ இறப்பு அட்டவணையில் இறப்பு விகிதம் அதிகமாக இருந்தால், பிரீமியங்களும் அதிகமாக இருக்கும்
- ✓ வட்டி விகிதத்தை அதிகமாக கருதினால், பிரீமியம் குறையும்.

**நிகர பிரீமியம்**

இறப்பு மற்றும் வட்டி மதிப்பீடுகள் "நிகர பிரீமியம்" அளவை கொடுக்கிறது

**மொத்த பிரீமியம்**

மொத்த பிரீமியம் என்பது நிகர பிரீமியம் மற்றும் ஏற்றுதல் எனப்படும் தொகையின் கூட்டல். ஏற்றுதலின் அளவை நிர்ணயிக்கும் போது மனதில் கொள்ள வேண்டிய மூன்று பரிசீலனைகள் அல்லது வழிகாட்டும் கோட்பாடுகள் உள்ளன:

**b) செலவுகள் மற்றும் கையிருப்புக்கள்**

பின்வருவது உட்பட ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களுக்கு பல்வேறு வகையான இயக்க செலவுகள் உள்ளன:

- ✓ முகவர்கள் பயிற்சி மற்றும் ஆட்சேர்ப்பு,

- ✓ முகவர்களின் கமிஷன்கள்,
- ✓ ஊழியர்கள் சம்பளம்,
- ✓ அலுவலகத்திற்கான இடம்,
- ✓ அலுவலக எழுதுபொருள்கள்,
- ✓ மின்சார கட்டணங்கள்,
- ✓ இதர செலவுகள் முதலியன

இவை அனைத்தும் காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட பிரீமியங்களில் இருந்து செலுத்தப்பட வேண்டும். இந்த செலவினங்கள் பொருந்துகிற மாதிரி நிகர பிரீமியத்தில் ஏற்றப்படுகிறது.

c) **காலங்கழிதல் மற்றும் தற்செயல் நிகழ்வுகள்**

செலவுகள் தவிர, ஆயுள் காப்பீட்டாளர்களின் கணக்கீடுகளை தவறாக கணிக்க வைக்கும் பிற காரணிகளும் உள்ளன.

அபாயத்திற்கான முக்கிய காரணங்கள் காலங்கழிதல்கள் மற்றும் விலகல்கள். காலங்கழிதல் என்றால் பாலிசிதாரர் பிரீமியம் செலுத்துவதை நிறுத்திவிடுகிறார் என்று அர்த்தம். விலகும் வழக்கில், பாலிசிதாரர் பாலிசியை ஒப்படைக்கிறார் மற்றும் பாலிசியில் சேகரிக்கப்பட்ட பண மதிப்பில் இருந்து ஒரு தொகையை பெறுகிறார்.

பொதுவாக காலங்கழிதல்கள் அதிகமாக ஒப்பந்தத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்குள் நடக்கிறது, அதுவும் மிகவும் அதிக எண்ணிக்கையில் முதல் ஆண்டிற்குள் நடக்கிறது.

d) **இலாபத்துடன் (பங்கேற்கும்) உள்ள பாலிசிகள் மற்றும் போனஸ் ஏற்றுதல்**

பாதகமான சூழ்நிலைகளில் கூட கடன்தீர்க்கும் திறன் நீடித்து நிலைப்பதற்காக, கூடுதல் கையிருப்பை உருவாக்க, ஆயுள் காப்பீட்டாளர்கள் அதிக ஏற்றுதல் கட்டணங்களை முன்கூட்டியே வசூலிக்கும் நடைமுறையைத் தொடங்கியபோது, 'இலாபத்துடன்' உள்ள பாலிசிகளின் கருத்து உருவானது. அடுத்தடுத்த அனுபவம் மிக சாதகமாக இருந்தால், ஆயுள் காப்பீட்டாளர், பாலிசிதாரர்களுடன் போனஸ் மூலம் பெற்ற லாபத்தில் சில பங்கை பகிர்ந்து கொள்வார்.

மொத்தத்தில் நாம் சொல்ல முடிவது:

**மொத்த பிரீமியம் = நிகர பிரீமியம் + செலவுகளுக்கான ஏற்றுதல் + தற்செயல் நிகழ்வுகளுக்கான ஏற்றுதல் + போனஸ் ஏற்றுதல்**

**சுய-பரீட்சை** 1

பாலிசி காலங்கழிதலுக்கு என்ன அர்த்தம்?

I. பாலிசிதாரர் பாலிசிக்கான பிரீமியத்தை முழுமையாக செலுத்திவிட்டார்

II. பாலிசிதாரர் ஒரு பாலிசியில் பிரீமியம் செலுத்துவதை நிறுத்திவிட்டார்

III. பாலிசி முதிர்வடைகிறது

IV. பாலிசி சந்தையில் இருந்து திரும்ப பெறப்பட்டது

## B. உபரி மற்றும் போனஸ்

**1.** உபரி மற்றும் போனஸை கணித்தல்

ஒவ்வொரு ஆயுள் காப்பீடு நிறுவனமும் தனது சொத்துக்கள் மற்றும் கடன்பாடுகளை தீர்மானிக்க குறித்த காலங்களில் மதிப்பீடை மேற்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய ஒரு மதிப்பீடு இரு நோக்கங்களை கொண்டுள்ளது:

i. கடன்தீர்க்கும் (நுகர்வோருக்கு கொடுக்க வேண்டியதை தரும்) திறன் அல்லது திவாலாகுமா என்பதை தீர்மானிக்க ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் நிதி நிலையை மதிப்பிடுவது.

ii. பாலிசிதாரர்கள் / பங்குதாரர்களின் மத்தியில் கிடைக்கின்ற உபரியை விநியோகம் செய்வதை தீர்மானிப்பது.

**வரையறை**

உபரி என்பது கடன்பாடுகளின் மதிப்புகளை விட அதிகமாக உள்ள சொத்துக்களின் மதிப்பு. இது எதிர்மறையாக இருந்தால், அது ஒரு பளு எனப்படும்.

இப்போது ஆயுள் காப்பீடில் உள்ள உபரி என்ற கருத்து ஒரு நிறுவனத்தின் லாபத்துடன் எவ்வாறு வேறுபடுகிறது என பார்ப்போம்.

பொதுவாக நிறுவனங்களில் இலாபத்தை பற்றி இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. முதலாவதாக, லாபம் என்பது கொடுக்கப்பட்ட கணக்கியல் காலத்தில் **வெளிச்செல்லும் செலவை கழித்து கிடைக்கும் அதிகப்படியான வருமானம்** ஆகும், அது இலாப நஷ்ட கணக்கின் அங்கமாக உள்ளது. இலாபம்

ஒரு நிறுவனத்தின் இருப்புநிலை ஏடின் அங்கமாகவும் உள்ளது - அதை **கடன்பொறுப்புகளை விட அதிகமாக உள்ள சொத்துக்களின் மதிப்பு** என வரையறுக்கலாம். இருப்புநிலை ஏடு, இலாப நஷ்ட கணக்கில் இலாபத்தை பிரதிபலிக்கிறது. இந்த இரு நிகழ்வுகளிலும், கணக்கியல் காலத்தின் முடிவில் லாபம் தீர்மானிக்கப்படுகிறது.

**உபரி = சொத்துக்கள் - பொறுப்புகள்**

ஆயுள் காப்பீட்டில் கடன்பாடுகள் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்வோம். கொடுக்கப்பட்ட ஆயுள் காப்பீட்டு பாலிசிகளின் தொகுதியில், ஆயுள் காப்பீட்டாளர் எதிர்கால ஈடுக்கோரல்கள், செலவுகள் மற்றும் பிற எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவுகளை சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். எதிர்காலத்தில் இந்த பாலிசிகளுக்கான பிரீமியங்களை பெறுவதையும் காப்பீட்டாளர் எதிர்பார்க்கிறார்.

கடன்பாடுகள் என்பது தரவேண்டிய அனைத்துப் பணம் செலுத்துதலின் தற்போதைய மதிப்பில் இருந்து இந்தக் பாலிசிகளில் பெறப்படும் என எதிர்பார்க்கப்படும் பிரீமியங்களை கழித்த பிறகு கிடைக்கின்ற மதிப்பாகும். தற்போதைய மதிப்பானது பொருத்தமான தள்ளுபடி விகிதத்தைப் [வட்டி விகிதம்] பயன்படுத்தி கணக்கிடப்படுகிறது

ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் உண்மையான அனுபவம் கருதப்பட்டதை விட நன்றாக இருந்தால் உபரி எழுகிறது. இலாப ஒப்பந்தங்களின்கீழ், ஆயுள் காப்பீட்டு நிறுவனம் இலாபங்களில் பங்கேற்க ஒப்புக்கொண்ட மற்றும் இலாப பாலிசிகளை வாங்கிய பாலிசிதாரர்களுக்கு நன்மைகளை கட்டாயமாக வழங்கவேண்டும்.

**எடுத்துக்காட்டு**

31 மார்ச், 2013 அன்று உள்ள XYZ நிறுவனத்தின் இலாபங்கள், அந்த தேதியன்று அதன் வருமானத்தில் இருந்து செலவுகளை கழித்து அல்லது சொத்துக்களில் இருந்து கடன்பாடுகளை கழிப்பதன் மூலம் கிடைக்கிறது.

இரண்டு சந்தர்ப்பங்களிலும், இலாபம் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது மற்றும் தெரிகிறது.

---

## 2. போனஸ்


காப்பீட்டாளர்கள் அதன் வகுக்கக்கூடிய உபரியை பாலிசிதாரர்கள் மற்றும் நிறுவனத்தின் பங்குதாரர்களிடையே போனஸ் வடிவில் [ஏதேனும் இருந்தால்] அறிவித்து விநியோகிக்க வேண்டும். இந்தியா, இங்கிலாந்து மற்றும் பல நாடுகளில், உபரி விநியோகம் பிரபலமாக உள்ளது.

ஒரு ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தவேண்டிய அடிப்படை நன்மைகளுடன் கூடுதலாக போனஸ் வழங்கப்படும். பொதுவாக இது காப்பளிக்கப்பட்ட அடிப்படை தொகையுடன் கூடுதலாக அல்லது வருடத்திற்கு அடிப்படை ஆண்டு ஓய்வூதியமாக தோன்றும். உதாரணமாக, காப்புத்தொகையின் ஒவ்வொரு ஆயிரத்திற்கும் ரூ 60- ஆக இது காட்டப்படுகிறது.

போனஸின் மிக பொதுவான வடிவம் **மாற்றியமைப்பு போனஸ்** (Reversionary Bonus) ஆகும். போனஸ் சேர்க்கைகள் ஒருமுறை அறிவிக்கப்பட்டுவிட்டால், அவை பாலிசியுடன் இணைக்கப்பட்டுவிடும் மற்றும் திரும்ப எடுக்கமுடியாது. மரணம் அல்லது முதிர்வு மூலம் ஈடுக்கோரலாக ஒப்பந்தம் மாறும்போது மட்டுமே பாலிசிதாரர் அவற்றை பெறுவதால், அவை 'மாற்றியமைப்பு போனஸ்' என்று அழைக்கப்படுகின்றன. ஒப்படைவு சமயத்திலும் போனஸ் வழங்கப்படலாம். ஆனால் இதற்காக தகுதி பெற, பெரும்பாலும் ஒப்பந்தம் ஒரு குறிப்பிட்ட காலம் வரை இயக்கத்தில் இருந்திருக்க வேண்டும் (5 ஆண்டுகள் என கூறலாம்) என்ற நிபந்தனை விதிக்கப்படும்.

**மாற்றியமைப்பு போனஸ் வகைகள்**

**வரைப்படம்** 3: **மாற்றியமைப்பு போனஸ் வகைகள்**




**i. எளிய மாற்றியமைப்பு போனஸ்**

இது ஒப்பந்தத்தின்கீழ் அடிப்படை பண நன்மையில் ஒரு சதவீதமாக காட்டப்படும் போனஸ் ஆகும். உதாரணமாக, இந்தியாவில், காப்பீடுத் தொகையின் ஒவ்வொரு ஆயிரத்திற்கும் ஒரு தொகையாக அறிவிக்கப்படுகிறது.

### ii. கூட்டு போனஸ்

இங்கே ஒரு நிறுவனம் போனஸை அடிப்படை நன்மைகளின் சதவீதமாக மற்றும் ஏற்கனவே இணைக்கப்பட்ட போனஸ்களாக காட்டுகிறது. இதனால் இது போனஸின் மீதுள்ள ஒரு போனஸ் ஆகும். அதை வெளிப்படுத்தும் ஒரு வழி, அடிப்படை காப்புத்தொகை மீது @ 8%, அத்துடன் இணைக்கப்பட்ட போனஸை கூட்டவும்.

### iii. இறுதி போனஸ்

பெயரில் குறிப்பிடப்பட்டதை போலவே, ஒப்பந்தம் முடிவுறும் போது (மரணம் அல்லது முதிர்வு மூலம்) இந்த போனஸ் ஒப்பந்தத்துடன் இணைகிறது. அடுத்த ஆண்டில் எழும் ஈடுக்கோரல்களுக்கு மட்டுமே இது பொருந்தும். இதனால் 2013-இல் அறிவிக்கப்பட்ட இறுதி போனஸ் 2013-14 ஆண்டில் எழும் ஈடுகோரல்களுக்கு மட்டுமே பொருந்தும் மற்றும் அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு பொருந்தாது. இறுதி போனஸ்கள் ஒப்பந்த காலத்தை சார்ந்தது மற்றும் அதிகரிக்கும் காலத்துடன் அதிகரிக்கும். இதனால் 25 ஆண்டுகளாக நடப்பில் இருக்கும் ஒப்பந்தத்தில் கிடைக்கும் இறுதி போனஸ் 15 ஆண்டுகளாக நடப்பில் இருக்கும் ஒப்பந்தத்தைவிட அதிகமாக இருக்கும்.

## 3. பங்களிப்பு முறை

வட அமெரிக்காவில் ஏற்கப்பட்ட உபரி விநியோகத்தின் மற்றொரு முறை "பங்களிப்பு" முறை ஆகும். இந்த முறையின்கீழ் - இறப்பு, வட்டி மற்றும் செலவுகளை பொறுத்தவரை, அந்த வருடத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையாக நடந்ததற்கும் இடையே உள்ள வித்தியாசம் உபரியை தருகிறது மற்றும் அது ஈவுத்தொகையாக அறிவிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

ஈவுத்தொகையை ரொக்கமாக, எதிர்கால பிரீமியங்களில் சரிசெய்தல்/குறைப்பு மூலம், பாலிசியில் பறிமுதல்-செய்யமுடியாத (non-forfeitable) செலுத்திய கூடுதல் தொகையை வாங்க அனுமதிப்பதன் மூலமாகவோ அல்லது பாலிசியில் வரவு வைத்தோ சேர்க்கப்படலாம்.

## 4. யூனிட் லிங்க்ட் பாலிசிகள்

யூலிப் பாலிசிகளின் விலை நிர்ணயம் மற்றும் பிற அம்சங்கள் ஏற்கனவே முந்தைய அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன.

## சுருக்கம்

- சாதாரண மொழியில், பிரீமியம் என்ற சொல் ஒரு காப்பீட்டு பாலிசியை வாங்குவதற்காக காப்பீடு பெறுபவர் செலுத்தும் விலையை குறிக்கிறது.
- ஆயுள் காப்பீட்டு பாலிசிகளில் பிரீமியம் அமைக்கும் பணியில் இறப்பு, நலன்கள், செலவு மேலாண்மை மற்றும் கையிருப்புக்கள் கருதப்படுகின்றன.
- மொத்த பிரீமியம் நிகர பிரிமியத்துடன் ஏற்றுதல் என்ற ஒரு அளவை கூட்டி கிடைக்கிறது.
- ஒரு காலங்கழிதலுக்கு அர்த்தம் பாலிசிதாரர் பிரீமியம் செலுத்துவதை நிறுத்திவிடுகிறார். விலகிக்கொள்ளும் வழக்கில், பாலிசிதாரர் பாலிசியை ஒப்படைத்து மற்றும் பாலிசியில் சேகரிக்கப்பட்ட பண மதிப்பில் இருந்து ஒரு தொகையை பெறுகிறார்.
- ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் உண்மையான அனுபவம் கருதப்பட்ட அனுபவத்தை விட சிறந்ததாக இருப்பதன் விளைவாக உபரி எழுகிறது.
- உபரி நிதி ஒதுக்கீடை கடன் தீர்க்கும் திறனுக்காக மற்றும் சுதந்திரமான சொத்துக்களை அதிகரிப்பதற்காக தக்கவைத்து கொள்ள முடியும்.
- போனஸின் மிக பொதுவான வடிவம் மாற்றியமைப்பு போனஸ் ஆகும்.

## முக்கியமான வார்த்தைகள்

1. பிரீமியம்
2. தள்ளுபடி
3. போனஸ்
4. உபரி
5. கையிருப்பு
6. ஏற்றுதல்
7. மாற்றியமைப்பு போனஸ் (Reversionary Bonus)

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் L-07

# ஆயுள் காப்பீட்டு ஆவணமாக்கல்

**அத்தியாய அறிமுகம்**

காப்பீட்டுத் துறையில் அதிக எண்ணிக்கையிலான படிவங்கள் மற்றும் ஆவணங்கள் கையாளப்படுவதை பற்றி அத்தியாயம் 7 இல் பார்த்தோம். ஆயுள் காப்பீட்டிற்கு என குறிப்பிட்ட சில ஆவணங்கள் உள்ளன, அவை இந்த அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன. இங்கே, பாலிசி ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள முக்கிய விதிகளை பற்றியும் நாங்கள் விவாதிக்கிறோம். சலுகைக் காலம், பாலிசி காலங்கழிதல் மற்றும் பறிமுதல்-செய்யாமல் இருப்பது மற்றும் வேறு சில சலுகைகள் தொடர்பான விதிகளும் விவாதிக்கப்படுகின்றன.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

A. முன்மொழிவு கட்டத்தின் ஆவணமாக்கல்

B. பாலிசி கட்ட ஆவணமாக்கல்

C. பாலிசி நிலைகள் மற்றும் சலுகைகள்

## A. முன்மொழிவு கட்டத்தின் ஆவணமாக்கல்

அத்தியாயம் 7 இல் தகவல் ஏடு மற்றும் முன்மொழிவு படிவம் பற்றி விவாதிக்கப்பட்ட பொதுவான விவரங்களுடன் கூடுதலாக, ஆயுள் காப்பீட்டாளர்கள் புரிந்து கொள்ள வேண்டிய சில கூடுதல் விவரங்கள் உள்ளன.

**தகவல் ஏடு**: காப்பீட்டில், 'தகவல் ஏடு' என்பது, காப்பீட்டுத் தயாரிப்பை விற்க அல்லது விளம்பரப்படுத்த, காப்பீட்டாளரால் வழங்கப்பட்ட காகிதவடிவ, மின்னணு அல்லது வேறு ஏதேனும் வடிவத்தில் உள்ள ஆவணம். காப்பீட்டுத் தயாரிப்பின் தகவல் ஏடு பின்வருவதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

a) சம்பந்தப்பட்ட காப்பீட்டுத் தயாரிப்புக்காக ஆணையத்தால் ஒதுக்கப்பட்ட தனித்துவமான அடையாள எண் (UIN):

b) நன்மைகளின் நோக்கம்;

c) காப்பீட்டுத் திட்டத்தின் அளவு;

d) விளக்கங்களுடன் காப்பீட்டுத் தொகைக்கான உத்தரவாதங்கள், விலக்குகள்/விதிவிலக்குகள்

தகவல் ஏடு மேலும் வழங்க வேண்டியவை::

a) காப்பீடு மூலம் காப்பளிக்கப்படும் தற்செயல் நிகழ்வு அல்லது தற்செயல் நிகழ்வுகளின் விளக்கம்;

b) அத்தகைய தகவல் ஏடின் விதிமுறைகளின் கீழ் காப்பீட்டுக்கு தகுதியான வாழ்க்கை அல்லது சொத்துக்களின் வர்க்கம் அல்லது வர்க்கங்கள்

ஆயுள் காப்பீட்டில் தகவல் ஏட்டில் தயாரிப்பு மீது அனுமதிக்கப்படும் ரைடர்கள் (கூடுதல் காப்புகள் என்றும் அழைக்கப்படுகிறது) மற்றும் அவற்றின் நன்மைகளும் குறிப்பிடப்பட வேண்டும்.

**முன்மொழிவு படிவம்:** ஆயுள் காப்பீட்டைப் பொறுத்தவரை, முன்மொழிபவர்களின் குடும்ப உறுப்பினர்களின் (பெற்றோர் உட்பட) விவரங்கள், அதாவது அவர்களின் நீண்ட ஆயுட்காலம், உடல்நிலை மற்றும் அவர்களில் எவரையாவது பாதித்த நோய்களை பற்றி முன்மொழிவு படிவத்தின் மூலம் சேகரிக்கப்படுகின்றன. தயாரிப்பைப் பொறுத்து, காப்பீட்டுக்காக முன்மொழியப்பட்ட ஆயுளின் மருத்துவ விவரங்கள், அவருடைய தனிப்பட்ட நோய் வரலாறு மற்றும் தனிப்பட்ட குணாதிசயங்களும் கேட்கப்படலாம். முன்மொழிவுப் படிவம் என்பது

காப்பீட்டாளர்கள் தங்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் வாய்ப்பாளரிடம் இருந்து பெறும் ஆவணமாகும்.

காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 45, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தரப்பட்ட தவறான அறிக்கையின் அடிப்படையில் பாலிசியை கேள்விக்கு உள்ளாக்க முடியாது என்று வழங்குகிறது. முன்மொழிவுப் படிவம்/மருத்துவப் படிவங்கள் போன்றவற்றில் உள்ள அனைத்துக் கேள்விகளுக்கும் உண்மையாகப் பதில் அளிப்பதற்கும், பிரிவு 45-ன் அடிப்படையில் அவ்வாறு செய்யாததால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதிலும் முகவர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

ஆயுள் காப்பீட்டுக்கான முன்மொழிவு படிவங்கள் சட்டத்தின் பிரிவு 45 இன் தேவைகளைக் குறிப்பிட வேண்டும். ஆயுள் காப்பீட்டை பெறுவதற்கான முன்மொழிவுப் படிவத்தில் உள்ள கேள்விகளுக்கு வாய்ப்பாளர்கள் பதிலளிக்கும் போது, அவர்களை சட்டத்தின் 45-வது பிரிவின் விதிமுறைகளின்படி வழிநடத்த வேண்டும்.

அதேபோல், சட்டத்தின் பிரிவு 39 நியமனம் செய்வது பற்றியது. முன்மொழிபவருக்கு நியமனம் செய்வதற்கான வசதி இருக்கும் இடங்களில், முகவர் அவருக்கு சட்டத்தின் பிரிவு 39 இன் விதிமுறைகள் குறித்துத் தெரிவித்து, முன்மொழிபவரை அந்த வசதியை பயன்படுத்துமாறு ஊக்குவிக்க வேண்டும்.

முன்மொழிபவரின் பணிக்காலம், எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் வருமானம் மற்றும் செலவுகள், அத்துடன் சேமிப்பு மற்றும் முதலீடு, உடல்நலம், ஓய்வு மற்றும் காப்பீடு ஆகியவற்றுக்கான தேவைகள் உட்பட அவருடைய தனிப்பட்ட நிதித் திட்டமிடல் தொடர்பான அம்சங்கள், ஆயுள் காப்பீட்டு முன்மொழிவு படிவத்தில் கேட்கப்படலாம்.

காப்பீடு செய்யப்பட வேண்டிய ஆயுளின் அபாய விவரத்தை மதிப்பிடுவதற்கு வயது ஒரு முக்கிய காரணியாகும், ஆயுள் காப்பீட்டாளர்கள் சரியான வயதைச் சரிபார்க்க ஆவணச் சான்றுகளைச் சேகரிக்கின்றனர். அத்தியாயம் 7 இல் விவாதிக்கப்பட்டுள்ளபடி, சரியான வயதுச் சான்றுகள் தரமானதாகவோ அல்லது தரமற்றதாகவோ இருக்கலாம்.

ஆயுள் காப்பீட்டாளர்கள் பின்வரும் ஆவணங்களையும் பார்க்கிறார்கள்.

a) **முகவரின் இரகசிய அறிக்கை**

முகவர் முதன்மை ஏற்பாளராக இருக்கிறார். அபாய மதிப்பீடு தொடர்புடைய பாலிசிதாரர் பற்றிய அனைத்து உண்மை தகவல்களையும் மற்றும்

விவரங்களையும், முகவர் அவரது அறிக்கையில் தெரிவிக்க வேண்டும். ஆரோக்கியம், பழக்கங்கள், தொழில், வருமானம் மற்றும் குடும்ப விவரங்களை அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.

b) **மருத்துவ ஆய்வாளரின் அறிக்கை**

பல சந்தர்ப்பங்களில், காப்பீட்டு நிறுவனத்தின் பேனலில் உள்ள மருத்துவர் மூலம் ஆயுள் காப்பீடு பெறுபவர் மருத்துவரீதியாக ஆய்வு செய்யப்பட வேண்டும். மருத்துவ ஆய்வாளரின் அறிக்கையில் உயரம், எடை, ரத்த அழுத்தம், இதய நிலை போன்ற உடல் அம்சங்கள் தொடர்பான விவரங்களை மருத்துவ ஆய்வாளர் பதிவு செய்து குறிப்பிடவேண்டும்.

பல திட்டங்கள் ஏற்பளிக்கப்பட்டு மற்றும் ஒரு மருத்துவ பரிசோதனையை கோராமலேயே காப்பீடிற்காக ஏற்கப் படுகின்றன. அவை மருத்துவ ஆய்வு-இல்லாத காப்பீடுகள் என அறியப்படுகிறது. ஆயுள் காப்பீடு பெறுபவரின் வயது அதிகமாக அல்லது முன்மொழியப்பட்ட காப்பீடுத் தொகை அதிகமாக இருப்பதால் முன்மொழிபவரை மருத்துவ ஆய்வு இல்லாமல் காப்பீடிற்கு கருத முடியாத நிலை அல்லது முன்மொழிவில் வெளியிடப்பட்ட சில பண்புகளுக்கு மருத்துவ பரிசோதனை தேவை என்றால், பொதுவாக மருத்துவ ஆய்வாளரின் பரிசோதனை மற்றும் அறிக்கை தேவைப்படுகிறது.

c) **நெறிமுறை சார்ந்த இன்னல் அறிக்கை**

ஒரு ஆயுள் காப்பீடு பாலிசியை வாங்கியதன் விளைவாக ஒரு வாடிக்கையாளரின் நடத்தை மாறி மற்றும் அந்த மாற்றம் இழப்பின் வாய்ப்பை அதிகரிக்கும் சாத்தியம் என நெறிமுறைசார்ந்த இன்னலை வரையறுக்கலாம்.

ஆயுள் காப்பீடை வாங்கிவிட்டு, தன் சொந்த வாழ்க்கை அல்லது வேறொருவரின் வாழ்க்கையை முடிக்கும் நடவடிக்கைகள் மூலம் இலாபத்தை பெற கோரும் வாய்ப்புள்ள தனிநபர்களுக்கு எதிராக ஆயுள் காப்பீடு நிறுவனங்கள் தங்களை பாதுகாக்க முயல்கின்றன. ஆயுள் காப்பீடு ஏற்பாளர்கள் இதனால் இந்த மாதிரி இன்னலை பரிந்துரைக்கும் எந்த காரணிகளையும் கவனமாக பார்க்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக, ஒரு நெறிமுறை சார்ந்த இன்னல் அறிக்கையை காப்பீட்டு நிறுவனத்தின் ஒரு அதிகாரி சமர்ப்பிக்க வேண்டும் என்று நிறுவனம் கோரலாம்.

**எடுத்துக்காட்டு**

விகாஸ் சமீபத்தில் ஒரு ஆயுள் காப்பீடு பாலிசியை வாங்கினார். பின்னர் அவர் பூமியில் மிகவும் ஆபத்தானதாக கருதப்பட்ட பனிச்சறுக்கு இடத்திற்கு பனிச்சறுக்கு சுற்றுப்பயணம் செல்ல முடிவு செய்தார். ஆனால் அதற்கு முன்

கடந்த காலத்தில் அவர் அதை போன்ற பயணங்களை மேற்கொள்ள மறுத்திருக்கிறார்.

## B. பாலிசி கட்ட ஆவணமாக்கல்

### 1. முதல் பிரீமியம் ரசீது

ஆயுள் காப்பீடு நிறுவனம் முதல் பிரீமியம் ரசீதை (First Premium Receipt -FPR) வழங்கும் போது ஒரு காப்பீடு ஒப்பந்தம் துவங்குகிறது.

**பாலிசி ஒப்பந்தம் தொடங்கியுள்ளதற்கு சான்றாக FPR உள்ளது.** முதல் பிரீமியம் ரசீது பின்வரும் தகவலை கொண்டிருக்கிறது:

- **i.** ஆயுள் காப்பீடு பெற்றவரின் பெயர் மற்றும் முகவரி
- **ii.** பாலிசி எண்
- **iii.** கட்டப்பட்ட பிரீமியம் தொகை
- **iv.** பிரீமியம் செலுத்தும் முறை மற்றும் அதிர்வெண்
- **v.** பிரீமியம் செலுத்தவேண்டிய அடுத்த கெடு தேதி
- **vi.** அபாயத்தின் காப்பு துவங்கும் தேதி
- **vii.** பாலிசியின் இறுதி முதிர்வு தேதி
- **viii.** கடைசி பிரீமியம் செலுத்தப்பட்ட தேதி
- **ix.** காப்பீடுத் தொகை

FPR வழங்கப்பட்ட பிறகு. முன்மொழிபவரிடம் இருந்து மேலும் பிரீமியங்களை பெறும்போது அடுத்தடுத்த பிரீமியம் ரசீதுகளை காப்பீட்டு நிறுவனம் வெளியிடும். இந்த ரசீதுகள் புதுப்பித்தல் பிரீமியம் ரசீதுகள் (Renewal Premium Receipt -RPR) என்று அழைக்கப்படுகின்றன. பிரீமியம் கட்டப்பட்ட விஷயத்தில் ஏதாவது சர்ச்சைகள் ஏற்பட்டால் பணம் கட்டியதற்கான சான்றாக RPR-கள் செயல்படும்

### 2. பாலிசி ஆவணம்

பாலிசி ஆவணம் என்பது காப்பீடு தொடர்புடைய மிக முக்கியமான ஆவணம். **இது காப்பளிக்கப்படுபவர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் இடையே உள்ள ஒப்பந்தத்தின்** சான்றாக உள்ளது. அதுவே ஒப்பந்தம் அல்ல. பாலிசி ஆவணத்தை பாலிசிதாரர் தொலைத்துவிட்டால், அது காப்பீடு ஒப்பந்தத்தை பாதிக்காது. காப்பீட்டு நிறுவனம் ஒப்பந்தத்தில் எந்த மாற்றங்களையும்


செய்யாமல் ஒரு நகல் பாலிசியை வழங்கும். பாலிசி ஆவணம் ஒரு தகுதிவாய்ந்த அதிகாரியால் கையெழுத்திடப்பட வேண்டும் மற்றும் இந்திய முத்திரை சட்டத்தின் படி முத்திரையிடப்பட வேண்டும். ஆயுள் காப்பீட்டாளர்கள் பாலிசி ஆவணத்தை வடிவமைக்கும் போது மிக கவனமாக இருக்கிறார்கள், ஏனெனில் அதன் வார்த்தைகளின் விளக்கத்தில் எழக்கூடிய தெளிவின்மை அல்லது குழப்பத்திற்கு அவர்கள் தான் பொறுப்பேற்க வேண்டும்.

தரமான பாலிசி ஆவணத்தில் பொதுவாக மூன்று பாகங்கள் உள்ளன:

**a) பாலிசி அட்டவணை**

பாலிசி அட்டவணை முதல் பகுதியாக உள்ளது. இது பொதுவாக பாலிசியின் முகப்பு பக்கத்தில் காணப்படுகிறது. ஆயுள் காப்பீடு ஒப்பந்தங்களின் கால அட்டவணைகள் பொதுவாக ஒரேமாதிரி இருக்கின்றன. அவற்றில் வழக்கமாக பின்வரும் தகவலை கொண்டிருக்க வேண்டும்:

**வரைப்படம்** 1: பாலிசி ஆவணக் கூறுகள்




i. காப்பீட்டு நிறுவனத்தின் பெயர்

ii. ஒரு பாலிசிக்கான சில குறிப்பிட்ட விவரங்கள்:

- ✓ பாலிசி உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி
- ✓ பிறந்த தேதி மற்றும் கடந்த பிறந்த தேதியன்று அவர் வயது
- ✓ திட்டம் மற்றும் பாலிசியின் ஒப்பந்த காலம்
- ✓ காப்பீடுத் தொகை
- ✓ பிரீமியம் தொகை
- ✓ பிரீமியம் செலுத்தும் காலம்
- ✓ துவங்கிய தேதி, முதிர்வு தேதி மற்றும் கடைசி பிரீமியத்தின் உரிய தேதி

- ✓ பாலிசி இலாபத்துடன் உள்ளதா அல்லது இலாபம் இல்லாமல் உள்ளதா
- ✓ நியமிக்கப்பட்டவரின் பெயர்
- ✓ பிரீமியம் செலுத்தும் முறை - ஆண்டில்; அரையாண்டில்; காலாண்டில்; மாதாந்திர; சம்பளத்தில் இருந்து கழிக்கப்படுவது
- ✓ பாலிசி எண் - பாலிசி ஒப்பந்தத்தின் தனிப்பட்ட அடையாள எண் ஆகும்

iii. காப்பீட்டு நிறுவனத்தின் பணம் வழங்குவதற்கான வாக்குறுதி. எந்த நிகழ்வுகள் நடந்தால் வழங்கப்படும் மற்றும் அதற்காக உறுதியளிக்கப்பட்ட தொகைகள். இது காப்பீட்டு ஒப்பந்தத்தின் பிரதான பகுதியாக உள்ளது

iv. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் கையெழுத்து மற்றும் பாலிசி முத்திரை

v. உள்ளூர் காப்பீடு குறைதீர் அதிகாரியின் முகவரி.

**b) தரமான விதிமுறைகள்**

பாலிசி ஆவணத்தின் இரண்டாவது கூறு அனைத்து ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்களிலும் பொதுவாக இருக்கும் வயதுச் சான்று, பிரீமியம் செலுத்தும் சலுகைக் காலம் போன்ற தரமான பாலிசி விதிமுறைகள் ஆகும், மற்றும் பொதுவாக அனைத்து ஆயுள் காப்பீடு ஒப்பந்தங்களிலும் இது உள்ளது. இந்த விதிமுறைகளில் சில காலக்காப்பீடு, ஒற்றை பிரீமியம் அல்லது பங்கேற்காத (இலாபத்துடன் உள்ள) பாலிசிகள் போன்ற ஒப்பந்தங்களில் பொருந்தாததாக இருக்கலாம். இந்த தரமான விதமுறைகள், ஒப்பந்தத்தின்கீழ் அமலாகின்ற உரிமைகள் மற்றும் சலுகைகள் மற்றும் பிற நிபந்தனைகளை வரையறுக்கின்றன.

**c) குறிப்பிட்ட பாலிசி விதிகள்**

பாலிசி ஆவணத்தின் மூன்றாவது கூறு தனிநபர் பாலிசி ஒப்பந்தத்திற்கு மட்டும் பொருந்தும் குறிப்பிட்ட பாலிசி விதிகளாக உள்ளன. இவை ஆவணத்தின் முகப்பு பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும் அல்லது ஒரு இணைப்பு வடிவில் தனியாக சேர்க்கப்படும்.

சலுகை நாட்கள் அல்லது காலங்கழிதல் வழக்கில் பறிமுதல்-செய்யாமல் இருப்பது போன்ற தரமான பாலிசி விதிமுறைகள் சட்டபூர்வ ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும் போது, குறிப்பிட்ட விதிமுறைகள் பொதுவாக காப்பீடு

நிறுவனம் மற்றும் காப்பீடு பெறுபவருக்கும் இடையே உள்ள குறிப்பிட்ட ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.

**எடுத்துக்காட்டு**

ஒப்பந்தம் எழுதும் நேரத்தில் கர்ப்பமாக உள்ள பெண் கர்ப்பத்தின் காரணமாக மரணம் அடைவதை முன்கூட்டியே விலக்கும் ஒரு விதி.

**சுய-பரீட்சை** 1

முதல் ப்ரீமியம் ரசீது (FPR) என்ன சுட்டிக்காட்டுகிறது? மிகவும் பொருத்தமான விருப்பத்தை தேர்ந்தெடுக்கவும்.

I. இலவச-பார்வை காலம் முடிவடைந்தது

II. இது பாலிசி ஒப்பந்தம் தொடங்கியதற்கான சான்று

III. பாலிசியை தற்போது ரத்து செய்யமுடியாது

IV. பாலிசி ஒரு குறிப்பிட்ட பண மதிப்பை திரட்டிவிட்டது

## C. பாலிசி நிபந்தனைகள் மற்றும் சலுகைகள்

### சலுகை காலம்

அத்தியாயம் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சலுகை காலம் என்கிற ஏற்பாடு, பிரீமியம் கட்டாத காரணத்தால் காலங்கழிந்து விட்டிருக்கும் பாலிசியை, சலுகை காலம் வரை தொடர்ந்து அமலில் இருப்பதை செயல்படுத்துகிறது. ஒவ்வொரு ஆயுள் காப்பீடு ஒப்பந்தமும் பிரீமியங்கள் கடைசி தேதி வரை கட்டப்பட்டு மற்றும் பாலிசி அமலில் உள்ளதா என்று நிபந்தனையில் தான் மரண நன்மையை வழங்க மேற்கொள்கிறது. "சலுகை கால" பிரிவு கெடு தேதிக்கு பிறகு பாலிசிதாரருக்கு பிரீமியத்தை செலுத்துவதற்கு கூடுதல் கால அவகாசத்தை வழங்குகிறது.

எனினும் பிரீமியம் கட்டவேண்டிய தொகையாகவே இருப்பதால், பாலிசிதாரர் இந்த காலகட்டத்தில் இறந்துவிட்டால், காப்பீட்டு நிறுவனம் மரண நன்மையில் இருந்து பிரீமியத்தை கழிக்கலாம். சலுகை காலம் முடிந்தும் பிரீமியங்கள் கட்டப்படாமல் இருந்தால், பாலிசி பின்னர் காலங்கழிந்ததாக கருதப்படுகிறது மற்றும் நிறுவனத்திற்கு மரண நன்மையை செலுத்தவேண்டிய எந்த கடமையும் இல்லை. பறிமுதல்-இல்லாமை விதிமுறைகளின்கீழ் செலுத்தவேண்டிய அளவு மட்டுமே செலுத்தவேண்டி இருக்கும்.

## முக்கியமானவை

### காலங்கழிதல் மற்றும் மறுசீரமைப்பு / மறுமலர்ச்சி / மீட்டுயிர்ப்பித்தல்

ஒரு பாலிசியின் பிரீமியம் சலுகை காலத்தில் கூட கட்டப்படாவிட்டால் பாலிசி காலங்கழிந்த நிலையில் இருப்பதாக கருதப்படும் என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். நல்ல செய்தி என்னவென்றால் நடைமுறையில் உள்ள பெரும்பாலான ஆயுள் காப்பீட்டு பாலிசிகளை காலங்கழிந்த பிறகும் மீண்டும் அமலில் கொண்டு வரலாம் [**மீட்டுயிர்ப்பித்தல்** செய்யப்படலாம்]. ஐஆர்டிஏஐ தயாரிப்பு விதிமுறைகளின்படி, இணைக்கப்படாத பாலிசியை செலுத்தப்படாத பிரீமியம் தேதியிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் மீட்டுயிர்ப்பித்தலை செய்ய முடியும், அதேசமயம் இணைக்கப்பட்ட பாலிசியை 3 ஆண்டுகளுக்குள் மீட்டுயிர்ப்பித்தலை செய்ய முடியும்.

## வரையறை

மறுநியமனம் என்பது பிரீமியங்களை செலுத்தாமல் நிறுத்தப்பட்ட அல்லது பறிமுதல்-இல்லாமை விதிகளில் ஒன்றின்கீழ் தொடர்கிற ஒரு பாலிசியை ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மீண்டும் அமலில் கொண்டு வரும் வழிமுறையாகும்.

எனினும் பாலிசியின் மீட்டுயிர்ப்பித்தல் காப்பீடு செய்தவரின் நிபந்தனையற்ற உரிமையாகவும் இருக்க முடியாது. சில நிபந்தனைகளின்கீழ் மட்டுமே அது நிறைவேற்றப்படுகிறது:

i. **குறிப்பிட்ட காலத்திற்குள் மீட்டுயிர்ப்பித்தலுக்கான விண்ணப்பம்**: மறுநியமனத்திற்கான விதிமுறைகளில் குறிப்பிடப்பட்ட காலக்கட்டத்திலேயே பாலிசியின் உரிமையாளர் புத்தாக்க விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும், அதாவது காலங்கழிந்த தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை என கூறலாம்.

ii. **காப்பீடை தொடர்வதற்கான தகுதிக்கான திருப்தியான ஆதாரம்:** காப்பீடு பெற்றவர் காப்பீடு தொடர்வதற்கான தகுதிக்கான திருப்தியான ஆதாரத்தை காப்பீட்டு நிறுவனத்திடம் முன்வைக்க வேண்டும். அவரது உடல்நலம் மட்டும் திருப்திகரமாக இருந்தால் போதாது, நிதி வருவாய் மற்றும் ஒழுக்கம் போன்ற மற்ற காரணிகள் கணிசமாக சீரழியாமல் இருந்திருக்கவேண்டும்.

iii. **பணம் செலுத்த தாமதமான பிரீமியங்களை வட்டியுடன் செலுத்துவது**: பாலிசிதாரர் பணம் செலுத்த தாமதமான அனைத்து

பிரீமியங்களையும் அதன் கெடு தேதியில் இருந்து கணக்கிட்டு வட்டியுடன் செலுத்த வேண்டும்.

iv. காப்பீடை தொடர்வதற்கான தகுதிக்கான சான்றுகளை மதிப்பாய்வு செய்த பிறகு, காப்பீட்டாளர் ஏற்கனவே உள்ள விதிமுறைகள் மற்றும் பிரீமியத்தின்படி பாலிசியை மீட்டுயிர்ப்பித்தல் செய்ய முடிவு செய்யலாம் அல்லது பிரீமியத்தின் அதிகரிப்பு அல்லது குறைக்கப்பட்ட அபாய காப்பு அல்லது இரண்டு நிபந்தனைகளையுமே வைத்து புத்தாக்கத்தை வழங்கலாம்.

**மீட்டுயிர்ப்பித்தல் சமயத்தில் காப்பீட்டு தகுதிக்கான ஆதாரம் தேவை என்பதே மேலுள்ள நிபந்தனைகளில் மிக முக்கியமானது என கூறலாம்.** கோரப்படும் ஆதார வகை ஒவ்வொரு தனி பாலிசியின் சூழ்நிலைகளை சார்ந்திருக்கும். பாலிசி மிக குறுகிய காலத்திற்கே காலங்கழிந்த நிலையில் இருந்தால், காப்பீட்டு நிறுவனம் காப்பீட்டு தகுதிக்கான எந்த ஆதாரமும் இல்லாமல் பாலிசியை மீண்டும் மீட்டுயிர்ப்பித்தல் செய்யலாம் அல்லது காப்பீடு பெறுபவரிடம் அவர் நல்ல உடல் நலத்துடன் இருப்பதற்கான சான்று மாதிரி ஒரு எளிய அறிக்கையை மட்டும் கோரலாம்

எனினும் கீழே தரப்பட்டுள்ள சில சூழ்நிலைகளில் நிறுவனத்திற்கு மருத்துவ பரிசோதனை அல்லது காப்பீட்டு தகுதிக்கான பிற ஆதாரங்கள் தேவைப்படலாம்:

i. நீண்ட காலத்திற்கு முன்பே சலுகை காலம் காலாவதியாகிவிட்டது மற்றும் பாலிசி கிட்டத்தட்ட ஒரு வருடமாக காலங்கழிந்த நிலையில் உள்ளது.

ii. மற்றொரு நிலைமை காப்பீட்டாளருக்கு உடல்நல அல்லது வேறு ஏதாவது பிரச்சனை இருக்கலாம் என்று காப்பீட்டாளர் சந்தேகிப்பதற்கான காரணம் இருக்கிறது. காப்பீட்டுத் தொகை அல்லது பாலிசியின் முகப்பு மதிப்பு பெரியதாக இருந்தால் புதிய மருத்துவ பரிசோதனையும் தேவைப்படலாம்.

**முக்கியமானவை**

காலங்கழிந்த பாலிசிகளின் மீட்டுயிர்ப்பித்தல் என்பது ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் தீவிரமாக ஊக்குவிக்கும் ஒரு முக்கியமான சேவை ஆகும், ஏனெனில் காலங்கழிந்த நிலையில் உள்ள பாலிசிகளால் காப்பீட்டு நிறுவனத்திற்கோ அல்லது பாலிசிதாரருக்கோ எந்தவித நன்மையும் கிடையாது.

## பறிமுதல்-இல்லாமை விதிமுறைகள்

காப்பீட்டுச் சட்டம், 1938 (பிரிவு 113) பிரீமியங்களைச் செலுத்தாவிட்டாலும் கூட, செலுத்தப்பட்ட காப்பீட்டுத் தொகையின் அளவிற்கு அவற்றை அமலில் வைத்திருப்பதன் மூலம், பாலிசிகளை (ஒப்படைவு மதிப்பைப் பெற்றவை) காலங்கழியாமல் பாதுகாக்கிறது. இதற்கு காரணம், பாலிசிதாரருக்கு பாலிசியின் கீழ் திரட்டப்பட்ட பண மதிப்பில் ஒரு ஈடுக்கோரல் உரிமை உள்ளது.

### a) ஒப்படைவு மதிப்புகள்

ஒப்படைவு மதிப்பு என்பது திட்டத்தில் இருந்து முன்கூட்டியே வெளியேற முடிவு செய்யும் போது, அதாவது பாலிசி முதிர்வுக்கு முன் முழுமையாக திரும்பப் பெற அல்லது நிறுத்த முடிவு செய்யும் போது உங்களுக்கு கிடைக்க வேண்டிய தொகையாகும்.

ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களிடம் பொதுவாக பல்வேறு நேரங்களில் உள்ள ஒப்படைவு மதிப்புகள் மற்றும் ஒப்படைவு மதிப்புகளை கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்படுகிற முறையை பட்டியலிடும் ஒரு விளக்கப்படம் கிடைக்கும். கணக்கிடும் சூத்திரத்தில் காப்பீடு திட்டம், பாலிசியின் வயது மற்றும் பாலிசிக்காக பிரீமியம்-செலுத்தும் காலம் கருதப்படும்.

கையில் கிடைக்கும் உண்மையான ஒப்படைவு பணத்தின் அளவு பாலிசியில் பரிந்துரைக்கப்பட்ட ஒப்படைவு மதிப்பில் இருந்து வேறுபடலாம். திரட்டப்பட்ட போனஸ்கள், மீட்டெடுப்புகள் போன்றவற்றின் அடிப்படையில் உண்மையான தொகை வேறுபடலாம்.

உத்தரவாதமளிக்கப்பட்ட ஒப்படைவு மதிப்பும் (**Guaranteed Surrender Value -GSV)** - ஐஆர்டிஏஐ வழிகாட்டுதல்களின்படி (**2019** இல் திருத்தப்பட்டது) இந்தியாவில் உள்ள சட்டம், அனைத்து பிரீமியங்களும் குறைந்தது இரண்டு வருடங்கள் தொடர்ந்து செலுத்தப்பட்டிருந்தால், உத்தரவாதமான ஒப்படைவு மதிப்பை [**GSV**] வழங்கியாக வேண்டும். செலுத்தப்பட்ட பிரீமியத்தின் சதவீதத்தில் (**30%** என்று கருதவும்) கணக்கிடப்படும் இந்த மதிப்பு உத்தரவாத ஒப்படைவு மதிப்பு என அழைக்கப்படுகிறது. செலுத்தப்பட்ட பிரீமியத்தின் கால அளவைப் பொறுத்து இந்த மதிப்பு இருக்கும். பாலிசி ஆவணத்தில் GSV குறிப்பிடப்பட வேண்டும்.

### b) பாலிசி கடன்கள்

பண மதிப்பை குவிக்கும் ஆயுள் காப்பீட்டு பாலிசிகளில், கடனுக்கு ஈடாக பாலிசியின் பணமதிப்பை பயன்படுத்தி காப்பீட்டு நிறுவனத்திடம் கடனை கோருவதற்காக உள்ள ஏற்பாடு பாலிசிதாரருக்கு கடன் பெறும் உரிமையை வழங்குகிறது. வழக்கமாக பாலிசியின் ஒப்படைவு மதிப்பின் சதவீத அளவுக்கு

மட்டுமே (அதாவது 90%) பாலிசி கடனை கட்டுப்படுத்தலாம். பாலிசிதாரர் தனது சொந்த கணக்கில் இருந்தே கடனை பெறுகிறார் என்பதை நினைவில் கொள்க. பாலிசியை ஒப்படைத்திருந்திருந்தால் அவருக்கு அந்த தொகையை பெறும் தகுதி இருந்திருக்கும். அந்த வழக்கில் காப்பீடு நிறுத்தப்பட்டிருக்கும்.

காப்பீட்டாளர்கள் பாலிசி கடன்கள் மீது வட்டி வசூலிக்கின்றனர், அதை அரை ஆண்டிற்கு அல்லது ஆண்டிற்கு ஒரு முறை கட்டவேண்டும். கடன் திருப்பி கட்டப்படாவிட்டால், காப்பீட்டாளர் செலுத்த வேண்டிய பாலிசி நன்மையில் இருந்து நிலுவையில் உள்ள (செலுத்தப்படாத) கடன் மற்றும் வட்டித் தொகையைக் கழிப்பார். நிதி அவசரநிலையின் போது பாலிசிதாரருக்கு கடன் நிவாரணம் அளிக்கிறது, அதே சமயத்தில் காப்பீட்டை அமலில் நீடித்து வைத்திருக்கிறது.

பாலிசியை ஈடாக வைத்தே கடன் வழங்கப்படும் என்பதால், பாலிசியை காப்பீட்டு நிறுவனத்தின் பெயரில் உரிமை மாற்றம் செய்யவேண்டும். மரணம் ஏற்பட்டால் பணத்தை பெறும் உரிமைக்கு பாலிசிதாரர் யாரையாவது நியமனம் செய்திருந்தால், இந்த உரிமை மாற்றம் அந்த நியமனத்தை ரத்து செய்யாது, ஆனால் காப்பீட்டு நிறுவனத்திற்கு பாலிசி மீதுள்ள உரிமை அளவிற்கு பெயர் நியமிக்கப்பட்டவரின் உரிமை பாதிக்கப்படும்.

**எடுத்துக்காட்டு**

பாலிசியின்கீழ் வழங்கப்பட வேண்டிய மொத்த இறப்பு ஈடு ரூ. 2.5 லட்சமாக இருந்த ஒரு ஆயுள் காப்பீட்டை அர்ஜுன் வாங்கியிருந்தார். பாலிசியின்கீழ் நிலுவையில் இருந்த அர்ஜுனின் கடன் மற்றும் வட்டி ரூ. 1.5 லட்சமாக இருந்தது. எனவே அர்ஜுனின் மரணம் ஏற்படும் நிகழ்வில், நியமிக்கப்பட்டவருக்கு மீதியுள்ள ரூ. 1 லட்சத்தை பெறும் தகுதி உள்ளது.

## சிறப்பு பாலிசி விதிகள் மற்றும் மேல்குறிப்புகள்

### a) நியமனம்

i. காப்பீடு சட்டம் 1938-இன் பிரிவு 39-இன் கீழ், தன் சொந்த ஆயுளின்மீது பாலிசி வைத்திருப்பவர், அவரது மரணம் ஏற்பட்டால் பாலிசியின் கீழுள்ள காப்பீடுத் தொகை செலுத்தப்பட வேண்டிய நபர் அல்லது நபர்களின் பெயரை நியமிக்க முடியும்.

ii. காப்பளிக்கப்பட்டவர் **ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களின்** பெயர்களை நியமிக்க முடியும்.

iii. பெயர் நியமிக்கப்பட்டவர்களுக்கு **செல்லுபடியாகும் நிறைவேற்றல்** உரிமை உள்ளது மற்றும் உரிமையுள்ளவர்களின் சார்பாக ஒரு அறங்காவலராக பணத்தை பராமரிக்கவேண்டும்.

iv. **பாலிசியை வாங்கும் நேரத்தில்** அல்லது அதற்கு பின்னரும் பாலிசியின் முதிர்வு நேரத்திற்கு முன்னால் பெயர் நியமனத்தை செய்யமுடியும்

v. பாலிசி உரையில் அல்லது பாலிசியில் ஒரு மேற்குறிப்பு மூலம் நியமனம் இணைக்கப்படலாம். இந்த நியமனங்கள் காப்பீட்டாளரிடம் தெரிவிக்கப்பட்டு, பாலிசி தொடர்பான பதிவுகளில் காப்பீட்டாளரால் பதிவு செய்யப்பட வேண்டும்.

vi. வழக்கிற்கு ஏற்ப, பாலிசி முதிர்வடைவதற்கு முன்பு எந்த நேரத்திலும் நியமனம் ஒரு மேற்குறிப்பு அல்லது உயில் மூலம் ரத்து செய்யப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.

**முக்கியமானவை**

பெயர் நியமனம் நியமிக்கப்பட்டவருக்கு காப்பளிக்கப்பட்டவருக்கு மரணம் ஏற்படும் நிகழ்வில் பாலிசி பணத்தை பெறும் உரிமையை கொடுக்கிறது. இருப்பினும், பணம் சட்டப்பூர்வ வாரிசுக்கு மட்டுமே சொந்தமானது. **ஒரு நியமிக்கப்பட்டவருக்கு மொத்த (அல்லது பகுதி) ஈடுக்கோரலில் எந்த உரிமையும் கிடையாது.** இருப்பினும், காப்பீட்டுச் சட்டம், 1938 இன் பிரிவு 39(7) இன் படி, 26 டிசம்பர் 2014க்குப் பிறகு பணம் வழங்கவதற்காக முதிர்வடையும் அனைத்து பாலிசிகளுக்கும், அவரது/சொந்த பெயரில் ஆயள் பாலிசியை வைத்திருக்கும் உரிமையாளர் தன் பெற்றோர், துணைவர், குழந்தைகள் அல்லது மனைவி மற்றும் குழந்தைகளின் பெயரில் பெயர் நியமனத்தை செய்வதன் மூலம். ஆயுள் காப்பீட்டு நிறுவனம் வழங்கும் நன்மைகளை பெற நியமிக்கப்பட்டவர்களுக்கு உரிமையை வழங்குகிறார்.

---


பெயர் நியமிக்கப்பட்டவர் ஒரு சிறாராக இருக்கும்போது, பாலிசிதாரர் இன்னொருவரை அமர்த்த வேண்டும். அமர்த்தப்பட்டவராக செயல்பட அவரது ஒப்புதலை காட்ட பாலிசி ஆவணத்தில் அவர் கையெழுத்திட வேண்டும். பெயர் நியமிக்கப்பட்டவர் வயது வந்தவருக்கான வயதை அடையும் போது அமர்த்தப்பட்டவர்கள் தங்கள் நிலையை இழக்கின்றனர். எந்த நேரத்திலும் அமர்த்தப்பட்டவரை பாலிசிதாரர் மாற்ற முடியும். எவரும் இதற்காக அமர்த்தப்படாவிட்டால் மற்றும் பெயர் நியமிக்கப்பட்டவர் சிறாராக இருந்தால், பின்னர் ஆயுள் காப்பளிக்கப்பட்டவரின் மரணம்

ஏற்பட்டால், மரண நன்மை ஈடுக்கோரல் பாலிசிதாரரின் சட்ட வாரிசுகளுக்கு வழங்கப்படுகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட பெயர் நியமிக்கப்பட்டவர் இருந்தால், மரண ஈடுக்கோரல் அவர்களுக்கு இணைந்து, அல்லது உயிர் பிழைத்தவர் அல்லது உயிர் பிழைத்தவர்களுக்கு வழங்கப்படும். பாலிசி துவங்கியபின் செய்யப்படும் பெயர் நியமனங்கள் பயனுள்ளதாக இருக்க காப்பீட்டு நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 39(11) கூறுவது, பாலிசிதாரர் பாலிசி முதிர்ச்சியடைந்த பிறகு இறந்தாலும், அவருடைய பாலிசியின் வருமானமும் பலனும் அவர் இறந்தால் அவருக்கு வழங்கப்படுகிற மாதிரி எழுதப்படா விட்டால், அவர் மூலம் நியமிக்கப்பட்டவர் அவர் பாலிசியின் வருமானம் மற்றும் பலனைப் பெறுவார் என்று கூறுகிறது.

**வரைப்படம் 2: பெயர் நியமனம் தொடர்பான விதிகள்**




### b) உரிமை மாற்றம்


ஆயுள் காப்பீட்டு பாலிசியானது, காப்பீட்டு நிறுவனம் காப்பீடு செய்தவருக்கு வழங்க வேண்டிய வாக்குறுதி அல்லது கடனைக் கொண்டிருப்பதால், அது பணம் அல்லது சொத்துக்கான உத்தரவாதமாக கருதப்படுகிறது. பாலிசியின் ஒப்படைவு மதிப்புக்கு எதிராக காப்பீட்டாளர்களால் கடன் வழங்கப்படுவதை நாம் பார்த்தோம். இதேபோல், வங்கிகள் உட்பட பல நிதி நிறுவனங்கள் காப்பீட்டு பாலிசி அவர்கள் பெயரில் உரிமை மாற்றம் செய்யப்பட்டால் கடனை வழங்க முன்வருகின்றன.

உரிமை மாற்றம் என்ற சொல் பொதுவாக மற்றொரு நபர் பெயரில் சொத்தை எழுத்துப்பூர்வமாக உரிமை மாற்றுவதைக் குறிக்கிறது.

ஒரு ஆயுள் காப்பீட்டு பாலிசியின் உரிமை மாற்றத்தில், ஒரு நபர் மற்றொரு நபருக்கு (சொத்தாக) பாலிசியின் உரிமைகள், சாசனம் மற்றும் நலன்களை மாற்றும் செயலை குறிக்கிறது. உரிமைகள் மாற்றும் நபர் **உரிமை மாற்றுபவர்** எனவும், மற்றும் அதை பெறுபவர் **உரிமை பெறுபவர்** எனவும் அழைக்கப்படுகிறார்கள். உரிமை மாற்றப்பட்டதும், ஒரு பாலிசி கடனுக்கு எதிராக காப்பீட்டு நிறுவனத்திற்கு உரிமை மாற்றப்பட்டிருந்தாலே தவிர, பாலிசியின் உரிமையாளர் மாறிவிட்டதால், பெயர் நியமனம் ரத்து செய்யப்படுகிறது.

உரிமை மாற்றத்தில் இரண்டு வகைகள் உள்ளன.

**வரைப்படம்** 3: உரிமை மாற்ற வகைகள்




| நிபந்தனையுள்ள உரிமை மாற்றம் | முழுமையான உரிமை மாற்றம் |
|---|---|
| நிபந்தனையுள்ள உரிமை மாற்றத்தில் ஆயுள் காப்பை பெற்றவர் முதிர்வு தேதி வரை உயிருடன் இருந்தால் அல்லது உரிமை மாற்றத்தை பெறுபவர் இறந்து விட்டால் பாலிசி மீண்டும் ஆயுள் காப்பிடை பெற்றவருக்கே திரும்பி வந்து விடும் | • முழுமையான உரிமை மாற்றம், பாலிசி குறித்து உரிமை மாற்றுபவருக்குள்ள அனைத்து உரிமைகள், சாசனம் மற்றும் நலன்களை எந்த நிகழ்விலும் முன்னுள்ள நிலைக்கு அல்லது அவரது எஸ்டேட் நிலைக்கு திருப்பி வராதபடி உரிமை பெறுபவருக்கு மாற்றப்படுவதை வழங்குகிறது. <br>• இதனால் பாலிசியின் முழு உரிமையும் அதன் உரிமை பெறுபவரிடமே உள்ளது. உரிமை பெறுபவர், அதை தருபவரின் அனுமதி இல்லாமல். பாலிசியை அவர் விருப்பப்படி எந்த விதத்திலும் பயன்படுத்தமுடியும். |

பாலிசி பொதுவாக வீட்டுக் கடன் போன்ற பாலிசிதாரர் வாங்கும் கடனுக்கு எதிராக அடமானம் வைக்கப்படும் பல வணிக சூழ்நிலைகளில் முழுமையான உரிமை மாற்றம் அதிகமாக காணப்படுகிறது.

**செல்லுபடியாகும் உரிமை மாற்றத்திற்கான நிபந்தனைகள்**

ஒரு செல்லுபடியாகும் உரிமை மாற்றத்திற்கு தேவையான நிபந்தனைகளை நாம் இப்போது பார்ப்போம்.

i. முதலில் உரிமை மாற்றத்தை செய்பவருக்கு உரிமை மாற்றப்படும் பாலிசி குறித்து உண்மையான உரிமை மற்றும் சாசனம் அல்லது உரிமை மாற்றக்கூடிய பற்று இருக்க வேண்டும்.

ii. உரிமை மாற்றத்தை அமலில் உள்ள எந்த சட்டமும் எதிர்க்காமல் இருக்க வேண்டும்.


iii. உரிமை பெறுபவர் மற்றொரு உரிமை மாற்றத்தை செய்ய முடியும், ஆனால் பெயர் நியமிக்க முடியாது, ஏனெனில் ஆயுள் காப்பீடை பெற்றது உரிமை மாற்றப்பட்டவர் அல்ல.

**முக்கியமானவை:**

- ஆயுள் காப்பீட்டு பாலிசியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உரிமை மாற்றம் செய்யலாம்
- மாற்றுபவர் அல்லது உரிமை மாற்றுபவர் அல்லது முறையாக அங்கீகரிக்கப்பட்ட முகவரால் உரிமை மாற்றம் கையொப்பமிடப்பட வேண்டும் மற்றும் குறைந்தபட்சம் ஒரு சாட்சியால் சான்றளிக்கப்பட வேண்டும்.
- சாசன மாற்றமானது பாலிசியின் மீது அல்லது ஒரு தனிப்பட்ட முறையில் மேற்குறிப்பு வடிவில் முன்வைக்கப்பட வேண்டும்.
- பாலிசிதாரர், காப்பீட்டாளருக்கு உரிமை மாற்றம் பற்றிய அறிவிப்பை வழங்க வேண்டும், அது இல்லாமல் உரிமைமாற்றம் செல்லுபடியாகாது.
- *38(2)* பிரிவு ஒரு காப்பீட்டாளர் உரிமை மாற்றத்தை ஏற்கலாம் அல்லது வணிக நோக்கத்திற்காக காப்பீட்டு பாலிசியின் அத்தகைய உரிமை மாற்றம் நேர்மையானது அல்ல அல்லது பாலிசிதாரரின் நலன் அல்லது பொது நலனுக்கு ஏற்றது அல்ல என்று நம்புவதற்கு போதுமான காரணம் இருந்தால் அதை நிராகரிக்கலாம்.

- எவ்வாறாயினும், காப்பீட்டாளர், மேற்குறிப்பின்படி செயல்பட மறுக்கும் முன், அத்தகைய மறுப்புக்கான காரணங்களை எழுத்துப்பூர்வமாக பதிவுசெய்து, அத்தகைய மாற்றம் அல்லது உரிமை மாற்ற அறிவிப்பை வழங்கிய தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் பாலிசிதாரருக்குத் தெரிவிக்க வேண்டும்.

**வரைப்படம்** 4: **காப்பீடு பாலிசிகளின் உரிமை மாற்றம் குறித்துள்ள விதிமுறைகள்**




பாலிசிதாரர்களுக்கு பொதுவாக வழங்கப்படும் சலுகைகள்

a) **நகல் பாலிசி :**

ஒரு ஆயுள் காப்பீட்டு பாலிசி ஆவணம் ஒரு வாக்குறுதியின் ஆதாரமாக உள்ளது. பாலிசி ஆவணத்தின் இழப்பு அல்லது அழிவு மூலம் ஒப்பந்தத்தின்கீழ் நிறுவனத்திற்கு உள்ள பொறுப்பு எந்த வழியிலும் இல்லை என்றாகிவிடாது. பாலிசி ஆவணம் இழக்கப்பட்ட விஷயத்தில், ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் பொதுவாக பின்பற்ற வேண்டிய நிலையான நடைமுறைகள் இருக்கும்.

பொதுவாக அலுவலகம் இழப்பை சந்தேகிக்க ஏதாவது காரணம் உள்ளதா என்று ஆராய வேண்டும். பாலிசி தொலைந்து விட்டது மற்றும் வேறு எந்த முறையிலும் பயன்படுத்தப்படவில்லை என்பதற்கான திருப்தியான ஆதாரத்தை வழங்க தேவைப்படலாம். பொதுவாக உத்தரவாதம் அல்லது உத்தரவாதம் இல்லாத ஒரு ஈட்டுறுதி பத்திரத்தை சமர்ப்பித்தாலே மனுதாரரின் ஈடுக்கோரல் தீர்க்கப்படலாம்.

விரைவிலேயே பணத்தை செலுத்தவேண்டும் மற்றும் செலுத்த வேண்டிய தொகையின் அளவும் அதிகமாக இருந்தால், இழப்பை பற்றிய ஒரு விளம்பரத்தை பரந்த விநியோகம் உள்ள தேசிய செய்தித்தாளில் வெளியிடுமாறு அலுவலகத்தில் வலியுறுத்தலாம். வேறு யாரிடம் இருந்தும் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று உறுதியாக தெரிந்த பின்னர் ஒரு நகல் பாலிசியை வழங்கமுடியும்.

b) **மாற்றம்**

பாலிசிதாரர்கள் பாலிசி விதிகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்துமாறு கோரலாம். காப்பீடு நிறுவனம் மற்றும் காப்பளிக்கப்பட்டவரின் சம்மதத்துடன் அத்தகைய மாற்றங்களை செய்யக்கூடிய விதி உள்ளது. பொதுவாக பாலிசியின் முதல் வருடத்தில் மாற்றங்கள் அனுமதிக்கப்படாது, அது பாலிசி கட்டும் முறை அல்லது கீழே தந்திருக்கிற உதாரணங்களை போல கட்டாயமாக தேவைப்படுவதாக இருந்தாலே தவிர -

- ✓ பெயர் அல்லது / முகவரி மாற்றம்;
- ✓ வயது அதிகம் அல்லது குறைவு என நிரூபிக்கப்பட்டால், வயதை மீண்டும் சமர்ப்பிப்பது;
- ✓ இரட்டை விபத்து நன்மை அல்லது நிரந்தர இயலாமை நன்மை போன்றதை வழங்குவதற்கான கோரிக்கை.

மாற்றங்களை அடுத்தடுத்த ஆண்டுகளில் அனுமதிக்கலாம். இதில் சில மாற்றங்கள் பாலிசிமீது பொருத்தமான மேற்குறிப்பு மூலம் அல்லது ஒரு தனி தாளில் செய்யப்படலாம். பாலிசி நிலைகளில் முக்கியமான மாற்றம் தேவைப்படும் பிற மாற்றங்களுக்கு, இருக்கும் பாலிசிகளை ரத்து செய்து மற்றும் புதிய பாலிசிகளை வழங்குவது தேவைப்படலாம்.

அனுமதி வழங்கப்பட்டுள்ள மாற்றங்களின் சில முக்கிய வகைகள் பின்வருமாறு உள்ளன

i. காப்பீடின் சில வர்க்கங்களில் அல்லது காலத்தில் மாற்றம் [அபாயம் அதிகரிப்படாததில்]

ii. காப்பீடுத் தொகையில் குறைப்பு

iii. பிரீமியம் செலுத்தும் முறையில் மாற்றம்

iv. பாலிசி ஆரம்பிக்கப்பட்ட தேதியில் மாற்றம்

v. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாலிசிகளாக ஒரு பாலிசியை பிரிப்பது

vi. ஒரு கூடுதல் பரீமியம் அல்லது கட்டுப்படுத்தும் பிரிவை நீக்குவது

vii. இலாபங்களுடன் இல்லாத திட்டத்தை இலாபங்களுடன் உள்ள திட்டமாக மாற்றுவது

viii. பெயர் திருத்தம்

ix. ஈடுக்கோரல் தீர்வை வழங்குவதற்கான விருப்பம் மற்றும் இரட்டை விபத்து நன்மையை வழங்குவது

இந்த மாற்றங்களில் பொதுவாக எந்தவித அபாய அதிகரிப்பும் இல்லை. பாலிசிகளில் அனுமதிக்கப்படாத மற்ற மாற்றங்களும் உள்ளன. இவை பிரீமியத்தை குறைக்கும் விளைவை ஏற்படுத்தும் மாற்றங்களாக இருக்கலாம்., பிரீமியம் செலுத்தும் காலத்தின் நீட்டிப்பு; இலாபத்துடன் உள்ள திட்டங்களை இலாபத்துடன் இல்லாததாக மாற்றுவது; அபாயத்தை அதிகரிக்கிற மாதிரி ஒரு காப்பீட்டு வர்க்கத்தில் இருந்து இன்னொன்றுக்கு மாறுவது, காப்பீடுத் தொகையின் அதிகரிப்பு போன்றவை இதற்கான உதாரணங்களாக உள்ளன.

**சுய-பரீட்சை 2**

எந்த சூழ்நிலையில் பாலிசிதாரர் ஒரு நியமிக்கப்பட்டவரை நியமிக்க வேண்டும்?

I. காப்பீடு பெற்றவர் சிறாராக இருக்கிறார்

II. பெயர் நியமிக்கப்பட்டவர் சிறாராக இருக்கிறார்

III. பாலிசிதாரர் மனநல குறைபாடு உள்ளவர்

IV. பாலிசிதாரருக்கு திருமணம் ஆகவில்லை

**சுருக்கம்**

- ஆரோக்கியம், உணவு பழக்கம், தொழில், வருமானம் மற்றும் குடும்ப விவரங்களை முகவர் தன் அறிக்கையில் குறிப்பிட வேண்டும்
- உயரம், எடை, ரத்த அழுத்தம், இதய நிலை போன்ற உடல் அம்சங்கள் தொடர்பான விவரங்களை மருத்துவர் மருத்துவ ஆய்வாளரின் அறிக்கை எனப்படும் தன் அறிக்கையில் பதிவு செய்து குறிப்பிடவேண்டும்.
- நெறிமுறைசார்ந்த இன்னல் என்பது ஒரு ஆயுள் காப்பீடு பாலிசியை வாங்கியதன் விளைவாக ஒரு வாடிக்கையாளரின் நடத்தை மாறி மற்றும் அந்த மாற்றம் இழப்பின் வாய்ப்பை அதிகரிக்கும் சாத்தியத்தை குறிக்கிறது.
- ஆயுள் காப்பீடு நிறுவனம் முதல் பிரீமியம் ரசீதை (First Premium Receipt -FPR) வழங்கும் போது ஒரு காப்பீடு ஒப்பந்தம் துவங்குகிறது. பாலிசி ஒப்பந்தம் தொடங்கியுள்ளதற்கு சான்றாக FPR உள்ளது.

- பாலிசி ஆவணம் என்பது காப்பீடு தொடர்புடைய மிக முக்கியமான ஆவணம். இது காப்பளிக்கப்படுபவர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் இடையே உள்ள ஒப்பந்தத்தின் சான்றாக உள்ளது.
- தரமான பாலிசி ஆவணத்தில் பொதுவாக பாலிசி அட்டவணை, தரமான விதிகள் மற்றும் பாலிசியின் குறிப்பிட்ட விதிகள் என்று மூன்று பாகங்கள் உள்ளன.
- "சலுகை காலம்" என்ற உட்பிரிவு உரிய தேதிக்கு பின்னர் பாலிசிதாரருக்கு பிரீமியம் செலுத்துவதற்காக ஒரு கூடுதல் காலத்தை வழங்குகிறது.
- மறுநியமனம் என்பது பிரீமியங்களை செலுத்தாமல் நிறுத்தப்பட்ட அல்லது பறிமுதல்-இல்லாமை விதிகளில் ஒன்றின்கீழ் தொடர்கிற ஒரு பாலிசியை ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மீண்டும் அமலில் கொண்டு வரும் வழிமுறையாகும்.
- ஒரு பாலிசி கடன் இரு விதங்களில் ஒரு சாதாரண வணிக கடனிடமிருந்து வேறுபட்டது, முதலில் பாலிசியின் உரிமையாளர் சட்டபூர்வமாக கடனை திருப்பி செலுத்த கடமைப்படவில்லை மற்றும் காப்பீட்டு நிறுவனம் காப்பீடு பெற்றவர் மீது ஒரு கடன் தகுதிக்கான சோதனையை செய்ய வேண்டிய அவசியமில்லை.
- காப்பளிக்கப்பட்டவர் அவரது மரணத்திற்கு பிறகு காப்பீட்டு நிறுவனம் மூலம் காப்பீடுத்தொகை வழங்கப்படவேண்டிய நபர் (களின்) பெயரை முன்மொழிவது பெயர் நியமனம் ஆகிறது.
- ஒரு ஆயுள் காப்பீட்டு பாலிசியின் உரிமை மாற்றம், ஒரு நபர் மற்றொரு நபருக்கு (சொத்தாக) பாலிசியின் உரிமைகள், சாசனம் மற்றும் நலன்களை மாற்றும் செயலை குறிக்கிறது. உரிமைகள் மாற்றும் நபர் உரிமை மாற்றுபவர் எனவும், மற்றும் அதை பெறுபவர் உரிமை பெறுபவர் எனவும் அழைக்கப்படுகிறார்கள்.
- மாற்றங்கள் காப்பீடு நிறுவனம் மற்றும் காப்பளிக்கப்பட்டவரின் சம்மதத்திற்கு உட்பட்டது. சில எளிய மாற்றங்களை தவிர, பொதுவாக மாற்றங்கள் பாலிசியின் முதல் வருடத்தில் அனுமதிக்கப்படுவதில்லை.

## முக்கியமான வார்த்தைகள்

1. முகவரின் இரகசிய அறிக்கை
2. மருத்துவ ஆய்வாளரின் அறிக்கை

3. நெறிமுறை சார்ந்த இன்னல் அறிக்கை
4. முதல் பிரீமியம் ரசீது (FPR)
5. பாலிசி ஆவணம்
6. பாலிசி அட்டவணை
7. தரமான விதிகள்
8. குறிப்பிட்ட விதிகள்
9. சலுகை காலம்
10. பாலிசி காலங்கழிதல்
11. பாலிசி மீட்டுயிர்ப்பித்தல்
12. ஒப்படைவு மதிப்பு
13. பெயர் நியமனம்
14. உரிமை மாற்றம்

---

**சுய-பரீட்சைக்கான பதில்கள்**

**பதில்** 1 - சரியான பதில் விருப்பம் II.

**பதில்** 2 - சரியான பதில் விருப்பம் II.

---

# அத்தியாயம் L-08

# ஆயுள் காப்பீட்டின் ஏற்பளிப்பு

**அத்தியாய அறிமுகம்**

ஒரு ஆயுள் காப்பீட்டு முகவரின் வேலை வருங்கால வாடிக்கையாளரிடம் இருந்து முன்மொழிவை பெற்றதுமே முடிந்துவிடுவதில்லை. முன்மொழிவு ஒரு பாலிசி காப்பீட்டு நிறுவனம் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பாலிசியாகவும் வெளிவர வேண்டும்.

ஆயுள் காப்பீட்டு நிறுவனம் முன்மொழிவை ஏற்க வேண்டுமா, மற்றும் அப்படி ஏற்றுக்கொண்டால், எந்த நிபந்தனைகளின்கீழ் என்பதை முடிவெடுக்கும் முன் ஒவ்வொரு முன்மொழிவும் ஒரு நுழைவாயிலை கடக்கவேண்டும். இந்த அத்தியாயத்தில், நாம் ஏற்பளிப்பு செயல்முறை மற்றும் அந்த செயல்முறையில் உள்ள கூறுகள் பற்றி மேலும் தெரிந்து கொள்வோம்.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

A. ஏற்பளிப்பு - அடிப்படை கருத்துக்கள்

B. மருத்துவ-மற்ற ஏற்பளிப்பு

C. மருத்துவ ஏற்பளிப்பு

## A. ஏற்பளிப்பு - அடிப்படை கருத்துக்கள்

### 1. ஏற்பளிப்பு நோக்கம்

ஏற்பளிப்பிற்கு. இரண்டு நோக்கங்கள் உள்ளன

i. அபாயங்களை மதிப்பிடுவது, அபாயங்களை வகைப்படுத்துவது மற்றும் ஏற்றுக்கொள்ளும் விதிமுறைகளை முடிவு செய்வது அல்லது அபாயத்தை நிராகரிப்பது..

ii. எதிர்-தேர்வு அல்லது காப்பீட்டு நிறுவனத்திற்கு எதிரான தேர்வை தடுப்பது

### வரையறை

**ஏற்பளிப்பு** என்ற சொல் ஆயுள் காப்பீடிற்கான ஒவ்வொரு முன்மொழிவையும் அபாயத்தின் அளவின் அடிப்படையில் மதிப்பீடு செய்வதை மற்றும் காப்பீடை வழங்க வேண்டுமா அல்லது இல்லையா என்பதையும் ஏற்றுக்கொள்ளும் விதிமுறைகளையும் தீர்மானிக்கும் செயல்முறையை குறிக்கிறது.

**எதிர்-தேர்வு** என்பது, இழப்பை அனுபவிக்கும் தங்கள் வாய்ப்பு அதிகமாக உள்ளது என்று சந்தேகிக்கும் அல்லது தெரிந்தே காப்பீடை நாடி வந்து மற்றும் இலாபத்தை பெறும் மக்களின் போக்கை குறிக்கிறது.

### எடுத்துக்காட்டு

ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீடு யாருக்கு வழங்கப்படும் என்பதை தேர்ந்தெடுக்காமல் இருந்தால், நீண்ட நாள் வாழ்வோம் என எதிர்பார்க்காத இருதயப் பிரச்சினைகள் அல்லது புற்றுநோய் போன்ற கடுமையான வியாதிகள் உள்ள மக்களும் காப்பீடை வாங்க முயற்சி செய்கின்ற வாய்ப்பு எழுகிறது.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு காப்பீட்டு நிறுவனம் விவேகமான முறையில் ஏற்பளிப்பை செய்யாவிட்டால், அதற்கு எதிரான தேர்வுகள் செய்யப்படும் மற்றும் இந்த செயலில் இழப்புகளால் பாதிக்கப்படுவார்கள்.

---

### 2. அபாயங்கள் மத்தியில் "ஈக்விட்டி" அதாவது சமபங்கு

ஒரே மாதிரி அபாய அளவிற்கு வெளிப்படும் விண்ணப்பதாரர்கள் அதே பிரீமியம் வர்க்கத்தில் வைக்கப்பட வேண்டும் என்பதே "ஈக்விட்டி" என்ற சொல்லிற்கு அர்த்தம். நாம் ஏற்கனவே ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் விதிக்கப்படும் பிரீமியத்தை தீர்மானிக்க ஒரு இறப்பு அட்டவணையை பயன்படுத்தும் விதத்தை பார்த்தோம். அந்த அட்டவணை தரமான வாழ்க்கை அல்லது சராசரி அபாயங்களுக்கான இறப்பு அனுபவத்தை பிரதிபலிக்கிறது.

அதற்குள் ஆயுள் காப்பீட்டிற்காக முன்மொழிகின்ற பெரும்பாலான நபர்கள் அடங்குவார்கள்.

a) **அபாய வகைப்பாடு**

சமபங்கை பற்றி முடிவெடுக்க, ஏற்பாளர் **அபாய வகைப்பாடு** எனப்படும் செயல்முறையில் ஈடுபடுகிறார், அதாவது தனிப்பட்டவர்கள் அவர்கள் வாழ்க்கையில் வெளிப்படும் அபாயங்களின் அளவுக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டு வெவ்வேறு அபாய வர்க்கங்களில் ஒதுக்கப்படுகின்றனர் இது போன்ற நான்கு அபாய வர்க்கங்கள் உள்ளன.

**வரைப்படம்** 1: **அபாய வகைப்பாடு**




**i. தரமான வாழ்வுகள்**

இதில் உள்ளவர்களின் எதிர்பார்க்கப்பட்ட இறப்பு வீதம், இறப்பு அட்டவணையில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட தரமான வாழ்வுடன் ஒத்துள்ளதாக இருக்கும்.

**ii. விரும்பத்தக்க வாழ்வுகள்**

இதில் உள்ளவர்களின் எதிர்பார்க்கப்பட்ட இறப்பு வீதம், இறப்பு அட்டவணையில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட தரமான வாழ்வை விட கணிசமாக குறைவாக உள்ளதால், இவர்களிடம் குறைந்த பிரீமியத்தை வசூலிக்க முடியும்.

**iii. தரக்குறைவான வாழ்வுகள்**

இதில் உள்ளவர்களின் எதிர்பார்க்கப்பட்ட இறப்பு வீதம் சராசரி அல்லது தரமான வாழ்வை விட அதிகமாக உள்ளது, ஆனாலும் அவர்கள் காப்பீடிற்காக கருதப்படுகின்றனர். அதிக (அல்லது கூடுதல்) பிரீமியங்களை வசூலித்து அல்லது சில கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டு அவர்களுடைய காப்பீடு ஏற்கப்படலாம்.

### iv. மறுக்கப்பட்ட வாழ்வுகள்

இதில் உள்ளவர்களின் குறைபாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட கூடுதல் இறப்பு வீதத்தின் அளவு மிக அதிகம் என்பதால், ஒரு வாங்கக்கூடிய விலையில் அவர்களுக்கு காப்பீடை வழங்க முடியாது. சில நேரங்களில் ஒரு தனிநபர் சமீபத்தில் அறுவை சிகிச்சை போன்ற பெரிய மருத்துவ சிகிச்சையை பெற்றிருந்தால், அவரது முன்மொழிவு தற்காலிகமாக மறுக்கப்படலாம்.

## 3. ஏற்பளிப்பு செயல்முறை

ஏற்பளிப்பு செயல்முறை இரண்டு நிலைகளில் நடைபெறுவதாக கூறமுடியும்:

- ✓ செயற்கள நிலை
- ✓ ஏற்பளிப்பு துறை நிலை

### a) செயற்கள அல்லது முதன்மை நிலை

செயற்கள நிலையில் செய்யப்படும் ஏற்பளிப்பை முதன்மை ஏற்பளிப்பு என்றும் கூறலாம். இதில் ஒரு விண்ணப்பதாரருக்கு காப்பீடை பெறும் தகுதியுள்ளதா என்பதை தீர்மானிக்க ஒரு முகவர் அல்லது நிறுவனத்தின் பிரதிநிதி மூலம் சேகரிக்கப்படும் தகவல் அடங்கும். ஒரு முகவர் முதன்மை ஏற்பளிப்பில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறார். ஆயுள் காப்பீடு செய்யப்பட உள்ளவரை அறிகின்ற மிக சிறந்த நிலையில் அவர் உள்ளார்.

பல காப்பீட்டு நிறுவனங்களுக்கு முகவரின் அறிக்கை அல்லது இரகசிய அறிக்கை தேவைப்படும். அதில் முன்மொழியப்பட்ட வாழ்வை குறித்து குறிப்பிட்ட தகவல், கருத்து மற்றும் பரிந்துரைகளை பூர்த்தி செய்யுமாறு முகவர்களிடம் கேட்கப்படும்.

**மோசடி கண்காணிப்பு மற்றும் முதன்மை ஏற்பாளராக முகவரின் பங்கு**

ஒரு அபாய தேர்வு பற்றிய முடிவு பெரும்பாலும் முன்மொழிவு படிவத்தில் முன்மொழிபவர் வெளிப்படுத்திய உண்மைகளை சார்ந்துள்ளது. இந்த உண்மைகள் சரியானதா மற்றும் மோசடியாக ஏமாற்ற வேண்டுமென்ற உள்நோக்கத்துடன் திரிக்கப்பட்டுள்ளதா என்பதை ஏற்பளிப்பு துறையில் உட்கார்ந்திருக்கும் ஒரு ஏற்பாளர் அறிவது கடினமாக இருக்கலாம்.

முகவர் இங்கே ஒரு முக்கியமான பங்கை வகிக்கிறார். வெளிப்படுத்திய உண்மைகள் சரியானதா என்பதை தீர்மானிக்கும் அல்லது தவறான நோக்கத்துடன் வேண்டுமென்றே திரித்துக்கூறப்பட்டதா என்பதை

கண்காணிக்கும் நிலையில் முகவர் மட்டுமே இருக்கிறார், ஏனெனில் அவர் முன்மொழியப்பட்ட நபர்களிடம் நேரடி மற்றும் தனிப்பட்ட தொடர்பை வைத்திருக்கிறார்.

### b) துறை நிலையில் ஏற்பளிப்பு

ஏற்பளிப்பின் இரண்டாம் நிலை துறை அல்லது அலுவலக மட்டத்தில் உள்ளது. இது போன்ற வேலையில் நிபுணர்களாக மற்றும் வல்லுநர்களாக உள்ளவர்களே வழக்கு தொடர்புடைய அனைத்து தரவையும் கருதிய பின்னர் ஆயுள் காப்பீடு முன்மொழிவை ஏற்கலாமா என்பதையும் மற்றும் எந்த அடிப்படையில் ஏற்கலாம் என்பதை முடிவு செய்யும் பணியில் ஈடுபடுவார்கள்.

## 4. ஏற்பளிப்பு வழிமுறைகள்

**வரைப்படம் 2: ஏற்பளிப்பு வழிமுறைகள்**

ஏற்பளிப்பு வழிமுறைகள்

- தீர்ப்பு முறை
- எண்ணியல் முறை

இந்த நோக்கத்திற்காக ஏற்பாளர்கள் இரண்டு வகையான முறைகளை பயன்படுத்தலாம்:

| தீர்ப்பு முறை | எண்ணியல் முறை |
|---|---|
| இந்த முறையின் கீழ் தற்சார்புடைய தீர்ப்பு, குறிப்பாக சிக்கலான வழக்கை பற்றி தீர்மானிக்கும் போது பயன்படுத்தப்படுகிறது. | இந்த முறையின்கீழ் ஏற்பாளர்கள் அனைத்து எதிர்மறை அல்லது பாதகமான காரணிகளுக்கு நேர்மறை மதிப்பீடு புள்ளிகளை ஒதுக்குவார்கள் (நேர்மறையான அல்லது சாதகமான காரணிகளுக்கு எதிர்மறை புள்ளிகள்). |
| **எடுத்துக்காட்டு**: அமைதி இல்லாத நாடு/பகுதியில் தங்கியிருக்கும் நபருக்கு ஆயுள் காப்பீடு வழங்கலாமா என்பதை தீர்மானித்தல். | எடுத்துக்காட்டு: குடும்பத்தில் இதய நோய்கள் மற்றும்/அல்லது குறைந்த வயதில் இறக்கும் வரலாற்றைக் கொண்ட ஒருவருக்கு நேர்மறையான புள்ளிகள் ஒதுக்கப்படலாம். அவ்வாறு ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் மொத்த எண்ணிக்கையானது, சம்பந்தப்பட்ட அபாயத்தின் அளவைத் |


| | |
|---|---|
| | தீர்மானிக்க ஒரு ஏற்பாளருக்கு உதவும். |
| இது போன்ற சூழ்நிலைகளில், துறை ஒரு மருத்துவ நடுவர் என்று அழைக்கப்படும் மருத்துவர் நிபுணரின் நிபுணத்துவமான கருத்தை பெறலாம். | இந்த நேர்மறை/எதிர்மறை புள்ளிகளின் கூட்டல், மற்றும்/அல்லது கூடுதல் இறப்பு மதிப்பீடு (Extra Mortality risk -EMR) என குறிப்பிடப்படுகிறது.. உயர்வான EMR தரக்குறைவான வாழ்க்கையை குறிக்கிறது. |

**ஏற்பளிப்பு முடிவுகள்**

இப்போது ஏற்பளிப்புக்காக முன்மொழியப்பட்ட ஆயுள் குறித்து ஏற்பாளர்கள் எடுக்கக்கூடிய முடிவுகளின் பல்வேறு வகைகளை கவனிப்போம்

a) **சாதாரண விகிதங்களில் ஏற்பது** (OR) மிகவும் பொதுவான முடிவு ஆகும். இந்த மதிப்பீடு ஒரு சாதாரண அல்லது தரமான வாழ்க்கைக்கு பொருந்தும் பிரீமியத்தின் விகிதத்திலேயே அபாயம் ஏற்கபடுவதை குறிக்கிறது.

**வரைப்படம்** 3: **ஏற்பளிப்பு முடிவுகள்**




b) **ஒரு கூடுதல் கட்டணத்துடன் ஏற்பது**: இது தரக்குறைவான அபாயங்களின் பெரும்பாலான வகையை கையாள்வதற்கான மிகவும் பொதுவான வழி. இது பிரீமியம் அட்டவணை விகிதத்தின் மீது கூடுதல் கட்டணத்தை விதிப்பதை குறிக்கிறது.

c) **காப்பீடுத் தொகை மீது மீள் உரிமையுடன் ஏற்பது**: மீள் உரிமை என்பது ஒரு ஈடுக்கோரல் ஏற்பட்டால் செலுத்த வேண்டிய நன்மையின் அளவின்மீது (பகுதியாக அல்லது முழுமையாக) ஆயுள் காப்பீடு நிறுவனத்திற்கு உள்ள அதிகார வரம்பாக உள்ளது.

**எடுத்துக்காட்டு**: காசநோய் போன்ற நோயால் பாதிக்கப்பட்டு மற்றும் குணமானவரை கருதவும். மீள் உரிமையை சுமத்துவதற்கு அர்த்தம் ஆயுள் காப்பீடு செய்யப்பட்டவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் காசநோயால் மீண்டும் தாக்கப்பட்டதால் இறந்தால், மரண நன்மையில் ஒரு குறைந்த அளவே செலுத்தப்பட தேவை :

d) **ஒரு கட்டுப்படுத்தும் உட்பிரிவுடன் ஏற்பது**: சில வகையான இன்னல்களுக்கு ஒரு கட்டுப்படுத்தப்பட்ட உட்பிரிவு பயன்படுத்தப்படலாம், அதன் மூலம் சில சூழ்நிலைகளில் மரணம் ஏற்பட்டால் மரண நன்மையை கட்டுப்படுத்தலாம்.

எடுத்துக்காட்டு கர்ப்பமான பெண்களின் மீது விதிக்கப்படும் கர்ப்ப உட்பிரிவு, இதன் மூலம் சில சூழ்நிலைகளில் கர்ப்பம் தொடர்புடைய இறப்புக்கள் குழந்தை பிறந்து மூன்று மாதங்களுக்குள் நிகழ்ந்தால் மட்டுமே காப்பீடை செலுத்துகிற மாதிரி கட்டுப்படுத்த முடியும்.

e) **மறுப்பது அல்லது ஒத்திவைப்பது**: இறுதியாக, ஒரு ஆயுள் காப்பீட்டு ஏற்பாளர் ஒரு காப்பீட்டு முன்மொழிவை மறுக்கலாம் அல்லது நிராகரிக்க முடிவு செய்யலாம். சில குறிப்பிட்ட உடல்நல /மற்ற அம்சங்கள் மிக பாதகமானதாக இருந்து மரணத்தின் வாய்ப்பை கணிசமாக அதிகரிக்கும் போது இது நடக்கும்.

**எடுத்துக்காட்டு**: புற்றுநோயால் அவதிப்படும் ஒருவர் பிழைக்கும் வாய்ப்பு மிகவும் குறைவாக இருந்தால், அந்த நபர் நிராகரிக்கப்படுபவரில் ஒருவராக இருப்பார்

இதேபோல் சில நேரங்களில் நிலைமை மேம்பட்டு மற்றும் அதிக சாதகமாக மாறும் வரை அபாயத்தை ஏற்பதை ஒத்திவைப்பது விவேகமானதாக இருக்கலாம்.

**எடுத்துக்காட்டு**

கருப்பை அறுவை சிகிச்சையை சமீபத்தில் செய்துகொண்ட பெண்மணியின் ஆயுள் காப்பீட்டின் முன்மொழிவை அனுமதிக்கும் முன் அவரை சில மாதங்களுக்கு காத்திருக்குமாறு கேட்கலாம், இதனால் அறுவை சிகிச்சைக்கு பின் எழும் சிக்கல்கள் தீர்வதற்கு அவகாசம் கிடைக்கும்.

**சுய-பரீட்சை 1**

பின்வரும் வழக்குகளில் எந்த ஒரு வழக்கு ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தால் மறுக்கப்பட அல்லது ஒத்திவைக்கப்பட வாய்ப்பு உள்ளது?

I. ஆரோக்கியமான 18 வயது நபர்

II. ஒரு பருமனான நபர்

III. எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நபர்

IV. சொந்த வருமானம் இல்லாத இல்லத்தரசி

## B. மருத்துவ-மற்ற ஏற்பளிப்பு

### 1. மருத்துவ-மற்ற ஏற்பளிப்பு

ஆயுள் காப்பீடு முன்மொழிவுகள் பெரும்பாலான எண்ணிக்கையில் பொதுவாக காப்பீட்டு தகுதியை சரிபார்க்க ஒரு மருத்துவ பரிசோதனையை செய்யாமலேயே காப்பீடிற்காக தேர்ந்தெடுக்கப் படுகின்றன. இது போன்ற வழக்குகள் **மருத்துவ-மற்ற முன்மொழிவுகள்** என்றழைக்கப்படும்.

செலவுகள் உட்பட பல காரணங்களைக் கருத்தில் கொண்டு, சில வகையான பாலிசிகளில், ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் மருத்துவ பரிசோதனையை வலியுறுத்தாமல் காப்பீடை வழங்கும் நடைமுறையை பயன்படுத்துகின்றனர்.

### 2. மருத்துவ-மற்ற ஏற்பளிப்பிற்கான நிபந்தனைகள்

இருப்பினும், சில வகை வாழ்க்கை வர்க்கங்களுக்கு பொருந்தக்கூடிய தன்மை, சில காப்பீட்டுத் திட்டங்கள், காப்பீட்டுத் தொகையின் சில உச்ச வரம்புகள், நுழைவு வயது வரம்புகள், காப்பீட்டுக் காலத்தின் அதிகபட்ச கால அளவு போன்ற சில நிபந்தனைகளை மருத்துவமற்ற ஏற்பளிப்பிற்காக பின்பற்ற வேண்டும்.

### 3. ஏற்பளிப்பில் உள்ள மதிப்பீடு காரணிகள்

மதிப்பீடு காரணிகள் காப்பீடை பெறும் வாய்ப்புள்ளவர்களின் வாழ்வில் இன்னலை விளைவித்து அபாயத்தை அதிகரிக்கக்கூடிய பொருளாதார நிலைமை, வாழ்க்கை பாணி, பழக்கங்கள், குடும்ப வரலாறு, தனிப்பட்ட உடல்நலம் மற்றும் மற்ற சூழ்நிலைகள் தொடர்பான பல்வேறு அம்சங்களை குறிக்கின்றன. இந்த இன்னல்கள் மற்றும் அதன் சாத்தியமான தாக்கல்களை அடையாளம் கண்டு அதன்படி அபாயத்தை வகைப்படுத்துவது ஏற்பளிப்பில் செய்யப்படுகிறது.

மதிப்படு காரணிகளை இரண்டு அகன்ற பாகங்களாக பிரிக்கலாம் - அதாவது நெறிமுறைசார்ந்த இன்னலில் பங்களிப்பவை மற்றும் உடல்சார்ந்த [மருத்துவ] இன்னல்களில் பங்களிப்பவை. -ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள், பெரும்பாலும் இதன்படி தங்கள் ஏற்பளிப்பு வகைகளை பிரிக்கின்றனர். நெறிமுறை சார்ந்த இன்னலை விளைவிக்கின்ற காரணிகளான வருமானம், தொழில், வாழ்க்கை முறை மற்றும் பழக்கங்கள் **நிதி ஏற்பளிப்பில்** ஆய்வு செய்யப்படுகின்றன, மறுபுறம் உடல்நலத்தின் மருத்துவ அம்சங்கள் **மருத்துவ ஏற்பளிப்பு** பகுதியாக ஆய்வு செய்யப்படுகின்றன.

### a) பெண்களின் காப்பீடு

பெண்களுக்கு பொதுவாக ஆண்களைவிட அதிக ஆயுள் உள்ளது. எனினும் அவர்களுக்கு நெறிமுறை சார்ந்த இன்னல் விஷயத்தில் சில பிரச்சினைகள் வரலாம். இந்திய சமூகத்தில் பல பெண்கள் இன்னும் ஆண் மேலாதிக்கம், சமுதாய சுரண்டல் போன்றதால் பாதிக்கப்படுவது தான் இதற்கு காரணம்.. வரதட்சணை மரணங்கள் போன்ற தீமைகள் இன்று கூட காணப்படுகின்றன. பெண்களின் ஆயுளை பாதிக்கும் மற்றொரு காரணி கர்ப்பம் தொடர்புடைய பிரச்சினைகள் மூலம் ஏற்படுகின்றன.

காப்பீடின் தேவை மற்றும் பிரீமியம் கட்டும் திறன் மூலம் பெண்களின் காப்பீடு தகுதி கணிக்கப்படுகிறது. இதனால் காப்பீடு நிறுவனங்கள் சொந்த வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுமே முழு காப்பீடை வழங்க நிர்ணயிக்கலாம் மற்றும் பெண்களின் மற்ற பிரிவுகள்மீது வரம்புகளை திணிக்கலாம். இதேபோல் சில நிபந்தனைகள் கர்ப்பிணி பெண்கள் மீதும் விதிக்கப்படலாம்.

### b) சிறார்கள்

சிறார்களுக்கென்று சொந்த ஒப்பந்த சக்தி எதுவும் கிடையாது. எனவே ஒரு சிறாரின் ஆயுள் காப்பீடு முன்மொழிவை அவருடைய பெற்றோர் அல்லது சட்டபூர்வமான காப்பாளராக உள்ள மற்றொரு நபர் சமர்ப்பிக்க வேண்டும். சிறார்களுக்கு பொதுவாக சொந்த வருமானம் எதுவும் இல்லாததால், காப்பீடு தேவையை தீர்மானிப்பதும் தேவைப்படுகிறது. சிறார்களின் காப்பீடை கருதும்போது, பொதுவாக மூன்று நிலைமைகள் கோரப்படுகின்றன:

#### i. அவர்களுக்கு ஒழுங்காக வளர்ந்த உடலமைப்பு இருக்கிறதா

உடலமைப்பின் குறைவான வளர்ச்சி சத்துக்குறைபாடு அல்லது கடுமையான அபாயத்தை விளைவிக்கக்கூடிய உடல்நல பிரச்சினைகளின் விளைவாக இருக்கலாம்.

**ii. முறையான குடும்ப வரலாறு மற்றும் தனிப்பட்ட வரலாறு**

பாதகமான காரணிகள் இங்கே இருந்தால், அது அபாயங்களை விளைவிக்கலாம்.

**iii. குடும்பத்திற்கு போதுமான அளவு காப்பீடு உள்ளதா**

பொதுவாக சிறார்களுக்கு காப்பீடு செய்வதை, காப்பீடு கலாச்சாரம் கொண்ட குடும்பங்கள் கடைபிடிக்கின்றன. சிறாரின் குடும்பத்தில் வேறு எந்த உறுப்பினரும் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் விழிப்புடன் இருக்க வேண்டும். காப்பீடுத் தொகையும் பெற்றோர்களின் காப்பீட்டு அளவுடன் இணைக்கப்படுகிறது.

**c) மிகப்பெரிய காப்பீடுத் தொகை**

முன்மொழிபவரின் ஆண்டு வருமானத்துடன் ஒப்பிடுகையில் ஒரு காப்பீட்டுத் தொகை மிகப்பெரியதாக இருக்கும்போது ஏற்பாளர் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொதுவாக ஒருவரின் ஆண்டு வருமானத்தைவிட சுமார் பத்திலிருந்து பன்னிரண்டு மடங்குவரை காப்பீடுத் தொகை கருதப்படுகிறது. விகிதம் இதை விட அதிகமாக இருந்தால், காப்பீட்டு பெறுபவருக்கு எதிரான தேர்வுக்கான சாத்தியம் எழும்புகிறது.

**எடுத்துக்காட்டு**

ஒரு தனிப்பட்டவரின் ஆண்டு வருமானம் 5 லட்சம் இருந்து மற்றும் முன்மொழியப்பட்ட ஆயுள் காப்பீடு 3 கோடிகளாக இருந்தால், அது கவலைக்கான காரணத்தை எழுப்புகிறது.

---

இந்த மாதிரி வழக்குகளில் ஏற்படும் பொதுவான கவலைகள் என்னவென்றால் தற்கொலையை எதிர்பார்ப்பது அல்லது உடல்நலத்தில் பெரும் சரிவை எதிர்பார்ப்பது போன்றவை பெரிய அளவு காப்பீடை முன்மொழிவதற்கான காரணமாக இருக்கின்ற சாத்தியம் உள்ளது. இத்தகைய பெரும் தொகைக்கான மூன்றாவது காரணமாக, விற்பனை நபரின் தவறான அதிகப்படியான விற்பனையும் இருக்க முடியும்.

பெரிய காப்பீடுத் தொகைகளுக்கான அர்த்தம் பெரிய அளவில் பிரீமியங்களை செலுத்த தேவை மற்றும் அத்தகைய பிரீமியங்களை தொடர்ந்து கட்டமுடியுமா என்ற கேள்வி எழும்புகிறது. பொதுவாக, ஒரு தனிநபரின் ஆண்டு வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே பிரீமியமாக செலுத்தப்பட வேண்டும்.

d) **வயது**

இறப்பு அபாயத்திற்கு வயதுடன் நெருக்கமான தொடர்புள்ளது. அதிக வயதுள்ளவர்களின் காப்பீடை கருதும் போது ஏற்பாளர் கவனமாக இருக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

முதல் முறையாக காப்பீடிற்காக முன்மொழிபவரின் வயது 50-க்கு மேல் இருந்தால், நெறிமுறைசார்ந்த இன்னல் உள்ளதா என்று சந்தேகிக்க மற்றும் காப்பீடு முன்பே ஏன் எடுக்கப்படவில்லை என்பதை விசாரிக்கும் தேவை உள்ளது.

இதயம் மற்றும் சிறுநீரக செயலிழப்பு நோய்கள் போன்ற சிதைக்கும் நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் வயதுடன் அதிகரிக்கிறது மற்றும் மூத்த வயதில் உயர்வதை நாம் கவனிக்க வேண்டும். பெரிய காப்பீடுத் தொகைகளுக்காக / வயது அதிகமானவர்களிடம் இருந்து அல்லது இரண்டுமே சேர்ந்த மாதிரி உள்ள முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும் போது ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் சில சிறப்பு அறிக்கைகளை கோரலாம்.

**எடுத்துக்காட்டு**

அத்தகைய அறிக்கைகளுக்கான உதாரணங்களாக உள்ளவை ஈசிஜி; ஈஈஜி; மார்பின் எக்ஸ்ரே மற்றும் இரத்த சர்க்கரை பரிசோதனை. ஒரு சாதாரண மருத்துவ பரிசோதனை மூலம் கிடைக்கும் பதில்களைவிட, இந்த சோதனைகள் முன்மொழியப்பட்ட வாழ்வின் உடல்நலனை பற்றிய தெளிவான தகவல்களை வழங்க முடியும்.

**எடுத்துக்காட்டுகள்**

காப்பீடிற்காக முன்மொழிந்தவர் வசிக்கும் இடத்தில் இருந்து வெகு தூரத்தில் உள்ள ஒரு கிளையில் முன்மொழிவை சமர்ப்பிக்கும் போது.

மருத்துவ ஆய்வாளர் வசிக்கும் இடம் அருகில் கிடைக்கும் போது கூட ஒரு மருத்துவ பரிசோதனை வேறு எங்கேயோ செய்யப்படுகிறது.

மூன்றாவது வழக்கில் ஒரு முன்மொழிவு மற்றொரு வாழ்க்கை மீது தெளிவான காப்பீடுப் பற்று இல்லாமல் செய்யப்படும் போது, அல்லது நியமனம் செய்யப்பட்டவர் முன்மொழியப்பட்டவருடன் நெருக்கமான உறவு மூலம் சார்ந்து இல்லாத போது.


இது போன்ற ஒவ்வொரு வழக்கிலும் விசாரணை செய்யப்படும். இறுதியாக, முகவருக்கு ஆயுள் காப்பீடு செய்பவருடன் தொடர்பிருந்தால், நெறிமுறை சார்ந்த இன்னலுக்கான அறிக்கை முகமையின் மேலாளர் / அபிவிருத்தி அதிகாரி போன்ற ஒரு கிளை அதிகாரியிடம் இருந்து கோரப்படலாம்.

**e)** தொழில்

தொழில் சார்ந்த இன்னல்கள் மூன்று ஆதாரங்களில் இருந்து வர முடியும்:

- ✓ விபத்து
- ✓ உடல்நல இன்னல்
- ✓ நெறிமுறைசார் இன்னல்

வரைப்படம் 4: **தொழில்சார் இன்னல்களின் ஆதாரங்கள்**




i. **விபத்து இன்னல்கள்** விபத்திற்கான அபாயம் அதிகமுள்ள சில வகையான வேலைகளில் எழுகின்றன. இந்தப் பிரிவில் பல வகை வேலைகள் உள்ளன - சர்க்கஸ் கலைஞர்கள், சாரம் தொழிலாளர்கள், இடிப்பு நிபுணர்கள் மற்றும் சினிமா ஸ்டண்ட் கலைஞர்களைப் போல

ii. **உடல்நல இன்னல்கள்** மருத்துவரீதியான சேதத்தை விளைவிக்கும் சாத்தியமுள்ள வேலையை செய்யும் போது எழுகின்றன. உடல்நல இன்னல்களில் பல்வேறு வகைகள் உள்ளன.

- ✓ ரிக்ஷா இழுப்பது போன்ற வேலைகளில் மிக அதிகமான உடலுழைப்பு உள்ளதால், இது சுவாச அமைப்பை பாதிக்கும்.
- ✓ ரசாயனங்கள் மற்றும் அணு கதிர்வீச்சு அல்லது சுரங்க தூசி அல்லது புற்றுநோயிற்கு காரணமான பொருட்கள் (புற்றுநோய் உருவாக்குபவை) போன்ற **நச்சு பொருட்களுக்கு** வெளிப்படுவராக இருப்பது.

- ✓ கடுமையான டிகம்ப்ரசன் நோயை ஏற்படுத்தும் நிலத்தடி சுரங்கங்கள் அல்லது ஆழமான கடல் போல் **உயர் அழுத்த சூழலில்** வேலை செய்வது.
- ✓ இறுதியாக, (இறுக்கமான சூழலில் அமர்ந்த நிலையிலேயே கணினியில் வேலை செய்வது அல்லது ஒரு மிக அதிக சத்தமுள்ள அமைப்பில் வேலை செய்வது போன்றவை) சில வேலை சூழ்நிலைகளில் **நீண்ட நாட்கள் வேலை செய்வது** சில உடல் பாகங்களின் செயல்பாட்டை முடக்க முடியும்.

**iii.** செய்யும் வேலை குற்றவியல் கூறுகள் உள்ள அல்லது போதை மருந்துகள் மற்றும் மதுபானங்கள் கிடைக்கும் இடத்திற்கு அருகில் அல்லது அதற்கு அனுகூலமாக இருக்கும் போது **நெறிமுறை சார்ந்த இன்னல்கள்** ஏற்படுகின்றன. உதாரணமாக, ஒரு இரவு விடுதியில் நடனமாடுபவர் அல்லது ஒரு மதுபான கடையில் அமலாக்குபவர் அல்லது சந்தேகத்திற்குரிய குற்றவியல் இணைப்புகள் ஒரு தொழிலதிபரின் "காவலர்", மீண்டும் சூப்பர் ஸ்டார் கேளிக்கையாளர்கள் போன்ற சில தனிநபர்களின் வேலை அவர்களை அதீதமாக போதையில் மூழ்கவைக்கும் வாழ்க்கை பாணியை நோக்கி செல்ல வைத்து, சில நேரங்களில் சோகமான முடிவிற்கு வழிவகுக்கும்.

செய்யும் தொழில் இன்னலை விளைவிக்கும் பட்டியலிடப்பட்ட பிரிவுகளில் ஒன்றாக உள்ள இடத்தில், காப்பீட்டிற்காக விண்ணப்பிவர் பொதுவாக வேலை விவரங்கள், கடமைகள் மற்றும் அவர் வெளிப்படும் அபாய நிலைகளை பற்றி கேட்கும் ஒரு தொழில்ரீதியான கேள்வித்தாளை பூர்த்தி செய்ய வேண்டும்,. தொழிலில் உள்ள இன்னல் மதிப்பீடு செய்யப்பட்டு கூடுதலாக ஒரு குறிப்பிட்ட விலை திணிக்கப்படலாம் (உதாரணமாக ஒவ்வொரு ஆயிரம் ரூபாய்க்கும் இரண்டு ரூபாய்). திணிக்கப்பட்ட இத்தகைய கூடுதல் தொகை காப்பீடு பெறுபவரின் தொழில் மாறும்போது குறைக்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

### f) வாழ்க்கை முறை மற்றும் பழக்கவழக்கங்கள்

வாழ்க்கை முறை மற்றும் பழக்கவழக்கங்கள் என்ற சொற்கள், தனிப்பட்ட பண்புகளின் பரந்த வரம்பை குறிக்கின்றன. பொதுவாக முகவரின் இரகசிய அறிக்கைகள் மற்றும் நெறிமுறை சார் இன்னல்களின் அறிக்கைகளில், ஒரு தனிநபரின் வாழ்க்கை பாணிகளில், அபாயத்திற்கு வெளிப்படுவது பற்றிய

இந்த பண்புகள் குறிப்பிடப்படும், . குறிப்பாக மூன்று அம்சங்கள் முக்கியமானவை:-

**புகைபிடித்தல் மற்றும் புகையிலை பயன்பாடு:** இப்போது புகையிலையின் பயன்பாடு அபாயகரமானதாக மட்டுமில்லாமல், மருத்துவ அபாயங்களை அதிகரிப்பதில் பங்களிக்கிறது.. புகைப்பிடிப்பவர்கள் மற்றும் புகைப்பிடிக்காதவர்கள் மற்றும் *குட்கா* மற்றும் *பான் மசாலா* போன்ற பிற வகையான புகையிலை உபயோகிப்பவர்களுக்கு இன்று நிறுவனங்கள் வித்தியாசமான கட்டணங்களை வசூலிக்கின்றன.

**மது:** எப்போதாவது அல்லது மிதமான அளவில் மது அருந்துவது இன்னலாக கருதப்படுவதில்லை. எனினும், நீண்ட காலமுள்ள அதிக குடிப்பழக்கம் கல்லீரல் செயல்பாட்டை பாதிக்கிறது, செரிமான அமைப்பை பாதிக்கிறது மற்றும் மனநல கோளாறுகளுக்கு வழிவகுக்கும். விபத்துக்கள், வன்முறை, குடும்ப துஷ்பிரயோகம், மன அழுத்தம் மற்றும் தற்கொலைகள் ஆகியவற்றுடன் மதுப்பழக்கம் இணைக்கப்பட்டுள்ளது.

**பொருளின் தவறான பயன்பாடு:** பொருளின் தவறான பயன்பாடு மருந்துகள் அல்லது போதை பொருட்கள், தூக்க மருந்து மற்றும் பிற இதே போன்ற தூண்டிகள் போன்ற பொருட்களின் பல்வேறு வகையான பயன்பாடுகளை குறிக்கிறது. இதில் சில சட்டவிரோதமானவை மற்றும் அவற்றின் பயன்பாடு குற்றவியல் மனநிலை மற்றும் நெறிமுறைசார் இன்னலை குறிக்கிறது.

**சுய-பரீட்சை 2**

பின்வருவதில் எது நெறிமுறைசார் இன்னலுக்கான ஒரு உதாரணம்?

I. ஒரு ஸ்டண்டை செய்யும் போது ஸ்டண்ட் கலைஞர் இறந்து விடுகிறார்
II. காயம் பட்டதால் அதிகமான அளவில் மது குடிக்கின்ற ஒரு நபர்
III. பிரீமியங்கள் செலுத்துவதில் காப்பீடு பெற்றவர் தவறு செய்கிறார்
IV. முன்மொழிபவர் பாலிசி ஆவணத்தில் பொய் சொல்வது


## C. மருத்துவ ஏற்பளிப்பு

### 1. மருத்துவ ஏற்பளிப்பு

இப்போது ஒரு ஏற்பாளரின் முடிவை பாதிக்கும் சில மருத்துவ காரணிகளை ஆராய்வோம். இவை பொதுவாக மருத்துவ ஏற்பளிப்பு மூலம் மதிப்பீடு செய்யப்படுகிறது.

அவர்கள் பெரும்பாலும் ஒரு மருத்துவ ஆய்வாளரின் அறிக்கையை கோரலாம். சரிபார்க்கப்படும் சில காரணிகளை இப்போது பார்க்கலாம்.

**வரைப்படம்** 5: **ஒரு ஏற்பாளரின் முடிவை பாதிக்கும் மருத்துவ காரணிகள்**




**a) குடும்ப வரலாறு**

இறப்பு அபாயத்தின் மீதுள்ள குடும்ப வரலாறின் தாக்கம் மூன்று கோணங்களில் ஆராயப்பட்டுள்ளது-

i **மரபுசார்ந்த**: சில நோய்கள் ஒரு தலைமுறையில் இருந்து மற்றொரு தலைமுறைக்கு பரவலாம், அதாவது பெற்றோர்களிடம் இருந்து குழந்தைகளுக்கு வரலாம்.

ii **குடும்பத்தின் சராசரி ஆயுள்**: பெற்றோர்கள் இதய நோய் அல்லது புற்றுநோய் போன்ற சில நோய்கள் காரணமாக முன்கூட்டியே இறந்திருந்தால், அது அவர்களது குழந்தைகளும் நீண்ட காலம் வாழ மாட்டார்கள் என்பதை சுட்டிக்காட்டலாம்.

iii **குடும்ப சூழல்**: மூன்றாவதாக, குடும்பம் வாழ்கின்ற சூழல் தொற்று நோய் மற்றும் பிற அபாயங்களுக்கு வெளிப்படுத்தலாம்.

இதனால், ஆயுள் காப்பீட்டாளர்கள் பாதகமான குடும்ப வரலாறுள்ள நபர்களின் வழக்கு விஷயத்தில் கவனமாக இருக்கவேண்டும், இதனால் அவர்கள் மற்ற அறிக்கைகளையும் கோரலாம் மற்றும் இத்தகைய வழக்குகளில் ஒரு கூடுதல் இறப்பு மதிப்பீடை சுமத்தக் கூடும்.

**b) தனிப்பட்ட வரலாறு**

தனிப்பட்ட வரலாறு கடந்த காலத்தில் மனித உடலின் பல்வேறு அமைப்புகளில் ஆயுள் காப்பீடு பெறுபவர் அவதிப்பட்ட கோளாறுகளை

குறிக்கிறது. ஆயுள் காப்பீடின் முன்மொழிவு படிவத்தில் பொதுவாக ஆயுள் காப்பீடு பெறுபவர்களுக்கு கீழுள்ளதில் எதற்காவது சிகிச்சை அளிக்கப்பட்டதா என்பதை விசாரிக்கும் கேள்விகளின் ஒரு தொகுப்பு உள்ளது.

ஏற்பாளரால் கருதப்படும் முக்கிய வகையான வியாதிகளில் அடங்குபவை -இதயம் மற்றும் இரத்த மண்டலத்தை பாதிக்கும் நோய்கள், சுவாச மண்டல நோய்கள், வீரியம் மிக்க கட்டிகள்/புற்றுநோய், சிறுநீரக அமைப்பின் கோளாறுகள், நாளமில்லா சுரப்பி அமைப்புகளின் கோளாறுகள், கல்லீரல் இரைப்பை புண்கள் மற்றும் ஈரல் நோய் போன்ற செரிமான அமைப்பு நோய் மற்றும் நரம்பு மண்டலத்தின் நோய்கள்.

**c) தனிப்பட்ட பண்புகள்**

இவை நோய் வரும் வாய்ப்பிற்கு குறிப்பிடத்தக்க குறிகாட்டிகளாக இருக்க முடியும்.

**i. உருவ அமைப்பு**

உதாரணமாக ஒரு நபரின் உருவ அமைப்பில் அவரது உயரம், எடை, மார்பு மற்றும் வயிறு சுற்றளவு உள்ளது. தரப்பட்ட வயது மற்றும் உயரத்திற்கு ஏற்ற தரமான எடை வரையறுக்கப்பட்டு ள்ளது மற்றும் எடை இந்த தரமான எடையைவிட மிக அதிகமாக அல்லது குறைவாக இருந்தால், நபர் அதிக எடையுள்ளவர் அல்லது குறைஎடை உள்ளவர் என்று நாம் கூறலாம்.

அது போலவே, ஒரு சாதாரண நபரின் மார்பு குறைந்தபட்சம் நான்கு சென்டிமீட்டருக்கு விரிவாக்கப்பட வேண்டும் மற்றும் வயிற்றின் சுற்றளவு ஒரு விரிவடைந்த மார்பை விட அதிகமாக இருக்கக்கூடாது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ii. இரத்த அழுத்தம்**

ஒரு நபரின் மற்றொரு சுட்டிக்காட்டியாக இரத்த அழுத்தம் இருக்கிறது. இதில் இரண்டு அளவீடுகளாக உள்ளன

- ✓ சிஸ்டோலிக் அதாவது இதய சுருங்கியக்கம்
- ✓ டையஸ்டோலிக் அதாவது இதய விரிவியக்கம்

உண்மையான அளவீடுகள் இயல்பான மதிப்புகளைவிட அதிகமாக இருக்கும் போது, நபருக்கு உயர் இரத்த அழுத்தம் அல்லது ஹைபர்டென்ஷன் இருப்பதாக சொல்கிறோம். அது மிகவும் குறைவாக இருக்கும் போது, அது குறை ரத்த அழுத்தம் அல்லது ஹைபோடென்ஷன்

என குறிப்பிடப்படுகிறது. ஹைபர்டென்ஷன் தீவிர விளைவுகளை ஏற்படுத்தும்.

**iii. சிறுநீர் - ஒப்படர்த்தி (Specific gravity)**

இறுதியாக, ஒருவரின் சிறுநீரின் ஒப்படர்த்தியின் அளவீடு சிறுநீர் அமைப்பில் உள்ள பல்வேறு உப்புக்களின் சமநிலையை குறிக்க முடியும். சிறுநீர் அமைப்பில் உள்ள கோளாறை இது சுட்டிக்காட்டும்.

**d) முன்தேதியிடல்**:

முன்தேதியிடல் என்பது பாலிசியின் தொடக்க தேதியை முந்தைய தேதிக்கு மாற்றுவதாகும். எடுத்துக்காட்டாக, நீங்கள் ஜூன் 1, 2013 அன்று ஆயுள் காப்பீட்டு பாலிசியை வாங்கியுள்ளீர்கள், ஆனால் ஏப்ரல் 2013 இல் அதே பாலிசியை வாங்கியிருந்தால் சிறந்த வருமானத்தை ஈட்டித்தரும் என்று நினைக்கிறீர்கள். அவ்வாறு பாலிசியை அதிகாரப்பூர்வமாக ஏப்ரல், 2013 அன்று தொடங்குகிற மாதிரி மாற்ற நீங்களும் உங்கள் காப்பீட்டு நிறுவனமும் ஒப்புக்கொள்கிறீர்கள். இந்த வழக்கில், நீங்கள் பாலிசியை முன்தேதிக்கு மாற்றிவிட்டீர்கள். வழக்கமாக, பாலிசியின் முன்தேதியிடல் ஒரு மாதத்துக்கும் குறைவாக இருந்தால் எந்த வட்டியும் வசூலிக்கப்படாது.

முன்தேதியிடல் பின்வரும் நோக்கங்களுக்காக செய்யப்படுகிறது::

(i) **வயதின் அடிப்படையில் குறைந்த பிரீமியத்தைப் பெற:** பாலிசியை வழங்கும் போது, காப்பீட்டாளர்கள் பாலிசிதாரரின் பிறந்துநாளுக்கு அருகில் உள்ள வயதைக் கருதுகின்றனர். இதன் பொருள் உங்களுக்கு 32 வயது மற்றும் 7 மாதங்கள் இருந்தால், காப்பீட்டாளர் உங்கள் வயதை 33 ஆகக் கருதுவார். இந்த அருகில் உள்ள வயது உங்களை அதிக பிரீமியம் அளவில் சேர்க்கலாம். இருப்பினும், நீங்கள் பாலிசியை 2 மாதங்களுக்கு முன்தேதியிட்டால், காப்பீட்டாளர் உங்கள் வயதை 32 ஆண்டுகள் மற்றும் 5 மாதங்கள் மட்டுமே கருதுவார். இப்போது நீங்கள் ஒரு 32 வயதில் உள்ளவருக்கான திட்டத்தின் அடிப்படையில் குறைந்த பிரீமியங்களை செலுத்துவீர்கள்.

(ii) **பணம் செலுத்தும் நேரத்தை அமைக்கவும்**: வருமான ஓட்டம் சீராக இல்லாத குறிப்பிட்ட தொழில்கள் உள்ளன. அத்தகைய சூழ்நிலையில், ஒரு நபர் தற்செயலாக ஒரு ஆயுள் காப்பீட்டு பாலிசியை அதன் சீசன் இல்லாத காலத்தில் வாங்கினால், பாலிசி அதிகபட்ச வருவாய் காலத்திற்கு ஏற்ப முன்தேதியிடப்படும். உதாரணமாக, ஒரு விவசாயிக்கு பருவகால வருமானம் இருக்கலாம். அவர் தனது பயிரை விற்ற பிறகே காப்பீட்டுத் தொகையைச் செய்ய விரும்புவார். இந்த நிலையில், ஒரு

விவசாயி அறுவடைக் காலத்தில் பாலிசியைத் தொடங்குகிற மாதிரி முன்தேதியை வைக்கலாம்.

(iii) **சிறப்புத் தேதிகளுடன் ஒத்துப்போக**: பிறந்த நாள் மற்றும் ஆண்டுவிழா போன்ற விசேஷமான தேதிகளுடன் ஒத்துப்போகும் வகையில் பாலிசியை முன்தேதி வைக்கலாம். நீங்கள் பிரீமியத்தை கட்ட வேண்டிய தேதியை நினைவில் வைத்துக் கொள்வதும் எளிதாக இருக்கும்.

(iv) **முன்கூட்டிய முதிர்வு ஈடுக்கோரல்கள்**: முன்தேதியிடல் பாலிசியின் காலத்தை குறைப்பதால், முதிர்வு தேதி முன்கூட்டியே வருகிறது. எடுத்துக்காட்டாக, மார்ச் 2000 இல் வாங்கிய 30 வருட ஆயுள் காப்பீட்டு பாலிசி, ஏப்ரல் 1999 என முன் தேதியிடப்பட்டிருந்தால், பாலிசி மார்ச் 2030க்குப் பதிலாக ஏப்ரல் 2029 இல் முதிர்ச்சியடையும். என்டோவ்மென்ட் பாலிசிகளில், முதிர்வுப் பலன்கள் முன்கூட்டியே கிடைப்பதால் இது பயனளிக்கும்.

**சுய-பரீட்சை 3**

மருத்துவ ஏற்பளிப்பில் மரபுவழி வரலாறு ஏன் முக்கியமானதாக உள்ளது?

I. பணக்கார பெற்றோர்களுக்கு ஆரோக்கியமான குழந்தைகள் இருக்கும்

II. சில நோய்கள் குழந்தைகளுக்கு பெற்றோர்களிடம் இருந்து வழிவழியாக வருகிறது

III. ஏழை பெற்றோர்களின் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு இருக்கும்

IV. குடும்ப சூழல் ஒரு முக்கிய காரணியாகும்

**சுருக்கம்**

- சமபங்கை பற்றி முடிவெடுக்க, ஏற்பாளர் அபாய வகைப்பாடு எனப்படும் செயல்முறையில் ஈடுபடுகிறார், அதாவது தனிப்பட்ட வாழ்க்கைகள் வகைப்படுத்தப்பட்டு மற்றும் அவர்கள் வெளிப்படும் அபாயங்களின் அளவுக்கு ஏற்ப வெவ்வேறு அபாய வர்க்கங்களில் ஒதுக்கப்படுகின்றனர்
- ஏற்பளிப்பு செயல்முறை இரண்டு நிலைகளில் நடைபெறுகிறது:
  - ✓ செயற்கள நிலை மற்றும்
  - ✓ ஏற்பளிப்பு துறை நிலை
- ஏற்பாளர்கள் மூலம் எடுக்கப்படும் ஏற்பளிப்பு முடிவுகளில் தரமான விகிதத்தில் தரமான அபாயத்தை ஏற்றுக்கொள்வது அல்லது

தரக்குறைவான அபாயங்களுக்கு கூடுதல் கட்டணம் வசூலிப்பது ஆகியவை அடங்கும். சில சமயங்களில் காப்பீடுத் தொகை மீது மீள் உரிமையுடன் காப்பீடு ஏற்கப்படுகிறது அல்லது கட்டுப்பாடான உட்பிரிவுகள் விதிக்கப்பட்டு காப்பீடு ஏற்கப்படுகிறது.. அபாயம் அதிகமாக இருந்தால், முன்மொழிவு நிராகரிக்கப்படுகிறது அல்லது ஒத்திவைக்கப்படுகிறது.

- ஆயுள் காப்பீடு முன்மொழிவுகள் பெரும்பாலான எண்ணிக்கையில் பொதுவாக காப்பீட்டு தகுதியை சரிபார்க்க ஒரு மருத்துவ பரிசோதனை செய்யாமலேயே காப்பீடிற்காக தேர்ந்தெடுக்கப் படுகின்றன. இது போன்ற வழக்குகள் மருத்துவ-மற்ற முன்மொழிவுகள் என்றழைக்கப்படும்.
- மருத்துவ-மற்ற ஏற்பளிப்பில் கருதப்படும் சில மதிப்பீடு காரணிகள்
  - ✓ வயது
  - ✓ மிகப்பெரிய காப்பீடுத் தொகை
  - ✓ நெறிமுறை சார் இன்னல் முதலியன
- மருத்துவ ஏற்பளிப்பில் கருதப்படும் சில காரணிகள்
  - ✓ குடும்ப வரலாறு,
  - ✓ மரபுவழி மற்றும் தனிப்பட்ட வரலாறு முதலியன .

## முக்கியமான வார்த்தைகள்

1. ஏற்பளிப்பு
2. தரமான வாழ்க்கை
3. மருத்துவ-மற்ற ஏற்பளிப்பு
4. மதிப்பீடு காரணி
5. மருத்துவ ஏற்பளிப்பு
6. எதிர்- தேர்வு

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

**பதில்** 1 - சரியான பதில் விருப்பம் III.

**பதில்** 2 - சரியான பதில் விருப்பம் II.

**பதில்** 3 - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் L-09

# ஆயுள் காப்பீட்டின் ஈடுக்கோரல்கள்

**அத்தியாய அறிமுகம்**

இந்த அத்தியாயம் ஈடுக்கோரல் கருத்தை மற்றும் ஈடுக்கோரல்கள் எவ்வாறு ஆராயப்படும் என்பதை விளக்குகிறது. மேலும், மரண ஈடுக்கோரலுக்கு சமர்ப்பிக்க வேண்டிய படிவங்களின் விவரங்கள் மற்றும் காப்பீடு பெற்றவர் எந்த முக்கியமான தகவல்களையும் மறைத்திருக்காவிட்டால், காப்பீட்டு நிறுவனம் பயனாளிகளின் ஈடுக்கோரலை நிராகரிக்காமல் பாதுகாப்பதற்காக உள்ள விதிகளை அறிந்துக்கொள்வீர்கள்.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

A. ஈடுக்கோரல் வகைகள் மற்றும் ஈடுக்கோரல் நடைமுறைகள்

B. ஒரு ஈடுக்கோரல் நிகழ்வு ஏற்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பது

C. ஆயுள் காப்பீட்டு பாலிசியில் ஈடுக்கோரலின் நடைமுறைகள்

## A. ஈடுக்கோரல் வகைகள் மற்றும் ஈடுக்கோரல் நடைமுறைகள்

### ஈடுக்கோரல்களின் கருத்து

ஒரு காப்பீட்டு நிறுவனம் மற்றும் ஒரு காப்பீட்டு பாலிசியின் உண்மையான சோதனை, ஒரு பாலிசி ஈடுக்கோரலாக வரும்போது எழுகிறது. காப்பீட்டு நிறுவனத்தின் நிஜமான மதிப்பு, ஈடுக்கோரல் தீர்க்கப்பட்டு மற்றும் நன்மைகள் வழங்கப்படும் முறையில் தீர்மானிக்கப்படுகிறது.

ஐஆர்டிஐஏ இன் பாலிசிதாரர்களின் நலன்களுக்கான பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், 2017, ஆயுள் காப்பீட்டாளர்கள், இறப்புத் தகவல் கிடைத்த 15 நாட்களுக்குள், இறப்பு ஈடுக்கோரல்களை தாமதமின்றி செயல்படுத்த வேண்டும் மற்றும் அனைத்துத் தேவைகளையும் ஒன்றாகக் கோர வேண்டும் என்று பரிந்துரைக்கிறது.

அனைத்து தொடர்புடைய ஆவணங்கள் / தெளிவுபடுத்தல்கள் பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள், தொடர்புடைய அனைத்து காரணங்களையும் கூறி இறப்பு ஈடுக்கோரல் செலுத்தப்படவேண்டும், நிராகரிக்கப்பட வேண்டும் அல்லது ஏற்க மறுக்கப்பட வேண்டும்.

காப்பீட்டாளரின் கருத்தின்படி, ஈடுக்கோரலுக்கு விசாரணை தேவைப்பட்டால், அதை தகவல் தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் விரைவாக முடித்து, அதன்பின் 30 நாட்களுக்குள் ஈடுக்கோரலைத் தீர்க்க வேண்டும்.

முதிர்வு ஈடுக்கோரல்கள், உய்வு நன்மை ஈடுக்கோரல்கள் மற்றும் ஆண்டுத் தொகைகள் தொடர்பாக, ஆயுள் காப்பீட்டாளர் முன்கூட்டிய அறிவிப்பை அனுப்புவதன் மூலமோ, பிந்தைய தேதியிட்ட காசோலையை அனுப்புவதன் மூலமோ அல்லது ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் மின்னணு முறையின் மூலம் ஈடுக்கோருபவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைப்பதன் மூலம் ஈடுக்கோரல் செயல்முறையைத் தொடங்க வேண்டும் என்று ஐஆர்டிஐஏ குறிப்பிடுகிறது. இதனால் ஈடுக்கோரலை செலுத்த வேண்டிய தேதியில் அல்லது அதற்கு முன்பே அது வழங்கப்படும்.

### வரையறை

ஒரு ஈடுக்கோரல் என்பது காப்பீட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதியை பூர்த்தி செய்யவேண்டும் என்ற கோரிக்கை ஆகும்.

---

ஒரு ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தத்தின்கீழ் காப்பளிக்கப்பட்ட அபாய நிகழ்வுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது நடக்கும்போது ஒரு ஈடுக்கோரல்


தூண்டப்படுகிறது. சில ஈடுகோரல்களில் ஒப்பந்தம் தொடர்கிறது, மற்ற வழக்குகளில் ஒப்பந்தம் முடிவு பெறுகிறது.

ஈடுக்கோரல்கள் இரண்டு வகையாக இருக்க முடியும்:

i. ஆயுள் காப்பீடு பெற்றவர் உயிரோடு இருக்கும்போது வழங்கவேண்டிய உய்வு ஈடுக்கோரல்கள்

ii. மரண ஈடுக்கோரல்

**வரைப்படம்** 1: **ஈடுக்கோரல் வகைகள்**




ஒரு **மரண ஈடுக்கோரல்** ஆயுள் காப்பீடை பெற்றவர் இறக்கும்போது மட்டுமே எழுகிறது, **உய்வு ஈடுக்கோரல்கள்** ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளால் ஏற்படலாம்.

| **முக்கியமானவை** |
| --- |

அனைத்து ஈடுக்கோரல் சூழ்நிலைகளிலும், KYC விதிமுறைகளின்படி ஈடுக்கோருபவர்களின் அடையாளம் நிரூபிக்கப்பட்டு நன்கு ஆவணப்படுத்தப்பட்டிருப்பதை காப்பீட்டாளர் உறுதிசெய்ய வேண்டும்.

| **எடுத்துக்காட்டு** |
| --- |

காப்பீடு செய்தவருக்கு ஈடுக்கோரல்கள் செலுத்தப்படும் குறிப்பிட்ட நிகழ்வுகள்.

i. காப்பீடு பெற்றவர் பாலிசியின் முதிர்வு காலத்தை அடைகிறார்;

ii. பண-மீட்சி பாலிசியின்கீழ் தவணை செலுத்துவதற்காக அல்லது ஆண்டுத்தொகை திட்டங்களின் கீழ் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட காலத்தை (களை) காப்பீடு செய்தவர் அடைகிறார்;

iii. பாலிசியின் கீழ் உள்ள கடுமையான நோய்களின் நிகழ்வுகள் (ரைடர் பயனாக அல்லது வேறுவிதமாக);

iv. பாலிசிதாரர் அல்லது உரிமை மாற்றப்பட்டவர் மூலம் பாலிசியின் ஒப்படைவு;

## B. ஒரு ஈடுக்கோரல் நிகழ்வு ஏற்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பது

i. முதிர்வு காலத்தை அடைந்ததும் அல்லது பாலிசியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ததும் காப்பிடு பெற்றவருக்கு **உய்வு ஈடுக்கோரலை** செலுத்த வேண்டும்.

ii. **முதிர்வு கால ஈடுக்கோரல்கள் மற்றும் பண-மீட்சி தவணை ஈடுக்கோரல்கள்** ஒப்பந்தத்தின் ஆரம்பத்திலேயே தீர்மானிக்கப்படும் தேதிகளின் அடிப்படையில் உள்ளதால் எளிதாக வழங்கப்படுகின்றன. உதாரணமாக, பண-மீட்சி பாலிசியின்கீழ் ஒப்பந்தம் தயார் செய்யப்படும் நேரத்திலேயே வழங்கப்படும் உய்வு நன்மைகளின் தவணைகளை வழங்க வேண்டிய தேதிகள் மற்றும் முதிர்வு தேதி தெளிவாக குறிப்பிடப்படுகின்றன.

iii. **ஒப்படைவு மதிப்பு வழங்கல்கள்** மற்ற ஈடுக்கோரல் முறைகளிடமிருந்து வேறுபடுகிறது. இங்கே, மற்ற ஈடுக்கோரல்கள் போலில்லாமல், ஒப்பந்தத்தை ரத்து செய்து மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் அவருக்கு கிடைக்க வேண்டி.ய பணத்தை வாங்க பாலிசிதாரர் அல்லது உரிமை மாற்றப்பட்டவரின் முடிவின் மூலம் இங்கு நிகழ்வு தூண்டப்படுகிறது. முன்கூட்டியே பெறுவதற்காக பொதுவாக ஒரு அபராதம் விதிக்கப்படும். ஒப்படைவு முறையில் வழங்கப்படும் தொகை பொதுவாக முழு ஈடுக்கோரலில் வழங்க வேண்டிய தொகையை விட குறைவாக இருக்கும், ஏனெனில் அதில் முன்கூட்டியே திரும்ப பெறுவதற்காக ஒரு அபராதம் விதிக்கப்படும்.

iv. **கடுமையான நோய் ஈடுக்கோரல்கள்**, அதற்கு ஆதரவாக பாலிசிதாரர் மூலம் வழங்கப்பட்ட மருத்துவ மற்றும் பிற பதிவுகளை அடிப்படையாக கொண்டு தீர்மானிக்கப்படும்

v. **ஆண்டுத்தொகைகள்**: ஆண்டுத்தொகை கொடுப்பனவுகள் (ஓய்வூதியத் திட்டங்கள்) வழக்கில், காப்பீடை பெற்றவர் அவ்வப்போது ஆயுள் சான்றிதழ்களை வழங்க வேண்டும்.

கடுமையான நோய் நன்மையின் நோக்கம், ஒரு பாலிசிதாரருக்கு கடுமையான நோய் ஏற்பட்டால் அவருடைய செலவினங்களைச் செலுத்த உதவுவதாகும். இந்த பாலிசியை உரிமை மாற்றம் செய்திருந்தால், அனைத்து நன்மைகளையும் உரிமை மாற்றப்பட்டவருக்கு வழங்கவேண்டி வரும், மற்றும் இது உத்தேசிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றாது. இது போன்ற ஒரு நிலைமையை தவிர்க்கும் பொருட்டு, ஒரு நிபந்தனையுள்ள உரிமை மாற்றத்தின் மூலம், உரிமை மாற்றக்கூடிய நன்மைகளின் அளவு குறித்து பாலிசிதாரர்களுக்கு கற்பிப்பது முக்கியமாகும்.

ஒரு **முதிர்வு அல்லது மரண ஈடுக்கோரல்** அல்லது ஒப்படைவு, ஒப்பந்தத்தின்கீழ் காப்பீடு முடிவுக்கு வர வழிவகுக்கிறது மற்றும் அதற்கு பின்னர் காப்பீடு அமலில் இருக்காது.

**ஈடுக்கோரல் வகைகள்** : பின்வரும் பண வழங்கல்கள் பாலிசி காலவரையில் ஏற்படலாம்:

a) **உய்வு நன்மை வழங்கல்கள்**

பாலிசியின் காலத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் காப்பீடு பெறுபவருக்கு சில பண வழங்கல்கள் காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் செய்யப்படுகின்றன.

I. **பாலிசியின் ஒப்படைவு**

ஒப்படைவு மதிப்பு முதலீடுகளின் மதிப்பை பிரதிபலிக்கிறது மற்றும் காப்பீட்டுத் தொகை போன்ற பல்வேறு காரணிகளைப் பொறுத்தது. பாலிசி முன்கூட்டியே நிறுத்தப்பட்டால், இந்த பாலிசி ஒப்பந்தம் ஒரு தன்னிச்சையான முடிவுக்கு வருகிறது. பாலிசியில் பண மதிப்பு திரட்டப்பட்டிருந்தால் மட்டுமே அதை ஒப்படைக்க முடியும். வழக்கமாக கட்டப்பட்ட பிரீமியங்களின் ஒரு சதவீதமே காப்பீடு பெற்றவருக்கு வழங்கவேண்டிய **ஒப்படைவு மதிப்பாக** உள்ளது. குறைந்தபட்ச உத்தரவாதமளிக்கப்பட்ட ஒப்படைவு மதிப்பை (Guaranteed Surrender Value -GSV) விட காப்பீடு பெறுபவருக்கு வழங்கப்படும் உண்மையான ஒப்படைவு மதிப்பு அதிகமாக இருக்கிறது.

II. **ரைடர் நன்மை**

ஒரு ரைடரின் நன்மை, விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட நிகழ்வு நடக்கும் போது ரைடரின் கீழுள்ள நன்மை ஒரு காப்பீட்டு நிறுவனம் மூலம் வழங்கப்படும்.

ஒரு **கடுமையான நோய்** ரைடரில், அந்த கடுமையான நோயை கண்டறியும் நிகழ்வில், விதிமுறைகளின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட அளவு வழங்கப்படும். அந்த நோய் காப்பீட்டு நிறுவனம் மூலம் காப்பளிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்ட கடுமையான நோய்களின் பட்டியலில் காப்பளிக்கப் பட்டிருக்க வேண்டும்.

**மருத்துவமனை பாதுகாப்பு ரைடரின்கீழ்**, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, காப்பீட்டு நிறுவனம் மருத்துவமனையில் ஏற்படும் சிகிச்சை செலவுகளுக்கு பணத்தை செலுத்துகிறது.

ரைடர் கட்டணங்கள் செலுத்தப்பட்ட பின்னரும்கூட பாலிசி ஒப்பந்தம் தொடர்கிறது.

காப்பீட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட பின்வரும் ஈடுக்கோரல்கள் பாலிசியின் கால இறுதியில் செய்யப்படுகின்றன.

III. **முதிர்வு நன்மை**

இத்தகைய ஈடுக்கோரல்களில், முழு பாலிசி காலம் முடிந்த பின்னரும், காப்பீடை பெறுபவர் பிழைத்திருந்தால், கால இறுதியில் காப்பீட்டு நிறுவனம் அவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்குவதாக வாக்களிக்கிறது. இது **முதிர்வு ஈடுக்கோரல்** என அறியப்படுகிறது.

i. **பங்கேற்கும் திட்டம்:** முதிர்வு ஈடுக்கோரலில் வழங்கவேண்டிய பணம், பங்கேற்கும் திட்டமாக இருந்தால், காப்பீடுத் தொகையுடன் சேர்த்து திரட்டப்பட்ட போனஸ்களில் இருந்து நிலுவையில் உள்ள பிரீமியம் மற்றும் பாலிசி கடன்கள், அதற்குரிய வட்டிகள் போன்ற தொகைகள் கழிக்கப்பட்ட பிறகுள்ள தொகை கிடைக்கும்.

ii. **பிரீமியம் திரும்ப கிடைக்கும் (Return of Premium -ROP) திட்டம்**: சில வழக்குகளில், பாலிசி முதிர்வடையும் போது அந்த காலக்கட்டத்தில் கட்டப்பட்ட பிரீமியங்கள் திரும்ப கிடைக்கும்.

iii. **யூனிட் லிங்க்ட் காப்பீட்டு திட்டம் (ULIP):** யூலிப்கள் வழக்கில், காப்பீட்டு நிறுவனம் முதிர்வு ஈடுக்கோரலாக நிதியின் மதிப்பை செலுத்துகிறது.

iv. **பண-மீட்சி திட்டம்:** பண-மீட்சி பாலிசி விஷயத்தில், காப்பீட்டு நிறுவனம் முதிர்வு ஈடுக்கோரலில் இருந்து பாலிசியின் காலத்தில் பெற்ற உய்வு நன்மைகளை கழித்து கொடுக்கிறது.

ஈடுக்கோரலை வழங்கிய பிறகு காப்பீடு ஒப்பந்தம் முடிகிறது.

b) **இறப்பு நன்மை**

காப்பீடு பெற்றவர் தற்செயலாக அல்லது வேறுவிதமாக அவருடைய பாலிசி காலத்தில் இறந்துவிட்டால், காப்பீட்டு நிறுவனம் திரட்டப்பட்ட போனஸூடன் காப்பீடுத் தொகையை வழங்குகிறார்கள். பங்கேற்கும் திட்டமாக இருந்தால், மீதமுள்ள பாலிசி கடன் மற்றும் பிரீமியங்கள் மற்றும் அதற்குரிய வட்டி போன்ற நிலுவையில் உள்ள தொகைகளை கழிக்கப்பட வேண்டும். நிலைமை எவ்வாறு இருந்தாலும் உரிமை மாற்றப்பட்டவர் அல்லது நியமிக்கப்பட்டவர் அல்லது சட்ட வாரிசுக்கு கிடைக்கும் மரண ஈடுக்கோரலாக இது உள்ளது. ஒரு மரண ஈடுக்கோரல், மரணத்தின் விளைவாக ஒப்பந்தத்தின் முடிவை குறிக்கிறது.

ஒரு மரண ஈடுக்கோரல் பின்வருமாறு இருக்கலாம்:

✓ முன்கூட்டிய மரணம் (மூன்று ஆண்டுகளுக்கு குறைவான பாலிசி காலம்) அல்லது

✓ முன்கூட்டியதாக -இல்லாத மரணம் (பாலிசி காலம் மூன்று ஆண்டுகளுக்கு மேல்)


நியமிக்கப்பட்டவர் அல்லது உரிமை மாற்றப்பட்டவர் அல்லது சட்ட வாரிசாக உள்ளவர் மரணத்திற்கான காரணம், தேதி மற்றும் இடத்தை காப்பீட்டு நிறுவனத்திற்கு தெரிவித்தாக வேண்டும்.

**i. மரண ஈடுக்கோரலுக்காக சமர்ப்பிக்க வேண்டிய படிவங்கள்**

வழக்கமாக, ஈடுக்கோரலை செயலாக்குவதை எளிதாக்க காப்பீட்டு பயனாளி பின்வரும் படிவங்களை சமர்ப்பிக்கவேண்டும்:

- ✓ நியமிக்கப்பட்டவர் மூலம் ஈடுக்கோரல் வடிவம்
- ✓ அடக்கம் அல்லது தகனத்திற்கான சான்றிதழ்
- ✓ சிகிச்சையளித்த மருத்துவரின் சான்றிதழ்
- ✓ மருத்துவமனையின் சான்றிதழ்
- ✓ பணி முதலாளியின் சான்றிதழ்
- ✓ மரணத்தின் சான்றாக நகராட்சி அதிகாரிகள் மூலம் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ் போன்றவை
- ✓ முதல் தகவல் அறிக்கை (FIR), புலன் விசாரணை அறிக்கை, பிரேத பரிசோதனை அறிக்கை, இறுதி அறிக்கை போன்ற போலீஸ் அறிக்கைகளின் சான்றளிக்கப்பட்ட நீதிமன்ற பிரதிகள்-இந்த அறிக்கைகள் விபத்து மூலம் இறந்த வழக்கில் தேவை.

**வரைப்படம்** 2: **மரண ஈடுக்கோரலுக்காக சமர்ப்பிக்க வேண்டிய படிவங்கள்**




**ii. மரண ஈடுக்கோரலின் ஏற்காமல் நிராகரிப்பது**

மரணம் ஈடுக்கோரலுக்கு பணம் வழங்கப்படலாம் அல்லது நிராகரிக்கப்படலாம். ஈடுக்கோரலை செயலாக்கும் போது முன்மொழிபவர்

தவறான அறிக்கைகளை கொடுத்தது அல்லது பாலிசி சம்பந்தப்பட்ட முக்கிய உண்மைகளை மறைத்தது காப்பீட்டு நிறுவனம் மூலம் கண்டுபிடிக்கப்பட்டால், ஒப்பந்தம் செல்லாததாகிறது. பாலிசியின் கீழுள்ள அனைத்து நன்மைகளும் பறிமுதல் செய்யப்படும்.

iii. **பிரிவு 45: எதிர்க்க முடியாத உட்பிரிவு**

எனினும் இந்த அபராதம் சட்டம், 1938-இன் **உட்பிரிவு 45-ற்கு** உட்பட்டது

**முக்கியமானவை**

**பிரிவு 45 கூறுவது:**

"பாலிசி தேதியிலிருந்து, அதாவது பாலிசி வெளியிடப்பட்ட தேதி அல்லது அபாயம் தொடங்கிய தேதி அல்லது மீட்டுயிர்ப்பித்தல் பெற்ற தேதி அல்லது பாலிசியின் ரைடர் தொடங்கிய தேதி, இவற்றில் எது பின்னர் வந்தாலும், அதற்கு பிறகு மூன்று ஆண்டுகள் முடிந்த பிறகு எந்தவொரு காரணத்திற்காகவும் ஆயுள் காப்பீட்டு பாலிசி குறித்து கேள்வி எழுப்பமுடியாது."

## C. ஆயுள் காப்பீட்டு பாலிசியில் ஈடுக்கோரலின் நடைமுறைகள்

**அனைத்து காப்பீட்டாளர்களுக்கும் நிலையான ஈடுக்கோரல் நடைமுறைகள் எதுவும் இல்லை என்றாலும், ஐஆர்டிஏஐ காப்பீட்டாளர்களுக்கு ஈடுக்கோரல் தீர்வு விஷயத்தில் வழிகாட்டுதல்களை வகுத்துள்ளது.**

**ஒழுங்குவிதி 8: ஒரு ஆயுள் காப்பீட்டு விஷயத்தில் ஈடுக்கோரல் நடைமுறை**

i. ஒரு ஆயுள் காப்பீட்டு நிறுவனம் பொதுவாக ஒரு ஈடுக்கோரலுக்கு ஆதரவாக ஒரு பயனாளி சமர்ப்பிக்க வேண்டிய **முதன்மை ஆவணங்களை** தெரிவிக்கவேண்டும்.

ii. ஒரு ஆயுள் காப்பீட்டு நிறுவனம், ஒரு ஈடுக்கோரலை பெற்றவுடன் **தாமதம் இல்லாமல்** ஈடுக்கோரலை செயல்படுத்த வேண்டும். ஏதாவது கேள்விகள் இருந்தால் அல்லது கூடுதல் ஆவணங்கள் தேவை என்றால், முடிந்த அளவிற்கு, ஈடுக்கோரலை **பெற்ற 15 நாட்களுக்குள்**, தனித்தனியாக கேட்காமல், அனைத்து தேவைகளையும் ஒரே சமயத்தில் கோர வேண்டும்.

iii. ஐஆர்டிஐஏ இன் (பாலிசிதாரர்களின் நலன்களுக்கான பாதுகாப்பு) ஒழுங்குவிதிகள், 2017, ஆயுள் காப்பீட்டு பாலிசியின்கீழ் ஒரு இறப்பு ஈடுக்கோரலுக்கு தேவையான அனைத்து தொடர்புடைய ஆவணங்கள்

மற்றும் விளக்கங்களை பெற்ற தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், அனைத்து தொடர்புடைய காரணங்களையும் குறிப்பிட்டு பணத்தை வழங்கவேண்டும், நிராகரிக்கவேண்டும் அல்லது ஏற்க மறுக்க வேண்டும். எனினும், விசாரணை தேவை என்று காப்பீட்டு நிறுவனம் கருதும் ஈடுக்கோரல் சூழ்நிலைகளில், அத்தகைய விசாரணையை விரைவில் துவங்கி, அதை எந்தவொரு வழக்கிலும் ஈடுக்கோரல் அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் முடிக்கவேண்டும். விசாரணை முடிந்த 30 நாட்களுக்குள் ஈடுக்கோரலை தீர்க்க வேண்டும்.

iv. ஒரு ஈடுக்கோரல் வழங்க தயாராக உள்ளது ஆனால் பயனாளியை சரியான அடையாளம் காண முடியாத காரணங்களுக்காக அதை வழங்கமுடியாத சூழ்நிலையில், ஆயுள் காப்பீட்டு நிறுவனம் பயனாளியின் நலனுக்காக அந்த பணத்தை வைத்திருக்க வேண்டும் மற்றும் அத்தகைய தொகை ஷெட்யூல்ட் வங்கியில் ஒரு வங்கி சேமிப்பு கணக்கிற்கு பொருந்தும் வட்டியை சம்பாதிக்கும். (அனைத்து ஆவணங்கள் மற்றும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 30 நாட்களுக்கு மேல் இது செயலாக்கப்படும்)

v. துணை-ஒழுங்குவிதி (iv)-இன் கீழ் கூறப்பட்டதை தவிர வேறு ஒரு காரணத்தால் ஒரு ஈடுக்கோரலை செயலாக்குவது காப்பீட்டு நிறுவனம் மூலம் தாமதமானால், ஆயுள் காப்பீடு நிறுவனம் அந்த ஈடுக்கோரலை ஆய்வு செய்யும் நிதி ஆண்டு தொடக்கத்தில் **அமலில் இருக்கும் வங்கி வீதத்தை விட 2% அதிக வட்டியை அந்த தொகைக்கு வழங்கும்.**

## ஒரு முகவரின் பங்கு

ஒரு முகவர் துல்லியமாக ஈடுக்கோரல் படிவங்களை பூர்த்தி செய்வதற்கு நியமிக்கப்பட்டவர்/சட்ட வாரிசு அல்லது பயனாளிக்கு அனைத்து சாத்தியமான சேவையையும் வழங்க வேண்டும் மற்றும் காப்பீட்டு அலுவலகத்தில் அதை சமர்ப்பிக்கவும் உதவவேண்டும்.

கடமைகளை நிறைவேற்றுவதை தவிர, இந்த மாதிரி சூழ்நிலைகளில் நல்லெண்ணம் உருவாகி, முகவருக்கு இறந்தவரின் குடும்பத்தில் இருந்து எதிர்காலத்தில் வணிகம் அல்லது பரிந்துரைகளை பெறும் நிறைய வாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிறது.

**சுய-பரீட்சை** 1

கீழே உள்ள அறிக்கையில் ஈடுக்கோரல் கருத்தை எது சிறந்த முறையில் விவரிக்கிறது? மிக பொருத்தமான விருப்பத்தை தேர்ந்தெடுக்கவும்.

I. ஒரு ஈடுக்கோரல் என்பது காப்பீட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதியை காப்பீட்டு நிறுவனம் பூர்த்தி செய்யவேண்டிய வேண்டுகோள் ஆகும்.

II. ஒரு ஈடுக்கோரல் என்பது காப்பீட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதியை காப்பீட்டு நிறுவனம் பூர்த்தி செய்யவேண்டிய கோரிக்கை ஆகும்.

III. ஒரு ஈடுக்கோரல் என்பது உடனபடிக்கையில் குறிப்பிடப்பட்ட பொறுப்பை காப்பீடு பெற்றவர் பூர்த்தி செய்யவேண்டிய கோரிக்கை ஆகும்.

IV. ஒரு ஈடுக்கோரல் என்பது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதியை காப்பீடு பெற்றவர் பூர்த்தி செய்யவேண்டிய வேண்டுகோள் ஆகும்.

---

**சுருக்கம்**

- ஒரு ஈடுக்கோரல் என்பது காப்பீட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதியை காப்பீட்டு நிறுவனம் பூர்த்தி செய்யவேண்டிய கோரிக்கை ஆகும்.
- ஒரு ஈடுக்கோரல் என்பது உய்வு ஈடுக்கோரல் அல்லது மரண ஈடுக்கோரலாக இருக்கலாம். ஒரு மரண ஈடுக்கோரல் ஆயுள் காப்பீடை பெற்றவர் இறக்கும்போது மட்டுமே எழுகிறது, உய்வு ஈடுக்கோரல்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகளால் ஏற்படலாம்
- ஒரு உய்வு ஈடுக்கோரல் பணத்தை வழங்க, பாலிசியில் உள்ள நிபந்தனைகளின் படி நிகழ்வு ஏற்பட்டுள்ளதை உறுதிசெய்ய வேண்டும்.
- பின்வரும் பண வழங்கல்கள் பாலிசி காலவரையில் ஏற்படலாம்:
  - ✓ உய்வு நன்மை வழங்கல்கள்
  - ✓ பாலிசியின் ஒப்படைவு
  - ✓ ரைடர் நன்மை
  - ✓ முதிர்வு நன்மை
  - ✓ மரண நன்மை
- காப்பீடு சட்டத்தின் பிரிவு 45 (எதிர்க்கமுடியாத உட்பிரிவு), ஏதாவது பலவீனமான அடிப்படையில் ஈடுக்கோரலை காப்பீட்டு நிறுவனம் நிராகரிப்பதில் இருந்து காப்பீடு பெறுபவரை பாதுகாக்கிறது மற்றும்

பாலிசியை கேள்விக்குட்படுத்த காப்பீட்டாளருக்கு 3 வருட கால வரம்பை அமைக்கிறது.

- ஐஆர்டிஏஐ (பாலிசிதாரர்கள் நலன் பாதுகாப்பு) ஒழுங்குவிதிகள் 2017-இல், ஈடுக்கோரல் எழும் வழக்கில் காப்பீடு பெற்றவர் அல்லது பயனாளியின் பாதுகாப்பிற்கான/காப்பதற்கான ஒழுங்குவிதிகளை ஐஆர்டிஏஐ வகுத்திருக்கிறது.

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

**பதில்** 1 சரியான பதில் விருப்பம் II.

# பிரிவு

# உடல்நலப் பிரிவு

# அத்தியாயம் H-01

# உடல்நலக் காப்பீடு அறிமுகம்

## அத்தியாய அறிமுகம்

காலப்போக்கில் காப்பீட்டில் ஏற்பட்ட பரிணாமத்தை பற்றி இந்த அத்தியாயம் உங்களுக்கு தெரிவிக்கும். உடல்நலம் என்றால் என்ன, உடல்நலப் பராமரிப்பின் நிலைகள் மற்றும் உடல்நலப் பராமரிப்பு வகைகள் ஆகியவற்றையும் இது விளக்குகிறது. இந்தியாவில் உள்ள உடல்நலப் பராமரிப்பு அமைப்பு மற்றும் அதை பாதிக்கும் காரணிகள் பற்றியும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். இறுதியாக, இந்தியாவில் உடல்நலக் காப்பீடு எவ்வாறு உருவானது என்பதையும், இந்தியாவில் உடல்நலக் காப்பீட்டு சந்தையில் உள்ள பல்வேறு நிறுவனங்களை பற்றியும் இது விளக்குகிறது.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. உடல்நலப் பராமரிப்பை புரிந்துகொள்வது
B. உடல்நலப் பராமரிப்பின் நிலைகள்
C. உடல்நலப் பராமரிப்பு வகைகள்
D. இந்தியாவில் உடல்நலக் காப்பீட்டின் பரிணாமம்
E. உடல்நலக் காப்பீடு சந்தை

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:

a) காப்பீட்டில் ஏற்பட்ட பரிணாமத்தை புரிந்து கொள்ளமுடியும்.
b) உடல்நலப் பராமரிப்பின் கருத்து மற்றும் உடல்நலப் பராமரிப்பின் வகைகள் மற்றும் நிலைகளை விளக்கமுடியும்.
c) இந்தியாவில் உடல்நலப் பராமரிப்பை பாதிக்கும் காரணிகள் மற்றும் சுதந்திரத்திற்குப் பிறகு அதில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பாராட்ட முடியும்.
d) இந்தியாவில் உடல்நலக் காப்பீட்டின் பரிணாமத்தைப் பற்றி விவாதிக்க முடியும்.
e) இந்தியாவில் உடல்நல காப்பீட்டு சந்தையை அறிந்து கொள்ள முடியும்.

## A. உடல்நலப் பராமரிப்பை புரிந்துகொள்வது

'Health' அதாவது உடல்நலம் என்ற வார்த்தை' உடலின் நலன்' என அர்த்தமுள்ள 'hoelth' என்ற வார்த்தையிலிருந்து உருவானது.

பழங்காலத்தில், உடல்நலம் ஒரு 'தெய்வீக வரமாக' கருதப்பட்டது மற்றும் சம்பந்தப்பட்ட நபர் செய்த பாவங்களால் நோய் வருவதாக நம்பப்பட்டது. ஹிப்போகிரட்டீஸ் (கிமு 460 முதல் 370 வரை) என்பவரே நோய்க்கான காரணங்களைக் கண்டுபிடித்தார். அவரைப் பொறுத்தவரை, சுற்றுச்சூழல், சுகாதாரம், தனிப்பட்ட தூய்மை மற்றும் உணவு முறைகள் தொடர்பான பல்வேறு காரணிகளால் நோய் ஏற்படுகிறது. பண்டைய இந்தியாவின் வேத நூல்கள் 'ஆரோக்கியமே மஹாபாக்யம்' என்பதை பற்றி பேசுகின்றன, இதன் அர்த்தம் 'ஆரோக்கியம் ஒரு பெரிய அதிர்ஷ்டம்' அல்லது வேறு வார்த்தைகளில், 'ஆரோக்கியமே செல்வம்'. *அதர்வ வேதம், சரக சம்ஹிதா, சுஷ்ருத சம்ஹிதா, அஷ்டாங்கஹ்ருதயம், அஷ்டாங்கசம்கிரஹா, பேலா சம்ஹிதா* மற்றும் *காஷ்யப சம்ஹிதா* போன்ற பண்டைய இந்தியாவின் பல ஆய்வுகள் பண்டைய காலங்களில் இந்தியாவில் பயன்படுத்தப்பட்ட குணப்படுத்தும் மரபுகளைப் பற்றி விவாதிக்கின்றன.

### வரையறை

*உலக உடல்நல நிறுவனத்தால்* (WHO) உடல்நலம் பற்றிய பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறை வழங்கப்பட்டது - '*உடல்நலம் என்பது நோய் அல்லது தளர்ச்சி இல்லாதது மட்டுமல்ல, அது 'முழுமையான உடல், மன மற்றும் சமூக நல்வாழ்வின் நிலையை குறிக்கிறது.*

### உடல்நலத்தை நிர்ணயிப்பவை

எந்தவொரு நபரின் உடல்நலத்தையும் பின்வரும் காரணிகள் நிர்ணயிக்கின்றன என்று பொதுவாக நம்பப்படுகிறது:

#### a) வாழ்க்கை முறை காரணிகள்

வாழ்க்கை முறை காரணிகள் என்பது பெரும்பாலும் சம்பந்தப்பட்ட நபரின் கட்டுப்பாட்டில் இருக்கும் எ.கா. உடற்பயிற்சி மற்றும் கட்டுப்பாடுடன் சாப்பிடுதல், கவலையைத் தவிர்த்தல் ஆகியவை நல்ல உடல்நலத்திற்கு வழிவகுப்பவை; அல்லது புற்றுநோய்,

எய்ட்ஸ், உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்ற சில நோய்களுக்கு வழிவகுப்பவை.

b) **சுற்றுச்சூழல் காரணிகள்**

இன்ஃப்ளூயன்ஸா மற்றும் சின்னம்மை போன்ற தொற்று நோய்கள் மோசமான தூய்மை நிலை காரணமாக பரவுகின்றன, மலேரியா மற்றும் டெங்கு போன்ற நோய்கள் மோசமான சுற்றுச்சூழல் சுகாதாரத்தால் பரவுகின்றன, அதே நேரத்தில் சில நோய்கள் சுற்றுச்சூழல் காரணிகளாலும் பரவுகின்றன.

c) **மரபணு காரணிகள்**

மரபணுக்கள் மூலம் பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளுக்கு நோய்கள் பரவலாம். இத்தகைய மரபணு காரணிகள் இனம், புவியியல் இருப்பிடம் மற்றும் சமூகங்களின் அடிப்படையில் உலகம் முழுவதும் பரவியுள்ள மக்களிடையே மாறுபட்ட உடல்நல போக்குகளை ஏற்படுத்துகின்றன.

ஒரு நாட்டின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அதன் மக்களின் உடல்நலத்தைப் பொறுத்தது என்பது மிகவும் தெளிவாக தெரிகிறது. வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு பல்வேறு வகையான உடல்நலப் பராமரிப்பு தேவையா என்ற கேள்வியை இது எழுப்புகிறது.

**சுய-பரீட்சை 1**

பின்வரும் நோய்களில் எது வாழ்க்கை முறை காரணிகள் (அதாவது தனிநபரின் கட்டுப்பாட்டில் இல்லாதது) காரணமாக வருவதில்லை?

I. புற்றுநோய்
II. எய்ட்ஸ்
III. மலேரியா
IV. உயர் இரத்த அழுத்தம்

## B. உடல்நலப் பராமரிப்பின் நிலைகள்

உடல்நலப் பராமரிப்பு என்பது மக்களின் உடல்நலத்தை மேம்படுத்த, பராமரிக்க, கண்காணிக்க அல்லது மீட்டெடுக்க, அரசாங்கம் உட்பட பல்வேறு முகமைகள் மற்றும் வழங்குநர்களால் வழங்கப்படும்

சேவைகளின் தொகுப்பைத் தவிர வேறில்லை. உடல்நலப் பராமரிப்பு பயனளிக்க பின்வருமாறு இருக்கவேண்டும்:

- மக்களின் தேவைகளுக்கு ஏற்றதாக
- விரிவானதாக
- போதுமானதாக
- எளிதாக கிடைப்பதாக
- கட்டுபடியானதாக

மக்கள்தொகைக்கு நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் உடல்நலப் பராமரிப்பு வசதிகள் இருக்க வேண்டும். உதாரணமாக, ஒரு நபருக்கு ஆண்டுக்கு பல முறை காய்ச்சல், சளி, இருமல், தோல் ஒவ்வாமை போன்றவை வரலாம், ஆனால் சளி மற்றும் இருமலுடன் ஒப்பிடும்போது அவர்/அவள் ஹெபடைடிஸ் பி நோயால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு குறைவு.

எனவே, ஒரு கிராமம் அல்லது மாவட்டம் அல்லது மாநிலம் என எந்தப் பகுதியில் உடல்நலப் பராமரிப்பு வசதிகளை அமைக்க வேண்டும் என்பது பின்வருபவை போன்ற அந்த பகுதியின் குறிகாட்டிகள் எனப்படும் பல்வேறு உடல்நலப் பராமரிப்புக் காரணிகளின் அடிப்படையில் அமையும்:

- ✓ மக்கள் தொகை அளவு
- ✓ இறப்பு விகிதம்
- ✓ நோய் விகிதம்
- ✓ இயலாமை விகிதம்
- ✓ மக்களின் சமூக மற்றும் மன உடல்நலம்
- ✓ மக்களின் பொதுவான ஊட்டச்சத்து நிலை
- ✓ சுரங்கப் பகுதி அல்லது தொழில்துறைப் பகுதி போன்ற சுற்றுச்சூழல் காரணிகள்
- ✓ சாத்தியமான உடல்நலப் பராமரிப்பு வழங்குநர் அமைப்பு எ.கா. இதய மருத்துவர்கள் ஒரு கிராமத்தில் உடனடியாக கிடைக்காமல் இருக்கலாம் ஆனால் ஒரு மாவட்டம் அல்லது நகரத்தில் இருக்கலாம்
- ✓ உடல்நலப் பராமரிப்பு அமைப்பு எந்த அளவுக்கு பயன்படுத்தப்பட வாய்ப்புள்ளது

✓ கட்டுபடியாகும் விலை போன்ற சமூக-பொருளாதார காரணிகள்

மேற்கூறிய காரணிகளின் அடிப்படையில், ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை உடல்நலப் பராமரிப்புக்கான மையங்களை அமைப்பது குறித்து அரசாங்கம் முடிவெடுக்கிறது மற்றும் பொருத்தமான உடல்நலப் பராமரிப்பு மலிவு விலையில் மற்றும் மக்களுக்கு அணுகக்கூடியதாக இருப்பதற்கு தேவையான மற்ற நடவடிக்கைகளை எடுக்கிறது.

## C. உடல்நலப் பராமரிப்பு வகைகள்

உடல்நலப் பராமரிப்பு பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

### 1. முதன்மை உடல்நலப் பராமரிப்பு

முதன்மை உடல்நலப் பராமரிப்பு என்பது எந்த நோய்க்கும் நோயாளி முதலில் தொடர்பு கொள்ளும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பிற சிறிய கிளினிக்குகளில் வழங்கப்படும் சேவைகளைக் குறிக்கிறது, அதாவது ஒரு உடல்நல அமைப்பில் உள்ள அனைத்து நோயாளிகளுக்கும் ஆரம்ப உடல்நலப் பராமரிப்பு வழங்குநரே முதல் தொடர்பு புள்ளியாக இருக்கிறார்.

உதாரணமாக, ஒருவர் காய்ச்சலுக்காக மருத்துவரைச் சந்திக்கச் சென்றால், முதல் நோயறிதல் டெங்கு காய்ச்சலை சுட்டிக்காட்டினால், ஆரம்ப உடல்நலப் பராமரிப்பு வழங்குநர் சில மருந்துகளை பரிந்துரைப்பார், ஆனால் நோயாளியை சிறப்பு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிப்பதற்கும் அனுப்புவார்.

நாட்டு நிலையில், ஆரம்ப உடல்நலப் பராமரிப்பு நிலையங்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் அமைக்கப்படுகின்றன. அரசு ஆரம்ப உடல்நலப் பராமரிப்பு நிலையங்கள் மக்கள்தொகை அளவைப் பொறுத்து நிறுவப்பட்டு, கிராம மட்டம் வரை ஏதோ ஒரு வகையில் உள்ளன.

### 2. இரண்டாம் நிலை உடல்நலப் பராமரிப்பு

இரண்டாம் நிலை உடல்நலப் பராமரிப்புப் பாதுகாப்பு என்பது மருத்துவ நிபுணர்கள் மற்றும் நோயாளியுடன் பொதுவாக முதலில் தொடர்பு கொள்ளாத பிற உடல்நலப் பராமரிப்பு நிபுணர்களால் வழங்கப்படும்

உடல்நலப் பராமரிப்பு சேவைகளைக் குறிக்கிறது. தீவிர சிகிச்சை சேவைகள், ஆம்புலன்ஸ் வசதிகள், நோயியல், நோயறிதல் மற்றும் பிற தொடர்புடைய மருத்துவ சேவைகள் உட்பட, ஒரு தீவிர நோய்க்கு குறுகிய காலத்திற்கு சிகிச்சை தேவைப்படும் தீவிர சிகிச்சையும் இதில் அடங்கும்.

### 3. மூன்றாம் நிலை உடல்நலப் பராமரிப்பு

மூன்றாம் நிலை உடல்நலப் பராமரிப்பு என்பது சிறப்பு ஆலோசனை உடல்நலப் பராமரிப்பு ஆகும், பொதுவாக உள்நோயாளிகள் மற்றும் முதன்மை/இரண்டாம் நிலை பராமரிப்பு வழங்குநர்களின் பரிந்துரையின் பேரில் இது வழங்கப்படுகிறது.

மூன்றாம் நிலை உடல்நலப் பராமரிப்பு வழங்குநர்களுக்கான எடுத்துக்காட்டுகள், இரண்டாம் நிலை உடல்நலப் பராமரிப்புப் பாதுகாப்பு வழங்குநர்களின் எல்லைக்கு அப்பாற்பட்ட மேம்பட்ட மருத்துவ வசதிகள் மற்றும் மருத்துவ நிபுணர்களைக் கொண்டவர்கள். எ.கா. புற்றுநோயியல் (புற்றுநோய் சிகிச்சை), உறுப்பு மாற்று வசதிகள், அதிக அபாயநிலை உள்ள கர்ப்பத்தை கவனிக்கும் நிபுணர்கள் போன்றவை.

பராமரிப்பின் அளவு அதிகரிக்கும் போது, அதனுடன் தொடர்புடைய செலவுகளும் அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. வெவ்வேறு நிலை பராமரிப்புக்கான உள்கட்டமைப்பு நாட்டிற்கு நாடு, கிராமப்புற-நகர்ப்புறங்களில் வேறுபடுகிறது, அதே நேரத்தில் சமூக-பொருளாதார காரணிகளும் அதை பாதிக்கின்றன.

**சுய-பரீட்சை 2**

பின்வருவனவற்றில் எது ஆரம்ப உடல்நலப் பராமரிப்பின் ஒரு பகுதியாகும்?

I. காய்ச்சல்

II. புற்றுநோய்

III. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை

IV. அதிக அபாயநிலை உள்ள கர்ப்பம்

## D. இந்தியாவில் உடல்நலக் காப்பீட்டின் பரிணாமம்

உடல்நலப் பராமரிப்பு தொடர்பான கொள்கை முடிவுகளில் அரசாங்கம் மும்முரமாக இருந்த நிலையில், அது உடல்நலக் காப்பீட்டுத் திட்டங்களையும் செயல்படுத்தியது. காப்பீட்டு நிறுவனங்கள் தங்கள் உடல்நலக் காப்பீட்டு பாலிசிகளை பின்னர்தான் கொண்டுவந்தனர். இந்தியாவில் உடல்நலக் காப்பீடு வளர்ந்த விதம் கீழே தரப்பட்டுள்ளது:

1. **ஊழியர் மாநிலக் காப்பீட்டு சட்டம்** (Employees' State Insurance Act)

   1947 இல் நாடு சுதந்திரம் அடைந்த சிறிது காலத்திற்கு பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட ESI சட்டம், 1948 இன் படி ஊழியர்களின் மாநிலக் காப்பீட்டுத் திட்டத்தின் தொடக்கத்துடன் இந்தியாவில் உடல்நலக் காப்பீடு முறையாகத் தொடங்கியது. இந்தத் திட்டம் முறையான தனியார் துறையில் பணிபுரியும் உடலுழைப்பு தொழிலாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் அதன் சொந்த மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளின் நெட்வொர்க் மூலம் விரிவான உடல்நல சேவைகளை வழங்குகிறது

   ESIC (ஊழியர் மாநில காப்பீட்டுக் கழகம்) என்பது அதன் சொந்த மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களை கொண்டுள்ள செயல்படுத்தும் நிறுவனமாகும், மேலும் அதன் சொந்த வசதிகள் போதுமானதாக இல்லாத இடங்களில் பொது/தனியார் வழங்குநர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறது.

2. **மத்திய அரசின் உடல்நலத் திட்டம்**

   ESICஐ விரைவில் பின்பற்றி மத்திய அரசு உடல்நல திட்டம் (CGHS) 1954 இல் அறிமுகப்படுத்தப்பட்டது, இது ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் அரசு வேலைகளில் பணிபுரியும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உட்பட மத்திய அரசு ஊழியர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. இது பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு விரிவான மருத்துவ சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதன் நிதியானது ஓரளவு ஊழியர்கள் சந்தா மூலம், மற்றும் பெரும் அளவில் முதலாளி மூலம் (மத்திய அரசு) நிதியளிக்கப்படுகிறது.

3. **வணிக உடல்நல காப்பீடு**

காப்பீட்டுத் துறையை தேசியமயமாக்குவதற்கு முன்பும் அதற்குப் பிறகும் சில பொது காப்பீட்டாளர்கள் மூலம் வணிகரீதியான உடல்நலக் காப்பீடு வழங்கப்பட்டது.

1986 ஆம் ஆண்டில், தனிநபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான முதல் தரப்படுத்தப்பட்ட உடல்நலக் காப்பீட்டுத் தயாரிப்பு, நான்கு தேசியமயமாக்கப்பட்ட பொது காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் இந்திய சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது (அப்போது இவை இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகத்தின் துணை நிறுவனங்களாக இருந்தன). மகப்பேறு, முன்னரே இருக்கும் நோய்கள் போன்றதை போல சில விதிவிலக்குகளுடன் ஒரு குறிப்பிட்ட வருடாந்திர இழப்பீட்டு வரம்பு வரை மருத்துவமனை சேர்க்கை செலவினங்களுக்கு காப்பு வழங்குவதற்காக **மெடிக்ளைம்** என்ற இந்த தயாரிப்பு, அறிமுகப்படுத்தப்பட்டது.

மருத்துவமனையில் சேர்க்கப்படும் இழப்பீட்டுத் தொகை அடிப்படையிலான வருடாந்திர ஒப்பந்தம் இன்றும் இந்தியாவில் தனியார் மருத்துவக் காப்பீட்டின் மிகவும் பிரபலமான வடிவமாகத் தொடர்கிறது. 2001 இல் காப்பீட்டுத் துறையில் தனியார் நிறுவனங்கள் வந்த பிறகு, உடல்நலக் காப்பீடு மிகப்பெரிய அளவில் வளர்ந்துள்ளது. இருப்பினும், இன்றும் இதில் பலர் சேராத காரணத்தால் மீதியுள்ள சந்தை பெரிய அளவில் உள்ளது.

உடல்நலக் காப்பீடு பாலிசிகளை வாங்குவதற்கு அரசாங்கம் தனிநபர்களை ஊக்குவித்துள்ளது. தனக்கு, துணைவருக்கு மற்றும் குடும்ப உறுப்பினர்களின் உடல்நலக் காப்பீட்டிற்காக தனிநபர்கள் செலுத்தும் பிரீமியங்கள் வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 80 D இன் கீழ் வரிக்குரிய வருமானத்திலிருந்து கழிக்கப்பட அனுமதிக்கப்படுகிறது. 60 வயதுக்கு மேற்பட்ட பெற்றோர்/ மாமனார்-மாமியார்களின் பிரீமியங்களைச் செலுத்துவதற்கு அதிக வரம்புகளை இந்தப் பிரிவு அனுமதிக்கிறது.

காப்புகள், விலக்குகள் மற்றும் புதிய கூடுதல் காப்புகளில் கணிசமான மாறுபாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன, அவை அடுத்த அத்தியாயங்களில் விவாதிக்கப்படும்.

**சுய-பரீட்சை 3**

தனிநபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான முதல் தரப்படுத்தப்பட்ட உடல்நலக் காப்பீட்டுத் தயாரிப்பு _____ ஆண்டில் நான்கு தேசியமயமாக்கப்பட்ட பொது காப்பீட்டு நிறுவனங்களால் இந்திய சந்தையில் தொடங்கப்பட்டது.

I. 1948

II. 1954

III. 1986

IV. 2001

## E. உடல்நலக் காப்பீடு சந்தை

உடல்நலக் காப்பீட்டுச் சந்தையில் இன்று பல நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன, வழங்குநர்கள் எனப்படும் சிலர் உடல்நலப் பராமரிப்புக்கான வசதிகளை வழங்குகிறார்கள், மற்றவர்கள் காப்பீட்டுச் சேவைகளை வழங்குறார்கள் மற்றும் பல்வேறு இடைத்தரகர்களும் உள்ளனர். இதில் சிலர் அடிப்படை உள்கட்டமைப்பை உருவாக்குகின்றனர், மற்றவர்கள் ஆதரவு வசதிகளை வழங்குகின்றனர். சிலர் அரசுத் துறையில் உள்ளனர், மற்றவர்கள் தனியார் துறையில் உள்ளனர்.

### 1. தனியார் துறை உடல்நல பராமரிப்பு வழங்குநர்கள்

இந்தியாவில் முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை ஆகிய மூன்று வகையான உடல்நல சேவைகளையும் வழங்கும் மிகப் பெரிய தனியார் உடல்நலத் துறை உள்ளது. இவற்றில் தன்னார்வ, இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் முதல் இலாப நோக்குடன் செயல்படும் கார்ப்பரேட், அறக்கட்டளைகள், தனி பயிற்சியாளர்கள், தனித்தியங்கும் சிறப்பு சேவைகள், நோய் கண்டறியும்

ஆய்வகங்கள், மருந்தக கடைகள் மற்றும் தகுதி பெறாத வழங்குநர்கள் (போலிகள்) வரை உள்ளனர்.

மற்ற மருத்துவ முறைகளில் (ஆயுர்வேதம்/ சித்தா/ யுனானி/ ஹோமியோபதி) அதிக எண்ணிக்கையிலான தகுதி வாய்ந்த மருத்துவர்களும் இந்தியாவில் உள்ளனர், இதில் 7 லட்சத்திற்கும் அதிகமான மருத்துவர்கள் உள்ளனர். இவை பொது மற்றும் தனியார் துறைகளில் அமைந்துள்ளன. இலாப நோக்குடன் செயல்படும் தனியார் உடல்நல சேவை வழங்குநர்களைத் தவிர, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வத் துறை ஆகியவை சமூகத்திற்கு உடல்நல சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளன.

பொதுக் காப்பீட்டுத் துறையில் உள்ள **காப்பீட்டு நிறுவனங்களே** உடல்நலக் காப்பீட்டுச் சேவைகளில் பெரும்பகுதியை வழங்குகின்றன. தனித்தியங்கும் உடல்நலக் காப்பீடு (SAHI) நிறுவனங்கள் அனைத்து வகையான உடல்நலக் காப்பீடுகளையும் விற்க அனுமதிக்கப்படுகின்றன, அதே நேரத்தில் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களும் சில வகையான உடல்நலக் காப்பீடுகளை விற்க அனுமதிக்கப்படுகின்றன.

## 2. இடைத்தரகர்கள்:

காப்பீட்டுத் துறையின் ஒரு பகுதியாக சேவைகளை வழங்கும் பல நபர்கள் மற்றும் நிறுவனங்கள் உடல்நலக் காப்பீட்டு சந்தையின் ஒரு பகுதியாக இருக்கின்றனர். ஐஆர்டிஏ சட்டம், 1999 இன் பிரிவு 2 இன் கீழ் காப்பீட்டு இடைத்தரகர்கள் பற்றி வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் காப்பீட்டு தரகர்கள், மறுகாப்பீட்டு தரகர்கள், காப்பீட்டு ஆலோசகர்கள், ஆய்வாளர்கள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு நிர்வாகிகள் அடங்குவர்.

மூன்றாம் தரப்பு நிர்வாகி (டிபிஏ) என்பது ஐஆர்டிஏஐ-ஆல் பதிவுசெய்யப்பட்ட மற்றும் உடல்நல சேவைகளை வழங்குவதற்காக ஒரு காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து கட்டணம் அல்லது சம்பளம் பெற்று ஈடுபடும் ஒரு நிறுவனமாகும். உடல்நலக் காப்பீட்டு வணிகம் தொடர்பான ஒப்பந்தத்தின் கீழ் காப்பீட்டாளருக்கு ஒரு TPA பின்வரும் சேவைகளை வழங்கலாம்:

a. அந்தந்த பாலிசியின் அடிப்படை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி மற்றும் தீர்வுக்காக காப்பீட்டாளர்களால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின் கட்டமைப்பிற்குள், ரொக்கமில்லா சிகிச்சைக்கான முன் அங்கீகாரத்தை அல்லது ரொக்கமில்லா சிகிச்சை இல்லாத அல்லது இரண்டு வகையிலும் உள்ள மற்ற ஈடுக்கோரல்களை தீர்த்து வைப்பதன் மூலம் உடல்நலக் காப்பீட்டு பாலிசிகளின் கீழ் ஈடுக்கோரல் சேவைகளை வழங்குகிறார்.

b. தனிநபர் விபத்து பாலிசி மற்றும் உள்நாட்டுப் பயண பாலிசியின் கீழ், ஏதேனும் இருந்தால், மருத்துவமனையில் சேர்க்கைக்கான ஈடுக்கோரல்களுக்கு சேவைகளை வழங்குகிறார்.

c. உடல்நலக் காப்பீடு பாலிசிகளின் ஏற்பளிப்பு தொடர்பாக காப்பீட்டுக்கு முந்தைய மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கிறார்.

**சுருக்கம்**

**a)** காப்பீடு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே ஏதாவது வடிவில் இருந்தது, ஆனால் அதன் நவீன வடிவம் சில நூற்றாண்டுகள் மட்டுமே பழமையானது. இந்தியாவில் காப்பீடு என்பது அரசாங்க ஒழுங்குவிதிகளுடன் பல கட்டங்களைக் கடந்துள்ளது.

**b)** குடிமக்களின் உடல்நலம் மிக முக்கியம் என்பதால், பொருத்தமான உடல்நல அமைப்பை உருவாக்குவதில் அரசாங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**c)** ஒரு நாட்டின் மக்கள் தொகை தொடர்பான பல காரணிகளைப் பொறுத்து வழங்கப்படும் உடல்நலப் பராமரிப்பு நிலை உள்ளது.

**d)** தேவைப்படும் மருத்துவ கவனிப்பின் அளவைப் பொறுத்து முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை ஆகிய மூன்று வகையான உடல்நலப் பராமரிப்புகள் உள்ளன. ஒவ்வொரு நிலையிலும் உடல்நலப் பராமரிப்புக்கான செலவு உயர்கிறது, இதில் மூன்றாம் நிலை பராமரிப்புக்கான செலவு மிகவும் அதிகமாக இருக்கும்

e) இந்தியாவில் உள்ள மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் நகரமயமாக்கல் போன்ற தனித்துவமான சவால்கள் சரியான உடல்நலப் பராமரிப்புக்கான தேவையை அதிகரிக்கின்றன.

f) முதலில் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்கள் உடல்நலக் காப்பீடு திட்டங்களைக் கொண்டு வந்தன, பின்னர் தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் இதற்கான வணிகக் காப்பீட்டைத் தொடங்கின.

g) உடல்நலக் காப்பீட்டுச் சந்தையில் பல நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன, அதில் சில உள்கட்டமைப்பை வழங்குகின்றனர், மற்றவை காப்பீட்டு சேவைகளை வழங்குகின்றன, தரகர்கள், முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு நிர்வாகிகள் போன்ற இடைத்தரகர்கள் உடல்நலக் காப்பீட்டு வணிகத்தில் சேவை வழங்குகின்றனர் மற்றும் பிற ஒழுங்குமுறை, கல்வி மற்றும் சட்ட நிறுவனங்கள் தங்களது பங்கை வகிக்கின்றன.

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

பதில் 1 சரியான பதில் விருப்பம் III.

பதில் 2 சரியான பதில் விருப்பம் I.

பதில் 3 சரியான பதில் விருப்பம் III.

## முக்கிய வார்த்தைகள்

a) உடல்நலப் பராமரிப்பு
b) வணிக காப்பீடு
c) தேசியமயமாக்கல்
d) முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை உடல்நலப் பராமரிப்பு
e) மூன்றாம் தரப்பு நிர்வாகி

# அத்தியாயம் H-02

# உடல்நலக் காப்பீடு ஆவணமாக்குதல்

## அத்தியாய அறிமுகம்

காப்பீட்டுத் துறையில், நாம் நிறைய படிவங்கள், ஆவணங்கள் போன்றவற்றை பயன்படுத்துவோம். இந்த அத்தியாயம், உடல்நலக் காப்பீட்டு ஒப்பந்தத்தில் பல்வேறு ஆவணங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் பற்றி விளக்குகிறது

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. முன்மொழிவு படிவங்கள்

B. முன்மொழிவிற்கு ஒப்புதல் அளித்தல் (காப்பீடு ஏற்பளிப்பு)

C. தகவல் ஏடு

D. பாலிசி ஆவணம்

E. நிபந்தனைகள் மற்றும் ஈட்டுறுதிகள்

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:

a) முன்மொழிவு படிவத்தின் உள்ளடக்கத்தை பற்றி விளக்க முடியும்
b) தகவல் ஏட்டின் முக்கியத்துவத்தை விவரிக்க முடியும் .
c) காப்பீடு பாலிசி ஆவணத்திலுள்ள வார்த்தைகளை மற்றும் வாசகங்களை பற்றி விளக்க முடியும்.
d) பாலிசியின் நிபந்தனைகள் மற்றும் ஈட்டுறுதிகளை பற்றி விவாதிக்க முடியும்
e) மேல் குறிப்புகள் ஏன் வழங்கப்படுகின்றன என்பதைப் பாராட்ட முடியும்.
f) பிரீமியம் ரசீதை பற்றி புரிந்து கொள்ளமுடியும்
g) புதுப்பித்தல் அறிவிப்புகள் ஏன் வெளியிடப்படுகின்றன என்பதைப் பாராட்ட முடியும்.

## A. முன்மொழிவு படிவங்கள்

### 1. உடல்நலக் காப்பீட்டில் முன்மொழிவு படிவங்கள்

பொதுவான அத்தியாயங்களில் விவாதிக்கப்பட்டபடி, முன்மொழிவுப் படிவத்தில் காப்பீட்டு நிறுவனம் காப்பளிக்கும் அபாயத்தை ஏற்றுக்கொள்ள தேவையான பயனுள்ள தகவல் உள்ளது. உடல்நலக் காப்பீட்டு பாலிசிக்கான முன்மொழிவு படிவத்தில் உள்ள சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

1. முன்மொழிவுப் படிவத்தில் காப்பு, விலக்குகள், விதிகள் போன்ற காப்பீட்டின் விவரங்களைக் கொடுக்கும் ஒரு தகவல் ஏடு உள்ளது. தகவல் ஏடு முன்மொழிவு படிவத்தின் ஒரு பகுதியாகும், மேலும் முன்மொழிபவர் அதன் உள்ளடக்கங்களை படித்து விட்டதை உறுதி செய்து கையொப்பமிட வேண்டும்.
2. முன்மொழிவு படிவம், ஒவ்வொரு காப்பீட்டு நபரின் பெயர், முகவரி, தொழில், பிறந்த தேதி, பாலினம் மற்றும் முன்மொழிபவருடனான உறவு, சராசரி மாத வருமானம் மற்றும் வருமான வரி பான் எண், மருத்துவரின் பெயர் மற்றும் முகவரி, அவரது தகுதிகள் மற்றும் பதிவு எண் தொடர்பான தகவல்களை சேகரிக்கிறது. காப்பீடு செய்தவரின் வங்கி விவரங்களும் தற்போது, வங்கிப் பரிமாற்றம் மூலம் நேரடியாக ஈடுக்கோரல் பணத்தைச் செலுத்துவதற்காக சேகரிக்கப்படுகிறது.
3. கூடுதலாக, காப்பீடு செய்யப்பட்ட நபரின் உடல்நிலை தொடர்பான கேள்விகள் உள்ளன. படிவத்தில் உள்ள இந்த விரிவான கேள்விகள் கடந்தகால ஈடுக்கோரல் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டவை மற்றும் அபாயத்தின் சரியான ஏற்பளிப்பை பெறுவதற்காக கேட்கப்படுகின்றன.
4. காப்பீடு செய்யப்பட்ட நபர் படிவத்தில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தால் முழு விவரங்களையும் தெரிவிக்க தேவை.
5. மேலும், வேறு ஏதேனும் நோய் அல்லது வியாதியால் பாதிக்கப்பட்ட அல்லது விபத்துக்குள்ளான விவரங்களும் பின்வருமாறு கேட்கப்படுகின்றன:

a) நோய்/காயம் மற்றும் சிகிச்சையின் தன்மை
b) முதல் சிகிச்சையின் தேதி
c) சிகிச்சை அளிக்கும் மருத்துவரின் பெயர் மற்றும் முகவரி
d) முழுமையாக குணமடைந்து விட்டாரா என்பது

6. முன்மொழிபவருக்கு மருத்துவ கவனிப்பு தேவைப்படுகிற ஏதேனும் நேர்மறையான இருப்பு அல்லது ஏதேனும் நோய் அல்லது காயம் இருப்பதைப் பற்றிய ஏதாவது அறிவு இருந்தால், காப்பீட்டாளர்களுக்கு வெளிப்படுத்த வேண்டிய கூடுதல் உண்மைகளை குறிப்பிட வேண்டும்.
7. படிவத்தில் கடந்தகால காப்பீடு மற்றும் ஈடுக்கோரல் வரலாறு மற்றும் வேறு எந்த காப்பீட்டாளிடமும் தற்போது உள்ள கூடுதல் காப்பீடு தொடர்பான கேள்விகளும் இருக்கும்.
8. முன்மொழிபவர் கையொப்பமிட வேண்டிய பிரகடனத்தின் சிறப்பு அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும்.
9. காப்பீடு செய்யப்பட்ட நபர், தனது உடல் அல்லது மன ஆரோக்கியத்தைப் பாதிக்கும் எந்தவொரு நோய்க்கும் எந்த நேரத்திலும் சிகிச்சையளித்த அல்லது சிகிச்சை அளிக்கக்கூடிய எந்தவொரு மருத்துவமனை/ மருத்துவரிடம் இருந்தும் மருத்துவத் தகவலைப் பெற காப்பீட்டாளருக்கு ஒப்புதல் அளித்து அங்கீகரிக்கிறார்.
10. காப்பீடு செய்யப்பட்ட நபர், படிவத்தின் ஒரு பகுதியாக உள்ள தகவல் ஏடை படித்ததாகவும், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் உறுதிப்படுத்துகிறார்.
11. பிரகடனத்தில் அறிக்கையின் உண்மை குறித்த வழக்கமான உத்தரவாதமும் மற்றும் ஒப்பந்தத்தின் அடிப்படையாக முன்மொழிவு படிவம் இருக்கும்.

## 2. மருத்துவ கேள்வித்தாள்

முன்மொழிவு படிவத்தில் பாதகமான மருத்துவ வரலாறு இருந்தால், காப்பீடு செய்யப்பட்ட நபர் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், மார்பு வலி அல்லது இதயத்தமனி பற்றாக்குறை அல்லது மாரடைப்பு போன்ற

நோய்கள் தொடர்பான விரிவான கேள்வித்தாளை பூர்த்தி செய்ய வேண்டும்.

சிகிச்சையளிக்கும் மருத்துவரால் பூர்த்தி செய்யப்பட்ட படிவம் மூலம் இவை ஆதரிக்கப்பட வேண்டும். இந்தப் படிவம் நிறுவனத்தின் குழு மருத்துவரால் பரிசோதிக்கப்படுகிறது, மற்றும் அவருடைய கருத்தின்படி, ஏற்றுக்கொள்வது, விலக்குவது போன்றவை தீர்மானிக்கப்படுகிறது.

## பிரகடனத்தின் நிலையான வடிவம்

ஐஆர்டிஏஐ கீழுள்ளவாறு உடல்நலக் காப்பீட்டு முன்மொழிவில் உள்ள நிலையான பிரகடனத்திற்கான வடிவமைப்பைக் குறிப்பிட்டுள்ளது:

1. நான்/நாங்கள், என் சார்பாகவும், காப்பீடு செய்து கொள்வதற்காக முன்மொழிந்துள்ள அனைத்து நபர்கள் சார்பாகவும், என்னால் வழங்கப்பட்ட மேற்கண்ட அறிக்கைகள், பதில்கள், மற்றும்/அல்லது விவரங்கள் என் அறிவிற்கு எட்டியவரை அனைத்து விதங்களிலும் உண்மையானவை மற்றும் முழுமையானவை என்றும், இந்த மற்ற நபர்கள் சார்பாக முன்மொழிய எனக்கு/எங்களுக்கு அதிகாரம் உள்ளது என்றும் தெரிவித்துக் கொள்கின்றேன்.
2. என்னால் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் காப்பீட்டு பாலிசியின் அடிப்படையை உருவாக்கும் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் ஏற்பளிப்பு பாலிசியை அங்கீகரிக்கும் வாரியம் மூலம் சரிபார்க்கப்படும் என்பதையும், கட்ட வேண்டிய பிரீமியத்தை முழுமையாக பெற்றுக்கொண்ட பிறகு மட்டுமே பாலிசி செயல்பாட்டிற்கு வரும் என்பதையும் நான் புரிந்துகொண்டேன்.
3. நிறுவனத்தால் அபாயத்திற்கு ஒப்புதல் தெரிவிக்கப்படும் முன்னர், காப்பீடு பெறுபவர்/முன்மொழிபவரின் வேலை அல்லது பொது உடல்நலத்தில் ஏற்படும் ஏதேனும் மாற்றங்களை எழுத்துபூர்வமாக தெரிவிப்பேன்/தெரிவிப்போம் எனவும் நான்/நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றேன்/கொள்கின்றோம்.
4. ஏதேனும் நேரத்தில் காப்பீடு செய்துகொள்ளப் போகும்/முன்மொழியும் நபரை சோதித்த ஏதேனும் மருத்துவர் அல்லது மருத்துவமனையிடமிருந்து மருத்துவ தகவல்களை பெற அல்லது காப்பீடு செய்துகொள்ளப் போகும்/முன்மொழியும் நபரின் உடல்நலம்

அல்லது மனநலத்தை பாதிக்கும் தகவல்களை கடந்தகால அல்லது தற்போதைய முதலாளியிடமிருந்து பெற மற்றும் எந்த காப்பீட்டு நிறுவனத்திடமாவது காப்பீடு செய்பவர்/முன்மொழிபவருக்காக காப்பீட்டிற்கான, முன்மொழிவு படிவம் ஏற்பளிப்பிற்காக மற்றும்/அல்லது ஈடுக்கோரல் தீர்வுக்காக விண்ணப்பம் சமர்ப்பிக்க பட்டிருந்தால், அந்த தகவல்களை பற்றி நிறுவனத்திடம் கேட்டறிய ஒப்புதல் அளிக்கின்றேன்/ அளிக்கின்றோம்.

### 3. முன்மொழிவு படிவத்தில் இருக்கும் வினாக்களின் இயல்பு

முன்மொழிவு படிவத்திலுள்ள வினாக்களின் எண்ணிக்கை மற்றும் இயல்பு காப்பீடு அளிக்கப்படும் பிரிவிற்கு ஏற்ப மாறுபடும். காப்பீட்டுத் தொகை என்பது அந்த பாலிசியின் கீழ் காப்பீட்டாளரின் கடப்பாடு நிலையை குறிக்கும் மற்றும் அது எல்லா முன்மொழிவு படிவங்களிலும் குறிப்பிடப்பட வேண்டும்.

**சொந்த காப்பீடு வகைகளில்** அதாவது உடல்நலம், சொந்த விபத்து மற்றும் பயணக் காப்பீடு ஆகியவற்றின் முன்மொழிவு படிவங்கள், முன்மொழிபவரின் உடல்நலம், வாழ்க்கை முறை மற்றும் பழக்கங்கள், முன்னரே உள்ள உடல்நல நிலைகள், மருத்துவ வரலாறு, மரபுவழிப் பண்புகள், முன் காப்பீட்டு அனுபவங்கள் போன்றவற்றைப் பற்றிய தகவல்களை பெறுவதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

**எடுத்துக்காட்டு 1**

- ✓ ஒரு ஃபாஸ்ட-ஃபுட் உணவு விடுதியில் விநியோகம் செய்பவர், தன் வாடிக்கையாளர்களுக்கு உணவை கொண்டு செல்ல மோட்டார் பைக்குகளில் அடிக்கடி வேகமாக செல்வதால், அவர் அந்த உணவு விடுதியின் கணக்காய்வாளரை விட அதிக அபாயங்களுக்கு ஆளாகக்கூடியவர்.
- ✓ நிலக்கரிச் சுரங்கம் அல்லது சிமென்ட் ஆலையில் பணிபுரியும் நபர், தூசித் துகள்களால் நுரையீரல் நோய்களால் அவதிப்படும் வாய்ப்புள்ளது.

**எடுத்துக்காட்டு 2**

✓ வெளிநாட்டு பயணக் காப்பீட்டின் நோக்கத்திற்காக, முன்மொழிபவர் தெரிவிக்க வேண்டியவை (யார் பயணம் செய்கிறார், எப்போது, எந்த நாட்டிற்கு, எந்த நோக்கத்திற்காக) அல்லது

உடல்நலக் காப்பீட்டின் நோக்கத்திற்காக, முன்மொழிபவரிடம் அவருடைய உடல்நலம் (நபரின் பெயர், முகவரி மற்றும் அடையாளத்துடன்) போன்றவற்றை வழக்கைப் பொறுத்து கேட்கப்படும்.

**எடுத்துக்காட்டு 3**

✓ உடல்நலக் காப்பீடில், அது மருத்துவமனை சிகிச்சைக்கான செலவாக இருக்கும். சொந்த விபத்துக்கான காப்பீடில், அது விபத்தினால் ஏற்படும் உயிரிழப்பு, கை கால் இழப்பு அல்லது பார்வை இழப்பு ஆகியவற்றுக்கென ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட தொகையாக இருக்கும்.

### a) முன்புள்ள மற்றும் தற்போதுள்ள காப்பீடு

முன்மொழிபவர் தனது முந்தைய காப்பீடுகள் பற்றிய விவரங்களை காப்பீட்டாளருக்கு தெரிவிக்க வேண்டும். இது அவரது காப்பீட்டு வரலாற்றைப் புரிந்து கொள்வதற்காக தேவை. சில சந்தைகளில் காப்பீட்டாளர்கள் காப்பீடு செய்தவரைப் பற்றிய தகவல்களை ரகசியமாகப் பகிர்ந்து கொள்ளும் அமைப்புகள் உள்ளன.

முன்மொழிபவர், ஏதாவது காப்பீட்டாளர் அவருடைய முன்மொழிவை மறுத்துவிட்டாரா, சிறப்பு நிபந்தனைகளை சுமத்தினாரா, புதுப்பிக்கும்போது கூடுதல் ப்ரீமியத்தை கோரினாரா, புதுப்பிப்பதற்கு மறுத்தாரா அல்லது பாலிசியை ரத்து செய்தாரா போன்ற விவரங்களை குறிப்பிட வேண்டும். மேலும், சொந்த விபத்து காப்பீடில், காப்பீடு பெறுபவர் எடுத்த வேறு சொந்த விபத்து பாலிசிகளின் மூலம் காப்பீடு செய்யப்பட்ட தொகையின் அடிப்படையில், பாதுகாப்பு தொகை (காப்புத் தொகை) அளவை கட்டுப்படுத்தலாம்.

**b) ஈடுக்கோரல் அனுபவம்**

முன்மொழிபவர், காப்பீடு செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர் அனுபவித்த இழப்புகளின் முழு விவரங்களையும் கூறவேண்டும். இது காப்பீடு செய்யப்படும் விஷயத்தை பற்றியும் மற்றும் கடந்த காலத்தில் காப்பீட்டு செய்தவர் அந்த அபாயத்தை எப்படி சமாளித்தார் என்பது பற்றிய தகவலையும் காப்பீட்டாளரிடம் தெரிவிக்கும். இதன் பொருள் காப்பீட்டு நிறுவனம் வாய்வழியாக பெறப்பட்ட அனைத்து தகவல்களையும் பதிவு செய்ய கடமைப்பட்டுள்ளது, இதை முகவர் நினைவாக பின்தொடர்தல் மூலம் பூர்த்தி செய்யவேண்டும்.

## B. முன்மொழிவிற்கு ஒப்புதல் அளித்தல் (காப்பீடு ஏற்பளிப்பு)

ஒரு பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவு படிவம் பொதுவாக பின்வரும் தகவல்களை அளிக்கும் என்பதை நாம் பார்த்திருக்கிறோம்::

- ✓ காப்பீடு பெறுபவரின் விவரங்கள்
- ✓ காப்பீடு செய்யப்படும் விஷயத்தைப் பற்றிய விவரங்கள்
- ✓ தேவைப்படும் காப்பீடின் வகை
- ✓ உடல்சார்ந்த அம்சங்கள் பற்றி நேர்மறை மற்றும் எதிர்மறை விவரங்கள்.
- ✓ காப்பீடு மற்றும் ஈடுக்கோரலின் முந்தைய வரலாறு

உடல்நலக் காப்பீட்டுத் திட்டத்தில், காப்பீட்டாளர் வருங்கால வாடிக்கையாளரை எ.கா. 45 வயதுக்கு மேல் உள்ளவராக இருப்பவரை ஒரு மருத்துவர் மற்றும்/ அல்லது மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பலாம். முன்மொழிவில் உள்ள தகவல்களின் அடிப்படையில் மற்றும் மருத்துவ பரிசோதனைக்கு அறிவுறுத்தப்பட்ட வழக்குகளில், மருத்துவ அறிக்கை மற்றும் மருத்துவரின் பரிந்துரையின் அடிப்படையில், காப்பீட்டாளர் முடிவெடுக்கிறார். சில நேரங்களில், மருத்துவ வரலாறு திருப்திகரமாக இல்லாத பட்சத்தில், கூடுதல் தகவல்களைப் பெற, வருங்கால வாடிக்கையாளரிடம் இருந்து கூடுதல் கேள்வித்தாளைப் பெற தேவை. காப்பீட்டாளர் அபாய காரணிக்கு பயன்படுத்தப்படும் விகிதத்தைப் பற்றி முடிவு செய்து, பல்வேறு காரணிகளின் அடிப்படையில் பிரீமியத்தைக் கணக்கிடுகிறார், அது காப்பீட்டு பெறுபவரிடம் தெரிவிக்கப்படும்.

## C. தகவல் ஏடு

தகவல் ஏடு என்பது காப்பீட்டாளரால் அல்லது அதன் சார்பாக காப்பீட்டை வாங்கும் வருங்கால வாங்குபவர்களுக்கு வழங்கப்படும் ஆவணமாகும். இது பொதுவாக ஒரு சிற்றேடு அல்லது துண்டுப் பிரசுர வடிவில் இருக்கும் அல்லது மின்னணு வடிவத்திலும் இருக்கலாம் மற்றும் வருங்கால வாடிக்கையாளர்களுக்கு ஒரு தயாரிப்பை அறிமுகப்படுத்தும் நோக்கத்திற்காக உதவுகிறது. காப்பீட்டுச் சட்டம், 1938 மற்றும் பாலிசிதாரர்களின் நலன்களைப் பாதுகாத்தல், 2017 மற்றும் ஐஆர்டிஏஐ இன் உடல்நலக் காப்பீட்டு ஒழுங்குவிதிகள், 2016 ஆகியவற்றால் தகவல் ஏட்டின் வழங்கல் நிர்வகிக்கப்படுகிறது. உடல்நல பாலிசிகளின் காப்பீட்டாளர்கள் பொதுவாக தங்கள் உடல்நலக் காப்பீட்டுத் தயாரிப்புகளைப் பற்றிய தகவல் ஏடுகளை வெளியிடுவார்கள். அத்தகைய சந்தர்ப்பங்களில் முன்மொழிவு படிவத்தில் வாடிக்கையாளர் தகவல் ஏடை படித்து அதை ஒப்புக்கொண்டதாக ஒரு பிரகடனம் இருக்கும்.

அத்தியாயம் 4 இல் விவாதிக்கப்பட்டபடி, காப்பீட்டுச் சட்டம் 1938 இன் பிரிவு 64 VB பிரீமியங்களை முன்கூட்டியே வசூலிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இருப்பினும், கோவிட்-19 பரவல் காரணமாக உடல்நலக் காப்பீட்டு பிரீமியங்களை செலுத்துவதை எளிதாக்குவதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, ஐஆர்டிஏஐ காப்பீட்டாளர்களுக்கு தனிநபர் உடல்நல காப்பீட்டு தயாரிப்புகளின் பிரீமியங்களை தவணைகளில் வசூலிக்க அனுமதித்தது. காப்பீட்டு நிறுவனங்கள் தவணை முறையில் பிரீமியத்தை செலுத்தும் வசதி இருப்பதை மற்றும் அதற்கான நிபந்தனைகளை தங்கள் இணையதளங்களில் அறிவிக்க வேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டது. எந்தவொரு பாகுபாடும் இல்லாமல் அனைத்து பாலிசிதாரர்களுக்கும் இந்த வசதி வழங்கப்படும்.

## D. பாலிசி ஆவணம்

பாலிசிதாரரின் நலன்களை பாதுகாப்பதற்கான சட்டம் 2017 இன் ஐஆர்டிஏஐ ஒழுங்குவிதிகள், உடல்நலக் காப்பீட்டு பாலிசி ஆவணத்தில் பின்வருவது இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது:

a) காப்பீடு செய்தவரின் பெயர்(கள்) மற்றும் முகவரி மற்றும் காப்பீடு செய்யப்பட்ட விஷயத்தில் காப்பீடுப் பற்று உள்ள மற்ற நபர்கள்
b) காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் அல்லது நலன் பற்றிய முழு விளக்கம்
c) பாலிசிதாரர் மற்றும்/ அல்லது இன்னலின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட தொகை
d) தயாரிப்பின் UIN, பெயர், குறியீட்டு எண், விற்பனை செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள நபரின் தொடர்பு விவரங்கள்;
e) காப்பீடு செய்யப்பட்டவரின் பிறந்த தேதி மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட ஆண்டுகளில் தொடர்புடைய வயது;
f) காப்பீட்டின் காலம் மற்றும் பாலிசிதாரர் இந்தியாவில் எந்தவொரு காப்பீட்டாளரிடமிருந்தும் இடைவேளையின்றி தொடர்ந்து உடல்நலக் காப்பீட்டை பெற ஆரம்பித்த தேதி
g) துணை வரம்புகள், விகிதாசார குறைப்புகள் மற்றும் பேக்கேஜ் விகிதங்கள் ஏதேனும் இருந்தால், சம்பந்தப்பட்ட பாலிசிப் பிரிவின் குறுக்குக் குறிப்புடன் வழங்கப்பட வேண்டும்;
h) இணைந்து செலுத்தும் வரம்புகள் ஏதேனும் இருந்தால்;
i) முன்னரே இருக்கும் நோய்க்கான (PED) காத்திருப்புக் காலம், பொருந்தினால்;
j) பொருந்தக்கூடிய குறிப்பிட்ட காத்திருப்பு காலங்கள்;
k) பொருந்தக்கூடிய வகையில் கழிவுத் தொகைகள் - பொதுவான மற்றும் குறிப்பிட்ட, ஏதேனும் காப்பளிக்கப்பட்டுள்ள ஆபத்துகள் மற்றும் விலக்குகள்.
l) செலுத்தப்படவேண்டிய பிரீமியம் மற்றும் அந்த பிரீமியம் தற்காலிகமாக சரிப்படுத்தக்கூடியதாக இருந்தால், பிரீமியத்தை சரிப்படுத்துவதற்கான அடிப்படையுடன் சேர்த்து தவணைகளின் குறிப்பிட்ட கால அளவு, ஏதேனும் இருந்தால்
m) பாலிசி விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் ஈட்டுறுதிகள்;
n) தற்செயல் நிகழ்வு ஏதேனும் ஏற்பட்டு பாலிசியின் கீழ் ஈடுக்கோரல் பெறுவதற்கான வாய்ப்பு வரும்போது காப்பீடு செய்பவர் செய்யவேண்டிய செயல்;

o) காப்பீடு எடுக்கப்பட்ட விஷயத்துடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒரு நிகழ்வு ஏற்பட்டு அதற்காக ஈடுக்கோரல் பெறுவதற்காக காப்பீடு செய்பவர் செய்யவேண்டிய கடமைகள் மற்றும் அந்த நேரங்களில் காப்பீட்டாளரின் உரிமைகள்;

p) ஏதேனும் சிறப்பு நிபந்தனைகள்

q) திரித்துக் கூறுதல், மோசடி, உண்மைகளை மறைத்தல் அல்லது காப்பீடு செய்தவரின் ஒத்துழையாமை ஆகியவற்றால் பாலிசியை ரத்து செய்யும் ஏற்பாடு;

r) கூடுதல் காப்பின் விவரங்கள், ஏதேனும் இருந்தால்

s) குறை தீர்க்கும் வழிமுறையின் விவரங்கள் மற்றும் குறைதீர்ப்பாளரின் முகவரி

t) காப்பீட்டாளரின் குறை தீர்க்கும் வழிமுறையின் விவரங்கள்;

u) இலவச தோற்ற கால வசதி மற்றும் பெயர்வுத்திறன் நிபந்தனைகள்;

v) பாலிசி இடம்பெயர்வு வசதி மற்றும் பொருந்தக்கூடிய நிபந்தனைகள்.

## E. நிபந்தனைகள் மற்றும் ஈட்டுறுதிகள்

இங்கே, பாலிசி வார்த்தைகளில் பயன்படுத்தப்படும் இரண்டு முக்கியமான சொற்களை விளக்குவது முக்கியம். இவை நிபந்தனைகள் மற்றும் உத்திரவாதங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

1. **நிபந்தனைகள்:** ஒரு நிபந்தனை என்பது ஒப்பந்தத்தின் அடிப்படையை உருவாக்கும் காப்பீட்டு ஒப்பந்தத்தில் உள்ள ஒரு ஏற்பாடாகும்.

### எடுத்துக்காட்டுகள்:

**a. பெரும்பாலான காப்பீட்டு பாலிசிகளில் நிலையான நிபந்தனையாக உள்ள ஒன்று கூறுவது:**

ஈடுக்கோரல் ஏதாவது விதத்தில் மோசடியானதாக இருந்தால், அல்லது அதற்கு ஆதரவாக ஏதேனும் தவறான பிரகடனம் செய்யப்பட்டால் அல்லது பயன்படுத்தப்பட்டால் அல்லது காப்பீடு செய்தவர் அல்லது அவர் சார்பாக செயல்படும் எவரும் ஏதேனும்

மோசடி வழிமுறைகள் அல்லது சாதனங்களை பாலிசியின் கீழ் ஏதேனும் நன்மையைப் பெறுவதற்காக பயன்படுத்தினால் அல்லது இழப்பு அல்லது சேதம் வேண்டுமென்றே செய்யப்பட்ட செயலால் நிகழ்ந்தால் அல்லது அதற்கு காப்பீடு பெறுபவர் உடந்தையாக இருந்தால், இந்த பாலிசியின் கீழ் உள்ள அனைத்து நன்மைகளும் இழக்கப்படும்.

b. **உடல்நல பாலிசியில் உள்ள ஈடுக்கோரலை தெரிவிக்கும் நிபந்தனையில் இவ்வாறு இருக்கலாம்**:

மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து குறிப்பிட்ட நாட்களுக்குள் ஈடுக்கோரல் தாக்கல் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், இந்த நிபந்தனையை புறக்கணிப்பது கடினமான சூழ்நிலைகளில் கருதப்படலாம்.

நிபந்தனையின் மீறல் காப்பீட்டாளரின் விருப்பப்படி பாலிசியை செல்லாததாக்குகிறது.

2. **உத்தரவாதங்கள்**: உத்தரவாதம் என்பது காப்பீட்டாளருக்கும் காப்பீடு பெறுபவருக்கும் இடையே உள்ள ஒரு உடன்படிக்கை, அது முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும். இது பாலிசி ஆவணத்தின் ஒரு பகுதியாகும். எடுத்துக்காட்டாக, காப்பீட்டு பெறுபவர் ஒரு ஸ்பெஷலிஸ்டிடம் காலாண்டுக்கு ஒருமுறை ஆலோசனைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட நோயிற்கான அபாயத்திற்கு காப்பீட்டாளர் காப்பளித்து இருக்கலாம். மேலே உள்ள எடுத்துக்காட்டில், காப்பீடு பெறுபவர் உடன்படிக்கையில் தனது பங்கை நிறைவேற்றத் தவறினால், அந்த குறிப்பிட்ட பிரிவு/உத்தரவாதம் தொடர்பான பொறுப்பு நிராகரிக்கப்படலாம் அல்லது குறைக்கப்படலாம்.

உத்தரவாதங்கள் அபாயத்துடன் சம்பந்தப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

**சுய-பரீட்சை 1**

ஒரு உத்தரவாதம் தொடர்பாக, கீழேயுள்ள எந்த கூற்று சரியானதாக இருக்கும்?

I. உத்தரவாதம் பாலிசியில் தெரிவிக்கப்படாமல் மறைமுகமாக உள்ள ஒரு நிபந்தனை
II. உத்தரவாதம் பாலிசி ஆவணத்தின் பகுதியாக இருக்கிறது
III. ஒரு உத்தரவாதம் என்பது எப்பவுமே காப்பீடு செய்பவருக்கு தனியாக தெரிவிக்கப்படும் மற்றும் பாலிசி ஆவணத்தின் ஒரு பகுதியாக இருக்காது.
IV. ஒரு உத்தரவாதம் மீறப்பட்டால் கூட ஈடுக்கோரல்கள் வழங்கப்படலாம்

---

**உடல்நலக் காப்பீடில் உள்ள மேற்குறிப்புகள்**

பாலிசிகளை தரமான வடிவத்தில் வழங்குவது காப்பீட்டாளர்களின் பழக்கமாகும்; இதில் சில ஆபத்துகளுக்கு காப்பளிக்கப்படும் மற்றும் சில தவிர்க்கப்படும்.

**வரையறை**

வழங்கப்படும்போது, பாலிசியின் சில விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றப்பட வேண்டுமானால், அது மேற்குறிப்பு என்ற ஆவணம் மூலம் திருத்தல்கள்/மாற்றங்களை அமைத்து செய்யப்படுகிறது.

---

இது பாலிசியுடன் இணைக்கப்படும் மற்றும் அதன் பாகமாக இருக்கும். பாலிசி மற்றும் மேற்குறிப்பு இரண்டும் சேர்ந்து ஒப்பந்தத்தின் சான்றாக அமையும். பாலிசி காலத்தில் மாற்றங்கள்/திருத்தங்களை பதிவு செய்வதற்காக மேற்குறிப்புகள் வழங்கப்படலாம்

அடிப்படை தகவல்கள் மாறும்போதெல்லாம், காப்பீடு செய்பவர் காப்பீடு நிறுவனத்திடம் அதை தெரிவிக்க வேண்டும் மற்றும் நிறுவனம் இதை குறித்துக்கொண்டு, அதை காப்பீடு ஒப்பந்தத்தின் பாகமாக மேற்குறிப்பு மூலம் சேர்த்து அதை செயல்படுத்த வேண்டும்.

பாலிசியின் கீழ் தேவைப்படும் மேற்குறிப்புகள் இவற்றுடன் சம்பந்தப்படுபவையாகும்:

a) காப்புத்தொகையில் வேறுபாடுகள் /மாற்றங்கள்

b) காப்பீடு செய்யப்பட குடும்ப உறுப்பினர்களைச் சேர்த்தல் மற்றும் நீக்குதல்

c) கடனைப் பெறுதல் மற்றும் பாலிசியை வங்கியில் அடமானம் வைப்பதன் மூலம் காப்பீடுப் பற்றை மாற்றுதல்.

d) கூடுதல் ஆபத்துகளுக்கு இழப்பீடு அளிப்பதற்கு காப்பீட்டை நீட்டுதல்/ பாலிசி காலத்தை நீட்டுதல்

e) அபாயத்தில் மாற்றம், உதாரணத்திற்கு, வெளிநாட்டு பயண பாலிசி விஷயத்தில் இலக்குகளை மாற்றுதல்.

f) காப்பீடை ரத்து செய்தல்

g) பெயர் அல்லது முகவரி போன்றவற்றில் மாற்றம்

**சுய-பரீட்சை 2**

வழங்கப்படும் சமயத்தில் பாலிசியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றப்பட வேண்டுமானால், அது ________ இல் மாற்றங்களை அமைத்து செய்யப்படுகிறது.

**I.** ஈட்டுறுதி

**II.** மேற்குறிப்பு

**III.** திருத்தம்

**IV.** திருத்தியமைப்பது சாத்தியமில்லை

**சுய-பரீட்சைக்கான பதில்கள்**

**பதில் 1** -சரியான பதில் விருப்பம் II.

**பதில் 2** - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் H-03

# உடல்நலக் காப்பீட்டுத் தயாரிப்புகள்

## அத்தியாய அறிமுகம்

இந்தியாவில் உள்ள காப்பீட்டு நிறுவனங்கள் வழங்கும் பல்வேறு உடல்நலக் காப்பீட்டுத் தயாரிப்புகள் பற்றிய ஒட்டுமொத்தப் பார்வையை இந்த அத்தியாயம் வழங்கும். ஒரே ஒரு தயாரிப்பு - மெடிக்ளைம் முதல் பல்வேறு வகையான நூற்றுக்கணக்கான தயாரிப்புகள் கிடைக்கும் பரந்த வரம்பில் இருந்து வாடிக்கையாளர் தனக்கு பொருத்தமான காப்பை தேர்ந்தெடுக்கலாம். தனிநபர்கள், குடும்பம் மற்றும் குழுவிற்கு காப்பளிக்கும் பல்வேறு உடல்நல தயாரிப்புகளின் அம்சங்களை இந்த அத்தியாயம் விளக்குகிறது.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. உடல்நல காப்பீட்டு தயாரிப்புகளின் வகைப்பாடு

B. உடல்நலக் காப்பீட்டில் தரப்படுத்தல் குறித்த ஐஆர்டிஏ வழிகாட்டுதல்கள்

C. மருத்துவமனை சேர்க்கைக்கான இழப்பீட்டு பாலிசி

D. மேலே சேர்க்கப்படும் டாப்-அப் கவர்கள் அல்லது அதிக கழிவுத் தொகையுள்ள காப்பீட்டுத் திட்டங்கள்

E. மூத்த குடிமக்கள் பாலிசி

F. நிலையான நன்மை கவர்கள் - மருத்துவமனை ரொக்கம், தீவிர நோய்

G. கூட்டு தயாரிப்புகள் (combo products)

H. ஏழைப் பிரிவினருக்கான மைக்ரோ காப்பீடு மற்றும் உடல்நலக் காப்பீடு

I. ராஷ்ட்ரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா

J. பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜ்னா

K. பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா

L. தனிநபர் விபத்து மற்றும் செயலிழப்பு (இயலாமை) காப்பு

M. வெளிநாட்டு பயணக் காப்பீடு

N. குழு உடல்நலக் காப்பு

O. சிறப்பு தயாரிப்புகள்

P. உடல்நல பாலிசிகளில் முக்கிய விதிமுறைகள்

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:

a) காப்பீட்டின் பல்வேறு வர்க்கங்களை விளக்கமுடியும்

b) உடல்நலக் காப்பீட்டில் தரப்படுத்தல் குறித்த ஐஆர்டிஏஐ வழிகாட்டுதல்களை விவரிக்க முடியும்

c) இன்று இந்திய சந்தையில் கிடைக்கும் பல்வேறு வகையான உடல்நல தயாரிப்புகள் பற்றி விவாதிக்க முடியும்

d) தனிநபர் விபத்து காப்பீடு பற்றி விளக்க முடியும்

e) வெளிநாட்டு பயணக் காப்பீட்டைப் பற்றி விவாதிக்க முடியும்

f) உடல்நல பாலிசிகளின் முக்கிய விதிமுறைகள் மற்றும் உட்பிரிவுகள் புரியும்

## A. உடல்நல காப்பீட்டு தயாரிப்புகளின் வகைப்பாடு

### 1. உடல்நலக் காப்பீட்டுத் தயாரிப்புகளின் அறிமுகம்

**வரையறை**

1938 இன் காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 2(6C) இன் கீழ் உடல்நலக் காப்பீட்டு வணிகமானது, "*உள்-நோயாளி அல்லது வெளி-நோயாளி பயணக் காப்பீடு மற்றும் தனிநபர் விபத்து காப்பீடுகளில் நோய் நலன்கள் அல்லது மருத்துவம், அறுவை சிகிச்சை அல்லது மருத்துவமனை செலவு பலன்களை வழங்கும் ஒப்பந்தங்களை செயல்படுத்துதல்*" என வரையறுக்கப்பட்டுள்ளது. ஐஆர்டிஏஐ உடல்நலக் காப்பீட்டு வணிகத்தில் இந்த வரையறையைப் பின்பற்றுகிறது.

---

இந்திய சந்தையில் கிடைக்கும் உடல்நலக் காப்பீட்டுத் தயாரிப்புகள் பெரும்பாலும் **மருத்துவமனை சேர்க்கைக்கான தயாரிப்புகளாக** உள்ளன. இந்த தயாரிப்புகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போது ஒரு தனிநபருக்கு ஏற்படும் செலவுகளுக்கு எதிராக காப்பளிக்கின்றன.

எனவே, உடல்நலக் காப்பீடு இரண்டு காரணங்களுக்காக முக்கியமானது:

- ✓ ஏதேனும் நோய் ஏற்பட்டால் **மருத்துவ வசதி செலவுகளுக்கு நிதி உதவி வழங்குதல்**.
- ✓ **ஒரு தனிநபரின் சேமிப்பைப் பாதுகாத்தல்**, இல்லையெனில் அது நோய் காரணமாக தீர்ந்து விடலாம்.

இன்று, உடல்நலக் காப்பீடு பிரிவு பெரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளது, இதில் பெரும்பாலும் அனைத்து பொது காப்பீட்டு நிறுவனங்கள், தனித்த உடல்நலக் காப்பீட்டாளர்கள் மற்றும் ஆயுள் காப்பீட்டாளர்களால் நூற்றுக்கணக்கான தயாரிப்புகள் வழங்கப்படுகின்றன. இருப்பினும், மெடிக்ளைம் பாலிசியின் அடிப்படை நன்மை அமைப்பு, அதாவது மருத்துவமனை சேர்க்கைக்கான செலவினங்களுக்கு எதிரான காப்பீடு தான் இன்னும் மிகவும் பிரபலமான காப்பீட்டு வடிவமாக உள்ளது.

## 2. உடல்நலக் காப்பீட்டு தயாரிப்புகளின் பரந்த வகைப்பாடு

தயாரிப்பு வடிவமைப்பு எதுவாக இருந்தாலும், உடல்நலக் காப்பீட்டுத் தயாரிப்புகளை இரண்டு பரந்த வகைகளாகப் பிரிக்கலாம்:

### a) இழப்பீட்டுத் தொகை

இந்தத் தயாரிப்புகள் உடல்நலக் காப்பீட்டுச் சந்தையில் பெரிய பகுதியாக உள்ளன மற்றும் மருத்துவமனை சேர்க்கை காரணமாக ஏற்படும் உண்மையான மருத்துவச் செலவுகளை வழங்குகின்றன.

### b) நிலையான நன்மை காப்புகள்

'மருத்துவமனை ரொக்கம்' என்றும் அழைக்கப்படும், இந்த தயாரிப்புகள் மருத்துவமனை சேர்க்கை காலத்தின் போது ஒரு நாளுக்கு இவ்வளவு என்று ஒரு நிலையான தொகையை வழங்குகின்றன. சில தயாரிப்புகள் வெவ்வேறு அறுவை சிகிச்சைகளுக்கு முன்பே தீர்மானிக்கப்பட்ட தொகையையும் வழங்குகின்றன.

## 3. வாடிக்கையாளர் பிரிவின் அடிப்படையில் வகைப்படுத்தல்

இலக்கு வாடிக்கையாளர் பிரிவின் அடிப்படையிலும் தயாரிப்புகளை வகைப்படுத்தலாம். வாடிக்கையாளர் பிரிவுகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட தயாரிப்புகள்:

a) சில்லறை வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் **தனிநபர் காப்பீடு**
b) கார்ப்பரேட் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் **குழு காப்பீடு**, ஊழியர்கள் மற்றும் குழுக்களான காப்பு, குழுவின் உறுப்பினர்களுக்கு காப்பளிக்கிறது
c) மக்கள் தொகையில் மிகவும் ஏழ்மையான பிரிவினருக்காக உள்ள /பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா/ பல்வேறு மாநில உடல்நலக் காப்பீட்டுத் திட்டங்கள் போன்ற மக்களுக்கான அரசாங்கத்தின் **வெகுஜன பாலிசிகள்**.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள நன்மை கட்டமைப்புகள், விலை நிர்ணயம், ஏற்பளிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவை மிகவும் வேறுபட்டவை.

**உடல்நலக் காப்பீட்டிற்கான ஒழுங்குவிதிகள்**: உடல்நல தயாரிப்புகள் தொடர்பான உடல்நல ஒழுங்குவிதிகள், 2016 இல் சில முக்கியமான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன, அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் நீண்ட கால உடல்நல தயாரிப்புகளை வழங்கலாம் ஆனால் அத்தகைய தயாரிப்புகளுக்கான பிரீமியம் குறைந்தது ஒவ்வொரு மூன்று வருட காலத்திற்கும் மாறாமல் இருக்கவேண்டும், அதன் பிறகு பிரீமியம் மதிப்பாய்வு செய்யப்பட்டு தேவையானால் மாற்றப்படலாம்.
2. பொது மற்றும் தனித்தியங்கும் உடல்நலக் காப்பீட்டு நிறுவனங்கள் தனிநபர் உடல்நல தயாரிப்புகளை குறைந்தபட்சம் ஒரு வருடம் மற்றும் அதிகபட்சம் மூன்று ஆண்டுகள் வரை வழங்க முடியும், அந்த காலத்திற்கான பிரீமியம் மாறாமல் இருக்கும்.
3. காப்பீட்டு நிறுவனங்கள் புதுமையான ‘பைலட்-தயாரிப்புகளை வழங்கலாம். பொது-காப்பீட்டாளர்கள் மற்றும் உடல்நல-காப்பீட்டாளர்கள், இந்த தயாரிப்புகளை 1 வருட ஆனால் 5 வருடங்களுக்கு மிகாத பாலிசி காலத்திற்கு வழங்க முடியும், . கடனோட இணைக்கப்பட்ட காப்பீட்டு தயாரிப்புகளைத் தவிர, எந்த ஒரு காப்பீட்டாளரும் ஒரு வருட குழு உடல்நல பாலிசிகளை வழங்க முடியும், ஆனால் கடனோட இணைக்கப்பட்ட காப்பீட்டு தயாரிப்புகளை ஒரு வருடத்திற்கு மேல் கடனுக்கான காலம் வரை ஐந்து ஆண்டுகளுக்கு மிகாமல் நீட்டிக்கப்படலாம்.
4. காப்பீட்டைப் பெறுவதற்கான முக்கிய நோக்கத்துடன் குழு உருவாக்கப்பட்டால், எந்த குழு உடல்நலக் காப்பீட்டு பாலிசியும் வழங்கப்படாது. குழுவின் அளவு காப்பீட்டாளரால் நிர்ணயிக்கப்பட்ட மாதிரி இருக்க வேண்டும், இது அதன் அனைத்து குழு பாலிசிகளுக்கும் பொருந்தும், அதில் குறைந்தபட்சம் 7 பேர் இருந்தாக வேண்டும்.
5. பொதுக் காப்பீட்டாளர்கள் மற்றும் உடல்நலக் காப்பீட்டாளர்கள் கடனோட இணைக்கப்பட்ட குழு தனிநபர் விபத்து பாலிசிகளை

ஐந்து ஆண்டுகளுக்கு மிகாமல் கடனுக்கான காலம் வரை நீட்டிக்கலாம்.

6. பல பாலிசிகளை - ஒவ்வொரு காப்பீட்டாளரும் நிலையான நன்மைகளை வழங்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் இருந்து காப்பீடு பெற்றவர் உடல்நல பாலிசிகளை எடுத்திருந்தால், ஒவ்வொரு காப்பீட்டாளரும், காப்பீடு செய்யப்பட்ட நிகழ்வு நேரிடும் போது, பிற ஒத்த பாலிசிகளில் இருந்து பெறப்பட்ட பணத்தை பொருட்படுத்தாமல், பாலிசிகளின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி ஈடுக்கோரலை செலுத்த வேண்டும். .

   ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காப்பீட்டாளர்களிடமிருந்து சிகிச்சைச் செலவுகளை ஈடுசெய்வதற்காக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாலிசிகளை ஒரே காலத்தில் காப்பீடு செய்தவர் எடுத்திருந்தால், பாலிசிதாரருக்கு அவருடைய பாலிசிகளில் ஏதேனும் ஒன்றில் மட்டுமே அவருடைய ஈடுக்கோரலுக்கான தீர்வை கேட்க உரிமை உண்டு. எந்த காப்பீட்டாளரிடம் ஈடுக்கோரலை செய்கிறாரோ, அந்த நிறுவனம் ஈடுக்கோரலுக்கான பணத்தை வழங்கும் மற்றும் முந்தைய பாலிசி/ பாலிசிகளில் காப்பீட்டுத் தொகை பாக்கியிருந்தாலும், தேர்வு செய்த முந்தைய பாலிசி/ பாலிசிகளின் கீழ் மீதி தொகைக்கான ஈடுக்கோரல் அல்லது ஈடுக்கோரல்கள் அனுமதிக்கப்படாது.

## B. உடல்நலக் காப்பீட்டில் தரப்படுத்தல் குறித்த ஐஆர்டிஏ வழிகாட்டுதல்கள்

நிறைய காப்பீட்டாளர்கள் பலவிதமான தயாரிப்புகளை வழங்குவதால், பல்வேறு விதிமுறைகள் மற்றும் விலக்குகளின் வெவ்வேறு வரையறைகளுடன், சந்தையில் குழப்பம் ஏற்பட்டது. தயாரிப்புகளை ஒப்பிட்டு பரிசீலித்து முடிவெடுப்பது வாடிக்கையாளருக்கு கடினமாகிவிட்டது. மேலும், தீவிர நோய் பாலிசிகளில், எதெல்லாம் தீவிர நோய் என்பது பற்றிய தெளிவான புரிதல் இல்லை.

காப்பீட்டாளர்கள், சேவை வழங்குநர்கள், டிபிஏக்கள் மற்றும் மருத்துவமனைகள் மற்றும் காப்பீடு செய்யும் பொதுமக்களின்

குறைகளை நீக்க, ரெகுலேட்டர் உடல்நலக் காப்பீட்டில் ஒருவித தரநிலையை வழங்க முயற்சித்தார். ஒரு பொதுவான புரிதலின் அடிப்படையில், ஐஆர்டிஏஐ ஆனது 2016 ஆம் ஆண்டில் உடல்நலக் காப்பீட்டில் தரப்படுத்தல் குறித்த வழிகாட்டுதல்களை வெளியிட்டது, இது 2020 ஆம் ஆண்டில் மேலும் திருத்தப்பட்டது. இவை இழப்பீடு அடிப்படையிலான உடல்நலக் காப்பீடு (தனிநபர் விபத்து மற்றும் உள்நாட்டு/வெளிநாட்டுப் பயணம் தவிர) தயாரிப்புகளை (தனிநபர் மற்றும் குழு இரண்டும்) வழங்கும் அனைத்து பொது மற்றும் உடல்நலக் காப்பீட்டாளர்களுக்கும் பொருந்தும்.

வழிகாட்டுதல்கள் இப்போது பின்வரும் தரநிலைப்படுத்தலை வழங்குகின்றன:

1. பொதுவாக பயன்படுத்தப்படும் காப்பீட்டு விதிமுறைகளின் வரையறைகள்
2. தீவிர நோய்களின் வரையறைகள்
3. மருத்துவமனை சேர்க்கைக்கான இழப்பீட்டு பாலிசிகளில் செலவினங்களின் விருப்பப் பொருட்களின் பட்டியல்
4. ஈடுக்கோரல் படிவங்கள் மற்றும் முன்-அங்கீகார படிவங்கள்
5. பில்லிங் வடிவங்கள்
6. மருத்துவமனைகளின் டிஸ்சார்ஜ் அதாவது விடுவிப்பு சுருக்கம்
7. TPAகள், காப்பீட்டாளர்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கு இடையேயான நிலையான ஒப்பந்தங்கள்
8. புதிய பாலிசிகளுக்கு ஐஆர்டிஏஐ ஒப்புதலை பெறுவதற்கான நிலையான கோப்பு மற்றும் பயன்பாட்டு வடிவம்
9. விலக்குகளின் தரப்படுத்தல்
10. அனுமதிக்கப்படாத விலக்குகள்

## C. மருத்துவமனை சேர்க்கைக்கான இழப்பீட்டுத் தயாரிப்பு

மருத்துவமனை சேர்க்கைக்கான இழப்பீட்டுத் தயாரிப்புகள், மருத்துவமனை சேர்க்கை சமயத்தில் ஏற்படும் செலவில் இருந்து தனிநபர்களைப் பாதுகாக்கிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னும் பின்னும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நாட்களுக்கும் அவை காப்பளிக்கும்,

ஆனால் மருத்துவமனை சேர்க்கையுடன் சம்பந்தப்படாத எந்தச் செலவையும் விலக்குகிறது.

மெடிக்ளைம் என்றும் பிரபலமாக அழைக்கப்படும் மருத்துவமனை சேர்க்கைக்கான இழப்பீட்டு பாலிசியானது '**இழப்பீட்டு**' அடிப்படையில் செயல்படுகிறது. **இது மருத்துவமனையில் சேர்க்கப்படும் போது பாலிசிதாரருக்கு ஏற்படும் செலவுகளுக்கு இழப்பீடை வழங்குகிறது. காப்பீடு அளிக்கப்படாத சில செலவுகள் பாலிசி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

**எடுத்துக்காட்டு**

ரகுவுக்கு மனைவியும் 14 வயது மகனும் அடங்கிய சிறிய குடும்பம் உள்ளது. உடல்நலக் காப்பீடு நிறுவனத்திடம் இருந்து, அவரது குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும், தனிநபர் காப்பாக தலா ரூ.1 லட்சம் கிடைக்கிற மாதிரி மெடிக்ளைம் பாலிசியை வாங்கியுள்ளார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மருத்துவமனை சேர்க்கையில் ஏற்படும் மருத்துவச் செலவுகளுக்கு தலா ரூ. 1 லட்சம் வரை கிடைக்கும்.

ரகு மாரடைப்பு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் மற்றும் அறுவை சிகிச்சை தேவைப்பட்டது. அதற்கு வழங்கப்பட்ட மருத்துவ பில் ரூ. 1.25 லட்சமாக இருந்தது. காப்பீட்டு நிறுவனம் திட்ட காப்பின் படி ரூ.1 லட்சத்தை செலுத்தியது, மீதமுள்ள தொகையான 25,000 ரூபாயை ரகு அவரது சொந்த பாக்கெட்டில் இருந்து செலுத்த வேண்டும்.

இழப்பீட்டுத் தொகை அடிப்படையிலான மெடிக்ளைம் பாலிசியின் முக்கிய அம்சங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன, இருப்பினும் **காப்பீட்டின் வரம்புகளில் உள்ள மாறுபாடுகள், கூடுதல் விலக்குகள் அல்லது நன்மைகள் அல்லது சில கூடுதல் காப்புகள் ஒவ்வொரு காப்பீட்டாளரால் சந்தைப்படுத்தப்படும் தயாரிப்புகளுக்கும் பொருந்தும்.**

1. **உள்நோயாளிகளின் மருத்துவமனை சேர்க்கை செலவுகள்**

   நோய்/விபத்து காரணமாக ஏற்படும் மருத்துவமனை சேர்க்கைக்கான செலவை காப்பீடு பெறுபவருக்கு பாலிசி செலுத்துகிறது. பாலிசியில் பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மருத்துவமனை சேர்க்கை காலம்

(பொதுவாக 24 மணிநேரம்) இருக்கும், அதற்கு பிறகு தான் பாலிசி விதிமுறைகள் நடைமுறைக்கு வரும். இருப்பினும், இந்த காலகட்டத்தை அடைந்தவுடன், முழு காலகட்டத்திற்கான செலவுகளும் செலுத்தப்படும்.

சிகிச்சையுடன் தொடர்புடைய பெரும்பாலான செலவுகள் செலுத்தப்படுகின்றன, இருப்பினும் தனிப்பட்ட வசதிக்கான, ஒப்பனை அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட சில செலவுகள் வழங்கப்படுவதில்லை. இதனால், பாலிசியின் கீழ் வராத பின்வரும் செலவினங்களின் விலக்குகள் குறித்து வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்துவது முக்கியம்.

i. மருத்துவமனை / நர்சிங் ஹோம் மூலம் வழங்கப்படும் அறை, உணவு மற்றும் நர்சிங் செலவுகள். இதில் நர்சிங் பராமரிப்பு, ஆர்.எம்.ஓ கட்டணங்கள், ஐ.வி திரவங்கள் / இரத்த மாற்றம் / ஊசி போடுவதற்கான கட்டணம் மற்றும் இதே போன்ற செலவுகள் ஆகியவை அடங்கும்
ii. தீவிர சிகிச்சை பிரிவு (ஐ.சி.யூ) செலவுகள்
iii. அறுவை சிகிச்சை நிபுணர், மயக்க மருந்து நிபுணர், மருத்துவர், ஆலோசகர்கள், நிபுணர்களின் கட்டணம்
iv. மயக்க மருந்து, இரத்தம், ஆக்ஸிஜன், ஆபரேஷன் தியேட்டர் கட்டணங்கள், அறுவை சிகிச்சை உபகரணங்கள்,
v. மருந்துகள் மற்றும் மருந்துப் பொருள்கள்,
vi. டயாலிசிஸ், கீமோதிரப்பி (chemotherapy), கதிரியக்க சிகிச்சை
vii. இதயமுடுக்கி, எலும்பியல் உள்வைப்புகள், இன்ஃப்ரா இதய வால்வு மாற்றுதல், வாஸ்குலர் ஸ்டெண்டுகள் போன்ற அறுவை சிகிச்சையின் போது பொருத்தப்பட்ட புரோஸ்தெடிக் அதாவது செயற்கை சாதனங்களின் விலை
viii. தொடர்புடைய ஆய்வகம் / நோயறிதல் (diagnosis) செலவுகள்
ix. காப்பீடு செய்தவருக்கு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தொடர்பாக நன்கொடையாளரின் மருத்துவமனை சேர்க்கை செலவுகள் (உறுப்பு செலவை சேர்க்காமல்)

## 2. பகல் பராமரிப்பு நடைமுறைகள்

சிறப்பு மருத்துவமனைகளில் செய்ய தேவையில்லாத கண் அறுவை சிகிச்சைகள், கீமோதெரபி, டயாலிசிஸ் போன்ற பலதை பகல்நேர சிகிச்சையின் கீழ் வகைப்படுத்தலாம் மற்றும் பட்டியல் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இவையும் பாலிசியின் கீழ் காப்பளிக்கப்படும்.

## 3. வெளிநோயாளி சிகிச்சைக்கான காப்பு

சில தயாரிப்புகள் மட்டுமே வெளிநோயாளி சிகிச்சைக்கான காப்பளிப்பதால், வெளிநோயாளி சிகிச்சை செலவுகளுக்கான காப்பு இன்னும் இந்தியாவில் மிக குறைவாகவே உள்ளது. இருப்பினும், மருத்துவரின் வருகை, வழக்கமான மருத்துவப் பரிசோதனைகள், பல் மற்றும் மருந்தகச் செலவுகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய உடல்நலப் பராமரிப்பு செலவுகள் மற்றும் வெளிநோயாளி சிகிச்சைக்கு காப்பளிக்கும் சில திட்டங்கள் உள்ளன.

## 4. மருத்துவமனையில் சேர்ப்பதற்கு முந்தைய மற்றும் பிந்தைய செலவுகள்

### i. மருத்துவமனை சேர்க்கைக்கு முந்தைய செலவுகள்

மருத்துவமனை சேர்க்கை அவசரநிலைக்காக அல்லது திட்டமிட்டதாக இருக்கலாம். ஒரு நோயாளி ஒரு திட்டமிட்ட அறுவை சிகிச்சைக்காக சென்றால், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பு அவருக்கு செலவுகள் இருக்கும். இத்தகைய செலவுகள் மருத்துவமனை சேர்க்கைக்கு முந்தைய செலவுகள் எனப்படும்.

| வரையறை |
| --- |

முந்தைய செலவுகள் என்றால் -காப்பீடு செய்யப்பட்ட நபரை மருத்துவமனையில் சேர்ப்பதற்கு முன் வரையறுக்கப்பட்ட நாட்களில் ஏற்பட்ட மருத்துவச் செலவுகள், காப்பீடு செய்யப்பட்ட நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பே செய்யப்பட்ட செலவுகள் மற்றும்

a) காப்பீடு பெற்றவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அதே நிலைக்காக செய்யப்பட்ட மருத்துவ செலவுகள், மற்றும்

b) அத்தகைய உள்-நோயாளி மருத்துவமனை சேர்க்கைக்கான ஈடுக்கோரலை காப்பீட்டு நிறுவனம் அனுமதித்திருக்க வேண்டும்.

மருத்துவமனை சேர்க்கைக்கு முந்தைய செலவுகள் பரிசோதனைகள், மருந்துகள், மருத்துவர்களின் கட்டணம் போன்றவையாக இருக்கலாம். இத்தகைய செலவுகள் மருத்துவமனை சேர்க்கையுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும் மற்றும் அவை உடல்நல பாலிசிகளின் கீழ் காப்பளிக்கப்பட்டிருக்க வேண்டும்..

ii. **மருத்துவமனைக்கு பிந்தைய செலவுகள்**

மருத்துவமனையில் சிகிச்சைக்கு பிறகு அங்கிருந்து காப்பீடு பெற்றவர் விடுவிக்கப்பட்டு வந்தவுடன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மீட்பு மற்றும் பின்தொடர்தல் தொடர்பான செலவுகள் இருக்கும்.

காப்பீடு செய்யப்பட்ட நபர் மருத்துவமனையில் இருந்து வந்த உடனேயே செய்யப்படும் மருத்துவ செலவுகள் பின்வருமாறு இருந்தால் கிடைக்கும்:

இந்த இரண்டு வகையான செலவுகளும் ஏற்கப்படும்-

a) காப்பீடு செய்யப்பட்ட நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அதே நிலைக்காக மருத்துவ செலவுகள் செய்யப்பட்டால், மற்றும்

b) அத்தகைய உள்-நோயாளி மருத்துவமனை சேர்க்கைக்கான ஈடுகோரலை காப்பீட்டு நிறுவனம் அனுமதித்திருக்க வேண்டும்.

மருத்துவமனை சேர்க்கைக்கு பிந்தைய செலவுகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் வரையறுக்கப்பட்ட நாட்கள் வரையிலான காலப்பகுதியில் ஏற்படும் மருத்துவ செலவுகளாக இருக்கும், மேலும் அவை ஈடுக்கோரலின் ஒரு பகுதியாக கருதப்படும்.

மருத்துவமனை சேர்க்கைக்கு பிந்தைய செலவுகள் மருந்துகள், மருந்துப் பொருட்கள், மருத்துவர்களின் பரிசீலனை போன்ற வடிவங்களில் மருத்துவமனை சேர்க்கை செலவுகளாக இருக்கலாம். இத்தகைய செலவுகள் மருத்துவமனையில் எடுக்கப்படும்

சிகிச்சையுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும் மற்றும் அவை உடல்நல பாலிசிகளின் கீழ் காப்பளிக்கப்பட்டிருக்க வேண்டும்..

மருத்துவமனை சேர்க்கைக்கு முந்தைய மற்றும் பிந்தைய செலவுகளுக்கான காப்பீட்டு காலம் ஒவ்வொரு காப்பீட்டாளருக்கும் இடையே மாறுபடலாம். மற்றும் பாலிசியில் வரையறுக்கப்பட்டிருக்கும், மருத்துவமனை சேர்க்கைக்கு **முந்தைய முப்பது நாட்களுக்கு மற்றும் பிந்தைய அறுபது நாட்களுக்கான செலவுகள் மிகவும் பொதுவான காப்பாக உள்ளது.**

பாலிசியின் கீழ் காப்பு வழங்கப்படும் ஒட்டுமொத்த காப்பீட்டுத் தொகையின் ஒரு பகுதியாக மருத்துவமனை சேர்க்கைக்கு முந்தைய மற்றும் பிந்தைய செலவுகள் உள்ளன.

iii. **வீட்டிலேயே சிகிச்சையெடுத்தல் (DOMICILIARY HOSPITALIZATION )**

iv. நோய்க்கு மருத்துவமனை சேர்க்கை மூலம் சிகிச்சையளிக்க தேவை என்றாலும், நோயாளியின் நிலைமை அவரை மருத்துவமனைக்கு மாற்ற முடியாத நிலையாக இருப்பது அல்லது மருத்துவமனைகளில் தங்குமிடம் இல்லாத நிலையில் வீட்டிலேயே சிகிச்சை பெற்றுக்கொள்ளும் நோயாளிகளுக்கும் ஒரு நன்மை கிடைக்கிறது.

இந்த ஏற்பாடை தவறாக பயன்படுத்துவதை தடுக்க, இந்த காப்பில் வழக்கமாக **மூன்று முதல் ஐந்து நாட்களை மிகாத** உட்பிரிவு உள்ளது, அதாவது முதல் மூன்று நாட்களில் இருந்து ஐந்து நாட்களுக்கான சிகிச்சை செலவுகளை காப்பீடு பெற்றவரே ஏற்க வேண்டும். ஆஸ்துமா, மூச்சுக்குழாய் அழற்சி, நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இருமல், சளி மற்றும் காய்ச்சல் போன்ற சில நாள்பட்ட அல்லது பொதுவான நோய்களுக்காக வீட்டிலேயே சிகிச்சை எடுப்பதை இந்த காப்பு விலக்குகிறது.

**எடுத்துக்காட்டு**

மீரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால் ஏற்படும் செலவுகளை ஈடுகட்ட உடல்நலக் காப்பீடு பாலிசி எடுத்திருந்தார். பாலிசியில் ஆரம்ப காத்திருப்பு காலம் 30 நாட்கள் என்ற ஒரு விதி இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக, பாலிசி எடுத்த 20 நாட்களுக்குப் பிறகு, மீரா மலேரியாவால் பாதிக்கப்பட்டு 5 நாட்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் அதிகமாக மருத்துவமனை கட்டணங்களை செலுத்த வேண்டியிருந்தது.

காப்பீட்டு நிறுவனத்திடம் பணத்தை திருப்பிக் கேட்டபோது, பாலிசி எடுத்த 30 நாட்களுக்குள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்ததால், அவர்கள் ஈடுக்கோரலை வழங்க மறுத்தனர்.

**a) கிடைக்கக்கூடிய காப்பு விருப்பங்கள்**

i. **தனிநபர் காப்பு:** காப்பீடு செய்பவர், வாழ்க்கைத் துணை, சார்ந்திருக்கும் குழந்தைகள், சார்ந்திருக்கும் பெற்றோர், சார்ந்திருக்கும் துணைவரின் பெற்றோர், சார்ந்திருக்கும் உடன்பிறப்புகள் போன்ற குடும்ப உறுப்பினர்களுடன் சேர்த்து தனக்கு காப்பீடை செய்து கொள்ள முடியும். சில காப்பீட்டாளர்களிடம் காப்பு வழங்கும் சார்ந்திருப்பவர்களின் எண்ணிக்கையை பொறுத்தவரை எந்த கட்டுப்பாடும் இல்லை. சார்ந்திருக்கும் அத்தனை நபர்களையும் ஒரே பாலிசியின் கீழ் காப்பீடு செய்து, அதில் ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாக காப்பீடுத் தொகையை தேர்ந்தேடுக்க முடியும். அத்தகைய காப்புகளில், பாலிசியின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு நபரும் பாலிசி நடப்பில் இருக்கும் போது காப்பீட்டுத் தொகையின் அதிகபட்ச தொகை வரை கோரலாம். காப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் அவரது வயது மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை மற்றும் வேறு எந்த மதிப்பீட்டு காரணிக்கும் ஏற்ப பிரீமியம் வசூலிக்கப்படும்.

ii. **குடும்ப பெயர்ச்சி (Family Floater):** குடும்ப பெயர்ச்சி பாலிசி எனப்படும் மாறுபாட்டில், வாழ்க்கைத் துணை, சார்ந்திருக்கும் குழந்தைகள் மற்றும் சார்ந்திருக்கும் பெற்றோர்களைக் கொண்ட குடும்பத்திற்கு ஒரே தொகை காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகிறது, இது குடும்பத்து உறுப்பினர்களுக்குள் பெயர்ச்சியடைகிறது.

**எடுத்துக்காட்டு**

நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு 5 லட்சத்திற்கு குடும்ப பெயர்ச்சி பாலிசி எடுக்கப்படுகிறது, இதற்கு அர்த்தம் பாலிசி காலத்தில், ஒன்றுக்கு

மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் அல்லது குடும்பத்தின் ஒரு உறுப்பினரின் பல ஈடுக்கோரல்களை அது செலுத்தும். இவை அனைத்து செலவுகளும் சேர்ந்து மொத்த காப்பான ரூ. 5 லட்சத்தை தாண்டக்கூடாது. காப்பீட்டுக்காக முன்மொழியப்பட்ட குடும்பத்தின் மூத்த உறுப்பினரின் வயதின் அடிப்படையில் பிரீமியம் பொதுவாக வசூலிக்கப்படும்.

இந்த இரண்டு பாலிசிகளின் கீழும் காப்புகளும் விலக்குகளும் ஒரே மாதிரியாக இருக்கும். ஒட்டுமொத்த காப்பீட்டுத் தொகைக்கான காப்பை முழு குடும்பமும் பெறுவதால் குடும்ப மிதவை பாலிசிகள் சந்தையில் பிரபலமாக உள்ளன, இதில் நியாயமான பிரீமியத்தில் உயர் காப்பீட்டுத் தொகை தேர்வு செய்யப்படலாம்.

## முன்னரே இருக்கும் நோய்கள்

எதிர்பாராதவிதமாக நடக்கும் விபத்துகள்/நோய்கள் போன்றவற்றிற்கு காப்பளிக்கும் வகையில் காப்பீடு வடிவமைக்கப்பட்டுள்ளது. முன்னரே உள்ள மருத்துவ நிலைமைகளுக்கான சிகிச்சை செலவுகளை ஈடுசெய்வது காப்பீட்டின் ஒரு பகுதியாக இல்லை, ஏனெனில் சிலருக்கு இருக்கும் நோய்களுக்காக மற்ற ஆரோக்கியமான மக்களை பணம் செலுத்த வைப்பது நியாயமற்றதாக இருக்கும். இதேபோன்ற அபாயங்களுக்கு காப்பளிப்பதற்காக உருவாக்கப்பட்ட அபாய சேர்மங்களின் (risk pool) கொள்கைக்கு இது எதிரானது. எனவே, உடல்நல பாலிசியை வழங்குவதற்கு முன், காப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொருவருக்கும் இருக்கும் நோய்கள்/காயங்கள் பற்றிய விவரங்களைச் சேகரிப்பது மிகவும் முக்கியம். காப்பீட்டிற்கான முன்மொழிவை ஏற்றுக்கொள்வது, முறையான பிரீமியங்களை வசூலிப்பது மற்றும்/ அல்லது ஈடுக்கோரல்களை செய்ய அதிக வாய்ப்புள்ளவர்களுக்கு கூடுதல் நிபந்தனைகளை வழங்குவது குறித்து முடிவெடுப்பதற்கு காப்பீட்டாளருக்கு இது உதவும்.

## முன்னரே இருக்கும் நோய் என்றால் என்ன?

பாலிசியைத் தொடங்கிய தேதிக்கு முன்புள்ள 48 மாதங்களுக்குள் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு ஏற்படும் நோய்கள், முன்னரே இருக்கும் நோய்களாகக் கருதப்படுகின்றன. அதே தர்க்கத்தின் அடிப்படையில், 48

மாதங்களுக்கு ஒரு நபர் தொடர்ந்து காப்பீடு செய்யப்பட்ட பிறகு, முன்னரே இருக்கும் நோய்களை விலக்க காப்பீட்டாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**புதுப்பித்தல்:** உடல்நலப் பராமரிப்பு பாலிசிகள் ஒரு வருட ஒப்பந்த காலத்திற்காக வழங்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஒரு புதிய பாலிசி வழங்க தேவை என்றாலும், அனைத்து பாலிசிகளுக்கும் வாழ்நாள் முழுவதும் புதுப்பிக்கும் தன்மை ஐஆர்டிஏஐ-ஆல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு அம்சங்கள்**

தயாரிப்பில் புதிய அம்சங்களை வழங்கி மற்றும் விலையை பராமரிக்க, காப்பீட்டு நிறுவனங்கள் தயாரிப்புகளில் புதுமையான மாற்றங்களை கொண்டு வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, 2000 ஆம் ஆண்டுக்கு முன் மிக பிரபலமான பாலிசியாக இருந்த மெடிக்ளைம் பாலிசி, பல மாற்றங்களுக்கு உள்ளாகி, புதிய சிறப்பு அம்சங்கள் காப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. அடிப்படை இழப்பீட்டுத் தொகையில் சில அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த அம்சங்கள் காப்பீட்டாளரிடமிருந்து காப்பீட்டாளருக்கு மற்றும் தயாரிப்புக்கு தயாரிப்பு மாறுபடலாம் மற்றும் அனைத்து தயாரிப்புகளுக்கும் ஒரே மாதிரியாக கிடைக்காமல் போகலாம்.

**i. துணை வரம்புகள் மற்றும் நோய் குறிப்பிட்ட வரம்புகள்**

சில தயாரிப்புகளில் நோய் குறிப்பிட்ட வரம்புகள் உள்ளன, எ.கா. கண்புரை. ஒரு சில தயாரிப்புகளுக்கு காப்பீட்டுத் தொகையுடன் இணைக்கப்பட்ட அறை வாடகைக்கான துணை வரம்புகள் உள்ளன எ.கா. ஒரு நாளைக்கான அறை வாடகை காப்பீட்டுத் தொகையில் 1% மற்றும் ஐ.சி.யூ கட்டணம் காப்பீட்டுத் தொகையில் 2% என வரம்பிடப்படுவது. ஐ.சி.யூ கட்டணங்கள், ஆபரேஷன் தியெட்டர் கட்டணங்கள் மற்றும் அறுவை சிகிச்சையாளர் கட்டணங்கள் போன்ற பிற தலைப்புகளின் கீழ் செலவுகள் தேர்வு செய்யப்பட்ட அறையுடன் இணைக்கப்பட்டுள்ளதால், அறை வாடகையின் வரம்பிடல் மற்ற தலைகளின் கீழ் செலவுகளை குறைத்து, ஒட்டுமொத்த மருத்துவமனை சேர்க்கை செலவுகளை கட்டுப்படுத்த உதவுகிறது.

### ii. இணைந்து செலுத்துதல் (பிரபலமாக கோ-பே என அழைக்கப்படுகிறது)

இணைந்து செலுத்துதல் என்பது ஒரு உடல்நல காப்பீட்டு பாலிசியின் கீழ் உள்ள செலவு-பகிர்வு தேவையென்று ஐஆர்டிஏஐ வரையறுத்துள்ளது, இதில் அனுமதிக்கப்படும் ஈடுக்கோரல் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை பாலிசிதாரர்/காப்பீடு பெறுபவர் ஏற்பதற்கான ஏற்பாடு உள்ளது. இணைந்து செலுத்துதல் காப்பீட்டுத் தொகையை குறைக்காது.

இணைந்து-செலுத்துதல் என்பது ஒரு உடல்நல பாலிசியின் கீழ் ஒவ்வொரு ஈடுக்கோரலிலும் ஒரு பகுதியை காப்பீடு செய்தவரையே தாங்க வைக்கும் கருத்தாகும். தயாரிப்பைப் பொறுத்து இவை கட்டாயமாகவோ அல்லது தன்னார்வமாகவோ இருக்கலாம். தேவையற்ற மருத்துவமனை சேர்க்கையை தவிர்க்கும் பொருட்டு, காப்பீடு பெறுபவர்கள் இடையே ஒரு குறிப்பிட்ட ஒழுக்கத்தை இணை-செலுத்துதல் கொண்டு வருகிறது. காப்பீடு செய்தவர் தனது உடல்நலப் பராமரிப்பு விருப்பங்களைத் தேர்ந்தெடுப்பதில் எச்சரிக்கையாக இருப்பதையும், ஆடம்பரமானதை தவிர்ப்பதையும் இது உறுதி செய்கிறது.

காப்பீடு செய்யப்பட்ட நிகழ்வு நிகழும்போது, பல உடல்நல பாலிசிகளில் காப்பீடு செய்யப்பட்ட இழப்பில் ஒரு பகுதியைப் காப்பீடு செய்தவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும். எ.கா. காப்பீடு செய்யப்பட்ட இழப்பு 20000 ரூபாய் என்றால் மற்றும் இணை-செலுத்தல் 10% என பாலிசியில் இருந்தால், காப்பீடு செய்தவர் 2000 ரூபாய் செலுத்துகிறார்.

### iii. கழிவுத் தொகை / அதிகரிப்பு

அத்தியாயம் 5-இல் விளக்கப்பட்ட மாதிரி அதிகரிப்பு என்றும் அழைக்கப்படும் கழிவுத் தொகை என்பது ஒரு உடல்நல காப்பீட்டு பாலிசியின் கீழ் உள்ள செலவு-பகிர்வு தேவையாகும். உடல்நல பாலிசிகளின் கீழ், இழப்பீட்டு பாலிசிகள் வழக்கில், ஒரு குறிப்பிட்ட அளவு தொகைக்கு காப்பீட்டாளர் பொறுப்பேற்க மாட்டார் மற்றும் மருத்துவமனை ரொக்க பாலிசிகளை பொறுத்தவரை எந்தவொரு நன்மைகளையும் காப்பீட்டாளர் வழங்க தொடங்குவதற்கு முன்பு,

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நாட்கள்/மணிநேரங்களுக்கு அவர் பொறுப்பேற்க மாட்டார் என வழங்கப்பட்டுள்ளது.

உடல்நல பாலிசிகளில், காப்பீட்டாளரால் ஈடுக்கோரல் செலுத்தப்படுவதற்கு முன், காப்பீடு பெற்றவர் செலுத்த வேண்டிய நிலையான தொகை இது, எ.கா. பாலிசியில் கழிவுத் தொகை ரூ. 10,000 என்றால், காப்பீடு செய்தவர் முதல் கோரப்பட்ட ஒவ்வொரு காப்பீட்டு இழப்பிற்கும் முதலில் 10,000 கட்டுகிறார். விளக்கமாக கூறவேண்டுமென்றால், ஈடுக்கோரல் தொகை ரூ. 80,000 என்றால், காப்பீடு செய்தவர் முதல் ரூ. 10,000-ஐ கட்டுகிறார் மற்றும் காப்பீட்டாளர் ரூ. 70,000-ஐ வழங்குகிறார். கழிவுத் தொகை காப்பீட்டுத் தொகையைக் குறைக்காது.

காப்பீட்டாளரால் ஏதேனும் பலன்கள் செலுத்தப்படுவதற்கு முன்பாகப் மருத்துவமனை ரொக்க பாலிசி வழக்கில், குறிப்பிட்ட நாட்கள்/ மணிநேரம் கூட கழிவாக இருக்கலாம்.

கழிவுத் தொகை என்பது வருடத்திற்கு பொருந்துமா, ஒரு வாழ்க்கைக்கு அல்லது ஒரு நிகழ்விற்குப் பொருந்துமா மற்றும் எந்த குறிப்பிட்ட கழிவுத் தொகை பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை ஒரு முகவர் ஆய்வு செய்து காப்பீடு பெற்றவரிடம் தெரிவிக்க வேண்டும்.

### iv. காத்திருப்புக் காலங்கள்

பாலிசி தொடங்கப்பட்டதில் இருந்து 30 நாட்கள் காத்திருப்புக் காலம் பொதுவாக எந்தவொரு ஈடுக்கோரல் செய்வதற்கும் பெரும்பாலான பாலிசிகளில் பொருந்தும். இருப்பினும், விபத்து காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் வழக்கில் இது பொருந்தாது.

### v. குறிப்பிட்ட நோய்களுக்கான காத்திருப்புக் காலங்கள்

சிகிச்சையை தாமதப்படுத்தி திட்டமிடக்கூடிய நோய்களுக்கு இது பொருந்தும். தயாரிப்பு காத்திருப்புக் காலத்தைப் பொறுத்து, ஒன்று/இரண்டு/ நான்கு வருட காத்திருப்புக் காலம் காப்பீட்டு நிறுவனங்களால் விதிக்கப்படலாம், மற்றும் இந்தக் காலக்கெடு முடிந்த பின்னரே இந்தக் குறைபாடுகளுக்கான ஈடுக்கோரல்கள் ஏற்று வழங்கப்படுகின்றன. கண்புரை, புற்றுநோயல்லாத விந்துச்சுரப்பி வீக்கம், மிகைமை உதிரப்போக்கு அல்லது நார்ப்புற்றுக்காக கருப்பை நீக்கம்,

ஹெர்னியா, விரைவீக்கம், பிறவி உள்நோய், ஆசனவாயில் ஃபிஸ்துலா, மூலநோய், சைனசிடிஸ் மற்றும் தொடர்புடைய கோளாறுகள் போன்ற சில நோய்கள்.

### vi. பகல் பராமரிப்பு நடைமுறைக்கான காப்பு

முன்னரே விவாதித்த மாதிரி மருத்துவ அறிவியலின் முன்னேற்றம் காரணமாக பகல் பராமரிப்பு வகையின் கீழ் ஏராளமான நடைமுறைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

### vii. பாலிசிக்கு முந்தைய பரிசோதனைகளுக்கான செலவு

மருத்துவ பரிசோதனைக்கான செலவு முன்னர் வருங்கால வாடிக்கையாளர்களால் ஏற்கப்பட்டது. இப்போது முன்மொழிவு ஏற்பளிப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டால் காப்பீட்டாளர் செலவை திருப்பிச் செலுத்துகிறார், அந்த திருப்பிச் செலுத்துதல் 50% முதல் 100% வரை மாறுபடும். இப்போது காப்பீட்டு நிறுவனம் குறைந்தது 50% உடல்நல சோதனை செலவுகளை ஏற்பது ஐ.ஆர்.டி.ஏ.ஐ மூலம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது,

### viii. கூடுதல் காப்புகள்

ஆட்-ஆன் எனப்படும் பல்வேறு புதிய கூடுதல் காப்புகள் சில காப்பீட்டாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சில:

- ✓ **மகப்பேறு காப்பு:** சில்லறை பாலிசிகளின் கீழ் மகப்பேறு காப்பு முன்பு வழங்கப்படவில்லை, ஆனால் இப்போது மாறுபட்ட காத்திருப்புக் காலங்களுடன், இது பெரும்பாலான காப்பீட்டாளர்களால் வழங்கப்படுகிறது,
- ✓ **தீவிர நோய் காப்பு:** உயிருக்கு ஆபத்தான மற்றும் விலையுயர்ந்த சிகிச்சை தேவைப்படும் சில வியாதிகளுக்கு உயர்விலையில் உள்ள வகை தயாரிப்புகளின் கீழ் ஒரு விருப்பமாக இவை கிடைக்கிறது.
- ✓ **காப்பீட்டு தொகையின் மறு மீட்டெடுப்பு:** ஈடுக்கோரலை செலுத்திய பிறகு, காப்பீட்டுத் தொகையை (ஈடுக்கோரலை செலுத்திய பிறகு குறையும்) கூடுதல் பிரீமியத்தை செலுத்துவதன் மூலம் அசல் வரம்பிற்கு மீட்டெடுக்க முடியும்.

- ✓ **ஆயுஷ்- ஆயுர்வேதா - யோகா - யுனானி - சித்தா - ஹோமியோபதிக்கான காப்பு**: ஆயுஷ் சிகிச்சைக்கான செலவுகளை சில பாலிசிகள் மருத்துவமனையில் சேர்க்கும் செலவுகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் வரை வழங்குகின்றன

### ix. மதிப்பு கூட்டப்பட்ட நன்மைகள்

சில இழப்பீட்டுத் தயாரிப்புகளில் கீழே பட்டியலிடப்பட்டுள்ள மதிப்பு கூட்டப்பட்ட காப்புகள் அடங்கும். பாலிசியின் அட்டவணையில் உள்ள ஒவ்வொரு காப்பீட்டிற்கும் எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையின் வரம்பு வரை நன்மைகள் செலுத்தப்படும், அது ஒட்டுமொத்த காப்பீட்டுத் தொகையை விட அதிகமாக இருக்காது.

- ✓ **வெளிநோயாளி காப்பு:** இந்தியாவில் உள்ள உடல்நலக் காப்பீட்டுத் தயாரிப்புகள் பெரும்பாலும் உள்நோயாளிகளின் மருத்துவமனை சேர்க்கை செலவுகளை மட்டுமே உள்ளடக்கும். சில நிறுவனங்கள் இப்போது சில உயர்நிலைத் திட்டங்களின் கீழ் வெளிநோயாளிச் செலவுகளுக்கு வரையறுக்கப்பட்ட காப்பீட்டை வழங்குகின்றன.
- ✓ **மருத்துவமனை ரொக்கம்**: இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு நாளுக்கும் நிலையான மொத்த தொகையை வழங்குகிறது. பொதுவாக கழிவு காலமாக 2/3 நாட்கள் கழிக்கப்படும் பாலிசிகளைத் தவிர்த்து 7 நாட்களுக்கு இது அனுமதிக்கப்படும். எனவே, மருத்துவமனை சேர்க்கை காலம் கழிவு காலத்திற்கு மேலே இருந்தால் மட்டுமே நன்மையைத் தூண்டும். இது மருத்துவமனை சேர்க்கை ஈடுக்கோரலுக்கு கூடுதலாக ஆனால் பாலிசியின் ஒட்டுமொத்த காப்பீட்டுத் தொகைக்குள் அல்லது தனி துணை வரம்புடன் இருக்கலாம்.
- ✓ **மீட்புப் நன்மை**: நோய் மற்றும்/அல்லது விபத்து காரணமாக மருத்துவமனையில் தங்கியிருக்கும் மொத்த காலம் 10 நாட்களுக்குக் குறையாமல் இருந்தால் மொத்த தொகை நன்மை வழங்கப்படும்.
- ✓ **நன்கொடையாளரின் செலவுகள்**: பாலிசியில் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி

பெரிய உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையின் போது நன்கொடையாளருக்கான செலவினங்களைத் திருப்பிச் செலுத்துவதற்கும் பாலிசியில் ஏற்பாடு இருக்கிறது.

- ✓ **ஆம்புலன்ஸ் கட்டணத்தை திருப்பிச் செலுத்துதல்**: காப்பீடு செய்யப்பட்ட/காப்பீடு செய்யப்பட்ட நபரால் ஆம்புலன்ஸுக்காக செய்யப்படும் செலவுகள் பாலிசியின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட வரம்பு வரை திருப்பிச் செலுத்தப்படும்.
- ✓ **உடன் வருபவர்களுக்கான செலவுகள்**: காப்பீடு செய்யப்பட்ட நோயாளியை மருத்துவமனையில் சேர்க்கும் காலத்தில் உணவு, போக்குவரத்து ஆகியவற்றில் உடன் வருபவர்கள் செய்யும் செலவுகளை ஈடுசெய்வதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. பாலிசி விதிமுறைகளின்படி மொத்த தொகை செலுத்துதல் அல்லது செலவை திருப்பிச் செலுத்துதல் ஆகியவை பாலிசியின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்பு வரை செலுத்தப்படும்.
- ✓ **குடும்ப வரையறை**: குடும்ப வரையறை சில உடல்நலப் பொருட்களில் மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. முன்னதாக, முதன்மையாக காப்பீடுப் பெற்றவர், மனைவி, சார்ந்திருக்கும் குழந்தைகளுக்கு காப்பீடு வழங்கப்பட்டது. இப்போது அதே பாலிசியின் கீழ் பெற்றோர்கள் மற்றும் துணைவரின் பெற்றோருக்கும் காப்பு வழங்கக்கூடிய பாலிசிகள் உள்ளன.

**x. மருத்துவ ஆலோசனையை கோராமல் இருப்பது அல்லது பின்பற்றத் தவறுதல் அல்லது சிகிச்சையைப் பின்பற்றத் தவறுதல்**

ஆரம்பத்தில் முன்னரே நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடல்நல காப்பீடு மறுக்கப்பட்டது. அத்தகைய வழக்குகளுக்கு இப்போது அத்தகைய நோய்களை விலக்குவதன் மூலம் காப்பு வழங்கப்படுகிறது.

**தரமான உடல்நல தயாரிப்பு - ஆரோக்ய சஞ்சீவனி**: கோவிட்-19 தொற்றுநோயின் பின்னணியில், ஐஆர்டிஏஐ அனைத்து காப்பீடு நிறுவனங்களையும் ஆரோக்ய சஞ்சீவனி எனப்படும் தரமான உடல்நல தயாரிப்பை வழங்குமாறு கேட்டுக் கொண்டது. இருப்பினும் ஒவ்வொரு

நிறுவனத்தின் விலைக் கொள்கையின்படி பிரீமியம் மாறுபடலாம். இது சந்தையில் உடல்நல காப்பீட்டின் சிறப்பான ஊடுருவலை உறுதி செய்யும். அனைத்து காப்பீட்டாளர்களும் ஆரோக்கிய சஞ்சீவனி என்ற இந்த தயாரிப்பை வழங்க தேவை. [இந்த நடவடிக்கை காரணமாக ஏற்பட்ட சூழலில் சந்தையில் பல உடல்நலக் காப்பீடுகள் வந்துவிட்டன மற்றும் வாடிக்கையாளர்களால் அவற்றை ஒப்பிட முடியவில்லை, இதனால் குழப்பம் ஏற்பட்டது.]

ஆரோக்கிய சஞ்சீவனி காப்பீட்டு பாலிசியின் கீழ் பின்வரும் இரண்டு வகையான திட்டங்கள் கிடைக்கின்றன:

- **தனிநபர் திட்டம்**: ஒரு பாலிசிதாரர் ஆரோக்கிய சஞ்சீவனி பாலிசியின் பயனாளியாக இருப்பார்.
- **குடும்ப** மிதவை **(Family Floater) திட்டம்:** பாலிசிதாரரின் பல குடும்ப உறுப்பினர்கள் ஆரோக்கிய சஞ்சீவனி திட்டத்தின் பயனாளிகளாக இருக்கலாம்.

இந்த தயாரிப்பு அறை வாடகை மற்றும் ஐசியு கட்டணங்களுக்கான வசதியுடன் வருகிறது, ஆனால் இது நவீன கால சிகிச்சை மற்றும் ஸ்டெம் செல் சிகிச்சைக்கும் 50% உச்ச வரம்புடன் காப்பை வழங்குகிறது.

## D. மேலே சேர்க்கப்படும் டாப்-அப் காப்புகள் அல்லது அதிக கழிவுத் தொகையுள்ள காப்பீட்டுத் திட்டங்கள்

டாப்-அப் காப்பு என்பது உயர் கழிவுத்தொகை பாலிசி என்றும் அழைக்கப்படுகிறது. காப்பீட்டாளர்களின் டாப்-அப் பாலிசிகள், குறிப்பிட்ட தொகைக்கு மேலே அதிகமாகும் காப்பீடு செய்யப்பட்ட உயர் தொகைகளுக்கு காப்பீடு வழங்குகிறது (வரம்பு எனப்படும்). இந்த பாலிசி அடிப்படை உடல்நலக் காப்பீட்டை விட குறைந்த காப்பீட்டுத் தொகையுடன் செயல்படுகிறது மற்றும் ஒப்பீட்டளவில் நியாயமான பிரீமியத்தில் வருகிறது. எடுத்துக்காட்டாக, தங்கள் முதலாளிகளால் காப்பீடு செய்யப்பட்ட தனிநபர்கள் கூடுதல் பாதுகாப்பிற்காக டாப்-அப் காப்பீட்டைத் தேர்வுசெய்யலாம் (முதல் பாலிசியின் காப்பீட்டுத் தொகையை வரம்பாக வைத்திருந்து).

டாப்-அப் பாலிசியின் கீழ் ஈடுக்கோரலைப் பெறுவதற்குத் தகுதிபெற, மருத்துவச் செலவுகள் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கழிக்கக்கூடிய (அல்லது வரம்பு) அளவை விட அதிகமாக இருக்க வேண்டும் மற்றும் உயர் கழிவுத் தொகை திட்டத்தின் கீழ் திருப்பிச் செலுத்தப்படுவது செலவழித்த தொகையாக இருக்கும் அதாவது கழிக்கக்கூடியதை விட அதிகமாக இருக்கவேண்டும்.

## எடுத்துக்காட்டு

ஒரு தனிநபர் அவரது முதலாளி மூலம் ரூ. 3 லட்சத்திற்காக காப்பீடு செய்யப்பட்டிருக்கிறார். அவர் மூன்று லட்சம் ரூபாய்க்கு மேல் 10 லட்சம் என ஒரு டாப்-அப் பாலிசியை தேர்வு செய்யலாம். . ஒரு மருத்துவமனை சேர்க்கை சிகிச்சைக்கான செலவு ரூ. 5 லட்சம் என்றால், அடிப்படை பாலிசி மூன்று லட்சத்திற்கு மட்டுமே இருந்தாலும். டாப்-அப் பாலிசி மூலம், மீதித் தொகையான இரண்டு லட்சங்கள் செலுத்தப்படும்.

டாப்-அப் பாலிசிகள் மலிவானவை மற்றும் ஒரு 10 லட்சத்திற்கான தனி பாலிசியைவிட மூன்று லட்சத்திற்கு மேலே 10 லட்சத்திற்காக எடுக்கும் டாப்-அப் பாலிசி மிக அதிகமாக இருக்கும்.

இந்த காப்புகள் தனிப்பட்ட அடிப்படையிலும் குடும்ப அடிப்படையிலும் கிடைக்கின்றன. டாப்-அப் திட்டத்திற்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் ஒவ்வொரு நிகழ்விலும் ஆகும் செலவு கழிவுத் தொகையை கடக்க வேண்டும். இருப்பினும் பாலிசி காலத்தில் தொடர்ச்சியான மருத்துவமனை சேர்க்கைகளுக்கு பிறகு கழிவுத் தொகையை கடக்க அனுமதிக்கும். மற்றும் அவை இந்திய சந்தையில் மொத்த அடிப்படையிலான உயர் கழிவுத்தொகை திட்டங்கள் அல்லது சூப்பர் டாப்-அப் காப்பு என அழைக்கப்படுகின்றன. ஒரு சூப்பர் டாப்-அப் திட்டமானது, கழிவு தொகைக்கு மேல் உள்ள அனைத்து மருத்துவமனை சேர்க்கை பில்களுக்கும் (சூப்பர் டாப்-அப் திட்ட வரம்பு வரை) மொத்தமாக காப்பளிக்கிறது, அதாவது, ஒரு வருடத்தில் உள்ள மொத்த ஈடுக்கோரல்களில் கழிவுத்தொகை பொருந்தும். எனவே, கழிவுத்தொகை செலுத்தப்பட்டதும், அடுத்தடுத்த ஈடுக்கோரல்களுக்கு திட்டம் செயலில் இருக்கும்.

## E. மூத்த குடிமக்கள் பாலிசி

குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு (எ.கா. 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்) காப்பு மறுக்கப்படும் முதியவர்களுக்கு காப்பீடு வழங்கும் வகையில் இந்தத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. காப்பு மற்றும் விலக்குகளின் அமைப்பு மருத்துவமனை சேர்க்கை பாலிசி போன்றது.

காப்பு மற்றும் காத்திருப்புக் காலத்தை அமைப்பதில் வயதானவர்களின் நோய்களை பற்றி சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. நுழைவு வயது பெரும்பாலும் 60 ஆண்டுகளுக்குப் பிறகு மற்றும் வாழ்நாள் முழுவதும் புதுப்பிக்கத்தக்கது. காப்பீட்டுத் தொகை ரூ. 50,000 முதல் ரூ. 5,00,000 வரை இருக்கும். சில நோய்களுக்குப் பொருந்தும் காத்திருப்புக் காலத்தில் மாறுபாடுகள் உள்ளன.

எடுத்துக்காட்டு: கண்புரைக்கு ஒரு காப்பீட்டாளரிடம் 1 வருடம் காத்திருக்க தேவைப்படலாம் மற்றும் வேறு சில காப்பீட்டாளர்களிடம் 2 வருட காத்திருப்புக் காலம் இருக்கலாம்.

எடுத்துக்காட்டு: சினூசிடிஸ் அதாவது காற்றுப்புரையழற்சி சில காப்பீட்டாளர்களின் காத்திருப்புக் கால விதியின் கீழ் வராது, ஆனால் இன்னும் சிலர் அதை காத்திருப்புக் கால விதியின்கீழ் சேர்க்கின்றனர்

சில பாலிசிகள் முன்னரே இருக்கும் நோய்களுக்கு காத்திருப்புக் காலங்கள் அல்லது வரம்பைக் கொண்டுள்ளன. மருத்துவமனை சேர்க்கைக்கு முந்தைய செலவுகள் மருத்துவமனை ஈடுக்கோரல்களின் சதவீதமாகவோ அல்லது துணை வரம்பாகவோ செலுத்தப்படும். சில பாலிசிகளில், 30/60 நாட்கள் அல்லது 60/90 நாட்கள் என்ற குறிப்பிட்ட காலத்திற்குள் வரும் செலவுகள் போன்ற வழக்கமான இழப்பீட்டுத் திட்டங்களைப் பின்பற்றுகிறார்கள்.

மூத்த குடிமக்களின் உடல்நலக் காப்பீடு தொடர்பான ஈடுக்கோரல்கள் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்ய அனைத்து உடல்நலக் காப்பீட்டாளர்கள் மற்றும் டிபிஏக்களும் ஒரு தனி சேனலை நிறுவ வேண்டும் என்று ஐஆர்டிஏஐ கட்டளையிட்டுள்ளது.

## F. தீவிர நோய்

இந்த காப்பில், பெயரிடப்பட்ட சிகிச்சைக்காக அவர் செலவழித்த தொகையைப் பொருட்படுத்தாமல் காப்பீடு பெற்றவர் ஈடுக்கோரல் தொகையாக ஒரு நிலையான தொகையை பெறுகிறார். இந்த தயாரிப்பில், காது மூக்கு தொண்டை (ENT), கண் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகளிர் நோயியல் போன்ற ஒவ்வொரு அமைப்பின் கீழும் பொதுவாக செய்யப்படும் சிகிச்சைகள் பட்டியலிடப்பட்டுள்ளன, மேலும் இவை ஒவ்வொன்றிற்கும் அதிகபட்சமாக அளிக்கப்படும் தொகை பாலிசியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பாலிசிகள் எளிதானவை, ஏனெனில் மருத்துவமனை சேர்க்கைக்கான சான்றுகள் மற்றும் பாலிசியின் கீழ் நோய்களுக்கு காப்பளித்திருப்பது மட்டுமே ஈடுக்கோரலைச் செயல்படுத்த போதுமானதாக இருக்கும். சில தயாரிப்புகள் தினசரி ரொக்க பலனை நிலையான நன்மை காப்புடன் வழங்குகின்றன.

பாலிசியில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலில் இடம் பெறாத அறுவை சிகிச்சைகள்/சிகிச்சைகளுக்கு ஒரு நிலையான தொகையை செலுத்துவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாலிசி காலத்தில் பல்வேறு சிகிச்சைகளுக்கான பல ஈடுக்கோரல்கள் சாத்தியமாகும். இருப்பினும், பாலிசியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை மூலம் ஈடுக்கோரல்கள் இறுதியாக வரம்பிடப்படுகின்றன.

நிலையான பலன் காப்பீட்டுத் திட்டங்களில் சில:

- ✓ மருத்துவமனை தினசரி ரொக்க காப்பீட்டுத் திட்டங்கள்
- ✓ தீவிர நோய் காப்பீட்டுத் திட்டங்கள்

### 1. **மருத்துவமனை தினசரி ரொக்க** பாலிசி

#### a) ஒரு நாளைக்கான தொகையின் வரம்பு

மருத்துவமனையில் இருக்கின்ற வரை காப்பீடு செய்த நபருக்கு மருத்துவமனை தினசரி ரொக்க காப்பு ஒரு நிலையான தொகையை ஒவ்வொரு நாளுக்காகவும் வழங்குகிறது. ஒரு நாளைக்கான ரொக்க காப்பு மாறுபடலாம் (எடுத்துக்காட்டாக) ஒரு நாளைக்கு ரூ. 1,500

முதல் ரூ. 5,000 அல்லது அதற்கு அதிகமாக இருக்கலாம். ஒரு நோய்க்கான தினசரி ரொக்க செலுத்துதலுக்கும், பாலிசியின் காலத்திற்கும் ஒரு உயர் வரம்பு வழங்கப்படுகிறது, இது பொதுவாக வருடாந்திர பாலிசியாகும்.

### b) பணம் வழங்கப்படும் நாட்களின் எண்ணிக்கை

இந்த பாலிசியின் சில மாறுபட்ட வகைகளில், அனுமதிக்கப்பட்ட தினசரி ரொக்கம் வழங்கப்படும் நாட்கள் சிகிச்சை எடுக்கப்படும் நோயுடன் இணைக்கப்பட்டுள்ளன. சிகிச்சைகள் மற்றும் ஒவ்வொன்றிலும் தங்கியிருக்கும் காலம் பற்றிய விரிவான பட்டியல் விதிக்கப்பட்டுள்ளது, இது ஒவ்வொரு வகை நடைமுறை /நோய்களுக்கும் அனுமதிக்கப்பட்ட தினசரி ரொக்க பலனைக் கட்டுப்படுத்துகிறது.

### c) தனித்த காப்பு அல்லது கூடுதல் காப்பு

சில காப்பீட்டாளர்களிடம் மருத்துவமனை தினசரி ரொக்க பாலிசியே தனித்த பாலிசியாக கிடைக்கிறது, மற்ற இடங்களில், இது வழக்கமான இழப்பீட்டு பாலிசியுடன் கூடுதல் காப்பாக கிடைக்கிறது.

சிகிச்சையின் உண்மையான செலவுடன் தொடர்புடையதாக இல்லாமல், கிடைப்பது ஒரு நிலையான தொகையாக இருப்பதால் காப்பீடு பெறுபவருக்கு தற்செயலான செலவுகளை ஈடுகட்ட இந்த பாலிசிகள் உதவுகின்றன, இழப்பீட்டு அடிப்படையிலான உடல்நல காப்பீட்டு திட்டத்தின் கீழ் பெறப்பட்ட எந்தவொரு காப்புக்கும் கூடுதலாக, பாலிசியின் கீழ் பணம் செலுத்துவதை இது அனுமதிக்கிறது.

### d) துணை காப்பு

இந்த பாலிசிகள் ஒரு வழக்கமான மருத்துவமனை செலவுகள் பாலிசிக்கு துணையாக செயல்படும், காரணம் இதன் விலை குறைவு, மேலும் தற்செயலான செலவினங்களுக்கான இழப்பீடையும், இழப்பீட்டு பாலிசியின் கீழ் செலுத்தப்படாத, விலக்குகள், இணை செலுத்துதல் போன்றவற்றையும் வழங்குகிறது

e) **காப்பின் பிற நன்மைகள்**

காப்பீட்டாளரின் பார்வையில், இந்தத் திட்டம் பல நன்மைகளைக் கொண்டுள்ளது, ஏனெனில் இதை வாடிக்கையாளருக்கு எளிதாக விளக்க முடிவதால், எளிதாக விற்க முடியும். உண்மையான செலவு எதுவாக இருந்தாலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு நிலையான தொகை வழங்கப்படுவதால் இது மருத்துவ செலவின் அதிகரிப்பிற்கு எதிராக பாதுகாக்கிறது. மேலும், அத்தகைய காப்பீட்டு பாலிசிகளை மற்றும் ஈடுக்கோரல் தீர்வுகளை ஏற்றுக்கொள்வதும் உண்மையிலேயே எளிதாக்கப் பட்டுள்ளது.

## 2. தீவிர நோய் பாலிசி

மருத்துவ அறிவியலில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக, முந்தைய காலங்களில் மரணத்திற்கு வழிவகுத்த புற்றுநோய், பக்கவாதம் மற்றும் மாரடைப்பு போன்ற சில தீவிர நோய்களில் இருந்தும் மக்கள் பிழைக்கின்றனர். இருப்பினும், பெரிய நோயிற்காக சிகிச்சை பெறுவதற்கும், அதற்கு பிந்தைய வாழ்க்கைக்கான மற்றும் சிகிச்சைக்கான செலவும் நிறைய அதிகரிக்கின்றன. இதனால், தீவிர நோயின் தொடக்கமே ஒரு நபரின் நிதி பாதுகாப்பை அச்சுறுத்துகிறது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் அனைத்து மருத்துவச் செலவுகளையும் ஈடுகட்ட அடிப்படை உடல்நலக் காப்பீட்டு பாலிசி போதுமானதாக இருக்காது.

தீவிர நோய் பாலிசி என்பது ஒரு நன்மை பாலிசியாகும், இதில் பெயரிடப்பட்ட சில தீவிர நோய்கள் கண்டறியப்பட்டால் ஒரு ஒட்டுமொத்த தொகையை செலுத்துவதற்கான ஏற்பாடு உள்ளது. பெரிய செலவினங்களை கவனித்துக்கொள்ள காப்பீட்டுத் தொகை அதிகமாக உள்ளது.

இந்தியாவில், தீவிர நோய்களுக்கான (CI) நன்மைகள் பொதுவாக ஆயுள் காப்பீட்டாளர்களால் பாலிசிகளுடன் ரைடர்களாக விற்கப்படுகின்றன, மேலும் அவர்கள் இரண்டு வகையான காப்பை வழங்குகின்றனர் - துரிதப்படுத்தப்பட்ட தீவிர நோய் நன்மை திட்டம் மற்றும் தனித்த தீவிர நோய் நன்மை திட்டம். குழப்பத்தைத் தவிர்ப்பதற்கு, ஐஆர்டிஏஐ

உடல்நல காப்பீட்டு தரப்படுத்தல் வழிகாட்டுதலின் கீழ் மிக பொதுவான 22 தீவிர நோய்களின் வரையறைகள் தரப்படுத்தப்பட்டுள்ளன.

காப்பிடப்பட்டிருக்கும் தீவிர நோய்கள் காப்பீட்டாளர்கள் இடையே மற்றும் தயாரிப்புகள் இடையே வேறுபடுகின்றன. இந்த பாலிசிகளின் கீழ், பொதுவாக ஒரு தீவிர நோய் கண்டறியப்பட்டதுமே காப்பீட்டுத் தொகையில் 100% வழங்கப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில், பாலிசி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் நோயின் தீவிரத்தை பொறுத்து, வழங்கப்படும் இழப்பீடானது காப்பீடு செய்யப்பட்ட தொகையில் 25% முதல் 100% வரை மாறுபடும்.

பாலிசியின் கீழ் எந்தவொரு நன்மையும் வழங்கப்பட அனைத்து தீவிர நோய் பாலிசிகளிலும் காணப்படும் ஒரு நிலையான நிபந்தனை, பாலிசி தொடங்கிய பிறகுள்ள 90 நாட்கள் காத்திருப்புக் காலம் மற்றும் நோய் கண்டறியப்பட்ட நாளுக்கு பிறகு 30 நாட்களுக்கு உயிர்வாழும் உட்பிரிவும் உள்ளது. தீவிர நோய் பாலிசியை எடுக்க விரும்புபவர்களுக்கு, குறிப்பாக 45 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்கு கடுமையான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

காப்பீடு செய்யப்பட்ட எந்தவொரு நபருக்கும் பாலிசியின் கீழுள்ள இழப்பீடு வழங்கப்பட்டு விட்டாலே பாலிசி நிறுத்தப்படும். இந்த பாலிசியானது குழுக்களுக்கும் குறிப்பாக தங்கள் ஊழியர்களுக்கு பாலிசி எடுக்கும் கார்ப்பரேட்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகிறது.

**நோய் குறிப்பிட்ட தயாரிப்புகள்- கொரோனா கவச்**

ஜூன் 2020 இல், நாட்டில் பலர் கொரோனா வைரஸ் தொற்றால் (கோவிட்-19) பாதிக்கப்பட்ட போது, நோயறிதலில் கோவிட்-19 நேர்மறை முடிவு வந்தால், மொத்த தொகையை வழங்கும் பல நன்மை அடிப்படையிலான தயாரிப்புகள் சந்தையில் வந்தன. பின்னர் சில நிறுவனங்கள் இழப்பீடு அடிப்படையிலான தயாரிப்புகளையும் அறிமுகப்படுத்தின. இருப்பினும், பிபிஇ கருவிகள், ஆக்சிமீட்டர் போன்ற பல நுகர்பொருட்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட செலவுகள் இந்த தயாரிப்புகளில் சேர்க்கப்படவில்லை.

ஐஆர்டிஏஐ கொரோனா கவச் மற்றும் கொரோனா ரக்ஷக் (ஆயுள் காப்பீட்டுப் பிரிவின் கீழ் தனித்தனியாக விவாதிக்கப்பட்டுள்ளது) எனும்

இரண்டு தரமான உடல்நலக் காப்பீட்டு பாலிசிகளைக் கொண்டு வந்தது. இழப்பீடு அடிப்படையிலான தரமான கோவிட்-19 தயாரிப்பாக கொரோனா கவச் வழங்குவது பொது மற்றும் உடல்நல காப்பீட்டாளர்களுக்கு கட்டாயமாக்கப் பட்டது, ஆனால் கொரோனா ரக்ஷக் எனும் நன்மை அடிப்படையிலான தயாரிப்பை அனைத்து காப்பீட்டாளர்களும் தங்கள் விருப்பப்படி வழங்கலாம். இரண்டு தயாரிப்புகளுக்கும் 15 நாட்கள் காத்திருப்புக் காலம் உள்ளது.

கொரோனா ரக்ஷக் என்பது கோவிட்-19 ஆல் பாதிக்கப்பட்டுள்ள காப்பீடு செய்யப்பட்ட நபர்களுக்கு மொத்த நன்மையை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு நிலையான நன்மை அடிப்படையிலான உடல்நலக் காப்பீடு ஆகும், மற்றும் இதை பெற குறைந்தபட்சம் 72 மணிநேரம் தொடர்ந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தத் திட்டம் 3.5 மாதங்கள், 6.5 மாதங்கள் மற்றும் 9.5 மாதங்கள் போன்ற வெவ்வேறு பாலிசி காலங்களுடன், 18 வயது முதல் 65 வயது வரை உள்ளவர்களுக்கு தனிநபர் அடிப்படையில் காப்பை வழங்குகிறது. மேலும் இது ஒரு முறை நன்மை வழங்கும் பாலிசி ஆகும் மற்றும், பலனை செலுத்தியவுடன் முடிவடையும். கொரோனா ரக்ஷக் 50,000 இன் மடங்குகளில் ரூ.. 50,000 முதல் ரூ. 2.5 லட்சம் வரையிலான காப்பீட்டுத் தொகையை வழங்குகிறது. பாலிசியானது (i) முழுமையான காப்பீட்டுத் தொகை நன்மை, (ii) மலிவான விலையில் பிரீமியம், (iii) மொத்தத் தொகை ஈடுக்கோரல், (iv) குறுகிய 15 நாட்கள் காத்திருப்புக் காலம் மற்றும் (v) வரி நன்மைகளை வழங்குகிறது.

கொரோனா கவச் ஜூன் 2020 இல் ஐஆர்டிஏஐ வழங்கிய வழிகாட்டுதல்களின் கீழ் பின்வரும் காப்பை வழங்குகிறது:

1. அரசு மூலம் அங்கீகரிக்கப்பட்ட நோயறிதல் மையத்தில் நோயறிதலில் கோவிட்-19 சோதனையில் நேர்மறை முடிவு வந்தால், கோவிட்-19 சிகிச்சைக்காக ஏற்படும் மருத்துவமனைச் செலவுகள்: (குறைந்தபட்ச 24 மணிநேரம் மருத்துவமனை சேர்க்கைக்கான செலவுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்). அதில் பின்வரும் செலவுகளும் வழங்கப்படும்

   a. மருத்துவமனை / நர்சிங் ஹோம் வழங்கும் அறை, போர்டிங், நர்சிங் செலவுகள்.

b. அறுவை சிகிச்சை நிபுணர், மயக்க மருந்து நிபுணர், மருத்துவர், ஆலோசகர்கள், நிரபுணரின் கட்டணம்

c. மயக்க மருந்து, இரத்தம், ஆக்ஸிஜன், ஆபரேஷன் தியேட்டர் கட்டணம், அறுவை சிகிச்சை உபகரணங்கள், வென்டிலேட்டர் கட்டணம், மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்கள், நோயறிதலுக்கான செலவுகள், நோயறிதலுக்கான இமேஜிங் முறைகள், பிபிஇ கிட், கையுறைகள், முகமூடி மற்றும் இது போன்ற பிற செலவுகள்

d. தீவிர சிகிச்சை பிரிவு (ICU) / தீவிர இருதய சிகிச்சை பிரிவு (ICCU) செலவுகள்.

e. அதிகபட்ச வரம்பு ரூ.2000/-க்கு உட்பட்டு. ஒரு மருத்துவமனை சேர்க்கைக்கான சாலை ஆம்புலன்ஸ் செலவுகள்,

2. ஒரு சம்பவத்திற்கு அதிகபட்சம் 14 நாட்கள் வரை வீட்டில் சிகிச்சை பெறுவதற்கான வீட்டு பராமரிப்பு சிகிச்சை செலவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு (இது முழுமையானது இல்லை) வழங்கப்படும்:

   a. மருத்துவர், காப்பீடு செய்யப்பட்ட நபரை வீட்டிலேயே சிகிச்சையை பெறுமாறு அறிவுறுத்துகிறார்.

   b. சிகிச்சையின் பதிவுகள் உட்பட ஒவ்வொரு நாளும் ஒரு மருத்துவரால் உடல்நல நிலை தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

3. சிகிச்சை அளிக்கும் மருத்துவரால் பரிந்துரைக்கப்படும் மற்றும் கோவிட் சிகிச்சை தொடர்பான பிற செலவுகள்-

   a. நோயறிதல் சோதனைகள் வீட்டில் அல்லது கண்டறியும் மையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன

   b. எழுத்துப்பூர்வமாக பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள்

   c. மருத்துவரின் ஆலோசனை கட்டணம்

   d. மருத்துவ பணியாளர்கள் தொடர்பான நர்சிங் கட்டணங்கள்

e. சிரைவழி மூலம் வழங்கப்படும் (parenteral) மருந்துகளின் நிர்வாகத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ நடைமுறைகள்

f. பல்ஸ் ஆக்சிமீட்டர், ஆக்சிஜன் சிலிண்டர் மற்றும் நெபுலைசர் ஆகியவற்றின் செலவுகள்.

கூடுதல் காப்பீடு - மருத்துவமனை தினசரி ரொக்கம்: இந்த பாலிசியின் கீழ் கோவிட் சிகிச்சைக்காக மருத்துவமனை சேர்க்கைக்கான ஈடுக்கோரல் அனுமதிக்கப்பட்டதிற்கு பிறகு, ஒவ்வொரு 24 மணிநேரமும் தொடர்ந்து மருத்துவமனையில் இருப்பதற்கு காப்பீட்டாளர் ஒரு நாளைக்கு 0.5% காப்பீட்டுத் தொகையை செலுத்துவார்.

**வெக்டார் மூலம் பரவும் நோய்களுக்கான தரமான உடல்நல பாலிசி:**

3 பிப்ரவரி 2021 தேதியிட்ட ஐஆர்டிஏஐ வழிகாட்டுதல்களின்படி, வெக்டார் மூலம் பரவும் நோய்களுக்கான தரமான தயாரிப்புகள் பின்வரும் காப்பை வழங்குகின்றன:

1. **மருத்துவமனை சேர்க்கை நன்மை:** குறைந்தபட்சம் 72 மணிநேரம் தொடர்ந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய பின்வரும் நோய்த் தொற்று நோய்(கள்) ஏதேனும் நேர்மறையாகக் கண்டறியப்பட்டால், காப்பீடுத் தொகையின் 100% க்கு சமமான மொத்தப் பலன் செலுத்தப்படும்.

    a) டெங்கு காய்ச்சல்

    b) மலேரியா

    c) ஃபைலேரியா (நிணநீர் ஃபைலேரியாஸ்)

    d) காலா-அசார்

    e) சிக்குன்குனியா

    f) ஜப்பானிய மூளைக்காய்ச்சல்

    g) ஜிகா வைரஸ்

2. **நோய் கண்டறிதல் காப்பு:** பாலிசி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, காப்பீட்டுத் தொகையில் 2%, காப்பீட்டுக் காலத்தின் போது முதல் நோயறிதலின் போது, காப்பளிக்கப்பட்ட

ஒவ்வொரு வெக்டார் மூலம் பரவும் நோய்க்கான நேர்மறை நோயறிதலுக்கு (ஆய்வக பரிசோதனை மூலம் மற்றும் மருத்துவரால் உறுதிப்படுத்தப்பட்ட) செலுத்தப்படும். பாலிசிதாரருக்கு பாலிசி வருடத்தில் ஒருமுறை மட்டுமே ஒவ்வொரு நோய்க்கும் "நோயறிதல் காப்பு" கட்டணத்தின் கீழ் பணத்தை பெறும் உரிமை உண்டு.

## G. கூட்டு தயாரிப்புகள்

**உடல்நலமும் ஆயுளும் இணைந்த (Health plus Life Combi) தயாரிப்புகள்** ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் ஆயுள் காப்பீடும், பொது மற்றும் / அல்லது தனித்தியங்கும் உடல்நலக் காப்பீட்டு நிறுவனத்தினால் வழங்கப்படும் உடல்நலக் காப்பீடும் இணைந்த ஒரு காப்பீட்டுத் திட்டத்தை வழங்குகின்றன.

தயாரிப்பு தனிநபர் காப்பீட்டு பாலிசியாக மற்றும் குழு காப்பீடு அடிப்படையில் வழங்கப்படலாம். இருப்பினும், உடல்நலக் காப்பீட்டு மிதவை பாலிசிகளைப் பொறுத்தவரை, காப்பீட்டுப் பற்று மற்றும் அந்தந்த காப்பீட்டாளர்களின் பொருந்தக்கூடிய பிற ஏற்பளிப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு, உடல்நலக் காப்பீட்டு பாலிசியை முன்மொழிபவராகவும் இருக்கின்ற வருமானம் ஈட்டும் குடும்ப உறுப்பினர்களில் ஒருவரின் வாழ்க்கைக்கு தூய கால ஆயுள் காப்பீட்டின் காப்பும் அனுமதிக்கப்படுகிறது.

### பேக்கேஜ் பாலிசிகள்

பேக்கேஜ் அல்லது குடை காப்பீட்டு பாலிசிகள் ஒரே ஆவணத்தின்கீழ் ஒரு ஒருங்கிணைந்த காப்பினை வழங்குகின்றன.

தீவிர நோய்க் காப்பீட்டுப் நன்மைகளை இழப்பீட்டு பாலிசிகளுடன் இணைப்பதும் மற்றும் ஆயுள் காப்பீட்டு பாலிசிகள் மற்றும் மருத்துவமனை தினசரி ரொக்க பலன்களை இழப்பீட்டு பாலிசிகளுடன் இணைப்பதும், உடல்நலக் காப்பீட்டில் உள்ள பேக்கேஜ் பாலிசியின் எடுத்துக்காட்டுகளில் அடங்கும்.

**பயணக் காப்பீடு** :

உடல்நலக் காப்பீடு மட்டுமின்றி விபத்து மரணம்/ இயலாமை நன்மைகளையும் உள்ளடக்கிய ஒரு பேக்கேஜ் பாலிசியாகவும், நோய்/விபத்து காரணமாக மருத்துவச் செலவுகள் மற்றும் செக்-இன் செய்யப்பட்ட சாமான்களின் இழப்பு அல்லது வருவதில் தாமதம், பாஸ்போர்ட் மற்றும் ஆவணங்களின் இழப்பு, சொத்து/தனிப்பட்ட சேதங்களுக்கான மூன்றாம் தரப்பின் கடன்பாடு (Third party personal liability and property damage), பயணங்களின் ரத்து மற்றும் பயண பாலிசிகளின் கீழ் பாரம்பரியமாக வழங்கப்படும் கடத்தல் காப்பும் சேர்ந்து பயணக் காப்பீட்டு பாலிசியில் வழங்கப்படுகிறது. (பயணக் காப்பீடு பற்றிய விவரங்கள் பின்னர் வழங்கப்படும்.)

## H. ஏழைப் பிரிவினருக்கான மைக்ரோ காப்பீடு மற்றும் உடல்நலக் காப்பீடு

மைக்ரோ-காப்பீடு தயாரிப்புகள் குறிப்பாக கிராமப்புற மற்றும் முறைசாரா துறைகளில் இருந்து குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு காப்பளிப்பதை நோக்கமாகக் கொண்டவை. இது மலிவு விலை பிரீமியம் மற்றும் நன்மை பேக்கேஜுடன் உள்ள குறைந்த மதிப்புள்ள தயாரிப்பு ஆகும். ஐஆர்டிஏஐ மைக்ரோ காப்பீடு ஒழுங்குவிதிகள், 2005 மூலம் மைக்ரோ காப்பீடு நிர்வகிக்கப்படுகிறது.

இத்தகைய காப்புகள் பெரும்பாலும் குழு அடிப்படையில் பல்வேறு சமூக அமைப்புகள் அல்லது அரசு சாரா நிறுவனங்கள் (NGOக்கள்) மூலம் தங்கள் உறுப்பினர்களுக்காக எடுக்கப்படுகின்றன.

சமூகத்தின் ஏழ்மையான பிரிவினருக்கு காப்பளிக்க பொதுத்துறை நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட இரண்டு பாலிசிகள் ஜன் ஆரோக்கிய பீமா கொள்கை மற்றும் உலகளாவிய உடல்நல திட்டம். தனியார் துறை காப்பீடு நிறுவனங்களும் இந்த இலக்குப் பிரிவைப் பூர்த்தி செய்ய பல புதுமையான மைக்ரோ காப்பீடு உடல்நல தயாரிப்புகளுடன் வந்துள்ளன - பீமா கவச் யோஜனா, கிராமீனா ஜீவன் ரக்ஷா திட்டம், பாக்ய லக்ஷ்மி - இந்த முழுப் பட்டியலையும் ஐஆர்டிஏஐ இணையதளத்தில் காணலாம்.

## I. ராஷ்ட்ரிய ஸ்வாஸ்திய பீமா யோஜனா

அரசாங்கம் பல்வேறு உடல்நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி உள்ளது, அவற்றில் சில குறிப்பிட்ட மாநிலங்களுக்கு பொருந்தும். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு (BPL) உடல்நலக் காப்பீடை வழங்குவதற்காக காப்பீட்டு நிறுவனங்களுடன் இணைந்து ராஷ்ட்ரிய ஸ்வாஸ்த்ய பீமா யோஜனா (RSBY) ஐ இது செயல்படுத்தியது. எவ்வாறாயினும், ஆர்எஸ்பிஒய் (RSBY) 30,000 ரூபாய்க்கான காப்பீட்டுத் தொகையை மட்டும் வழங்கியதால், இது பெரிய அறுவை சிகிச்சைகள்/ மருத்துவமனை செலவுகளை ஈடுகட்ட போதுமானதாக கருதப்படவில்லை.

## J. பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கிய திட்டம் (Jan Arogya Scheme)

ஆர்எஸ்பிஒய் (RSBY) இன் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய, தேசிய உடல்நலக் கொள்கை 2017 பரிந்துரைத்தபடி, இந்திய அரசாங்கம் 2017 ஆம் ஆண்டில் 'ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை' அறிமுகப்படுத்தியது, இது அனைவருக்கும் உடல்நல காப்பை (UHC) வழங்கும் நோக்கத்தை அடைவதற்கான முதன்மைத் திட்டமாகும். பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (PMJAY) என்றும் அழைக்கப்படும் ஆயுஷ்மான் பாரத் ரூ. 5,00,000 காப்பீட்டுத் தொகையுடன் வந்தது.

இது அப்போதைய ராஷ்ட்ரிய ஸ்வாஸ்த்ய பீமா யோஜனா (RSBY) க்கு பதிலாக வந்தது. PM-JAY-க்கு அரசாங்கம் முழுமையாக நிதியளிக்கிறது மற்றும் செயல்படுத்துவதற்கான செலவு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

## K. பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா

சமீபத்தில் அறிவிக்கப்பட்ட PMSBY இன் தனிநபர் விபத்து மரணம் மற்றும் இயலாமைக்கான காப்பீட்டின் அம்சங்கள் பின்வருமாறு:

**காப்பின் நோக்கம்**: பங்குபெறும் வங்கிகளில் 18 முதல் 70 வயது வரை உள்ள அனைத்து சேமிப்பு வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்களும் ஒரு சேமிப்பு வங்கிக் கணக்கு மூலம் மட்டுமே சேரத் தகுதியுடையவர்கள், மேலும் அவர் ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் பதிவு செய்தால், அவருக்கு கூடுதல் நன்மைகள் எதுவும் கிடைக்காது மற்றும்

செலுத்தப்பட்ட கூடுதல் பிரீமியம் மீண்டும் கிடைக்காது. வங்கிக் கணக்கிற்கான முதன்மை KYC) ஆக ஆதார் இருக்கும்.

**பதிவு செய்யும் முறை/காலம்**: ஜூன் 1 முதல் மே 31 வரையிலான ஒரு வருட காலப்பகுதிக்கு காப்பீடு இருக்கும். இதற்காக பரிந்துரைக்கப்பட்ட படிவங்களில் நியமித்த சேமிப்பு வங்கிக் கணக்கில் இருந்து ஆட்டோ-டெபிட் மூலம் சேர/பணம் செலுத்தும் விருப்பம் ஒவ்வொரு ஆண்டும் மே 31 ஆம் தேதிக்குள் கொடுக்கப்பட வேண்டும்.,

முழு வருடாந்திர பிரீமியத்தை செலுத்திய பிறகு சேருவது குறிப்பிட்ட விதிமுறைகளில் சாத்தியமாகும். எந்த நேரத்திலும் திட்டத்திலிருந்து வெளியேறும் நபர்கள், மேற்கண்ட முறையின் மூலம் எதிர்காலத்தில் திட்டத்தில் மீண்டும் சேரலாம்.

காப்பீட்டின் கீழுள்ள நன்மைகள் பின்வருமாறு:

| நன்மைகளின் அட்டவணை | காப்பீட்டுத் தொகை |
|---|---|
| இறப்பு | ரூ. 2 லட்சம் |
| இரண்டு கண்களின் மொத்த மற்றும் மீள முடியாத இழப்பு அல்லது இரண்டு கைகள் அல்லது கால்களின் பயன்பாடு இழப்பு அல்லது ஒரு கண்ணின் பார்வை இழப்பு மற்றும் ஒரு கை அல்லது ஒரு காலின் பயன்பாடு இழப்பு | ரூ. 2 லட்சம் |
| முழுமையான மற்றும் மீளமுடியாத ஒரு கண்ணின் பார்வை இழப்பு அல்லது ஒரு கை அல்லது காலின் பயன்பாடு இழப்பு | ரூ. 1 லட்சம் |

எஸ்எம்எஸ், மின்னஞ்சல் அல்லது தனிப்பட்ட வருகை மூலம் சேருதல் மற்றும் நியமனம் செய்யும் வசதி கிடைக்கும்.

**பிரீமியம்**: ஒரு உறுப்பினருக்கு ஆண்டுக்கு ரூ.12/-. பிரீமியம் கணக்கு வைத்திருப்பவரின் சேமிப்பு வங்கிக் கணக்கில் இருந்து 'ஆட்டோ டெபிட்' வசதி மூலம் கழிக்கப்படும்.

**காப்பீட்டின் நிறுத்தம்**: உறுப்பினருக்கான விபத்துக் காப்பீடு நிறுத்தப்படும்

1. உறுப்பினர் 70 வயதை அடையும் போது (பிறந்த நாளுக்கு அருகில் உள்ள வயது) அல்லது
2. வங்கியில் கணக்கை மூடுதல் அல்லது காப்பீட்டை நடைமுறையில் வைத்திருக்க கணக்கில் பணம் இல்லாதது அல்லது

குறிப்பிட்ட தேதியில் போதிய நிலுவைத்தொகை இல்லாததால் அல்லது நிர்வாகச் சிக்கல்கள் போன்ற ஏதேனும் தொழில்நுட்பக் காரணங்களால் காப்பீடு நிறுத்தப்பட்டால், விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, முழு வருடாந்திர பிரீமியத்தை கட்டி அதை மீட்டெடுக்கலாம்.

## L. தனிநபர் விபத்து மற்றும் இயலாமை காப்பு

**தனிநபர் விபத்து** (PA) **காப்பு** எதிர்பாராத விபத்து மூலம் ஏற்பட்ட மரணம் மற்றும் இயலாமைக்கான இழப்பீடை வழங்குகிறது.

ஒரு PA பாலிசியில்,

a) இறப்பு நன்மையாக காப்பீடுத் தொகையில் 100% வழங்கப்படும்,

b) இயலாமை வழக்கில், இழப்பீடு என்பது நிரந்தர இயலாமை ஏற்பட்டால் காப்பீடு செய்யப்பட்ட தொகையின் ஒரு நிலையான சதவீதம் என்று மாறுபடும்.

c) தற்காலிக இயலாமைக்கு வாராந்திர இழப்பீடு.

வாராந்திர இழப்பீடு என்பது இயலாமையுடன் உள்ள ஒவ்வொரு வாரத்திற்கும் வழங்கப்படும் ஒரு நிலையான தொகை ஆகும், மற்றும் இதில் இழப்பீடு செலுத்தப்பட வேண்டிய வாரங்களின் எண்ணிக்கை அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டது.

### 1. காப்பு வழங்கப்படும் இயலாமை வகைகள்

பாலிசியின் கீழ் பொதுவாக காப்பு வழங்கப்படும் இயலாமை வகைகள்:

i. **நிரந்தர மொத்த இயலாமை (PTD):** அதாவது வாழ்நாள் முழுவதும் முடக்கப்பட்ட நிலை. நான்கு கால்களின் செயலிழப்பு, கோமாட்டோஸ் அதாவது புலன் மரத்த நிலை, இரு கண்கள்/ இரு கைகள்/ இரு கைகால்கள் அல்லது ஒரு கை மற்றும் ஒரு

கண் அல்லது ஒரு கண் மற்றும் ஒரு கால் அல்லது ஒரு கை மற்றும் ஒரு காலின் இழப்பு,

ii. **நிரந்தர பகுதி இயலாமை** (PPD): அதாவது வாழ்நாள் முழுவதற்கும் பகுதியாக முடக்கப்பட்டுள்ள நிலை. விரல்கள், கால்விரல்கள், விரல் எலும்புகள் போன்றவற்றின் இழப்பு.

iii. **தற்காலிக மொத்த இயலாமை** (TTD): அதாவது ஒரு தற்காலிகமான காலத்திற்கு முழுவதுமாக முடக்கப்பட்டுள்ள நிலை. இயலாமை காலத்தில் ஏற்படும் வருமான இழப்பினை ஈடுகட்டுவது இந்தக் காப்பின் பிரிவின் நோக்கம்.

மரண காப்பு மட்டுமே, மரணம் மற்றும் நிரந்தர இயலாமை அல்லது அத்துடன் சேர்த்து தற்காலிக மொத்த இயலாமையை தேர்ந்தெடுக்கும் விருப்பங்கள் வாடிக்கையாளருக்கு கிடைக்கிறது.

### 2. காப்பீட்டுத் தொகை

தனிநபர் விபத்து பாலிசிகளுக்கான காப்பீட்டுத் தொகைகள் பொதுவாக மொத்த மாத வருமானத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. இருப்பினும், சில காப்பீட்டாளர்கள் வருமான அளவைக் கருத்தில் கொள்ளாமல் நிலையான திட்ட அடிப்படையில் வழங்குகிறார்கள். அத்தகைய பாலிசிகளில் காப்பின் ஒவ்வொரு பிரிவிற்கும் காப்பீட்டுத் தொகை தேர்வு செய்யப்பட்ட திட்டத்தின் படி மாறுபடும்.

### 3. தனிநபர் விபத்துக் காப்பீடு- ஒரு நன்மை திட்டம்

நன்மை திட்டம் என்பதால், தனிநபர் விபத்துக் காப்பீடுகள் ஈடுக்கோரல் சமயத்தில் 'பங்களிப்பு' கோட்பாடின் கீழ் வருவதில்லை.. இவ்வாறு, வெவ்வேறு காப்பீட்டாளர்களிடமிருந்து ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பாலிசிகளை வாங்கியிருந்தால், ஈடுக்கோரல்கள் அனைத்துத் திட்டங்களின் கீழும் கொடுக்கப்படலாம்.

### 4. மருத்துவ செலவுகள் - பாலிசி நீட்டிப்பு - காப்பின் பரப்பு

இந்த பாலிசிகள் பெரும்பாலும் மருத்துவச் செலவுகளை ஈடுசெய்ய நீட்டிக்கப்படுகின்றன, அதாவது இது மருத்துவமனை சேர்க்கை செலவையும் விபத்தைத் தொடர்ந்து ஏற்படும் பிற மருத்துவ செலவுகளையும் திருப்பிச் செலுத்துகிறது.

## 5. மதிப்பு கூட்டப்பட்ட நன்மைகள்

தனிநபர் விபத்துடன், பல காப்பீட்டாளர்கள் விபத்தின் விளைவாக மருத்துவமனை சேர்க்கை சமயத்தில் மருத்துவமனை ரொக்கம், இறந்தவரின் உடலை கொண்டு செல்வதற்கான செலவு, ஒரு நிலையான தொகைக்கான கல்வி நன்மை மற்றும் ஆம்புலன்ஸ் கட்டணம் போன்ற செலவுகளை, உண்மையான அல்லது நிலையான வரம்பின், இதில் எது குறைவானதோ என்ற அடிப்படையில் மதிப்பு கூட்டப்பட்ட சலுகைகளையும் வழங்குகிறார்கள்.

## 6. விலக்குகள்

தனிநபர் விபத்துக் காப்பீட்டின் கீழ் உள்ள பொதுவான விதிவிலக்குகள், பாலிசி தொடங்குவதற்கு முன் இருக்கும் இயலாமையால் ஏற்படும் விபத்துகள், மனநலக் கோளாறுகள் அல்லது ஏதேனும் நோய் காரணமாக இறப்பு அல்லது இயலாமை, போர், படையெடுப்பு காரணமாக ஏற்படும் காயங்கள், குற்றமாக செய்யப்பட்ட கொலை, வேண்டுமென்றே சுய காயப்படுத்துதல், தற்கொலை, போதைப்பொருள்/மது உட்கொள்வது, விமானம் அல்லது பலூனில் பறப்பது போன்ற வரையறுக்கப்பட்ட கூடுதல் அபாயகரமான செயல்களில் ஈடுபடும்போது காயம் ஏற்படுவது. இது ஒரு மாதிரி பட்டியல் மட்டுமே மற்றும் நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடும்.

தனிநபர் விபத்து பாலிசிகள் தனிநபர்கள், குடும்பத்தினர் மற்றும் குழுக்களுக்கும் வழங்கப்படுகின்றன

## குழுவிற்கான தனிப்பட்ட விபத்து பாலிசிகள்

குழுவிற்கான தனிப்பட்ட விபத்து பாலிசிகள் பொதுவாக வருடாந்திர பாலிசிகள், வருடம் முடிந்தப்பிறகு மட்டுமே புதுப்பித்தலுக்கு அனுமதிக்கப்படும். எவ்வாறாயினும், ஏதாவது குறிப்பிட்ட நிகழ்வுகளுக்காக காப்பளிக்க, பொது மற்றும் தனித்தியங்கும் உடல்நல காப்பீட்டாளர்கள் ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்திற்கு தனிப்பட்ட விபத்து தயாரிப்புகளை வழங்கலாம்.

## உடைந்த எலும்புக்கான பாலிசி மற்றும் அன்றாட நடவடிக்கைகளை இழப்பதற்கான இழப்பீடு

இது ஒரு **சிறப்பு தனிநபர் விபத்து பாலிசி**. பட்டியலிடப்பட்ட எலும்பு முறிவுகளுக்கு எதிராக காப்பு வழங்க இந்த பாலிசி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு எலும்பு முறிவுக்கும் எதிராக குறிப்பிடப்பட்ட காப்பீட்டுத் தொகையின் நிலையான நன்மை அல்லது சதவீதம் ஈடுகோரலின் போது செலுத்தப்படுகிறது.. நன்மையின் அளவு காப்பு செய்யப்பட்ட எலும்பு வகை மற்றும் எலும்பு முறிவின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தது.

## M. வெளிநாட்டு பயண காப்பீடு

**பாலிசிக்கான தேவை**: வணிகம், விடுமுறை நாட்கள் அல்லது படிப்புகளுக்காக இந்தியாவுக்கு வெளியே பயணம் செய்யும் இந்திய குடிமகன் வெளிநாட்டில் தங்கியிருக்கும் போது விபத்து, காயம் மற்றும் நோய் ஏற்படும் அபாயத்திற்கு எதிராக ஏற்படும் செலவுக்கு காப்பளிக்கிறது. மருத்துவ பராமரிப்பு செலவு, குறிப்பாக அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளில் மிக அதிகமாக உள்ளது,

### காப்பின் வரம்பு

இத்தகைய பாலிசிகள் முதன்மையாக விபத்து மற்றும் நோய் நன்மைகளுக்காகக் பயன்படுகின்றன, ஆனால் சந்தை பேக்கேஜில் கிடைக்கும் பெரும்பாலான தயாரிப்புகளில், ஒரு தயாரிப்புக்குள்ளேயே பலவிதமான காப்புகள் கிடைக்கின்றன.

வழங்கப்படும் மிகவும் வழக்கமான காப்புகள்:

a) **மருத்துவம் மற்றும் நோய் பிரிவு:**

   i, விபத்து மூலம் மரணம் / இயலாமை

   ii. நோய் / விபத்து காரணமாக மருத்துவ செலவுகள்

b) **திருப்பி அனுப்புதல் மற்றும் வெளியேற்றுதல்**

c) **தனிநபர் விபத்து பாதுகாப்பு**

d) **தனிப்பட்ட கடன்பாடு** (Personal liability)

e) **மற்ற மருத்துவம் அல்லாத கவர்கள்:**

   i. பயண ரத்து

ii. பயண தாமதம்

iii. பயண இடையூறு

iv. தவறவிட்ட இணைப்பு விமானம்

v. செக்-இன் செய்யப்பட்ட சாமான்கள் வருவதில் தாமதம்

vi. செக்-இன் செய்யப்பட்ட சாமான்களின் இழப்பு

vii. பாஸ்போர்ட் இழப்பு

viii. அவசரநிலை முன்பணம்

ix. செல்வழி கடத்தல் கொடுப்பனவு (Hijack allowance)

x. ஜாமீன் பத்திர காப்பீடு

xi. ஹைஜாக் அதாவது செல்வழி கடத்தல் காப்பு

xii. ஸ்பான்சர் பாதுகாப்பு

xiii. கருணை அடிப்படையில் வருகை (compassionate visit)

xiv. படிப்பு இடையூறு

xv. வீட்டில் திருட்டு

**1. திட்ட வகைகள்**

பிரபலமான பாலிசிகளாக உள்ளவை வணிக மற்றும் விடுமுறை திட்டங்கள், படிப்புக்கான திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்பு திட்டங்கள்.

**2. இந்த பாலிசியை யார் எடுக்க முடியும்**

வணிகம், விடுமுறை அல்லது படிப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் எந்த ஒரு இந்திய குடிமகனும் இந்த பாலிசியைப் பயன்படுத்தலாம். வெளிநாடுகளுக்கு ஒப்பந்தங்களின் மீது அனுப்பப்படும் இந்திய முதலாளிகளின் பணியாளர்களுக்கும் இதில் காப்பீடு வழங்கலாம்.

**3. காப்பீட்டுத் தொகை மற்றும் பிரீமியங்கள்**

மருத்துவ செலவுகள், வெளியேற்றம், திருப்பி அனுப்புதல் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரிவுகளுக்கு இந்த காப்பு அமெரிக்க

டாலர்களில் வழங்கப்படுகிறது மற்றும் பொதுவாக 100,000 அமெரிக்க டாலர் முதல் 500,000 அமெரிக்க டாலர் வரை மாறுபட்டு இருக்கும். கடன்பாடு காப்பை தவிர மற்ற பிரிவுகளுக்கு காப்பீட்டுத் தொகை குறைவாக உள்ளது.

டாலர்களில் பிரீமியத்தை செலுத்த வேண்டிய வேலைவாய்ப்புத் திட்டத்தைத் தவிர்த்து, இந்திய ரூபாயில் ப்ரீமியங்களை செலுத்த முடியும். திட்டங்கள் பொதுவாக இரண்டு வகைகளாகும்:

- ✓ அமெரிக்கா / கனடாவைத் தவிர உலகம் முழுவதும்
- ✓ அமெரிக்கா / கனடா உட்பட உலகம் முழுவதும்

சில தயாரிப்புகள் நாடுகளின் குழுவிற்கு காப்பளிக்கின்றன. எடுத்துக்காட்டுகள் ஆசிய நாடுகளுக்கு மட்டும் பயணம், ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டும் அல்லது குறிப்பிட்ட நாட்டிற்கு மட்டும் பயணம்.

**அடிக்கடி பயணிக்கும் பெறுவணிக பயணிகளுக்கான திட்டங்கள் (Corporate Frequent Flyer plans)**

இது ஒரு வருடாந்திர பாலிசியாகும், இதன் மூலம் பெறுவணிக நிறுவன/ முதலாளி இந்தியாவுக்கு வெளியே அடிக்கடி பயணங்களை மேற்கொள்ளும் அதன் நிர்வாகிகளுக்காக தனிநபர் பாலிசிகளை எடுக்கிறார். இந்த காப்பை வருடத்தில் பல முறை வெளிநாடுகளுக்கு பயணிக்கும் நபர்களும் எடுக்கலாம். ஒரு நிறுவனத்தின் ஊழியர்கள் ஒரு வருடத்தில் எவ்வளவு நாட்கள் பயணம் செய்வார்கள் என மதிப்பிடப்பட்ட மனித நாட்களின் அடிப்படையில் முன்கூட்டிய பிரீமியம் செலுத்தப்படுகிறது. மேலே உள்ள பாலிசிகள் வணிகம் மற்றும் விடுமுறை பயணங்களுக்கு மட்டுமே வழங்கப்படும். முன்னரே இருக்கும் நோய்களுக்கு பொதுவாக வெளிநாட்டு மருத்துவ/பயணக் காப்பீடுகளில் விலக்கு வழங்கப்படும்.

## N. குழு உடல்நலக் காப்பு

### 1. குழு பாலிசிகள்

அத்தியாயத்தில் முன்பே விளக்கியது போல், குழுவின் உரிமையாளர் ஒரு குழு பாலிசியை எடுக்கிறார். அவர் ஒரு முதலாளியாக, ஒரு சங்கமாக, ஒரு வங்கியின் கிரெடிட் கார்டு பிரிவாக இருக்கலாம், இதில்

ஒரே பாலிசி தனிநபர்களின் முழு குழுவையும் உள்ளடக்கும். இந்த பாலிசிகள் பொதுவாக, வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கத்தக்க ஒப்பந்தங்களாகும்.

**குழு பாலிசிகளின் அம்சங்கள் - மருத்துவமனை சேர்க்கை நன்மைகள்.**

1. **காப்பின் வரம்பு**

   குழு உடல்நலக் காப்பீட்டின் மிகவும் பொதுவான வடிவம், முதலாளிகள் மூலம் எடுக்கப்படும் பாலிசியாகும். அதில் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களில் அவர்களை சார்ந்திருக்கும் மனைவி, குழந்தைகள் மற்றும் பெற்றோர்/துணைவரின் பெற்றோர் உட்பட சேர்க்கப்படலாம்.

2. **தேவைக்கு ஏற்ப வடிவமைக்கப்படும் காப்பு**

   குழு பாலிசிகள் பெரும்பாலும் குழுவின் தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட காப்புகளாகும். இவ்வாறு, தனிநபர் பாலிசியின் பல நிலையான விலக்குகள் குழு பாலிசியின் கீழ் காப்பளிக்கப்பட்டிருப்பதை காணலாம்.

3. **மகப்பேறு காப்பு**

   ஒரு குழு பாலிசியின் மிக பொதுவான நீட்டிப்புகளில் ஒன்று மகப்பேறு காப்பீடு ஆகும். மகப்பேறு பிரசவத்திற்காக மருத்துவமனையில் சேர்க்கப்படும் செலவுகளுக்கு காப்பீடு வழங்கப்படும் மற்றும் சிசேரியன் பிரசவத்தை உள்ளடக்கி உள்ளது. இந்த காப்பீடு பொதுவாக குடும்பத்தின் ஒட்டுமொத்த காப்பீட்டுத் தொகைக்குள் ஒரு குறிப்பிட்ட தொகையாக வரம்பிடப்படுகிறது.

4. **குழந்தை காப்பு**

   பிறந்த முதல் நாளிலிருந்தே குழந்தைகளுக்கு காப்பு வழங்கப்படுகிறது, இது சில சமயம் மகப்பேறு காப்பீட்டு வரம்புவரை மட்டுப்படுத்தப்படுகிறது மற்றும் சில சமயம் குடும்பத்தின் முழு காப்பீட்டுத் தொகையையும் சேர்க்கிற மாதிரி நீட்டிக்கப்படுகிறது.

5. **முன்னரே உள்ள நோய்களுக்கான காப்பு, காத்திருப்புக் காலத்தின் தள்ளுபடி**

முன்னரே இருக்கும் நோய்களின் விலக்கு, முப்பது நாட்கள் காத்திருப்புக் காலம், இரண்டு வருட காத்திருப்புக் காலம், பிறவி நோய்கள் போன்ற பல வழக்கமான விலக்குகள், குறிப்பாக தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட குழு பாலிசிகளில் தள்ளுபடி செய்யப்படலாம்.

6. **பிரீமியம் கணக்கீடு**

குழுவின் பாலிசிக்கு வசூலிக்கப்படும் பிரீமியம் குழு உறுப்பினர்களின் வயது விவரம், குழுவின் அளவு மற்றும் மிக முக்கியமாக குழுவின் ஈடுக்கோரல் அனுபவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

7. **முதலாளி அல்லாத பணியாளர் குழுக்கள்**

இந்தியாவில், குழு காப்பீட்டை எடுக்கும் முதன்மையான நோக்கத்துடன் குழுக்களை உருவாக்குவதை ஒழுங்குமுறை விதிகள் கண்டிப்பாகத் தடை செய்கின்றன. குழு பாலிசிகள் முதலாளிகளைத் தவிர மற்றவர்களுக்கு வழங்கப்படும் போது, குழு உரிமையாளருடன் அதன் உறுப்பினர்களுக்கு உள்ள தொடர்பு தீர்மானிக்கப்படுவது அவசியம்.

**எடுத்துக்காட்டு**

ஒரு வங்கி தன்னிடம் சேமிப்பு வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் அல்லது கிரெடிட் கார்டு வைத்திருப்பவர்களுக்காக ஒரு பாலிசியை எடுப்பது, ஒரே மாதிரியான குழுவை உருவாக்குகிறது, இதன் மூலம் ஒரு பெரிய குழு அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட பாலிசி மூலம் பயனடைய முடியும்.

8. **விலை நிர்ணயம்**

குழு பாலிசிகளில், குழுவின் அளவு மற்றும் குழுவின் ஈடுக்கோரல் அனுபவத்தின் அடிப்படையில் பிரீமியத்தில் தள்ளுபடிக்கான ஏற்பாடு உள்ளது.

2. **கார்ப்பரேட் இடையக காப்பு அல்லது மிதவை காப்பு (CORPORATE BUFFER OR FLOATER COVER)**

பெரும்பாலான குழு பாலிசிகளில், ஒவ்வொரு குடும்பமும் ஒரு இலட்சம் முதல் ஐந்து இலட்சம் மற்றும் சில சமயங்களில் அதற்கும் அதிகமாக வரையறுக்கப்பட்ட காப்பீட்டுத் தொகைக்கு காப்பீடு செய்யப்படுகிறது, குறிப்பாக ஒரு குடும்ப உறுப்பினருக்கு பெரிய நோய் ஏற்படும்போது. குடும்பத்தின் காப்பீட்டுத் தொகை தீர்ந்துபோகும் சூழ்நிலைகள் வரலாம், இத்தகைய சூழ்நிலைகளில், இடையக காப்பை தேர்வுசெய்தால், அது நிவாரணத்தைத் தருகிறது, இதன் மூலம் குடும்பக் காப்பீட்டுத் தொகைக்கு மேலான கூடுதல் செலவுகள் இந்த இடையகத் தொகையிலிருந்து ஈடுசெய்யப்படுகின்றன.

ஒரு குடும்பத்தின் காப்பீட்டுத் தொகை தீர்ந்தவுடன், இடையகத்திலிருந்து தொகைகள் எடுக்கப்படும். எவ்வாறாயினும், இந்த பயன்பாடு பொதுவாக ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால் காப்பீட்டுத் தொகை தீர்ந்துவிடும் பெரிய நோய்/தீவிர நோய்க்கான செலவுகளுக்காக மட்டுப்படுத்தப்படுகிறது.

## O. சிறப்பு தயாரிப்புகள்

### 1. நோய் காப்புகள்

சமீபத்திய ஆண்டுகளில், புற்றுநோய், நீரிழிவு நோய், கோவிட்-19 நோய்களுக்கான குறிப்பிட்ட காப்புகள் இந்திய சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. காப்பீடு குறுகிய கால அல்லது நீண்ட காலத்திற்காக - 5 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை மற்றும் அதில் ஆரோக்கிய நன்மையும் சேர்க்கப்பட்டுள்ளது - வழக்கமான ஒரு உடல்நலப் பரிசோதனைக்கான செலவும் காப்பீட்டாளரால் செலுத்தப்படும். இரத்த குளுக்கோஸ், இரத்த அழுத்தம் போன்ற காரணிகளை சிறப்பாகக் கட்டுப்படுத்துவதற்கான ஊக்கத்தொகை பாலிசியின் இரண்டாம் ஆண்டு முதல் குறைக்கப்பட்ட பிரீமியங்களின் வடிவத்தில் உள்ளது. மறுபுறம், மோசமான கட்டுப்பாட்டிற்கு அதிக பிரீமியம் வசூலிக்கப்படும்.

### 2. நீரிழிவு நோயாளிகளிக்கு காப்பளிக்கும் தயாரிப்பு

இந்த பாலிசியை 26 முதல் 65 வயது வரை உள்ளவர்கள் எடுக்கலாம் மற்றும் 70 வயது வரை புதுப்பிக்கலாம். காப்பீட்டுத் தொகை ரூ. 50,000 முதல் ரூ. 5,00,000 வரை இருக்கலாம். அறை வாடகைக்கு வரம்பு விதிக்கப்படும். நீரிழிவுசார் விழித்திரைநோய் (கண்), சிறுநீரகம், நீரிழிவுப் பாதப்புண், நன்கொடையாளர் செலவுகள் உட்பட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை போன்ற நீரிழிவு நோய் காரணமாக மருத்துவமனை சேர்க்கை தேவைப்படும் பிரச்சினைகளுக்கு காப்பளிப்பதே இந்த தயாரிப்பின் நோக்கம்.

**சுய-பரீட்சை 1**

மருத்துவமனை சேர்க்கைக்கு முந்தைய செலவினங்களுக்கான காப்பீட்டுக் காலம் ஒவ்வொரு காப்பீட்டாளருக்கும் மாறுபடுகிறது மற்றும் பாலிசியில் வரையறுக்கப் படும். மருத்துவமனை சேர்க்கைக்கு முந்தைய _______ செலவுகளுக்கான காப்பு மிகவும் பொதுவானதாக உள்ளது.

I. பதினைந்து நாட்கள்

II. முப்பது நாட்கள்

III. நாற்பத்தைந்து நாட்கள்

IV. அறுபது நாட்கள்

---

உடல்நல பாலிசிகளில் உள்ள முக்கிய வார்த்தைகள் (**அனைத்து வார்த்தைகளும் 22.07.2020 தேதியிட்ட உடல்நலக் காப்பீடு தயாரிப்புகளின் தரப்படுத்தல் குறித்த ஐஆர்டிஏஐ மாஸ்டர் சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ளது**)

## 1. நெட்வொர்க் அல்லது வலையமைப்பு வழங்குநர் (Network Provider)

நெட்வொர்க் வழங்குநர் என்பது மருத்துவமனை/ நர்சிங் ஹோம்/ பகல் நேர சிகிச்சை மையங்களை குறிக்கிறது, இது காப்பீடு செய்யப்பட்ட நோயாளிகளுக்கு ரொக்கமில்லா சிகிச்சையை வழங்க காப்பீட்டாளர்/ டிபிஏ உடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. வலையமைப்பிற்கு வெளியே உள்ள வழங்குநர்களிடம் செல்ல நோயாளிகளுக்கு சுதந்திரம் இருக்கிறது ஆனால் அங்கு அவர்களிடம் பொதுவாக அதிக கட்டணம் வசூலிக்கப்படும்.

**2. முன்னுரிமை பெறும் வழங்குநர் நெட்வொர்க் (PPN)**

ஒரு காப்பீட்டாளருக்கு சிறப்பான கட்டணத்துடன் தரமான சிகிச்சையை உறுதி செய்வதற்காக முன்னுரிமை பெறும் மருத்துவமனைகளின் வலையமைப்பை உருவாக்கும் விருப்பம் உள்ளது. அனுபவம், பயன்பாடு மற்றும் பராமரிப்பை வழங்குவதற்கான செலவு ஆகியவற்றின் அடிப்படையில் காப்பீட்டாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலர் மட்டுமே இந்தக் குழுவில் தேர்வு செய்யப்படும்போது, முன்னுரிமை பெறும் வழங்குநர் நெட்வொர்க்குகள் உருவாகின்றன.

**3. ரொக்கமில்லா சேவை**

ரொக்கமில்லா சேவையானது, காப்பீடு செய்தவர், மருத்துவமனையில் பணம் செலுத்தாமலேயே, காப்பீட்டின் வரம்பு வரை சிகிச்சையைப் பெறுவதை செயலாக்குகிறது. இதை பெற காப்பீடு செய்தவர் நெட்வொர்க் மருத்துவமனையை அணுகி, காப்பீட்டுச் சான்றாக அவரது மருத்துவ அட்டையை காண்பித்தால் மட்டும் போதும். காப்பீட்டாளர் உடல்நல சேவைக்கான ரொக்கமில்லா அணுகலை எளிதாக்குகிறார் மற்றும் அனுமதிக்கக்கூடிய தொகைக்கு நேரடியாக நெட்வொர்க் வழங்குநருக்கு பணம் செலுத்துகிறார். இருப்பினும், பாலிசி வரம்புகளுக்கு அப்பாற்பட்ட தொகைகளுக்கும் பாலிசி நிபந்தனைகளின்படி செலுத்த முடியாத செலவுகளுக்கும் காப்பீடு பெற்றவர் பணம் செலுத்த வேண்டும்.

**4. மூன்றாம் தரப்பு நிர்வாகி (TPA)**

உடல்நலக் காப்பீடு துறையில் ஒரு முக்கிய வளர்ச்சி மூன்றாம் தரப்பு நிர்வாகி அல்லது TPAஇன் அறிமுகம் ஆகும். உலகெங்கிலும் உள்ள பல காப்பீட்டாளர்கள் உடல்நல காப்பீட்டு ஈடுக்கோரல்களை நிர்வகிப்பதற்கு சுயாதீன நிறுவனங்களின் சேவைகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த முகமைகள் இந்தியாவில் டிபிஏக்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஒரு டிபிஏ என்பது மற்ற விஷயங்களுடன் சேர்த்து பின்வரும் உடல்நல சேவைகளை வழங்குவதற்காக காப்பீட்டாளரால் நியமிக்கப்படுகிறது:

i. பாலிசிதாரருக்கு ஒரு அடையாள அட்டையை வழங்குதல், இது அவரது காப்பீட்டு பாலிசிக்கான சான்றாகும் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப் பயன்படும்

ii. நெட்வொர்க் மருத்துவமனைகளில் ரொக்கமில்லா சேவையை வழங்குதல்

iii. ஈடுக்கோரல்களின் செயலாக்கம்

TPAகள் உடல்நல பாலிசிதாரர்களுக்கு வழங்கும் சேவை மருத்துவமனையில் அனுமதிப்பதற்காக தனிப்பட்ட அடையாள அட்டைகளை வழங்குவதில் இருந்து தொடங்கி, ரொக்கமில்லா அடிப்படையிலோ அல்லது பணத்தை திருப்பிச் செலுத்தும் அடிப்படையிலோ ஈடுக்கோரல்களைத் தீர்ப்பது வரை உள்ளது. மூன்றாம் தரப்பு நிர்வாகிகள் மருத்துவமனைகள் அல்லது உடல்நல சேவை வழங்குநர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு, நெட்வொர்க் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் எந்தவொரு நபருக்கும் ரொக்கமில்லா சேவை வழங்கப்படுவதை உறுதிசெய்கிறார்கள். அவர்கள் காப்பீட்டாளர்(கள்) மற்றும் காப்பீடு செய்தவர்(கள்) ஆகியோருக்கு இடையே உள்ள இடைத்தரகர்களாக செயல்பட்டு, மருத்துவமனைகளுடன் ஒருங்கிணைந்து உடல்நல ஈடுக்கோரல்களை இறுதி செய்கிறார்கள்.

5. **மருத்துவமனை**

ஒரு மருத்துவமனை என்பது, உள்நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் நோய் மற்றும்/அல்லது காயங்களுக்கு சிகிச்சை அளிக்க நிறுவப்பட்ட மற்றும் பொருந்தும் உள்ளூர் அதிகாரிகளிடம் மருத்துவமனையாகப் பதிவு செய்யப்பட்டுள்ள எந்த ஒரு நிறுவனத்தையும் குறிக்கிறது., மற்றும் பதிவுசெய்யப்பட்ட மற்றும் தகுதிவாய்ந்த மருத்துவரின் மேற்பார்வையின் கீழ் நடக்கிறது மற்றும் கீழ்க்கண்டவாறு அனைத்து குறைந்தபட்ச அளவுகோல்களுக்கும் இணங்க வேண்டும்:

a) 10,00,000 பேருக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரத்தில் குறைந்தது 10 உள் நோயாளிகளுக்கான படுக்கை வசதிகளைக் கொண்டுள்ளது. மேலும், மற்ற அனைத்து இடங்களிலும் குறைந்தது 15 உள் நோயாளிகளுக்கான படுக்கைகளைக் கொண்டுள்ளது;

b) நாள் முழுவதும் தகுதிபெற்ற மருத்துவப் பணியாளர்களை தனது தொழிலாளர்களாகக் கொண்டுள்ளது;

c) அங்கே நாள் முழுவதும் தகுதிபெற்ற மருத்துவர்கள் பொறுப்பில் உள்ளனர்;

d) அனைத்து வசதிகளும் உள்ள அறுவை சிகிச்சை மையத்தினை சொந்தமாகக் கொண்டுள்ளது. இங்கு அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன;

e) நோயாளிகளின் அன்றாடப் பதிவுகளைப் பேணுவதோடு அவற்றை காப்பீட்டு நிறுவனத்தின் அதிகாரம் பெற்றவர்கள் பார்ப்பதற்கும் கிடைக்க செய்கிறது

### 6. மருத்துவர்கள்

மருத்துவர் என்பவர் இந்தியாவின் எந்த மாநிலத்தின் மருத்துவக் கவுன்சிலின் அல்லது ஹோமியோபதியில் செல்லுபடியாகும் சான்றிதழை கொண்ட ஒரு நபர், அதன் மூலம் அந்த அதிகார வரம்பிற்குள் மருத்துவம் சிகிச்சையளிக்க தகுதியுடையவர்; மற்றும் அவரது உரிமத்தின் வரம்பு மற்றும் அதிகார வரம்பிற்குள் செயல்படுகிறார். இருப்பினும், பதிவுசெய்யப்பட்ட மருத்துவர் காப்பீடு செய்தவராகவோ அல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினராகவோ இருக்கக் கூடாது என்ற கட்டுப்பாட்டை உருவாக்க காப்பீட்டு நிறுவனங்களுக்கு சுதந்திரம் உண்டு. இது, உறவினர்கள் மூலமாகவோ அல்லது சுயமாகவோ அல்லது அவர்களுக்குச் சொந்தமான மருத்துவமனை மூலமாகவோ சிகிச்சை பெறுவதன் மூலம் மோசடியான ஈடுக்கோரல்கள் பதிவு செய்யப்படாமல் இருப்பதை உறுதிசெய்கிறது.

**தகுதிவாய்ந்த செவிலியர்**: தகுதிவாய்ந்த செவிலியர் என்றால் இந்தியாவின் நர்சிங் கவுன்சில் அல்லது இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்தின் நர்சிங் கவுன்சிலில் இருந்தும் செல்லுபடியாகும் பதிவு சான்றிதழை பெற்றவர் என்று அர்த்தம்.

### 7. நியாயமான மற்றும் தேவையான செலவுகள்

ஒரு குறிப்பிட்ட நோய் மற்றும் ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியில் சிகிச்சைக்கு நியாயமானதாகக் கருதப்படும் செலவினங்களுக்கான இழப்பீட்டை பாலிசி வழங்குவதால், உடல்நலக் காப்பீட்டு பாலிசி எப்போதும் இந்த உட்பிரிவை கொண்டுள்ளது

### 8. ஈடுக்கோரல் அறிவிப்பு

ஒவ்வொரு காப்பீட்டு பாலிசியும் ஈடுக்கோரலை உடனடியாகத் தெரிவிக்கவும், ஆவணம் சமர்ப்பிப்பதற்கான குறிப்பிட்ட கால வரம்புகளையும் வழங்குகிறது. உடல்நலக் காப்பீடு பாலிசிகளில், வாடிக்கையாளர் ரொக்கமில்லா வசதியை பெற விரும்பும் இடங்களில், மருத்துவமனை சேர்க்கைக்கு முன்பே போதுமான நேரத்தை வழங்கி முன்கூட்டியே தகவல் கொடுக்க வேண்டும். எவ்வாறாயினும், திருப்பிச் செலுத்தும் ஈடுக்கோரல்களில், ஈடுக்கோரல் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு பொதுவாக மருத்துவனையில் இருந்து விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் என நிர்ணயிக்கப்படுகிறது.

### 9. இலவச உடல்நல சோதனை

தனிநபர் உடல்நல பாலிசிகளில், ஈடுக்கோரல் இல்லாத பாலிசிதாரருக்கு சில வகையான ஊக்கத்தொகையை வழங்குவதற்கான ஒரு ஏற்பாடு பொதுவாகக் கிடைக்கிறது. பல பாலிசிகள் நான்கு தொடர்ச்சியான, ஈடுக்கோரல் இல்லாத பாலிசி காலங்களின் முடிவில் உடல்நல பரிசோதனைக்கான செலவை திருப்பிச் செலுத்தும்.

### 10. ஒட்டுமொத்த போனஸ்

ஒவ்வொரு ஈடுக்கோராத ஆண்டிற்கும் காப்பீட்டுத் தொகையில் ஒட்டுமொத்த போனஸ் வழங்கப்படுகிறது. அதாவது, புதுப்பித்தலின் போது காப்பீட்டுத் தொகையானது, ஆண்டுதோறும் 5% என்று ஒரு குறிப்பிட்ட சதவீதத்தால் அதிகரிக்கப்படும், மேலும் பத்து ஈடுக்கோரல் இல்லாத புதுப்பித்தல்களுக்கு அதிகபட்சமாக 50% வரை அனுமதிக்கப்படும். மேலும், ஏதேனும் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஈடுக்கோரல் செய்யப்பட்டால், திரட்டப்பட்ட மொத்த போனஸ், அது எந்த விகிதத்தில் திரட்டப்படுகிறதோ அதே விகிதத்தில் மட்டுமே குறைக்கப்படும்.

| எடுத்துக்காட்டு |
|---|

ஒரு நபர் 3 லட்சம் ரூபாய் ரூ. 5,000. பிரீமியத்தில் ஒரு பாலிசி எடுக்கிறார். இரண்டாம் ஆண்டில், முதல் ஆண்டில் ஈடுக்கோரல்கள் இல்லாத பட்சத்தில், அவருக்கு அதே ரூ. 5,000 பிரீமியத்தில். காப்பீட்டுத் தொகையாக ரூ. 3.15 லட்சம் கிடைக்கும். (முந்தைய ஆண்டை விட 5%

அதிகம்) இது பத்து வருட காலத்திற்கு ஈடுக்கோரலே இருக்காவிட்டால் ரூ. **4.5** இலட்சமாக உயரும்.

**11. மாலஸ்/ போனஸ் (Malus/ Bonus)**

உடல்நல பாலிசியில் ஈடுக்கோராமைக்கு ஒரு ஊக்குவிப்பு இருப்பதைப் போலவே, அதற்கு நேர்மாறாக ஈடுக்கோரல் இருப்பது மாலஸ் என்று அழைக்கப்படுகிறது. இங்கே, பாலிசியின் கீழ் ஈடுக்கோரல்கள் மிக அதிகமாக இருந்தால், புதுப்பித்தலின் போது ஒரு மாலஸ் அல்லது பிரீமியம் ஏற்றப்படும். இருப்பினும், குழு பாலிசிகளில், நியாயமான வரம்புகளுக்குள் ஈடுக்கோரல் விகிதத்தை தக்கவைக்க, ஒட்டுமொத்த பிரீமியத்தை ஏற்றுவதன் மூலம் மாலஸ் வசூலிக்கப்படுகிறது.

**12. ஈடுக்கோராமை தள்ளுபடி**

சில தயாரிப்புகள் காப்பீட்டுத் தொகையில் போனஸுக்குப் பதிலாக, ஒவ்வொரு ஈடுக்கோராத வருடத்திற்கும் பிரீமியத்தில் தள்ளுபடியை வழங்குகின்றன.

13. **அறை வாடகை கட்டுப்பாடுகள்**

சில உடல்நலத் திட்டங்கள், காப்பீடு செய்பவர் தேர்ந்தெடுக்கும் அறையின் வகையைக் காப்பீட்டுத் தொகையுடன் இணைப்பதன் மூலம் கட்டுப்படுத்துகிறது. அதாவது, பாலிசியில் காப்பீட்டுத் தொகையில் 1% என ஒரு நாளைக்கான அறை வாடகைக்கு கட்டுப்பாடு இருந்தால், ஒரு லட்சத்துக்கான காப்பீட்டுத் தொகையைக் கொண்ட ஒருவருக்கு ரூ.1,000 விலையில் அறையை எடுப்பதற்கான உரிமை உண்டு.

**14. புதுப்பித்தல் உட்பிரிவு**

உடல்நலக் காப்பீட்டு பாலிசிகளின் புதுப்பித்தல் குறித்த ஐஆர்டிஏஐ வழிகாட்டுதல்களின் படி, மோசடி மற்றும் தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல் ஆகிய காரணங்கள் இல்லாவிட்டால், உடல்நல பாலிசிகளில் ஆயுள் முழுவதும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட புதுப்பிப்பித்தல் இருப்பதை கட்டாயமாக்குகிறது. ஐஆர்டிஏஐ உடல்நலக் காப்பீடு ஒழுங்குவிதி 2016 இன் விதிகளின்படி, ஒருமுறை உடல்நலக் காப்பீட்டு பாலிசியின் (தனிநபர் விபத்து மற்றும் பயண பாலிசிகளை தவிர) ஒரு முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டு பாலிசியும் வழங்கப்பட்டு விட்டால், அதன்பின் எந்த இடைவெளியும் இல்லாமல் அந்த பாலிசி

அவ்வப்போது புதுப்பிக்கப்படலாம், மேலும் காப்பீட்டாளரின் வயதின் அடிப்படையில் புதுப்பித்தல் மறுக்கப்படாது. எனவே, உடல்நலக் காப்பீட்டு பாலிசிகள் ஆயுள் முழுவதும் புதுப்பிக்கத்தக்கவை.

## 15. ரத்து விதி

ஒரு காப்பீட்டு நிறுவனம் எந்த நேரத்திலும் பாலிசியை தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல், மோசடி செய்தல் மற்றும் அடிப்படை உண்மையின் வெளிப்படுத்தாமை அல்லது காப்பீடு செய்பவரின் ஒத்துழையாமை ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே பாலிசியை ரத்து செய்யலாம்.

காப்பீட்டாளரால் பாலிசிகள் ரத்து செய்யப்பட்டால், பாலிசியின் கீழ் எந்தக் ஈடுக்கோரலும் செலுத்தப்படவில்லை எனில், காப்பீட்டின் காலாவதியாகாத காலத்துடன் தொடர்புடைய பிரீமியத்தின் விகிதமானது காப்பீடு பெறுபவருக்குத் திருப்பித் தரப்படும். இது பொதுவாக விகிதாச்சார அடிப்படையில் இருக்கும்.

காப்பீடு பெறுபவரால் வருடாந்திர பாலிசிகள் ரத்து செய்யப்பட்டால், காப்பீட்டாளர்கள் வழக்கமாக குறிப்பிட்ட விகிதத்தில் பிரீமியங்களை வசூலிக்காமல் குறுகிய கால அளவைகளில் பிரீமியங்களை வசூலிக்கிறார்கள். இது காப்பீட்டாளர்களுக்கு எதிரான தேர்வைத் தடுக்கும் மற்றும் காப்பீட்டாளரின் ஆரம்ப செலவுகளைக் கவனித்துக்கொள்ளும்.

## 16. புதுப்பிப்பதற்கான சலுகை காலம்

அத்தியாயம் 4 இல் குறிப்பிட்டுள்ளபடி, பிரீமியம் செலுத்தாததால் காலாவதியான பாலிசியை, சலுகைக் காலத்தின்போது நடைமுறையில் தொடர, சலுகை காலத்தின் ஏற்பாடு உதவுகிறது.

மேலே உள்ள பெரும்பாலான முக்கிய உட்பிரிவுகள், வரையறைகள், சலுகைக் காலம் தொடர்பான விலக்குகள் ஐஆர்டிஏஐ ஆல் வழங்கப்பட்ட உடல்நல ஒழுங்குவிதிகள் மற்றும் உடல்நலக் காப்பீட்டுத் தரப்படுத்தல் வழிகாட்டுதல்களின் கீழ் தரப்படுத்தப்பட்டு, அவ்வப்போது புதுப்பிக்கப்படுகின்றன.

**சுய-பரீட்சை 2**

ஐஆர்டிஏ வழிகாட்டுதல்களின்படி, தனிப்பட்ட உடல்நல பாலிசிகளைப் புதுப்பிப்பதற்கு _______ சலுகைக் காலம் அனுமதிக்கப்படுகிறது.

I. பதினைந்து நாட்கள்

II. முப்பது நாட்கள்

III. நாற்பத்தைந்து நாட்கள்

IV. அறுபது நாட்கள்

**சுய-பரீட்சைக்கான பதில்கள்**

பதில் 1 - சரியான பதில் விருப்பம் II.

பதில் 2 - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் H-04

# ஆயுள் காப்பீட்டின் ஏற்பளிப்பு

## அத்தியாய அறிமுகம்

இந்த அத்தியாயம், உடல்நலக் காப்பீட்டில் ஏற்பளிப்பை பற்றிய விரிவான அறிவை உங்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எந்தவொரு காப்பீட்டிலும் ஏற்பளிப்பு என்பது மிக முக்கியமான அம்சமாகும் மற்றும் காப்பீட்டு பாலிசியை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த அத்தியாயத்தில், அடிப்படைக் கோட்பாடுகள், கருவிகள், முறைகள் மற்றும் ஏற்பளிப்பு செயல்முறை பற்றிய புரிதலைப் பெறுவீர்கள். இது குழு உடல்நல காப்பீட்டு ஏற்பளிப்பு பற்றிய அறிவையும் உங்களுக்கு வழங்கும்.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. ஏற்பளிப்பு என்றால் என்ன?

B. ஏற்பளிப்பு - அடிப்படைக் கருத்துக்கள்

C. ஐஆர்டிஏஐ இன் பிற உடல்நலக் காப்பீட்டு விதிமுறைகள்

D. உடல்நலக் காப்பீட்டின் பெயர்வுத்திறன்

E. ஏற்பளிப்புக்கான அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் கருவிகள்

F. ஏற்பளிப்பு செயல்முறை

G. குழு மட்டத்தில் உடல்நலக் காப்பீடு

H. வெளிநாட்டு பயணக் காப்பீட்டின் ஏற்பளிப்பு

I. தனிநபர் விபத்துக் காப்பீட்டின் ஏற்பளிப்பு

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:

a) ஏற்பளிப்பு என்றால் என்ன என்பதை விளக்க முடியும்

b) ஏற்பளிப்பின் அடிப்படைக் கருத்துகளை விவரிக்க முடியும்

c) ஏற்பாளர்கள் பின்பற்றும் கோட்பாடுகள் மற்றும் பல்வேறு கருவிகளை விளக்க முடியும்

d) தனிநபர் உடல்நல பாலிசிகளுக்கு ஏற்பளிப்பு அளிக்கும் முழுமையான செயல்முறையைப் பாராட்ட முடியும்

e) குழு உடல்நல பாலிசிகள் எவ்வாறு எழுதப்படுகின்றன என்பதைப் பற்றி விவாதிக்க முடியும்

**இந்த சூழ்நிலையை பார்க்கவும்**

சாஃப்ட்வேர் எஞ்சினியராக வேலை செய்யும் 48 வயதான மணீஷ், தனக்கென ஒரு உடல்நலக் காப்பீடு பாலிசி எடுக்க முடிவு செய்தார். அவர் ஒரு காப்பீட்டு நிறுவனத்திற்குச் சென்றார், அங்கு அவரது உடல் அமைப்பு மற்றும் உடல்நலம், மனநலம், முன்னரே உள்ள நோய்கள், அவரது குடும்பத்தின் உடல்நல வரலாறு, பழக்கவழக்கங்கள் மற்றும் பல கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய ஒரு முன்மொழிவு படிவத்தை அவர்கள் அவருக்கு வழங்கினர்.

அவரது முன்மொழிவு படிவத்தைப் பெற்றவுடன், அவர் அடையாளம் மற்றும் வயதுச் சான்று, முகவரிச் சான்று மற்றும் முந்தைய மருத்துவப் பதிவுகள் போன்ற பல ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. பிறகு அவருக்கு உடல் நலப் பரிசோதனை மற்றும் சில மருத்துவப் பரிசோதனைகள் செய்யச் சொன்னது அவரை விரக்தியடையச் செய்தது.

தன்னை ஒரு ஆரோக்கியமான நபராகவும், நல்ல வருமானம் கொண்டவராகவும் கருதிய மணீஷ், தனது விஷயத்தில் ஏன் இவ்வளவு நீண்ட செயல்முறையை காப்பீட்டு நிறுவனம் பின்பற்றுகிறது என்று யோசிக்க ஆரம்பித்தார். இதையெல்லாம் கடந்து வந்த பிறகும், காப்பீட்டு நிறுவனம் அவருக்கு பின்னாளில் இதய நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கிற மாதிரி மருத்துவப் பரிசோதனையில் அதிக கொலஸ்ட்ரால், அதிக பிபி இருப்பதாக கூறினர். அவர்கள் அவருக்கு பாலிசி வழங்கினாலும், பிரீமியம் அவரது நண்பர் செலுத்தியதை விட அதிகமாக இருந்தது, எனவே அவர் பாலிசியை எடுக்க மறுத்துவிட்டார்.

இங்கே, காப்பீட்டு நிறுவனம் தங்கள் ஏற்பளிப்பு செயல்முறையின் ஒரு பகுதியாக இந்த அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றியது. அபாயத்திற்கான காப்பு வழங்கும் போது, ஒரு காப்பீட்டாளர் அபாயங்களை சரியாக மதிப்பீடு செய்து நியாயமான லாபம் ஈட்ட வேண்டும். அபாயம் சரியாக மதிப்பிடப்படாவிட்டால், ஈடுக்கோரல் எழும்போது நஷ்டம் ஏற்படும். மேலும், காப்பீட்டாளர்கள் அனைத்து காப்பீட்டு நபர்களின் சார்பாகவும் பிரீமியங்களை வசூலிக்கிறார்கள் மற்றும் இந்த பணத்தை ஒரு அறக்கட்டளை போல கையாள வேண்டும்.

## A. ஏற்பளிப்பு என்றால் என்ன?

### 1. ஏற்பளிப்பு

மக்கள் கொண்டு வரும் அபாய அளவுக்கு ஏற்ப காப்பீட்டு சேர்மத்தில் போதுமான பிரீமியத்தை செலுத்துபவர்களை மட்டுமே காப்பீடு செய்ய காப்பீட்டு நிறுவனங்கள் முயற்சிக்கின்றன. முன்மொழிபவரிடமிருந்து தகவல்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்யும் செயல்முறை ஏற்பளிப்பு எனப்படுகிறது. இந்த செயல்முறையின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில், அவர்கள் ஒரு முன்மொழிபவரை காப்பீடு செய்யலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்கிறார்கள். காப்பீடை ஏற்க முடிவு செய்தால், அத்தகைய அபாயத்தை எடுப்பதில் இருந்து நியாயமான லாபம் ஈட்டுவதற்கு என்ன பிரீமியம், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை விதிக்கவேண்டும் என்பதையும் முடிவு செய்ய வேண்டும்.

**வரையறை**

ஏற்பளிப்பு என்பது ஒரு காப்பீட்டுக்கு வழங்கப்பட்ட அபாயம் ஏற்கத்தக்கதா என்பதையும், அவ்வாறு வழங்கினால், என்ன விகிதம், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் காப்பீட்டுப் பாதுகாப்பை ஏற்றுக்கொள்ளலாம் என்பதையும் தீர்மானிக்கும் செயல்முறை ஆகும்.

### 2. ஏற்பளிப்புக்கான தேவை

ஏற்பளிப்பு என்பது காப்பீட்டு நிறுவனத்தின் தூணாக உள்ளது, ஏனெனில் அபாயத்தை கவனக்குறைவாக ஏற்பது அல்லது போதுமான

பிரீமியங்களை வசூலிக்காதது காப்பீட்டாளரின் திவால்நிலைக்கு வழிவகுக்கும். மறுபுறம், தேர்ந்தெடுப்பதில் ரொம்ப கவனமாக இருப்பது, காப்பீட்டு நிறுவனம் அபாயத்தை ஒரே சீராக பிரிப்பதற்காக ஒரு பெரிய சேர்மத்தை உருவாக்குவதைத் தடுக்கும். எனவே அபாயம் மற்றும் வணிகம் இடையே சரியான சமநிலையை உருவாக்குவது மிகவும் முக்கியம், இதன் மூலம் நிறுவனம் போட்டித்தன்மையுடன் இருந்தாலும் லாபகரமாகவும் இருக்கும்.

சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனத்தின் தத்துவம், கொள்கைகள் மற்றும் அபாய பசிக்கு ஏற்ப இந்த சமநிலைப்படுத்தும் செயல்முறையை ஏற்பாளர் செய்கிறார். நோய் மற்றும் இறப்புக்கான வாய்ப்பை வயது பாதிக்கிறது என்றாலும், நோய் பொதுவாக மரணத்திற்கு முன்பே வரும் மற்றும் அடிக்கடி ஏற்படலாம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, இறப்புக் காப்பீட்டைக் காட்டிலும், ஏற்பளிப்பு விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் உடல்நலக் காப்பீட்டிற்கு அதிக நெருக்கமானவை என்பது தர்க்கரீதியான உண்மை ஆகும்.

### 3. ஏற்பளிப்பு - அபாய மதிப்பீடு

உடல்நலக் காப்பீட்டில், நிதி அல்லது வருமான அடிப்படையிலான ஏற்பளிப்பை விட மருத்துவ அல்லது உடல்நல கண்டுபிடிப்புகளில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இருப்பினும், முந்தையதை புறக்கணிக்க முடியாது, ஏனெனில் எந்தவொரு எதிர் தேர்வும் இல்லாததை தடுக்க மற்றும் உடல்நலக் காப்பீட்டில் தொடர்ச்சியை உறுதிப்படுத்த காப்பீடுப் பற்று மற்றும் நிதி ஏற்பளிப்பு முக்கியம்.

**எடுத்துக்காட்டு**

மரணத்தை விட மருத்துவமனை சேர்க்கை தேவைப்படும் இதயம் அல்லது சிறுநீரகச் சிக்கலை உருவாகும் வாய்ப்புகள் ஒரு நீரிழிவு நோயாளிக்கு அதிகம் உள்ளது, மேலும் காப்பீட்டுக் காலத்தின் போது பல முறை உடல்நலப் பாதிப்புகள் ஏற்படலாம். ஆயுள் காப்பீட்டு ஏற்பளிப்பு வழிகாட்டுதல் இந்த நபரை சராசரி அபாயம் என மதிப்பிடலாம். இருப்பினும், மருத்துவ ஏற்பளிப்புக்கு, அவர் அதிக அபாயம் உள்ளவராக மதிப்பிடப்படுவார்.

## 4. நோய் வாய்ப்புகளை பாதிக்கும் காரணிகள்

அபாயத்தை மதிப்பிடும்போது நோயுற்ற நிலையை (நோய்வாய்ப்படும் அபாயம்) பாதிக்கும் காரணிகளை கவனமாகக் கருத வேண்டும்:

(i) **வயது:** வயது மற்றும் அபாயத்தின் அளவைப் பொறுத்து பிரீமியங்கள் வசூலிக்கப்படும். எ.கா. கைகுழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கு நோய்த்தொற்று மற்றும் விபத்துக்கான அதிக அபாயம் இருப்பதால், அவர்களது பிரீமியங்கள் இளைஞர்களை விட அதிகமாக உள்ளது. இதேபோல், 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பிரீமியங்கள் அதிகமாக இருக்கும், ஏனெனில் அவர் நீரிழிவு, திடீர் இதயக் கோளாறு அல்லது இதுபோன்ற பிற நோயால் பாதிக்கப்படுவதற்கான நிகழ்தகவு மிக அதிகமாக இருக்கும்.

(ii) **பாலினம்:** கர்ப்ப காலத்தில் பெண்கள் கூடுதல் நோய் அபாயத்திற்கு ஆளாகிறார்கள். இருப்பினும், பெண்களை விட ஆண்கள் மாரடைப்பால் பாதிக்கப்படுகின்றனர் அல்லது பெண்களை விட ஆண்கள் அபாயகரமான வேலையில் அதிகம் ஈடுபடலாம் என்பதால் .வேலை தொடர்பான விபத்துகளால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

(iii) **பழக்கவழக்கங்கள்:** புகையிலை, மது அல்லது போதைப் பொருட்களை எந்த வடிவத்திலும் உட்கொள்வது நோயுற்ற நிலை அபாயத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

(iv) **தொழில்:** சில தொழில்களில் விபத்துக்கான கூடுதல் அபாயம் சாத்தியம், எ.கா. டிரைவர், வெடிப்பு வைப்பவர், வான் பயணம் செல்பவர் போன்றவை. அதேபோல், எக்ஸ்-ரே மெஷின் ஆபரேட்டர், கல்நார் தொழில்துறை தொழிலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள் போன்ற சில தொழில்கள் அதிக உடல்நல அபாயங்களைக் கொண்டிருக்கலாம்.

(v) **குடும்ப வரலாறு:** மரபணு காரணிகளால் ஆஸ்துமா, நீரிழிவு மற்றும் சில புற்றுநோய்கள் வருவதால், இது அதிகம் பொருந்துகிறது. இது நோயுற்ற நிலையை பாதிக்கிறது மற்றும் அபாயத்தை ஏற்றுக்கொள்ளும் போது கருத வேண்டும்.

(vi) **உருவ அமைப்பு:** தடிமன், ஒல்லி அல்லது சராசரி உடல் அமைப்பு சில குழுக்களில் நோயுற்ற நிலையுடன் இணைக்கப்படலாம்.

(vii) **கடந்தகால நோய் அல்லது அறுவை சிகிச்சை**: கடந்தகால நோய் உடல் பலவீனத்தை அதிகப்படுத்துமா அல்லது மீண்டும் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டும், அதற்கேற்ப பாலிசி விதிமுறைகள் தீர்மானிக்கப்பட வேண்டும். எ.கா. சிறுநீரகக் கற்கள் மீண்டும் தோன்றுவதாக அறியப்படுகிறது, அதேபோன்று, ஒரு கண்ணில் ஏற்படும் கண்புரை மற்றொரு கண்ணில் கண்புரை ஏற்படுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது.

(viii) **தற்போதைய உடல்நிலை மற்றும் பிற காரணிகள் அல்லது புகார்கள்**: அபாய அளவை மற்றும் காப்பீட்டிற்கான தகுதியை கண்டறிய இது முக்கியமானது மற்றும் சரியான வெளிப்படுத்தல் மற்றும் மருத்துவ பரிசோதனை மூலம் இதை தீர்மானிக்க முடியும்.

(ix) **சுற்றுச்சூழல் மற்றும் வசிப்பிடம்**: இவையும் நோயுற்ற நிலை விகிதங்களில் தாக்கத்தை கொண்டுள்ளன.

## உடல்நலக் காப்பீட்டில் நெறிமுறைசார் அபாயத்தைப் புரிந்துகொள்வது

வயது, பாலினம், பழக்கவழக்கங்கள் போன்ற காரணிகள் உடல்நல அபாயத்திற்கான உடல்ரீதியான ஆபத்தை குறிக்கும் அதே வேளையில், மற்றொன்றையும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். இது வாடிக்கையாளரின் நெறிமுறைசார்ந்த அபாயமாகும், இது காப்பீட்டு நிறுவனத்திற்கு மிக அதிகமான செலவை ஏற்படுத்தலாம்.

மோசமான நெறிமுறைசார் அபாயத்தின் ஒரு தீவிர எடுத்துக்காட்டு என்னவென்றால், காப்பீடு செய்தவருக்கு, ஒரு குறுகிய காலத்திற்குள் ஒரு அறுவை சிகிச்சை செய்ய தேவை என்று தெரிந்தும் காப்பீட்டாளரிடம் அதை மறைப்பது வேண்டுமென்றே ஈடுக்கோரலை வசூலிக்க மட்டுமே காப்பீடை எடுக்கும் எண்ணத்தை காட்டுகிறது.

**சுய-பரீட்சை 1**

ஏற்பளிப்பு என்பது __________ செயல்முறையாகும்.

I. காப்பீட்டு பொருட்களின் சந்தைப்படுத்தல்

II. வாடிக்கையாளர்களிடமிருந்து பிரீமியங்களை வசூலித்தல்

III. அபாய மதிப்பீடு மற்றும் அபாயத்திற்கான விலை நிர்ணயம்

IV. பல்வேறு காப்பீட்டு தயாரிப்புகளை விற்பனை செய்தல்

## B. ஏற்பளிப்பு - அடிப்படைக் கருத்துக்கள்

### 1. ஏற்பளிப்பின் நோக்கம்

ஏற்பளிப்பில் இரண்டு முக்கிய நோக்கங்கள் உள்ளன

i. எதிர்-தேர்வு அதாவது காப்பீட்டு நிறுவனத்திற்கு எதிரான தேர்வை தடுப்பது

ii. அபாயங்களை வகைப்படுத்துவது மற்றும் அபாயங்கள் நடுவில் சமபங்கை உறுதி செய்வது

**வரையறை**

**அபாயங்களின் மதிப்பீடு** என்ற சொல் உடல்நலக் காப்பீடிற்கான ஒவ்வொரு முன்மொழிவையும் அபாயத்தின் அளவின் அடிப்படையில் மதிப்பீடு செய்வதையும் மற்றும் காப்பீடை வழங்க வேண்டுமா அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்கும் செயல்முறையை குறிக்கிறது.

**எதிர்-தேர்வு** (அல்லது **எதிர்மறையான தேர்வு**) என்பது, இழப்பை அனுபவிக்கும் தங்கள் வாய்ப்பு அதிகமாக உள்ளது என்று சந்தேகிக்கும் அல்லது தெரிந்தே ஆவலுடன் காப்பீடை நாடி மற்றும் இலாபத்தை பெறும் மக்களின் போக்கை குறிக்கிறது.

**எடுத்துக்காட்டு**

காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீடு யாருக்கு வழங்கப்படும் என்பதை தேர்ந்தெடுக்காமல் இருந்தால், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதயப் பிரச்சனைகள் அல்லது புற்றுநோய் போன்ற தீவிர நோய்களால் பாதிக்கப்பட்டு, விரைவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிந்த மக்களும் காப்பீடை வாங்க முயற்சி செய்கின்ற வாய்ப்பு எழுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு காப்பீட்டு நிறுவனம் தேர்வு செய்யும் முறையை பின்பற்றாவிட்டால், அதற்கு எதிரான தேர்வுகள் செய்யப்பட்டு இழப்புகளால் பாதிக்கப்படுவார்கள்.

2. **அபாயங்கள் மத்தியில் "ஈக்விட்டி" அதாவது சமபங்கு**

இப்போது அபாயங்கள் மத்தியில் உள்ள சமபங்கை ஆராய்வோம். ஒரே மாதிரி அபாயங்களின் அளவிற்கு வெளிப்படும் விண்ணப்பதாரர்கள் அதே பிரீமியம் வர்க்கத்தில் வைக்கப்பட வேண்டும் என்பதே "ஈக்விட்டி" என்ற சொல்லிற்கு அர்த்தம். செலுத்த வேண்டிய பிரீமியங்களைத் தீர்மானிக்க காப்பீட்டாளர்கள் சில வகையான தரநிலைப்படுத்தலை நிலைநாட்ட விரும்புகிறார்கள். ஏற்பாளரிடம் வரும் முன்மொழிவுகள் பின்வரும் அபாய வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன:

i. **தரமான அபாயங்கள்**

இதில் உள்ளவர்களின் எதிர்பார்க்கப்பட்ட நோயுற்ற நிலை (நோய் வருவதற்கான வாய்ப்பு), சராசரியாக உள்ளது.

ii. **விரும்பத்தக்க அபாயங்கள்**

சில வழக்குகளில், எதிர்பார்க்கப்பட்ட நோயுற்ற நிலை சராசரியை விட கணிசமாக குறைவாக உள்ளதால், இவர்களிடம் குறைந்த பிரீமியத்தை வசூலிக்க முடியும் தான்.

iii. **தரக்குறைவான அபாயங்கள்**

மற்ற சில வழக்குகிறது எதிர்பார்க்கப்பட்ட நோயுற்ற நிலை சராசரியை விட அதிகமாக இருக்கலாம். இந்த அபாயங்களும் காப்பீடிற்காக கருதப்பட்டாலும். காப்பீட்டாளர்கள் அதிக பிரீமியங்களை வசூலித்து அல்லது சில நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அவர்களுடைய காப்பீடை ஏற்கலாம்.

iv. **மறுக்கப்பட்ட அபாயங்கள்**

சில நபர்களுக்கு உள்ள சில மருத்துவ அல்லது பிற நிலைமைகள் நோய்களால் அவர்கள் பாதிக்கப்படும் வாய்ப்பை அதிகரித்து மற்றும் ஈடுக்கோரல்களை உருவாக்குகிறது. அத்தகைய நபர்கள் நோய்வாய்ப்பட்டு, பொதுவான சேர்மத்தின் மீது அதிகமான அளவில் கடன்பாடை ஏற்படுத்துவது மிகவும் சாத்தியம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சேர்மத்தில் உள்ள மற்றவர்கள் நோய்வாய்ப்படும் வாய்ப்பு கிட்டத்தட்ட சராசரியாக இருக்கும் போது, இந்த நபர்கள் மட்டும் நோய்வாய்ப்பட மிக அதிக வாய்ப்புகள்

இருப்பதால், அதிக பிரீமியம் கட்டணத்தில் கூட அவர்களுக்கு காப்பீடை வழங்குவது கடினமாகி விடுகிறது. [சில நேரங்களில், அத்தகைய நபர்கள் நோய்வாய்ப்படுவதில் அதிக நிகழ்தகவை வெளிப்படுத்தாதபோதும், மற்ற சாதாரண மக்களைப் போல காப்பீடு செய்ய முயலும்போதும், நெறிமுறைசார்ந்த அபாயத்தை ஏற்படுத்தலாம்.] பெரும்பாலான காப்பீட்டாளர்கள் அத்தகைய அபாயங்களை நிராகரித்து, எதிர்கால பயன்பாட்டிற்காக அத்தகைய நபர்களின் தரவுத்தளத்தை உருவாக்குகிறார்கள்.

'மறுக்கப்பட்ட அபாயம்' என்பது ஒரு குறிப்பிட்ட காப்பீட்டாளர் குறிப்பிட்ட நேரத்தில், அந்த வகையான காப்பீட்டுத் தயாரிப்புக்காக ஒரு நபருக்குக் காப்பீடு செய்ய விரும்பாததை குறிக்கிறது. இருப்பினும், மற்றொரு காப்பீட்டாளர் அவரை வேறு பிரீமியம் மற்றும்/அல்லது வேறு நிபந்தனைகளுடன் காப்பீடு செய்யலாம். அதே காப்பீட்டாளர் கூட நிலைகள் மாறும்போது, அவரை மற்றொரு வகை பாலிசிக்காக அல்லது அதே பாலிசிக்காக கூட பிற்காலத்தில் கருதலாம்.

### 3. ஏற்பளிப்பு செயல்முறை

ஏற்பளிப்பு செயல்முறை இரண்டு நிலைகளில் நடைபெறுகிறது:

- ✓ முதன்மை அல்லது செயற்கள நிலையில்
- ✓ ஏற்பளிப்பு துறை நிலையில்

#### a) முதன்மை ஏற்பளிப்பு

முதன்மை ஏற்பளிப்பில் (அல்லது செயற்கள நிலை ஏற்பளிப்பை) ஒரு விண்ணப்பதாரருக்கு காப்பீடை பெறும் தகுதியுள்ளதா என்பதை தீர்மானிக்க ஒரு முகவர் அல்லது நிறுவனத்தின் பிரதிநிதி மூலம் சேகரிக்கப்படும் தகவல் அடங்கும். ஒரு முகவர் **முதன்மை ஏற்பளிப்பில்** முக்கிய பங்கை வகிக்கிறார். காப்பீடு செய்யப்பட உள்ளவரின் காப்பீடு செய்யப்படும் திறனை அறிகின்ற மிக சிறந்த நிலையில் அவர் உள்ளார்.

சில காப்பீட்டு நிறுவனங்களுக்கு முகவரின் அறிக்கை அல்லது இரகசிய அறிக்கை தேவைப்படும். அதில் முன்மொழியப்பட்டவரை

குறித்து குறிப்பிட்ட தகவல், கருத்து மற்றும் பரிந்துரைகளை பூர்த்தி செய்யுமாறு முகவர்களிடம் கேட்கப்படும்.

**நெறிமுறைசார் அபாய அறிக்கை** (Moral Hazard report) என்று அழைக்கப்படும் இதேபோன்ற அறிக்கை, காப்பீட்டு நிறுவனத்தின் அதிகாரியிடமிருந்தும் கோரப்படலாம். இந்த அறிக்கைகள் பொதுவாக உடல்நலக் காப்பீட்டிற்கு முன்மொழியப்பட்ட நபரின் தொழில், வருமானம் மற்றும் நிதி நிலை மற்றும் நற்பெயர் ஆகியவற்றை உள்ளடக்கும்.

## 4. மோசடி கண்காணிப்பில் முகவரின் பங்கு

ஒரு அபாய தேர்வு பற்றிய முடிவு பெரும்பாலும் முன்மொழிவு படிவத்தில் முன்மொழிபவர் வெளிப்படுத்திய உண்மைகளை சார்ந்துள்ளது. இந்த உண்மைகள் சரியானதா மற்றும் காப்பீட்டாளரை மோசடியாக ஏமாற்ற வேண்டுமென்ற உள்நோக்கத்துடன் திரிக்கப்பட்டுள்ளதா என்பதை அலுவலகத்தில் உட்கார்ந்திருக்கும் ஒரு ஏற்பாளர் அறிவது கடினமாக இருக்கலாம்.

**முதன்மை ஏற்பாளராக** முகவர் இங்கே ஒரு முக்கியமான பங்கை வகிக்கிறார். வெளிப்படுத்திய உண்மைகள் சரியானதா என்பதை தீர்மானிக்கும் அல்லது தவறான நோக்கத்துடன் வேண்டுமென்றே திரித்துக்கூறப்பட்டதா என்பதை கண்காணிக்கும் நிலையில் முகவர் மட்டுமே இருக்கிறார், ஏனெனில் அவர் முன்மொழியப்பட்ட நபர்களிடம் நேரடி மற்றும் தனிப்பட்ட தொடர்பை வைத்திருக்கிறார்.

### a) ஏற்பளிப்பு துறையின் பங்கு

காப்பீட்டாளரின் அலுவலகத்தில் உள்ள ஏற்பளிப்பு துறையானது ஏற்பளிப்பில் பெரும் பகுதியைச் செய்கிறது இது போன்ற வேலையில் நிபுணர்களாக மற்றும் வல்லுநர்களாக உள்ளவர்களே அபாயம் தொடர்புடைய அனைத்து தரவையும் மற்றும் சில மக்கள்தொகை தரவுகளையும் கூட கருதி ஆராய்கின்றனர். பின்னர் காப்பீடு முன்மொழிவை ஏற்கலாமா வேண்டாமா மற்றும் ஏற்றால் அதற்கான விதிமுறைகளை மற்றும் பொருத்தமான பிரீமியங்களை முடிவு செய்யும் பணியில் ஈடுபடுவார்கள்.

## C. ஐஆர்டிஏஐ இன் பிற உடல்நலக் காப்பீட்டு விதிமுறைகள்

கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி காப்பீடு பெறுபவரின் நலனுக்காக ரெகுலேட்டரும் சில மாற்றங்களை கொண்டு வந்துள்ளார்.

a. காப்பீட்டாளருக்கு பிரீமியத்திற்கு மேல் மற்றும் அதற்கு மேல் வசூலிக்கப்படும் ஏற்பளிப்பு ஏற்றுதல் குறித்து தெரிவிக்கப்பட வேண்டும் மற்றும் பாலிசியை வழங்குவதற்கு முன் பாலிசிதாரரிடம் இந்த ஏற்றுதல்களுக்கான குறிப்பிட்ட ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

b. ஒரு காப்பீட்டு நிறுவனத்திற்கு பாலிசியின் எந்தவொரு அடுத்தடுத்த கட்டத்திலும் அல்லது அதை புதுப்பிக்கும் நேரத்திலும், பாலிசி ஆவணத்தின் ஒரு பகுதியாக இருக்கும் தொழில் மாற்றம் போன்ற ஏதாவது விவரம் தேவை என்றால், காப்பீடு பெறுபவர் அதற்காக நிரப்பப்பட வேண்டிய நிலையான படிவங்களை அது பரிந்துரைத்துள்ளது.

c. அதே காப்பீட்டாளரிடம் பாலிசிதாரர்களுக்கு சீக்கிரமாக சேர்வது, தொடர்ச்சியான புதுப்பித்தல்கள், சாதகமான ஈடுக்கோரல் அனுபவம் போன்றவற்றுக்கு வெகுமதி அளிக்கும் பல்வேறு வழிமுறைகளை காப்பீட்டாளர்கள் முன்வைத்து, தகவல் ஏடு மற்றும் பாலிசி ஆவணத்தில் அத்தகைய வழிமுறைகள் அல்லது ஊக்கத்தொகைகளை முன்கூட்டியே வெளியிடுகின்றனர்.

## D. உடல்நலக் காப்பீட்டின் பெயர்வுத்திறன்

தனிப்பட்ட உடல்நலக் காப்பீட்டு பாலிசிதாரர்கள் (குடும்பக் காப்பீட்டின் கீழ் உள்ள அனைத்து உறுப்பினர்களும் உட்பட), முன்னரே உள்ள நிபந்தனைகள் மற்றும் காலக்கெடு விதிவிலக்குகளுக்காக லாபமாக பெற்ற வரவை **ஒரு காப்பீட்டாளரிடமிருந்து மற்றொரு காப்பீட்டாளருக்கு அல்லது அதே காப்பீட்டாளரிடம் ஒரு திட்டத்திலிருந்து மற்றொரு திட்டத்திற்கு**, முந்தைய பாலிசி எந்த இடைவெளியும் இல்லாமல் பராமரிக்கப்பட்டிருந்தால், **மாற்றுவதற்கான உரிமை** என ஐஆர்டிஏஐ ஆல் பெயர்வுத் திறன் என்பது வரையறுக்கப்படுகிறது.

பெயர்வுத்திறன் என்பது ஒரு காப்பீட்டாளர் ஒரு காப்பீட்டாளரிடம் இருந்து மற்றொருவருக்கு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் சம்பாதித்த அனைத்து நன்மைகளையும் தன்னுடன் எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடு ஆகும். 22 ஜூலை 2020 தேதியிட்ட ஹெல்த் இன்சூரன்ஸ் பிசினஸில் தயாரிப்புகளை தாக்கல் செய்வதற்கான ஐஆர்டிஏஐ இன் ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்களை மாணவர்கள் படிக்கலாம்.

குடும்ப பெயர்ச்சி பாலிசிகள் உட்பட பொது காப்பீட்டாளர்கள் மற்றும் உடல்நலக் காப்பீடு வழங்கும் அனைத்து தனிநபர் இழப்பீட்டு உடல்நலக் காப்பீட்டு பாலிசிகளுக்கும் பெயர்வுத் திறன் அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஐஆர்டிஏஐ கட்டாயமாக்கி உள்ளது.

இருப்பினும், புதுப்பித்தலின் போது மட்டுமே பெயர்வை செய்ய முடியும். காத்திருப்புக் கால வரவை தவிர, பிரீமியம் உட்பட புதிய பாலிசியின் பிற விதிமுறைகள் புதிய காப்பீட்டு நிறுவனத்தால் தீர்மானிக்கப்படும். நடைமுறைப்படி, பாலிசியை பெயர்வு செய்ய விரும்பும் நிறுவனத்தைக் குறிப்பிட்டு, புதுப்பித்தலுக்கு குறைந்தபட்சம் 45 நாட்களுக்கு முன்னர், காப்பீடு செய்தவர் பழைய காப்பீட்டாளரிடம் பெயர்வுக்கான கோரிக்கையை முன்வைக்க வேண்டும். பாலிசி இடைவேளையின்றி புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் (பெயர்வு செயல்பாட்டில் இருந்தால் 30 நாட்களுக்கு சலுகை காலம் கிடைக்கும்). ஐஆர்டிஏஐ இதற்காக இணைய அடிப்படையிலான வசதியை உருவாக்கியுள்ளது, இதில் பராமரிக்கப்படும் காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் தனிநபர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து உடல்நலக் காப்பீட்டு பாலிசிகள் பற்றிய தரவானது, பெயர்வை செய்யும் பாலிசிதாரரின் உடல்நலக் காப்பீடு வரலாற்றை சுலபமாக அணுகவும் மற்றும் பெறவும் புதிய காப்பீட்டாளருக்கு உதவுகிறது.

## E. உடல்நலக் காப்பீட்டின் இடம்பெயர்வு

இடம்பெயர்வு என்பது ஐஆர்டிஏஐ ஆல் தனிப்பட்ட உடல்நலக் காப்பீட்டு பாலிசிதாரர்களுக்கு (குடும்பக் காப்பீட்டின் கீழ் உள்ள அனைத்து உறுப்பினர்கள் மற்றும் குழு உடல்நலக் காப்பீட்டுக் கொள்கையின் உறுப்பினர்கள் உட்பட), முன்னரே உள்ள நிபந்தனைகள் மற்றும் காலக்கெடு விதிவிலக்குகளுக்காக லாபமாக பெறப்பட்ட வரவை **அதே**

**காப்பீட்டாளரிடம் இடம்மாற்றுவதற்கான** உரிமை என வரையறுக்கப்படுகிறது..

22 ஜூலை 2020 தேதியிட்ட ஹெல்த் இன்சூரன்ஸ் பிசினஸில் வழங்கப்பட்டுள்ள தயாரிப்பு தாக்கல் செய்வதற்கான ஐஆர்டிஏஐ இன் ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள், உடல்நலக் காப்பீட்டின் இடம்பெயர்வு குறித்த வழிகாட்டுதல்களை திருத்தியுள்ளது. இழப்பீட்டுத் தொகை அடிப்படையிலான தனிநபர் உடல்நலக் காப்பீட்டு பாலிசியின் கீழுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட பாலிசிதாரருக்கும் (குடும்ப பெயர்ச்சி பாலிசியின் கீழ் உள்ள உறுப்பினர்கள் உட்பட) பாலிசிதாரரின் வெளிப்படையான விருப்பத்தின்படி இடம்பெயர்வதற்கான விருப்பம் வழங்கப்படும். குழு பாலிசிகளிலிருந்து தனிப்பட்ட பாலிசிக்கு இடம்பெயர்வது ஏற்பளிப்புக்கு உட்பட்டது.

பாலிசியை இடமாற்ற விரும்பும் பாலிசிதாரர் தனது பாலிசியின் பிரீமியம் புதுப்பித்தல் தேதிக்கு குறைந்தபட்சம் 30 நாட்களுக்கு முன்னர், குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுடன் பாலிசியை மாற்றுவதற்கு காப்பீட்டு நிறுவனத்திடம் விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவார். இருப்பினும், காப்பீட்டாளர் 30 நாட்களுக்கும் குறைவான காலத்தை கருத விரும்பினால், காப்பீட்டாளர் அவ்வாறு செய்யலாம். காப்பீட்டாளர்கள் இடம்பெயர்வதற்கு பிரத்தியேகமாக எந்த கட்டணத்தையும் விதிக்க மாட்டார்கள்.

## F. ஏற்பளிப்புக்கான அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் கருவிகள்

### 1. ஏற்பளிப்புடன் தொடர்புடைய அடிப்படைக் கோட்பாடுகள்

எந்தவொரு காப்பீட்டிலும், அது ஆயுள் காப்பீடோ அல்லது பொதுக் காப்பீடோ, அபாயங்களை ஏற்றுக்கொள்வதுடன் செயல்படும் சில சட்டக் கோட்பாடுகள் உள்ளன. உடல்நலக் காப்பீடையும் இந்தக் கோட்பாடுகள் சமமாக நிர்வகிகிக்கின்றன மற்றும் கோட்பாடுகளை மீறினால், காப்பீட்டாளர் கடன்பாடை தவிர்க்க முடிவு செய்யலாம். (இந்தக் கோட்பாடுகள் பொதுவான அத்தியாயங்களில் விவாதிக்கப்பட்டுள்ளன.)

2. **ஏற்பளிப்புக்கான கருவிகள்**

இவை ஏற்பாளருக்கான தகவல்களின் ஆதாரங்கள் மற்றும் அபாய வகைப்பாடு மற்றும் பிரீமியங்கள் இறுதியாக முடிவு செய்யப்படுவதற்கான அடிப்படையாகும். ஏற்பளிப்புக்கான முக்கிய கருவிகள் பின்வருமாறு:

a) **முன்மொழிவு படிவம்**

இந்த ஆவணம், முன்மொழிபவரின் உடல்நலம் மற்றும் தனிப்பட்ட விவரங்கள் (அதாவது வயது, தொழில், உருவ அமைப்பு, பழக்கவழக்கங்கள், உடல்நிலை, வருமானம், பிரீமியம் செலுத்துதல் விவரங்கள் போன்றவை) தொடர்பான அனைத்து முக்கியமான தகவல்களும் சேகரிக்கப்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையாகும். காப்பீட்டாளரால் ஏதேனும் மீறல் அல்லது தகவல்களை மறைத்தல் பாலிசியை செல்லாததாக ஆக்குகிறது. (இது பொதுவான அத்தியாயங்களில் விவாதிக்கப்பட்டுள்ளது.)

b) **வயது சான்று**

காப்பீடு பெறுபவரின் வயதின் அடிப்படையில் பிரீமியங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே வயதுச் சான்றை சமர்ப்பித்து பதிவு சமயத்தில் வெளியிடப்பட்ட வயதை சரிபார்க்க வேண்டியது அவசியம்.

**எடுத்துக்காட்டு**

இந்தியாவில், பல ஆவணங்கள் வயதுச் சான்றாகக் கருதப்படுகின்றன, ஆனால் அவை அனைத்தும் சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பெரும்பாலும் செல்லுபடியாகும் ஆவணங்கள் இரண்டு பரந்த பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு:

a) தரமான வயதுச் சான்று: இவற்றில் பள்ளிச் சான்றிதழ், பாஸ்போர்ட், இருப்பிடச் சான்றிதழ், பான் அட்டை போன்ற சிலது அடங்கும்.

b) தரமற்ற வயதுச் சான்று: இவற்றில் ரேஷன் கார்டு, வாக்காளர் ஐடி, முதியவரின் அறிவிப்பு, கிராம பஞ்சாயத்து சான்றிதழ் போன்ற சிலது அடங்கும்.

**நிதி ஆவணங்கள்**

முன்மொழிபவரின் நிதி நிலையை அறிந்துகொள்வது நன்மைக்கான தயாரிப்புகளின் நெறிமுறைசார் அபாயத்தைக் குறைப்பதற்கு குறிப்பாக தேவைப்படுகிறது. இருப்பினும், பொதுவாக நிதி ஆவணங்கள் பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே கேட்கப்படுகின்றன:

a) தனிநபர் விபத்து காப்புகள் அல்லது

b) உயர் தொகை காப்பீடு அல்லது

c) கோரப்பட்ட காப்புடன் ஒப்பிடும் போது கூறப்பட்ட வருமானம் மற்றும் தொழில் பொருந்தவில்லை.

**c) மருத்துவ அறிக்கைகள்**

மருத்துவ அறிக்கைகளின் தேவை காப்பீட்டாளரின் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டது, மேலும் இது பொதுவாக காப்பீடு செய்யப்பட்டவரின் வயது மற்றும் சில சமயங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட காப்பீட்டின் அளவைப் பொறுத்தது. முன்மொழிவு படிவத்தில் உள்ள சில பதில்களில் மருத்துவ அறிக்கைகள் கேட்கப்படுவதற்கு வழிவகுக்கும் சில தகவல்களும் இருக்கலாம்.

**d) விற்பனை பணியாளர்களின் அறிக்கைகள்**

விற்பனைப் பணியாளர்களை நிறுவனத்திற்கான அடிமட்டத்தில உள்ள ஏற்பாளர்களாகவும் பார்க்கப்படலாம், மேலும் அவர்கள் அறிக்கையில் கொடுக்கப்பட்ட தகவல்கள் ஒரு முக்கியமான பரிசீலனையை உருவாக்கலாம். இருப்பினும், விற்பனைப் பணியாளர்களுக்கு அதிக வணிகத்திற்கு ஊக்கத்தொகைகள் கிடைப்பதால், கவனிக்கப்பட வேண்டிய நலன் முரண்பாடு உள்ளது.

**சுய-பரீட்சை** 2

ஏற்பளிப்பில் உன்னத நன்னம்பிக்கையின் கோட்பாடை __________ பின்பற்ற வேண்டும்.

I. காப்பீட்டாளர்

II. காப்பீடு செய்தவர்

III. காப்பீட்டாளர் மற்றும் காப்பீடு செய்தவர் இருவரும்

IV. மருத்துவ ஆய்வாளர்கள்

**சுய-பரீட்சை** 3

காப்பீடுப் பற்று என்பது __________ ஐக் குறிக்கிறது.

I. காப்பீடு செய்யப்பட வேண்டிய சொத்தில் உள்ள நபரின் நிதி நலன்

II. ஏற்கனவே காப்பீடு செய்யப்பட்ட சொத்து

III. ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ஒரே இழப்பிற்கு காப்பளிக்கும்போது ஒவ்வொரு காப்பீட்டாளரின் இழப்பின் பங்கு

IV. காப்பீட்டாளரிடமிருந்து பெறக்கூடிய இழப்பின் அளவு

## G. ஏற்பளிப்பு செயல்முறை

தேவையான தகவல் கிடைத்ததும், ஏற்பாளர் பாலிசியின் விதிமுறைகளை தீர்மானிக்கிறார். உடல்நலக் காப்பீடு வணிகத்தில் ஏற்பளிப்புக்கு பயன்படுத்தப்படும் பொதுவான படிவங்கள் பின்வருமாறு:

### 1. மருத்துவ ஏற்பளிப்பு

மருத்துவ ஏற்பளிப்பு என்பது உடல்நலக் காப்பீட்டு பாலிசிக்கு விண்ணப்பிக்கும் தனிநபரின் உடல்நிலையைத் தீர்மானிக்க முன்மொழிபவரிடமிருந்து மருத்துவ அறிக்கைகள் கோரப்படும் ஒரு செயல்முறையாகும். சேகரிக்கப்பட்ட உடல்நல தகவல்கள், காப்பீட்டாளர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு, எந்த வரம்பு வரை மற்றும் எந்த நிபந்தனைகள் மற்றும் விலக்குகள் ஆகியவற்றின் அடிப்படையில் காப்பு வழங்க வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு

மருத்துவ ஏற்பளிப்பு மூலம் அபாயத்தை ஏற்றுக்கொள்வது அல்லது மறுப்பது மற்றும் காப்பின் விதிமுறைகளையும் தீர்மானிக்க முடியும்.

**எடுத்துக்காட்டு**

உயர் இரத்த அழுத்தம், அதிக எடை/உடல் பருமன் மற்றும் அதிகரித்த சர்க்கரை அளவு போன்ற மருத்துவ நிலைமைகள் இதயம், சிறுநீரகம் மற்றும் நரம்பு மண்டலத்தின் நோய்கள் காரணமாக எதிர்காலத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கான அதிக வாய்ப்பு உள்ளது. எனவே, மருத்துவ ஏற்பளிப்புக்கான அபாயத்தை மதிப்பிடும் போது இந்த நிலைமைகளை கவனமாகக் கருத வேண்டும்.

மருத்துவ ஏற்பளிப்பு வழிகாட்டுதல்களுக்கு முன்மொழிபவரின் உடல்நிலை குறித்த அவரது குடும்ப மருத்துவரால் கையொப்பமிடப்பட்ட அறிவிப்பும் தேவைப்படலாம்.

---

45-50 வயதுக்கு மேற்பட்டவர்கள், மற்றும் முதல் முறையாக பதிவுசெய்யும் நபர்களின் உடல்நல அபாய சுயவிவரத்தை மதிப்பிடுவதற்கும் அவர்களின் தற்போதைய உடல்நிலை குறித்த தகவல்களைப் பெறுவதற்கும் பொதுவாக குறிப்பிட்ட நோயியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இத்தகைய ஆய்வுகள் முன்னரே இருக்கும் மருத்துவ நிலைமைகள் அல்லது நோய்களின் இருப்பை பற்றி சுட்டிக்காட்டுகிறது.

## 2. மருத்துவ-மற்ற ஏற்பளிப்பு

உடல்நலக் காப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் பெரும்பாலான முன்மொழிபவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை தேவையில்லை.

முன்மொழிபவர் அனைத்து அடிப்படை தகவல்களையும் முழுமையாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்தி, முகவரால் கவனமாகச் சரிபார்க்கப்பட்டாலும், மருத்துவப் பரிசோதனையின் தேவை மிகவும் குறைவாக இருக்கும்.

**எடுத்துக்காட்டு**

ஒரு நபர் மருத்துவப் பரிசோதனைகள், காத்திருப்புக் காலங்கள் மற்றும் செயலாக்க தாமதங்கள் ஆகியவற்றின் நீண்ட செயல்முறையை

விரும்பாமல் விரைவாக உடல்நலக் காப்பீட்டைப் பெற வேண்டும் என்றால், அவர் மருத்துவமற்ற ஏற்பளிப்புள்ள பாலிசியைத் தேர்ந்தெடுக்கலாம். மருத்துவமற்ற ஏற்பளிப்புள்ள பாலிசியில், பிரீமியம் விகிதங்கள் மற்றும் காப்பீட்டுத் தொகை பொதுவாக வயது, பாலினம், புகைபிடிக்கும் வகுப்பு, உருவ அமைப்பு போன்றவற்றில் சில உடல்நலக் கேள்விகளுக்கு வழங்கப்பட்ட பதில்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. செயல் வேகமானது ஆனால் பிரீமியங்கள் ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கலாம். .

### 3. எண்ணியல் மதிப்பீட்டு முறை

இது ஏற்பளிப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு செயல்முறையாகும், இதில் அபாயத்தின் ஒவ்வொரு கூறுகளுக்கும் எண் அல்லது சதவீத மதிப்பீடுகள் தரப்படுகின்றன.

வயது, பாலினம், இனம், தொழில், வசிப்பிடம், சூழல், உருவ அமைப்பு, பழக்கவழக்கங்கள், குடும்பம் மற்றும் தனிப்பட்ட வரலாறு போன்ற காரணிகள் ஆய்வு செய்யப்பட்டு, முன் தீர்மானிக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் எண்ணியல் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன.

### 4. ஏற்பளிப்பு முடிவுகள்

பெறப்பட்ட தகவல்கள் கவனமாக மதிப்பிடப்பட்டு, பொருத்தமான அபாய வகைகளாக வகைப்படுத்தப்பட்டதும் ஏற்பளிப்பு செயல்முறை நிறைவடைகிறது. மேற்கூறிய கருவிகள் மற்றும் அவரது தீர்ப்பின் அடிப்படையில், ஏற்பாளர் அபாயத்தை பின்வரும் வகைகளாக வகைப்படுத்துகிறார்:

a) சாதாரண விகிதங்களில் ஏற்பது

b) அனைத்து நிறுவனங்களிலும் நடைமுறையில் இல்லாவிட்டாலும், கூடுதல் பிரீமியத்தில் (ஏற்றுதல்) அபாயத்தை ஏற்பது

c) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு/ அவகாசத்திற்கு காப்பீடை ஒத்திவைப்பது

d) காப்பை நிராகரிப்பது

e) எதிர்ச் சலுகை (காப்பில் பகுதியைக் கட்டுப்படுத்தலாம் அல்லது மறுக்கலாம்)

f) அதிக கழிவுகள் அல்லது இணை செலுத்தலை விதிப்பது

g) பாலிசியின் கீழ் நிரந்தர விலக்கு(களை) விதிப்பது

ஏதேனும் நோய் நிரந்தரமாக விலக்கப்பட்டால், அது பாலிசி சான்றிதழில் அங்கீகரிக்கப்படும். இது நிலையான பாலிசி விலக்கைத் தவிர கூடுதல் விலக்காக மாறும் மற்றும் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.

## 5. பொதுவான அல்லது நிலையான விலக்குகளைப் பயன்படுத்துதல்

பெரும்பாலான பாலிசிகள் அவற்றின் அனைத்து உறுப்பினர்களுக்கும் பொருந்தும் விலக்குகளை விதிக்கின்றன. இவை நிலையான விலக்குகள் என அறியப்படுகின்றன அல்லது சில சமயங்களில் பொதுவான விலக்குகள் என குறிப்பிடப்படுகின்றன. நிலையான விலக்குகளை செயல்படுத்துவதன் மூலம் காப்பீட்டாளர்கள் தங்கள் வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்துகிறார்கள். இவை முந்தைய அத்தியாயத்தில் விவாதிக்கப்பட்டுள்ளன.

## 6. மண்டல வாரியான பிரீமியம்

பொதுவாக, பிரீமியம் காப்பீடு செய்யப்பட்ட நபரின் வயது மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட காப்பீட்டுத் தொகையை சார்ந்திருக்கும். பிரீமியம் வேறுபாடு குறிப்பிட்ட மண்டலங்களில் ஈடுக்கோரல்களின் அதிக செலவுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எ.கா. டெல்லி மற்றும் மும்பை சில காப்பீட்டு நிறுவனங்களால் சில தயாரிப்புகளுக்கு அதிக பிரீமியம் வசூலிக்கப்படும் மண்டலத்தின் ஒரு பகுதியாகும். எ.கா. 55-65 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான தனிநபர் பாலிசியானது, இந்தூர் அல்லது ஜம்மு போன்ற நகரங்களில் உள்ள அதே வயதினருக்கான பாலிசியை விட, பெருநகரங்கள் மற்றும் 'ஏ கிளாஸ்' நகரங்களில் அதிகமாக மதிப்பிடப்படும்.

**சுய-பரீட்சை** 4

மருத்துவ ஏற்பளிப்பு பற்றிய பின்வரும் அறிக்கைகளில் எது தவறானது?

I. இது மருத்துவ அறிக்கைகளை சேகரித்து மதிப்பிடுவதில் அதிக செலவை உள்ளடக்கியது.

II. தற்போதைய உடல்நிலை மற்றும் வயது ஆகியவை உடல்நலக் காப்பீட்டிற்கான மருத்துவ ஏற்பளிப்பில் முக்கிய காரணிகளாகும்.

III. முன்மொழிபவர்கள் தங்கள் உடல்நல அபாய சுயவிவரத்தை மதிப்பிடுவதற்கு மருத்துவ மற்றும் நோயியல் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

IV. அபாயத்தின் ஒவ்வொரு கூறுகளிலும் சதவீத மதிப்பீடு செய்யப்படுகிறது.

## H. குழு மட்டத்தில் உடல்நலக் காப்பீடு

உடல்நலக் காப்பீட்டிற்காக ஒரு குழுவை ஏற்றுக்கொள்ளும் போது, தீவிர மற்றும் அடிக்கடி உடல்நலப் பிரச்சனைகளைக் கொண்டிருக்கும் குழுவில் ஒரு சில உறுப்பினர்கள் இருப்பதற்கான சாத்தியத்தை காப்பீட்டாளர்கள் கருதுகின்றனர்.

### 1. குழு உடல்நலக் காப்பீடு

குழு உடல்நலக் காப்பீட்டின் ஏற்பளிப்பு காப்பீட்டு நிறுவனத்தின் ஏற்பளிப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் காப்பீட்டுக் ரெகுலேட்டர்களால் குழுக் காப்பீட்டிற்காக வகுக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்குள் வருமா என்பதை மதிப்பீடு செய்ய குழுவின் பண்புகளை பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

குழு உடல்நலக் காப்பீட்டுக்கான தரநிலை ஏற்பளிப்பு செயல்முறையில் பின்வரும் காரணிகளின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட குழுவை மதிப்பீடு செய்ய வேண்டும்:

a) குழு வகை

b) குழு அளவு

c) தொழில் வகை

d) காப்புக்கு தகுதியான நபர்கள்

e) முழு குழுவிற்கும் காப்பளிக்கப்படுகிறதா அல்லது உறுப்பினர்கள் விலகுவதற்கான விருப்பம் உள்ளதா

f) காப்பின் நிலைகள் - அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறதா அல்லது வித்தியாசமாக இருக்கிறதா.

g) பாலினம், வயது, ஒற்றை அல்லது பல இடங்கள், குழு உறுப்பினர்களின் வருமான நிலைகள், பணியாளர் வருவாய் விகிதம், குழு வைத்திருப்பவரே முழு பிரீமியத்தையும் செலுத்துகிறாரோ அல்லது உறுப்பினர்களும் பிரீமியமில் பங்களிக்க வேண்டுமா.

h) வெவ்வேறு புவியியல் இடங்களில் பல இடங்களில் பரவியிருந்தால், பிராந்தியங்கள் முழுவதும் உடல்நலச் செலவுகளில் உள்ள வேறுபாடு

i) குழு காப்பீட்டை மூன்றாம் தரப்பு நிர்வாகி (அவரது விருப்பப்படி அல்லது காப்பீட்டாளரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்) அல்லது காப்பீட்டாளரால் நிர்வகிக்க வேண்டுமா என்பதை பற்றி குழு வைத்திருப்பவருக்கு உள்ள விருப்பம்.

j) முன்மொழியப்பட்ட குழுவின் கடந்தகால ஈடுக்கோரல் அனுபவம்

**எடுத்துக்காட்டு**

குளிரூட்டப்பட்ட அலுவலகங்களில் பணிபுரியும் உறுப்பினர்களின் குழுவை விட சுரங்கங்கள் அல்லது தொழிற்சாலைகளில் பணிபுரியும் உறுப்பினர்களின் குழு அதிக உடல்நல அபாயத்தில் உள்ளது. மேலும் நோய்களின் தன்மை (அதன் மூலம் எழும் ஈடுக்கோரல்கள்) இரு குழுக்களுக்கும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும். எனவே, காப்பீட்டாளர் குழுவின் உடல்நலக் காப்பீட்டு பாலிசிக்கு அதற்கேற்ப விலையிடுவார்.

இதேபோல், ஐடி நிறுவனங்கள் போன்ற அதிக வருவாய் கொண்ட குழுக்களின் எதிர்மறை-தேர்வைத் தவிர்க்க, காப்பீட்டாளர்கள் காப்பீட்டிற்குத் தகுதிபெறும் முன் பணியாளர்கள் தங்கள் தகுதிகாண் காலத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்பதை போன்ற முன்னெச்சரிக்கை அளவுகோல்களை அறிமுகப்படுத்தலாம்.

## 2. முதலாளி- பணியாளர் குழுக்களைத் தவிர மற்ற ஏற்பளிப்பு

முதலாளி-பணியாளர் குழுக்கள் பாரம்பரியமாக குழு உடல்நலக் காப்பீடு வழங்கப்படும் மிக பொதுவான குழுக்கள் ஆகும், குழுவின் உறுப்பினர்களின் கலவையின் தன்மை குழுவிற்கு ஏற்பளிப்பு வழங்கும் போது முக்கியமாக கருதவேண்டியதில் ஒன்றாகும்.

முதலாளி- பணியாளர்களாக இல்லாத வேறு பணியாளர் குழுக்களுக்கும் உடல்நலக் காப்பீடு வழங்கப்படலாம். ஐஆர்டிஏஐ ஆனது பல்வேறு குழுக்களை கையாள்வதில் காப்பீட்டாளர்கள் கடைபிடிக்க வேண்டிய அணுகுமுறையை ஒழுங்குபடுத்தும் நோக்கில் குழு காப்பீட்டு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. அத்தகைய முதலாளி இல்லாத குழுக்களில் பின்வருவன அடங்கும்:

a) முதலாளி நலன்புரி சங்கங்கள்
b) ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட கிரெடிட் அட்டைகளை வைத்திருப்பவர்கள்
c) கூடுதல் நன்மையாக காப்பீடு வழங்கப்படும் குறிப்பிட்ட வணிகத்தின் வாடிக்கையாளர்கள்
d) வங்கி மற்றும் தொழில்முறை சங்கங்கள் அல்லது சங்கங்களிடம் இருந்து கடன் வாங்குபவர்கள்

## I. வெளிநாட்டு பயணக் காப்பீட்டின் ஏற்பளிப்பு

வெளிநாட்டுப் பயணக் காப்பீட்டு பாலிசியின் கீழ் முக்கியக் காப்பீடு உடல்நலக் காப்பே என்பதால், ஏற்பளிப்பு உடல்நலக் காப்பீடு முறையைப் பின்பற்றும்.

பிரீமியம் மதிப்பீடு மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவை தனிப்பட்ட நிறுவன வழிகாட்டுதல்களின்படி இருக்கும், ஆனால் சில முக்கியமான பரிசீலனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. பிரீமிய விகிதம் முன்மொழிபவரின் வயது மற்றும் வெளிநாட்டுப் பயணத்தின் காலத்தைப் பொறுத்தது.
2. மருத்துவ சிகிச்சைக்கு வெளிநாடுகளில் அதிக செலவாகும் என்பதால், உள்நாட்டு மருத்துவக் காப்பீட்டு பாலிசிகளுடன்

ஒப்பிடும்போது பிரீமியம் விகிதங்கள் பொதுவாக அதிகமாக இருக்கும்.

3. வெளிநாடுகளில் கூட அமெரிக்கா மற்றும் கனடாவின் பிரீமியம் தான் அதிகம்.
4. பாலிசியைப் பயன்படுத்தி முன்மொழிபவர் வெளிநாட்டில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாததை கவனமாக மதிப்பிட வேண்டும், எனவே, முன்மொழிவு கட்டத்திலேயே காப்பீடு செய்பவருக்கு முன்னரே ஏதேனும் நோய் இருக்கிறதா பற்றி கவனமாகக் கருத வேண்டும்:

## J. தனிநபர் விபத்துக் காப்பீட்டின் ஏற்பளிப்பு

தனிநபர் விபத்து பாலிசிகளுக்கான ஏற்பளிப்பு பரிசீலனைகள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளன:

### மதிப்பீடு

தனிநபர் விபத்துக் காப்பீட்டில், காப்பீடு செய்தவரின் தொழில்தான் முக்கியக் காரணியாகக் கருதப்படுகிறது. பணி அல்லது தொழிலுடன் தொடர்புடைய அபாயங்கள் செய்யப்படும் வேலையின் தன்மைக்கு ஏற்ப மாறுபடும். எடுத்துக்காட்டாக, கட்டிடம் கட்டப்படும் இடத்தில் பணிபுரியும் சிவில் இன்ஜினியரை விட அலுவலக மேலாளருக்கான பணியிட அபாயம் குறைவாகவே இருக்கும். ஒரு விகிதத்தை நிர்ணயிக்க, தொழில்கள் குழுக்களாக வகைப்படுத்தப்படுகின்றன, ஒவ்வொரு குழுவும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ, ஒரே மாதிரியான அபாய வெளிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

### அபாய வகைப்பாடு

தொழிலின் அடிப்படையில், காப்பீடு செய்யப்பட்ட நபருடன் தொடர்புடைய அபாயங்கள் மூன்று குழுக்களாக வகைப்படுத்தப்படலாம்:

- **அபாயக் குழு I**

  கணக்காளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், கட்டிடக் கலைஞர்கள் மற்றும் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டுள்ள நபர்கள், முதன்மையாக இதே போன்ற ஆபத்துகளில் ஈடுபடும் நபர்கள்.

- **அபாயக் குழு II**

  கட்டடம் கட்டுபவர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் மேற்பார்வைப் பணிகளில் ஈடுபட்டுள்ள பொறியாளர்கள் மற்றும் இதே போன்ற ஆபத்துள்ள பணிகளில் ஈடுபட்டுள்ள நபர்கள். உடல் உழைப்பில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும் (குழு III இன் கீழ் வருபவர்களைத் தவிர),

- **அபாயக் குழு III**

  நிலத்தடி சுரங்கங்களில் பணிபுரியும் நபர்கள் அல்லது சக்கரங்கள் மீது கால் வைத்து பந்தயம் ஓடுவது போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் இதேபோன்ற ஆபத்தை விளைவிக்கும் தொழில்கள்/ நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள்.

  அபாய குழுக்கள் முறையே 'இயல்பான', 'நடுத்தர' மற்றும் 'உயர் அபாய' வகைகளாக அறியப்படுகின்றன.

## வயது வரம்புகள்

பணிபுரியும் மக்களுக்கான (முதலாளி-ஊழியர்) பொது வயது வரம்பு 18-70 ஆகும். இருப்பினும் மாணவர்களுக்கு குறைந்தபட்ச வயது 5 ஆண்டுகள் கூட இருக்கலாம்.

காப்பீடு பெற மற்றும் புதுப்பிக்கப்படுவதற்கான குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வயது நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடும்.

## குடும்பப் பேக்கேஜ் கவர்

தனிநபர் விபத்து பாலிசியில் குடும்பப் பேக்கேஜ் காப்பும் உள்ளது, அதில் குழந்தைகள் மற்றும் சம்பாதிக்காத வாழ்க்கைத் துணைக்கும் இறப்பு மற்றும் நிரந்தர இயலாமைக்கான (மொத்தம் அல்லது பகுதி) காப்பு மட்டுமே உள்ளது

## குழு பாலிசிகளில் பிரீமியம் தள்ளுபடி

காப்பீடு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 100ஐத் தாண்டினால், குழுவிற்கு பிரீமியத்திலிருந்து தள்ளுபடி அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும் 25 நபர்கள் போல குழுவின் எண்ணிக்கை குறைவாக,

இருக்கும் போதும், குழு பாலிசி வழங்கப்படலாம், ஆனால் எந்த தள்ளுபடியும் கிடைக்காது.

## குழு தள்ளுபடி அளவுகோல்கள்

பெயரிடப்பட்ட குழுக்களுக்கு மட்டுமே குழு பாலிசிகள் வழங்கப்பட வேண்டும். குழு தள்ளுபடி மற்றும் பிற நன்மைகளைப் பெறுவதற்கான நோக்கத்திற்காக, முன்மொழியப்பட்ட "குழு" கீழே கொடுக்கப்பட்டுள்ள பின்வரும் வகைகளில் ஒன்றின் கீழ் தெளிவாக வர வேண்டும்:

- முதலாளி - பணியாளர் உறவு இதில் பணியாளரை சார்ந்த வாழ்பவர்களும் உண்டு
- பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்கள்
- பதிவுசெய்யப்பட்ட சேவைக் கழகங்களின் உறுப்பினர்கள்
- வங்கிகள்/ டைனர்ஸ்/ மாஸ்டர்/ விசாவின் கிரெடிட் கார்டு வைத்திருப்பவர்கள்

மேற்கூறிய வகைகளிலிருந்து வேறுபட்ட வேறு ஏதேனும் வகை தொடர்பான முன்மொழிவுகள் இருந்தால், அவை சம்பந்தப்பட்ட காப்பீட்டாளர்களின் தொழில்நுட்பத் துறை மூலம் ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்படலாம்.

## பிரீமியம்

அபாயங்களின் வகைப்பாடு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நன்மைகளின் படி பெயரிடப்பட்ட ஊழியர்களுக்கு மாறுபட்ட பிரீமியம் விகிதங்கள் பொருந்தும்.

## ஆன்-டூட்டி அதாவது கடமை நேர காப்பு

தனிநபர் விபத்து பாலிசிகள் கடமை நேரம் மற்றும் கடமையில் இல்லாத நேரம் அல்லது தனித்தனியாக இரண்டிற்கும் ஒரு காப்பு இருக்கலாம். பிரீமியமானது காப்பீட்டுத் தொகை, பணி நேரத்தின் அளவு போன்றவற்றைப் பொறுத்தது. சில முதலாளிகள் கடமை நேரத்திற்கு மட்டும் காப்பளிக்கிற மாதிரி கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பலாம்.

## இறப்பு காப்பு விலக்கு

தனிப்பட்ட நிறுவன வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு, இறப்பு நன்மையைத் தவிர்த்து குழு தனிநபர் விபத்து பாலிசிகள் வழங்கப்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

## குழு தள்ளுபடி மற்றும் போனஸ்/ மாலஸ்

குழு பாலிசிகளின் புதுப்பித்தல் சமயத்தில் மதிப்பீடானது, ஈடுக்கோரல் அனுபவத்தைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.

- புதுப்பித்தல் பிரீமியத்தில் (போனஸ்) தள்ளுபடியுடன் சாதகமான அனுபவத்தைப் பெறலாம்
- ஒரு அளவின்படி, புதுப்பித்தல் பிரீமியத்தை (மாலஸ்) ஏற்றுவதன் மூலம் பாதகமான அனுபவம் தண்டிக்கப்படுகிறது
- ஈடுக்கோரல் அனுபவம் 70 சதவீதமாக இருந்தால், புதுப்பித்தலுக்கு சாதாரண கட்டணங்கள் பொருந்தும்

**சுய-பரீட்சை 5**

1) ஒரு குழு உடல்நலக் காப்பீட்டில், குழுவை அமைக்கும் எந்தவொரு தனிநபரும் காப்பீட்டாளருக்கு எதிராகத் தேர்வு செய்யலாம்.
2) குழு உடல்நலக் காப்பீடு, முதலாளி-பணியாளர் குழுக்களுக்கு மட்டுமே காப்பு அளிக்கிறது.

I. அறிக்கை 1 உண்மையானது மற்றும் அறிக்கை 2 தவறானது
II. அறிக்கை 2 உண்மையானது மற்றும் அறிக்கை 1 தவறானது
III. அறிக்கை 1 மற்றும் அறிக்கை 2 உண்மையானவை
IV. அறிக்கை 1 மற்றும் அறிக்கை 2 தவறானவை.

**சுய-பரீட்சைக்கான பதில்கள்**

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் III.
**பதில் 2** - சரியான பதில் விருப்பம் I.
**பதில் 3** - சரியான பதில் விருப்பம் III.
**பதில் 4** - சரியான பதில் விருப்பம் IV.
**பதில் 5** - சரியான பதில் விருப்பம் IV.

# அத்தியாயம் H-05

# உடல்நலக் காப்பீட்டின் ஈடுக்கோரல்கள்

**அத்தியாய அறிமுகம்**

இந்த அத்தியாயத்தில் உடல்நலக் காப்பீடில் ஈடுக்கோரல் மேலாண்மை செயல்முறை, ஈடுக்கோரல்கள் தொடர்பான நடைமுறைகள் மற்றும் ஆவணங்களை பற்றி விவாதிப்போம். இது தவிர, தனிநபர் விபத்துக் காப்பீட்டின் கீழ் ஈடுக்கோரல் மேலாண்மையை பார்ப்போம் மற்றும் மூன்றாம் தரப்பு நிர்வாகிகளின் (TPA) பங்கைப் புரிந்துகொள்வோம்.

**கற்பதற்கான குறிக்கோள்கள்**

A. காப்பீட்டில் ஈடுக்கோரல் மேலாண்மை
B. உடல்நலக் காப்பீட்டு ஈடுக்கோரல்களின் மேலாண்மை
C. உடல்நலக் காப்பீடில் ஈடுக்கோரல்களில் ஆவணங்கள்
D. மூன்றாம் தரப்பு நிர்வாகிகளின் பங்கு (TPA)
E. ஈடுக்கோரல் மேலாண்மை - தனிநபர் விபத்து
F. ஈடுக்கோரல் மேலாண்மை- வெளிநாட்டு பயணக் காப்பீடு

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:

a) காப்பீடு ஈடுக்கோரல்களில் உள்ள பல்வேறு பங்குதாரர்களை விளக்க முடியும்
b) உடல்நலக் காப்பீட்டு ஈடுக்கோரல்கள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன என்பதை விவரிக்க முடியும்
c) உடல்நலக் காப்பீட்டு ஈடுக்கோரல்களை தீர்ப்பதற்குத் தேவையான பல்வேறு ஆவணங்களைப் பற்றி விவாதிக்க முடியும்
d) காப்பீட்டாளர்களால் ஈடுக்கோரல்களுக்காகவே நிதியை இருப்பில் வைத்தலை பற்றி விளக்க முடியும்.
e) தனிப்பட்ட விபத்து ஈடுக்கோரல்களைப் பற்றி விவாதிக்க முடியும்
f) TPA களின் கருத்து மற்றும் பங்கைப் புரிந்து கொள்ள முடியும்

## A. காப்பீட்டில் ஈடுக்கோரல் மேலாண்மை

காப்பீடு என்பது ஒரு ‘வாக்குறுதி’ என்பதும், பாலிசி அந்த வாக்குறுதிக்கு ‘சாட்சி’ என்பதும் நன்றாகவே புரிகிறது. பாலிசியின் கீழ் ஈடுக்கோரலுக்கு வழிவகுக்கும் காப்பீடு செய்யப்பட்ட நிகழ்வு அந்த வாக்குறுதியின் உண்மையான சோதனையாகும். ஒரு காப்பீட்டாளர் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறார் என்பது அவர்கள் ஈடுக்கோரல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் சிறப்பான விதம் மூலம் மதிப்பிடப்படுகிறது. காப்பீட்டின் முக்கிய மதிப்பீடு காரணிகளில் ஒன்று காப்பீட்டு நிறுவனத்தின் ஈடுக்கோரல்களை செலுத்தும் திறன் ஆகும்.

### 1. ஈடுக்கோரல் செயல்பாட்டில் பங்குதாரர்கள்

ஈடுக்கோரல்கள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன என்பதைப் பார்ப்பதற்கு முன், ஈடுக்கோரல் செயல்முறையில் ஈடுபடும் தரப்பினரைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வரைப்படம் 1: **ஈடுக்கோரல் செயல்பாட்டில் பங்குதாரர்கள்**




| | |
|---|---|
| வாடிக்கையாளர் | காப்பீட்டை வாங்கும் நபர் முதல் பங்குதாரராகவும், ‘ஈடுக்கோரலைப் பெறுபவராகவும் இருக்கிறார். |

| | |
|---|---|
| உரிமையாளர்கள் | 'ஈடுக்கோரல்களை செலுத்துபவர்களாக' காப்பீட்டு நிறுவன உரிமையாளர்களுக்கு பெரும் பங்கு உள்ளது. பாலிசிதாரர்களின் நிதியில் இருந்து ஈடுக்கோரல்கள் நிறைவேற்றப்பட்டாலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. |
| ஏற்பாளர்கள் | காப்பீட்டு நிறுவனத்திற்குள் உள்ள மற்றும் அனைத்து காப்பீட்டாளர்களிடமும் உள்ள ஏற்பாளர்கள், ஈடுக்கோரல்களைப் பற்றி முன்கூட்டியே புரிந்துகொண்டு தயாரிப்புகளை வடிவமைத்தல், பாலிசி விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் விலை நிர்ணயம் போன்றவற்றை தீர்மானிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். |
| ரெகுலேட்டர் | ரெகுலேட்டர் (இந்தியாவின் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்) பின்வரும் நோக்கத்தை அடைவதில் முக்கிய பங்குதாரராக உள்ளது<br>✓ காப்பீட்டு சூழலில் ஒழுங்கை பராமரிப்பது<br>✓ பாலிசிதாரர்களின் நலன்களைப் பாதுகாத்தல்<br>✓ காப்பீட்டாளர்களின் நீண்ட கால நிதி ஆரோக்கியத்தை உறுதி செய்தல். |
| மூன்றாம் தரப்பு நிர்வாகிகள் | மூன்றாம் தரப்பு நிர்வாகிகள் என்று அழைக்கப்படும் சேவை இடைத்தரகர்கள், உடல்நலக் காப்பீட்டு ஈடுக்கோரல்களை செயல்படுத்துகிறார்கள். |

| | |
|---|---|
| காப்பீட்டு முகவர்கள்/ தரகர்கள் | காப்பீட்டு முகவர்கள்/தரகர்கள் பாலிசிகளை விற்பது மட்டுமல்லாமல், ஈடுக்கோரல் ஏற்படும் வழக்கில் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| வழங்குநர்கள்/மருத்துவ மனைகள் | குறிப்பாக TPA பேனலில் மருத்துவமனை சேர்க்கைக்கான ரொக்கமில்லா சிகிச்சையை வழங்கும் போது வாடிக்கையாளர் சுமூகமான ஈடுக்கோரல் அனுபவத்தைப் பெறுவதை அவர்கள் உறுதி செய்கிறார்கள், |

இவ்வாறு ஈடுக்கோரல்களை நன்கு நிர்வகிப்பது என்பது ஈடுக்கோரல்களுடன் தொடர்புடைய இந்த பங்குதாரர்கள் ஒவ்வொருவரின் நோக்கங்களையும் நிர்வகிப்பதைக் குறிக்கிறது. நிச்சயமாக, இந்த நோக்கங்களில் சில ஒன்றுக்கொன்று முரண்படலாம்.

**இருப்பில் வைத்தல்**: பல சந்தர்ப்பங்களில், கூடுதல் தகவல் அல்லது சர்ச்சைகள், வழக்குகள் போன்றவற்றின் முடிவுகளுக்காகக் காத்திருப்பதால், காப்பீட்டு நிறுவனங்களால் ஈடுக்கோரல்களை உடனடியாகத் தீர்க்க முடியாமல் போகலாம். அதனால், பணம் செலுத்தும் வரை அவர்கள் ஈடுக்கோரல் தொகைகளை இருப்பில் வைத்திருக்க வேண்டும். இருப்புக்கள் பொதுவாக நிலுவையில் உள்ள ஈடுக்கோரல்களில் செலுத்தப்படவேண்டிய தொகைகளை பற்றி காப்பீட்டு நிபுணர் செய்த மதிப்பீடுகளாகும்.

இருப்பில் வைத்தல் என்பது ஈடுக்கோரல்களின் நிலையின் அடிப்படையில் காப்பீட்டாளரின் புத்தகங்களில் அனைத்து ஈடுக்கோரல்களை செலுத்துவதற்காகவே ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையைக் குறிக்கிறது.

**சுய-பரீட்சை** 1

கீழ்க்கண்டவர்களில் யார் உடல்நலக் காப்பீடின் ஈடுக்கோரல் செயல்பாட்டில் பங்குதாரராக இல்லை?

I. வாடிக்கையாளர்கள்

II. காவல்துறை

III. ரெகுலேட்டர்

IV. TPA

---

## B. உடல்நலக் காப்பீட்டு ஈடுக்கோரல்களின் மேலாண்மை

### 1. உடல்நலக் காப்பீட்டில் ஈடுக்கோரல் செயல்முறை

காப்பீட்டு நிறுவனத்தால் அல்லது காப்பீட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு நிர்வாகியின் (TPA) சேவைகள் மூலமாக ஈடுக்கோரல் சேவை வழங்கப்படலாம்.


காப்பீட்டாளர்/ TPAக்கு ஒரு ஈடுக்கோரல் தெரியப்படுத்தப்பட்டது முதல் பாலிசி விதிமுறைகளின்படி பணம் செலுத்தப்படும் வரை பின்பற்றப்படும் உடல்நல ஈடுக்கோரலில் நன்கு வரையறுக்கப்பட்டுள்ள படிகளில், ஒவ்வொரு படியும் உசிதமானதாக இருக்கும்.

கீழே விவரிக்கப்பட்டுள்ள செயல்முறைகள், உடல்நலக் காப்பீடு வணிகத்தின் முக்கியப் பகுதியாக உள்ள உடல்நலக் காப்பீட்டு (மருத்துவமனை சேர்க்கை) இழப்பீட்டுத் தயாரிப்புகளை பற்றி குறிப்பாக தெரிவிக்கின்றன.

நிலையான நன்மை தயாரிப்பு அல்லது தீவிர நோய் அல்லது தினசரி ரொக்க நன்மையை வழங்கும் தயாரிப்புகள் போன்றவற்றின் கீழ் உள்ள ஈடுக்கோரலுக்கான பொதுவான செயல்முறை மற்றும் துணை ஆவணங்களும், இதனுடன் கிட்டத்தட்ட ஒத்ததாக இருக்கும். ஒரே வித்தியாசம் அத்தகைய தயாரிப்புகள் ரொக்கமில்லா வசதியுடன் வராமல் இருக்கலாம்.

இழப்பீடு வழங்குவது மற்றும் திருப்பிச் செலுத்தும் வகையிலான இரண்டு நிகழ்வுகளிலும், அடிப்படை படிகள் ஒரே மாதிரியாக இருக்கும்

**வரைப்படம்** 2: ஈடுக்கோரல் செயல்முறை பரந்த அளவில் பின்வரும் படிகளை உள்ளடக்கியது (அதே வரிசையில் இல்லாமல் இருக்கலாம்)




### a) தெரிவித்தல்

ஈடுக்கோரலை பற்றி தெரிவித்தல் தான் ஈடுக்கோரல் குழுவிற்கும் வாடிக்கையாளருக்கும் இடையே உள்ள தொடர்பின் முதல் படி. வாடிக்கையாளர் மருத்துவமனை சேர்க்கையை திட்டமிட்டுள்ளதாக

நிறுவனத்திற்குத் தெரிவிக்கலாம் அல்லது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு, குறிப்பாக அவசரநிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போது தகவலை தெரிவிக்கலாம்.

சமீப காலம் வரை, ஈடுக்கோரல் நிகழ்வை தெரிவித்தல் முறைப்படி செய்யவேண்டிய விஷயமாக இருந்தது. இருப்பினும், சமீபகாலமாக காப்பீட்டாளர்கள் ஈடுக்கோரல் பற்றி முடிந்தவரை விரைவில் தெரிவிப்பதை வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர். பொதுவாக, திட்டமிடப்பட்ட மருத்துவமனை சேர்க்கையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பே, மற்றும் அவசரநிலைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் இதை செய்ய தேவைப்படுகிறது. 24 மணிநேரமும் திறந்திருக்கும் மொபைல் ஆப்ஸ்/ கால் சென்டர்கள்/ காப்பீட்டாளர்களால் நடத்தப்படும் அழைப்பு மையங்கள் மூலமாகவும், இணையம் மற்றும் மின்னஞ்சல் மூலமாகவும் இந்த தகவலை தெரிவிக்கலாம்.

**b) பதிவு**

நிறுவனத்திற்கு நேரடியாகவோ அல்லது TPA மூலமாகவோ தெரிவிக்கப்பட்ட தகவல் கிடைத்ததும், அதன் விவரங்கள் துல்லியமாக இருக்கிறதா என்று சரிப்பார்க்கப்படுகிறது, மற்றும் குறிப்பு எண் அல்லது ஈடுக்கோரல் கன்ட்ரோல் எண் உருவாக்கப்பட்டு, ஈடுக்கோருபவருக்கு தெரிவிக்கப்படும். ஆவணங்கள் முதல் பார்வையில் காப்பளிக்கப்பட்ட விஷயத்துடன் சம்பந்தப்பட்டதா என்று ஆராயப்பட்டு, அது ரொக்கமில்லா வசதியின் கீழ் (அடுத்த பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது) திட்டமிடப்பட்ட அறுவை சிகிச்சைக்கான தெரிவித்தலாக இருந்தால், சாத்தியமான செலவினங்களுக்கான முன் அங்கீகாரம் மருத்துவமனைக்கு வழங்கப்படுகிறது.

திருப்பிச் செலுத்துதல் அடிப்படையில் இறுதித் தீர்வுக்கு வரும் ஈடுக்கோரல்களில் அனுமதிக்கப்பட்டதா என்பதும், காப்பீட்டுத் தொகை, கழிவுகள், துணை வரம்புகள் போன்றவற்றைப் பற்றி விரிவாக ஆராயப்படுகின்றன. ஆவணங்களில் குறைபாடு இருந்தால், அவற்றை ஒவ்வொன்றாக தெரிவிக்காமல் சேர்ந்து தெரிவிக்க

வேண்டும். ஒப்பந்தத்தின் விதிமுறைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல், ஈடுக்கோரல் செயலாக்கத்தில் அதிக கட்டணம் வசூலிப்பது, இரு மடங்கு கட்டணம் வசூலிப்பது போன்றவற்றில் மருத்துவமனைகள் ஈடுபடாமல் இருப்பதும் உறுதி செய்யப்படுகிறது.

**எடுத்துக்காட்டு**

மருத்துவமனை சேர்க்கை பொதுவாக அலோபதி சிகிச்சை முறையுடன் தொடர்புடையது. இருப்பினும், நோயாளி மற்ற சிகிச்சை முறைகளை மேற்கொள்ளலாம்:

- ✓ யுனானி
- ✓ சித்தா
- ✓ ஹோமியோபதி
- ✓ ஆயுர்வேதம்
- ✓ இயற்கை மருத்துவம் அதாவது நேச்சுரோபதி போன்றவை.

இப்போது பெரும்பாலான பாலிசிகளில் இந்த சிகிச்சைகள் சேர்க்கப்பட்டுள்ளன, இருப்பினும் துணை வரம்புகள் இருக்கலாம்.

---

**டெலிமெடிசின்**: மருத்துவக் காப்பீட்டு பாலிசிகளின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில், வழக்கமான மருத்துவ ஆலோசனை அனுமதிக்கப்படும் இடங்களில் டெலிமெடிசினை அதாவது தொலைபேசி வாயிலாக ஆலோசித்து பெறும் சிகிச்சையை அனுமதிக்குமாறு ஐஆர்டிஏஐ காப்பீட்டாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

ஆன்லைனில் அல்லது தொலைபேசி மூலம் மருத்துவர்களை அணுக விரும்பும் பாலிசிதாரர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே செல்வதைத் தவிர்க்க அல்லது கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொண்ட நிலைமைகளில் இது உதவும்.

**செலுத்த வேண்டிய இறுதி ஈடுக்கோரல் தொகையை கணக்கிடுவது**: செலுத்த வேண்டிய ஈடுக்கோரல் தொகையை தீர்மானிக்கும் காரணிகள்:

a) பாலிசியின் கீழ் உறுப்பினருக்குக் கிடைக்கும் காப்பீட்டுத் தொகை

b) ஏற்கனவே செய்யப்பட்ட எந்தவொரு ஈடுக்கோரலையும் கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகு, உறுப்பினருக்கு பாலிசியின் கீழ் கிடைக்கின்ற இருப்புத் தொகை:

c) துணை வரம்புகள்

d) நோய்க்காக குறிப்பிடப்பட்ட வரம்புகளை சரிபார்க்கவும்

e) ஒட்டுமொத்த போனஸுக்கு உரிமை உள்ளதா இல்லையா என்பதைச் சரிபார்க்கவும்

f) வரம்புடன் கூடிய பிற செலவுகள்:

இறுதியாகச் செலுத்தப்படுவது நியாயமான மற்றும் வழக்கமான கட்டணங்கள் ஆகும், அதாவது சேவைகள் அல்லது விநியோகங்களுக்கான கட்டணங்கள், அவை குறிப்பிட்ட வழங்குனருக்கான நிலையான கட்டணங்கள் மற்றும் நோய்/காயத்தின் இயல்புடன் சம்பந்தப்பட்ட ஒரே மாதிரியான அல்லது ஒத்த சேவைகளுக்காக புவியியல் பகுதியில் நடப்பில் உள்ள கட்டணங்களுடன் ஒத்துப்போகும்.

முன்னதாக ஒவ்வொரு TPA/ காப்பீட்டாளரும் அனுமதிக்க முடியாத பொருட்களின் பட்டியலை தனித்தனியாக கொண்டிருந்தனர், இப்போது அது ஐஆர்டிஏஐ உடல்நலக் காப்பீட்டுத் தரநிலைப்படுத்தல் வழிகாட்டுதல்களின் கீழ் தரப்படுத்தப்பட்டுள்ளது.

**c) ஈடுக்கோரலை செலுத்துதல்**

செலுத்த வேண்டிய ஈடுக்கோரல் தொகை கணக்கிடப்பட்டவுடன், வழக்கிற்கு ஏற்ப, அது வாடிக்கையாளர் அல்லது மருத்துவமனைக்குச் செலுத்தப்படும். காசோலை மூலமாகவோ அல்லது ஈடுக்கோரல் பணத்தை வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கிற்கு மாற்றுவதன் மூலமாகவோ பணம் செலுத்தப்படலாம்.

**d) ஈடுக்கோரலை மறுத்தல்**

10% முதல் 15% வரையிலான ஈடுக்கோரல்கள் பாலிசியின் விதிமுறைகளுக்குள் வராததை உடல்நல ஈடுக்கோரல்களின் அனுபவம் காட்டுகிறது. இது பல்வேறு காரணங்களால் இருக்கலாம், அவற்றில் சில:

i. சேர்க்கை தேதி காப்பீட்டு காலத்திற்குள் இல்லை.

ii. எவருக்காக ஈடுக்கோரல் செய்யப்படுகிறதோ, அந்த உறுப்பினர் காப்பீட்டின் கீழ் இல்லை.

iii. முன்னரே இருக்கும் நோய் காரணமாக (பாலிசி அத்தகைய நிலையை விலக்கிவிட்ட இடத்தில்).

iv. சரியான காரணமின்றி சமர்ப்பிப்பதில் தேவையற்ற தாமதம்.

v. மருத்துவமனை சேர்க்கை சிகிச்சைக்காக இல்லை; நோயறிதல் (Diagnosis) நோக்கத்திற்காக மட்டுமே உள்ளது.

vi. பாலிசியின் கீழ் சிகிச்சை அளிக்கப்பட்ட நோய் விலக்கப்பட்டுள்ளது.

vii. நோய்க்கான காரணம் மது அல்லது போதைப்பொருள் துஷ்பிரயோகம் ஆகும்

viii. மருத்துவமனை சேர்க்கை 24 மணி நேரத்திற்கும் குறைவாக உள்ளது.

காப்பீட்டு நிறுவனம் ஒரு ஈடுக்கோரலை மறுப்பது அல்லது நிராகரிப்பதை (எந்த காரணமாக இருந்தாலும்) பற்றி வாடிக்கையாளருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும். வழக்கமாக, எந்த பாலிசி விதி / நிபந்தனை காரணமாக ஈடுக்கோரல் நிராகரிக்கப்பட்டது என்பதை அத்தகைய மறுப்பு கடிதத்தில் தெளிவாக விவரித்து குறிப்பிட வேண்டும்.

காப்பீட்டாளரிடம் பிரதிநிதித்துவம் செய்வதை தவிர, ஈடுக்கோரல் மறுக்கப்பட்டால், வாடிக்கையாளருக்கு பின்வருவனவற்றை அணுகுவதற்கான விருப்பம் உள்ளது:

- ✓ காப்பீட்டு குறைதீர்ப்பாளர் அல்லது
- ✓ நுகர்வோர் கமிஷன்கள் அல்லது
- ✓ ஐஆர்டிஏஐ அல்லது
- ✓ சட்ட நீதிமன்றங்கள்.

**e) சந்தேகத்திற்கிடமான ஈடுக்கோரல்களுக்கு நிறுவனங்கள்/TPA கள் மூலம் விரிவான விசாரணை தேவைப்படுகிறது**

காப்பீட்டு நிறுவனம் எங்கெல்லாம் முறைகேடுகள் இருப்பதாக சந்தேகிக்கிறதோ அங்கெல்லாம் ஈடுக்கோரல்களை விசாரணை செய்யலாம். உடல்நலக் காப்பீட்டில் செய்யப்படும் மோசடிகளின் சில எடுத்துக்காட்டுகள்:

i. ஆள்மாறாட்டம், அதாவது காப்பீடு செய்யப்பட்ட நபரும் சிகிச்சை பெற்றவரும் வெவ்வேறு.

ii. மருத்துவமனை சேர்க்கையே இல்லாத இடத்தில் ஈடுக்கோரல் ஆவணங்களைத் தயாரித்தல்.

iii. செலவுகளை அதிகப்படுத்தி காட்டுதல், மருத்துவமனையின் உதவியுடன் அல்லது மோசடியாக உருவாக்கப்பட்ட வெளிப்புற பில்களைச் சேர்ப்பதன் மூலம்.

iv. வெளிநோயாளி சிகிச்சையானது நோயறிதலுக்கான செலவை ஈடுகட்ட உள்நோயாளி/மருத்துவமனை சேர்க்கை செலவாக மாற்றப்பட்டது, இது சில நிலைகளில் பெரிய தொகையாகவும் இருக்கலாம்.

விசாரிக்கப்பட வேண்டிய ஈடுக்கோரல்கள் தொடர்பாக, விசாரணைகள் விரைவில் தொடங்கப்பட்டு முடிக்கப்பட வேண்டும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஈடுக்கோரல் அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்கு மேல் தாமதம் கூடாது என்பது கவனிக்கத்தக்கது. விசாரணை முடிந்த 30 நாட்களுக்குள் ஈடுக்கோரலை தீர்க்க வேண்டும். (**ஐஆர்டிஏஐ** (பாலிசிதாரரின் நலன்களின் பாதுகாப்பு), 2017 விதிமுறைகளை மற்றும் புதுப்பிக்கப்பட்டதையும் பார்க்கவும்)

**f) TPA மூலம் ரொக்கமில்லா தீர்வு செயல்முறை**

ரொக்கமில்லா வசதி எவ்வாறு செயல்படுகிறது? இதன் மையத்தில் இருப்பது TPA காப்பீட்டாளர், மருத்துவமனையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தம் ஆகும். மற்ற மருத்துவ சேவை வழங்குநர்களுடனும் ஒப்பந்தங்களை செய்வதும் சாத்தியம். ரொக்கமில்லா வசதியை

வழங்க பயன்படுத்தப்படும் செயல்முறை இந்த பிரிவில் விவாதிக்கப்படுகிறது:

அட்டவணை 3.1

| | |
|---|---|
| படி 1 | • உடல்நலக் காப்பீட்டின் கீழ் உள்ள வாடிக்கையாளர் நோய் காரணமாக அல்லது காயம் பட்டதால் மருத்துவமனையில் அனுமதிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. அவர் (அல்லது அவர் சார்பாக யாராவது) பின்வரும் காப்பீட்டு விவரங்களுடன் மருத்துவமனையின் காப்பீட்டு பிரிவை அணுகுகிறார்:<br>i. TPA பெயர்,<br>ii. வாடிக்கையாளரின் உறுப்பினர் எண்,<br>iii. காப்பீட்டாளரின் பெயர், முதலியன. |
| படி 2 | • மருத்துவமனை இது போன்ற தேவையான தகவல்களை தொகுக்கிறது:<br>i. நோய் கண்டறிதல்<br>ii. சிகிச்சை,<br>iii. சிகிச்சை அளிக்கும் மருத்துவரின் பெயர்,<br>iv. திட்டமிடப்பட்ட மருத்துவமனை சேர்க்கை நாட்களின் எண்ணிக்கை மற்றும்<br>v. கணக்கிடப்பட்ட செலவு<br>• இது ரொக்கமில்லா அங்கீகாரப் படிவம் எனப்படும் வடிவத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. |
| படி 3 | • TPA ஆனது *ரொக்கமில்லா அங்கீகாரப் படிவத்தில்* சமர்ப்பிக்கப்பட்ட தகவலைப் படித்து, ரொக்கமில்லா அங்கீகாரத்தை வழங்க முடியுமா மற்றும் அப்படி வழங்க முடிந்தால், அது எவ்வளவு தொகைக்கு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது குறித்து முடிவெடுத்து, தாமதமின்றி அது மருத்துவமனைக்குத் தெரிவிக்கப்படுகிறது. |
| படி 4 | • நோயாளியின் கணக்கில் வரவாக TPA ஆல் அங்கீகரிக்கப்பட்ட தொகையை வைத்து நோயாளிக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிகிச்சைக்காக இல்லாத செலவுகள் மற்றும் பாலிசியின் |

| | |
|---|---|
| | கீழ் தேவைப்படும் எந்த இணை-செலுத்தலையும் ஈடுகட்டும் வைப்புத்தொகையை செலுத்த உறுப்பினர் அழைக்கப்படலாம். |
| படி 5 | • நோயாளி டிஸ்சார்ஜ் செய்யப்பட தயாராக இருக்கும் போது, காப்பீட்டில் காப்பளிக்கப்பட்ட உண்மையான சிகிச்சைக் கட்டணங்களுக்கு எதிராக TPA ஆல் அங்கீகரிக்கப்பட்டு நோயாளியின் கணக்கில் வந்த வரவுத் தொகையை மருத்துவமனை சரிபார்க்கிறது.<br>• வரவு குறைவாக இருந்தால், ரொக்கமில்லா சிகிச்சைக்கான கூடுதல் அனுமதியை மருத்துவமனை கோருகிறது.<br>• TPA அதை பகுப்பாய்வு செய்து கூடுதல் தொகையை அங்கீகரிக்கிறது. |
| படி 6 | • காப்பீட்டில் அனுமதிக்காத கட்டணங்களைச் செலுத்திய பிறகு நோயாளி டிஸ்சார்ஜ் செய்யப்படுகிறார். ஆவணமாக்கலை பூர்த்தி செய்ய, ஈடுக்கோரல் படிவத்திலும் பில்லிலும் கையெழுத்திடும்படி அவரிடம் கேட்கப்படும். |
| படி 7 | • மருத்துவமனை அனைத்து ஆவணங்களையும் ஒருங்கிணைத்து, பில்லை செயலாக்குவதற்கான ஆவணங்களை TPA இடம் சமர்ப்பிக்கிறது |
| படி 8 | • TPA ஈடுக்கோரலைச் செயல்படுத்தி, விவரங்களைச் சரிபார்த்த பிறகு மருத்துவமனைக்குப் பணம் செலுத்துமாறு பரிந்துரைக்கும். |

**g) வாடிக்கையாளர் தனது காப்பீட்டு விவரங்களை தன்னிடம் வைத்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.**

இதில் அவரது TPA கார்டு, பாலிசி நகல், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் போன்றவை அடங்கும்.

இவை கிடைக்காதபோது, அவர் TPA-ஐ (24 மணிநேர ஹெல்ப்லைன் மூலம்) தொடர்பு கொண்டு விவரங்களை கோரலாம்.

i. வாடிக்கையாளருக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட மருத்துவமனை TPA நெட்வொர்க்கில் உள்ளதா என்பதை பார்க்க வேண்டும். இல்லையெனில், ரொக்கமில்லா வசதியுடன் அத்தகைய சிகிச்சை கிடைக்கின்ற இடங்களை பற்றி அவர் TPA இடம் கேட்க வேண்டும்.

ii. முன் அங்கீகாரப் படிவத்தில் சரியான விவரங்கள் உள்ளிடப்பட்டுள்ளதா என்பதை அவர் உறுதி செய்ய வேண்டும். 2013 இல் வெளியிடப்பட்ட உடல்நலக் காப்பீட்டில் தரப்படுத்தல் குறித்த வழிகாட்டுதல்களின்படி இந்தப் படிவம் ஐஆர்டிஏஐ ஆல் தரப்படுத்தப்பட்டுள்ளது. வழக்கு தெளிவாக இல்லை என்றால், TPA ரொக்கமில்லா வசதியை மறுக்கலாம் அல்லது கேள்விகளை எழுப்பலாம்.

iii. அவர் மருத்துவமனைக் கட்டணங்களில் அறை வாடகை அல்லது கண்புரை போன்ற குறிப்பிட்ட சிகிச்சைகளுக்காக குறிப்பிடப்பட்ட தொகை உச்சவரம்புகளுக்கு இசைவாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

iv. டிஸ்சார்ஜ் செய்யப்படுவதைப் பற்றி வாடிக்கையாளர் TPA க்கு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும் மற்றும் டிஸ்சார்ஜ் செய்வதற்கு முன் தேவைப்படும் கூடுதல் அனுமதியை TPA க்கு அனுப்புமாறு மருத்துவமனையிடம் கோர வேண்டும். இது நோயாளி மருத்துவமனையில் தேவையில்லாமல் காத்திருக்காமல் இருப்பதை உறுதி செய்யும்.

வாடிக்கையாளர் ஒரு மருத்துவமனையில் ரொக்கமில்லா சிகிச்சையை பெறுவதாக கோரி மற்றும் ஒப்புதல் பெற்ற பிறகு, நோயாளியை வேறு இடத்தில் அனுமதிக்க முடிவு செய்யலாம். இதுபோன்ற சமயங்களில், ரொக்கமில்லா ஒப்புதலை பயன்படுத்தாததை பற்றி TPA க்கு தெரிவிக்குமாறு மருத்துவமனையிடம் வாடிக்கையாளர் கூற வேண்டும்.

இதைச் செய்யாவிட்டால், அங்கீகரிக்கப்பட்ட தொகை வாடிக்கையாளரின் பாலிசியில் தடுத்து வைக்கப்படலாம், மற்றும் அடுத்த கோரிக்கைக்கான ஒப்புதலைப் பெறும்போது பாதிக்கலாம்.

## C. உடல்நலக் காப்பீட்டு ஈடுக்கோரல்களில் உள்ள ஆவணங்கள்

வாடிக்கையாளர்கள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் ஒவ்வொன்றின் தேவையையும் உள்ளடக்கத்தையும் இந்தப் பிரிவு விளக்குகிறது:

### 1. **வெளியேற்றல் சுருக்கம்** (Discharge summary)

வெளியேற்றல் அதாவது டிஸ்சார்ஜ் சுருக்கம் ஒரு உடல்நலக் காப்பீட்டு ஈடுக்கோரலை செயல்படுத்த தேவையான மிக முக்கியமான ஆவணமாக குறிப்பிடப்படுகிறது. இது நோயாளியின் நிலை மற்றும் சிகிச்சை வகை பற்றிய முழுமையான தகவலை விவரிக்கிறது மற்றும் ஈடுக்கோரலை செயலாக்கும் நபருக்கு நோய்/காயம் மற்றும் சிகிச்சை வகையை புரிந்துகொள்ள பெரிதும் உதவுகிறது. நோயாளி துரதிர்ஷ்டவசமாக உயிர் பிழைக்கவில்லை என்றால், பல மருத்துவமனைகளில் வழங்கப்படும் வெளியேற்றல் சுருக்கமானது மரண சுருக்கம் என்று அழைக்கப்படுகிறது. வெளியேற்றல் சுருக்கம் எப்போதும் அசலில் கோரப்படுகிறது.

### 2. **ஆய்வு அறிக்கைகள்**

ஆய்வு அறிக்கைகள் நோயறிதலையும் சிகிச்சையையும் ஒப்பிட்டுப் பார்க்க உதவுகின்றன, இது சிகிச்சையைத் தூண்டிய சரியான நிலையை மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது ஏற்பட்ட முன்னேற்றம் ஆகியவற்றை புரிந்துகொள்வதற்குத் தேவையான தகவல்களை வழங்குகிறது எ.கா. இரத்த பரிசோதனை அறிக்கைகள், எக்ஸ்ரே அறிக்கைகள் மற்றும் பயாப்ஸி அறிக்கைகள். குறிப்பிட்ட கோரிக்கையின் பேரில், காப்பீட்டாளர் எக்ஸ்ரே மற்றும் பிற ஃபிலிம்களை வாடிக்கையாளரிடம் திருப்பித் தரலாம்.

### 3. **ஒருங்கிணைந்த மற்றும் விரிவான பில்கள்:**

காப்பீட்டு பாலிசியின் கீழ் எதை எல்லாம் செலுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் ஆவணம் இதுவாகும். ஒருங்கிணைக்கப்பட்ட பில் ஒட்டுமொத்த கணக்கை முன்வைக்கிறது, மற்றும் விரிவான பில் குறிப்பு குறியீடுகளுடன் அதில் உள்ள தொகையை கூறு கூறாக விளக்குகிறது. பில்கள் அசலில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**4. பணம் செலுத்துவதற்கான ரசீது**

உடல்நலக் காப்பீட்டு ஈடுக்கோரலில் பணத்தை திருப்பிச் வழங்குவதற்கு, செலுத்தப்பட்ட தொகைக்கு மருத்துவமனை வழங்கிய முறையான ரசீது தேவைப்படும், இது மொத்த பில்லுடன் ஒத்திருக்க வேண்டும்.

ரசீது எண்ணிடப்பட்டு அல்லது முத்திரையிடப்பட்டு அசலில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**5. ஈடுக்கோரல் படிவம்**

ஈடுக்கோரல் படிவம் என்பது ஈடுக்கோரலைச் செயலாக்குவதற்கான முறையான மற்றும் சட்டபூர்வமான கோரிக்கையாகும், மேலும் இது வாடிக்கையாளரால் கையொப்பமிடப்பட்ட அசல் வடிவத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. ஈடுக்கோரல் படிவம் இப்போது ஐஆர்டிஏஐ ஆல் தரப்படுத்தப்பட்டுள்ளது.

நோய், சிகிச்சை போன்றவற்றைப் பற்றிய தகவல்களைத் தவிர, காப்பீடு செய்யப்பட்ட நபர் ஈடுக்கோரல் படிவத்தில் செய்யும் பிரகடனம் சட்டப்பூர்வ அர்த்தத்தில் மிக முக்கியமான ஆவணமாகும்.

**6. அடையாளச் சான்று**

நம் வாழ்வில் பல்வேறு செயல்பாடுகளில் அடையாளச் சான்றுகளின் பயன்பாடு அதிகரித்து வருவதால், பொது அடையாளச் சான்று, காப்பளிக்கப்பட்ட நபரும் சிகிச்சை பெற்றவரும் ஒருவரா என்பதைச் சரிபார்க்க உதவுகிறது. வழக்கமாக கோரப்படும் அடையாள ஆவணம் வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், பான் அட்டை, ஆதார் அட்டை போன்றவையாக இருக்கலாம்

**7. குறிப்பிட்ட ஈடுக்கோரல்களுடன் தொடர்புடைய ஆவணங்கள்**

மேலே கூறப்பட்டதை தவிர கூடுதல் ஆவணங்கள் தேவைப்படும் சில வகையான ஈடுக்கோரல்கள் உள்ளன. அவை:

a) விபத்து ஈடுக்கோரல்கள், பதிவுசெய்யப்பட்ட காவல் நிலையத்திற்கு மருத்துவமனையால் வழங்கப்பட்ட முதல் தகவல் அறிக்கை (FIR) அல்லது மருத்துவ-சட்ட சான்றிதழ் தேவைப்படலாம்.

b) சிக்கலான அல்லது அதிக மதிப்புள்ள ஈடுக்கோரல்கள் இருந்தால், வழக்கின் உட்புற ஆவணங்கள் தேவை.

c) பொருந்தும் இடத்தில் டயாலிசிஸ்/ கீமோதெரபி/ பிசியோதெரபி விளக்கப்படங்கள்

d) மருத்துவமனையின் பதிவுச் சான்றிதழ், மருத்துவமனைக்கான வரையறையுடன் இணங்கி இருப்பதை சரிபார்க்க வேண்டும்

**சுய-பரீட்சை** 2

மருத்துவமனையில் பராமரிக்கப்படும் ஆவணங்களில் உள்நோயாளிக்கு செய்யப்படும் அனைத்து சிகிச்சைகளையும் எந்த ஆவணம் விவரிக்கிறது?

I. ஆய்வு அறிக்கை

II. வெளியேற்ற சுருக்கம்

III. கேஸ் பேப்பர்

IV. மருத்துவமனை பதிவு சான்றிதழ்

---

**சுய-பரீட்சை** 3

ஈடுக்கோரல்களின் நிலையின் அடிப்படையில் காப்பீட்டாளரின் புத்தகங்களில் உள்ள அனைத்து ஈடுக்கோரல்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை _______ என அறியப்படுகிறது.

I. சேர்மம்

II. கணக்கியல்

III. இருப்பில் வைத்தல்

IV. முதலீடு செய்தல்

---

## D. மூன்றாம் தரப்பு நிர்வாகிகளின் பங்கு (TPA)

TPA இன் பங்கு முந்தைய அத்தியாயங்களிலும் விவாதிக்கப்பட்டது. **TPA** வழங்கும் சேவைகள் தெரிவது முக்கியம், அப்போது தான் வாடிக்கையாளருக்கு ஏற்ற சேவைகளை விற்பனையாளர் வழங்க முடியும்.

காப்பீட்டு பாலிசியின் விற்பனை மற்றும் வழங்கலுக்கு பிறகு **TPA** சேவைகளின் நோக்கம் தொடங்குகிறது. காப்பீட்டாளர்கள் **TPA**களைப் பயன்படுத்தாத பட்சத்தில், சேவைகள் நிறுவனத்திற்குள் உள்ள குழுவால் செய்யப்படுகின்றன.

### 1. உடல்நலக் காப்பீட்டின் விற்பனைக்கு பிந்தைய சேவை

a) முன்மொழிவு (மற்றும் பிரீமியம்) ஏற்றுக்கொள்ளப்பட்டதும், காப்பு தொடங்கும்.

b) பாலிசியின் சேவைக்காக TPA பயன்படுத்தப்பட வேண்டும் என்றால், வாடிக்கையாளர் மற்றும் பாலிசி பற்றிய தகவலை TPA க்கு காப்பீட்டாளர் அனுப்புகிறார்.

c) TPA உறுப்பினர்களைச் சேர்க்கிறார் ((முன்மொழிபவர் என்பவர் பாலிசி எடுக்கும் நபர், உறுப்பினர்கள் என்பவர்கள் பாலிசியின் கீழ் காப்பளிக்கப்பட்டவர்கள்) மேலும் உறுப்பினர் அடையாளத்தை ஒரு கார்டாக, காகித வடிவில் அல்லது மின்னணு வடிவத்தில் வழங்கலாம்.

d) TPA இல் உறுப்பினராக இருப்பது, ரொக்கமில்லா வசதியைப் பெறுவதற்கும், காப்பீடு செய்யப்பட்ட உறுப்பினருக்கு மருத்துவமனையில் அல்லது சிகிச்சைக்காக பாலிசியின் ஆதரவு தேவைப்படும்போது, ஈடுக்கோரல்களைச் செயலாக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

e) TPA ஈடுக்கோரல் அல்லது ரொக்கமில்லா கோரிக்கையை செயல்படுத்துகிறது மற்றும் காப்பீட்டாளருடன் ஒப்புக்கொள்ளப்பட்ட நேரத்திற்குள் சேவைகளை வழங்குகிறது.

f) காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் பாலிசி மற்றும் TPA உடன் தொடர்புடைய அடையாள காரடை எப்போதுமே கொண்டு போக வேண்டும்.

g) ரொக்கமில்லா வசதியைக் கோருவதற்காக வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு முன் அங்கீகாரம் அல்லது உத்தரவாதக் கடிதத்தை TPA வழங்குகிறது.

h) தகவல் தெளிவாக இல்லை அல்லது கிடைக்கவில்லை என்றால், TPA ரொக்கமில்லா கோரிக்கையை நிராகரிக்கலாம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், ஈடுக்கோரலை பணத்தை திருப்பிச் செலுத்துதல் அடிப்படையில் வழங்குவதை ஆராயலாம்.

## 2. வாடிக்கையாளர் உறவு மற்றும் தொடர்பு மேலாண்மை

TPAக்கள் ஈடுக்கோரல் சேவையில் ஈடுபட்டுள்ளதால், அவர்கள் வழக்கமாக ஒரு குறை தீர்க்கும் வழிமுறையைக் கொண்டுள்ளனர்.

## E. ஈடுக்கோரல் மேலாண்மை - தனிநபர் விபத்து

ஈடுக்கோரலின் அறிவிப்பைப் பெற்றவுடன், பின்வரும் அம்சங்களைக் கவனிக்க வேண்டும்:

a) யாருக்காக ஈடுக்கோரல் செய்யப்படுகிறதோ அவர் பாலிசியின் கீழ் காப்பளிக்கப்பட்டுள்ளாரா.

b) விபத்து நடந்த தேதியில் பாலிசி செல்லுபடியாக இருக்கவேண்டும் மற்றும் பிரீமியம் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

c) இழப்பு பாலிசி காலத்திற்குள் ஏற்பட்டிருக்க வேண்டும்

d) இழப்பு "விபத்து" காரணமாக ஏற்பட்டுள்ளது, நோயினால் அல்ல

e) ஏதேனும் மோசடி தூண்டுதல்களை சரிபார்த்து, தேவைப்பட்டால் விசாரணையை செய்ய ஒதுக்கவும்

f) ஈடுக்கோரலைப் பதிவுசெய்து அதற்கான இருப்பை உருவாக்கவும்

g) டர்ன்அரவுண்ட் அதாவது மீள்வரு நேரத்தை பராமரித்தல் (ஈடுக்கோரல் சேவையை வழங்க எடுக்க நேரம்) மற்றும் ஈடுக்கோரலின் நிலை குறித்து தொடர்ந்து வாடிக்கையாளருக்கு தெரிவிக்கவும்.

### 1. ஈடுக்கோரல் விசாரணை

ஈடுக்கோரல் விசாரணை என்பது ஈடுக்கோரல் செல்லுபடியானதாக இருக்கிறதா என்பதை தீர்மானிப்பது மற்றும் இழப்பின் உண்மையான காரணம் மற்றும் அளவைக் கண்டறிவது ஆகும். ஈடுக்கோரல் ஆவணங்களைப் பெற்றவுடன், ஒரு ஈடுக்கோரல் சந்தேகத்திற்குரியதாகத் தோன்றினால், சரிபார்ப்பதற்காக ஈடுக்கோரல் உள்துறை/தொழில்முறை ஆய்வாளருக்கு ஒதுக்கப்படலாம்.

**எடுத்துக்காட்டு**

வழக்கு வழிகாட்டுதலுக்கான எடுத்துக்காட்டு:

**சாலை போக்குவரத்து விபத்து**

i. சம்பவம் எப்போது நடந்தது - சரியான நேரம் மற்றும் தேதி, இடம்? தேதி மற்றும் நேரம்

ii. காப்பீடு செய்யப்பட்டவர் நடந்து கொண்டிருந்தாரா, பயணியாக/பின்னால் உட்கார்ந்து பயணம் செய்தாரா அல்லது விபத்துக்கு உள்ளான வாகனத்தை ஓட்டி கொண்டிருந்தாரா?

தனிப்பட்ட விபத்து ஈடுக்கோரல்களில் சாத்தியமான மோசடி மற்றும் வெளிப்பாடுகளுக்கான சில எடுத்துக்காட்டுகள்:

i. TTD அதாவது தற்காலிக மொத்த இயலாமை காலத்தை மிகைப்படுத்தல்.

ii. விபத்தாகக் காட்டப்படும் நோய் எ.கா. நோயியல் காரணங்களால் ஏற்படும் முதுகுவலி, வீட்டில் 'விழுந்தது/நழுவுதல்' எனப் புகாரளிக்கப்பட்ட பிறகு, தனிநபர் விபத்து ஈடுக்கோரலாக மாற்றப்பட்டது

டிஸ்சார்ஜ் அதாவது விடுவிப்பு வவுச்சர் என்பது தனிப்பட்ட விபத்து ஈடுக்கோரல் தீர்வில் குறிப்பாக இறப்பு ஈடுக்கோரல்களில் ஒரு முக்கியமான ஆவணமாகும். முன்மொழியப்படும் நேரத்தில் நியமன விவரங்களைப் பெறுவதும் முக்கியம், அது பாலிசி ஆவணத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

2. **ஈடுக்கோரல் ஆவணமாக்கம்- ஒவ்வொரு நிறுவனமும் ஒரு பட்டியலை அளிக்கிறது-**

a) ஈடுக்கோருபவரின் நியமனதாரர்/ குடும்ப உறுப்பினரால் கையொப்பமிடப்பட்ட முறையாக பூர்த்தி செய்யப்பட்ட தனிப்பட்ட விபத்து ஈடுக்கோரல் படிவம்

b) முதல் தகவல் அறிக்கையின் அசல் அல்லது சான்றளிக்கப்பட்ட நகல்.

c) இறப்புச் சான்றிதழின் அசல் அல்லது சான்றளிக்கப்பட்ட நகல்.

d) நடத்தப்பட்டால், பிரேத பரிசோதனை அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட நகல்.

e) AML (கருப்பு பண சலவைசடி தடுப்பு) ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல் ஆவணங்கள் - பெயர் சரிபார்ப்புக்காக (பாஸ்போர்ட்/ பான் கார்டு/ வாக்காளர் ஐடி/ ஓட்டுநர் உரிமம்) முகவரி சரிபார்ப்புக்காக (தொலைபேசி பில்/ வங்கி கணக்கு அறிக்கை, மின்சார பில்/ ரேஷன் கார்டு) ஆவணங்கள்.

f) அனைத்து சட்டப்பூர்வ வாரிசுகளாலும் முறையாக கையொப்பமிடப்பட்ட மற்றும் அத்தாட்சிப்படுத்திய (notarized) உறுதிமொழி மற்றும் இழப்பீட்டுப் பத்திரம் அடங்கிய சட்டப்பூர்வ வாரிசு சான்றிதழ்

g) குடிமை அறுவை சிகிச்சை நிபுணரிடமிருந்து நிரந்தர மொத்த இயலாமைக்கான சான்றிதழ் அல்லது காப்பீடு செய்தவரின் இயலாமை பற்றி சம திறனுள்ள மருத்துவர் வழங்கும் சான்றிதழ்.

h) இயலாமை வகை மற்றும் இயலாமை காலத்தைக் குறிப்பிடும் சிகிச்சை அளிக்கும் மருத்துவரின் மருத்துவச் சான்றிதழ். முதலாளியிடம் இருந்து சரியான விடுப்புக் காலத்தின் விவரங்களைத் தரும் முறையாக கையொப்பமிடப்பட்டு முதலாளியின் முத்திரை வைக்கப்பட்ட விடுப்பிற்கான சான்றிதழ்,

மேலே உள்ள பட்டியல் ஒரு குறிகாட்டியாக மட்டுமே உள்ளது. குறிப்பிட்ட வழக்கு விவரங்களைப் பொறுத்து, கூடுதல் ஆவணங்கள்

(வடுவின் அடையாளங்களின் புகைப்படங்கள், விபத்து நடந்த இடம் போன்றவை) குறிப்பாக மோசடி கோணத்தில் விசாரிக்கப்பட வேண்டிய வழக்குகளில் தேவைப்படலாம்.

**சுய-பரீட்சை** 4

நிரந்தர மொத்த இயலாமைகான ஈடுக்கோரலுக்கு பின்வரும் ஆவணங்களில் எவற்றை சமர்ப்பிக்க தேவையில்லை?

I. ஈடுக்கோருபவர் கையொப்பத்துடன் முறையாக பூர்த்தி செய்த தனிப்பட்ட விபத்து ஈடுக்கோரல் படிவம்.

II. காப்பீட்டு பாலிசியின் நகல்.

III. குடிமை அறுவை சிகிச்சை நிபுணரிடமிருந்து நிரந்தர மொத்த இயலாமைக்கான சான்றிதழ் அல்லது காப்பீடு செய்தவரின் இயலாமை பற்றி சம திறனுள்ள மருத்துவர் வழங்கும் சான்றிதழ்

IV. காப்பீடு செய்தவர் தனது இயல்பான கடமைகளைச் செய்யமுடியும் என்பதற்கு சிகிச்சை மருத்துவர் வழங்கும் உடல் தகுதி சான்றிதழ்.

## F. ஈடுக்கோரல் மேலாண்மை- வெளிநாட்டுப் பயண காப்பீடு

இந்த பாலிசியின் கீழ் காப்பு ஏற்கனவே தயாரிப்பு பற்றிய அத்தியாயத்தின் கீழ் விவாதிக்கப்பட்டது. வெளிநாட்டுப் பயணத்தின் போது எழும் ஈடுக்கோரல்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன என்பதை இந்தப் பகுதி விளக்க முயற்சிக்கிறது.

**ஈடுக்கோரல் சேவைகளில் அடிப்படையில் உள்ளவை:**

a) ஈடுக்கோரல் அறிவிப்பை 24*7 அடிப்படையில் ஏற்றுகொள்ளல்;

b) ஈடுக்கோரல் படிவம் மற்றும் நடைமுறையை அனுப்புதல்;

c) நஷ்டத்திற்குப் பிறகு உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்பதை பற்றி வாடிக்கையாளருக்கு வழிகாட்டுதல்;

d) மருத்துவம் மற்றும் நோய்க்கான ஈடுக்கோரல்களுக்கு ரொக்கமில்லா சேவைகளை விரிவுபடுத்துதல்;

e) நாடு திரும்புவதற்கும் வெளியேறுதலுக்கும், அவசரநிலை கால ரொக்க முன்பணத்தை ஏற்பாடு செய்தல்.

## உதவி நிறுவனங்கள் - வெளிநாட்டு ஈடுக்கோரல்களில் பங்கு

உதவி நிறுவனங்கள் தங்கள் சொந்த அலுவலகங்களைக் கொண்டிருக்கின்றன மற்றும் உலகெங்கிலும் உள்ள பிற ஒத்த சேவை வழங்குநர்களுடன் ஒருங்கிணைந்த ஏற்பாடுகளைச் செய்கின்றன. இந்த நிறுவனங்கள் காப்பீட்டு நிறுவனங்களின் வாடிக்கையாளர்களுக்கு பாலிசியின் கீழ் காப்பளிக்கப்பட்ட தற்செயல் நிகழ்வுகள் ஏற்படும் போது உதவி வழங்குகின்றன.

ஈடுக்கோரல் பதிவு மற்றும் தகவல்களுக்கு சர்வதேச இலவச எண்களுடன் உள்ள 24*7 அழைப்பு மையத்தை இந்த நிறுவனங்கள் இயக்குகின்றன. அவர்கள் பின்வரும் சேவைகளை வழங்குகிறார்கள் மற்றும் சேவைகளுக்கான கட்டணங்கள் குறிப்பிட்ட காப்பீட்டு நிறுவனத்துடன் அவர்களுக்கு உள்ள ஒப்பந்தம், வழங்கப்படும் நன்மைகள் போன்றவற்றைப் பொறுத்து மாறுபடும்.

a) **மருத்துவ உதவி சேவைகள்**:

   i. மருத்துவ சேவை வழங்குநரை பற்றிய பரிந்துரைகள்

   ii. மருத்துவமனையில் சேர்ப்பதற்கான ஏற்பாடு

   iii. மருத்துவரீதியான அவசர வெளியேற்றத்திற்கான ஏற்பாடு

   iv. மருத்துவரீதியாக அவசரமாக தாயகம் திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடு

   v. இறந்தவர்களின் உடலை இந்தியா எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடு

   vi. கருணைரீதியான வருகைக்கான ஏற்பாடுகள்

   vii. மைனர் குழந்தைகளுக்கு உதவி/ துணை

b) மருத்துவமனை சேர்க்கை சமயத்தில் மற்றும் அதற்கு பின்பும் மருத்துவ நிலையை கண்காணித்தல்

c) அத்தியாவசிய மருந்துகளின் விநியோகம்

d) பாலிசியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்படும் போது ஏற்படும் மருத்துவச் செலவுகளுக்கான உத்தரவாதம்.

e) பயணத்திற்கு முந்தைய தகவல் சேவைகள் மற்றும் பிற சேவைகள்:

i. விசாக்கள் மற்றும் தடுப்பூசி தேவைகள்
ii. தூதரக பரிந்துரை சேவைகள்
iii. தொலைந்த பாஸ்போர்ட் மற்றும் இழந்த லக்கேஜ் உதவி சேவைகள்
iv. அவசர செய்தி பரிமாற்ற சேவைகள்
v. ஜாமீன் பத்திர ஏற்பாடு
vi. அவசரநிலை நிதிஉதவி

f) மொழிபெயர்ப்பாளருக்கான பரிந்துரை

g) சட்டப் பரிந்துரை

h) வழக்கறிஞரை சந்திக்க முன்பதிவு

## a) மருத்துவமனை சேர்க்கை நடைமுறைகள்

i. ஒருமுறை காப்பீடு செய்தவர் அவர்களுக்கு செல்லுபடியாகும் உடல்நல அல்லது வெளிநாட்டு பயணக் காப்பீட்டு பாலிசியை வழங்கினாலே, பெரும்பாலான .மருத்துவமனைகள் அனைத்து சர்வதேச காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்தும் பணம் செலுத்துவதற்கான உத்தரவாதத்தை ஏற்றுக்கொள்கின்றன.

ii. மருத்துவமனைகள் உடனடியாக சிகிச்சையைத் தொடங்குகின்றன. காப்பீடு இருந்தால் காப்பீட்டு பாலிசி மூலம் பணம் செலுத்தப்படுகிறது அல்லது நோயாளி பணத்தை செலுத்த வேண்டும். பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதால் மருத்துவமனைகள் கட்டணங்களை உயர்த்த முனைகின்றன.

iii. உதவி நிறுவனங்கள் வழங்கிய இலவச எண்களில் நெட்வொர்க் மருத்துவமனைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான தகவல்கள் காப்பீடு செய்யப்பட்டவருக்கு கிடைக்கும்.

iv. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டால், காப்பீடு செய்தவர் அதை கால் சென்டரில் தெரிவிக்க வேண்டும் மற்றும் செல்லுபடியாகும் பயணக் காப்பீட்டு பாலிசியுடன் குறிப்பிடப்பட்ட மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்.

v. பாலிசியின் செல்லுபடியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும், காப்புகளைச் சரிபார்க்கவும் மருத்துவமனைகள் பொதுவாக உதவி நிறுவனங்கள்/காப்பீட்டு நிறுவனங்களின் கால் சென்டர் எண்களில் தொடர்பு கொள்கின்றன.

vi. பாலிசியை மருத்துவமனை ஏற்றுக்கொண்டவுடன், காப்பீடு செய்தவர் ரொக்கமில்லா அடிப்படையில் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவார்.

vii. காப்பீட்டாளர்/ உதவி வழங்குநரால் மருத்துவமனை சேர்க்கையை தீர்மானிக்க தேவைப்படும் சில அடிப்படைத் தகவல்கள்:

1. நோயின் விவரங்கள்
2. முந்தைய வரலாறு வழக்கில், இந்தியாவில் உள்ள மருத்துவமனை, உள்ளூர் மருத்துவ அதிகாரியின் விவரங்கள்:
    - ✓ கடந்தகால வரலாறு, தற்போதைய சிகிச்சை மற்றும் மருத்துவமனையில் மேலும் திட்டமிடப்பட்ட சிகிச்சை முறை மற்றும் உடனடியாக அனுப்புமாறு கோரிக்கை
    - ✓ சிகிச்சையளிக்கும் மருத்துவர் அறிக்கையுடன் ஈடுக்கோரல் படிவம்
    - ✓ பாஸ்போர்ட் நகல்
    - ✓ மருத்துவ தகவல் படிவத்தின் வெளியீடு

b) **மருத்துவ செலவுகள் மற்றும் மருத்துவமற்ற பிற ஈடுக்கோரல்களை திருப்பிச் செலுத்துதல்:**

காப்பீடு செய்தவர்கள் இந்தியா திரும்பிய பிறகு திருப்பிச் செலுத்தும் ஈடுக்கோரல்கள் பொதுவாக தாக்கல் செய்யப்படுகின்றன. ஈடுக்கோரல் ஆவணங்கள் கிடைத்தவுடன், வழக்கமான

செயல்முறையின்படி ஈடுக்கோரல் செயலாக்கப்படும். வெளிநாட்டு நாணயத்தில் செலுத்தப்படும் ரொக்கமில்லா ஈடுக்கோரல்களைப் போல இல்லாமல், அனுமதிக்கப்பட்ட அனைத்து ஈடுக்கோரல்களுக்கான கட்டணங்களும் இந்திய ரூபாயில் (INR) செலுத்தப்படுகின்றன.

திருப்பிச் செலுத்தும் ஈடுக்கோரல்களைச் செயல்படுத்தும் போது, இழப்பீட்டுத் தேதியன்று இருந்த கடன்பாடு அளவை இந்திய ரூபாயில் அடைய நாணய மாற்று விகிதம் பயன்படுத்தப்படுகிறது. பின்னர் காசோலை அல்லது மின்னணு பரிமாற்றம் மூலம் பணம் செலுத்தப்படுகிறது.

**c) விபத்து மற்றும் நோய்க்கான மருத்துவ செலவுகளுக்கான ஆவணங்கள்**

i. ஈடுக்கோரல் படிவம்

**ii.** மருத்துவரின் அறிக்கை

**iii.** அசல் மருத்துவமனை சேர்க்கை/ விடுவிப்பு அட்டை

**iv.** அசல் பில்கள்/ ரசீதுகள்/ மருந்துச் சீட்டு

**v.** அசல் எக்ஸ்ரே அறிக்கைகள்/ நோயியல்/ புலனாய்வு அறிக்கைகள்

vi. நுழைவு மற்றும் வெளியேறும் முத்திரையுடன் பாஸ்போர்ட் / விசாவின் நகல்

மேலே உள்ள பட்டியல் ஒரு குறிகாட்டியாக மட்டுமே உள்ளது. குறிப்பிட்ட வழக்கு விவரங்களைப் பொறுத்து அல்லது குறிப்பிட்ட காப்பீட்டாளர் பின்பற்றும் ஈடுக்கோரல் தீர்வு பாலிசி/செயல்முறையைப் பொறுத்து கூடுதல் தகவல்/ஆவணங்கள் தேவைப்படலாம்.

**சுய-பரீட்சை** 5

ஒருமுறை காப்பீடு செய்தவர் அவர்களுக்கு செல்லுபடியாகும் ________ காப்பீட்டு பாலிசியை வழங்கினாலே, பெரும்பாலான .மருத்துவமனைகள் அனைத்து சர்வதேச காப்பீட்டு

நிறுவனங்களிடமிருந்தும் பணம் செலுத்துவதற்கான உத்தரவாதத்தை ஏற்றுக்கொள்கின்றன.

I. சட்ட கடன்பாடு

II. கொரோனா ரக்ஷக்

III. வெளிநாட்டுப் பயண

IV. நன்கொடை

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் **II.**

**பதில் 2** - சரியான பதில் விருப்பம் **II.**

**பதில் 3** - சரியான பதில் விருப்பம் **III.**

**பதில் 4** - சரியான பதில் விருப்பம் **IV.**

**பதில் 5** - சரியான பதில் விருப்பம் **III.**

## சுருக்கம்

a) காப்பீடு என்பது ஒரு 'வாக்குறுதி', மற்றும் பாலிசி அந்த வாக்குறுதிக்கு 'சாட்சி' ஆகும். பாலிசியின் கீழ் ஈடுக்கோரலுக்கு வழிவகுக்கும் காப்பீடு செய்யப்பட்ட நிகழ்வு அந்த வாக்குறுதியின் உண்மையான சோதனையாகும்.

b) காப்பீட்டின் முக்கிய மதிப்பீடு காரணிகளில் ஒன்று காப்பீட்டு நிறுவனத்தின் ஈடுக்கோரல்களை செலுத்தும் திறன் ஆகும்.

c) காப்பீட்டை வாங்கும் நபர் முதல் பங்குதாரராகவும், 'ஈடுக்கோரலைப் பெறுபவராகவும் இருக்கிறார்.

d) ரொக்கமில்லா ஈடுக்கோரலில் ஒரு நெட்வொர்க் மருத்துவமனை காப்பீட்டாளரின் முன் அங்கீகாரத்தின் அடிப்படையில் மருத்துவ சேவைகளை வழங்குகிறது.

e) பணம் திருப்பிச் செலுத்தும் ஈடுக்கோரலில், வாடிக்கையாளர் தனது சொந்த ஆதாரங்களில் இருந்து பணத்தை மருத்துவமனைக்குச்

செலுத்துகிறார், பின்னர் பணத்தை திரும்ப பெறுவதற்காக காப்பீட்டாளர்/TPAவிடம் ஈடுக்கோரலை தாக்கல் செய்கிறார்.

f) வாடிக்கையாளருக்கும் ஈடுக்கோரல் குழுவிற்கும் இடையே உள்ள தொடர்பின் முதல் படியாக ஈடுக்கோரலை தெரிவித்தல் இருக்கிறது..

g) காப்பீட்டு ஈடுக்கோரல் வழக்கில் காப்பீட்டு நிறுவனம் ஒரு மோசடி நடந்ததாக சந்தேகப்பட்டால், அது விசாரணைக்கு அனுப்பப்படும். ஒரு காப்பீட்டாளர்/TPA மூலம் ஈடுக்கோரலின் விசாரணையை நிறுவனத்தின் உள் துறையே செய்யலாம் அல்லது ஒரு தொழில்முறை விசாரணை நிறுவனத்திடம் ஒப்படைக்கலாம்.

h) இருப்பு வைத்தல் என்பது ஈடுக்கோரல்களின் நிலையின் அடிப்படையில் காப்பீட்டாளரின் புத்தகங்களில் அனைத்து ஈடுக்கோரல்களுக்காகவும் வைக்கப்படும் தொகையைக் குறிக்கிறது.

i) ஈடுக்கோரல் மறுக்கப்பட்டால், வாடிக்கையாளருக்கு காப்பீட்டாளரிடம் பிரதிநிதித்துவம் செய்வதை தவிர, காப்பீட்டு குறைதீர்ப்பாளரை அல்லது நுகர்வோர் கமிஷன்கள் அல்லது சட்ட அதிகாரிகளை அணுகுவதற்கான விருப்பம் உள்ளது.

j) மோசடிகள் பெரும்பாலும் மருத்துவமனை சேர்க்கைக்கான இழப்பீட்டு பாலிசிகளில் நிகழ்கின்றன, ஆனால் மோசடி ஈடுக்கோரல்களைச் செய்ய தனிநபர் விபத்து பாலிசிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

k) காப்பீட்டாளருக்கு TPA பல முக்கியமான சேவைகளை வழங்குகிறது மற்றும் கட்டண வடிவில் அதற்கான கட்டணத்தை பெறுகிறது.

# பிரிவு

# பொது காப்பீடு

# அத்தியாயம் G-01

# பொது காப்பீடு ஆவணமாக்குதல்

## அத்தியாய அறிமுகம்

அத்தியாயம் 7இல் விவாதிக்கப்பட்டபடி, முன்மொழிவு படிவத்தில் காப்பீட்டுக்காக வழங்கப்படும் அபாயத்தை காப்பீட்டு நிறுவனம் ஏற்றுக்கொள்ள தேவைப்படும் பயனுள்ள தகவல் உள்ளது.

காப்பீட்டின் வெவ்வேறு கிளைகளில், காப்பீடு செய்யப்பட்ட பொருள், காப்பீட்டின் காப்பு வகை மற்றும் எழக்கூடிய ஈடுக்கோரல்களின் வகைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆவணத் தேவைகளும் வேறுபட்டிருப்பதை பார்த்தோம்.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. முன்மொழிவு படிவங்கள்
B. முன்மொழிவு ஏற்பு (காப்பீடு ஏற்கப்படுதல்)
C. பிரீமியம் ரசீது
D. உறை குறிப்புகள் / காப்பீடின் சான்றிதழ் / பாலிசி ஆவணம்
E. உத்தரவாதங்கள்
F. மேற்குறிப்புகள்
G. பாலிசிகளின் பொருள் விளக்கம்
H. புதுப்பித்தல் அறிவிப்பு

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:

a) முன்மொழிவு படிவத்தின் உள்ளடக்கத்தை பற்றி விளக்க முடியும்
b) தகவல் ஏட்டின் முக்கியத்துவத்தை விவரிக்க முடியும்.
c) பிரீமியம் ரசீதை பற்றி புரிந்து கொள்ளமுடியும்
d) காப்பீடு பாலிசி ஆவணத்திலுள்ள வார்த்தைகளை மற்றும் வாசகங்களை பற்றி விளக்க முடியும்.
e) பாலிசியின் நிபந்தனைகள் மற்றும் உத்தரவாதங்களை பற்றி விவாதிக்க முடியும்

f) மேல் குறிப்புகள் ஏன் வழங்கப்படுகின்றன என்பதைப் பாராட்ட முடியும்.
g) புதுப்பித்தல் அறிவிப்புகள் ஏன் வெளியிடப்படுகின்றன என்பதைப் பாராட்ட முடியும்.

## A. முன்மொழிவு படிவங்கள்

காப்பீடிற்காக அளிக்கப்படும் அபாயத்தை ஏற்றுக்கொள்வதற்காக, காப்பீடு நிறுவனத்திற்கு பயன்படுகின்ற தகவல்களை முன்மொழிவு படிவம் கொண்டிருக்கும். காப்பீடிற்கான நன்னம்பிக்கை மற்றும் தகவல்களை வெளிப்படுத்தும் கடமை போன்ற கொள்கைகள் முன்மொழிவு படிவத்திலிருந்து தொடங்கும்.

## எடுத்துக்காட்டு

காப்பீடு பெறுபவர் தன்னுடைய தங்க நகை ஷோரூமில் ஒரு அலாரம் (Burglar alarm) வைத்து பராமரிக்க தேவை, அல்லது தானியங்கி அலார அமைப்பை வைத்திருந்தால், அவர் அதை வெளிப்படுத்துவது மட்டுமின்றி, அது பாலிசி காலம் முழுவதும் நன்கு செயல்புரிகிறதா என்றும் உறுதிப்படுத்தவேண்டும். அலாரம் இருப்பது காப்பீட்டாளரை பொறுத்த வரை ஒரு அடிப்படை உண்மை மற்றும் காப்பீட்டாளர் இந்த உண்மைகளின் அடிப்படையில்தான் அபாயத்திற்கு காப்பீடு அளிக்க ஒப்புக்கொண்டு, அதற்கான விலையையும் நிர்ணயிப்பார்.

### 1. முன்மொழிவு படிவத்தில் இருக்கும் வினாக்களின் இயல்பு

முன்மொழிவு படிவத்திலுள்ள வினாக்களின் எண்ணிக்கை மற்றும் இயல்பு காப்பீடு அளிக்கப்படும் பிரிவிற்கு ஏற்ப மாறுபடும்.

i. **தீ காப்பீடு** முன்மொழிவு படிவங்கள் சாதாரணமாக எளிய/நிலையான அபாயங்கள் அதாவது வீடுகள், கடைகள் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும். பெரிய தொழிற்சாலைக்கான அபாயங்களை ஏற்பதற்கு முன்பாக, அபாயத்தை பரிசோதனை செய்வதற்கு காப்பீட்டாளர் ஏற்பாடு செய்வார். சிறப்பு தகவல்களை பெறுவதற்கு முன்மொழிவு படிவத்தில் சில நேரங்களில், சிறப்பு வினாப்பட்டியல்கள் சேர்க்கப்படுகின்றன.

   தீ காப்பீடு முன்மொழிவு படிவத்தில், வேறு விஷயங்களுடன், சொத்தைப் பற்றிய விவரிப்பு கேட்கப்படும், அவற்றில் பின்வரும் தகவல்கள் இருக்கும்:

   - ✓ வெளிப்புற சுவர்கள் மற்றும் கூரையின் கட்டிட அமைப்பு, மாடிகளின் எண்ணிக்கை

- ✓ கட்டிடத்தில் ஒவ்வொரு பகுதியிலும் இருப்பவர்களின் தொழில்
- ✓ ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருட்கள்
- ✓ மூலப்பொருள் மற்றும் முடிக்கப்பட்ட பொருட்கள் உட்பட உற்பத்தி செயல்முறை
- ✓ காப்பீடிற்காக முன்மொழியப்பட்ட தொகை
- ✓ காப்பீடின் கால அளவு, போன்றவை.

ii. **வாகன காப்பீடிற்கு**, வாகனத்தைப் பற்றி, அதன் செயற்பாடுகள், கொண்டு செல்லக்கூடிய கொள்ளளவு, அது உரிமையாளரால் நிர்வாகம் செய்யப்படும் முறை மற்றும் சம்பந்தப்பட்ட காப்பீட்டு வரலாறு ஆகியவற்றை பற்றி வினாக்கள் இருக்கும்.

iii. **சொந்த காப்பீடு வகைகளுக்கு** அதாவது உடல்நலம், தனிநபர் விபத்து மற்றும் பயணக் காப்பீடு ஆகியவற்றின் முன்மொழிவு படிவங்கள், முன்மொழிபவரின் ஆரோக்கியம், வாழ்க்கை முறை மற்றும் பழக்கங்கள், முன்னரே இருக்கும் உடல் நிலைகள், மருத்துவ வரலாறு, மரபுவழிப் பண்புகள், முன் காப்பீட்டு அனுபவங்கள் போன்றவற்றைப் பற்றிய தகவல்களை பெறுவதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

iv. **வேறு பலவகைப்பட்ட காப்பீடுகளில்**, முன்மொழிவு படிவங்கள் கட்டாயமானவை மற்றும் அவற்றில் ஒரு பிரகடனம் இருக்கும் மற்றும் அது நன்னம்பிக்கையை அளிக்கும் கடமையை நீட்டிக்கும்.

## 2. முன்மொழிவின் கூறுகள்

### i. முன்மொழிபவரின் முழு பெயர்

முன்மொழிபவர் தன்னை தெளிவாக அடையாளம் காட்டிகொள்ள வேண்டும். காப்பீடு பெறுபவருக்கு மட்டுமே அந்த பாலிசியின் கீழுள்ள பயன்கள் சென்றடைவதை உறுதி செய்ய காப்பீட்டாளர் யாருடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்கிறார் என்பது தெரிவது முக்கியம்,

### ii. முன்மொழிபவரின் முகவரி மற்றும் தொடர்பு விவரங்கள்

மேலே குறிப்பிட்ட காரணங்கள் முன்மொழிபவரின் முகவரி மற்றும் தொடர்பு விவரங்களை பெறுவதற்கும் பொருந்தும்.

iii. **முன்மொழிபவரின் தொழில், பணி, அல்லது வியாபாரம்**

உடல்நலம் மற்றும் தனிநபர் விபத்து காப்பீடுகளில், முன்மொழிபவரின் தொழில், பணி அல்லது வியாபாரம் ஆகியவை முக்கியமாகும். ஏனென்றால் அவை அபாயத்திற்கு உட்படக்கூடிய முக்கிய தகவல்களை வெளிப்படுத்தும்.

iv. **காப்பீடு செய்யப்படும் விஷயங்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் அடையாளம்**

முன்மொழிபவர், காப்பீடிற்காக முன்மொழியப்பட்ட விஷயத்தை தெளிவாக கூறவேண்டும்.

**எடுத்துக்காட்டு**

முன்மொழிபவர், பின்வருவதை தெரிவிக்கவேண்டும்:

i. சொந்த கார் [என்ஜின் எண், அடிச்சட்டத்திலுள்ள எண் (சாஸிஸ் எண்), பதிவு செய்த எண் போன்ற அடையாளங்கள்] அல்லது

ii. குடியிருப்பு வீடு [அதன் முழு முகவரி மற்றும் அடையாள எண்கள்] அல்லது

iii. வெளிநாட்டு பயணம் என்றால் [யாரால், எப்போது, எந்த தேசத்திற்கு, எந்த வேலைக்காக] அல்லது

iv. வழக்கிற்கு ஏற்ப, நபரின் ஆரோக்கியம் [நபரின் பெயர், முகவரி மற்றும் அடையாளத்துடன்] போன்றவை.

v. **காப்பீட்டுத் தொகை** என்பது அந்த பாலிசியின் கீழ் காப்பீட்டாளரின் கடப்பாடு நிலையை குறிக்கும் மற்றும் அது எல்லா முன்மொழிவு படிவங்களிலும் குறிப்பிடப்பட வேண்டும்.

vi. **முந்தைய மற்றும் தற்போதைய காப்பீடு**: பொதுவான அத்தியாயங்களில் காணப்படுவது போல், முன்மொழிபவர் தனது முந்தைய காப்பீடுகள் பற்றிய விவரங்களை காப்பீட்டாளருக்கு தெரிவிக்க வேண்டும்

சொத்து காப்பீடில், காப்பீடு பெறுபவர் பலவிதமான காப்பீட்டாளர்களிடமிருந்து காப்பீடை பெற்றுக்கொண்டு, இழப்பு ஏற்படும் நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டாளரிடம் இருந்து இழப்பீடை பெறும் வாய்ப்புகள் இருக்கின்றன. பிரித்து வழங்கும் கொள்கை (principle of contribution) செயல்படுத்தப்பட்டதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக இந்த தகவல் தேவைப்படுகின்றது. இதனால், காப்பீடு பெறுபவருக்கு இழப்பீடு கிடைக்கும் ஆனால் ஒரே அபாயத்திற்காக பலவிதமான காப்பீட்டு பாலிசிகளிலிருந்து லாபத்தை பெற மாட்டார்கள்.

கூடுதலாக, தனிநபர் விபத்து காப்பீடில், காப்பீட்டாளர் (Insurer) காப்பீடு பெற்றவர் எடுத்த வேறு தனிநபர் விபத்து பாலிசிகளின் மூலம் காப்பீடு செய்யப்பட்டத் தொகையின் அடிப்படையில், காப்பீட்டுத் தொகை (காப்புத் தொகை) அளவை கட்டுப்படுத்தலாம்.

vii. **இழப்பு அனுபவம்**

முன்மொழிபவர், காப்பீடு செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர் அனுபவித்த இழப்புகளின் முழு விவரங்களையும் கூறவேண்டும். இது காப்பீடு பற்றிய விஷயத்தையும் கடந்த காலத்தில் காப்பீட்டு செய்தவர் அதை எப்படி சமாளித்தார் என்பது பற்றிய தகவலையும் காப்பீட்டாளரிடம் தெரிவிக்கும். இதுபோன்ற பதில்களிலிருந்து காப்பீடு ஏற்பாளர்கள், அபாயத்தை நன்கு புரிந்துகொள்வார்கள் மற்றும் அபாயத்தை பற்றிய பரிசோதனை நடத்த தீர்மானிப்பார்கள் அல்லது கூடுதல் விவரங்களை திரட்டுவார்கள்.

viii. **காப்பீடு பெறுபவருடைய பிரகடனம்**

முன்மொழிவு படிவத்தின் நோக்கம் காப்பீட்டாளர்களுக்கு தேவையான எல்லா விஷயங்களையும் வழங்குவதாக இருப்பதால், **அந்த படிவத்தில், அவரது பதில்கள் உண்மையானவை மற்றும் துல்லியமானவை என்றும் இந்த படிவம் காப்பீடு ஒப்பந்தத்தின் அடிப்படையாக இருக்கும் என்பதை தெரிவிக்கும் காப்பீடு பெறுபவருடைய பிரகடனம் இருக்கும்.** தவறான பதில் ஏதேனும் இருப்பின், அந்த ஒப்பந்தத்தை தவிர்க்கும் உரிமையை

காப்பீட்டாளர்களுக்கு அது அளிக்கிறது. எல்லா முன்மொழிவு படிவங்களிலும் பொதுவாக இருக்கும் வேறு பிரிவுகளில், **கையெழுத்து**, **தேதி மற்றும் சில இடங்களில் முகவர்களின் பரிந்துரை ஆகியவையாகும்.**

## B. முன்மொழிவு ஏற்பு (ஏற்பளிப்பு)

ஒரு பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவு படிவம் பொதுவாக பின்வரும் தகவல்களை அளிக்கும் என்பதை நாம் முன்பே பார்த்தோம்:

- ✓ காப்பீடு பெறுபவரின் விவரங்கள்
- ✓ காப்பீடு செய்யப்படும் விஷயத்தைப் பற்றிய விவரங்கள்
- ✓ தேவைப்படும் காப்பீடின் வகை
- ✓ பொருள்சார்ந்த அம்சங்கள் பற்றி நேர்மறை மற்றும் எதிர்மறை விவரங்கள் - இதில் கட்டிடத்திவ் வகை மற்றும் தரம், வயது, தீயணைக்கும் உபகரணங்கள் இருத்தல், பாதுகாப்பு வகை போன்றவற்றை சேர்த்து
- ✓ காப்பீடு மற்றும் இழப்பின் முந்தைய வரலாறு

சொத்து, மோட்டார் அல்லது சரக்கு காப்பீடு விஷயத்தில், காப்பீட்டாளர், அபாயத்தின் தன்மை மற்றும் மதிப்பைப் பொறுத்து, ஏற்றுக்கொள்வதற்கு முன், அபாயத்தின் முன்-பரிசோதனை கருத்துக்கணிப்பை செய்யலாம். முன்மொழிவில் உள்ள தகவல், அபாய ஆய்வு அறிக்கை, கூடுதல் வினாத்தாள் மற்றும் பிற ஆவணங்களுக்கான பதில்கள் (காப்பீட்டாளரால் கேட்கப்படுபவை) ஆகியவற்றின் அடிப்படையில் காப்பீட்டாளர்கள் தங்கள் முடிவை எடுக்கிறார்கள். அதன் பிறகு, காப்பீட்டாளர், அபாய காரணிகளுக்கு எவ்வளவு விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று தீர்மானிப்பார் மற்றும் பல்வேறு சோதனை குறியீடுகளுக்கு ஏற்ப பிரீமியத்தை கணக்கிடுவார். இது பிறகு காப்பீடு பெறுபவரிடம் தெரிவிக்கப்படும். முன்மொழிவுகள் காப்பீட்டாளரால் வேகத்துடனும் திறமையுடனும் செயல்படுத்தப்படும் மற்றும் அனைத்து தீர்மானங்களும், பொருத்தமான காலத்திற்குள் எழுத்து மூலம் தெரிவிக்கப்படும்.

## வரையறை

**ஏற்பளிப்பு**: பாலிசிதாரர்களின் நலன்களின் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், 2017இன் படி 15 நாட்களுக்குள், நிறுவனம் முன்மொழிவை செயல்படுத்தவேண்டும். முகவர், இந்த காலவரிசைகளை கவனித்து, பின் தொடர்ந்து, வாய்ப்பாளர்/காப்பீட்டு பெறுபவரிடம் தேவைப்படும் போது வாடிக்கையாளர் சேவை மூலம் தொடர்பு கொள்ளவேண்டும். முன்மொழிவை கூர்ந்தாய்வு செய்து ஏற்பளிப்பு அளிக்கப்படுவதைப் பற்றி தீர்மானிக்கும் முழு செயல்முறையும் காப்பீடு ஏற்பளிப்பு என்று அழைக்கப்படுகிறது.

## சுய-பரீட்சை 1

பாலிசிதாரர்களின் நலன்களின் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், 2017இன் படி ஒரு காப்பீட்டு நிறுவனம் ஒரு காப்பீட்டு முன்மொழிவை ________நாட்களுக்குள் செயல்படுத்தவேண்டும்.

I. 7 நாட்கள்

II. 15 நாட்கள்

III. 30 நாட்கள்

IV. 45 நாட்கள்

---

## C. பிரீமியம் ரசீது

**பிரீமியம்** என்பது, காப்பீடு ஒப்பந்தத்தின் கீழ், ஒரு பொருளை காப்பீடு செய்வதற்காக காப்பீட்டாளருக்கு காப்பீடு பெறுபவரால் செலுத்தப்படும் கருதுகை அல்லது தொகையாகும். அத்தியாயம் 4 இல் தரப்பட்டுள்ளபடி, காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 64 VB இன் படி, **காப்பீட்டு ஒப்பந்தத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னதாக, பிரீமியம் முன்கூட்டியே செலுத்தப்பட வேண்டும்** என்பதை முகவர் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## முக்கியமானவை

a) காப்பீட்டுச் சட்டம் - 1938 இன் பிரிவு 64 VB, பிரீமியம் முன்கூட்டியே பெறப்படும் வரை அல்லது அளிப்பதாக அச்சாரம் கொடுப்பது வரை

அல்லது குறிப்பிடப்பட்ட வகையில் முன்கூட்டியே வைப்புத்தொகை வைக்கப்படும் வரை எந்த காப்பீட்டாளரும் எந்த அபாயத்திற்கும் காப்பளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளமாட்டார் என கூறுகிறது. காப்பீட்டு விதிகள் 58 மற்றும் 59 சில சூழ்நிலைகளில் பிரீமியத்தை முன்கூட்டியே செலுத்துவதற்கான இந்த நிபந்தனைக்கு சில விதிவிலக்குகளை வழங்குகிறது

b) ஒரு காப்பீட்டாளரின் சார்பாக ஒரு காப்பீட்டு முகவர் ஒரு காப்பீட்டு பாலிசிக்கான பிரீமியத்தை பெற்றுக்கொள்ளும் போது, அதை பெற்ற இருபத்தி நாலு மணி நேரங்களுக்குள், வங்கி மற்றும் தபால்நிலைய விடுமுறைகள் தவிர மற்ற நாட்களில் முழு பிரீமிய தொகையையும் தன் கமிஷனை கழித்துக்கொள்ளாமல் வங்கியில் கட்டி விடுவார் அல்லது தபால் வழியாக அனுப்பி விடுவார்.

c) பிரீமியம் பணமாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தப்பட்ட தேதியிலிருந்து தான் அபாயத்தின் பாதுகாப்பு ஏற்றுக்கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடப்படுகிறது.

d) பிரீமியம் தபால் வழியாக அல்லது பண அஞ்சல் வழியாக அல்லது காசோலையாக தபால் மூலம் அனுப்பப்படும் போது, பணம் அஞ்சலில் பதிவு செய்யப்பட்ட தேதி அல்லது காசோலை அனுப்பப்பட்ட நாள் முதலே, அபாயத்தின் காப்பு ஏற்றுக்கொள்ளப்படலாம்.

e) காப்பீடு செய்தவர், பாலிசியை ரத்து செய்வதாலோ அல்லது அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதாலோ அல்லது வேறு காரணங்களாலோ திருப்பிக் கொடுக்கும் நிலையில், அது காப்பீட்டாளரால் காப்பீடு செய்தவருக்கு நேரடியாக கோடிட்ட அல்லது ஆணைக் காசோலை மூலமாக அல்லது தபால்/பண அஞ்சல் மூலமாக அல்லது மின்னணு முறையில் அனுப்பப்படும். இதன் சரியான ரசீதை காப்பீடு செய்தவரிடமிருந்து காப்பீட்டாளர் பெற்றுக்கொள்ளலாம். இதுபோன்ற திருப்பப்படும் பணம், முகவரின் கணக்கில் சேர்க்கப்படாது.

## D. உறை குறிப்புகள் / காப்பீட்டு சான்றிதழ் / பாலிசி ஆவணம்

காப்பீடு ஏற்பளிப்பு பூர்த்தியடைந்த பின்னர் பாலிசி வழங்கப்பட சிறிது காலம் எடுக்கும். **பாலிசி தயாரிப்பில் இருக்கும்போது அல்லது காப்பீடிற்கான ஒப்பந்தப் பேச்சு நடக்கும்போது, தற்காலிக அடிப்படையில் காப்பளிக்கப்படுவது அவசியம் அல்லது சரியான விலையை நிர்ணயிப்பதற்காக வளாகம் பரிசோதனை செய்யப்படும்போது** பாலிசியின் கீழ் காப்பளிக்கப்படுவதை உறுதிப்படுத்த ஒரு உறை குறிப்பு (Cover note) அளிக்கப்படும்.

உறை குறிப்பில் முத்திரை இடப்படாவிட்டாலும், பாலிசி காப்பீடு அளிப்பவரின் வகைக்கு பொருந்தும் வழக்கமான விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்படும் என்பதை உறை குறிப்பில் இருக்கும் வாசகங்கள் உறுதிப்படுத்தும். அபாயத்திற்கு உத்தரவாதங்கள் ஏதேனும் இருக்குமானால், உறை குறிப்பில், காப்பீடிற்கு உத்தரவாதங்கள் இருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கும். பொருந்தினால், உறை குறிப்பு சிறப்பு உட்பிரிவுகளுக்கு உட்பட்டது, எ.கா. ஒப்புக்கொள்ளப்பட்ட வங்கி உட்பிரிவு, பிரகடனம் உட்பிரிவு போன்றவை.

**ஒரு உறை குறிப்பில் பின்வருபவை இருக்கவேண்டும்**:

a) காப்பீடு பெறுபவரின் பெயர் மற்றும் முகவரி
b) காப்பிட்டுத் தொகை
c) காப்பீடின் காலம்
d) காப்பளிக்கப்படும் அபாயம்
e) வீதம் மற்றும் பிரீமியம்: வீதம் அறியப்படவில்லை என்றால், தற்காலிக பிரீமியம்
f) **காப்பளிக்கப்படும் அபாயத்தின் விவரிப்பு**: எடுத்துக்காட்டாக ஒரு தீ காப்பீட்டின் உறை குறிப்பு கட்டிடம், அதன் கட்டமைப்பு மற்றும் குடியிருக்கை பற்றிய அடையாளக் குறிப்புகளை குறிப்பிடும்.
g) உறை குறிப்பின் வரிசை எண்
h) வழங்கப்பட்ட தேதி
i) **உறை குறிப்பின் செல்லுபடியாகும் காலம்** வழக்கமாக இரு வாரங்கள் மற்றும் அரிதாக 60 நாட்கள் வரை இருக்கும்

**உறை குறிப்புகள் முக்கியமாக கடல் சார்ந்த மற்றும் வாகன வகை வணிகங்களில் பயன்படுத்தப்படுகின்றன.**

## 1. கடல் சார்ந்த உறை குறிப்புகள் (Marine cover note)

பாலிசியை அளிப்பதற்கு தேவையான விஷயங்களான நீராவிக் கப்பலின் பெயர், பேக்கேஜ்களின் எண்ணிக்கை அல்லது சரியான மதிப்பு போன்றவை அறியப்படாத நேரத்தில் வழக்கமாக இது அளிக்கப்படும். ஏற்றுமதியிலும் ஒரு உறை குறிப்பு அளிக்கப்படலாம் எ.கா. கப்பலில் துறைமுகத்திற்கு கொண்டு செல்லவேண்டிய சில பொருட்களின் அளவு பற்றிய விவரம். போதுமான இடம் கப்பலில் இல்லாத போது, அதன் மூலம் பொருட்களை கொண்டு செல்ல சாத்தியமில்லாத நிலை வரக்கூடும். எனவே குறிப்பிட்ட கப்பலில் அனுப்பப்படக்கூடிய பொருட்களின் எண்ணிக்கை அறியப்படாது. இந்த சூழ்நிலையில், ஒரு உறை குறிப்பு அளிக்கப்படும், இதற்கு பிறகு முழு விவரங்களுடன் பாலிசி வழங்கப்படும் மற்றும் காப்பீட்டு நிறுவனத்திடம் அதைப் பற்றி தெரிவிக்கப்படும்.

கடல் சார்ந்த உறை குறிப்பு பின்வரும் வாசகங்களை கொண்டிருக்கலாம்:

i. கடல் சார்ந்த உறை குறிப்பு எண்
ii. வழங்கப்படும் தேதி
iii. காப்பீடு செய்பவரின் பெயர்
iv. செல்லத்தக்க காலம்

“வேண்டுகோளின்படி, நிறுவன கொள்கையின் வழக்கமான நிலைகளுக்கு உட்பட்டு, உங்களுக்கு காப்பீட்டுத் தொகை ரூ. ____________ வரை காப்பு கிடைக்கிறது.“

a) **உட்பிரிவுகள்:** நிலையத்தின் சரக்கு உட்பிரிவுகள் ஏ, பி அல்லது சி, இதில் நிலைய உட்பிரிவுகளின்படி போர் எஸ்ஆர்சிசி (SRCC) அபாயங்கள் இருக்கும். இவை 7 நாட்கள் ரத்து அறிக்கைக்கு உட்படுத்தப்படும்.

b) **நிபந்தனைகள்:** பாலிசி வழங்க, கப்பல் வணிக ஆவணங்கள் கிடைத்தவுடன், கப்பல் சரக்கின் விவரங்களை வழங்கவேண்டும். நீராவிக் கப்பலில் பிரகடனத்தை செய்வதறகு முன்பு/அல்லது

கப்பலில் செல்லும்போது இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால், மதிப்பீட்டின் அடிப்படையாக காப்புறுதி பெறுபவர் பொறுப்பில் உள்ள பொருட்களின் முதன்மை விலை மற்றும் உண்மையில் செலவழிக்கப்பட்ட கட்டணங்கள் இருக்கும் என்று இதன்மூலம் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

உள்ளூரில் எடுத்துச் செல்லப்படுகின்ற சரக்குகளுக்கு பாலிசி வழங்கலுக்கு வழக்கமாக தேவைப்படும் அனைத்து முக்கிய தகவல்களும் கிடைப்பதால், ஒரு உறை குறிப்பு அரிதாக தேவைப்படுகிறது. இருந்தாலும், சில நேரங்களில் பாலிசிகளுக்கு பதிலாக முதலில் உறை குறிப்புகள் வழங்கப்பட்டு, அதற்குப் பிறகு சரக்கின் முழு விவரங்கள் மற்றும் பயண விவரங்களுடன் வழங்கப்படும் பாலிசி மூலம் அது மாறறப்படுகிறது.

## 2. வாகன உறை குறிப்புகள்

இவை குறிப்பிட்ட நிறுவனங்கள் மூலம் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் வழங்கப்பட வேண்டும், மற்றும் ஒரு வாகன உறை குறிப்பின் செயற்படுத்தும் உட்பிரிவு பின்வருமாறு இருக்கும்:

"படிவத்தில் விவரிக்கப்பட்ட காப்பீடை பெறுபவர், கீழேயுள்ளது போல, விவரிக்கப்பட்ட வாகனம்(ங்களுக்கான) காப்பீடிற்காக முன்மொழிந்து மற்றும் பிரீமியமாக ரூ.... யை அளித்திருந்தால், நிறுவனத்தின் வழக்கமான .......பாலிசி (கீழே குறிப்பிட்டுள்ள ஏதேனும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு) படிவத்தின் விதிமுறைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அபாயத்திற்கு எதிராக, நிறுவனத்தால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டு ரத்து செய்யப்படும் வரை காப்பளிக்கப்படுவார்கள். இதற்கு பிறகு காப்பீடு நிறுத்தப்படும் மற்றும் நிறுவனம் காப்பீடை அளித்த காலத்திற்கு மட்டும் இந்த காப்பீடிற்கான பிரீமியம் வசூலிக்கப்படும்.

**வாகன உறை குறிப்பில் பொதுவாக பின்வரும் விவரங்கள் இருக்கும்**:

a) பதிவு குறி மற்றும் எண், அல்லது காப்பீடு செய்த வாகனங்களின் விவரிப்பு / கன கொள்ளளவு / கொண்டு செல்லும் கொள்ளளவு / தயாரிப்பு / தயாரிக்கப்பட்ட வருடம், எஞ்சின் எண், சேஸிஸ் எண்

b) காப்பீடு செய்பவரின் பெயர் மற்றும் முகவரி

c) சட்டத்தின் நோக்கத்திற்காக காப்பீடு துவங்கும் தேதி மற்றும் நேரம். சமயம்......, தேதி......

d) காப்பீடு காலாவதியாகும் தேதி

e) நபர்கள் அல்லது ஓட்ட உரிமையுள்ள நபர்களின் வர்க்கங்கள்

f) பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள்

g) கூடுதல் அபாயங்கள், இருக்குமானால்

வாகன உறை குறிப்பில், மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988 இன் அத்தியாயங்கள் X மற்றும் XI-இன் விதிகளின்படி வழங்கப்படுவதாக ஒரு சான்றிதழும் இணைக்கப்பட்டிருக்கும்.

**முக்கியமானவை**

உறை குறிப்பின் செல்லுபடியாகும் காலம் ஒரு நேரத்தில் 15 நாட்கள் வரை மேலும் நீட்டிக்கப்படலாம், ஆனால், எந்த நிலையிலும் உறை குறிப்பின் செல்லுபடியாகும் காலம் இரண்டு மாதங்களுக்கு மேல் நீட்டிக்கப்படாது.

**குறிப்பு**: ஒவ்வொரு காப்பீட்டாளருக்கும், உறை குறிப்பின் வாசகங்கள் மாறுபடக்கூடும்

நிறைய நிறுவனங்கள் உறை குறிப்புகள் பயன்படுத்தப்படுவதை ஊக்குவிப்பதில்லை. தற்போதுள்ள தொழில்நுட்பங்கள், பாலிசி ஆவணத்தை உடனடியாக அளிக்கும் வசதியை பெற்றிருக்கின்றன.

### 3. காப்பீடின் சான்றிதழ் - வாகன காப்பீடு

சான்று தேவைப்படும் இடங்களில் காப்பீடு இருப்பதற்கான சான்றாக காப்பீடின் சான்றிதழ் பயன்படுகிறது. உதாரணத்திற்கு, வாகன காப்பீடிற்கு, பாலிசியுடன் சேர்த்து மோட்டார் வண்டிகள் சட்டத்திற்கு தேவைப்படுகின்ற காப்பீடு சான்றிதழும் வழங்கப்படும். **இந்த சான்றிதழ் போலீஸ் மற்றும் பதிவு செய்யும் அதிகாரிகளுக்கு சான்றாக செயல்படுகிறது.** தனியார் கார்களுக்கான மாதிரி சான்றிதழ், முக்கிய சிறப்பியல்புகளுடன் கீழே தரப்பட்டுள்ளது.

**மோட்டார் வாகனங்கள் சட்டம், 1988**

**காப்பீடு சான்றிதழ்**

சான்றிதழ் எண் பாலிசி எண்

1. பதிவு குறியீடு மற்றும் எண், பதிவு செய்த இடம், எஞ்சின் எண்/ சேஸிஸ் எண் / தயாரிப்பு / தயாரிக்கப்பட்ட வருடம்.
2. வடிவமைப்பு வகை / C.C / உட்காரும் கொள்ளளவு / மொத்த பிரீமியம்/ பதிவு செய்யும் ஆணையத்தின் பெயர்,
3. புவியியல் பகுதி - இந்தியா. `
4. காப்பீடு பெறுபவர் பிரகடனம் செய்த மதிப்பு (IDV)
5. காப்பீடு பெறுபவரின் பெயர், வியாபாரம் அல்லது பணி.
6. சட்டத்திற்காக, காப்பீடு துவங்கப்படும். ......... தேதி .........மணியிலிருந்து
7. காப்பீடு முடியும் தேதி: ...............அன்று நடு இரவில்
8. நபர்கள் அல்லது ஓட்ட உரிமையுள்ள நபர்களின் வர்க்கங்கள்.

பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று:

a) காப்பீடு செய்தவர்:

b) காப்பீடு செய்தவரின் ஆணையுடன் அல்லது அனுமதியுடன் ஓட்டுபவர்

ஓட்டும் நபர், விபத்து நடக்கும் நேரத்தில் செல்லக்கூடிய ஓட்டுநர் உரிமத்தை பெற்றிருக்கவேண்டும் மற்றும் அத்தகைய உரிமத்தை வைத்திருக்கும் அல்லது பெறும் தகுதியை இழந்திருக்கக்கூடாது. பயில்வோர் உரிமம் வைத்திருப்பவரும் வண்டியை செலுத்தலாம் மற்றும் அந்த நபர் மத்திய மோட்டார் வாகன விதிகள், 1989 விதி 3-இன் தேவையையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**பயன்படுத்துவதற்கான வரம்புகள்**

பாலிசி இவற்றைத் தவிர வேறு நோக்கங்களுக்கு காப்பை அளிக்கும்:

**a)** வாடகைக்காக அல்லது பரிசிற்காக;

b) பொருட்களை வண்டியில் கொண்டு செல்லுதல் (சொந்த பொருட்களைத் தவிர)

c) ஏற்பாடு செய்யப்பட்ட பந்தயம்.(Organized racing)

d) பந்தயத்தை வைத்தல் (Race making)

e) வேக பரிசோதனைக்காக

f) நம்பகத்தன்மை சோதனைகளுக்காக

g) வாகன வணிகத்துடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் காரணம்.

நான்/நாங்கள், இந்த சான்றிதழ் சம்பந்தப்பட்ட பாலிசி மற்றும் காப்பீட்டு சான்றிதழ் ஆகியவை மோட்டார் வாகன சட்டம், 1988-இன் அத்தியாயம் X மற்றும் XI-இன் விதிகளுக்கு ஏற்ப வழங்கப்படுகிறது என்று இதன் மூலம் உறுதியளிக்கிறோம்.

பரிசோதிக்கப்பட்டது.........

(அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டாளர்)

**வாகன காப்பீட்டு சான்றிதழ், சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் கூர்ந்தாய்வு செய்யப்பட, எந்த சமயத்திலும் வண்டியிலேயே வைக்கப்பட வேண்டும்.**

**4. பாலிசி ஆவணம்**

**பாலிசி என்பது காப்பீடு ஒப்பந்தத்திற்கு சான்றாக அளிக்கப்படும் முறைப்படியான ஆவணமாகும்.** இந்த ஆவணத்தில் இந்திய முத்திரை சட்டம், 1899-இன் விதிகளின்படி முத்திரை இடப்பட வேண்டும்.

ஒரு பொது காப்பீட்டு பாலிசியில் வழக்கமாக இருப்பவை:

a) காப்பீடு செய்தவர் மற்றும் அதே விஷயத்தின் மீது காப்பீடுப் பற்று உள்ள வேறு நபர்களின் பெயர்(கள்) மற்றும் முகவரி(கள்);

b) காப்பீடு செய்யப்பட்ட சொத்து அல்லது நலனின் முழு விவரிப்பு;

c) பாலிசியின் கீழ் காப்பளிக்கப்பட்ட சொத்து அல்லது காப்பீடுப் பற்று உள்ள இடம்/ இடங்கள், அத்துடன் காப்பளிக்கப்பட்ட தொகைகளின் விவரம்;

d) காப்பீட்டுக் காலம்;

e) காப்பீட்டுத் தொகைகள்;

f) இழப்பீடு அளிக்கப்படும் இன்னல்கள் மற்றும் விலக்குகள்;

g) ஏதாவது பொருந்தும் உபரி /கழிவுத் தொகைகள்;

h) செலுத்தப்படவேண்டிய பிரீமியம் மற்றும் அந்த பிரீமியம் தற்காலிகமாக சரிப்படுத்தக்கூடியதாக இருந்தால், பிரீமியத்தை சரிப்படுத்துவதற்கான அடிப்படை;

i) பாலிசி விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் உத்திரவாதங்கள்;

j) தற்செயல் நிகழ்வு ஏதேனும் ஏற்பட்டு பாலிசியின் கீழ் இழப்பீடு பெறும் வாய்ப்பு வரும்போது காப்பீடு செய்பவர் செய்யவேண்டிய செயல்;

k) காப்பீடு எடுக்கப்பட்ட விஷயத்துடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் ஒரு நிகழ்வு ஏற்பட்டு அதற்காக இழப்பீடு பெறுவதற்கான காப்பீடு செய்பவரின் கடமைகள் மற்றும் அந்த சூழ்நிலையில் காப்பீட்டாளரின் உரிமைகள்;

l) ஏதேனும் சிறப்பு நிபந்தனைகள்;

m) திரித்துக் கூறுதல், ஏமாற்றுதல், அடிப்படை உண்மைகளை மறைத்தல் அல்லது காப்பீட்டாளருக்கு ஒத்துழைப்பு தராதது ஆகியவற்றால் பாலிசியை ரத்து செய்யும் ஏற்பாடு;

n) பாலிசி சம்பந்தப்பட்ட எல்லா தகவல்களும் அனுப்பப்படவேண்டிய காப்பீடு செய்பவரின் முகவரி;

o) சேர்த்த கூடுதல் காப்புகள் மற்றும்/ அல்லது மேற்குறிப்புகள் ஏதேனும் இருப்பின் அவற்றின் விவரங்கள்;

p) குறை தீர்க்கும் செயல்முறை மற்றும் குறைதீர்ப்பாளர் முகவரி பற்றிய விவரங்கள்

**சுய-பரீட்சை** 2

பின்வரும் கூற்றுகளில் எது உறை குறிப்புகளைப் பற்றிய உண்மையை கூறுகிறது?

I. உறை குறிப்புகள் முக்கியமாக ஆயுள் காப்பீடில் பயன்படுத்தப்படுகின்றன

II. உறை குறிப்புகள் முக்கியமாக எல்லா பொது காப்பீட்டு பிரிவுகளிலும் பயன்படுத்தப்படுகின்றன

III. உறை குறிப்புகள் முக்கியமாக உடல்நலக் காப்பீடில் பயன்படுத்தப்படுகின்றன

IV. உறை குறிப்புகள் முக்கியமாக, பொது காப்பீட்டின் கடல் சார்ந்த மற்றும் வாகனப் பிரிவுகளில் பயன்படுத்தப்படுகின்றன

---

## E. உத்தரவாதங்கள்

**உத்திரவாதம் என்பது ஒப்பந்தத்தின் செல்லுபடித்தன்மைக்காக உரிய முறைப்படி பாலிசியில் திட்டவட்டமாக தெரிவிக்கப்படும் மற்றும் கட்டாயமாக இணங்கப்படவேண்டிய விஷயம். உத்திரவாதம் என்பது தனியான ஆவணம் இல்லை. இது உறை குறிப்புகள் மற்றும் பாலிசி ஆவணம் ஆகிய இரண்டிலும் உள்ள ஒரு பாகமாகும்**. இது ஒப்பந்தத்திற்கு முன்மாதிரியாக இருக்கும் நிலையாகும். அபாயத்துடன் சம்பந்தப்பட்டோ இல்லையோ, இது கட்டாயம் பின்பற்றப்படவேண்டும்.

உத்திரவாதம் மீறப்பட்டால், அது இழப்பிற்கான காரணமாக தெளிவாக நிரூபிக்கப்படாவிட்டாலும், காப்பீட்டாளர்களின் விருப்பப்படி பாலிசி செல்லாததாகி விடும். இருப்பினும், நடைமுறையில், உத்திரவாதத்தின் அத்துமீறலுக்கான காரணம் தொழில்நுட்பரீதியானதாக இருந்தாலும், அது எந்த வழியிலும் இழப்பிற்கு காரணமாக அல்லது இழப்பை அதிகரிக்காமல் இருந்தால், காப்பீட்டாளர்கள் தங்கள் உசிதப்படி அந்த ஈடுக்கோரல்களை நிறுவன பாலிசியின் விதிமுறைகள் மற்றும் வழிமுறைகளுக்கு ஏற்ப செயல்படுத்தலாம்.

1. **தீ காப்பீடுகளுக்கான உத்திரவாதங்கள்** (சில எடுத்துக்காட்டுகள்) **கீழே கொடுக்கப்பட்டுள்ளன**

உத்திரவாதம் அளிக்கப்பட்டிருந்தால், பாலிசி காலத்தில் ஆபத்து விளைவிக்கக்கூடிய எந்த பொருட்களும் காப்பீடு செய்யப்படும் இடத்தில் சேமித்து வைக்கப்படக்கூடாது.

**அமைதியான அபாயம்:** உத்திரவாதம் அளிக்கப்பட்டிருந்தால், காப்பீடு செய்யப்பட்ட இடத்தில் தொடர்ச்சியாக 30 நாட்களுக்கு அல்லது அதற்கு மேல் உற்பத்தி நடவடிக்கைகளை செய்யக்கூடாது.

**சிகரெட் ஃபில்டர் தயாரித்தல்**: உத்திரவாதம் அளிக்கப்பட்டிருந்தால், அந்த இடத்தில் $30^0$C-க்கு கீழே தீப்பற்றக்கூடிய எந்த கரைப்பானும் பயன்படுத்த/ சேமிக்கப்படக்கூடாது

2. **கடல் சார்ந்த காப்பீடில், உத்திரவாதம்** வரையறை பின்வருமாறு உள்ளது. "ஒரு உறுதிமொழி உத்திரவாதத்தில், உறுதிப்படுத்துபவர் ஒரு விஷயம் நடக்கும் அல்லது நடக்காது அல்லது ஒரு நிபந்தனை பூர்த்தி செய்யப்படும் என ஏற்கிறார், அல்லது குறிப்பிட்ட உண்மை நிலைகள் இருப்பதை ஏற்கிறார் அல்லது மறுக்கிறார்"

**கடல் சார்ந்த சரக்கு காப்பீடில்** (Marine Cargo Insurance), தகரத்தால் பூசப்பட்ட பெட்டிகளில் வைக்கப்படும் பொருட்களுக்கு (எ.கா. தேநீர்) மட்டும் என உத்திரவாதம் அளிக்கப்படுகிறது. **கடல் சார்ந்த கப்பல் வெளிசுவர் காப்பீடில்** (Marine Hull insurance), அளிக்கப்படும் உத்திரவாதம் மூலம், காப்பீடை பெற்ற கப்பல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் செல்லாது என குறிப்பிட்டால், அது காப்பீட்டை வழங்குவதற்கு காப்பீட்டாளர் ஒப்புக்கொண்ட அபாயத்தின் அளவைப் பற்றி அவருக்கு ஒரு புரிதலை அளிக்கிறது. உத்திரவாதம் மீறப்பட்டால், ஒப்புக்கொண்ட அபாயம் மாறிவிடுகிறது மற்றும் மீறப்பட்ட நாளிலிருந்து கடப்பாடுகளிலிருந்து விலகிக் கொள்ள காப்பீட்டாளர் அனுமதிக்கப்படுவார்.

3. **பெருங்கொள்ளை காப்பீடில்** (Burglary Insurance), சொத்து இருபத்தி நாலு மணி நேரமும் காவலாளியால் கவனிக்கப்படுவதற்காக உத்திரவாதம் அளிக்கப்படும். பாலிசியுடன் இணைக்கப்பட்ட உத்திரவாதங்களுக்கு இணங்கினால் மட்டுமே விலைகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை ஒரே மாதிரி தொடர்ந்து இருக்கும்.

**சுய-பரீட்சை** 3

ஒரு உத்திரவாதத்தை பொறுத்தவரை, கீழேயுள்ள எந்த கூற்று சரியானதாக இருக்கும்?

I. உத்திரவாதம் பாலிசியில் தெரிவிக்கப்படாமல் செயல்படுத்தப்படும் ஒரு நிபந்தனை

II. உத்திரவாதம் பாலிசியில் திட்டவட்டமாக தெரிவிக்கப்படும் நிபந்தனை

III. ஒரு உத்திரவாதம் என்பது ஒரு பாலிசியில் திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்ட ஒரு நிபந்தனையாகும் மற்றும் காப்பீடு செய்பவருக்கும் தனியாக தெரிவிக்கப்படும் மற்றும் பாலிசி ஆவணத்தின் ஒரு பகுதியாக இருக்காது.

IV. ஒரு உத்திரவாதம் மீறப்பட்டால் கூட, ஈடுக்கோரல்கள் வழங்கப்படலாம்.

---

## F. மேற்குறிப்புகள்

பாலிசிகளை தரமான வடிவத்தில் வழங்குவது காப்பீட்டாளர்களின் பழக்கமாகும்; இதில் சில இன்னல்களுக்கு காப்பளிக்கலாம் மற்றும் சில விலக்கப்படலாம்.

### வரையறை

வழங்கப்படும்போது, பாலிசியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றப்பட வேண்டுமானால், அது மேற்குறிப்பு என்ற ஆவணம் மூலம் திருத்தல்கள்/மாற்றங்களை அமைத்து செய்யப்படுகிறது.

---

இது பாலிசியுடன் இணைக்கப்படும் மற்றும் அதன் பாகமாக இருக்கும். பாலிசி மற்றும் மேற்குறிப்பு இரண்டும் சேர்ந்து ஒப்பந்தத்தின் சான்றாக அமையும். பாலிசி காலத்தில் மாற்றங்கள்/திருத்தல்களை பதிவு செய்வதற்காக மேற்குறிப்புகள் வழங்கப்படலாம்.

அடிப்படை தகவல்கள் மாறும்போதெல்லாம், காப்பீடு செய்பவர் காப்பீடு நிறுவனத்திடம் அதை தெரிவிக்க வேண்டும் மற்றும் நிறுவனம் இதை குறித்துக்கொண்டு, அதை காப்பீடு ஒப்பந்தத்தின் பாகமாக மேற்குறிப்பு மூலம் சேர்த்து அதை செயல்படுத்த வேண்டும்.

பாலிசியின் கீழ் தேவைப்படும் மேற்குறிப்புகள் இவற்றுடன் சம்பந்தப்படுபவை:

a) அல்லது முகவரி போன்றவற்றில் மாற்றம்
b) விற்பனை, அடமானம் போன்றவற்றின் மூலம் காப்பீடுப் பற்றில் மாற்றம்.
c) கூடுதல் ஆபத்துகளுக்கு காப்பளிக்க காப்பீட்டின் நீட்டிப்பு/ பாலிசி காலத்தின் நீட்டிப்பு
d) அபாயத்தில் மாற்றம், எ.கா. கட்டுமானத்தில் மாற்றம், அல்லது தீ காப்பீட்டில் கட்டிடத்தின் குடியிருப்பு
e) சொத்தை வேறொரு இடத்திற்கு இடமாற்றுதல்
f) காப்பீட்டை ரத்து செய்தல்
g) பெயர் அல்லது முகவரி போன்றவற்றில் மாற்றம்.

**மாதிரி**

விளக்குவற்காக, மேற்குறிப்புகளின் சில மாதிரி வாசகங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

**ரத்து செய்தல்**

காப்பீடு செய்பவரின் வேண்டுகோளிற்கு இணங்க, இந்த பாலிசி மூலம் கிடைக்கும் காப்பீடு ………லிருந்து ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. காப்பீடு ………மாதங்களுக்கு மேல் அமலில் இருந்தது, காப்பீடு செய்தவருக்கு திருப்பித்தர எந்த தொகையும் பாக்கியில்லை.

**<u>பாதுகாப்பு வழங்கப்பட்ட சரக்கு மதிப்பில் அதிகரிப்பு</u>:**

இந்த பாலிசியின் கீழ் காப்பளிக்கப்பட்ட சரக்கின் மதிப்பு அதிகரித்திருப்பதை காப்பீடு செய்பவர் மூலம் தெரிவிக்கப்பட்டதால், காப்பீட்டுத் தொகை அதற்கேற்ப பின்வருமாறு ரூ……ஆக மாற்றப்படும்:

இதில்(விவரிக்கவும்) ரூ.

இதில்(விவரிக்கவும்) ரூ.

இதை கருத்தில் கொண்டு, கூடுதல் பிரீமியம் இதன் மூலம் கோரப்படுகிறது.

மேலும் இனி கூடுதல் ஆண்டு பிரீமியமானது ரூ……….

மொத்த காப்பீடு இப்போது ரூ........ஆக இருக்கும்.

இந்த பாலிசியின் விதிமுறைகள், ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மற்றபடி உட்படும்.

**கடல் சார்ந்த பாலிசியில் தொடர்பற்ற இன்னலுக்காக காப்பை நீட்டித்தல்**

காப்பீடு செய்பவர் கோரிய மாதிரி, மேலேயுள்ள பாலிசியின் கீழ் உடைப்புக்கான அபாயத்தையும் சேர்ப்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது.

இதை கருத்தில் கொண்டு, கூடுதல் பிரீமியம் ரூ. ....... கோரப்படுகிறது.

**சுய-பரீட்சை** 4

வழங்கப்படும் சமயத்தில் பாலிசியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றப்பட, அது ________ மூலம் அமைக்கப்பட்டு செய்யப்படுகிறது.

I. உத்திரவாதம்
II. மேற்குறிப்பு
III. திருத்தம்
IV. திருத்தியமைப்பது சாத்தியமில்லை

## G. பாலிசிகளின் பொருள் விளக்கத்தை அளித்தல்

காப்பீடு ஒப்பந்தங்கள் எழுத்து மூலம் தெரிவிக்கப்படும் மற்றும் காப்பீட்டு பாலிசியின் வாசகங்கள் காப்பீட்டாளர்களால் வரைவு செய்யப்படும். இந்த பாலிசிகள் பல்வேறு நீதிமன்றங்களால் நிறுவப்பட்ட கட்டுமான அல்லது விளக்கத்தின் சில நன்கு வரையறுக்கப்பட்ட விதிகளின்படி விளக்கப்பட வேண்டும். கட்டமைப்பின் மிக முக்கியமான விதிப்படி, சம்பந்தப்பட்ட தரப்புகளின் நோக்கம் மேலோங்க வேண்டும் மற்றும் இந்த நோக்கம் பாலிசியிலேயே தெளிவாக தெரியவேண்டும். இந்த பாலிசி தெளிவற்ற அர்த்தத்துடன் வழங்கப்பட்டிருந்தால்,

நீதிமன்றங்களில் காப்பீடு செய்பவருக்கு சாதகமாக மற்றும் காப்பீட்டாளருக்கு எதிராக பொருள் விளக்கம் அளிக்கப்படும்.

பின்வரும் விதிகளுக்கு ஏற்ப **பாலிசி வாசகங்கள்** புரிந்துகொள்ளப்படும் மற்றும் பொருள் விளக்கம் அளிக்கப்படும்:

a) அப்படி செய்வதில் ஒவ்வாமை ஏற்பட்டாலே தவிர, ஒரு திட்டவட்டமான நிபந்தனை மறைமுகமாக குறிப்பிடப்பட்ட நிபந்தனையின் கட்டுப்பாட்டை நீக்கிவிடும்.

b) வழக்கமான அச்சிடப்பட்ட பாலிசி படிவத்திற்கும் தட்டச்சு செய்யப்பட்ட அல்லது கையால் எழுதப்பட்ட பகுதிகளுக்கு மத்தியில் முரண்பாடுகள் இருந்தால், தட்டச்சு செய்யப்பட்ட அல்லது கையால் எழுதப்பட்ட பகுதி குறிப்பிட்ட ஒப்பந்தத்திலுள்ள தரப்புகளின் நோக்கத்தை தெரிவிப்பதாக கருதப்படும், மற்றும் அவற்றின் அர்த்தங்கள் உண்மையான அச்சிடப்பட்ட வார்த்தைகளை மறுக்கும்.

c) ஒரு மேற்குறிப்பு, ஒப்பந்தத்தின் வேறு பாகங்களுடன் முரண்பட்டால், கடைசியாக வந்த ஆவணமாக இருப்பதால் மேற்குறிப்பின் அர்த்தம் தான் மேலோங்கி இருக்கும்.

d) முரண்பாடாக இருக்கும் பட்சத்தில், சரிவாக எழுதப்பட்ட கூறுகள் சாதாரணமாக அச்சிடப்பட்ட வாசகங்களின் கட்டுப்பாடுகளை நீக்குவதாக இருக்கும்.

e) பாலிசியின் ஓரத்தில் அச்சிடப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட கூறுகள், பாலிசியின் நடுவில் இருப்பதை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும்.

f) பாலிசியில் இணைக்கப்பட்ட அல்லது ஒட்டப்பட்ட கூறுகள், ஓரத்திலுள்ள கூறுகள் மற்றும் பாலிசியின் நடுவிலுள்ள கூறுகளின் கட்டுப்பாட்டை நீக்குவதாக இருக்கும்.

g) தட்டச்சு செய்யப்பட்ட வார்த்தைகள் அல்லது மையுள்ள இரப்பர் முத்திரையால் பதிக்கப்பட்டிருக்கும் வார்த்தைகள், அச்சிடப்பட்ட வாசகத்தின் கட்டுப்பாட்டை நீக்குவதாக இருக்கும்

h) கையால் எழுதப்பட்டவை தட்டச்சு செய்யப்பட்ட அல்லது பதிக்கப்பட்ட வாசகங்களைவிட மேலோங்கி இருக்கும்.

i) இறுதியாக, ஏதேனும் தடுமாற்றம் அல்லது தெளிவின்மை இருந்தால், இலக்கணம் மற்றும் நிறுத்தற்குறியின் சாதாரண விதிகள் செயல்படுத்தப்படும்.

## முக்கியமானவை

### 1. பாலிசிகளை உருவாக்குதல்

காப்பீட்டு பாலிசி என்பது வணிக ஒப்பந்தத்தின் சான்றாகும் மற்றும் எல்லா ஒப்பந்தங்களிலும் இருப்பது போலவே காப்பீட்டு ஒப்பந்தத்திற்கும் நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்படும் கட்டமைப்பு மற்றும் பொருள் விளக்கத்தின் பொது விதிகள் பொருந்தக்கூடியதாக இருக்கும்.

கட்டமைப்பின் முக்கிய கோட்பாடின் படி, ஒப்பந்தம் செய்பவர்களின் நோக்கம் மேலோங்கி இருக்கவேண்டும், மற்றும் அந்த நோக்கம், பாலிசி ஆவணம், முன்மொழிவு படிவம், உட்பிரிவுகள், மேற்குறிப்புகள், உத்திரவாதங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்படவேண்டும். இவை பாலிசியுடன் இணைக்கப்பட்டு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக விளங்கவேண்டும்.

### 2. வாசகங்களின் அர்த்தங்கள்

பயன்படுத்தப்படும் வாசகங்கள், எளியதாக மற்றும் பிரபலமாக அர்த்தம் புரியும் வகையில் இருக்கவேண்டும். **வாசகங்களில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் எந்த சாதாரண நபரும் புரிந்துகொள்ளும் வகையில் இருக்கவேண்டும். எனவே, "தீ" என்பது நெருப்பு அல்லது நிஜமாக எரிவதைக் குறிக்கும்.**

மறுபுறம், **வேறு சூழலை** சுட்டிக்காட்டப் பட்டிருந்தாலே **தவிர, பொதுவான வியாபாரம் அல்லது வணிக அர்த்தமுள்ள வார்த்தைகள் அதற்கான அர்ததத்துடன் புரிந்துகொள்ளப்படும்.** சட்டவிதிகளில் வரையறை செய்யப்பட்டிருந்தால், அதே மாதிரி வார்த்தைகளின் அர்த்தம் பயன்படுத்தப்படும். உதாரணத்திற்கு இந்திய குற்றவியல் நடைமுறை சட்டத்தில் (Indian Penal Code) உள்ள மாதிரியே "திருட்டு" என்ற வார்த்தை பொருள் கொள்ளப்படும்.

காப்பீட்டு பாலிசிகளில் பயன்படுத்தப்படும் நிறைய வார்த்தைகள், முன்புள்ள சட்டத் தீர்மானங்களின்படி பயன்படுத்தப்படும் மற்றும் உயர் நீதிமன்றங்களின் அந்த தீர்மானங்கள் கீழ் நீதிமன்றங்களின் தீர்மானங்களையும் கட்டுப்படுத்தும். தொழில்நுட்ப வார்த்தைகளுக்கு, முரண்பாடான அர்த்தம் சுட்டிக்காட்டப் பட்டிருந்தாலே தவிர தொழில்நுட்ப அர்த்தங்களே கொடுக்கப்பட வேண்டும்.

## H. புதுப்பித்தல் அறிவிப்பு

**பெரும்பாலான பொதுக் காப்பீட்டு பாலிசிகள் வருடாந்திர அடிப்படையில் காப்பீடு செய்யப்படும்.**

காப்பீடு செய்பவரிடம் அவருடைய பாலிசி, குறிப்பிட்ட தேதியில் காலாவதி அறிவதை அறிவிக்கும் கடமை சட்டரீதியாக காப்பீட்டாளர்களுக்கு இல்லை என்றாலும், ஒரு மரியாதைக்காக மற்றும் நல்ல வியாபார வழக்கத்திற்காகவும், காப்பீட்டாளர்கள் காலாவதியாகும் தேதியைக் குறிப்பிட்டு, பாலிசிக்கு புதுப்பித்தல் அறிவிப்பையும் முன்கூட்டியே வழங்கி பாலிசியை புதுப்பிக்குமாறு அழைப்பார்கள். இந்த அறிவிப்பில் எல்லா முக்கிய விஷயங்களும் இருக்கும் அதாவது காப்பீட்டுத் தொகை, ஆண்டு பிரீமியம் போன்றவை. அதில் அபாயம் பற்றிய ஏதேனும் முக்கிய மாற்றங்கள் இருக்குமானால், அதை தெரிவிக்குமாறு காப்பீடு செய்பவரிடம் அறிவிப்பதும் ஒரு வழக்கமாகும்.

வாகன புதுப்பித்தல் அறிக்கையில், உதாரணத்திறகு, தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப காப்பீட்டுத் தொகையை (அதாவது காப்பீடு செய்பவர் அறிவித்த வாகனத்தின் மதிப்பீடு) திருத்துவது, காப்பீடு செய்பவரின் கவனத்திற்கு, கொண்டுவரப்பட வேண்டும்.

பிரீமியம் முன்கூட்டியே செலுத்தப்படும் வரை அபாயம் ஏற்கப்படாது எனும் சட்டரீதியான ஏற்பாடும் காப்பீடு செய்பவரின் கவனத்திற்கு, கொண்டுவரப்பட வேண்டும்.

**சுய-பரீட்சை 5**

கீழேயுள்ள எந்த கூற்று புதுப்பித்தல் அறிவிப்பு விஷயத்தில் சரியானது?

I. ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப, பாலிசி முடிவதற்கு 30 நாட்களுக்கு முன்பாகவே காப்பீடு செய்பவருக்கு புதுப்பித்தல் அறிவிப்பு அனுப்புவது காப்பீட்டாளர்களின் சட்டப்பூர்வமான கடமையாகும்

II. ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப, பாலிசி முடிவதற்கு 15 நாட்களுக்கு முன்பாகவே காப்பீடு செய்பவருக்கு புதுப்பித்தல் அறிவிப்பு அனுப்புவது காப்பீட்டாளர்களின் சட்டப்பூர்வமான கடமையாகும்

III. ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப, பாலிசி முடிவதற்கு 7 நாட்களுக்கு முன்பாகவே காப்பீடு செய்பவருக்கு புதுப்பித்தல் அறிவிப்பு அனுப்புவது காப்பீட்டாளர்களின் சட்டப்பூர்வமான கடமையாகும்

IV. ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப, காப்பீடு செய்பவரிடம் அவருடைய பாலிசி, குறிப்பிட்ட தேதியில் முடிவதை அறிவிக்கும் கடமை சட்டப்பூர்வமாக காப்பீட்டாளர்களுக்கு இல்லை.

---

**சுருக்கம்**

**a)** ஆவணமாக்கலின் முதல் கட்டமாவது முன்மொழிவு படிவங்களாகும், இதன் மூலம் காப்பீடு செய்பவர் அவரைப் பற்றி தெரிவிப்பார்

**b)** தகவல்களை வெளிப்படுத்தும் கடமை, பாலிசி துவங்குவதற்கு முன்பே துவங்கி, ஒப்பந்தம் முடிந்த பிறகும் தொடரும்.

**c)** காப்பீட்டு நிறுவனங்கள், பொதுவாக முன்மொழிவு படிவத்தின் இறுதியில் பாலிசிதாரர் கையெழுத்திட ஒரு பிரகடனத்தை சேர்ப்பார்கள்.

**d)** முன்மொழிவு படிவத்தின் கூறுகள்:

i. முன்மொழிபவரின் முழு பெயர்

ii. முன்மொழிபவரின் முகவரி மற்றும் தொடர்பு விவரங்கள்

iii. முன்மொழிபவரின் தொழில், பணி அல்லது வணிகம்

iv. காப்பீடு செய்யப்படும் விஷயத்தின் விளக்கங்கள் மற்றும் அடையாளம்

v. காப்பீட்டுத் தொகை
vi. முன்புள்ள மற்றும் தற்போதுள்ள காப்பீடு
vii. இழப்பு அனுபவம்
viii. காப்பீடு செய்பவரின் பிரகடனம்

e) இடைத்தரகராக இருக்கும் முகவருக்கு, காப்பீடு செய்பவர் காப்பீட்டாளரிடம் அபாயம் சம்பந்தப்பட்ட எல்லா தகவல்களையும் வழங்குவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு உள்ளது.

f) முன்மொழிவை கூர்ந்தாய்வு செய்து ஏற்பளிப்பதைப் பற்றி தீர்மானிக்கும் செயல்முறைக்கு காப்பீடு ஏற்பளிப்பு என்று பெயர்.

g) பிரீமியம் என்பது, காப்பீடு ஒப்பந்தத்தின் கீழ், ஒரு பொருளை காப்பீடு செய்வதற்காக காப்பீட்டாளருக்கு காப்பீடு பெறுபவரால் செலுத்தப்படும் கருதுகை அல்லது தொகையாகும்

h) பிரீமியம், ரொக்கமாகவோ, வங்கியால் ஏற்கப்படும் எந்த முறையிலும், தபால் வழியான பண அஞ்சலாகவோ, கடன் அல்லது பற்று அட்டைகள் (Credit or debit cards) மூலம், இணையத்தின் மூலமாகவோ, ஈ-டிரான்ஸ்பெர் மூலமாகவோ, நேரடி கிரெடிட் (direct credit) மூலமாகவோ, அல்லது ஐஆர்டிஏஐ அவ்வப்போது அங்கீகரிக்கும் வேறு எந்த முறையிலும் செலுத்தப் படலாம்.

i) ஒரு உறை குறிப்பு என்பது பாலிசி தயாரிக்கப்படும் போதோ அல்லது காப்பீடிற்கான ஒப்பந்தப் பேச்சு நடத்தப்படும்போதோ, மற்றும் தற்காலிகமாக காப்பீட்டின் காப்பு தேவைப்படும்போது வழங்கப்படுகிறது.

j) கடல் சார்ந்த மற்றும் வாகன பிரிவு வணிகங்களில் முக்கியமாக உறை குறிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

k) காப்பீடு இருப்பதாக சான்று தேவைப்படும் இடங்களில், காப்பீட்டுச் சான்றிதழ் அதை நிரூபிக்கிறது.

l) பாலிசி என்பது காப்பீட்டு ஒப்பந்தத்தின் சான்றை அளிக்கின்ற முறையான ஆவணமாகும்.

m) உத்திரவாதம் என்பது ஒப்பந்தத்தின் செல்லுபடித்தன்மைக்காக உரிய முறைப்படி பாலிசியில் திட்டவட்டமாக தெரிவிக்கப்படும் மற்றும் கட்டாயமாக இணங்கப்பட வேண்டிய நிபந்தனை ஆகும்.

**n)** வழங்கப்படும்போது, பாலிசியின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றப்பட வேண்டுமானால், அது மேற்குறிப்பு என்ற ஆவணம் மூலம் திருத்தல்கள்/மாற்றங்களை அமைத்து செய்யப்படுகிறது.

**o)** பாலிசி உருவாக்கத்தின் மிக முக்கியமான விதியாவது, நபர்களின் நோக்கம் மேலோங்கி இருக்கவேண்டும், மற்றும் இந்த நோக்கம் பாலிசியிலேயே காட்டப்படவேண்டும் என்பதாகும்.

## முக்கியமான வார்த்தைகள்

a) முன்மொழிவு படிவம்

b) ப்ரீமியத்தை முன்கூட்டியே செலுத்துதல்

c) உறை குறிப்பு

d) காப்பீடின் சான்றிதழ்

e) புதுப்பித்தல் அறிவிப்பு

f) உத்திரவாதம்

## சுய-பரீட்சையின் பதில்கள்

**பதில்** 1 - **சரியான பதில் விருப்பம்** II.

**பதில்** 2 - **சரியான பதில் விருப்பம்** IV.

**பதில்** 3 - **சரியான பதில் விருப்பம்** II.

**பதில்** 4 - **சரியான பதில் விருப்பம்** II.

**பதில்** 5 - **சரியான பதில் விருப்பம்** IV.

# அத்தியாயம் G-02

# ஏற்பளிப்பு மற்றும் விலை உருவாக்கம்

## அத்தியாய அறிமுகம்

பொது காப்பீடு தொடர்பான பல்வேறு கருத்துக்கள் மற்றும் கோட்பாடுகளை நாங்கள் கற்றுக்கொண்டோம். ஏற்பளிப்பு என்பது அபாயத்தை ஏற்கலாமா வேண்டாமா என்பதை காப்பீட்டாளர் தீர்மானிக்கும் செயல்முறையாகும். இதற்காக, ஏற்பாளர்கள் அபாயத்தை பகுப்பாய்வு செய்கிறார்கள். அபாயத்தில் உள்ள அபாய அளவை மற்றும் பிரீமியமாக எவ்வளவு பணம் வசூலிக்க வேண்டும் என்பதை அவர்கள் புரிந்துகொள்கிறார்கள். மீண்டும், சில நேரங்களில் அபாயத்தை மேம்படுத்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு மட்டுமே அபாயங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் கோணங்கள் அனைத்தும் இந்த அத்தியாயத்தில் விவாதிக்கப்படுகின்றன.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. உடல்சார் ஆபத்துகள்
B. உடல்சார் ஆபத்துகள் - அபாய மேலாண்மை, உட்பிரிவுகள் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றின் முக்கியத்துவம்
C. உபரி/கழிவுகளைத் தீர்மானித்தல் மற்றும் காப்பளிப்பை கட்டுப்படுத்துதல்
D. நெறிமுறைசார் ஆபத்து
E. காப்பீட்டுத் தொகையை நிர்ணயித்தல்

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:

1. உடல்சார் ஆபத்துகளைப் புரிந்து கொள்ள முடியும்
2. ஏற்பளிப்பை ஒரு செயல்பாடாக மதிப்பிட முடியும்
3. ஆபத்தைக் குறைப்பதற்கு ஏற்பாளர்கள் பயன்படுத்தும் முறைகள்
4. காப்பீட்டுத் தொகை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

## A. உடல்சார் ஆபத்துகள்

சொத்துக்கு அல்லது நபர்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு ஆபத்துகள் குறித்த முழுமையான அறிவு ஏற்பளிப்புக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும்.

உடல்சார்ந்த ஆபத்துகள் முன்மொழிவுப் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களிலிருந்து உறுதி செய்யப்படுகின்றன. இதை அபாயம் குறித்த ஒரு கணக்கீட்டின் மூலமோ அல்லது ஆய்வின் மூலமோ சிறப்பாக உறுதிப்படுத்த முடியும். பல்வேறு காப்பீட்டு வகைகளில் உள்ள உடல்சார் ஆபத்துகளின் சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

### a) தீ விபத்து

i. **கட்டமைப்பு**: கட்டமைப்பு என்பது சுவர்களிலும் கூரைகளிலும் பயன்படுத்தப்படும் கட்டுமானப் பொருட்களைக் குறிக்கின்றது. மரக் கட்டிடத்தை விட கான்கிரீட் கட்டிடம் சிறந்ததாகும்.

ii. **உயரம்**: மாடிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, தீயை அணைப்பதில் உள்ள சிரமத்தின் காரணமாக, அதனால் விளையும் ஆபத்தும் அதிகமானதாக இருக்கும். அதோடு, அதிக மாடித்தளங்களைக் கொண்டுள்ள கட்டிடங்களில் மேல்புறத் தளங்கள் இடிந்து விழுந்து அதிக சேதத்தை ஏற்படுத்தக்கூடிய அபாயம் உள்ளது.

iii. **தளங்களின் இயல்பு**: மரத்தாலான தளங்கள் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்றவை. அதோடு, தீ விபத்து ஏற்படும் சமயங்களில் மரத்தாலான தளங்கள் எளிதாக இடிந்து விழுவதால், மேல் தளங்களிலிருந்து இயந்திரங்கள் அல்லது பொருட்கள் விழுவதன் காரணமாக கீழ்த்தளங்களில் உள்ள சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுகின்றது.

iv. **குடியிருக்கை**: கட்டிடத்தின் குடியிருக்கை, மற்றும் அது பயன்படுத்தப்படும் நோக்கம். குடியிருக்கையிலிருந்து பல்வேறு வகையான ஆபத்துகள் எழுகின்றன.

v. **தீப்பற்றுதல் ஆபத்து**: வேதிப்பொருட்கள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் அல்லது பயன்படுத்தப்படும் கட்டிடங்கள் அதிக **தீ விபத்து ஆபத்துக்கு** உட்படுகின்றன. மரத்தாலான முற்றம் **அதிக தீப்பற்றுதல் ஆபத்தை** கொண்டுள்ளது, ஏனெனில் தீ எரியத் தொடங்கியவுடன் மரக்கட்டை விரைவில் எரிந்துவிடுகின்றது. தீ விபத்து ஏற்படும் சமயத்தில் உள்ளடக்கங்கள் அதிக சேதத்துக்கு உட்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, காகிதம், ஆடைகள் போன்றவை தீ விபத்து சேதத்தால் மட்டுமல்லாது, தண்ணீர், வெப்பம் போன்றவற்றாலும் எளிதில் சேதமடையும்.

vi. **தயாரிப்பு செயல்முறை**: இரவு நேரத்தில் வேலை செய்யும்போது, செயற்கை விளக்குகளைப் பயன்படுத்துதல், இயந்திரங்களின் உராய்வுக்கு வழிவகுக்கக்கூடிய தொடர்ச்சியான பயன்பாடு மற்றும் களைப்பின் காரணமாக தொழிலாளர்களின் கவனமின்மைக்கான வாய்ப்பு ஆகியவற்றின் காரணமாக ஆபத்துக்கான அபாயம் அதிகரிக்கிறது.

vii. **சூழ்நிலை/ அபாயமுள்ள இடம்**: நெருக்கடியான பகுதியில் அமைந்திருப்பது, ஆபத்து நிறைந்த அருகாமை வளாகங்களின் தொடர்பு மற்றும் தீயணைப்புத் துறையினரிடமிருந்து தொலைவில் அமைந்திருப்பது ஆகியவை இயற்பியர் ஆபத்துக்கான (Physical Hazard) உதாரணங்கள்.

**b) கடல் சார்ந்தவை**

i. **கப்பலின் வயது மற்றும் நிலைமை**: பழைய கப்பல்கள் அதிக ஆபத்துகளைக் கொண்டுள்ளன.

ii. **மேற்கொள்ள வேண்டிய கடற்பயணம்**: கடற்பயணத்தின் வழி, சரக்கேற்றுதல் மற்றும் இறக்குதல் நிலைமைகள் மற்றும் துறைமுகங்களில் உள்ள கிடங்கு வசதிகள் ஆகியவை காரணிகளாகும்.

iii. **சரக்கிருப்புகளின் தன்மை**: அதிக மதிப்புள்ள பொருட்கள் திருடப்படுவதற்கான வாய்ப்புள்ளது; இயந்திரங்கள் எடுத்துச் செல்லப்படும்போது உடைந்துவிடுவதற்கான வாய்ப்புள்ளது.

iv. **பொதியிடல் முறை**: பேல்களில் கட்டப்படும் சரக்குகள் பைகளில் கட்டப்படும் சரக்குகளை விடச் சிறந்ததாகக் கருதப்படுகின்றன. மேலும், ஒற்றைப் பைகளை விட இரட்டைப் பைகள் பாதுகாப்பானவை.

பழைய டிரம்களில் அடைக்கப்பட்டுள்ள திரவ நிலையில் உள்ள சரக்குகள் மோசமான இயற்பியர் இன்னலை விளைவிக்கின்றன.

c) **மோட்டார்**

i. **வாகனத்தின் வயது அதாவது எவ்வளவு பழையது மற்றும் அதன் நிலைமை**: பழைய வாகனங்களில் விபத்துக்கள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

ii. **வாகனத்தின் வகை**: பந்தயக் கார்கள் அதிகமான உடல்சார் ஆபத்துக்கு உட்படுகின்றன.

d) **கொள்ளை**

i. **சரக்கிருப்புகளின் தன்மை**: சிறிய அளவிலான அதிக மதிப்புக்கொண்ட பொருட்கள் (எ.கா. நகைகள்) மற்றும் எளிதில் விற்க முடிகின்ற பொருட்கள் மோசமான அபாயங்களாக கருதப்படுகின்றன.

ii. **சூழ்நிலை**: மேல் தளத்தில் உள்ள அபாயங்களை விட தரைத்தளத்தில் அபாயங்கள் அதிகம்: தனியான பகுதிகளில் அமைந்துள்ள ஒதுக்குப்புறமான வீடுகளில் உள்ள அபாயம் மிகவும் அதிகம்.

iii. **கட்டுமான இன்னல்**:பல கதவுகளையும் சன்னல்களையும் கொண்டுள்ள கட்டிடங்கள் மோசமான இயற்பியர் ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

e) **தனிநபர் விபத்து**

i. **நபரின் வயது**: மிக வயதான நபர்கள் அதிக விபத்துக்கு ஆளாகின்ற வாய்ப்புள்ளது; அதோடு, விபத்து நிகழ்விலிருந்து அவர்கள் மீண்டு வருவதற்கும் நீண்ட காலம் ஆகின்றது.

ii. **தொழிலின் தன்மை**: குதிரைச் சவாரி செய்பவர்கள், சுரங்கப் பொறியாளர்கள், உடலுழைப்புத் தொழிலாளர்கள் ஆகியோர் மோசமான உடல்சார் ஆபத்துக்கான உதாரணங்கள் ஆவர்.

iii. **ஆரோக்கியம் மற்றும் உடல்நிலை**: நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நபருக்கு எதிர்பாராத விதமாக காயம் ஏற்படும்போது அறுவைச் சிகிச்சை அவருக்கு பலனளிக்காமல் போகலாம்.

## B. இயற்பியர் ஆபத்துகள் - அபாய மேலாண்மை, உட்பிரிவுகள் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றின் முக்கியத்துவம்

இயற்பியர் அபாயங்களைக் கையாளுவதற்கு காப்பீட்டு ஏற்பாளர்கள் பின்வரும் முறைகளைப் பயன்படுத்துகிறார்கள்:

- ✓ பிரீமியம் ஏற்றுதல்
- ✓ பாலிசியின் மீது உத்தரவாதங்களைப் பயன்படுத்துதல்
- ✓ குறிப்பிட்ட உட்பிரிவுகளைப் பயன்படுத்துதல்
- ✓ உபரிகளை / கழிவுகளை சுமத்தல்
- ✓ வழங்கப்பட்டுள்ள காப்பீட்டை கட்டுப்படுத்துதல்
- ✓ காப்பீட்டை மறுத்தல்

### a) பிரீமியம் ஏற்றுதல்

அபாய வெளிப்பாட்டில் சில பாதகமான அம்சங்கள் இருக்கக்கூடும், காப்பீட்டு ஏற்பாளர்கள் அதை ஏற்பதற்கு முன்பு அதற்காக கூடுதல் பிரீமியம் விதிக்க தீர்மானிக்கலாம். பிரீமியத்தை ஏற்றுவதன் மூலம் ஈடுக்கோரல்களின் அதிகமாக சாத்தியக்கூறு அல்லது பெரிய அளவிலான ஈடுக்கோரல் ஏற்படுவது கருத்தில் கொள்ளப்படுகின்றது.

### எடுத்துக்காட்டு

பயணியர் கப்பல்கள் அல்லது பரிந்துரைக்கப்பட்ட தரங்களைப் பின்பற்றுகின்ற இதர கப்பல்களில் எடுத்துச் செல்லப்படும் சரக்குகளுக்கு சாதாரண பிரீமிய விகிதம் வசூலிக்கப்படுகின்றது. இருப்பினும், அதிக-

பழையதான அல்லது குறைந்த எடையளவு கொண்ட கப்பல், சரக்கினை எடுத்துச் செல்லும்போது கூடுதல் பிரீமியம் விதிக்கப்படுகின்றது.

தனிநபர் விபத்துக் காப்பீட்டில், மலையேறுதல், சக்கரங்களில் ரேசிங் செய்தல், பெரிய மிருக வேட்டையாடுதல் (big game hunting) போன்ற காரியங்களில் பாலிசிதாரர் ஈடுபடும்போது அதிக பிரீமியம் விதிக்கப்படுகின்றது.

சில சமயம் வாகனக் காப்பீடு அல்லது உடல்நலக் காப்பீடு போன்றதில், பாதகமான ஈடுக்கோரல்கள் விகிதத்திற்காகவும் பிரீமியம் ஏற்றப்படுகிறது.

**b) உத்தரவாதங்களை சுமத்துதல்**

இயற்பியர் அபாயத்தைக் குறைப்பதற்கு பொருத்தமான உத்தரவாதங்களை காப்பீட்டு நிறுவனங்களை ஒன்றிணைக்கின்றன. சில உதாரணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**எடுத்துக்காட்டு**

i. **கப்பல் சரக்கு**: தகர லைனிங் உள்ள பெட்டிகளில் பொருட்களை கட்டவேண்டும் (எ.கா. தேயிலை) உத்திரவாதம் நடைமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

ii. **கொள்ளை**: இருபத்து நான்கு மணி நேரமும் ஒரு காவலாளியை கொண்டு சொத்து பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உத்தரவாதம் சேர்க்கப்பட்டுள்ளது.

iii. **தீ விபத்து**: தீ விபத்து காப்பீட்டில், வழக்கமான பணி நேரத்தைத் தாண்டி வளாகம் பயன்படுத்தப்படுவதில்லை என்ற உத்தரவாதம் சேர்க்கப்பட்டுள்ளது.

iv. **வாகனம்**: வேகச் சோதனை அல்லது பந்தயத்துக்கு வாகனம் பயன்படுத்தப்படாது என உத்தரவாதம் சேர்க்கப்பட்டுள்ளது.

**எடுத்துக்காட்டு**

**கப்பல் சரக்கு**: பாகங்களுக்கு ஏற்படும் சிறிய சேதம் விலையுயர்ந்த இயந்திரங்களுக்கு ஒட்டுமொத்த நஷ்டத்தை ஏற்படுத்துகின்றது. சில இயந்திரங்கள் பதிலீட்டு உட்பிரிவுக்கு (Replacement Clause)

உட்படுத்தப்படுகின்றன, இது ஏற்பாளரின் பொறுப்பினை, மாற்றீடு செய்தல், அனுப்புதல் மற்றும் ஏதேனும் உடைந்த பாகங்களை மீண்டும் பொருத்துதல் ஆகியவற்றுக்குள் கட்டுப்படுத்துகின்றது.

வார்ப்புக் குழாய்கள், கடின அட்டைகள் ஆகியவை சில சமயங்களில் விளிம்புகளில் மட்டுமே சேதமடைகின்றன. வார்ப்புக் குழாய்கள், கடின அட்டைகள் போன்றவை மீதான கடற்பயணப் பாலிசிகள் சேதமடைந்த பாகங்களை வெட்டி எறிந்து மீதமுள்ளவற்றை மட்டுமே பயன்படுத்தக்கூடிய வெட்டுதல் உட்பிரிவு உத்தரவாதத்துக்கு (cutting clause warrantying) உட்பட்டவையாகும்.

---

### c) உபரிகள் / கழிவுகளை முடிவு செய்தல் மற்றும் காப்பீடை கட்டுப்படுத்தல்

இழப்புத் தொகை குறிப்பிடப்பட்ட உபரிகளை / கழிவுகளை மிஞ்சும்போது, மீதித் தொகை 'உபரி' பிரிவின் கீழ் செலுத்தப்படுகின்றது. வரம்புக்குக் கீழே உள்ள இழப்புக்கு பணம் வழங்கப்பட மாட்டாது.

இந்த உட்பிரிவுகளின் நோக்கம் சிறிய ஈடுக்கோரல்களை அகற்றவேண்டும் என்பதாகும். பாலிசிதாரர் இழப்பின் ஒரு பகுதியைச் செலுத்த வேண்டும் என்பதால், அதிக கவனம் எடுத்துக்கொள்வதற்கும், இழப்பு தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அவர் ஊக்குவிக்கப்படுகிறார்.

**எடுத்துக்காட்டு**

i. **வாகனம்**: பழைய மோட்டார் வாகனத்துக்கான முன்மொழிவு முழுமையான விதிமுறைகளின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, ஆனால் காப்பீட்டு நிறுவனங்கள் கட்டுப்படுத்தப்பட்ட காப்பீட்டை, அதாவது மூன்றாம் தரப்பு அபாயங்களுக்கு (Third party liability) எதிராக மட்டுமே காப்பை, வழங்குவார்கள்.

ii. **தனிநபர் விபத்து**: அதிகபட்ச ஏற்பு வயது வரம்பைத் தாண்டிய ஒரு தனிநபர் விபத்து முன்மொழிபவருக்கு முழுமையான விதிமுறைகளுக்குப் பதிலாக இறப்பு அபாயத்துக்கு மட்டுமே, அதாவது உடல் இயலாமைக்கான நன்மைகளுக்கும் சேர்த்து, காப்பீடு வழங்கப்படும்.

### d) தள்ளுபடிகள்

அபாயம் சாதகமானதாக இருந்தால் குறைவான விகிதங்கள் விதிக்கப்படுகின்றன அல்லது தள்ளுபடி வழங்கப்படுகிறது.

தீ விபத்துக் காப்பீட்டில் அபாயத்தை குறைப்பதில் பின்வரும் அம்சங்கள் பங்களிப்பதாக கருதப்படுகின்றன.

i. வளாகங்களுக்குள் தானியங்கு நீர் தெளிக்கும் கருவி அமைப்பு நிறுவுதல்

ii. வளாகத்துக்குள் நீரை ஊத்தக்கூடிய அமைப்பை நிறுவுதல்

iii. வாளி, கையடக்க தீயணைப்பான்கள் மற்றும் ஆளியக்க தீயணைப்பு பம்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கையால் இயக்கும் உபகரணங்களை நிறுவுதல்

iv. தானியங்கு தீ விபத்து அலாரம் நிறுவுதல்

**எடுத்துக்காட்டு**

**வாகனக் காப்பீட்டின்** கீழ், மோட்டார் சைக்கிள் எப்பொழுதுமே பக்க-வண்டி இணைக்கப்பட்ட நிலையில் பயன்படுத்தப்பட்டால் பிரீமியத்தில் தள்ளுபடி வழங்கப்படும், ஏனெனில் இந்த அம்சம் வாகனத்துக்கு அதிக நிலைப்புத்தன்மையைக் கொடுப்பதால் அபாயம் ஏற்படும் நிலையை குறைக்கிறது.

**கடல்சார் காப்பீட்டில்**, காப்பீட்டு நிறுவனம் “முழு பாரம்” ஏற்றிய கொள்கலனுக்கான பிரீமியத்தில் தள்ளுபடி வழங்குவது குறித்துப் பரிசீலிக்கும், ஏனெனில் இது திருட்டு அல்லது பற்றாக்குறைக்கான நிகழ்வினைக் குறைக்கின்றது.

**குழு தனிநபர் விபத்துக்** காப்பின் கீழ், காப்பீட்டு நிறுவனத்தின் நிர்வாக வேலையையும் செலவையும் குறைக்கக்கூடிய பெரிய குழுவின் காப்பீட்டுக்கு தள்ளுபடி வழங்கப்படும்.

---

### e) ஈடுக்கோராமை போனஸ் (NCB)

பெறக்கூடிய அதிகபட்ச போனஸ் வரம்புக்குட்பட்டு, ஒவ்வொரு ஈடுக்கோரல் இல்லாத புதுப்பித்தல் வருடத்துக்கும் குறிப்பிட்ட சதவீதம் போனஸாக வழங்கப்படுகின்றது. இது முழுக் குழுவுக்கும் உரித்தான

ஈடுக்கோரல் விகிதத்தைப் பொறுத்து, அல்லது சொந்த மோட்டார் வாகனத்தின் சேதத்திற்கான காப்பீடை வைத்திருக்கும் பாலிசிதாரர்களின் ஈடுக்கோரல் விகிதத்தைப் பொறுத்து, புதுப்பித்தலின்போது மட்டும் மொத்த பிரீமியத்தின் மீது தள்ளுபடி அனுமதிக்கப்படுகின்றது.

**ஈடுக்கோராமை போனஸ் என்பது ஏற்பளிப்பு அனுபவத்தை மேம்படுத்துவதற்கான வலிமையான உத்தி ஆகும், மேலும் இது விலை உருவாக்கல் முறைகளில் ஒரு மைய பகுதியாக உள்ளது.** இந்த போனஸ் காப்பீட்டு பெறுபவரின் நெறிமுறை சார்ந்த அபாயத்தின் காரணியை அங்கீகரிக்கின்றது. இது வாகனக் காப்பீட்டில் உள்ளது போன்று சிறந்த ஓட்டுநர் திறன்களைக் கடைப்பிடிப்பதன் மூலமோ அல்லது உடல்நல பாலிசிகளில் உடல்நலத்தை சிறந்த முறையில் கவனித்துக்கொண்டு பாலிசிதாரர் ஈடுக்கோரல்களை பதிவு செய்யாததற்காகவும் வெகுமதி அளிக்கிறது.

### f) காப்பீட்டை மறுத்தல்

தொடர்புடைய உடல்சார் இன்னல் கணிசமான அளவுக்கு மோசமாக இருந்தால், அபாயம் காப்பீடு செய்ய இயலாததாக மற்றும் மறுக்கப்படுகிற மாதிரி ஆகிறது. தங்களுடைய கடந்தகால இழப்பு அனுபவம், ஆபத்துகளின் அறிவு மற்றும் ஒட்டுமொத்த ஏற்பளிப்பு கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் காப்பீடு அளிப்பவர்கள் ஒவ்வொரு வகை காப்பீட்டு வகைக்கும் மறுக்கப்பட வேண்டிய அபாயங்களின் பட்டியலை முறைப்படுத்தியுள்ளனர்.

## C. நெறிமுறைசார் ஆபத்து

நெறிமுறைசார் ஆபத்து பின்வரும் வழிகளில் எழக்கூடும்:

### a) நேர்மையின்மை

மோசமான நெறிமுறைசார் இன்னலுக்கான உதாரணம், ஒரு ஈடுக்கோரலை வசூலிப்பதற்காக ஒரு இழப்பை ஏற்படுத்தக்கூடிய அல்லது உருவாக்கும் ஆழ்ந்த நோக்கத்துடன் காப்பீடு பெறுபவர் காப்பீடை எடுப்பதாகும். ஒரு நேர்மையான பாலிசிதாரர் கூட நிதி

நெருக்கடி சமயத்தில் இழப்பை பொய்யாக உருவாக்கி பணம் பெற விரும்பலாம்.

**b) கவனமின்மை**

இழப்பைப் பற்றிய அக்கறையின்மை என்பது கவனமின்மைக்கான ஒரு எடுத்துக்காட்டாகும். காப்பீடு இருப்பதன் காரணமாக, காப்பீடு செய்பவர் காப்பளிக்கப்பட்ட சொத்தின் மீது கவனக்குறைவான அணுகுமுறையைப் பின்பற்ற முயலக்கூடும்.

சொத்தை காப்பீடு செய்யாமல் இருந்தால், ஒரு விவேகமான மற்றும் நியாயமான மனிதன் எவ்வாறு ஒரு காப்பளிக்கப்பட்ட சொத்தின் மீது அக்கறை செலுத்துவாரோ, அதே மாதிரி கவனிக்காவிட்டால், நெறிமுறைசார் ஆபத்து திருப்தியானதாக இருக்காது.

**c) தொழில்துறை உறவுகள்**

முதலாளி-தொழிலாளர் உறவுமுறை மோசமான நெறிமுறைசார் ஆபத்தின் ஒரு கூறாக செயல்படக்கூடும்.

**d) தவறான ஈடுக்கோரல்கள்**

இந்த வகையான நெறிமுறைசார் ஆபத்து ஈடுக்கோரல் நிகழும்போது எழுகின்றது. காப்பீடு பெற்ற ஒருவர் வேண்டுமென்றே ஒரு இழப்பை ஏற்படுத்த மாட்டார், ஆனால் ஒரு இழப்பு ஏற்படும்போது இழப்பீட்டுக் கோட்பாடு பற்றி உணராமல் அவர் நியாயமற்ற முறையில் அதிக அளவு தொகையைக் கேட்க முயற்சிக்கக்கூடும்.

**தகவல்**

**துணை-வரம்புகள்**: மிகைப்படுத்தப்பட்ட பில்களை கட்டுப்படுத்துவதற்காக காப்பீடு அளிப்பவர் அறைச் செலவுகள், அறுவைச்சிகிச்சை நடைமுறைகள் அல்லது மருத்துவர் கட்டணம் போன்ற ஒவ்வொன்றுக்கும் தனித்தனி வரம்புகளை நிர்ணயிக்கக்கூடும்.

**காப்பீடு செய்பவரிடம் நெறிமுறைசார் ஆபத்து இருப்பதாக சந்தேகிக்கப்படும்போது, முகவர் அத்தகைய முன்மொழிவுகளை காப்பீட்டு நிறுவனத்துக்கு பரிந்துரை செய்யக்கூடாது அல்லது**

**கொண்டுவரக் கூடாது. மேலும், அவர் அத்தகைய பிரச்சினைகளை காப்பீடு நிறுவன அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்.**

1. **குறுகிய கால அளவுகள்**

வழக்கமாக, பிரீமியம் விகிதங்கள் பன்னிரண்டு மாத காலத்துக்கு குறிப்பிடப்படுகின்றன. குறுகிய காலத்திற்காக பாலிசி எடுக்கப்பட்டால், அதற்கான பிரீமியம் குறுகிய கால அளவு எனப்படும் சிறப்பு அளவுக்கேற்ப வசூலிக்கப்படுகிறது. குறுகிய காலக் காப்பீட்டிற்கு செலுத்த வேண்டிய பிரீமியம் விகித அடிப்படையில் இருக்காது.

**குறுகிய கால அளவைகளுக்கான தேவை**

a) 12 மாத காலமாக இருந்தாலும் குறுகிய காலமாக இருந்தாலும், பாலிசி வழங்குவதில் ஏற்படும் செலவுகள் கிட்டத்தட்ட ஒரேமாதிரியாக இருப்பதால், இந்த விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

b) மேலும், வருடாந்திர பாலிசிக்கு வருடம் ஒருமுறை மட்டுமே புதுப்பித்தால் போதுமானது, ஆனால் குறுகிய கால காப்பீடுகளை அடிக்கடி புதுப்பிக்க வேண்டி உள்ளது. விகிதாச்சார பிரீமியம் அனுமதிக்கப்பட்டால், காப்பீடு செய்பவர்கள் குறுகிய காலப் பாலிசிகளையே எடுத்து, பிரீமியங்களை தவணைகளில் செலுத்த முற்படலாம்.

c) அதோடு, சில காப்பீடுகள் பருவகாலக் காப்பீடுகளாகும், அவற்றுக்கான அபாயம் அந்தப் பருவத்தின்போது அதிகமாக இருக்கும். சில சமயங்களில் அபாயம் அதிகமாக இருக்கும் காலங்களில் காப்பீடுகள் எடுக்கப்படுகின்றன, அதனால் காப்பீட்டு நிறுவனங்களுக்கு இடையே தேர்ந்தெடுக்கப் படுகிறது. காப்பீட்டு நிறுவனங்களுக்கு இடையே அத்தகைய தேர்ந்தெடுப்பினைத் தடுக்க குறுகிய கால அளவைகள் உருவாக்கப்பட்டுள்ளன. காப்பீடு பெற்றவர் வருடாந்திர காப்பீட்டை இரத்து செய்யும்போதும் அவை பொருந்துகின்றன. அந்த வழக்கில், காப்பீட்டாளர் அபாயத்தில் இருந்த காலத்திற்கான பிரீமியத்தை குறுகிய கால அளவையாக கணக்கிட்டு பணத்தை திரும்ப வழங்கலாம்.

**குறைந்தபட்ச பிரீமியம்**

ஒவ்வொரு பாலிசியின் கீழும் குறைந்தபட்ச பிரீமியத்தை வசூலிப்பது நடைமுறையாகும், இதனால் பாலிசியை வழங்குவதற்கான நிர்வாக செலவுகள் வசூலிக்கப்படும்.

**சுய-பரீட்சை** 1

நெறிமுறைசார் இன்னலைக் கண்டறியும்போது ஒரு முகவர் என்ன செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது?

I. முன்புபோலவே காப்பீட்டைத் தொடர வேண்டும்
II. காப்பீட்டு நிறுவனத்துக்கு அதைத் தெரிவிக்க வேண்டும்
III. ஈடுக்கோரல்களில் பங்கு கேட்க வேண்டும்
IV. கண்டும் காணாமல் இருந்துவிட வேண்டும்

## D. காப்பீட்டுத் தொகையை நிர்ணயித்தல்

இது பாலிசி நிபந்தனையின் கீழ் ஒரு காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு அளிக்கக்கூடிய அதிகபட்சத் தொகை ஆகும். இழப்பீட்டுத் தொகையின் வரம்பைத் தேர்ந்தெடுப்பதில் காப்பீடு பெறுபவர் மிக கவனமாக இருக்க வேண்டும், ஏனெனில் இதுதான் ஈடுக்கோரலின் போது திரும்ப வழங்கப்படும் அதிகபட்ச ஈட்டுத் தொகை ஆகும்.

காப்பீட்டுத் தொகை எப்பொழுது காப்பீடு பெறுபவரால் தீர்மானிக்கப்படுகிறது. இது பாலிசியின் கீழ் பிரீமியத்தை கணக்கிட பயன்படுத்தப்படும் விகிதத்துக்கான தொகை ஆகும்.

அது சொத்தின் உண்மையான மதிப்புக்கான பிரதிநிதியாக இருக்க வேண்டும். மிகைக் காப்பீடாக இருந்தால், காப்பீடு அளிப்பவர் எந்தப் பலனும் பெற முடியாது, மேலும் அது ஒரு குறைக் காப்பீடாக இருந்தால், ஈடுக்கோரல் விகிதாச்சார முறையில் குறைகிறது.

### காப்பீட்டுத் தொகையை முடிவு செய்தல்

ஒவ்வொரு வணிகப் பிரிவின் கீழும் காப்பீட்டுத் தொகையைத் தீர்மானிக்கும்போது காப்பீடு செய்பவருக்கு கருத்தில் கொள்ள வேண்டிய பின்வரும் கருத்துக்களை பற்றி ஆலோசனை வழங்க வேண்டும்:

a) **தனிநபர் விபத்துக் காப்பீடு**: ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை ஒரு நிலையான தொகையாகவோ அல்லது

காப்பீடு பெறுபவரின் வருமானத்தின் அடிப்படையிலும் இருக்கலாம். சில காப்பீட்டு நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட இயலாமைக்கு காப்பீடு பெறுபவரின் மாதாந்திர வருமானத்தின் 60 மடங்கு அல்லது 100 மடங்குக்குச் சமமான நன்மையை கொடுக்கக்கூடும். அதிகபட்ச அளவின்மீது உயர்மட்ட வரம்பு அல்லது ‘முகடு’ இருக்கக்கூடும். ஒவ்வொரு நிறுவனத்துக்கும் இழப்பீட்டுத் தொகை வேறுபடக்கூடும். குழு தனிநபர் விபத்துக் காப்பீட்டு பாலிசிகளில், காப்பீடு பெறுபவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக காப்பீட்டுத் தொகையை நிர்ணயித்துக் கொள்ளலாம் அல்லது காப்பீடு பெறும் நபர் பெறும் ஊதியங்களுடன் அது இணைக்கப்படலாம்.

b) **வாகனக் காப்பீடு**: மோட்டார் வாகனக் காப்பீட்டில், காப்பீடு பெறுபவரின் அறிவிக்கப்பட்ட மதிப்பு [IDV] காப்பீட்டுத் தொகையாக இருக்கும். அது வாகனத்தின் மதிப்பு ஆகும், முந்தைய இந்திய மோட்டார் காப்பீடு கட்டண பட்டியலில் (Motor Insurance Tariff) குறிப்பிடப்பட்டுள்ளபடி தேய்மான சதவீதத்துடன் வாகனத்தின் தற்போதைய உற்பத்தியின் பட்டியலிடப்பட்ட விற்பனை விலையை சரிசெய்வதன் மூலம் இது பெறப்படுகிறது. தயாரிப்பாளரின் பட்டியலிடப்பட்ட விற்பனை விலை உள்ளூர் தீர்வைகளை / வரிகளை உள்ளடக்கியதாகவும், பதிவு மற்றும் காப்பீட்டை உள்ளடக்காததாகவும் இருக்கும்.

IDV = (தயாரிப்பாளரின் பட்டியலிடப்பட்ட விற்பனை விலை - தேய்மானம்) + (பட்டியலிடப்பட்ட விற்பனை விலையில் உள்ளடங்காத உதிரிபாகங்கள் - தேய்மானம்) மற்றும் பதிவு மற்றும் காப்பீட்டுச் செலவுகளை விலக்குகிறது.

உபயோகத்தில் இல்லாத அல்லது 5 வருடங்களுக்கும் மேல் பழையதான வாகனங்களின் IDV, காப்பீடு அளிப்பவருக்கும் காப்பீடு பெறுபவருக்கும் இடையேயான பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலம் கணக்கிடப்படுகின்றது. தேய்மானத்துக்கு பதிலாக, பழைய கார்களின் வாகனத்தின் நிலையை மதிப்பீட்டாளர்கள், கார் விற்பனையாளர்கள் போன்றவர் மதிப்பிடுவதன் மூலம் IDVயானது பெறப்படுகின்றது.

IDV என்பது ஒரு வாகனம் திருடப்பட்டாலோ அல்லது மொத்த இழப்பினால் பாதிக்கப்பட்டாலோ கொடுக்கப்படும் இழப்பீட்டுத்

தொகை ஆகும். காரின் சந்தை மதிப்புக்கு அருகிலுள்ள IDVஐப் பெறுமாறு அதிகம் பரிந்துரைக்கப்படுகின்றது. காப்பீட்டாளர்கள் 5% முதல் 10% வரம்பு வரையிலான IDVகுறைப்பினை காப்பீடு பெறுபவருக்கு வழங்குகின்றனர். குறைவான IDV என்றால் பிரீமியமும் குறைவு.

c) **தீ விபத்துக் காப்பீடு**: தீ விபத்துக் காப்பீட்டில் காப்பீட்டுத் தொகையானது கட்டிடங்கள் / தொழிற்சாலை இயந்திரங்கள் மற்றும் உதிரி பாகங்களின் சந்தை மதிப்பின் அடிப்படையிலோ அல்லது மீளமர்த்துகை மதிப்பின் அடிப்படையிலோ நிர்ணயிக்கப்படுகின்றன. உள்ளே இருக்கும் பொருட்களுக்கு அவற்றின் சந்தை மதிப்பின் அடிப்படையில் காப்பீடு வழங்கப்படுகிறது, அதாவது அந்தப் பொருளின் விலையிலிருந்து தேய்மானத்தைக் கழித்து வரும் தொகைக்கு சமமாகும். (மீளமர்த்துகை மதிப்பு அத்தியாயம் 28 இல் விரிவாக விளக்கப்பட்டுள்ளது - வணிகக் காப்பீடு)

d) **சரக்கிருப்புக் காப்பீடு**: சரக்கிருப்புகளைப் பொறுத்தவரை, காப்பீட்டுத் தொகை என்பது அவற்றின் சந்தை மதிப்பாகும். இழப்புக்குப் பிறகு சேதமுற்ற மூலப்பொருட்களை மாற்றுவதற்காக, அந்தச் சரக்குகளை சந்தையில் வாங்குவதற்கு ஆகும் செலவு காப்பீடு பெறுபவருக்கு ஈடாக வழங்கப்படும்.

e) **கப்பல் சரக்கு காப்பீடு**: இது ஒரு ஒப்புக்கொள்ளப்பட்ட மதிப்புடைய பாலிசி ஆகும், மேலும் காப்பீட்டுத் தொகை என்பது காப்பீடு அளிப்பவருக்கும் காப்பீடு பெறுபவருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படும் சமயத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையாக இருக்கும். வழக்கமாக இது பொருட்களின் செலவுத் தொகை + கட்டணம், அதாவது CIF மதிப்பு ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கும்.

f) **கப்பல் தளக் காப்பீடு(Marine hull):** கப்பல் தளக் காப்பீட்டில், காப்பீட்டுத் தொகை என்பது காப்பீடு அளிப்பவருக்கும் காப்பீடு பெறுபவருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படும் சமயத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையாகும். இந்த மதிப்பு சான்றளிக்கப்பட்ட மதிப்பீட்டாளர் தளம் / கப்பலின் ஆய்வுக்குப் பிறகு நிர்ணயிக்கும் தொகையாக இருக்கும்.

g) **கடப்பாடுக் காப்பீடு**: கடப்பாடு பாலிசிகளைப் பொறுத்தவரை, காப்பீட்டுத் தொகை என்பது வெளிப்பாட்டின் அளவு, நிலப்பரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்துறை அலகுகளின் கடப்பாடின் வெளிப்பாடு ஆகும். கூடுதலான சட்டக் கட்டணங்களும் செலவுகளும் ஈடுக்கோரல் இழப்பீட்டின் ஒரு பகுதியாக இருக்கும். காப்பீட்டுத் தொகையானது மேற்கண்ட அளவுருக்களின் அடிப்படையில் காப்பீடு பெறுபவரால் தீர்மானிக்கப்படுகின்றது.

**சுய-பரீட்சை** 2

ஒரு மருத்துவரிடம், அவருக்கு எதிரான கவனக்குறைவுக்கான ஈடுக்கோரல்களில் இருந்து அவரைப் பாதுகாப்பதற்கான ஒரு காப்பீட்டுத் திட்டத்தைப் பரிந்துரைக்கவும்.

I. தனிநபர் விபத்துக் காப்பீடு
II. கடப்பாடுக் காப்பீடு
III. கப்பல் கட்டுமானக் காப்பீடு
IV. உடல்நலக் காப்பீடு

**சுருக்கம்**

a) அபாயங்களை வகைப்படுத்தி, அவை எந்த வகையின் கீழ் வருகின்றன என்பதைத் தீர்மானிக்கும் செயல்முறை விகித உருவாக்குதலுக்கு முக்கியம்.
b) ஏற்பளிப்பு என்பது ஒரு காப்பீட்டுக்கு வழங்கப்பட்ட அபாயம் ஏற்கத்தக்கதா என்பதையும், அவ்வாறு வழங்கினால், என்ன விலை, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் காப்பீட்டின் காப்பை ஏற்கலாம் என்பதையும் தீர்மானிக்கும் செயல்முறை ஆகும்.
c) விகிதம் என்பது கொடுக்கப்பட்ட காப்பீட்டு அலகின் விலை ஆகும்.
d) விகிதம் உருவாக்குதலின் அடிப்படை நோக்கம் காப்பீட்டின் விலை தகுதியானதாகவும் நியாயமானதாகவும் இருப்பதை உறுதிப்படுத்துதல் ஆகும்.
e) செலவினங்கள், ஒதுக்கீடுகள் மற்றும் இலாபம் ஆகியவற்றுக்கு வழங்குவதற்காக குறிப்பிட்ட சதவீதங்களைச் சேர்ப்பதன் மூலம் 'முழு பிரீமியம்' பொருத்தமான முறையில் ஏற்றப்படுகின்றது அல்லது அதிகரிக்கப்படுகின்றது.

f) காப்பீட்டு மொழியில் ஆபத்து என்ற சொல் கொடுக்கப்பட்ட ஒரு ஆபத்தினால் விளையக்கூடிய இழப்புக்கான வாய்ப்பை உருவாக்கக்கூடிய அல்லது அழிக்கக்கூடிய நிலைமைகள் அல்லது அம்சங்கள் அல்லது சிறப்பியல்புகளைக் குறிப்பிடுகின்றது.

g) கழிவுகளை / உபரி உட்பிரிவுகளை வலியுறுத்துவதன் நோக்கம் சிறிய ஈடுக்கோரல்களை நீக்குதல் ஆகும்.

h) ஈடுக்கோராமை போனஸ் என்பது ஏற்பளிப்பு அனுபவத்தை மேம்படுத்துவதற்கான வலிமையான உத்தி ஆகும், மேலும் இது விலை உருவாக்கல் முறைகளின் ஒருங்கிணைந்த பகுதியை உருவாக்குகின்றது.

i) காப்பீட்டுத் தொகை என்பது பாலிசி நிபந்தனையின் கீழ் ஒரு காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு அளிக்கக்கூடிய அதிகபட்சத் தொகை ஆகும்.

## முக்கியமான வார்த்தைகள்

a) ஏற்பளிப்பு
b) விகிதம் உருவாக்குதல்
c) உடல் சார் இன்னல்கள்
d) நெறிமுறைசார் இன்னல்கள்
e) இழப்பீடு
f) பிரீமியம் ஏற்றுதல்
g) உத்திரவாதங்கள்
h) கழிவுகள்
i) உபரிகள்

## சுய-பரீட்சையின் பதில்கள்

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் II.

**பதில் 2** - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் G-03

# தனிநபர் மற்றும் சில்லறை காப்பீடு

## அத்தியாய அறிமுகம்

முந்தைய அத்தியாயங்களில் பொதுக் காப்பீடு தொடர்பாக பல்வேறு கருத்தாக்கங்களையும் கோட்பாடுகளையும் கற்றுக்கொண்டோம். பொது காப்பீட்டுத் திட்டங்கள் பல்வேறு சந்தைகளில் பல்வேறு வகைகளில் வகைப்படுத்தப்படுகின்றன. சிலர் அவற்றைச் சொத்தாகவும், தற்செயல் விபத்தாகவும் மற்றும் கடப்பாடாகவும் வகைப்படுத்துகின்றனர். மற்ற இடங்களில், அவை தீ, கடல் சார்ந்தது, வாகன மற்றும் இதர என வகைப்படுத்தப்படுகின்றன. இந்த அத்தியாயத்தில், சில்லறை பொது காப்பீடு திட்டங்களான தனிநபர் விபத்து, உடல்நலம், பயணம், வீடு மற்றும் கடை உடைமையாளர் மற்றும் வாகனக்காப்பீடு போன்றவை விவாதிக்கப்படுகின்றன.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. சில்லறை காப்பீட்டு தயாரிப்புகள்
B. 'அனைத்து அபாயங்கள்' மற்றும் பெயரிடப்பட்ட இன்னல்களுக்கான' காப்பீட்டு பாலிசி
C. பேக்கேஜ் பாலிசிகள்
D. கடைக்காரர்களின் காப்பீடு
E. வீட்டு உடைமையாளரின் காப்பீடு
F. காப்பீட்டுத் தொகை மற்றும் பிரீமியம்
G. வாகனக் காப்பீடு

**இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:**

1. வீட்டுடைமையாளரின் காப்பீட்டுத் திட்டத்தை விவரிக்கமுடியும்
2. கடை காப்பீட்டினைத் தயாரிக்கமுடியும்
3. வாகன காப்பீட்டினைப் பற்றிப் பேச முடியும்

## A. சில்லறை காப்பீட்டு பாலிசிகள்

தனிநபர்களின் குறிப்பிட்ட நலன்களுக்காக வாங்கப்படும் சில காப்பீட்டு பாலிசிகள் உள்ளன. அத்தகைய காப்பீடுகளுக்கு சிறிய வணிக அல்லது தொழில் நலன்கள் இருப்பினும், இவை பொதுவாக தனிநபர்களுக்கே விற்கப்படுகின்றன. சில சந்தைகளில் இவை 'சிறு டிக்கெட்' பாலிசிகள் என்றோ அல்லது 'சில்லறை பாலிசிகள்' என்றோ அல்லது 'சில்லறைத் தயாரிப்புகள்' என்றோ அழைக்கப்படுகின்றன. வீடு, மோட்டார் கார்கள், இரு சக்கர வாகனங்கள், கடைகள் போன்ற சிறிய தொழில்கள் போன்ற காப்பீடுகள் இந்த வகையில் அடங்கும். இந்தக் காப்பீடுகள் பொதுவாக தனிநபர் காப்பீடுகளை விற்கும் நுகர்வோர் பிரிவிலிருந்து வருவதால், அதே முகவர்களால்/ விநியோக வழிகளால் விற்கப்படுகின்றன.

## B. 'அனைத்து அபாயங்கள்' மற்றும் 'பெயரிடப்பட்ட இன்னல்களுக்கான' காப்பீட்டு பாலிசி

பொது காப்பீட்டு பாலிசிகளை பொதுவாக இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்:

- ✓ பெயரிடப்பட்ட இன்னல் பாலிசிகள்
- ✓ அனைத்து அபாயங்கள் பாலிசிகள்

i. "அனைத்து அபாயங்கள்" என்றால் ஒப்பந்தத்தில் குறிப்பாக விலக்கப்படாத அனைத்து அபாயங்களுக்கும் தானாகவே காப்பளிக்கப்படுகின்றன.

ii. அனைத்து-அபாயங்கள் காப்பீடுதான் மிக ஒருங்கிணைந்த வகை காப்பீடாகும். எனவே, ஒப்பீட்டளவில் மற்றவகை பாலிசிகளைவிட அதிக விலையுடையதாக உள்ளது. இந்த வகை காப்பீடுகளின் விலை அதனால் கிடைக்கும் இழப்பீடு நன்மைகளை பெறும் சாத்தியக்கூறுடன் ஒப்பிட்டு கணக்கிடப்பட வேண்டும்.

iii. பெயரிடப்பட்ட இன்னல் பாலிசிகள் என்பதில் காப்பளிக்கப்பட்ட இன்னல்கள் குறிப்பாக பட்டியலிடப்பட்டு வரையறுக்கப்படுகின்றன.

## C. பேக்கேஜ் பாலிசிகள்

i. பேக்கேஜ் பாலிசிகள் ஒரே ஆவணத்தின்கீழ் ஒரு ஒருங்கிணைந்த காப்பினை வழங்குகின்றன.

ii. உதாரணமாக, வீட்டுடைமையாளரின் பாலிசி, கடைக்காரர்களின் காப்பீடு, அலுவலக பேக்கேஜ் பாலிசி போன்றவை. ஒரே பாலிசியின்கீழ் கட்டிடம், அதில் உள்ள பொருட்கள் போன்ற பல சொத்துக்களுக்கு காப்பு வழங்கப்படுகின்றன.

iii. அத்தகைய பாலிசிகள் சில குறிப்பிட்ட தனிப்பட்ட வகைகளை அல்லது கடப்பாட்டு காப்புகளையும் கொண்டிருக்கலாம்.

iv. பேக்கேஜ் காப்புகளில் அனைத்து பிரிவுகளுக்கும் பொதுவான விதிகள் மற்றும் நிபந்தனைகளை அல்லது பாலிசியின் குறிப்பிட்ட பிரிவுகளுக்கு குறிப்பிட்ட விதிகளையும் கொண்டிருக்கலாம்

## D. கடைக்காரர்களின் காப்பீடு

ஒரு கடை முதலாளி அதிக பணக் கையிருப்புகளைக் கொண்டு மீண்டும் தொழிலைத் தொடங்கும் ஒரு பெறுவணிக நிறுவனத்தைப் போன்றவரல்ல. ஒரு சிறிய விபத்து அவர் கடையைமூடச் செய்து அவருடைய குடும்பமே அழியக் காரணமாகிவிடலாம். திருப்பிச் செலுத்த வேண்டிய வங்கிக் கடன்களும் இருக்கலாம். கடை உரிமையாளரின் செயல்பாடுகளால் பொதுமக்களுக்கு தனிப்பட்ட காயம் அல்லது அவரது சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் எப்பொழுதும் உள்ளது, மேலும் ,நீதிமன்றம் நஷ்டஈடு செலுத்துவதற்கு கடை உரிமையாளர் பொறுப்பேற்க வேண்டும் என்று தண்டனை விதிக்கிறது. இத்தகைய சூழ்நிலைகளும் ஒரு கடைக்காரரை அழித்துவிடும். எனவே, அவருடைய வாழ்வாதாரத்தை பாதுகாப்பது மிகவும் அவசியம்.

**வணிகரீதியிலான கடை / சில்லறை தொழில்களின் இத்தகைய பல அம்சங்களுக்குக் காப்பளிக்கும் நோக்கில் கடைக்காரர்களுக்கான காப்பீட்டு பாலிசிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.** தொல்பொருள் கடை, முடிதிருத்துபவரின் கடை, பியூட்டி பார்லர், புத்தகக் கடை, பல்பொருள் அங்காடி, டிரை கிளீனர் கடை, பரிசுப் பொருள் மருந்துக் கடை,

எழுதுபொருள் கடை, பொம்மைக் கடை, துணி கடை போன்ற பலவகைக் கடைகளின் குறிப்பிட்ட நலன்களுக்குக் காப்பளிக்கும் விதத்தில் மாற்றி அமைக்கப்பட்ட பாலிசிக்களும் உண்டு. வணிகரீதியிலான கடை / சில்லறை தொழில்களின் இத்தகைய பல அம்சங்களுக்குக் காப்பளிக்கும் நோக்கத்துடன் கடைக்காரர்களுக்கான காப்பீட்டு பாலிசிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தொல்பொருள் கடை, முடிதிருத்துபவரின் கடை, பியூட்டி பார்லர், புத்தகக் கடை, பல்பொருள் அங்காடி, துணி தேய்ப்பவர் கடை, பரிசுப் பொருள் கடை, எழுதுபொருள் கடை, பொம்மைக் கடை, செருப்புக் கடை போன்ற பலவகைக் கடைகளின் குறிப்பிட்ட நலன்களுக்குக் காப்பளிக்கும் விதத்தில் மாற்றி அமைக்கப்பட்ட பாலிசிக்களும் உண்டு.

## 1. கடைக்காரர்களுக்கான காப்பீடு எவற்றைக் காப்பீடு செய்கிறது?

சில்லறை வர்த்தகத்தின் குறிப்பிட்ட பகுதிக்கு காப்பளிக்கும் வகையில் பாலிசி தேவைக்கு ஏற்ப வடிவமைக்கப்படலாம். கடையின் வடிவமைப்பு மற்றும் அவற்றில் உள்ளவற்றை தீ, பூகம்பம், வெள்ளம் அல்லது கெட்ட எண்ணத்தில் சேதப்படுத்துதல் மற்றும் கொள்ளை ஆகியவற்றுக்கு எதிராக பொதுவாகக் காப்பளிக்கிறது. தொழில் குறுக்கீட்டு பாதுகாப்பினையும்கூட கடை காப்பீடு உள்ளடக்கலாம். இது எதிர்பாராத இன்னல் காரணமாக செயல்பாட்டின் போது ஏற்படும் வருமான இழப்பு அல்லது கூடுதல் செலவினங்களை ஈடுசெய்யும். தனது பல்வேறு செயல்பாடுகளை கருத்தில் கொண்டு காப்பீடு பெறுபவர் காப்பீடுகளை தேர்ந்தெடுக்கலாம்.

காப்பீடு பெறுபவர் தேர்வு செய்யக்கூடிய கூடுதல் காப்புகள் ஒவ்வொரு காப்பீட்டாளருக்கும் மாறுபடலாம். இவற்றை பொது காப்பீட்டு நிறுவனங்களின் குறிப்பிட்ட வலைதளங்களில் சரிபார்த்துக் கொள்ளலாம். அவை:

i. **கொள்ளையும் உடைத்து உள்நுழைவதும்**: உடைத்து உள் நுழைவது, அலுவலகப் பொருட்களின் திருட்டு போன்றவற்றுக்கான காப்பு

ii. **இயந்திரப் பழுது**: மின் / இயந்திர உபகரணங்கள் பழுதுக்கான காப்பு

iii. **மின்னணு கருவியும் சாதனங்களும்**:

- ✓ மின்னணு சாதனங்களுக்கான அனைத்து-அபாய காப்பினை அளிக்கிறது
- ✓ மின்னணு நிறுவல் இழப்புக்கான காப்பு

iv. **பணக்காப்பீடு**: கீழ்க்காணும் சூழ்நிலைகளில் ஏற்படும் விபத்தினால் பண இழப்பு ஏற்படுவதற்கு எதிராக காப்பினை அளிக்கிறது:

- ✓ தொழில் வளாகத்திலிருந்து வங்கிக்கும் வங்கியிலிருந்து தொழில் வளாகத்திற்கும் பணத்தினை எடுத்துச் செல்லும்போது
- ✓ தொழில் வளாகத்தில் ஒரு பெட்டகத்தில் இருக்கும்போது
- ✓ தொழில் வளாகத்தில் ஒரு கல்லாப் பெட்டியில் (பெட்டி / இழுவறை / கவுன்டர்) இருக்கும்போது

v. **பயணப் பொதி** (Baggage): அலுவல் சார்ந்த பயணத்தின்போது பயணப் பொதி காணாமல் போனால் இழப்பீடை வழங்குகிறது

vi. பொறுத்தப்பட்ட பிளேட் கண்ணாடி மற்றும் சேனிட்டரி ஃபிட்டிங் சார்ந்த காப்பீடுகள் பின்வரும் தற்செயல் இழப்புகளுக்கு காப்பளிக்கின்றன:

- ✓ பொறுத்தப்பட்ட பிளேட் கண்ணாடி
- ✓ சேனிட்டரி ஃபிட்டிங்குகள்
- ✓ நியான் போர்டு / ஒளிரும் போர்டு / ஹோர்டிங்

vii. தனிநபர் விபத்து

viii. நம்பிக்கைத் துரோகம் / தொழிலாளர்களின் நேர்மையின்மை: தொழிலாளர்களின் நேர்மையின்மையின் காரணமாக ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்குக் காப்பளிக்கிறது.

ix. சட்டப்பூர்வ கடப்பாடு:

- ✓ பணி செய்யும்போதும் மற்றும் அதன் காரணமாகவும் ஏற்படும் விபத்திற்கான இழுப்பீடு

- ✓ மூன்றாம் தரப்புகளுக்கான சட்டப்பூர்வ கடப்பாட்டுக்கு காப்பளிக்கிறது.

தீ / கொள்ளை / பேக்கேஜ் / பிளேட் கண்ணாடி / நம்பகத்தன்மை உத்தரவாதம் / பணியாளர் இழப்பீடு மற்றும் பொதுக் கடப்பாட்டு பாலிசிகளைத் (அடுத்த அத்தியாயத்தில் விளக்கப்படுகிறது) தனியாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

தீவிரவாத்திற்கான காப்பும்கூட நீட்டிக்கப்படலாம். விலக்குகள் பொதுவாக வீட்டுடைமையாளரின் காப்பீட்டை போன்றே இருக்கும்.

## E. வீட்டு உடைமையாளரின் காப்பீடு

வீட்டு உடைமையாளரின் காப்பீட்டு பாலிசியின் கீழ் காப்புகள் பரந்த அளவில் இருக்கமுடியும். இது பொதுவாக ஒரு வீட்டு உடைமையாளரின் அனைத்து தேவைகளின் தொகுப்பாக இருக்கிறது.

பொதுவாக காப்பு வழங்கப்படும் இழப்புகளில் அடங்குவன, தீ, மின்னல், வெடிப்பு மற்றும் விமானம் விழுதல் / பாதிப்புச் சேதம் (FLEXA என பொதுவாக அறியப்படுகிறது); புயல், சூறாவளி, வெள்ளம் மற்றும் நீருக்குள் மூழ்குதல் (STFI என பொதுவாக அறியப்படுகிறது); மற்றும் கொள்ளை. நிறுவனத்திற்கு நிறுவனம் மற்றும் வெவ்வேறு பாலிசிகளுக்கு இடையிலும் காப்பு மாறுபடலாம். கட்டிட அமைப்பினைத் தவிர, அதன் உடைமைகளை, கொள்ளை, வீட்டுடைப்பு, திருட்டு ஆகியவற்றிலிருந்து காப்பளிக்கிறது. ஆபரணங்கள் வீட்டுடைமையாளரின் காப்பீடுகளின்கீழ் ஆபரணங்களை அணிந்திருக்கும்போதோ அல்லது பாதுகாப்பாக பூட்டி வைத்திருக்கும்போதோ காப்பளிக்க முடியும். வீட்டு மற்றும் மின்னணு சாதனங்களின் மின் மற்றும் இயந்திரக் கோளாறுகளுக்கும் காப்பு வழங்கப்படுகிறது.

இதேபோல், வீட்டு உடைமையாளரின் காப்பீட்டுத் தொகுப்பானது, பயணத்தின் போது தொலைந்து போன தனிப்பட்ட சாமான்கள், அல்லது அண்டை வீட்டார்/ வருகை தருபவர்களுக்கான கடன்பாடுகள் ஆகியவை வீட்டுக் காப்பீட்டுத் தொகுப்பின் ஒரு பகுதியாக இருக்கலாம். சில காப்பீட்டாளர்கள் பெடல் சைக்கிள் தனிநபர் விபத்து மற்றும் பணியாளர்களின் இழப்பீடு ஆகியவற்றிற்கும் காப்பளிக்கிறார்கள்.

ஐஆர்டிஏஐ ஆனது 10 ஆண்டுகள் வரையிலான பாரத் க்ரிஹா ரக்ஷா பாலிசி எனும் நிலையான தயாரிப்பை அறிமுகப்படுத்தி அதை 1 ஏப்ரல், 2021 முதல் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது, இது தீ மற்றும் அதனுடன் தொடர்புடைய இன்னல்களுக்கான காப்பீட்டு வணிகத்தை செய்யும் மற்றும் அனைத்து பொது காப்பீட்டாளர்களாலும் கட்டாயமாக வழங்கப்படும்.

**பாரத் க்ரிஹ ரக்ஷா (வீடு கட்டுதல் மற்றும் வீட்டுப் பொருட்களுக்கானது)** பாலிசியானது, தீ, இயற்கைப் பேரழிவு, காடு, காட்டுப்பகுதி மற்றும் புதரில் தீப்பிடிப்பது, எந்தவிதமான பாதிப்பினாலும் ஏற்படும் சேதம், கலவரம், வேலைநிறுத்தம், தீங்கிழைக்கும் சேதங்கள், தீவிரவாத செயல்கள், வெடிப்பு மற்றும் தண்ணீர் தொட்டிகள், கருவிகள் மற்றும் குழாய்கள் வெடித்து நிரம்பி வழிவது, தானியங்கி தெளிப்பான் நிறுவல்களில் இருந்து கசிவு மற்றும் திருட்டுக்கு -மேற்கூறிய நிகழ்வுகள் ஏதேனும் நடந்த 7 நாட்களுக்குள் -எதிராக காப்பு வழங்குகிறது. இந்த பாலிசி 1 முதல் 10 ஆண்டுகள் வரை அமலில் இருக்கலாம்.

வீட்டுக் கட்டிடத்துடன் கூடுதலாக, பாலிசியானது, கட்டிடத்தின் காப்பீட்டுத் தொகையில் 20% அளவிற்கு, அதில் அதிகபட்சமாக ரூ.10 லட்ச வரம்பிற்கு உட்பட்டு வீட்டு பொருட்களுக்கும் தானாகவே காப்பளிக்கிறது (விவரங்களை அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லாமல்) விவரங்களை அறிவிப்பதன் மூலம் பொது பொருட்களுக்கான அதிக காப்பீட்டுத் தொகையையும் ஒருவர் தேர்வு செய்யலாம்.

பாலிசி இரண்டு விருப்பமான காப்புகளையும் வழங்குகிறது, அதாவது (i) நகைகள் மற்றும் அருங்கலைப் பொருள் போன்ற மதிப்புமிக்க உள்ளடக்கங்களுக்கான காப்பீடு; மற்றும் (ii) பாலிசியின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட இன்னல் காரணமாக காப்பீட்டாளர் மற்றும் மனைவிக்கு ஏற்படக்கூடிய தனிநபர் விபத்து காப்பீடு.

பாலிசியானது, குறைகாப்பீட்டை முழுமையாக தள்ளுபடி செய்கிறது. அதாவது, பாலிசிதாரரால் அறிவிக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை, சம்பந்தப்பட்ட சொத்திற்கு அறிவிக்கப்பட வேண்டியதை விடக்

குறைவாக இருந்தாலும், பாலிசிதாரரின் ஈடுக்கோரல் விகிதாச்சாரப்படி தீர்க்கப்படாது, மற்றும் அறிவிக்கப்பட்ட காப்பீட்டுத் தொகை வரை வழங்கப்படும்.

## F. காப்பீடு தொகையும் பிரீமியம் தொகையும்

சொத்துக்களின் மதிப்புகள் குறிக்கப்பட்டுள்ள கணக்குப் புத்தகங்களை தொழிற்சாலைகளும் அலுவலகங்களும் பராமரிப்பதால், அங்கே காப்பீட்டுத் தொகையை முடிவுசெய்வது கடினமாக இருக்காது. கடை மற்றும் வீடு ஆகியவற்றைப் பொறுத்தவரை இது எப்போதும் இருக்க வாய்ப்பில்லை.

வீட்டுடைமையாளரின் காப்பீட்டின்கீழ் ஏற்கனவே கூறியதுபோல், பொதுவாக, காப்பீடுத் தொகையை நிச்சயிக்க இரு வழிகள் உள்ளன. அவை: சந்தை மதிப்பு மற்றும் மறுநியமன / மீளமைப்பு மதிப்பு.

பணம், பயணப் பொதி, தனிநபர் விபத்து போன்ற கூடுதல் காப்புகளுக்கு காப்பீடு மதிப்பு மற்றும் வாங்கிய காப்புகளின் ஆகியவற்றின் அடிப்படையில் பிரீமியம் இருக்கும்.

**காப்பீடுத் தொகையை ஒருவர் எவ்வாறு நிச்சயிக்கிறார்**?

i. பொதுவாக, காப்பீடுத் தொகையை நிச்சயிக்க இரு வழிகள் உள்ளன. சந்தை மதிப்பு (MV) என்பது ஒருவகை. மற்றொன்று மறுநியமன மதிப்பு (RIV). சந்தை மதிப்பைப் பொறுத்தவரை, இழப்பு ஏற்பட்டால், அச்சொத்து எவ்வளவு ஆண்டுகள் பழையது என்பதை பொறுத்து சொத்தின்மீது தேய்மானம் விதிக்கப்படுகிறது. இம்முறையில், சொத்தினை மாற்றி அமைக்க தேவைப்படும் போதுமான தொகை காப்பீடு பெற்றவருக்கு அளிக்கப்படுவதில்லை.

ii. RIV முறையில், காப்பீடுத் தொகையின் உச்சவரம்பின் அளவிற்கு உட்பட்டு காப்பீட்டு நிறுவனம் அப்பொருளை மாற்றி அமைப்பதற்கான தொகையை அளிக்கிறது. இம்முறையில், எந்த ஒரு தேய்மானத் தொகையும் விதிக்கப்படுவதில்லை. இதற்கு உரிய ஒரு நிபந்தனையாக, அந்த ஈடுக்கோரலைப் பெற வேண்டுமானால் அந்த சேதமுற்ற சொத்து சரிசெய்யப்பட / மாற்றப்பட வேண்டும். RIV

முறை நிலையான சொத்துக்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது என்பதையும் சரக்கு இருப்புகள் மற்றும் செயல்முறையில் உள்ள சரக்கு இருப்புகள் போன்ற பிற சொத்துக்களுக்குப் பொருந்தாது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

பெரும்பான்மையான பாலிசிகள் வீட்டின் மறுகட்டமைப்பு மதிப்பிற்காக (சந்தை மதிப்பிற்கு அல்ல) அதன் அமைப்பினை காப்பீடு செய்கின்றன. ஒரு வீடு பழுதானால் அந்த வீட்டை மீண்டும் கட்டி எழுப்புவதற்கான செலவே மறுகட்டமைப்பு மதிப்பாகும். ஆனால், சந்தை மதிப்பு என்பது சொத்தின் வயது அதாவது எவ்வளவு பழையது, தேய்மானம் போன்ற காரணிகளைச் சார்ந்தது.

காப்பீட்டுத் தொகை பொதுவாக காப்பீடு பெற்றவரின் வீட்டின் கட்டிடப் பகுதியை ஒரு சதுர அடிக்கு கட்டடம் கட்டுவதற்கு ஆகும் செலவை கொண்டு பெருக்குவதன் மூலம் கணக்கிடப்படுகிறது. வீட்டின் உடைமைகள் - தட்டுமுட்டு சாமான்கள், நீடித்திருப்பவைகள், துணிகள், பாத்திரங்கள் போன்றவை - சந்தை மதிப்பின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. அதாவது, தேய்மானத்திற்குப் பின்னர் அதை ஒத்த பொருட்களின் தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது.

காப்பீடு மதிப்பு மற்றும் வாங்கிய காப்பளிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பிரீமியம் இருக்கும்.

**சுய-பரீட்சை** 1

பேக்கேஜ் பாலிசியை பொறுத்தவரை கீழே உள்ள கூற்றுகளில் எது சரியானது?

I. பேக்கேஜ் பாலிசி ஒரு ஆவணத்தின் கீழ் காப்புகளின் கலவையை வழங்குகிறது
II. பேக்கேஜ் பாலிசி கட்டிடங்கள் போன்ற சொத்துக்களை மட்டுமே உள்ளடக்கும்
III. பெயரிடப்பட்ட இன்னல் பாலிசி அல்லது பேக்கேஜ் பாலிசி அதே விலையில் வருகிறது.
IV. பெயரிடப்பட்ட அபாய பாலிசிகளை மட்டுமே வாங்க முடியும் மற்றும் பேக்கேஜ் பாலிசிகள் கிடைக்காது.

## வரையறை

### சில முக்கிய வரையறைகள்

a) **கொள்ளை** **(Burglary)** என்றால் எதிர்பார்த்திராத நேரத்தில் அனுமதியின்றி காப்பீடு பெற்றவரின் வளாகத்திற்குள் அத்துமீறி, கண்டறியத்தக்க வழியில் அங்கிருக்கும் பொருட்களைத் திருடிச் செல்லும் நோக்கில் நுழைந்து எடுத்துச் செல்வது

b) **வீடுடைப்பு** (**Housebreaking)** என்பது கெடுதல் செய்ய வேண்டும் என்ற நோக்கில் அத்துமீறி உடைத்து ஒரு வீட்டிற்குள் நுழைவது.

c) **திருட்டு** (**Robbery)** என்பது காப்பீடு பெற்றவரின் வளாகத்திற்குள் காப்பீடு பெற்றவரையோ அல்லது அவருடைய தொழிலாளர்களையோ மீறி பலவந்தமாக நுழைந்து அங்குள்ள உடைமைகளை / எடுத்துச் செல்வது.

d) **பெட்டகம்** (**Safe)** என்பது காப்பீடு பெற்றவரின் வளாகத்திற்குள் மதிப்புமிக்க பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக அதேநேரம் மற்றவர்கள் அணுக கட்டுப்பாடு அதிகம் உள்ள பலமான அறையாகும்.

e) **திருட்டு** **(Theft)** என்பது ஒருவர் மற்றொருவரின் அனுமதியின்றி வேண்டுமென்றே திருட்டுத்தனமாக தன்னுடைய பயன்பாட்டுக்காகவோ அல்லது விற்பதற்காகவோ எடுத்துச் செல்லும் குற்றத்தைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகும். இது ஆங்கிலத்தில் 'larceny' என்பதற்கு இணையான சொல்லாகும்.

**சுய-பரீட்சை** 2

கடைக்காரருக்கான பாலிசியின்கீழ் 'பொறுத்தப்பட்ட பிளேட் கண்ணாடி மற்றும் சேனிட்டரி ஃபிட்டிங்குகள்' என்ற கூடுதல் காப்பினை காப்பீடு பெறுபவர் தேர்வு செய்யலாம். பின்வருவதில் எந்த தவறுதலாக நடந்த இழப்பு அல்லது சேதத்திற்கு இது காப்பளிக்கும்?

I. பொறுத்தப்பட்ட பிளேட் கண்ணாடி

II. சேனிட்டரி ஃபிட்டிங்குகள்

III. நியான் போர்டுகள்

IV. மேலுள்ள அனைத்தும்

## G. வாகன காப்பீடு

இந்த சூழ்நிலையை கருதுங்கள்: ரேவதி தனது சேமிப்பை முழுவதுமாகப் பயன்படுத்தி ஒரு புதிய கார் வாங்கி ஓட்டிப் பார்ப்பதற்காக எடுத்துச் செல்கிறார். எங்கிருந்தோ ஒரு நாய் வழியில் திடீரெனப் பாய்கிறது. அதன்மேல் மோதிவிடாமல் இருக்க ரேவதி காரை வேகமாக வளைக்கிறார், பிரேக்கை போட்டு சாலைத் தடுப்பின்மேல் ஏறி மற்றொரு காரின்மீது மோதி அதில் இருந்தவரைக் காயப்படுத்துகிறார். எனவே, ஒரே ஒரு நிகழ்வின் விளைவாக, ரேவதியின் கார், பொதுச் சொத்து மற்றும் மற்றொரு கார் மற்றும் மற்றொரு மனிதருக்குக் காயம் என பல சேதங்கள் ஏற்படுகின்றன.

இந்தக் காட்சியில், ரேவதியிடம் கார் காப்பீடு இல்லாவிடில், காரை வாங்குவதற்கு ஆன செலவைவிட ரேவதி அதிகமாகச் செலவு செய்ய வேண்டியது இருக்கலாம்.

- ✓ ரேவதி அல்லது அதே மாதிரி உள்ளவர்களிடம் அந்த அளவு பணம் இருக்கிறதா?
- ✓ ரேவதியின் செயல்களுக்காக அடுத்த தரப்பின் காப்பீடு தொகையளிக்க வேண்டுமா?
- ✓ அவர்களிடம் காப்பீடு இல்லாவிட்டால் என்ன நடக்கும்?

இதன் காரணமாகத்தான் கார் காப்பீடு வைத்திருப்பது கட்டாயமானது என நாட்டின் சட்டங்கள் கூறுகின்றன. ஒரு வாகன காப்பீடு இந்த நிகழ்வுகளைத் தடுக்காவிட்டாலும், உங்களுக்கு நிதிப் பாதுகாப்புக்கான போர்வையை வழங்குகிறது.

ஒரு விபத்தைத் தவிர, கார் திருடப்பட்டுவிடலாம், விபத்தில் சேதமடையலாம் அல்லது தீயில் எரிந்துபோகலாம். நீங்கள் பொருளாதார ரீதியாக கஷ்டப்படுவீர்கள்.

வாகனக் காப்பீடு வாகன உரிமையாளரால் (அதாவது, இந்தியாவில் உள்ள மாவட்ட போக்குவரத்து ஆணையத்தில் (Regional Transport Authority in India) வாகனம் யாருடைய பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது), அவர் பெயரில் எடுக்கப்பட வேண்டும்.

## முக்கியமானவை

### கட்டாயமான மூன்றாம் தரப்புக் காப்பீடு

வாகன வாகனச் சட்டம், 1988-இன்படி, பொதுச் சாலையில் ஓடும் ஒவ்வொரு வாகனத்தின் உரிமையாளரும், தற்செயலான விபத்து காரணமான மரணம், உடற் காயம் அல்லது சொத்துக்கு ஏற்பட்ட சேதத்திற்கு மூன்றாம் தரப்பினருக்கு இழப்பீடாக செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக எழும் பொறுப்பை நிறைவேற்ற, கட்டாயமாக காப்பீட்டு பாலிசியை எடுத்திருக்க வேண்டும். அத்தகைய காப்பீட்டிற்கான சாட்சியாக அந்த வாகனத்தில் காப்பீட்டின் சான்றிதழ் இருக்க வேண்டும்.

### 1. வாகன காப்பீட்டின் காப்பு

நாட்டில் மிக அதிக அளவில் வாகனங்கள் உள்ளன. ஒவ்வொரு நாளும் சாலைக்கு வரும் புதிய வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகம். அவற்றுள் பல மிக விலை உயர்ந்தவை. இந்தியாவில் வாகனங்களை மக்கள் அழிப்பதில்லை, மாறாக, வாகனங்கள் கை மாறுகின்றன எனச் சொல்வதுண்டு. அதாவது, பழைய வாகனங்கள் தொடர்ந்து சாலையில் ஓடிக்கொண்டிருக்கையில் புதிய வாகனங்களும் சேர்கின்றன. சாலையின் பரப்பு (ஓட்டுவதற்கான இடம்) வாகனங்களின் எண்ணிக்கை உயர்வுக்கு ஏற்ப வளர்வதில்லை. சாலையில் நடக்கும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. காவல்துறை மற்றும் மருத்துவமனைகளின் புள்ளி விவரப்படி நாட்டில் சாலை விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. நீதி மன்றங்களால் விபத்திற்கு உள்ளானவர்களுக்கு அளிக்கும்படி கூறப்படும் தொகையும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. வாகன பழுதுநீக்கத்திற்கான செலவுத் தொகையும்கூட அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. **இவை அனைத்தும் இந்தியாவில் வாகன காப்பீட்டின் முக்கியத்துவத்தை நிரூபிக்கின்றன.**

விபத்தினாலும் வேறு சில காரணங்களாலும் வாகனங்களுக்கு ஏற்படும் சேதம் மற்றும் இழப்பிற்கு வாகன காப்பீடுகள் காப்பளிக்கின்றன. மேலும், வாகன உரிமையாளரின் வாகனத்தால் ஏற்பட்ட விபத்திற்கு உள்ளானவர்களுக்கு வாகன உரிமையாளரால் அளிக்க வேண்டிவரும் இழப்பீட்டினை அளிக்கும் சட்டப்பூர்வ கடப்பாட்டிற்கும் காப்பளிக்கிறது.

அரசாங்க ஆணை இருந்தபோதிலும், நாட்டில் உள்ள அனைத்து வாகனங்களும் காப்பீடு செய்யப்படவில்லை.

**பொதுச் சாலையில் ஓடும் பின்வரும் அனைத்து வாகன வகைகளுக்கும் வாகன காப்பீடு அளிக்கிறது:**

- ✓ இரு சக்கர வாகனங்கள்
- ✓ தனியார் கார்கள்
- ✓ அனைத்து வகையான வணிக ரீதியிலான வாகனங்கள்: சுமையுந்துகள் **(Goods carrying)** மற்றும் பயணி வாகனங்கள்
- ✓ இதர வகை வாகனங்கள் எ.கா. கிரேன்கள்
- ✓ மோட்டார் வர்த்தகம் (ஷோரூம்கள் மற்றும் கேரேஜ்களில் உள்ள வாகனங்கள்)

**‘மூன்றாம் தரப்பு காப்பீடு’**

மற்றொரு தரப்பின் சட்டப்பூர்வ நடவடிக்கைக்கு எதிராகப் பாதுகாப்பு அளிப்பதற்காக வாங்கப்படும் காப்பீட்டு பாலிசி தான் மூன்றாம் தரப்பு காப்பீடு. காப்பீடு பெறுபவரால் (முதல் தரப்பு) ஒரு காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து (இரண்டாம் தரப்பு) காப்பீடு பெற்றவரின் நடவடிக்கையின் விளைவாக ஏற்பட்ட கடப்பாட்டிற்காக மற்றொரு தரப்பின் (மூன்றாம் தரப்பு) ஈடுக்கோரலுக்கு எதிராக பாதுகாப்பினைப் பெறுவதற்காகப் வாங்ப்படும் காப்பீடாகும்.

மூன்றாம் தரப்பு காப்பீடு ‘கடப்பாட்டு காப்பீடு’ என்றும் அழைக்கப்படுகிறது.

**சந்தையில் பிரபலமாக உள்ள இரு முக்கிய வகைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:**

**செயல் [கடப்பாடு] மட்டும் பாலிசி:** மோட்டார் வாகனச் சட்டத்தின்படி [Motor Vehicles Act] பொது இடத்தில் ஓடும் எந்த ஒரு வாகனத்திற்கும் மூன்றாம் தரப்பிற்கான கடப்பாடு காப்பீடு கட்டாயமானது.

இந்த பாலிசி பின்வரும் இழப்பீட்டினை அளிக்க வேண்டிய வாகன உரிமையாளரின் கடப்பாட்டிற்கு மட்டும் காப்பளிக்கிறது:

- ✓ மூன்றாம் தரப்பின் உடல் காயம் மற்றும் மரணம்
- ✓ மூன்றாம் தரப்பின் சொத்துக்கு ஏற்பட்ட சேதம்

மரணம் அல்லது காயம் மற்றும் சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகைக்கு வரையறை ஏதும் இல்லாதவாறு கடப்பாடு காப்பிடப்படுகிறது.

ஒரு வாகன விபத்தினால் மூன்றாம் தரப்புக்கு ஏற்படும் மரணம் அல்லது காயத்திற்கான இழப்பீட்டுக் கோரிக்கைகளை குற்றம் சாட்டுபவர் மோட்டார் விபத்து கிளெய்ம் டிரிபியுனலில் (Motor Accident Claim Tribunal -MACT) சமர்ப்பிக்க வேண்டும்.

**'கட்டாய தனிநபர் விபத்து (CPI) காப்பீடு'**

ஜனவரி 1, 2019 முதல் உரிமையாளர்-ஓட்டுனர்களுக்கு தனித்தனியாக கட்டாயத் தனிநபர் விபத்துக் காப்பீட்டை வழங்க ஐஆர்டிஏஐ அனுமதித்துள்ளது. வாகனத்தை ஓட்டும் போது, காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தில் ஏறுவது/ இறங்குவது அல்லது இணை ஓட்டுனராக அதில் பயணம் செய்வது உட்பட, இந்த காப்பு உரிமையாளர்-ஓட்டுனருக்கு வழங்கப்படும். இருப்பினும், பாலிசிதாரரர் கடன்பாடை மட்டும் பாலிசி அல்லது பேக்கேஜ் பாலிசியின் ஒரு பகுதியாக தேர்ந்தெடுத்து CPA காப்பை தேர்வுசெய்யலாம். பாலிசிதாரரர் தனித்த CPA பாலிசியை எடுக்கத் தேர்வு செய்தால், பேக்கேஜின் ஒரு பகுதியாக வழங்கப்படும் CPA காப்பு அல்லது பேக்கேஜ் பாலிசி நீக்கப்படும்.

**பேக்கேஜ் பாலிசி / ஒருங்கிணைந்த பாலிசி: (சொந்த சேதம் + மூன்றாம் தரப்பு கடப்பாடு)**

மேலுள்ளதோட சேர்த்து, குறிப்பிட்ட இன்னல்களினால் காப்பிடப்பட்ட வாகனத்திற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதமும் (மோட்டார் வாகனங்களுக்கான சொந்த சேதம் என அறியப்படுகிறது) அறிவிக்கப்பட்ட மதிப்பிற்கும் (ஐடிவி IDV என அழைக்கப்படுகிறது) பாலிசியில் உள்ள மற்ற விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு காப்பளிக்கப்படும். அவற்றுள் சில இன்னல்களாவன: தீ, திருட்டு, கலவரம் மற்றும் வேலைநிறுத்தம், பூகம்பம், வெள்ளம், விபத்து போன்றவை.

சில காப்பீட்டாளர்கள் விபத்து நடந்த இடத்திலிருந்து பணிமனைக்குக் (workshop) கொண்டு வரும் செலவையும் அளிப்பார்கள். செயல் (கடப்பாடு) மட்டும் பாலிசியின் கீழ் அளிக்கப்படும் கடடாய காப்பீடோடு கூடுதலாக தீ மற்றும் / அல்லது திருட்டிற்கு மட்டும் காப்பளிக்கும் கட்டுப்படுத்தப்பட்ட காப்பும் உள்ளன.

வாகனத்தில் பொறுத்தப்பட்டுள்ள இணைப்புகளின் இழப்பு அல்லது சேதத்திற்கும் பாலிசி காப்பளிக்கலாம். மேலும், பயணிகளுக்கும் ஊதியம் பெறும் ஓட்டுனருக்கான தனியார் கார் பாலிசிகளின்கீழ் தனிநபர் விபத்துக் காப்பு; வணிக ரீதியிலான வாகனங்களில் பயணிக்கும் தொழிலாளர்கள் மற்றும் கட்டணமில்லாது பயணிக்கும் பயணிகளுக்கான சட்டப்பூர்வ கடப்பாடு ஆகியவற்றுக்கும் காப்பளிக்கலாம். ஒருவேளை வாகனம் பழுதாகி விட்டால் அவசரகால சேவையையோ அல்லது மாற்று காரை கட்டணமின்றிப் பயன்படுத்தவோ காப்பீட்டாளர்கள் இலவசமாக அனுமதிக்கிறார்கள்.

## 2. விலக்குகள்

பாலிசிகளின்கீழ் உள்ள முக்கியமான விலக்குகளாவன: தேய்வும் நைவும், பழுதுகள், விளைவு இழப்பு, மற்றும் செல்லாத ஓட்டுனர் உரிமத்துடனோ அல்லது மது அருந்திவிட்டு. வாகனம் ஓட்டியதால் ஏற்படும் இழப்பு. 'பயன்படுத்துவதற்கான வரம்புகள்' என்பதற்கு உட்பட்டு வாகனத்தைப் பயன்படுத்தாது இருப்பதற்கு (எ.கா. தனியார் வாகனத்தை ஒரு வாடகை வாகனமாகப் பயன்படுத்துவது) காப்பளிக்கப்படாது

## 3. காப்பீடுத் தொகையும் பிரீமியத் தொகையும்

ஒரு வாகன பாலிசியில் ஒரு வாகனத்தின் காப்பீட்டுத் தொகை காப்பீடு பெற்றவரின் அறிவிக்கப்பட்ட மதிப்பு (ஐடி -IDV) என அறியப்படுகிறது.

வாகனம் திருடப்பட்டாலோ அல்லது ஒரு விபத்தில் பழுதை சரி செய்ய முடியாத அளவிற்கு மொத்தமாகச் சேதமுற்றிருந்தாலோ, ஐடிவி-யின் அடிப்படையில் ஈடுக்கோரலுக்கான தொகை முடிவு செய்யப்படும்.

காப்பீடு பெற்றவரின் அறிவிக்கப்பட்ட மதிப்பு, கன திறன், புவியியல் வட்டாரம், வாகனத்தின் வயது அதாவது எவ்வளவு பழையது போன்ற காரணிகளைப் பொறுத்து மதிப்பீடு / பிரீமியம் கணக்கிடப்படுகிறது.

**சுய-பரீட்சை** 3

வாகன காப்பீடு யாருடைய பெயரில் எடுக்கப்பட வேண்டும்?

I. வட்டார போக்குவரத்து அதிகாரியிடம் பதிவுசெய்யப்பட்ட வாகன உரிமையாளரின் பெயரில்

II. உரிமையாளர் இல்லாத வேறு ஒருவர் வாகனம் ஓட்டுவாரானால், வாகனம் ஓட்டுநரின் பெயரில் வட்டார போக்குவரத்து அதிகாரியின் ஒப்புதலுக்கு உட்பட்டு எடுக்கலாம்.

III. வாகன உரிமையாளர் உட்பட வாகன உரிமையாளரின் எந்த ஒரு குடும்ப உறுப்பினரின் பெயரிலும் வட்டார போக்குவரத்து அதிகாரியின் ஒப்புதலுக்கு உட்பட்டு எடுக்கலாம்.

IV. உரிமையாளர் இல்லாத வேறு ஒருவர் வாகனம் ஓட்டுவாரானால், முதன்மை பாலிசி வாகன உரிமையாளரின் பெயரிலும் கூடுதல் காப்பு வாகனத்தை ஒட்டக்கூடிய எல்லாருடைய பெயரிலும் கூடுதல் பாலிசிகள் வாங்கப்பட வேண்டும்.

---

**சுருக்கம்**

a) ஒரு வீட்டுடைமையாளரின் காப்பீட்டு பாலிசி, அந்த காப்பீடு பெற்றவரின் சொத்தின்மீது ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இன்னல்கள் அல்லது நிகழ்வுகளினால் ஏற்படும் இழப்புகளுக்கு மட்டுமே காப்பளிக்கிறது. காப்பிடப்படும் இன்னல்கள் தெளிவாக எழுதப்பட்டிருக்கும்.

b) வீட்டுடைமையாளரின் காப்பீடுகள் கட்டமைப்பிற்கும் அதன் உடைமைகளுக்கும் தீ, கலவரங்கள், குழாய்களின் வெடிப்பு, பூகம்பம் போன்றவற்றுக்கு எதிராக காப்பளிக்கின்றன. கட்டட அமைப்பினைத் தவிர, அதன் உடைமைகளுக்கு, கொள்ளை, வீட்டுடைப்பு, திருட்டு ஆகியவற்றிலிருந்தும் காப்பளிக்கிறது.

c) பேக்கேஜ் காப்புகள் ஒரே ஆவணத்தின்கீழ் ஒருங்கிணைந்த காப்பினை வழங்குகின்றன.

d) வீட்டுடைமையாளரின் காப்பீட்டு பாலிசிக்கு பொதுவாக, காப்பீட்டுத் தொகையை நிச்சயிக்க இரு வழிகள் உள்ளன. அவை: சந்தை மதிப்பு (MV) என்பது ஒருவகை. மற்றொன்று மறுநியமன மதிப்பு (RIV)

e) கடைக்காரரின் காப்பீடு கடையின் வடிவமைப்பு மற்றும் அவற்றில் உள்ளவற்றை தீ, பூகம்பம், வெள்ளம் அல்லது கெட்ட எண்ணத்தில் சேதப்படுத்துதல் மற்றும் கொள்ளை ஆகியவற்றுக்கு எதிராகப் பொதுவாகக் காப்பளிக்கிறது. தொழில் குறுக்கீட்டு பாதுகாப்பினையும்கூட கடை காப்பீடு உள்ளடக்கலாம்.

f) விபத்தினாலும் வேறு சில காரணங்களாலும் வாகனங்களுக்கு ஏற்படும் சேதம் மற்றும் இழப்பிற்கு வாகன காப்பீடுகள் காப்பளிக்கின்றன. மேலும், வாகன உரிமையாளரின் வாகனத்தால் ஏற்பட்ட விபத்து மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாகன உரிமையாளரால் அளிக்க வேண்டிய இழப்பீட்டினை அளிக்கும் சட்டப்பூர்வ கடப்பாட்டிற்கும் காப்பளிக்கிறது. காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தில் ஏறுவது/ இறங்குவது அல்லது இணை ஓட்டுனராக அதில் பயணம் செய்வது உட்பட, இந்த தனிநபர் விபத்து காப்பு உரிமையாளர்-ஓட்டுனருக்கு வழங்கப்படும்..

## முக்கியமான வார்த்தைகள்

a) வீட்டுடைமையாளரின் காப்பீடு

b) கடைக்காரர்களின் காப்பீடு

c) வாகன காப்பீடு

## சுய-பரீட்சைக்கான பதில்கள்

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் I.

**பதில் 2** - சரியான பதில் விருப்பம் IV.

**பதில் 3** - சரியான பதில் விருப்பம் I.

# அத்தியாயம் G-04

# வர்த்தகக் காப்பீடு

## அத்தியாய அறிமுகம்

முந்தைய அத்தியாயத்தில் தனிநபர்களும் குடும்பங்களும் சந்திக்கும் அபாயங்களுக்கான பல்வேறு வகையான காப்பீட்டுத் திட்டங்கள் பற்றிப் பார்த்தோம். காப்பீடுக்கான பிற தேவைகள் உள்ள மற்றொரு வகை வாடிக்கையாளர்களும் உள்ளனர். இவர்கள் பல்வேறு வகையான பொருட்கள் மற்றும் சேவைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தக அல்லது தொழில் நிறுவனங்களாகும். இந்தப் பிரிவினர் சந்திக்கும் அபாயங்களுக்கான காப்பீட்டுத் திட்டங்கள் பற்றி இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

## கற்பதற்கான குறிக்கோள்கள்

பின்வரும் காப்பீட்டு வகைகளின் அடிப்படைகளை புரிந்து கொள்ளவும்:

A. தீ காப்பீடு
B. தொழில் குறுக்கீட்டுக் காப்பீடு
C. கொள்ளைக்கான காப்பீடு
D. பணக் காப்பீடு
E. நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீடு (Fidelity Guarantee Insurance)
F. வங்கியாளர்கள் இழப்பீட்டுக் காப்பீடு (Bankers Indemnity Insurance)
G. நகைக்கடையாளர்களின் பிளா பாலிசி (Jewelers' Block Policy)
H. பொறியியல் காப்பீடு (Engineering Insurance)
I. தொழில்துறை அனைத்து-அபாய காப்பீடு (Industrial All Risks Insurance)
J. கடல்சார் காப்பீடு (Marine Insurance)
K. கடப்பாடு காப்பீடு பாலிசிகள் (Liability policies)

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, விவாதிக்கப்பட்ட 11 வகையான காப்பீடுகளின் முக்கியத்துவம் மற்றும் அடிப்படை நோக்கங்களை நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

## A. சொத்து / தீ காப்பீடு

வர்த்தக நிறுவனங்கள் பரந்த அர்த்தத்தில் இருவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன:

- ✓ சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் [SMEs] மற்றும்

    - பாரத் சூக்ஷ்மா பாலிசி

    - பாரத் லகு பாலிசி

- ✓ பெரிய தொழில் நிறுவனங்கள்

    - நிலையான தீ மற்றும் சிறப்பு இன்னல்களுக்கான பாலிசி (SFSP), IAR போன்றவை

வரலாற்று ரீதியாக, பொதுக் காப்பீட்டுத் துறை இந்த வாடிக்கையாளர்களின் தேவைகளுக்குச் சேவையாற்றுவதனால் பெருமளவில் வளர்ந்துள்ளது.

பொது காப்பீட்டுத் திட்டங்களை வர்த்தக நிறுவனங்களுக்கு விற்கும் போது அவர்களுடைய தேவைகளை காப்பீட்டுத் திட்டங்களுடன் கவனமாக ஒப்பிட வேண்டியுள்ளது. கிடைக்கும் காப்பீடுகளைப் பற்றிய சரியான புரிதல் முகவர்களுக்குத் தேவை. இத்தகைய பொது காப்பீட்டுத் திட்டங்களில் சிலவற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.

1. **நிலையான தீ மற்றும் சிறப்பு இன்னல்களுக்கான பாலிசி (SFSP),**

தீ காப்பீட்டுத் திட்டம் வர்த்தக நிறுவனங்களுக்கும் சொத்தின் உரிமையாளருக்கும், அறக்கட்டளை அல்லது சங்கத்தில் சொத்து வைத்திருப்பவருக்கும் மற்றும் சொத்தில் நிதி பற்று பெறும் தனிநபர் / நிதி நிறுவனங்களுக்கும் பொருந்தக் கூடியது.

சப்ளையரின் / வாடிக்கையாளரின் வளாகத்தில் உள்ள பொருட்கள் உட்பட கட்டடங்கள், ஆலை மற்றும் இயந்திரம், சாமான்கள், இணைப்புகள் மற்றும் பிற உடைமைகள், சரக்கிருப்பு மற்றும் செயல்பாடில் உள்ள சரக்கிருப்புகள் போன்ற ஒரு குறிப்பிட்ட வளாகத்தில் உள்ள அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், குறிப்பாக அறிவிக்கப்பட்டால், நம்பிக்கை பொறுப்பேற்று (Goods held in trust) வைத்திருக்கும் இருப்புகள், பழுதுபார்ப்பதற்காக

வளாகத்திலிருந்து தற்காலிகமாக அகற்றப்பட்ட இயந்திரங்களும் காப்பீடு செய்யப்படலாம்.

தொழிலை அதன் இயல்புநிலைக்குக் கொண்டுவரவும் சேதமடைந்த சொத்தினை மீண்டும் எழுப்பவும் புதுப்பிக்கவும் பண இழப்பீடு கிடைப்பது மிக அவசியம். இங்குதான் தீ காப்பீடு அதன் பணியைச் செய்கிறது.

### 2.1 தரமான பாலிசி **எவற்றைக் காப்பீடு செய்கிறது?**

தீ பாலிசி மூலம் (முந்தைய அகில இந்திய தீயணைப்பு கட்டணத்தின்படி) பாரம்பரியமாக காப்பு பெறும் சில இன்னல்கள் இங்கு கீழே விவரிக்கப்படுகின்றன:

வணிக இன்னல்களுக்கான தீ காப்பீடு கீழ்க்காணும் ஆபத்துகளுக்கு காப்பளிக்கிறது:

- ✓ தீ
- ✓ மின்னல்
- ✓ குண்டு வெடிப்பு / உள்வாங்கல் (implosion)
- ✓ கலவரம், கதவடைப்பு மற்றும் தீய நோக்க சேதம்
- ✓ பாதிப்புச் சேதம்
- ✓ விமான சேதம்
- ✓ புயல், சூறாவளி, சூறைக் காற்று, கடும்புயல், சுழல், சுழல்காற்று மற்றும் நீரில் மூழ்குதல்
- ✓ நிலம் தாழ்தல் மற்றும் பாறை உருளுதல் உட்பட நிலச்சரிவு
- ✓ நீர் தொட்டி, ஆய்கருவிகள் மற்றும் குழாய்கள் வெடித்தல் மற்றும் நிறைந்து வழிதல்,
- ✓ ஏவுகணைப் பரிசோதனை நடவடிக்கைகளால் சேதம்
- ✓ தானியங்கி தெளிப்பான் நிறுவலில் இருந்து வரும் கசிவுகள்
- ✓ புதர் தீ

வர்த்தக காப்பீடுகளை தனிநபர் மற்றும் சில்லறை காப்பீடுகளிலிருந்து வேறுபடுத்தும் இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளன.

a) தனிநபர் காப்பீட்டுத் தேவைகளைவிட நிறுவனங்கள் மற்றும் தொழிலகங்களின் காப்பீட்டுத் தேவைகள் மிக மிகப் பெரியது. இதற்குக் காரணம் தனிநபரின் சொத்துக்களின் மதிப்பினைவிட வர்த்தக நிறுவனங்களின் சொத்துக்களின் மதிப்பு மிக மிக அதிகம். ஒரு நிறுவனம் நீடித்திருப்பதற்கும் வளர்ச்சியடைவதற்கும் அவற்றின் இழப்பு அல்லது சேதம் பெரிய பாதிப்பினை ஏற்படுத்தும்.

b) வர்த்தக நிறுவனங்களின் காப்பீட்டுக்கான கோரிக்கை சட்ட அல்லது பிற தேவைகளினால் பல நேரங்களில் கட்டாயமாக்கப்படுகிறது. உதாரணமாக, தொழிலகங்களும் சொத்துக்களும் வங்கிகளின் கடன் மூலம் நிறுவப்படும்போது, கடன் பெறுவதற்கு காப்பீடு ஒரு நிபந்தனையாக இருக்கலாம். இந்தியாவில் உள்ள பல பெருவணிக நிறுவனங்கள் தொழில்முறைசார் நிறுவனங்களாகும் மற்றும் அவற்றில் பல பன்னாட்டு நிறுவனங்களாகும்.

   தங்கள் சொத்துக்களைப் பாதுகாக்க பொறுத்தமான அபாய மேலாண்மை உத்திகள் மற்றும் காப்பீடுகள் உட்பட்ட உலகளாவிய தர அளவுகளை அவர்கள் பராமரிக்க வேண்டி உள்ளது.

சில விதிகளுக்கு உட்பட்டு மேற்கண்ட இன்னல்களின் காரணமாக எழும் எந்த ஒரு இழப்பும் காப்பீட்டினால் காப்பளிக்கப்படுகிறது.

## 2.2 திருத்தப்பட்ட நிலையான தீ மற்றும் சிறப்பு இன்னல்களுக்கான(SFSP) பாலிசிகள்,

1 ஏப்ரல், 2021 முதல் ஐஆர்டிஏஐ வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது, இதன் மூலம் நிலையான தீ மற்றும் சிறப்பு இன்னல்கள் (SFSP) பாலிசியானது **கீழே கொடுக்கப்பட்டுள்ள அபாயங்களுக்கான** இரண்டு தரமான தயாரிப்புகளால் மாற்றப்படும், இது தீ மற்றும் இன்னல்கள் காப்பீட்டு வணிகத்தை செய்யும் அனைத்து பொது காப்பீட்டாளர்களாலும் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும்.

i. **பாரத் சூக்ஷ்மா உத்யம் சுரக்ஷா** (**Bharat Sookshma Udyam Suraksha**- அபாயத்தில் உள்ள மொத்த மதிப்பு ரூ. 5 கோடி வரை உள்ள நிறுவனங்களுக்கானது)- மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர

நிறுவனங்களின் (MSME) நிதிப் பாதுகாப்பிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது

இந்த பாலிசியானது, கட்டிடம்/கட்டமைப்புகள், ஆலை மற்றும் இயந்திரங்கள், இருப்புகள் மற்றும் நிறுவனங்களின் பிற சொத்துக்களுக்கான காப்பீட்டை வழங்குகிறது, இதில் ஒரே இடத்தில் உள்ள காப்பீடை பெறும் அனைத்து சொத்து வர்க்கங்களிலும் அபாய காப்பளிக்கப்பட மொத்த மதிப்பின் வரம்பு ரூ. 5 கோடி வரை இருக்கலாம். இந்த பாலிசி, குடியிருப்புகளுக்கான பாலிசியைப் போலவே, பலவிதமான ஆபத்துக்களுக்கு எதிரான காப்பை வழங்குகிறது

பாலிசியில் அடிப்படை காப்புடன் கூடுதலாக பல உள்ளமைக்கப்பட்ட காப்புகள் உள்ளன – மாற்றங்கள், சேர்த்தல் அல்லது நீட்டிப்புகளுக்கான காப்பு, ஃப்ளோட்டர் அதாவது மிதவை அடிப்படையில் சரக்கிருப்புகளுக்கான காப்பு, இருப்புகளை தற்காலிகமாக அகற்றுவதற்கான காப்பு, குறிப்பிட்ட பொருட்களுக்கான காப்பு, தொடக்க செலவுகளுக்கான காப்பீடு (இழப்பைத் தொடர்ந்து), கட்டிடக் கலைஞர்கள், சர்வேயர்கள் மற்றும் ஆலோசிக்கும் இன்ஜினியர்களுக்கான தொழில்முறைக் கட்டணங்களைச் செலுத்த, குப்பைகளை அகற்றுவதற்கான செலவு மற்றும் நகராட்சி விதிமுறைகளால் கட்டாயப்படுத்தப்படும் செலவுகளுக்கான காப்பீடும் உள்ளது.

அலுவலகங்கள், ஹோட்டல்கள், தொழில்கள், சேமிப்பு அபாயங்கள் மற்றும் பல மைக்ரோ நிலை நிறுவனங்கள் கூட இந்த பாலிசியை எடுக்கலாம். பாலிசியானது 15% வரையிலான குறைகாப்பீட்டை தள்ளுபடி செய்கிறது. பாரத் சூக்ஷ்மா உத்யம் பாலிசிகள், பாலிசி காலத்தின் போது, மேற் குறிப்பு மூலம் காப்பீட்டுத் தொகையை அதிகரிக்க அனுமதிக்கின்றன.

ii. **பாரத் லகு உத்யம் சுரக்ஷா** (Bharat Laghu Udyam Suraksha- அபாயத்திற்கான **மொத்த மதிப்பு ரூ. 5 கோடி முதல் ரூ. 50 கோடி வரை உள்ள நிறுவனங்களுக்கானது**) சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSME) நிதிப் பாதுகாப்பிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் பாலிசியானது, கட்டிடம்/கட்டமைப்புகள், ஆலை மற்றும் இயந்திரங்கள், சரக்கிருப்பு மற்றும் நிறுவனங்களின் பிற சொத்துக்களுக்கு காப்பீட்டை வழங்குகிறது, இதில் ஒரே இடத்தில் உள்ள அனைத்து காப்பீட்டுச் சொத்து வர்க்கங்களிலும் பாலிசி தொடங்கும் நாளன்று அபாயத்திற்காக காப்பளிக்கப்பட்டதின் மொத்த மதிப்பு ரூ. 5 கோடிக்கு மேல் தொடங்கி ரூ.50 கோடிக்கு மிகாமல் இருக்கும். இந்த பாலிசி, சிறு நிறுவனங்களுக்கான மைக்ரோ நிலை பாலிசியைப் போலவே, பலவிதமான இன்னல்களுக்கு எதிரான காப்பை வழங்குகிறது

இந்த பாலிசியை மீண்டும், அலுவலகங்கள், ஹோட்டல்கள், தொழில்கள், சேமிப்பு அபாயங்கள் மற்றும் அது போன்ற அனைத்து வகையான அபாயங்களுக்கும் காப்பளிக்கப்படலாம். பாரத் லகு உத்யம் பாலிசிகள் மேற்குறிப்பு மூலம் பாலிசி காலத்தின் போது காப்பீட்டுத் தொகையை அதிகரிக்க அனுமதிக்கின்றன.

### iii. தீ பாலிசிகளின் கீழ் விதிவிலக்குகள்

காப்பீட்டாளர்கள் பாரம்பரியமாக தீ பாலிசிகளின் வரம்பிலிருந்து பின்வருவனவற்றை விலக்குகின்றனர்.

**விலக்கப்பட்ட இன்னல்களா காரணமாக ஏற்படும் இழப்புகள்**

i. போர் மற்றும் போர் போன்ற நடவடிக்கைகள்.

ii. அணு அபாயங்கள்

iii. அயனியாக்கம் மற்றும் கதிர்வீச்சு

iv. மாசு மற்றும் மாசு இழப்புகள்

**பொதுக் காப்பீட்டில் உள்ள பிற பாலிசிகளால் காப்பளிக்கப்படும் இன்னல்கள்**

i. இயந்திரம் பழுதாவது

ii. தொழில் தடங்கல்,

### iv. கூடுதல் காப்புகள்

இருப்பினும், பூகம்பம், தீ மற்றும் அதிர்ச்சி, காப்பளிக்கப்பட்ட இன்னலின் விளைவாக மின்சாரம் இல்லாத காரணத்தால் குளிரூட்டும்

அறைகளில் உள்ள இருப்பு கெட்டுப்போவது, இடிபாடுகளை அகற்றுவதற்கான கூடுதல் செலவுகள், கட்டடக்கலை, பாலிசியினால் காப்பளிக்கப்படும் தொகையை விட கூடுதலான பொறியியலாளர் ஆலோசனைக் கட்டணம், காட்டுத் தீ, தன்னிச்சையாக எரிதல் மற்றும் சொந்த வாகனங்களின் காரணமாக ஏற்படும் மோதல் விளைவுச் சேதம், தீவிரவாதம் போன்ற சில இன்னல்களுக்கு கூடுதல் பிரீமியம் செலுத்துவதன் மூலம் காப்பளிக்கப்படலாம்.

v. **தீ பாலிசியின் மாறுபாடுகள்**

தீ பாலிசிகள் பொதுவாக 12 மாத காலத்திற்கு அளிக்கப்படுகின்றன. குடியிருப்புகளுக்கு மட்டுமே காப்பீட்டு நிறுவனங்கள் நீண்ட கால அதாவது 12 மாத காலத்திற்கு மேலுள்ள பாலிசிகளை வழங்குகின்றன. சில சமயங்களில், குறுகிய கால அளவைகள் பொருந்தும் இடத்தில் குறுகிய கால காப்பீடுகளும் வழங்கப்படுகின்றன.

a. **சந்தை மதிப்பு மற்றும் மறுநியமன மதிப்பு பாலிசிகள்**: இழப்பு ஏற்பட்டால், காப்பீட்டாளர் பொதுவாக சந்தை மதிப்பினை [தேய்மானம் போக உள்ள மதிப்பு] வழங்குவார். ஆனால், மறுநியமன மதிப்பு பாலிசியின்கீழ் சேதமடைந்த சொத்தினை அதே வகையான புதிய சொத்தினால் மாற்றுவதற்கான தொகையை காப்பீட்டாளர்கள் வழங்குவர். வழக்கமான தீ காப்பீட்டைப் போன்று காப்பீடுத் தொகை புதிய மாற்று மதிப்பிற்கு ஒத்ததாக இருக்க வேண்டுமேயன்றி சந்தை மதிப்பிற்கு ஒத்ததாக இருக்கலாகாது.

   கட்டிடங்கள், ஆலை, இயந்திரம் மற்றும் சாமான்கள், இணைப்பு ஆகியவற்றுக்கு காப்பளிக்க மறுநியமன மதிப்பு பாலிசிகள் வழங்கப்படுகின்றன. சந்தை மதிப்பின் அடிப்படையில் காப்பளிக்கப்படும் சரக்கிருப்புகளுக்கு மறுநியமன மதிப்பு காப்பீடுகள் வழங்கப்படுவதில்லை.

b. **அறிவிப்புக் காப்பீடு**: பண்டக சாலையில் சேமிக்கப்பட்டுள்ள மதிப்புகளில் அடிக்கடி ஏற்படும் ஏற்ற இறக்கங்களைக் கவனித்துக்கொள்ள, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அறிவிப்பு பாலிசி வழங்கப்படுகிறது. இதில் காப்பீட்டுக் காலத்தில் பண்டகசாலையில் சேமிக்கப்பட நினைத்திருக்கும் பொருட்களின்

அதிகபட்ச மதிப்பாக காப்பீட்டுத் தொகை இருக்கவேண்டும். இந்த மதிப்பின்மீது ஒரு உத்தேச பிரிமியத் தொகை விதிக்கப்படுகிறது. காப்பீட்டு நடைமுறைக் காலத்தில், ஏற்கப்பட்ட இடைவெளிகளில் காப்பீடு பெற்றவர் அவருடைய சரக்கிருப்புகளின் மதிப்பினை அறிவிக்க வேண்டும். காப்பீட்டுக் காலத்தின் இறுதியில் பிரீமியத்துடன் இதை சரிசெய்ய முடியும்.

c. **மிதவை (ஃப்ளோட்டர்) பாலிசிகள்:** பெயர்ச்சி பாலிசியானது ஒரே காப்பீடுத் தொகையின்கீழ் பல்வேறு குறிப்பிட்ட இடங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ள பொருட்களின் சரக்கிருப்புகளுக்கு வழங்கப்படலாம். குறிப்பிடப்படாத இடங்களுக்கு காப்பீடு வழங்கப்படாது. எந்த ஒரு இருப்பு வைக்கப்பட்ட இடத்திலும் காப்பீடு பெற்றவரின் இருப்புகளோடு 10% ஏற்றுதலுடன் உள்ள இருப்புக்கான விகிதமே பிரீமியமாக இருக்கும். இவை தீ பெயர்ச்சித் திட்டங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. ஏனெனில், காப்பீடுத் தொகை பல இடங்களுக்குப் பெயர்ச்சியடைகிறது அல்லது ஒரு தொகை பல இடங்களில் மிதக்கிறது.

vi. **பிரீமிய விகிதம் பின்வருவதை பொறுத்தது**:

a) குடியிருப்பு வகை - தொழில்துறை சார்ந்ததா அல்லது வேறு வகையா

b) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பொறுத்து ஒரு தொழில்துறை வளாகத்தில் உள்ள அனைத்துப் பொருட்களுக்கும் ஒரே விகிதத்தில் கட்டணம் விதிக்கப்படும்.

c) தொழில்துறை வளாகத்திற்கு வெளியில் உள்ளவற்றுக்கு அந்தந்த தனி இடங்களில் குடியிருப்பின் தன்மையைப் பொறுத்து கட்டண விகிதம் இருக்கும்.

d) பண்டகப் பகுதிகள் அங்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களின் மாசுபடுத்தும் தன்மையின் அடிப்படையில் மதிப்பிடப்படும்.

e) கூடுதல் **("Add on")** காப்புகளைச் சேர்க்க கூடுதல் ப்ரீமியம் விதிக்கப்படும்.

f) முந்தைய ஈடுக்கோரல் வரலாறு மற்றும் வளாகத்தில் வழங்கப்பட்டுள்ள தீ காப்பு வசதிகளின் அடிப்படையில் பிரீமியத்தில் சலுகை வழங்கப்படுகிறது.

g) பிரீமியத் தொகையினைக் குறைக்க கலவரம், கதவடைப்பு, தீயநோக்க மற்றும் தீவிரவாத சேதம், வெள்ள வகை இன்னல்களுக்கான காப்புகளை இதில் சேர்க்காமலும் இருக்கலாம்.

ஒவ்வொரு காப்பீட்டாளர்களுக்கு இடையிலும் கட்டண விகிதம் மாறுபடலாம்.

**சுய-பரீட்சை** 1

வர்த்தக இன்னல்களுக்கான தீ காப்பீடு தரும் காப்புகளாவன _______

I. நெடுஞ்சாலையில் வாகனம் எரிவது
II. கப்பலில் தீ
III. தொழிற்சாலையில் வெடிப்பு
IV. தீ விபத்து காரணமாக மருத்துவமனையில் அனுமதி

## B. தொழில் குறுக்கீட்டுக் காப்பீடு

இந்த வகைக் காப்பீடு விளைவு இழப்புக் காப்பீடு அல்லது இலாப இழப்புக் காப்பீடு எனவும் அறியப்படுகிறது.

காப்பீடு செய்யப்பட்ட இன்னல்களினால் கட்டிடம், ஆலை, இயந்திரங்கள், இணைப்புகள், வியாபாரப் பொருட்கள் போன்றவற்றில் ஏற்படும் பொருள் அல்லது சொத்து சேதம் அல்லது இழப்பிற்கு தீ காப்பீடு இழப்பீடு வழங்குகிறது. **இதன் விளைவாக காப்பீடு பெற்றவரின் தொழிலுக்கு முழுமையாகவோ பகுதியளவிலோ தடங்கல் ஏற்படலாம்**. இதன் விளைவாக பல்வேறு பொருளாதார இழப்புகள் இந்தத் தடங்கல் காலத்தில் ஏற்படலாம்.

### தொழில் குறுக்கீட்டுக் பாலிசியின்கீழ் காப்பு

விளைவு இழப்பு (CL) பாலிசி [தொழில் குறுக்கீடு (BI)] மொத்த இலாபத்தில் ஏற்படும் இழப்பினை ஈடு செய்கிறது - மொத்த இலாபம் என்பது நிகர இலாபத்துடன் சேர்த்து இறுதி இழப்பினை குறைப்பதற்காக எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு வேகமாக,

தனது தொழிலை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்காக இழப்பீடு பெற்றவர் செய்யும் கூடுதல் செலவு ஆகும். இங்கு காப்பீடு பெறும் இன்னல்களும் நிபந்தனைகளும் தீ காப்பீட்டின் கீழ் உள்ளவை போன்றவையே.

### எடுத்துக்காட்டு

ஒரு தீயின் விளைவாக கார் தயாரிப்பாளரின் தொழிற்சாலை சேதமடைந்தால், உற்பத்தி இழப்பினால் தயாரிப்பாளரின் வருமானத்திலும் இழப்பு ஏற்படும். இந்த வருமான இழப்புடன் சேர்த்து கூடுதல் செலவுகளும் காப்பீடு செய்யப்படலாம். ஆனால் காப்பீடு பெற்ற இன்னல் காரணமாக அந்த இழப்பு நடந்திருக்க வேண்டும்.

---

வழக்கமான தீ மற்றும் சிறப்பு இன்னல்களுக்கான பாலிசியுடன் இணைந்தே இந்தப் பாலிசியினை எடுக்க முடியும். ஏனெனில், வழக்கமான தீ மற்றும் சிறப்பு இன்னல்களுக்கான பாலிசியின்கீழ் ஈடுக்கோரல் இருந்தால் மட்டுமே இந்தப் பாலிசியின்கீழ் எழுப்பப்படும் ஈடுக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

### சுய-பரீட்சை 2

தொழில் குறுக்கீட்டு காப்பீட்டுத் திட்டம் __________.-உடன் இணைந்தே எடுக்க முடியும்.

I. தரநிலை தீ மற்றும் சிறப்பு இன்னல்கள் பாலிசி

II. தரநிலை கடல்சார் பொருட்கள் பாலிசி

III. தரநிலை வாகனக் காப்பீடு பாலிசி

IV. தரநிலை உடல்நலக் காப்பீடு பாலிசி

---

### C. கொள்ளைக்கான காப்பீடு

திருடும் வாய்ப்புடைய சரக்கு இருப்புகள், பொருட்கள், சாமான்கள், இணைப்புகள் மற்றும் பாதுகாப்புப் பெட்டகத்தில் உள்ள பணம் போன்றவைகள் உள்ள தொழிற்சாலைகள், கடைகள், அலுவலகங்கள், பண்டகசாலைகள் போன்ற தொழில் வளாகங்களுக்காகவே இந்தப்

பாலிசி உள்ளது. காப்பீட்டின் நோக்கம் பாலிசியில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும்.

**கொள்ளைக் காப்பீட்டின்கீழ் காப்பளிக்கப்படும் இன்னல்கள்**

a) வலுக்கட்டாயத்துடனும் வன்முறையுடனும் வளாகத்திற்குள் நுழைந்ததனால் அல்லது வலுக்கட்டாயத்துடனும் வன்முறையுடனும் வளாகத்திலிருந்து வெளியேறியது உண்மையாக நடந்திருந்ததால் அல்லது வழிப்பறி மூலம் ஏற்பட்ட இழப்பு .

b) காப்பீடு செய்யப்பட்ட சொத்து அல்லது வளாகத்திற்கு கொள்ளையினால் ஏற்பட்ட சேதம். காப்பீடு செய்யப்பட்ட சொத்து காப்பீடு வழங்கப்பட்ட வளாகத்தில் இருந்து தொலைந்திருந்தால் மட்டுமே காப்பிடப்படும். பிற வளாகத்திலிருந்து தொலைந்திருந்தால் காப்பிடப்படாது.

**பணக் காப்பு:** கொள்ளைக் காப்பில் முக்கியமான அங்கமாக இருப்பது பணக் காப்பாகும். ஏற்கப்பட்ட தயாரிப்பு மற்றும் வடிவமைப்பில் உள்ள பெட்டகத்தில் பணம் பூட்டப்பட்டு கொள்ளையிட முடியாத மாதிரி பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தால் மட்டுமே இக்காப்பு கிடைக்கும். பணக் காப்பினை அளிப்பதற்கான பொதுவான நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

a) அசல் சாவியைப் பயன்படுத்தி பெட்டகத்திலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது. அந்தச் சாவியை வன்முறையாகப் பறித்தோ அல்லது மிரட்டியோ அல்லது பலத்தைப் பயன்படுத்தியோ பிடுங்கியிருக்க வேண்டும். இது பொதுவாக **“சாவி கூறு" (key clause)** என அறியப்படுகிறது.

b) பெட்டகத்தைத் தவிர வேறொரு இடத்தில் பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ள தொகையின் முழு பட்டியல் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. அத்தகைய பதிவுகளில் உண்மையில் காட்டப்பட்டுள்ள தொகைக்கு மட்டுமே காப்பீட்டாளர் பொறுப்பாகிறார்.

1. **முதல் இழப்பு காப்பீடு**

அதிக அளவில் உள்ள ஆனால் குறைந்த மதிப்புடைய பொருட்களைப் பொறுத்தவரை (உதாரணமாக, பஞ்சுப் பொதிகள், தானியம், சர்க்கரை போன்றவை) ஒரே நேரத்தில் முழு இருப்பும் காணாமல் போகும் வாய்ப்பு மிகக் குறைவாகவே கருதப்படுகிறது. கொள்ளையடிக்கக்கூடிய மதிப்பு சாத்தியமான அதிகபட்ச இழப்பாக (PML) கணக்கிடப்பட்டு, இந்த அதிகபட்ச சாத்தியமான இழப்புக்கு முழு பிரீமியமும் வசூலிக்கப்படும், மீதமுள்ள பங்குகளின் மீது முழு பிரீமியத்தின் குறிப்பிட்ட சதவீதம் வசூலிக்கப்படும் ஏனெனில் PML முழு பங்குகளின் மீது பெயர்ச்சி ஆகிறது. இரண்டாவது முறையும் கொள்ளை உடனடியாக நடக்காது அல்லது காப்பீடு பெற்றவர் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பார் எனக் கருதப்படுகிறது.

2. தீக் காப்பீடு போலவே, இருப்புகளைப் பொறுத்தமட்டில், அறிவிப்புக் காப்பு மற்றும் பெயர்ச்சி காப்பு ஆகியவை சாத்தியமாகும்.

3. **விலக்குகள்**

தொழிலாளர்களாலும், குடும்ப உறுப்பினர்களாலும் அல்லது சட்டப்பூர்வமாக அந்த வளாகத்தில் உள்ள பிறராலும் திருடப்படுவதற்கு பாலிசி காப்பளிக்காது. சாதாரண திருட்டுக்கும் காப்பளிக்காது. தீ அல்லது பிளேட் கண்ணாடி பாலிசிகளினால் காப்பளிக்கப்படும் இழப்புகளையும் இது விலக்குகிறது.

4. **நீட்டிப்புகள்**

கூடுதல் பிரீமியத்தை கட்டி கலவரம், வேலைநிறுத்தங்கள் மற்றும் தீவிரவாத இன்னல்களுக்கும் காப்பளிக்கும் வகையில் பாலிசி நீட்டிக்கப்படலாம்.

5. **பிரீமியம்**

கொள்ளை பாலிசிக்கான பிரீமிய விகிதம் அந்த காப்பீடு பெறும் சொத்தின் தன்மை, காப்பீடு பெறுவரின் நெறிமுறைசார் ஆபத்து, வளாகக் கட்டுமானம் மற்றும் இருப்பிடம், பாதுகாப்பு நடவடிக்கைகள்

(*எ.கா. காவலர், கொள்ளை அலாரம்*), முந்தைய ஈடுக்கோரல் அனுபவம் போன்றவற்றின் அடிப்படையில் இருக்கும்.

முன்மொழிவுப் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களோடு கூடுதலாக, உயர்வான பணமதிப்புடைய காப்பீடை ஏற்பதற்கு முன்பு முந்தைய கண்காணிப்பும் காப்பீட்டாளரால் செய்யப்படுகிறது.

**சுய-பரீட்சை** 3

கொள்ளை பாலிசிக்கான பிரீமியம் எவற்றைச் சார்ந்துள்ளது?

I. காப்பீடு செய்யப்பட்ட சொத்தின் தன்மை

II. காப்பீடு பெறுவரின் நெறிமுறைசார் ஆபத்து

III. வளாகக் கட்டுமானம் மற்றும் இருப்பிடம்

IV. மேலுள்ள அனைத்தும்

## D. பணக் காப்பீடு

பணத்தைக் கையாளுவது எந்த ஒரு தொழிலிலும் உள்ளார்ந்த அங்கமாகும். இது வங்கிகளையும் தொழில் வர்த்தக நிறுவனங்களையும் பண இழப்பிலிருந்து பாதுகாப்பதற்காக உள்ளது. வளாகத்திலும் வெளியிலும் பணம் அபாயத்தில் உள்ளது. பணத்தை எடுக்கும்போது, வைக்கும்போது, பணம் செலுத்தும்போது, அல்லது வசூலிக்கும்போதோ சட்டத்திற்குப் புறம்பாக அது பறிக்கப்படலாம்.

### 1. பணக் காப்பீட்டின் காப்பு

ரொக்கம், காசோலைகள் / போஸ்டல் ஆர்டர்கள் / தபால் ஸ்டாம்புகள் கையாளப்படும்போது ஏற்படும் இழப்புகளுக்குக் காப்பளிக்கும் வகையில் பணக் காப்பீட்டு பாலிசி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலிசி பொதுவாக இரு பிரிவுகளின் கீழ் காப்பினை அளிக்கிறது.

a) **இடைக்கால (Transit) பிரிவு:** காப்பீடு பெற்றவராலோ அல்லது அவர் சார்பாக அதிகாரம் பெற்ற ஊழியராலோ வெளியில் பணம் எடுத்துச் செல்லப்படும்போது ஒரு கொள்ளை அல்லது திருட்டு அல்லது அதுபோன்ற செயல்களின் விளைவாக அத்தொகை இழக்கப்பட்டால் அதற்குக் காப்பளிக்கிறது.

டிரான்சிட் பிரிவு இரு தொகைகளைக் குறிப்பிடுகிறது:

i. **எடுத்து செல்வதில் ஒரு தடவைக்கான வரம்பு:** ஒவ்வொரு இழப்பையும் பொறுத்தவரை காப்பீட்டாளர் அளிக்க வேண்டிய அதிகபட்ச தொகையாக இத்தொகை இருக்கும்.

ii. **பாலிசி காலத்தில் எடுத்துச் செல்லத் திட்டமிடப்படும் தொகை:** பிரீமியத் தொகையினை முடிவுசெய்ய பிரீமிய விகிதம் கணக்கிடப்படும் தொகையை இது பிரதிநிதித்துவம் செய்கிறது.

தீக் காப்பீட்டில் கடைபிடிக்கப்படுவது போன்று **அறிவிப்பின் அடிப்படையில்** பாலிசிகள் வழங்கப்படலாம். எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்ட தொகையினை கணக்கில் எடுத்துகொண்டு காப்பீட்டாளர்கள் ஏதோ ஒரு பிரீமியத்தை வசூலிக்கின்றனர். காப்பீடு முடியும்போது இந்த பிரீமியத்தை, காப்பீடு செய்தவர் அறிவிக்கிறபடி, பாலிசிக் காலத்தின்போது எடுத்துச் செல்லப்பட்ட உண்மையான தொகையுடன் ஒப்பிட்டுச் சரிசெய்து கொள்கின்றனர்.

b) **வளாகங்கள் பிரிவு**: இந்தப் பிரிவு ஒருவரது வளாகத்தில்/பத்திரமாகப் பூட்டப்பட்டதில் இருந்து திருட்டு, வீட்டை உடைத்தல், தடுத்து நிறுத்துதல் போன்றவற்றால் இழக்கப்பட்ட பண இழப்பை ஈடுசெய்கிறது. இந்தப் பாலிசியின் பிற அம்சங்கள் மேலே கற்றலின் குறிக்கோள்கள் 3-ன் கீழ் நாம் விளக்கிய கொள்ளை காப்பீட்டின் (தொழில் வளாகத்தில்) அம்சங்களைப் போன்றதே.

**2. முக்கிய விலக்குகள்**

இவற்றுள் அடங்குபவை:

a) தவறு அல்லது விட்டுவிடலின் காரணமாக ஏற்படும் இழப்பு

b) அதிகாரம் பெறாத ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணத்தின் இழப்பு மற்றும்

c) கலவரம், வேலை நிறுத்தம் மற்றும் தீவிரவாதம்:

**3. நீட்டிப்புகள்**

கூடுதல் பிரீமியம் செலுத்துவதன் மூலம் காப்பீடு பின்வருவதற்கும் காப்பளிக்கச் செய்யலாம்:

a) பணம் எடுத்துச் செல்லுபவரின் நேர்மையின்மை,

b) கலவரம், வேலை நிறுத்தம் மற்றும் தீவிரவாத இன்னல்கள்

c) விநியோகிப்பதில் உள்ள அபாயம் - தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கும்போது ஏற்படும் இழப்பு

**4. பிரீமியம்**

எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் அந்த நிறுவனத்தால் எடுத்துச் செல்லத் திட்டமிடும் வரம்பு, எடுத்துச் செல்லப்படும் முறை, எடுத்துச் செல்லப்படும் தூரம், மற்றும் எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்றவற்றைப் பொறுத்து காப்பீடு பெறுபவருக்கான பிரீமியம் நிர்ணயிக்கப்படுகிறது. பாலிசி முடிந்து 30 நாட்களுக்குள் செய்யப்படும் அறிவிப்பின் அடிப்படையில் ஆண்டு முழுவதும் உண்மையில் எடுத்துச் செல்லப்பட்ட தொகையின்படி பிரீமியம் சரிசெய்யப்படும்.

**சுய-பரீட்சை** 4

பணக் காப்பீட்டு பாலிசியில் பின்வருவதில் எவை காப்பீடு பெறுகின்றன?

I. தவறு அல்லது விட்டுவிடலின் காரணமாக ஏற்படும் இழப்பு

II. கொள்ளை காரணமாக ஒருவரின் வளாகத்திலிருந்து தொகை இழப்பு

III. அதிகாரம் பெறாத ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணத்தின் இழப்பு

IV. கலவரம், வேலை நிறுத்தம் மற்றும் தீவிரவாத இன்னல்கள்

## E. நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீடு

ஒயிட் காலர் குற்றங்கள் என அழைக்கப்படும் தொழிலாளர்களின் பொய் அல்லது நேர்மையின்மை காரணமாக நிறுவனங்கள் நிதி இழப்பினைச் சந்திக்கலாம். தங்களுடைய தொழிலாளர்களின் பொய் அல்லது நேர்மையின்மை காரணமாக மோசடி, கையாடல், சிறுதிருட்டு, கணக்கு முறைகேடு, தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் தவறுகள் மூலம் முதலாளிகள் சந்திக்கும் இழப்புகளுக்கு நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீடு இழப்பீடு வழங்குகிறது.

1. **நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீட்டின் (Fidelity Guarantee Insurance) காப்புகள்**

நேரடி பண இழப்பிற்கு மட்டுமே காப்பளிக்கப்படுகிறது, விளைவு இழப்புகளுக்கு அல்ல.

a) பணம், பிணையங்கள் அல்லது பொருட்கள் சார்ந்த இழப்பாக அவை இருக்க வேண்டும்.

b) குறிப்பிடப்பட்ட கடமைகளை செய்யும்போது இந்த செயல்கள் நடந்திருக்க வேண்டும்;

c) பாலிசி முடிந்து 12 மாதங்களுக்குள் அல்லது அந்த தொழிலாளரின் இறப்பு, வேலையிலிருந்து விலகல் அல்லது நீக்குதல் இவற்றுள் எது முதலில் நடந்ததோ அதற்குள் இழப்பு கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

d) ஒரு நேர்மையற்ற தொழிலாளரை மீண்டும் பணியிலமர்த்தி அதனால் இழப்பு நடந்திருந்தால் காப்பளிக்கப்பட மாட்டாது.

2. **நம்பகத்தன்மை உத்தரவாத பாலிசிகளின் வகைகள்**

கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி பல்வேறு வகையான நம்பகத்தன்மை உத்தரவாதக் பாலிசிகள் உண்டு:

a) **தனிநபர் பாலிசி**: ஒரே ஒரு நபருக்கு மட்டுமே உத்தரவாதம் வழங்கப்பட வேண்டிய சமயத்தில் இந்த பாலிசி பயன்படுகிறது. தொழிலாளரின் பெயர், பொறுப்பு மற்றும் உத்தரவாதம் வழங்கப்பட வேண்டிய தொகை குறிப்பிடப்பட வேண்டும்.

b) **கூட்டுக் காப்பீடு**: உத்தரவாதத்தை பெற பொருத்தமான தொழிலாளர்களின் பெயர்கள், அந்த ஒவ்வொரு தொழிலாளரின் பணிகள் பற்றிய ஒரு குறிப்பு மற்றும் உத்தரவாதம் வழங்கப்படும் தனித்தனி தொகைகள் கொண்ட ஒரு பட்டியலை இந்தக் காப்பீடு கொண்டிருக்கும்.

c) **பெயர்ச்சித் திட்டம் அல்லது ஃப்ளோட்டர்**: இந்தப் பாலிசியில், உத்தரவாதம் வழங்கப்படும் ஊழியர்களின் பெயர்களும் பணிகளும் ஒரு பட்டியலில் உள்ளன. ஆனால், தனித்தனி உத்தரவாதத் தொகைகளுக்குப் பதில், ஒரு குறிப்பிட்ட

உத்தரவாதத் தொகை முழுக் குழுவிற்கு இடையிலும் "ஃப்ளோட்" அதாவது பெயர்ச்சி செய்யப்படுகிறது. ஒரு தொழிலாளருக்காக ஈடை கோரும்போது, கூடுதல் பிரீமியத்தை செலுத்தி அசல் தொகை மறுநிரப்புதல் செய்யப்பட்டாலன்றி பெயர்ச்சியளிக்கப்பட்ட உத்தரவாத அளவு குறைகிறது.

d) **பதவிகள் பாலிசி:** இதுவும் கூட்டுத் திட்டம் போன்றதே. ஆனால், பெயர்களைப் பயன்படுத்துவதற்குப் பதில் ஒரு குறிப்பிட்ட உத்தரவாதத் தொகைக்கு பதவிகளின் (காசாளர், கணக்கு அதிகாரி போன்றவர்) பட்டியல் வழங்கப்படுகிறது.

e) **பிளாங்கெட் பாலிசி:** இந்தப் பாலிசி பெயர்களையோ அல்லது பதவிகளையோ குறிப்பிடாமல் அனைத்துப் பணியாளர்களுக்கும் காப்பளிக்கிறது. காப்பீட்டாளர் மூலம் தொழிலாளர்கள் பற்றிய விசாரணைகள் நடப்பதில்லை. மிக அதிக தொழிலாளர்களைக் கொண்ட ஒரு முதலாளிக்கே இத்தகைய பாலிசிகள் பொருந்தும். மற்றும் அமைப்பு ஊழியர்களின் முந்தைய வரலாறை பற்றி போதுமான விசாரணைகளை செய்கிறது. ஒரு ஈடை கோர நேரும்போது, அத்தகைய முதலாளி பெற்ற விசாரணைகளின் மேற்குறிப்புகளை காப்பீட்டாளர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். பிரபலமான பெரிய நிறுவனங்களுக்கே இந்த பாலிசி வழங்கப்படுகிறது.

## 3. பிரீமியம்

தொழில் வகை, தொழிலாளரின் நிலை, சரிபார்ப்பு மற்றும் மேற்பார்வை அமைப்புகள் போன்றவற்றைப் பொறுத்து பிரீமிய விகிதம் இருக்கும்.

**சுய-பரீட்சை** 5

நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீடு எதற்கான இழப்பீடை வழங்குகின்றன:

I. தங்களுடைய தொழிலாளர்களின் மோசடி அல்லது நேர்மையின்மை காரணமாக முதலாளிகள் சந்திக்கும் இழப்புகளுக்கு

II. தங்களுடைய முதலாளிகளின் மோசடி அல்லது நேர்மையின்மை காரணமாக தொழிலாளர்கள் சந்திக்கும் இழப்புகளுக்கு

III. மூன்றாவது தரப்பின் மோசடி அல்லது நேர்மையின்மை காரணமாக முதலாளிகளும் தொழிலாளர்களும் சந்திக்கும் இழப்புகளுக்கு

IV. நிறுவன நிர்வாகத்தின் மோசடி அல்லது நேர்மையின்மை காரணமாக பங்குதாரர்கள் சந்திக்கும் இழப்புகளுக்கு

## F. வங்கியாளர்கள் இழப்பீட்டுக் காப்பீடு

வங்கிகள், NBFC-கள், பிற பணப் பரிமாற்றம் செய்யும் நிறுவனங்கள் பணம் மற்றும் பிணையங்களை கையாளும்போது ஏற்படும் சிறப்பு இன்னல்களைக் கருத்தில் கொண்டு இந்த ஒருங்கிணைந்த காப்பீடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 1. வங்கியாளர்கள் இழப்பீட்டுக் காப்பீட்டின் காப்புகள்

வங்கியாளரின் தேவைகளின் அடிப்படையில் இந்தப் பாலிசியில் பல்வேறு வகைகள் உண்டு.

a) தீ, கொள்ளை, கலவரம் மற்றும் வேலைநிறுத்தம் காரணமாக வளாகத்திற்குள் உள்ள பண பிணையங்கள் தொலைவது அல்லது சேதமடைவது

b) அதிகாரம் பெற்ற தொழிலாளர்களின் கைகளால் வளாகத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்படும்போது. தொழிலாளர்களின் கவனக்குறைவு உட்பட எந்த ஒரு காரணத்தினாலும் ஏற்படும் இழப்பு

c) மோசடி அல்லது காசோலை, வரைவு, நிரந்தர வைப்பு ரசீதுகள் போன்றவற்றில் திருத்தம்

d) பணம் / பிணையங்கள் அல்லது அடகு வைக்கப்பட்ட பொருட்களைக் கையாளும் பணியாளர்களின் நேர்மையின்மை.

e) பதிவுத் தபால் பார்சல்களை அனுப்புதலில் ஏற்படும் இழப்பு

f) மதிப்பீட்டாளர்களின் நேர்மையின்மை

g) 'ஜனதா முகவர்கள்', 'சோட்டி பச்சத் யோஜனா முகவர்கள்' ('Janata Agents', 'Chhoti Bachat Yojana Agents') போன்ற வங்கியின் முகவர்களின் கைகளில் பணம் உள்ளபோது ஏறபடும் இழப்பு

இந்தக் காப்பு கண்டுபிடிப்பின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. அதாவது, அந்த நிகழ்வு நடந்த நேரத்தைப் பாராது அந்த இழப்பு கண்டறியப்பட்ட காலத்தைப் பொறுத்து பாலிசி பொறுப்பை ஏற்கும். ஆனால், அந்த இழப்பு உண்மையாக நடந்த சமயத்தில், காப்பு நடப்பில் இருந்திருக்க வேண்டும்.

வழக்கமாக கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் 2 ஆண்டுகளுக்குள் நடந்த இழப்புகளுக்கு மட்டுமே காப்புத்தொகை வழங்கப்படும். ஆனால், இழப்பு நடப்பதற்கு முன்னிருந்து காப்பீடு தொடர்ச்சியாக இருந்திருக்க வேண்டும்.

**2. முக்கிய விலக்குகள்**

வர்த்தக இழப்புகள், கவனக் குறைவு, மென்பொருள் குற்றங்கள் மற்றும் பங்குதாரர்கள் / இயக்குனர்களின் நேர்மையின்மை ஆகியவை முக்கியமான விலக்குகள் ஆகும்.

**3. நோக்கம்**

பாலிசியில் 7 பிரிவுகளை உள்ளன:

1. **வளாகத்தில் நடப்பது**
2. **போக்குவரத்து சமயத்தில் நடப்பது**
3. **மோசடி அல்லது மாற்றம்**
4. **நேர்மையின்மை**
5. **அடைமானம் வைக்கப்பட்ட பொருட்கள்**
6. **பதிவு செய்யப்பட்ட தபால் சேவை**
7. **மதிப்பீட்டாளர்கள்**
8. **ஜனதா முகவர்கள்**

**4. காப்பீடுத் தொகை**

முதல் 5 பிரிவுகளுள் வழக்கமாக பெயர்ச்சியுறும் **காப்பீடுத் தொகையை** வங்கி நிர்ணயிக்க வேண்டும். இது 'அடிப்படைக் காப்பீடுத் தொகை' என அழைக்கப்படுகிறது. அடிப்படை காப்பீடுத் தொகை

போதுமானது இல்லை எனில், பிரிவு (1) மற்றும் பிரிவு (2)-க்கு கூடுதல் காப்பீடுத் தொகையை வாங்கலாம். கூடுதல் பிரீமியத்தினைச் செலுத்துவதன் மூலம் காப்பீடுத் தொகையின் ஒரு கட்டாய மற்றும் தானாக மீண்டும் நிரப்புதல் அம்சத்தை இந்தப் பாலிசி அனுமதிக்கிறது.

## 5. மதிப்பீடு

பிரீமியக் கணக்கீடு சார்ந்திருக்கும் காரணிகள்:

a) அடிப்படைக் காப்பீடுத் தொகை

b) கூடுதல் காப்பீடுத் தொகை

c) பணியாளர்களின் எண்ணிக்கை

d) கிளைகளின் எண்ணிக்கை

**சுய-பரீட்சை** 6

வங்கியாளர்களின் காப்பீட்டுத் பாலிசியினால் பின்வருவதில் எவை காப்பீடு பெறுகின்றன?

I. தீயின் காரணமாக வளாகத்திற்குள் உள்ள பண பிணையங்கள் தொலைவது அல்லது சேதமடைவது

II. மோசடி அல்லது காசோலை திருத்தம்

III. பணத்தைக் கையாளும் பணியாளர்களின் நேர்மையின்மை.

IV. மேலுள்ள அனைத்தும்

## G. நகைக்கடையாளர்களின் பிளாக் பாலிசி

சமீப ஆண்டுகளில் நகை வர்த்தகத்தில், குறிப்பாக வைர வர்த்தகத்தில் உலகிலேயே இந்தியா முன்னணி மையமாக வளர்ந்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட பட்டை தீட்டப்படாத வைரங்கள் வெட்டப்பட்டு, பட்டை தீட்டப்பட்டு மீண்டும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள், வைரம் மற்றும் அரிதான கற்கள், கைக் கடிகாரங்கள் போன்ற சிறு அளவிலுள்ள ஆனால் மதிப்புமிக்க பொருட்களை விற்பனை செய்யும் ஒரு நகை வணிகரின் அனைத்து அபாயங்களையும் இது கவனித்துக் கொள்கிறது. இத்தகைய விலையுயர்ந்த பொருட்களை அதிக அளவில் இருப்பு

வைத்திருப்பதும் பல்வேறு வளாகங்களுக்குள் இடப் பெயர்ச்சி செய்வதும் இந்த வர்த்தகத்தின் அங்கமாக உள்ளது.

### 1. நகைக்கடையாளர்களின் பிளாக் பாலிசியின் காப்புகள்

நகைக்கடையாளர்களின் பிளாக் பாலிசி என்பது நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட பேக்கேஜ் பாலிசியாகும். பிரிவு 1-ன் கீழ் காப்பு கட்டாயமானது. காப்பீடு பெறுபவர் பிற பிரிவுகளுக்கு தன் விருப்பப்படி காப்பீடு பெறலாம். எலக்ட்ரானிக் உபகரணங்கள், தட்டுக் கண்ணாடி, சைனேஜ் போன்ற பிற சொத்துக்கள் மற்றும் பணியாளர்கள் இழப்பீடு, ஊழியர்களின் நேர்மையின்மை போன்ற பொறுப்புகளுக்கு காப்பளிக்க மேலும் சில பிரிவுகளைச் சேர்ப்பது சந்தை நடைமுறையாக உள்ளது.

இதில் நம்பகத்தன்மை உத்தரவாதக் காப்பீடிற்கான காப்பு இல்லையெனில், முழுப் பாதுகாப்பை பெற காப்பீடு பெற்றவரால் அதுவும் எடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொன்றின் சாதகங்களின் அடிப்படையில் அபாயங்கள் மதிப்பிடப்படுகின்றன. தனி காவலாளி, குளோஸ் சர்க்கியூட் தொலைக்காட்சி / எச்சரிக்கை அமைப்பு, தனித்த பெட்டக அறை மற்றும் பிற ஒவ்வொரு பாதுகாப்புக் கருவிக்கும் வெவ்வேறு பிரீமிய விகிதமும் தள்ளுபடிகளும் பொருந்தும்.

**சுய-பரீட்சை** 7

நகைக்கடைக்காரர்களின் பிளாக் பாலிசியைப் பொறுத்தவரை, பாரம்பரியமாக பல பிரிவுகள் உள்ளன, அவற்றில் ஒன்று பொதுவாக கட்டாயமாகும், மீதமுள்ள பிரிவுகள் __________ ஆகும்.

I. கட்டாயமானது

II. முன்னிகழ்வுகளை சார்ந்தது

III. விருப்பமானது

IV. ஈடுசெய்வது

## H. பொறியியல் காப்பீடு

தீ காப்பீடு வளரும்போது அதற்கு இணையாக பொதுக் காப்பீட்டின் ஒரு கிளையாக பொறியியல் காப்பீடு வளர்ந்துள்ளது. தொழிற்சாலைகள் மற்றும் இயந்திரங்களுக்கு ஒரு தனி காப்பின் அவசியத்தை உருவாக்கிய தொழில்மயமாக்கலின்போது இதன் தொடக்கம் இருந்தது எனலாம். பொறியியல் திட்டங்களுடன் இணைந்து **அனைத்து-அபாயங்கள்** காப்பு என்ற கருத்தாக்கம் வளர்ந்தது. குறிப்பாக விலக்கப்படாத எந்த ஒரு காரணத்தினாலும் ஏற்படும் இழப்புகளுக்கு இது காப்பளிக்கிறது. கட்டுமானம் முதல் பரிசோதனைவரை அந்த தொழிற்சாலை செயல்பாட்டுக்கு வரும்வரை -பல்வேறு நிலைகளில் உள்ள உற்பத்திப் பொருட்கள் காப்பிடப்படுகின்றன. பெரிய மற்றும் சிறிய தொழில் அமைப்புகள் இரண்டுமே இந்த காப்பீட்டின் வாடிக்கையாளர்களாக இருக்கின்றனர். மின்னணு உபகரணங்கள் மற்றும் பெரிய திட்டங்களைச் செயல்படுத்தும் ஒப்பந்ததாரர்களும் இதில் அடங்குவர். இரண்டு வகையான பொறியியல் காப்பீட்டு பாலிசிகள் உள்ளன:

1) வருடாந்திர பாலிசிகள்-பொதுவாக ஒரு வருட காலத்திற்கு இருப்பவை-
    a) இயந்திரப் பழுது பாலிசி
    b) கொதிகலன் அழுத்த ஆலை பாலிசி
    c) மின்னணு உபகரணங்கள் பாலிசி
    d) ஒப்பந்ததாரரின் ஆலை மற்றும் இயந்திரங்கள் பாலிசி
    e) இருப்புகளின் சரிவு பாலிசி
    f) முடித்த கட்டடப் பொறியியல் திட்டங்களின் பராமரிப்புக்கான அபாய பாலிசி
2) **திட்டக் காலத்தின் அடிப்படையில் மாறுபடும் கால அளவு கொண்ட திட்ட பாலிசிகள்-**
    a) ஒப்பந்ததாரர்கள் அனைத்து அபாயங்கள் (C.A.R.) பாலிசி
    b) எரெக்சன் அனைத்து அபாயங்கள் (EAR) பாலிசி

பொறியியல் பாலிசிகளுடன் தொடர்புடைய இரண்டு "விளைவு இழப்பு" பாலிசிகள் உள்ளன:

a) இயந்திர பழுது இலாப இழப்பு (**MBLOP**) பாலிசியுடன் அல்லது கொதிகலன் மற்றும் பிரெஷர் ஆலை பாலிசியுடன் எடுக்கப்பட்ட இயந்திர இலாப பழுது அல்லது பாலிசி இயந்திர முறிவு இழப்பு மற்றும்

b) முன்கூட்டிய லாப இழப்பு (**ALOP**) அல்லது திட்ட பாலிசியுடன் எடுக்கப்பட்ட தொடங்குவதில் தாமதம் (**DSU**) பாலிசி

பாலிசிகளை சுருக்கமாகப் பார்ப்போம்:

**A. <u>வருடாந்திர பாலிசிகள்</u>**

1. **இயந்திரப் பழுது பாலிசி** (MB): இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு தொழிலுக்கும் இந்த பாலிசி பொருத்தமானது மற்றும் ஆலை மற்றும் இயந்திரங்கள் செயலிழந்தால் கடுமையான விளைவு ஏற்படும். இந்த பாலிசியானது ஜெனரேட்டர்கள், டிரான்ஸ்ஃபார்மர்கள் மற்றும் பிற மின், இயந்திர மற்றும் தூக்கும் சாதனங்கள் போன்ற இயந்திரங்களுக்கு காப்பளிக்கிறது.

கீழ்க்காணும் ஏதாவதொரு காரணத்தினால் (விலக்கப்பட்ட அபாயங்களுக்கு உட்பட்டு) காப்பிடப்பட்ட சொத்திற்கு தொழில்நுட்ப அல்லது மின் பழுதின் காரணமாக ஏற்படும் எதிர்பாரா மற்றும் திடீர் சேதத்திற்கு இந்த பாலிசி காப்பளிக்கிறது:

a) அது இயங்கும்போது அல்லது ஓய்வில் இருக்கும்போது

b) சுத்தப்படுத்துவதற்காகப் பிரிக்கும்போது அல்லது பிரித்துச் சீர்செய்யும்போது

c) சுத்தப்படுத்தும்போது அல்லது பிரித்துச் சீர்செய்யும்போது மற்றும் அதன் பிறகு மறு இணைப்புச் செய்யும்போது

d) வளாகத்திற்குள் இடமாற்றம் செய்யும்போது.

தனி இயந்திரத்தின் மறு நிறுவல் மதிப்பின் அடிப்படையில் பிரீமியம் விதிக்கப்படுகிறது. இயந்திரம் முழுமையாக காப்பிடப்பட வேண்டும். இயந்திர வகை மற்றும் அது பயன்படுத்தப்படும் தொழிலகம் மற்றும்

அதன் மதிப்பு ஆகியவற்றைப் பொறுத்து பிரீமியம் இருக்கும். துணைநிற்பு (stand-by) வசதிகள், இருக்கும் உதிரி பாகங்கள் மற்றும் ஈடு அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் தள்ளுபடிகளும் வழங்கப்படுகின்றன.

2. **பாய்லர் மற்றும் பிரஷ்ஷர் பிளாண்ட் பாலிசி** (Boiler and Pressure Plant Policy): இது கொதிகலன்கள் மற்றும் அழுத்த பாத்திரங்களுக்கு பினவருவதற்காக காப்பளிக்கிறது:

   a) கொதிகலன்கள் மற்றும் / அல்லது பிற அழுத்த ஆலை மற்றும் காப்பீடு பெற்றவரை சுற்றியுள்ள பொருட்களுக்கு, தீ அல்லாமல், பிறவற்றால் ஏற்படும் சேதம்; மற்றும்

   b) அத்தகைய கொதிகலன்கள் மற்றும் / அல்லது அழுத்த ஆலையின் அக அழுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட வெடிப்பு அல்லது நொறுங்கலினால் ஏற்பட்ட மூன்றாம் தரப்பு நபரின் உடல் காயம், சொத்திற்கு ஏற்படும் சேதம் ஆகியவற்றுக்கான காப்பீடு பெற்றவரின் சட்டக் கடப்பாடு.

**தீ காப்பீடும் கொதிகலன் காப்பீட்டுத் திட்டமும் ஒன்றிற்கு ஒன்று முரணாக இருப்பதால், போதுமான காப்பை பெற இரு பாலிசிகளுமே எடுக்கப்பட வேண்டும். அனைத்து பொறியியல் பாலிசிகளின் கீழ் வரும் காப்பிடுத் தொகை, நடப்பு மறு நிறுவல் மதிப்பாக இருக்க வேண்டும்.**

3. **மின்னணு சாதன பாலிசி**: இது பல்வேறு வகையான மின்னணு சாதனங்களுக்கும் சி.பி.யு, விசைப் பலகைகள், மானிட்டர்கள், அச்சு எந்திரங்கள், யுபிஎஸ், சிஸ்டம் மென்பொருள் உட்பட்ட முழு கணினி சிஸ்டத்திற்கும் காப்பளிக்கிறது. ஏர் கண்டிஷனிங், சூடாக்கும் மற்றும் மின்மாற்றி போன்ற துணை எந்திரங்களுக்கும்கூட காப்பளிக்கிறது.

தீ காப்பீடு, இயந்திரக் காப்பீடு மற்றும் கொள்ளைக் காப்பீட்டின் ஒருங்கிணைப்பாக இந்த பாலிசி உள்ளது. குறைபாடுள்ள வடிவமைப்பு (எந்த வாரண்டியின் கீழும் வராதது), இயற்கை நிகழ்வுகளின் பாதிப்பு, மின் ஏற்ற இறக்கத்தின் காரணமாக ஏற்படும் குறைச் செயல்பாடு, மோதல் அதிர்வு போன்ற சில்லறை விஷயங்களுக்கும், கொள்ளை, வீட்டுடைப்பு மற்றும் திருட்டுக்கும் இந்த பாலிசி காப்பளிக்கிறது.

இந்த பாலிசி முதலாளி, குத்தகைக்கு கொடுப்பவர் அல்லது வாடகைதாரருக்கு அவர்கள் ஒவ்வொருவரின் பொறுப்பு கடப்பாடுகளைப் பொறுத்துக் கிடைக்கும். இதில் பொதுவாக பல்வேறு வகையான இழப்புகளுக்கும் காப்பளிக்கும் மூன்று பிரிவுகள் உண்டு:

a) **பிரிவு 1:** இயந்திரத்திற்கான இழப்பு மற்றும் சேதம்

b) **பிரிவு 2:** வெளி தரவு ஊடகத்திற்கான இழப்பு மற்றும் சேதம் எ.கா. கணினியின் வெளி ஹார்டு டிஸ்க்குகள்

c) **பிரிவு 3:** அதிகரித்த பணிச்செலவு - 12, 26, 40 அல்லது 52 வாரங்கள் வரை மாற்று சாதனத்தில் தொடர்ந்து தரவு செயலாக்கம் செய்யப்படுவதை உறுதிசெய்ய.

4. **ஒப்பந்ததாரர்களின் தொழிலகம்** மற்றும் **இயந்திர (CPM) பாலிசி:** கட்டிடத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு அவர்களுடைய கிரேன்கள், அகழ்விகள் போன்ற அனைத்து வகை இயந்திரங்களையும் கீழ்க்காணும் காரணங்களால் வரும் எதிர்பாராத திடீர் இழப்புகள் அல்லது பழுதுகளுக்குக் காப்பளிக்கக் கூடியது:

   a) கொள்ளை, திருட்டு, புயல், தீங்கிழைக்கும் சேதம், கடும்புயல்

   b) தீ மற்றும் மின்னல், வெளி வெடிப்புகள், பூகம்பம் மற்றும் பிற இயற்கை இன்னல்கள்

   c) தவறாகக் கையாளுதல், கீழே தவறவிடுதல் அல்லது விழுதல், நொறுங்குதல் மற்றும் தாக்கம் ஆகியவற்றின் காரணமாக பணியிலிருக்கும்போது தற்செயலாக சேதமடைவது; மூன்றாம் தரப்பு சேதத்திற்கும் நீட்டிக்கப்படலாம்.

   இயந்திர வகை மற்றும் அது செயல்படும் இருப்பிடம் ஆகியவற்றைப் பொறுத்து பிரீமியம் இருக்கும்.

   **இயந்திரம் இயங்கும்போது அல்லது நிறுத்தப்பட்ட போது அல்லது சுத்தப்படுத்துவதற்காகவோ அல்லது முழுவதும் பிரித்துச் சீர்செய்யும்போதோ அல்லது அதன் பிறகு மறு இணைப்புச் செய்யும்போதோ காப்பு செயலில் இருக்கும். ஒப்பந்ததாரரின் சொந்த வளாகத்தில் அவை கிடக்கும்போதும் இந்தக் காப்பு பொருந்தும். எவ்வாறாயினும்**, **"இந்தியாவில் எந்த இடத்திலும்**

**பொருந்தும் அடிப்படையில்" உபகரணங்களை உள்ளடக்கிய பெயர்ச்சி பாலிசியும்** 10% **கூடுதல் பிரீமியம் மற்றும் சில நிபந்தனைகளுடன் கிடைக்கிறது.**

5. **சரக்கு இருப்பின் அழிவுக்கான பாலிசி**: குளிர் வைப்பறையின் முதலாளிக்கு (தனியார் அல்லது ஒரு கூட்டுறவு சங்கம்) அல்லது குளிர் வைப்பறையை அழியக்கூடிய பொருட்களின் இருப்பை சேகரித்து வைப்பதற்காக குத்தகைக்கோ அல்ல வாடகைக்கோ எடுப்பவர்களுக்கு, இந்தப் பாலிசி உகந்தது. குளிர்பதன ஆலையின் மற்றும் இயந்திரத்தின் கோளாறினைத் தொடர்ந்தும் வெப்பநிலை உயர்வின் காரணமாகவும், குளிர்பதனிகள் திடீரெனவும் எதிர்பாராமலும் குளிர் வைப்பறையிலிருந்து வெளியேறுவதன் காரணமாகவும் பொருட்கள் கெட்டுப்போகும் மற்றும் அழிந்து போகும் அபாயத்திற்கு எதிராக காப்பளிக்கிறது.

6. **முடித்த கட்டடப் பொறியியல் திட்டங்களின் பராமரிப்புக்கான அபாய பாலிசி** (**Civil Engineering Completed Risk**): -இது பொதுவாக பொறியியல் திட்டங்களை முடித்த பிறகு பராமரிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்களால் எடுக்கப்படுகிறது. பாலங்கள், உலர் துறைமுகங்கள், துறைமுகங்கள், ஜெட்டி ரயில் பாதைகள், பாறைகள் நிரப்பப்பட்ட அணைகள், கான்கிரீட் அணைகள், மண் அணைகள், கால்வாய்கள், நீர்ப்பாசன அமைப்பு போன்ற பொறியியல் திட்டங்கள இந்த பாலசியின் கீழ் பரிசீலிக்கப்படுகின்றன. காப்பளிக்கப்பட்ட அபாயங்கள் -

    1. தீ
    2. மின்னல்
    3. குண்டு வெடிப்பு / உள்வாங்கல்
    4. கலவரம், கதவடைப்பு மற்றும் தீய நோக்க சேதம்
    5. இரயில்/சாலை அல்லது நீரில் செல்லும் வாகனம் அல்லது விலங்குகளால் ஏற்படும் பாதிப்பு சேதம்
    6. புயல், சூறாவளி, சூறைக் காற்று, கடும்புயல், சுழல், சுழல்காற்று மற்றும் நீரின் அலை நடவடிக்கை

7. நிலம் தாழ்தல் மற்றும் (பாறை உருளுதல் உட்பட) நில சரிவு (Subsidence and Landslide (Including Rockslide) damage)

8. நிலநடுக்கம் தீ மற்றும் அதிர்ச்சி (பூகம்பத்தால் ஏற்பட்ட வெள்ளம் உட்பட), சுனாமி

9. உறைபனி, பனிச்சரிவு, பனி.

## B. <u>திட்ட பாலிசிகள்</u>

இந்த பாலிசிகள் பொதுவாக திட்டம் நடக்கும் காலத்திற்காக வழங்கப்படும் மற்றும் வருடாந்திர அடிப்படையில் இருக்காது.

1. **ஒப்பந்ததாரர்கள் அனைத்து அபாயங்கள் (C.A.R.) பாலிசி:** சிறு கட்டடங்கள் முதல் பிரமாண்டமான அணைக்கட்டுகள், கட்டடங்கள், பாலங்கள், சுரங்கங்கள் போன்ற கட்டடப் பொறியியல் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் மற்றும் முதல்வர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் “அனைத்து அபாயங்கள்” காப்பினை வழங்குகிறது - இவ்வாறு கட்டுமானத் தளத்தில் காப்பீடு பெற்றவரின் சொத்திற்கு ஏற்படும் எந்த ஒரு திடீர் மற்றும் எதிர்பாரா இழப்பு அல்லது சேதத்திற்கு இழப்பீடு வழங்குகிறது. மூன்றாம் தரப்பின் பொறுப்பு மற்றும் பிற ஆபத்துகளுக்கும் காப்பளிக்கும் வகையில் பாலிசி நீட்டிக்கப்படலாம். திட்டத்தின் தன்மை, திட்டச் செலவு, திட்டக் காலம், புவியியல் இருப்பிடம் மற்றும் பரிசோதனைக் காலம் ஆகியவற்றைப் பொறுத்து பிரீமியம் விதிக்கப்படும்.

2. எரெக்சன் அனைத்து அபாயங்கள் (**EAR)** பாலிசி: இது கிடங்கிலிடும்-உடன்-நிறுவுதல் (Storage-cum-Erection -SCE) பாலிசி எனவும் அழைக்கப்படுகிறது. ஒரு திட்டம் நிறுவப்படும்போது பல்வெறு வெளி அபாயங்களுக்கு அத்திட்டம் ஆளாகக் கூடியதாக இருப்பதால் அதன் முதல்வர் அல்லது ஒப்பந்ததாரருக்கு இது பொருத்தமாக இருக்கும். திட்டம் நடக்கும் இடத்தில் பொருட்கள் இறக்கப்படும்போது தொடங்கி அந்த திட்டம் பரிசோதனை செய்யப்பட்டு, துவங்கப்பட்டு ஒப்படைக்கப்படும்வரை உள்ள திட்டத்தின் ஒட்டுமொத்த காலத்திற்கும் தொடர்ந்து எந்த ஒரு

எதிர்பாரா நிகழ்வுக்கும் இந்த ஒருங்கிணைந்த காப்பீட்டு பாலிசி காப்பளிக்கிறது.

திட்டத்தின் தன்மை, திட்டச் செலவு, திட்டக் காலம், புவியியல் இருப்பிடம் மற்றும் பரிசோதனைக் காலம் ஆகியவற்றைப் பொறுத்து பிரீமியம் விதிக்கப்படும்.

**தேவைப்பட்டால், இயந்திரங்களையும் பொருட்களையும் எடுத்துச் செல்லும்போது அவற்றை திட்டம் நடைபெறும் இடத்தில் சேர்க்கும்வரை அவற்றிற்கு காப்பளிப்பதற்காக ஒரு கடல்சார் காப்பீடும் எரெக்சன் பாலிசியுடன் சேர்ந்து வழங்கப்படலாம்**.

### c. விளைவு இழப்பு (Consequential Loss- CL) பாலிசிகள்

இந்த வகையான பாலிசிகள் மற்ற இழப்புகளின் விளைவாக ஏற்படும் இழப்புகளை ஈடுகட்ட வழங்கப்படுகின்றன. இவை ‘வணிக இடையூறு’ கொள்கைகள் அல்லது ‘லாப இழப்பு’ கொள்கைகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

### 3. இயந்திர இலாப இழப்பு (MLOP) பாலிசி

இயந்திரப் பழுது அல்லது கொதிகலன் வெடிப்பு ஆகியவற்றின் காரணமாக தடைகள் அல்லது தாமதங்கள் ஏற்பட்டு மிகப்பெரிய விளைவில் இழப்புகள் வரக்கூடிய தொழிலகங்களுக்கு இந்தப் பாலிசி பொறுத்தமானது.

பழுது அல்லது இழப்பிற்கு பிறகு அதை மீட்டு கொண்டுவர எடுக்கும் நேரம் ரொம்ப அதிகமாக இருந்தால், அந்த இடைப்பட்ட காலத்தில் உற்பத்திக் குறைவின் காரணமாகவும், உற்பத்திச் செலவு அதிகரிப்பின் காரணமாகவும் ஏற்படும் இலாப இழப்பிற்கு இந்த பாலிசி இழப்பீடு வழங்குகிறது. விதிகளும், நிபந்தனைகளும் மற்றும் தொழில் குறுக்கீட்டு பாலிசியின் காப்பு ஆகியவை இந்த அத்தியாயத்தின் முந்தைய பகுதியில் விளக்கப்பட்ட தீ காப்பீட்டு இழப்பிற்கு பிறகுள்ள வணிக குறுக்கீடு பாலிசி போலவே உள்ளது.

### 4. முன்கூட்டியே இலாப இழப்பிற்கான காப்பு (Advance Loss of Profit Cover -ALOP) அல்லது துவக்க தாமத (Delay in Start-up -D.S.U.)பாலிசி

திட்டத்தின்போது தவறுதலாக நிகழ்ந்த சேதத்தின் காரணமாக திட்டம் தாமதமாவதால் ஏற்படும் நிதிப் பிரச்சனைகளுக்கு எதிராக காப்பளிக்கிறது. எதிர்பார்த்த வருமானம் கிடைக்காத காப்பீடு பெற்றவர் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு திட்டத்தின்மீது அவர்களுக்கு உள்ள பற்றின் அளவிற்கு ஏற்றதாக இருக்கும். திட்டம் உண்மையில் தொடங்கப்படுவதற்கு முன் MCE/EAR/CAR பாலிசியின் ஒரு நீட்டிப்பாக இந்தக் காப்பீடு வழங்கப்படுகிறது.

தவணைக் கடனுக்கான வட்டி, கடனீட்டுப் பத்திரங்கள், சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் போன்றவற்றுக்கான தொடர்ந்த செலவுகள் மற்றும் சரியான காலத்தில் தொடங்கப்பட்டிருந்தால் எவ்வளவு லாபம் பெற்றிருக்கலாமோ அந்த லாபத்தை இழந்ததினால் ஏற்பட்ட நிதி இழப்புக்கு இந்தப் பாலிசி காப்பு வழங்குகிறது.

பிரீமிய விகிதம் பல்வேறு முக்கிய காரணிகள் மற்றும் கிடைக்கும் மறு காப்பீட்டு ஆதரவு போன்றவற்றைப் பொறுத்து இருக்கும். எதிர்பார்க்கப்பட்ட மொத்த லாபம் மற்றும் இழப்பீடு காலம் போன்றவையும் பிரீமியத் தொகையைத் தீர்மானிப்பதற்கான முக்கிய காரணிகளாகும்.

**சுய-பரீட்சை** 8

துவக்க தாமத பாலிசி ____________ என்றும் அழைக்கப்படுவது-

I. இயந்திர இலாப இழப்புக் காப்பு
II. முன்கூட்டியே இலாப இழப்பு காப்பு
III. ஒப்பந்ததாரர்கள் அனைத்து அபாயங்கள் காப்பு
IV. ஒப்பந்ததாரர்களின் ஆலை மற்றும் இயந்திர காப்பு

## I. தொழில்துறை அனைத்து-அபாய காப்பீடு

தொழில்துறை அனைத்து-அபாய காப்பீடு தொழில்துறையின் சொத்துக்களுக்குக் காப்பளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது - இந்தியாவில் எங்கிருந்தாலும் உற்பத்தி மற்றும் இருப்புவைப்பு வசதிகள் இரண்டுக்குமே ஒரே பாலிசியின் கீழ் காப்பு வழங்குகிறது. பொருட்சேதம் மற்றும் தொழில் தடங்கல் ஆகியவற்றுக்கு உத்திரவாதம் அளிக்கிறது.

பொதுவாக, பின்வருபவைக்கு பாலிசி காப்பு வழங்குகிறது:

i. தீ மற்றும் குறிக்கப்பட்ட அபாயங்களுக்கு தீ காப்பீட்டு வழக்கின்படி

ii. கொள்ளை (சிறு திருட்டு தவிர)

iii. இயந்திரப் பழுது / கொதிகலன் வெடிப்பு / மின்னணு சாதனம்

iv. மேலே குறிப்பிடப்பட்ட அபாயங்களைத் தொடர்ந்து ஏற்படும் தொழில் தடங்கல்

(குறிப்பு: மேலே உள்ள (c)-ன் கீழ் இன்னல்களைத் தொடர்ந்து ஏற்படும் தொழில் தடங்கல் பேக்கேஜ் காப்பில் சேர்க்கப்படுவதில்லை. கூடுதல் காப்பாக சேர்த்துக் கொள்ளலாம்)

- ✓ தனிப்பட்ட இயக்க (individual operational) பாலிசிகளால் வழங்கப்படும் காப்புகளோடு ஒப்பிடும்போது, இந்த பாலிசி பரந்த அளவில் காப்பளிக்கிறது.
- ✓ தேர்வு செய்த காப்பு, ஈடு அனுபவம், மற்றும் தெரிவுசெய்த கழிக்கக்கூடியவைகள், MLOP-க்கான அபாய மதிப்பீட்டு அறிக்கை போன்றவற்றைப் பொறுத்து இப்பாலிசிக்கான பிரீமிய விகிதம் இருக்கும்.

**சுய-பரீட்சை** 9

தொழில்துறை அனைத்து-அபாய காப்பீட்டுத் திட்டத்தினால் பின்வருவதில் எவை காப்பீடு பெறுகின்றன?

i. தீ காப்பீட்டு வழக்கின்படி தீ மற்றும் குறிப்பிட்ட இன்னல்கள்

ii. சிறு திருட்டு

iii. இயந்திரம் பழுதாவது

iv. மின்னணு சாதனம்

---

## J. கடல்சார் காப்பீடு

**கடல்சார் காப்பீடு இரு வகைப்படும்**: **கப்பற் சரக்கு மற்றும் கப்பல் தளம்** (hull)**-**

1. **கப்பற் சரக்கு காப்பீடு**

'கடல்சார்' என்ற வார்த்தை கடலில் ஏற்படும் தீங்குகளினால் ஏற்படும் இழப்பினை மட்டுமே குறித்தாலும் கப்பற் சரக்குக் காப்பீடு கூடுதலான காப்பை அளிக்கிறது. இரயில், சாலை, கடல், விமானம் அல்லது பதிவுத் தபால் ஆகியவற்றின் வழியாக நாட்டிற்குள்ளும் நாட்டிற்கு வெளியிலும் பொருட்கள் எடுத்துச் செல்லப்படும்போது ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு இழப்பீடு வழங்குகிறது. பொருள் வகைகள் வைரங்கள் முதல் வீட்டுப் பொருட்கள்வரை, சிமென்ட், தானியங்கள் போன்ற பெருமளவு பொருட்கள், திட்டங்களுக்கான பெரிய பரிமாண அளவில் வரும் சரக்குகள் போன்றவையாக இருக்கலாம்.

உள்நாட்டு, பன்னாட்டு வர்த்தகத்தில் சரக்கு காப்பீடு முக்கியமான பங்கு வகிக்கிறது. பெரும்பான்மையான விற்பனை ஒப்பந்தங்களுக்கு விற்பவரோ அல்லது வாங்குபவரோ அந்தப் பொருட்களுக்கான இழப்பு அல்லது சேதத்திற்கான காப்பீடை பெறுவது அவசியமாகிறது.

**காப்பீட்டினை யார் எடுப்பது**: விற்பனை ஒப்பந்தத்தைப் பொறுத்து பொருட்களை [கன்சைன்மென்ட்] விற்பவரோ அல்லது வாங்குபவரோ சரக்குக்கு காப்பீடு பெறலாம்.

உலகளாவிய அளவில் பொருந்தக்கூடிய அம்சங்களை கடல்சார் காப்பீட்டு ஒப்பந்தங்கள் கொண்டிருக்க வேண்டும். இதற்கு காரணம், ஒரு நாட்டின் எல்லைகளுக்கு வெளியில் பொருட்களை எடுத்துச் செல்லும்போது இது காப்பளிக்கிறது. பன்னாட்டு வழக்கத்தின் படியும் பாலிசியின் குறிப்பிட்ட பிரிவுகளின்படியும் காப்பு வழங்கப்படுகிறது.

அடிப்படை காப்பீட்டு ஆவணத்தில், பொது நிபந்தனைகள் இருந்தாலும், காப்பீட்டின் செயல் எல்லைகளும் விதிவிலக்குகளும் மற்றும் சிறப்பு விலக்குகளும் நிறுவனம் சரக்கு உட்பிரிவுகள் (Institute cargo Clauses -ICC) என அழைக்கப்படும் தனிப்பிரிவுகளில் இருக்கும். லண்டன் கடற்பொருள் காப்பீடு ஏற்பாளர்களின் (Institute of London Underwriters) நிறுவனத்தினால் இது எழுதப்படுகிறது.

### a) கப்பல் சரக்குக் காப்பீட்டின் கீழுள்ள காப்புகள்

சரக்கு பாலிசிகள் உண்மையில் கடற்பயண காப்பீடுகளாகும். அதாவது, ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருள் எடுத்துச் செல்லப்படுவதற்குக் காப்பளிக்கிறது. எனினும், அனைத்துச்

சூழ்நிலையிலும் காப்பீடு பெற்றவர் அவரால் முடிந்த அளவிற்கு கவனமாக நடந்துகொள்ள வேண்டும். அது ஒரு ஏற்கப்பட்ட மதிப்பு (Agreed Value) பாலிசி என்பதே இந்தப் பாலிசியின் முக்கிய கூறாகும். காப்பீடு பெற்றவருக்கும் காப்பீட்டாளருக்கும் இடையில் மதிப்பீடு ஏற்கப்படுகிறது. மோசடி நடந்ததாக சந்தேகப்பட்டாலன்றி பிறகு மறுமதிப்பீடு செய்யப்பட முடியாது.

காப்பீட்டுத் தொகைக்கான விதி CIF + 10% (காப்பீடின் விலை மற்றும் சரக்கு + 10%). இந்த பாலிசி சுதந்திரமாக உரிமை மாற்றம் செய்யகூடியது என்பது இதன் மற்றொரு தனித்த அம்சம்.

விற்பனை ஒப்பந்தத்தின் வரையறைகளைப் பொறுத்து, வழக்கமாக பொருட்கள் பாலிசியில் குறிப்பிடப்பட்ட பண்டகசாலையிலிருந்து வெளியேறும் நேரத்திலிருந்து இந்தக் காப்பீடு தொடங்குகிறது மற்றும் பாலிசியில் குறிக்கப்பட்ட சேரும் இடத்தினை அடைந்ததும் முடிவடைகிறது.

நிபந்தனைகளும் வரையறைகளும் இருவராலும் நிர்வகிக்கப்படலாம்;

i. உள்நாட்டிற்குள் எடுத்துச் செல்வதற்கு உள்நாட்டு டிரான்சிட் கிளாஸ் (ITC) A, B அல்லது C

ii. கடற் பயணத்திற்கு இன்ஸ்டிடியூட் கார்கோ கிளாஸ் (ICC) A, B, அல்லது C

iii. வான் வழியாக எடுத்துச் செல்வதற்கு இன்ஸ்டிடியூட் கார்கோ (Air) கிளாஸ் - A

இன்ஸ்டிடியூட் கார்கோ கிளாஸ் C ஒரு வாகனம் அல்லது சரக்கை ஏற்றிச் செல்லும் கப்பலில் பின்வரும் காரணங்களால் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு குறைந்தபட்ச காப்பீட்டினை வழங்குகிறது:

i. தீ அல்லது வெடிப்பு

ii. தடம் புரளுதல் அல்லது வண்டி தலைகீழாகக் கவிழ்வது

iii. கரைதட்டி நிற்பது, நிலந்தட்டுவது அல்லது கப்பல் மூழ்குவது (கப்பலைப் பொறுத்தவரை)

iv. வெளிப் பொருளுடன் மோதுவது

v. நெருக்கடிநிலையில் துறைமுகத்தில் சரக்குகளை வெளியேற்றுதல்

vi. பொது சராசரி தியாகம் (General average sacrifice)

vii. சரக்குகளை கடலில் எறிதல் (jettison)

இன்ஸ்டிடியூட் கார்கோ கிளாஸ் B-யானது C-யைவிடப் பரந்தது. C-யில் காப்பிடப்பட்ட அபாயங்களோடு பின்வரும் காரணங்களால் ஏற்படும் இன்னல் அல்லது சேதத்திற்கும் காப்பளிக்கிறது:

i. கடவுளின் செயல் (AOG) - பூகம்பம், எரிமலை வெடிப்பு மற்றும் மின்னல் போன்ற இன்னல்கள்

ii. உள்நாட்டிற்குள் எடுத்துச் செல்லும்போது பாலங்கள் உடைவது

iii. கடல்வழியாக எடுத்துச் செல்லும்போது கடலுக்குள் அடித்துச் செல்லப்படுவது மற்றும் ஸ்லிங் இழப்பு (sling loss)

iv. கப்பலுக்குள் நீர் புகுவது.

இன்ஸ்டிடியூட் கார்கோ கிளாஸ் A இருப்பதிலேயே பரந்த காப்பாகும். B மற்றும் C-யின் அனைத்து இன்னல்களுக்கும் மற்றும் பின்வரும் குறிப்பிடப்பட்ட சில விலக்குகளைத் தவிர பிற எந்த அபாயத்தினாலும் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கும் காப்பளிக்கிறது:

i. காப்பீடு பெற்றவர் தெரிந்தே செய்யும் செயலால் ஏற்படும் இழப்பு அல்லது சேதம்

ii. சாதாரண கசிவு, முறிவு, தேய்வும் நைவும் அல்லது எடை/பருமன் இழப்பு

iii. பேக்கிங்கில் பற்றாக்குறை

iv. உள்ளார்ந்த தீயொழுக்கம்

v. தாமதங்கள்

vi. முதலாளிகளின் நொடிப்பினால் ஏற்படும் இழப்பு

vii. அணு இன்னல்கள்

அனைத்து உள்நாட்டு விமான, கடல்வழி பிரிவுகளுக்கும் இந்த விலக்குகள் பொதுவானவை. நிலக்கரி, எண்ணெய் மற்றும் தேநீர்

போன்ற குறிப்பிட்ட பண்டங்களின் வியாபாரத்திற்கும்கூட தனித்தனி பிரிவுகள் உள்ளன. போர், வேலைநிறுத்தங்கள், கலவரங்கள், மக்கள் கிளர்ச்சி மற்றும் தீவிரவாதம் போன்றவற்றிக்குக் காப்பளிக்கும் விதத்தில் கூடுதல் பிரீமியம் செலுத்துவதன் மூலம் கடல்சார் காப்பீடு நீட்டிக்கப்படலாம். கடல்சார் மற்றும் விமானப் போக்குவரத்துப் (Marine and Aviation) பாலிசி மட்டுமே போர் இன்னல்களுக்கு காப்பீடு வழங்குகிற ஒரே வகை காப்பீடு ஆகும்.

| முக்கியமானவை |
|---|

ஒரு கடல்சார் பாலிசி, தரநிலை பாலிசி மற்றும் பாலிசியுடன் இணைக்கப்பட்டுள்ள பல்வேறு பிரிவுகளின்கீழ் காப்பிடப்படும் இன்னல்கள் மூன்று வகைகளுக்குள் வருகின்றன:

i. கடல்சார் இன்னல்கள்

ii. புறநிலை இன்னல்கள் மற்றும்

iii. போர், வேலை நிறுத்த கலவரம், மக்கள் புரட்சி மற்றும் தீவிரவாத இன்னல்கள்

---

## b) கடல்சார் பாலிசிகளின் பல்வேறு வகைகள்

### i. குறிப்பிட்ட பாலிசி

ஒரே ஒரு கப்பலில் சரக்கை ஏற்றுவதை மட்டுமே இந்தப் பாலிசி காப்பிடுகிறது. ஒரு குறிப்பிட்ட கப்பல் பயணம் அல்லது எடுத்துச் செல்லலுக்கு மட்டுமே இது செல்லுபடியாகும். தொடர்ந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடும் அல்லது உள்நாட்டு சரக்குகளை அனுப்புவதில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு திறந்த **(open)** பாலிசி போன்ற சிறப்பு பாலிசிகள் வசதியாக இருக்கும்.

### ii. திறந்த பாலிசி

நாட்டிற்குள் சரக்குகளை எடுத்துச் செல்வது ஒரு திறந்த பாலிசியின்கீழ் காப்பளிக்கப்படலாம். பாலிசி ஒரு ஆண்டுக்குச் செல்லத்தக்கதாகவும், இந்த காலத்தில் அனுப்பப்படும் அனைத்து சரக்குகளை பற்றும் காப்பீடு பெறுபவர் **15** நாட்களுக்கு

ஒருமுறை, மாதாந்திரம் அல்லது காலாண்டு அடிப்படையில் அவர்களுக்கிடையில் ஏற்கப்பட்டது போன்று காப்பீட்டாளருக்கு தெரிவிக்க வேண்டும்.

iii. **திறந்த காப்பு**

திறந்த காப்பு என்பது ஒரு வருடத்திற்கான ஒப்பந்தமாகும், இது அதிக எண்ணிக்கையிலான ஏற்றுமதி/அனுப்புதல்களை ஈடுசெய்ய காப்பீடு செய்தவருக்கு தொடர்ச்சியான காப்பை அளிக்கிறது. சரக்குகளின் பிரீமியம் காப்பீட்டாளரால் பராமரிக்கப்படும் அந்தந்த பண வைப்பு கணக்கிலிருந்து சரிசெய்யப்படும். தொடர்ச்சியான வர்த்தகம் கொண்ட பெரிய ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு திறந்த காப்புகள் வழங்கப்படுகின்றன.

காப்பீட்டின் வரையறைகள், ஒரு ஆண்டுக்கு அனுப்பப்படும் கப்பல் சரக்கு அனுப்புதல்களுக்கான பிரீமிய விகிதம் ஆகியவற்றை திறந்த காப்புகள் குறிப்பிடுகிறது. திறந்த காப்பு என்பது ஒரு பாலிசி அல்ல அது ஸ்டாம்ப் இடப்படுவதுமில்லை. ஒரு தகுந்த மதிப்பிற்கான சரியான முறையில் ஸ்டாம்ப் செய்யப்பட்ட ஒவ்வொரு அறிவிப்பிற்கும் காப்பீட்டு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

iv. **தீர்வை வரி மற்றும் அதிகரிக்கப்பட்ட மதிப்புக் காப்பீடு**

சுங்கத் தீர்வை செலுத்தியதால் அல்லது சரக்கு சேருமிடத்தினை அடைந்த நாளில் அங்கு அவற்றின் சந்தை மதிப்பு உயர்வால் சரக்கின் மதிப்பு உயர்ந்தால் இந்த பாலிசிகள் கூடுதல் காப்பினை வழங்குகின்றன.

2. **கப்பல் தள காப்பீடு (Marine Hull insurance)**

இங்கு ஹல் ('Hull') என்பது ஒரு கப்பல் அல்லது வேறு நீர் போக்குவரத்து கலனின் உடற்பகுதியைக் குறிக்கிறது.

பல்வேறு நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய விதத்தில் உள்ள பொருத்தமான பன்னாட்டு விதிகளின்படி கப்பல் தள காப்பீடு செய்யப்படுகிறது. கப்பல் தள காப்பீடு இருவகைப்படும்:

a) **ஒரு குறிப்பிட்ட கடல் பயணத்திற்கான காப்பு: இங்கு பயன்படுத்தப்படும் விதிகள் இன்ஸ்டிடியூட் வாயேஜ் கிளாசஸ் என அழைக்கப்படுகின்றன.**

b) **ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான காப்பு: வழக்கமாக ஒரு ஆண்டாக இருக்கும். இங்கு பயன்படுத்தப்படும் விதிகள் இன்ஸ்டிடியூட் (நேர) கிளாசஸ் என அழைக்கப்படுகின்றன.**

c) போர் அபாயங்கள் சிறப்பு விதிமுறைகளால் நிர்வகிக்கப்படுகின்றன மற்றும் சேகரிக்கப்பட்ட பிரீமியங்கள் மத்திய அரசிடம் வரவு வைக்கப்படும்.

| **தகவல்** |
|---|

கப்பல் தள காப்பீட்டில் கீழ்க்காணும் காப்பீடுகளும் அடங்கும்:

i. ஓடங்கள், விசைப்படகுகள், பயணிகள் கப்பல்கள் போன்ற உள்நாட்டு கலன்கள்.

ii. தூர்வாரிகள் (இயந்திரமுள்ளது அல்லது இயந்திரமில்லாதது)

iii. மீன்பிடி படகுகள் (இயந்திரமுள்ளது அல்லது இயந்திரமில்லாதது)

iv. பாயமரக் கலங்கள் (இயந்திரமுள்ளது அல்லது இயந்திரமில்லாதது)

v. செய்கரைகள் மற்றும் கப்பல் துறைகள்

vi. கட்டுமானம் செய்யப்படும் கலன்கள்

---

**கப்பல் முதலாளிக்கு கப்பல்மீது மட்டுமல்லாமல், காப்பீடு செய்யப்பட்ட காலத்தில் எடுத்துச் செல்லப்படும் சரக்கு மூலம் கிடைக்கும் வருமானத்தின் மீதும் காப்பிடுப் பற்று** உள்ளது. கப்பல் முதலாளிக்கு சரக்குக்கட்டணத்தின் மீதுள்ள காப்பீடுப் பற்றுடன் அந்தக் கப்பலுக்குள் கடைகள் மற்றும் சாமான்கள் போன்ற பிற தேவையான வசதிகளை ஏற்படுத்த அவர் செய்த செலவிற்கும் காப்பளிக்கப்படுவதில் ஆர்வமாக உள்ளார். **இத்தகைய செலவுகள் பட்டுவாடாக்கள் (disbursements) என அழைக்கப்படுகின்றன. கப்பல் தள பாலிசியுடன் சேர்த்து குறிப்பிட்ட காலத்திற்கு இவையும் காப்பிடப்படுகின்றன.**

## முக்கியமானவை

**விமானப் போக்குவரத்துப் காப்பீடு**: விமானங்களுக்கும் ஒரு ஒருங்கிணைந்த பாலிசி உள்ளது. விமானத்திற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு காப்பளிப்பதோடு, விமானத்தை இயக்கும்போது ஏற்படும் மூன்றாம் தரப்புக்கும் பயணிகளுக்கும் உரிய சட்டப்பூர்வ கடப்பாடுகளுக்கும் காப்பளிக்கிறது.

---

**சுய-பரீட்சை** 10

காப்பீட்டின் எந்த பிரிவு போர் இன்னல்களுக்குக் காப்பளிக்கிறது?

I. கடல்சார் பாலிசிகள்
II. விமானப்போக்குவரத்து பாலிசிகள்
III. மேலுள்ள இரண்டும்
IV. மேலுள்ள எதுவும் இல்லை

---

## K. கடன்பாடு பாலிசிகள்

ஒருவர் எவ்வளவு கவனமாக இருந்தாலும், விபத்துக்களை முற்றிலும் தவிர்க்க இயலாது. இதனால் தனக்கு காயமோ, தன் சொத்துக்கு சேதமோ ஏற்படலாம். அதே நேரம் மூன்றாம் தரப்புக்கும் காயத்தையும் அவர்களுடைய சொத்துக்குச் சேதத்தையும் ஏற்படுத்தலாம். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் அத்தகைய இழப்புக்கு இழப்பீடு கோருவார்கள்.

சாக்லேட்டுகள் அல்லது மருந்துகள் போன்ற தயாரிக்கப்பட்டு விற்கப்பட்ட பொருளில் உள்ள குறைபாட்டினால் நுகர்வோருக்கு ஏற்படும் தீமையினாலும் கடன்பாடு உருவாகலாம். அதேபோன்று, ஒரு நோயாளிக்குச் செய்யும் தவறான நோயறிதல் / சிகிச்சை அல்லது தனது கட்சிக்காரருக்காக வாதிடும் ஒரு வழக்கறிஞர் தவறான முறையில் கையாண்டததற்காகவும் கடன்பாடு உருவாகலாம்.

அத்தகைய எல்லா சூழ்நிலைகளிலும், மூன்றாம் தரப்போ, வாடிக்கையாளரோ அல்லது ஒரு நோயாளியோ பாதிக்கப்பட்டதற்காக இழப்பீடு கோரும்போது, மூன்றாம் தரப்பு கொடுத்த வழக்குகளுக்கு இழப்பீடை அளிக்க அல்லது ஈடுக்கோருபவர் தாக்கல் செய்த வழக்குகளை நடத்துவதற்கான செலவுகளைச் சந்திப்பது

தேவைப்படலாம். வேறு வார்த்தையில் கூறுவதானால், செலுத்தும் கடன்பாடிலிருந்து ஒரு நிதி இழப்பு உருவாகிறது. அத்தகைய கடன்பாடு இருப்பதும் அளிக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையின் அளவும் மற்றும் அதற்குக் காரணம் கவனமின்மையா /மோசடியா என்பது உரிமையியல் நீதி மன்றத்தினால் (civil court) முடிவு செய்யப்படும். கடன்பாடு பாலிசிகள் அத்தகைய கடன்பாடுகளுக்குக் காப்பளிக்கின்றன. சில கடன்பாடு காப்பீட்டுத் திட்டங்களைப் பற்றிப் பார்ப்போம்.

**சட்டப்படியான கடப்பாடு**

சில சட்டங்கள் அல்லது சட்ட விதிகள் இழப்பீடு தருவதை கட்டாயமாக்குகின்றன. அத்தகைய சட்டங்களாவன:

- ✓ பொதுக் கடன்பாடு காப்பீட்டுச் (Public Liability Insurance Act) சட்டம், 1991 மற்றும்
- ✓ தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் (Employees Compensation Act) 1923, 2010-இல் திருத்தப்பட்டது

அத்தகைய கடன்பாடுகளுக்காக காப்பளிப்பதற்கு பாலிசிகள் உள்ளன. அவற்றில் சிலவற்றைப் பற்றிப் பார்ப்போம்.

**1. கட்டாய பொது கடன்பாடு பாலிசி (Compulsory Public Liability)**

பொது கடன்பாடு காப்பீட்டுச் சட்டம் 1991 மூன்றாம் தரப்பு காயமடைந்தாலோ அல்லது அவருடைய உடைமை சேதமுற்றாலோ தீங்கிழைக்கும் பொருட்களைக் கையாளுவோருக்கு தவறு செய்யாத அடிப்படையில் அவருக்கு அவற்றிற்கான கடன்பாடினை விதிக்கிறது. தீங்கிழைக்கும் பொருட்களின் பெயர்களும் அவற்றின் அளவுகளும் சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன. ஒரு நபருக்குச் செலுத்த வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையும் கீழே காட்டப்பட்டுள்ளன:

## செலுத்தத்தக்க இழப்பீடு

| | |
|---|---|
| மரணத்தை ஏற்படுத்திய விபத்து | ரூ. 25,000 |
| நிரந்தர மொத்த இயலாமை | ரூ. 25,000 |
| நிரந்தர பகுதி இயலாமை | இயலாமையின் %-ன் அடிப்படையில் ரூ. 25,000 |
| தற்காலிக பகுதி இயலாமை | மாதம் ரூ. 1000 வீதம் அதிகபட்சம் |

| | |
|---|---|
| | 3 மாதங்களுக்கு |
| உண்மையான மருத்துவச் செலவுகள் | அதிகபட்சம் ரூ. 12,500 வரை |
| சொத்திற்கு ஏற்பட்ட உண்மையான சேதத்திற்கான வரம்பு | ரூ. 6,000 |

AOA (ஏதேனும் ஒரு விபத்து) வரம்பு மற்றும் வாடிக்கையாளரின் வருமானத்தின் அடிப்படையிலேயே பிரீமியம் இருக்கும். இக்காப்பீட்டின் சிறப்பு அம்சம் என்னவென்றால் காப்பீடு பெறுபவர் கட்டாயமாக பிரீமியத்திற்குச் சமமான தொகையை சுற்றுச்சூழல் நிவாரண (Environment Relief) நிதிக்குப் பங்களிப்பாக செலுத்தவேண்டும். மூன்றாம் தரப்பில் மிக அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டிருந்தால், செலுத்தத்தக்க நிவாரணத் தொகை ஏதாவதொரு விபத்து ஏ.ஓ.ஏ (AOA) தொகையை மிஞ்சினால். மீதமுள்ள தொகை அந்த நிதியினால் வழங்கப்படும்.

**2. பொது கடன்பாடு (Public Liability) பாலிசி (தொழில்சார் / தொழில்சாரா இன்னல்கள்)**

இந்த வகையான பாலிசி காப்பீடு பெற்றவரின் தவறு / கவனமின்மையின் காரணமாக மூன்றாம் தரப்புக்கு ஏற்பட்ட காயம் அல்லது சொத்து சேதத்தினால் [மூன்றாம் தரப்பு சொத்து காப்பீடு-TPPI அல்லது மூன்றாம் தரப்பு சொத்து சேதம்-TPPD] எழும் கடன்பாடிற்குக் காப்பளிக்கின்றன.

தொழில்துறைசார் அபாயங்களுக்கும் மற்றும் ஹோட்டல்கள், திரையரங்குகள், அரங்குகள், குடியிருப்பு வளாகங்கள், அலுவலகங்கள், விளையாட்டு அரங்கங்கள், பண்டகசாலைகள் மற்றும் கடைகள் போன்றவற்றை பாதிக்கும் தொழில்துறை சாராத அபாயங்களுக்கும் தனித்தனி பாலிசிகள் உள்ளன. **TPPI/TPPD**-ஐ பொறுத்தவரை இந்தியச் சட்டப்படி கோரும் நபரின் கிரயங்கள், கட்டணங்கள் மற்றும் .செலவுகள் உட்பட அனைத்திற்கும் இழப்பீடு அளிப்பதற்கான சட்டப்பூர்வ கடப்பாட்டிற்குக் காப்பளிக்கிறது.

பாலிசி காப்பீடு தராதவை:

a) உற்பத்திப் பொருட்களுக்கான கடன்பாடு

b) மாசுக்கான கடன்பாடு

c) போக்குவரத்து மற்றும்

d) பணியாளர்கள் / தொழிலாளர்களுக்கு ஏற்படும் காயங்கள்

**3. உற்பத்திப் பொருட்களுக்கான கடன்பாடு (Products Liability) பாலிசி**

இப்போது உற்பத்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விற்பனை செய்யும் உற்பத்திப் பொருட்கள் மிக அதிக வகைகளில் இருப்பதால் உற்பத்திப் பொருட்களின் கடன்பாடு காப்பீட்டுக்கான தேவை அதிகரித்துள்ளது (எ.கா. கேன்களில் அடைக்கப்பட்ட உணவுகள், காற்றுச் செலுத்தப்பட்ட நீர் (aerated waters), மாத்திரைகள் மற்றும் ஊசி மருந்துகள், மின் சாதனங்கள், தொழில்சாதனங்கள், வேதிப்பொருட்கள் போன்றவை). உற்பத்திப் பொருளில் உள்ள ஒரு குறைபாடு, மூன்றாம் தரப்புக்குச் மரணத்தை, உடல் காயத்தை அல்லது நோயை அல்லது அவருடைய சொத்துக்குச் சேதத்தை ஏற்படுத்தினால், ஒரு ஈடு எழ வாய்ப்புள்ளது. காப்பீடு பெற்றவரின் இந்தக் கடன்பாடுக்கு உற்பத்திப் பொருள் பாலிசி காப்பளிக்கிறது.

இக்காப்பு ஏற்றுமதிக்கும் உள்ளூர் விற்பனைக்கும் கிடைக்கும்

**4. மின்தூக்கி (Lift) (மூன்றாம் தரப்பு) கடன்பாடு காப்பீடு**

மின்தூக்கிகளின் செயல்பாடு மற்றும் அவற்றின் பயன்பாட்டிலிருந்து எழும் கட்டிட உரிமையாளர்களின் கடன்பாடுகளுக்கு இந்த பாலிசி இழப்பீட்டினை வழங்குகிறது. அது காப்பளிக்கும் சட்டப்பூர்வ கடன்பாடுகளாவன:

a) எந்த ஒரு நபரின் (காப்பீடு பெற்றவரின் ஊழியர்களைத் தவிர) சாவு / உடல் காயம்

b) சொத்துக்கு ஏற்பட்ட சேதம் (காப்பீடு பெற்றவரின் அல்லது ஊழியர்களின் சொத்துக்கள் தவிர)

இழப்பீட்டு வரம்பு, ஏதாவது ஒரு நபர், ஏதாவது ஒரு விபத்து மற்றும் ஏதாவது ஒரு ஆண்டு ஆகியவற்றைப் பொறுத்து பிரீமிய விகிதங்கள் இருக்கும்.

**5. நிபுணத்துவ கடன்பொறுப்பு (Professional Liability)**

தங்கள் நிபுணத்துவப் பணிகளை நிறைவேற்றும்போது கவனமின்மையின் காரணமாக எழும் சேதங்களுக்கான நிபுணர்களின் சட்டப்பூர்வ கடப்பாடுகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் நிபுணத்துவ கடன்பொறுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. மருத்துவர்கள், மருத்துவமனைகள், பொறியியலாளர்கள், கட்டடக் கலை வல்லுனர்கள், பட்டயக் கணக்காளர்கள், நிதி ஆலோசகர்கள், வழக்குறைஞர்கள், காப்பீட்டுத் தரகர்கள் போன்றவர்களுக்கு இந்தக் காப்பு கிடைக்கும்.

### 6. இயக்குனர்கள் மற்றும் அதிகாரிகள் கடன்பாடு பாலிசி

ஒரு நிறுவனத்தின் இயக்குனர்களும் அதிகாரிகளும் நம்பிக்கையான பொறுப்பான பதவிகளில் உள்ளனர். அவர்கள் பங்குதாரர்கள், தொழிலாளர்கள், கடனளித்தவர்கள் மற்றும் நிறுவனத்தின் பிற உரிமையாளர்களுக்கு நிறுவனத்தின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதிலும் மேற்பார்வையிடுவதிலும் அவர்கள் செய்த தவறான செயல்களினால் ஏற்பட்ட சேதத்தை வழங்குவதற்கு பொறுப்பாக்கப்படலாம். அத்தகைய கடன்பொறுப்புகளுக்கு காப்பளிக்கும் வகையில் நிறுவனத்தின் அனைத்து இயக்குனர்களுக்கும் காப்பளிக்கும் விதத்தில் ஒரு பாலிசி வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 7. தொழிலாளர்களின் இழப்பீட்டுக் (Employee's Compensation) காப்பீடு

ஒரு தொழிலாளி பணி செய்யும் சமயத்தில் மற்றும் அந்த பணி காரணமாக விபத்து மூலம் தனிப்பட்ட காயமோ நோயோ ஏற்பட்டால், தனது ஊழியர்களுக்கு காப்பீடு பெற்றவர் அளிக்க வேண்டிய சட்டப்பூர்வ கடன்பாடுக்கு இந்தப் பாலிசி இழப்பீடு வழங்குகிறது. இது **தொழிலாளர்கள் இழப்பீட்டுக் காப்பீடு எனவும் அழைக்கப்படுகிறது.**

சந்தையில் இரு வகையான காப்பீடுகள் நடைமுறையில் உள்ளன:

a) **அட்டவணை அ:** தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923, (பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923), மரணம் விளைவிக்கும் விபத்துச் சட்டம் (Fatal Accident), 1855 மற்றும் பொதுச் சட்டம் ஆகியவற்றின்கீழ் ஊழியர்களுக்கு ஏற்படும் விபத்துகளுக்கான சட்டப்பூர்வ கடன்பாடிற்கான இழப்பீடு.

b) **அட்டவணை ஆ**: மரணம் விளைவிக்கும் விபத்துச் (Fatal Accident) சட்டம், 1855 மற்றும் பொதுச் சட்டத்தின்கீழ் ஏற்படும் சட்டப்பூர்வ பொறுப்பிற்கான இழப்பீடு.

முன்மொழிவுப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட தொழிலாளரின் கணக்கிடப்பட்ட சம்பளத்தின் அடிப்படையில் பிரீமிய விகிதம் நிர்ணயிக்கப்படுகிறது.

பாலிசி பின்வருவதற்கு காப்பளிக்கும் வகையில் நீட்டிக்கப்படலாம்:

i. ஒரு குறிப்பிட்ட தொகை அளவிற்கு காப்பீடு பெற்றவர் தொழிலாளரின் காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காகச் செய்யும் மருத்துவ மற்றும் மருத்துவமனைச் செலவுகள்
ii. சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள தொழில்சார்ந்த நோய்களுக்கான கடன்பாடு
iii. ஒப்பந்ததாரர்களின் ஊழியர்களுக்கான கடன்பாடு

**சுய-பரீட்சை 11**

பொது கடன்பொறுப்புக் காப்பீட்டுச் சட்டம், 1991-ன்கீழ், மரணமில்லாத விபத்துகளில் ஏற்படும் உண்மையான மருத்துவச் செலவுகளுக்கு எவ்வளவு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்?

I. ரூ.6,250
II. ரூ.12,500
III. ரூ.25,000
IV. ரூ.50,000

**சுய-பரீட்சையின் பதில்கள்**

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் III.

**பதில் 2** - சரியான பதில் விருப்பம் I.

**பதில் 3** - சரியான பதில் விருப்பம் IV.

**பதில் 4** - சரியான பதில் விருப்பம் II.

**பதில் 5** - சரியான பதில் விருப்பம் I.

**பதில் 6** - சரியான பதில் விருப்பம் IV.

**பதில் 7** - சரியான பதில் விருப்பம் III.

**பதில் 8** - சரியான பதில் விருப்பம் II.

**பதில் 9** **- சரியான பதில் விருப்பம் II.**

**பதில் 10** - சரியான பதில் விருப்பம் III.

**பதில் 11** - சரியான பதில் விருப்பம் II.

# அத்தியாயம் G-05

# பொது காப்பீட்டின் ஈடுக்கோரல்கள்

## அத்தியாய அறிமுகம்

எந்த ஒரு காப்பீட்டு ஒப்பந்தத்தின் மையப் பாகமாகவும் இருப்பது தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட உறுதிமொழி ஆகும், அதாவது, இழப்பு ஏற்படும்போது காப்பீடு பெற்றவருக்கு இழப்பீடு வழங்குவதற்கான உறுதிமொழி. ஈடுக்கோரல் தீர்வின் முழுச் செயல்முறையையும் புரிந்துகொள்வதை எளிதாக்கும் வகையில், இழப்பு ஏற்பட்ட நேரத்திலிருந்து உள்ளடங்கியுள்ள ஆவணங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து இந்த அத்தியாயம் தெரிவிக்கிறது. மேலும், இது காப்பீடு பெறுபவர் அல்லது காப்பீடு அளிப்பவர் மறுக்கப்பட்ட ஈடுக்கோரல்களைக் கையாளும் முறையையும் விளக்குகின்றது

## கற்பதற்கான குறிக்கோள்கள்

A. ஈடுக்கோரல் தீர்வு நடைமுறை

B. ஆய்வாளர்கள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்களின் பங்கு

இந்த அத்தியாயத்தைப் படித்த பிறகு, உங்களால்:

1. ஈடுக்கோரல் தீர்வு நடைமுறைகளின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்க முடியும்
2. இழப்பு தெரிவித்தலுக்கான நடைமுறைகளை விவரிக்க முடியும்
3. ஈடுக்கோரல் விசாரணை மற்றும் மதிப்பீட்டினை கணிக்க முடியும்
4. ஆய்வாளர்கள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்களின் முக்கியத்துவத்தை விளக்க முடியும்
5. ஈடுக்கோரல் படிவங்களின் உள்ளடக்கங்களை விளக்கிக் கூற முடியும்
6. ஈடுக்கோரல் சரிக்கட்டுதல்கள் மற்றும் தீர்வை வரையறுக்க முடியும்

## A. ஈடுக்கோரல் தீர்வு நடைமுறை

### 1. ஈடுக்கோரல் தீர்வின் முக்கியத்துவம்

காப்பீட்டு நிறுவனத்தின் மிக முக்கியமான செயல்பாடு, ஏதேனும் இழப்புச் சம்பவம் ஏற்படும்போது பாலிசிதாரர்களின் ஈடுக்கோரல்களைத் தீர்ப்பது ஆகும். பாலிசிதாரருக்கு பணம் செலுத்துவதன் மூலமோ அல்லது காப்பீடு பெற்றவர் சார்பாக மூன்றாம் தரப்பினருக்கு இழப்பீடை செலுத்தியோ, காப்பீடு அளிப்பவர் உடனடியான, நியாயமான மற்றும் நேர்மையான சேவையை வழங்குவதன் மூலம் இந்த உறுதிமொழியை நிறைவு செய்கிறார்.

பொதுக் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றின் போர்ட் ரூமில் “முடிந்தால் பணம் செலுத்தவும்; தேவைப்பட்டால் நிராகரிக்கவும்” என்ற வாசகம் பொதிக்கப் பட்டுள்ளது. அதுதான் உன்னத காப்பீட்டு வணிகத்தின் மெய்க்கருத்தாக உள்ளது.

**நிபுணத்துவத்துடன் ஈடை தீர்ப்பது என்பது ஒரு காப்பீட்டு நிறுவனத்துக்கான மிகப்பெரிய விளம்பரமாக கருதப்படுகின்றது.**

#### a) செயல்விரைவு

காப்பீடு பெற்றவர் ஒரு கார்ப்பரேட் வாடிக்கையாளரோ அல்லது தனிநபரோ, யாராக இருந்தாலும், அல்லது இழப்பின் அளவு பெரிதாக இருந்தாலும் சிறிதாக இருந்தாலும், ஈடுக்கோரல்களை விரைவாக தீர்ப்பது என்பது மிகவும் முக்கியமானதாகும். இழப்பு ஏற்பட்ட பிறகு முடிந்தவரை விரைவில் பாலிசிதாரருக்கு காப்பீடில் கிடைக்கும் இழப்பீடு தேவைப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அவர் விரைவாக பணம் பெற்றால், அது அவருக்கு மிகவும் உபயோகமானதாக இருக்கும். காப்பீடு பெற்றவருக்கு மிகவும் தேவைப்படும் சமயத்தில் இழப்பு ஏற்பட்ட பிறகு முடிந்தவரை விரைவில் ஈடு தொகையைச் செலுத்துவது காப்பீட்டு நிறுவனத்தின் கடமையாகும்.

#### b) நிபுணத்துவம்

காப்பீட்டு அதிகாரிகள் ஒவ்வொரு ஈடுக்கோரலையும் அதன் தகுதிகளை கொண்டு கருதுகிறார்கள், மேலும் பின்வரும்

கேள்விகளுக்கு விடை அளிக்கும் அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்யாமல் ஈடுக்கோரலை நிராகரிப்பதற்கு ஒருதலைப்பட்சமான அல்லது முன்-கருதப்பட்ட கருத்துக்களைப் பயன்படுத்துவதில்லை.

i. இழப்பீடு உண்மையாகவே ஏற்பட்டதா?

ii. அவ்வாறெனில், இழப்பை உருவாக்கிய சம்பவம் உண்மையிலேயே சேதத்தை ஏற்படுத்தியதா?

iii. இந்த சம்பவத்தின் காரணமாக நிகழ்ந்த சேதத்தின் அளவு

iv. இழப்புக்கான காரணம் என்ன?

v. இழப்பு இந்த பாலிசியின் கீழ் காப்பளிக்கப்பட்டுள்ளதா?

vi. ஒப்பந்தம் / பாலிசி நிபந்தனைகளின் கீழ் இந்த ஈடுக்கோரல் தொகை செலுத்த வேண்டியதா?

vii. அவ்வாறெனில், எவ்வளவு செலுத்த வேண்டும்?

இந்த அனைத்துக் கேள்விகளுக்கான விடைகளையும் காப்பீட்டு நிறுவனம் கண்டுபிடிக்க வேண்டும்.

ஈடுக்கோரல்களைச் செயல்படுத்துதல் என்பது மிக முக்கியமான நடவடிக்கையாகும். பாலிசியின் கீழ் 'செலுத்த வேண்டிய' அனைத்து ஈடுக்கோரல்களும் விரைவாக செலுத்தப்பட்டு, செலுத்தக் கூடாததை செலுத்தாது இருப்பதையும் உறுதி செய்வதற்காக அனைத்து ஈடுக்கோரல் படிவங்கள், நடைமுறைகள் மற்றும் செயல்முறைகளும் நிறுவனத்தால் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

முகவர், காப்பீடு பெற்றவருக்கு பழக்கமான நிறுவனத்தின் பிரதிநிதி என்பதால், தொடர்புடைய அனைத்துப் படிவங்களும் முறையாக நிரப்பப்பட்டு, இழப்பு ஏற்பட்டதற்குச் சான்றாக உள்ள அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டு மற்றும் அனைத்து பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் உரிய காலத்தில் பின்பற்றப்பட்டு நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டதை அவர் உறுதி செய்துகொள்ள வேண்டும். இழப்பு சமயத்தில் முகவரின் பங்கு குறித்து முன்பே விவரிக்கப்பட்டுள்ளது.

## 2. இழப்பை பற்றி தெரிவிப்பது அல்லது அறிவிப்பு

இழப்பு குறித்து காப்பீட்டாளருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் என்று பாலிசி நிபந்தனை கூறுகின்றது. உடனடியாக தெரிவிப்பது, ஒரு இழப்பு குறித்து அதன் தொடக்க நிலைகளிலேயே ஆய்வு செய்வதற்கு காப்பீட்டாளருக்கு உதவும். தாமதம் ஏற்படுத்துவது இழப்பு தொடர்பான பயனுள்ள தகவல்களை இழந்துவிட காரணமாக இருக்கலாம். மேலும், இழப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்வதற்கும் ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இது காப்பீட்டாளருக்கு உதவி செய்கின்றது. இழப்பு அறிவிப்பு நியாயமாக முடிந்தவரை விரைவில் தெரிவிக்கப்பட வேண்டும்.

தொடக்கச் சரிபார்ப்பு / நுண்ணாய்வு முடிந்தபிறகு, ஈடுக்கோரலுக்கு ஒரு எண் வழங்கப்பட்டு, அது பாலிசி எண், காப்பீடு பெற்றவர் பெயர், இழப்பு மதிப்பீட்டுத் தொகை, இழப்பு ஏற்பட்ட தேதி போன்ற விவரங்களுடன் ஈடுக்கோரல் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றது, ஈடுக்கோரல் இப்பொழுது செயலாக்கப்பட தயாராக உள்ளது.

**குறிப்பிட்ட வகை பாலிசிகளின் கீழ் (எ.கா. கொள்ளை) காவல்துறை அதிகாரிகளுக்கும் அறிக்கை வழங்கப்பட வேண்டும். சரக்கு இரயில் போக்குவரத்து பாலிசிகளின் கீழ், இரயில்வே துறையினருக்கு அறிவிப்பு வழங்க வேண்டும்.**

## 3. விசாரணையும் மதிப்பீடும்

### a) மதிப்பாய்வு

காப்பீடு பெற்றவரிடமிருந்து ஈடுக்கோரல் படிவத்தைப் பெற்றதும், இழப்பின் விசாரணை மற்றும் மதிப்பீடு குறித்து காப்பீட்டாளர்கள் முடிவு செய்கிறார்கள். ஈடுக்கோரல் தொகை குறைவாக இருந்தால், **இழப்புக்கான காரணம் மற்றும் அளவு குறித்து தீர்மானிப்பதற்கான** விசாரணை காப்பீட்டாளரின் அதிகாரி ஒருவரால் மேற்கொள்ளப்படுகின்றது.

மற்ற ஈடுக்கோரல்களின் **விசாரணை**, இழப்பு மதிப்பீட்டில் வல்லுநர்களாக இருக்கும் சுயாதீன உரிமம் பெற்ற தொழில்முறை ஆய்வாளர்களிடம் ஒப்படைக்கப்படும். சுயாதீன ஆய்வாளர்களால்

மேற்கொள்ளப்படும் இழப்பு மதிப்பீடானது, காப்பீடு அளிப்பவர்கள் மற்றும் காப்பீடு பெறுபவர் ஆகிய இருவருமே உரிமையுள்ள நபர்கள் என்பதால், சுயாதீனமான தொழில்முறை நபரின் நடுநிலையான கருத்து இரண்டு தரப்பினராலும், மேலும் ஏதேனும் சர்ச்சை ஏற்படும்போது நீதிமன்றத்தாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும் என்ற கோட்பாடின் அடிப்படையில் அமைந்துள்ளது.

**b) ஈடுக்கோரல் மதிப்பீடு**

தீ விபத்து ஏற்படும் நிகழ்வில், துணை ஆவணங்களுடன் உள்ள ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. தேவைப்படும் இடங்களில் காவல்துறை அறிக்கை/தீயணைப்புப் படை அறிக்கை, விசாரணை செய்தவரின் அறிக்கையும் பெறப்படும். தனிநபர் விபத்து ஈடுக்கோரல்களுக்கு, வழக்கிற்கு ஏற்ப, விபத்துக்கான காரணம் அல்லது நோயின் இயல்பு, மற்றும் இயலாமையின் கால அளவையும் குறிப்பிடும் அறிக்கையை சிகிச்சையளிக்கும் மருத்துவரிடமிருந்து பெற்று காப்பீடு பெற்றவர் சமர்ப்பிக்க வேண்டும்

பாலிசி நிபந்தனைகளின் கீழ், ஒரு சுயாதீனமான மருத்துவப் பரிசோதனையை செய்வதற்கு காப்பீடு அளிப்பவர்களுக்கு உரிமை உள்ளது. “தொழிலாளர்களின் இழப்பீடு” ஈடுக்கோரல்களுக்கு ஆதரவாக மருத்துவச் சான்றும் தேவைப்படுகின்றது. கால்நடைகள் மற்றும் ஆடுமாடுகளுக்கான ஈடுக்கோரல்கள் ஒரு கால்நடை மருத்துவரின் அறிக்கையின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.

**தகவல்**

இழப்பு அல்லது சேதம் குறித்த அறிக்கையைப் பெற்றவுடன், காப்பீடு அளிப்பவர்கள் பின்வருவதை பரிசோதிப்பார்கள்:

1. இழப்பு அல்லது சேதம் நிகழ்ந்த தேதியன்று காப்பீட்டு பாலிசி நடைமுறையில் இருந்ததா
2. காப்பீடு பெற்ற இன்னலுக்கு உட்பட்டதன் காரணமாகதான் இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டுள்ளதா
3. பாலிசியின் கீழ் காப்பீடு செய்த அதே சொத்து தான் (காப்பீட்டுப் பொருள்) இழப்பால் பாதிக்கப்பட்டுள்ளதா.

4. இழப்பு அறிவிப்பு தாமதமின்றி உடனடியாக பெறப்பட்டுள்ளதா.

இறப்பு மற்றும் தனிப்பட்ட காயங்களை உள்ளடக்கிய வாகனக் காப்பீட்டுக்கான மூன்றாம் தரப்பு ஈடுக் கோரல்கள் மருத்துவரின் அறிக்கையின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. இந்த ஈடுக்கோரல்களை வாகன விபத்து ஈடுக்கோரல் தீர்ப்பாயம் (Motor Accident Claims Tribunal) கையாளுகின்றது, மேலும் செலுத்த வேண்டிய தொகையானது ஈடை கோருபவரின் வயது மற்றும் வருமானம் போன்ற காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது.

மூன்றாம் தரப்பினரின் சொத்து சேதத்தை உள்ளடக்கிய ஈடுக்கோரல்கள் ஒரு ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.

- ✓ சொந்த வாகனத்துக்கு ஏற்படும் சேதத்திற்கான ஈடுக்கோரல் ஆய்வாளரின் அறிக்கையின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது.
- ✓ மூன்றாம் தரப்பு சேதமும் உள்ளதா என்பதை அறிந்துகொள்ள காவல்துறையின் அறிக்கை தேவைப்படும்.

**தகவல்**

விசாரணை என்பது இழப்பு மதிப்பீட்டிலிருந்து வேறுபட்டதாகும். சட்டரீதியான ஈடுக்கோரல் மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கும், காப்பீடுப் பற்று இல்லாமை, பொருள் குறித்த உண்மைகளை மறுத்தல் அல்லது திரித்துக் கூறுதல், வேண்டுமென்றே இழப்பு ஏற்படுத்துதல் போன்ற முக்கியமான விவரங்களும் சந்தேகங்களும் இல்லாதிருப்பதை சரிபார்க்கவும் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது.

காப்பீட்டு ஆய்வாளர்கள் விசாரணைப் பணியையும் மேற்கொள்கின்றனர். ஒரு ஆய்வாளர் முடிந்தவரை விரைவாக வேலையைத் தொடங்கினால் உதவும். எனவே, ஈடுக்கோரல் அறிக்கை பெறப்பட்டவுடன் முடிந்தவரை விரைவில் ஆய்வாளரை நியமிப்பது என்பது நடைமுறையில் உள்ளது.

## B. ஆய்வாளர்கள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்களின் பங்கு

### a) ஆய்வாளர்கள்

ஆய்வாளர்கள் ஐஆர்டிஏ-வால் உரிமமளிக்கப்பட்ட நிபுணர்கள் ஆவர். குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படும் இழப்புகளை ஆய்வு செய்வதிலும் மதிப்பிடுவதிலும் அவர்கள் வல்லுநர்களாக இருக்கின்றனர். பொதுவாக, ஆய்வாளர்களை நியமிப்பதற்காக காப்பீட்டு நிறுவனம் அவருக்குரிய கட்டணத்தைச் செலுத்துகின்றது. ஈடுக்கோரலின்போது பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் ஆய்வாளர்களையும் இழப்பு மதிப்பீட்டாளர்களையும் பணியமர்த்துகின்றன. அவர்கள் ஈடுபட்டுள்ள சொத்துக்களை ஆய்வு செய்கிறார்கள், இழப்புக்கான காரணம் மற்றும் சூழ்நிலைகளை ஆய்வு செய்து சரிபார்க்கிறார்கள். மேலும், அவர்கள் இழப்புத் தொகையைக் கணக்கிட்டு, அறிக்கைகளை காப்பீட்டு நிறுவனத்திடம் சமர்ப்பிக்கிறார்கள்.

மேலும், மேற்கொண்டு இழப்புகள் ஏற்படுவதைத் தடுப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் தொடர்பாக அவர்கள் காப்பீடு பெறுபவர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்கள். காப்பீட்டுச் சட்டம், 1938 இன் பிரிவுகள், காப்பீட்டு விதிகள் 1939 மற்றும் ஐஆர்டிஏஐ-ஆல் வெளியிடப்பட்டுள்ள குறிப்பிட்ட விதிமுறைகள் மூலம் ஆய்வாளர்கள் நிர்வகிக்கப்படுகின்றனர்.

'பயண பாலிசி' அல்லது ஏற்றுமதிகளுக்கான 'கப்பல்சார் திறந்த காப்பீடு' ஆகியவற்றில் நாட்டுக்கு வெளியே மேற்கொள்ளப்படும் ஈடுக்கோரல்கள் இந்தப் பாலிசியில் பெயரிடப்பட்ட வெளிநாட்டில் உள்ள ஈடுக்கோரல் தீர்வு முகவர்களால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இந்த முகவர்கள் இழப்பை மதிப்பீடு செய்து பணம் வழங்குகிறார்கள், இந்த தொகையை காப்பீட்டு நிறுவனம் தீர்வு கட்டணத்துடன் சேர்த்து அவர்களுக்கு திருப்பி வழங்குகிறது. மாற்றாக, அனைத்து ஈடுக்கோரல் ஆவணங்களும் காப்பீட்டு ஈடுக்கோரல் தீர்வு முகவர்களால் பெறப்பட்டு, அவர்களுடைய மதிப்பீடுகளுடன் சேர்த்து காப்பீட்டு நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

**முக்கியமானவை**

**காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 64 UM**

சொந்த வாகனத்தின் சேதத்திற்கான இழப்பீடு ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேலே மற்றும் பிற சொத்து சேதத்திற்கான இழப்பீடு ஒரு லட்சத்திற்கு மேல் இருக்கும்போது, காப்பீட்டாளர்கள் அத்தகைய ஈடுக்கோரல்களை மதிப்பிடுவதற்கு ஆய்வாளர்களை நியமிக்க வேண்டும். மற்ற ஈடுக்கோரல்களுக்கு, காப்பீட்டாளர்கள் மதிப்பீட்டிற்காக மற்ற நபர்களை (தற்போதைக்கு ஆய்வாளர் அல்லது இழப்பு மதிப்பீட்டாளராக பணியமர்த்துவதற்கு தகுதியை இழக்காதவர்) பணியமர்த்தலாம்.

## 5. ஈடுக்கோரல் படிவங்கள்

ஒவ்வொரு காப்பீட்டு வகைக்கும் ஈடுக்கோரல் படிவத்தின் உள்ளடக்கங்கள் மாறுபடுகின்றன. பொதுவாக, இழப்பு தேதி, நேரம், இழப்புக்கான காரணம், இழப்பின் அளவு போன்ற இழப்புச் சூழ்நிலைகள் தொடர்பான முழுத் தகவல்களையும் பெறும் வகையில் ஈடுக்கோரல் படிவம் வடிவமைக்கப்படுகின்றது. இதர கேள்விகள் ஒவ்வொரு வகை காப்பீட்டு வர்க்கத்திற்கும் வேறுபடுகின்றன.

**எடுத்துக்காட்டு**

ஒரு தீ விபத்து ஈடுக்கோரல் படிவத்தில் கேட்கப்படும் தகவல்களுக்கான ஒரு எடுத்துக்காட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

i. காப்பீடு பெற்றவரின் பெயர், பாலிசி எண் மற்றும் முகவரி

ii. தீ விபத்து ஏற்பட்ட தேதி, நேரம், காரணம் மற்றும் சூழ்நிலைகள்

iii. சேதமடைந்த சொத்து குறித்த விவரங்கள்

iv. பல்வேறு உருப்படிகளின் கீழ் காப்பீடில் ஈடு கோரப்படும் போது தீ விபத்து நிகழ்ந்த சமயத்தில் சொத்தின் உண்மையான மதிப்பு கருதப் படுகிறது. [ஈடுக்கோரலானது, தேய்மானம், தேய்வு நெய்வு ஆகியவற்றைக் கழித்த பிறகு சம்பவம் நடந்த இடம் மற்றும் நேரத்தில் சொத்தின் உண்மையான மதிப்பின் அடிப்படையில் அமைந்திருக்கும் (பாலிசியில் கட்டிடம், தொழிற்சாலை மற்றும்

இயந்திரத்திற்கான பாலிசி “மறுநிறுவல் மதிப்பு” அடிப்படையில் இருந்தாலே தவிர) அது இலாபத்துடன் சேர்ந்து இருக்கக்கூடாது]

v. அழிவு மீட்புத்தொகையை கழித்தப்பிறகு ஈடுக்கோரப்பட்ட தொகை

vi. தீ விபத்து நிகழ்ந்த வளாகத்தின் நிலை மற்றும் குடியிருப்பு நிலை.

vii. எந்த திறனில் காப்பீடு பெற்றவர் ஈடுக்கோரலை கேட்கிறார், அவர் உரிமையாளரா, அடமானம் வைத்திருப்பவரா அல்லது அது மாதிரி வேறு ஏதாவது

viii. சேதமடைந்த சொத்தில் வேறு யாருக்காவது பங்கு உள்ளதா என்பது

ix. அந்த சொத்தின் மீது வேறு ஏதாவது காப்பீடு நடைமுறையில் உள்ளதா, அப்படி இருந்தால், அது குறித்த விவரங்கள்

---

இதைத் தொடர்ந்து படிவத்தில் உள்ள அறிக்கையின் உண்மை மற்றும் துல்லியத்தன்மை குறித்த பிரகடனமும், அதில் காப்பீடு பெற்றவரின் கையொப்பம் மற்றும் தேதியும் இடம் பெற்றிருக்கும்.

காப்பீட்டு நிறுவனம் ஈடுக்கோரல் படிவத்தை வழங்கிவிட்டால் மட்டுமே, அவர்கள் ஈடுக்கோரலுக்கான பொறுப்பை ஏற்பதாக அர்த்தமில்லை. ஈடுக்கோரல் படிவங்கள் 'பாரபட்சமின்றி' என்ற குறிப்புடன் வழங்கப்படுகின்றன.

**ஆதரவு ஆவணங்கள்**

ஈடுக்கோரல் படிவத்துடன் சேர்த்து, ஈடுக்கோரலை ஆதரிக்கும் குறிப்பிட்ட ஆவணங்களை ஈடுக் கோருபவரோ அல்லது காப்பீட்டு நிறுவனத்தால் காப்பளிக்கப்பட்டவரோ சமர்ப்பிக்க வேண்டும்.

i. தீ விபத்து ஈடுக்கோரல்களுக்கு, தீயணைப்புத் துறையினரிடமிருந்து ஒரு அறிக்கை தேவைப்படும்.

ii. புயல் சேதத்திற்கு, வானிலை ஆய்வு மையத்திடம் இருந்து அறிக்கை கோரலாம்

iii. கொள்ளை ஈடுக்கோரல்களில், காவல்துறையினரிடம் இருந்து பெறப்படும் அறிக்கை தேவையுள்ளதாக இருக்கலாம்.

iv. மரணம் விளைவித்த விபத்துக்கான ஈடுக்கோரல்களுக்கு, பிரேத பரிசோதனை செய்பவர் மற்றும் காவல்துறை ஆகியோரிடமிருந்து அறிக்கைகள் தேவைப்படும்.

v. வாகன ஈடுக்கோரல்களுக்கு, ஓட்டுநர் உரிமம், பதிவுப் புத்தகம், காவல்துறை அறிக்கை போன்றவற்றை காப்பீடு அளிப்பவர் பரிசோதிக்க விரும்புவார்.

vi. கப்பல் சரக்கு ஈடுக்கோரல்களில், இழப்பின் வகைக்கேற்ப ஆவணங்களின் இயல்பு மாறுபடுகின்றது, அதாவது, மொத்த இழப்பு, குறிப்பிட்ட சராசரி, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு போக்குவரத்து ஈடுக்கோரல்கள் போன்றவை.

**சுய-பரீட்சை** 1

பின்வருவனவற்றில் எந்த நடவடிக்கைகள் ஈடுக்கோரல்களின் நிபுணத்துவமான தீர்வுகளின் கீழ் வகைப்படுத்தப்படவில்லை?

I. இழப்பின் காரணத்துடன் தொடர்புடைய தகவல்களைக் கேட்டல்
II. ஈடுக்கோரலை பாரபட்சமாக அணுகுதல்
III. காப்பளிக்கப்பட்ட இன்னலினால் இழப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல்
IV. ஈடுக்கோரலின் கீழ் செலுத்த வேண்டிய தொகையின் அளவை உறுதி செய்தல்

---

**சுய-பரீட்சை** 2

ராஜ் ஒரு கார் விபத்துக்கு உள்ளானார். அவருடைய கார் வாகன காப்பீட்டு பாலிசியின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. பின்வருவனவற்றில் ராஜ் செய்யக்கூடிய மிகப் பொருத்தமான செயல் எது?

I. நியாயமாக முடிந்தவரை விரைவில் காப்பீட்டு நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டும்.

II. காப்பீடு புதுப்பிக்கும் சமயத்தில் காப்பீட்டு நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டும்
III. பெரிய அளவிலான இழப்பீட்டைப் பெறும் வகையில் காரை மேலும் சேதப்படுத்த வேண்டும்
IV. சேதத்தைப் புறக்கணிக்க வேண்டும்

**சுய-பரீட்சை** 3

ஈடுக்கோரல் விசாரணை மற்றும் ஈடுக்கோரல் மதிப்பீட்டு பற்றி பினவருவதில் எந்த கூறுகள் உண்மையானவை.

I. ஈடுக்கோரல்கள் விசாரணை மற்றும் ஈடுக்கோரல்கள் மதிப்பீடு இரண்டுமே ஒன்றுதான்
II. விசாரணை என்பது ஈடுக்கோரலின் உண்மைத்தன்மையை தீர்மானிப்பதாகும், அதேசமயம் காப்பீடு செய்யப்பட்ட ஆபத்தால் இழப்பு ஏற்பட்டதா மற்றும் உத்தரவாதத்தை மீறுகிறதா என்பதை மதிப்பீடு மூலம் கண்டுபிடிக்கலாம்.
III. மதிப்பீடு ஈடுக்கோரலின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த முயற்சிக்கின்றது, அதேசமயம் விசாரணை என்பது இழப்பின் காரணம் மற்றும் அளவில் அதிக கவனம் செலுத்துகின்றது
IV. ஈடுக்கோரல் தொகை வழங்கப்படுவதற்கு முன்பு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது, மற்றும் ஈடுக்கோரல் தொகை வழங்கப்பட்ட பின்பு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

**சுய-பரீட்சை** 4

ஆய்வாளர்களுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் எது?

I. இந்திய ஆய்வாளர் சங்கம்
II. ஆய்வாளர் ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்
III. காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏ)
IV. இந்திய அரசு

**சுய-பரீட்சை** 5

ஒரு புயல் சேதார ஈடுக்கோரலை ஆய்வு செய்யும்போது பின்வரும் ஆவணங்களில் எதைக் கேட்பதற்கான அதிக சாத்தியமுள்ளது?

I. பிரேத பரிசோதனை செய்பவரின் அறிக்கை
II. தீயணைப்புத் துறையினரிடமிருந்து அறிக்கை
III. காவல்துறை அறிக்கை
IV. வானிலை ஆராய்ச்சித் துறையிடமிருந்து அறிக்கை

**சுய-பரீட்சை** 6

ஒரு பாலிசியின் கீழ் வழங்கப்பட்ட இழப்பினை மூன்றாம் தரப்பினரிடமிருந்து மீட்பதற்காக காப்பீட்டாளர் எந்தக் கோட்பாட்டின் கீழ் காப்பீடு பெறுபவரின் உரிமைகளை எடுத்துக்கொள்ள முடியும்?

I. பங்களிப்பு
II. விடுவித்தல்
III. கடன்பற்றுரிமை
IV. இழப்பீடு

**சுய-பரீட்சை** 7

ஒரு குறிப்பிட்ட இழப்பு, பாலிசியின் கீழ் காப்பளிக்கப் படாததால் அதற்குரிய இழப்பீடை வழங்க முடியாது என காப்பீட்டாளர் முடிவெடுத்தால், அத்தகைய விஷயங்கள் குறித்து முடிவெடுப்பது யார்?

I. காப்பீட்டாளரின் முடிவு இறுதியானது
II. நடுவர்
III. மத்தியஸ்தர்
IV. சட்ட நீதிமன்றம்

**சுருக்கம்**

a) நிபுணத்துவமான முறையில் ஈடுக்கோரல் கணக்குகளைத் தீர்ப்பது என்பது காப்பீட்டு நிறுவனத்தின் மிகப்பெரிய விளம்பரமாக கருதப்படுகின்றது.
b) இழப்பு குறித்து காப்பீட்டாளருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் என பாலிசி நிபந்தனைகள் குறிப்பிடுகின்றன.
c) ஈடுக்கோரல் தொகை சிறியதாக இருந்தால், இழப்பின் காரணம் மற்றும் அளவு குறித்து தீர்மானிப்பது ஆய்வு காப்பீட்டு நிறுவன அதிகாரியால் மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் இதர ஈடுக்கோரல்களுக்கு, அது இழப்பு மதிப்பீட்டில் வல்லுநர்களாக உள்ள

சுயாதீனமான உரிமம் பெற்ற தொழில்முறை ஆய்வாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

d) பொதுவாக, இழப்பு தேதி, நேரம், இழப்புக்கான காரணம், இழப்பின் அளவு போன்ற இழப்புச் சூழ்நிலைகள் தொடர்பான முழுத் தகவல்களையும் பெறும் வகையில் ஈடுக்கோரல் படிவம் வடிவமைக்கப்படுகின்றது.

e) ஈடுக்கோரல் மதிப்பீடு என்பது காப்பீடு பெற்றவருக்கு நேரிட்ட இழப்பு காப்பீட்டுக்கு உட்பட்ட அபாயத்தினால் ஏற்பட்டுள்ளதா என்பதையும், மேலும் உத்தரவாத மீறல் எதுவும் ஏற்படவில்லை என்பதையும் தீர்மானிக்கும் செயல்முறை ஆகும். காப்பீடு பெறுபவருக்கு ஏற்பட்ட இழப்பின் அளவு மற்றும் பாலிசியின் கீழ் காப்பீட்டாளரின் பொறுப்பு ஆகியவை மதிப்பிடப்படுகின்றன. ஈடுக்கோரலை செலுத்துவதற்கு முன் இது செய்யப்படுகிறது.

f) பாலிசியின் கீழ் விடுவிப்பு பெறப்பட்ட பிறகு மட்டுமே ஈடுக்கோரல் தீர்வு மேற்கொள்ளப்படுகின்றது.

### முக்கியமான வார்த்தைகள்

a) இழப்பு அறிவிப்பு
b) விசாரணை மற்றும் மதிப்பீடு
c) ஆய்வாளர்கள் மற்றும் இழப்பு மதிப்பீட்டாளர்கள்
d) ஈடுக்கோரல் படிவங்கள்
e) சரிக்கட்டுதல் மற்றும் தீர்வு

### சுய-பரீட்சையின் பதில்கள்

**பதில் 1** - சரியான பதில் விருப்பம் II.
**பதில் 2** - சரியான பதில் விருப்பம் I.
**பதில் 3** - சரியான பதில் விருப்பம் II.
**பதில் 4** - சரியான பதில் விருப்பம் III.
**பதில் 5** - சரியான பதில் விருப்பம் IV.
**பதில் 6** - சரியான பதில் விருப்பம் III.
**பதில் 7** - சரியான பதில் விருப்பம் IV.

# பிரிவு
# பின்னிணைப்புகள்

# அத்தியாயம் A-01

# பின்னிணைப்புகள்

பொதுக் காப்பீட்டின் முன்மொழிவு படிவங்களைப் பற்றி மாணவர்களுக்கு சிறந்த முறையில் விளக்க இந்த பின்னிணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

பின்னிணைப்பு-ஏ

**வாகன காப்பீடு முன்மொழிவு படிவம்**

**தனிப்பட்ட கார் / இரு-சக்கர - பேக்கேஜ் பாலிசி**

| | | |
|---|---|---|
| முன்மொழிபவர் பெயர் | | |
| அஞ்சல் முகவரி | காப்பீடு செய்தவரின் அடையாளம் | |
| தொலைபேசி மற்றும் தொலைநகல் எண் | | மொபைல் எண்: |
| மின்னஞ்சல் முகவரி | | |
| வங்கி கணக்கெண் (சேமிப்பு/நடப்பு) | | நிரந்தர கணக்கெண் (PAN): |
| HPA/அடைமானம் | | |
| தேவைப்படும் பாலிசி வகை | பேக்கேஜ் பாலிசி | |
| காப்பீட்டு காலம் | துவக்க நேரம்... தேதி : | வரை |

**வாகனத்தின் விவரம்**

| பதிவு எண்: | எஞ்சின் எண்/ சேசிஸ் எண் | தயாரித்த வருடம் | உற்பத்தியாளர்/ மாடல் / பாடி வகை | கன திறன் (சிசி) | அமரும் வசதி | நிறம் | எரிபொருள் வகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

காப்பீடு செய்யப்படும் வாகனத்தின் சரியான அடையாளம்

| | |
|---|---|
| பதிவு செய்யும் அதிகாரம் - பெயர் மற்றும் இடம்: | |
| வாகனத்தின் மதிப்பு: | |

| விவரப்பட்டி மதிப்பு | மின்சார / துணைக்கருவிகள் | மின்சாரமில்லாத துணைக்கருவிகள் | பக்க வாகனம் /டிரெயலர் | எல்பிஜி / சிஎன்ஜி கிட் | மொத்த மதிப்பு | ஐடிவி IDV |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

ஈடுக்கோரல் வழங்க மற்றும் ப்ரீமியத்திற்கு இது அடிப்படை

| வாகனத்தின் வரலாறு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முந்தைய பாலிசி எண் | காப்பீடு வகை | காப்பீட்டாளர் பெயர் மற்றும் முகவரி | ஈடுக் கோராத போனசுக்கான தகுதி | பாலிசி காலாவதி தேதி | கடந்த 3 ஆண்டுகளின் ஈடு அனுபவம் | முதலில் வாங்கிய மற்றும் பதிவு தேதி |
| | | | | | | |

ஏற்பளிப்பு காரணிகள்-மதிப்பீடை பாதிக்கும் விதம்

| வாகன பயன்பாடு: | | | |
|---|---|---|---|
| பயன்பாடு நோக்கம் | வாகன பார்க்கிங் விவரம் | டிரைவரின் விவரம் | ஆண்டில் ஓடிய சராசரி கி.மீ. |
| மகிழ்ச்சிக்காக | மூடப்பட்ட கேரேஜ் | சுயமாக | |
| தொழில்ரீதியாக | மூடப்படாத கேரேஜ் | சம்பளம் பெறும் டிரைவர் | |
| வர்த்தகம்/வணிகம் | வீட்டு வளாகத்திற்குள் | உறவினர்கள் | |
| கார்ப்பரேட் | தெருவில் | நண்பர்கள் | |

ஏற்று அபாயத்தை காப்பீட்டாளர் புரிந்துகொள்ள உதவுகிறது

அபாய தடுப்பு / எதிர்மறையான அபாயம்

| தள்ளுபடிகள் மற்றும் ஏற்றுதல்: | |
|---|---|
| தன்னிச்சையான மிகை : நீங்கள் கட்டாய பாலிசி மிகைக்கு மேலே தன்னிச்சையான மிகையை தேர்வு செய்ய விரும்புகிறீர்களா | ஆம் /இல்லை- ஆம் என்றால் தொகை குறிப்பிடவும் இரு-சக்கர வாகனம்- ரூ. 500/700/1000/1500/3000 |
| நீங்கள் இந்திய ஆட்டோமொபைல் அசோசியேஷனின் உறுப்பினரா | ஆம் / இல்லை - ஆம் என்றால் குறிப்பிடவும்<br>1. அசோஷியன் பெயர்:<br>2 .உறுப்பினர் எண்: 3. காலாவதி தேதி: |
| வாகனத்தில் ஏஆர்ஏஐ (ARAI) மூலம் ஒப்புதல் வழங்கப்பட்ட திருட்டு எதிர்ப்பு சாதனம் பொருத்தப்பட்டுள்ளதா | ஆம் / இல்லை - ஆம் என்றால் ஏஏஎஸ்ஐ (AASI) வழங்கின நிறுவல் சான்றிதழை இணைக்கவும் |
| வாகனம் மரபுசாரா ஆற்றல் மூலம் இயக்கப்படுகிறதா | ஆம் / இல்லை - ஆம் என்றால் விவரங்களை குறிப்பிடவும் |
| வாகனம் பை-ஃப்யூயல் கிட்டுடன் இயங்குகிறதா/ ஃபைபர் கிளாஸ் டேங்க் உள்ளதா | ஆம் / இல்லை - ஆம் என்றால் விவரங்களை குறிப்பிடவும் |
| நீங்கள் TPPD பாதுகாப்பை சட்டவரம்பு ரூ. 6000/-வரை மட்டுமே கட்டுப்படுத்த விரும்புகிறீர்கள் | ஆம் / இல்லை |
| தேவையான கூடுதல் காப்புகள் | |
| துணைக்கருவிகள் திருட்டு<br>(இரு-சக்கர வாகனங்கள் மட்டுமே ) | |
| டிரைவருக்கான சட்ட கடப்பாடு | |
| சம்பளம் பெறும் டிரைவரின் தனிநபர் விபத்து காப்பு | |

ஏற்பளிப்பிற்கு ஏற்றுதல் மற்றும் தள்ளுபடி காரணிகள் நிறுவனத்தின் கொள்கை படி கருதப்படும்

| கட்டாயமானது: உரிமையாளர் டிரைவருக்கு தனிநபர் விபத்து காப்பு | |
|---|---|
| உரிமையாளர் டிரைவருக்கு தனிநபர் விபத்து (PA) காப்பு கட்டாயமானது. நியமிக்கப்பட்டவர் விவரங்களை தரவும் :<br>(அ) நியமிக்கப்பட்டவர் பெயர் மற்றும் வயது<br>(ஆ)உறவு<br>(இ)பணியமர்த்தப்பட்டவரின் பெயர்<br>(நியமிக்கப்பட்டவர் சிறயவராக இருந்தால்)<br>(ஈ) நியமிக்கப்பட்டவருடன் அவருக்குள்ள உறவு | கூடுதல் பிரீமியம் கட்டினால் கூடுதல் காப்பு கிடைக்கும் |

1. **கட்டாய தனிநபர் விபத்து காப்பை (PA) ரூ 15 லட்சம்**
2. நிறுவனம் அல்லது கூட்டு நிறுவனம் அல்லது அதே போன்ற கூட்டாண்மை நிறுவனத்திற்கு வாகனம் சொந்தமானதாக இருந்தால், அல்லது உரிமையாளர் டிரைவருக்கு செயலில் உள்ள ஓட்டுனர் உரிமம் இல்லாவிட்டால் அவருக்கு கட்டாய தனிநபர் விபத்து காப்பை (PA) வழங்க முடியாது.

| பெயரிடப்பட்ட நபர்களுக்கு தனிநபர் விபத்து காப்பு (PA) |
|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயரிடப்பட்ட பயணிகளுக்கு தனிநபர் விபத்து (PA) காப்பு | IMT-15 | தனிநபர் விபத்து காப்பை பெயரிடப்பட்ட நபர்களுக்கு சேர்க்க விரும்புகிறீர்களா? | | | |
| | | பெயர் | தேர்ந்தெடுத்த CSI- ரூ. | நியமிக்கப்பட்டவர் | உறவு |
| | | 1) | | | |
| | | 2) | | | |
| | | 3) | | | |
| | | ஆம்/இல்லை, ஆம் என்றால் பெயர் மற்றும் தேர்வு செய்த மூலதன காப்பீட்டுத் தொகையை (capital sum insured (CSI) குறிப்பிடவும்:<br>(குறிப்பு: ஒரு நபருக்கு கிடைக்கும் அதிகபட்ச CSI) தனியார் கார்களுக்கு ரூ 2 லட்சம் மற்றும் மோட்டார் பொருத்திய இரு சக்கர வாகனங்களுக்கு ரூ 1 லட்சம்). | | | |

| | | |
|---|---|---|
| பெயரிடப்படாத நபர்கள் / பின்னிருக்கை பயணி / பெயரிடப்படாத பயணிகளுக்கு தனிநபர் விபத்து (PA) பாதுகாப்பு | | |
| | கூடுதல் காப்பு | |
| தேய்மானம் எதுவுமில்லை | | |
| உபய கார் | | |
| மருத்துவ செலவுகள் | | |
| தனிப்பட்ட விளைவுகள் | | |

மதிப்பீடை பாதிக்கக்கூடிய மற்றும் புள்ளி விவர நோக்கத்திற்காகவும் தகவல்

| | |
|---|---|
| மற்ற விவரங்கள் | |
| தொடர்கின்ற கூடுதல் காப்புகள் | |
| வாகனம் சொந்த வளாகத்தில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறதா | ஆம்/இல்லை |
| வாகனம் வெளிநாட்டு தூதரகத்திற்கு சொந்தமானதா | ஆம்/இல்லை |
| கார் பழம்பாணி (Vintage) கார் என சான்றிதழளிக்கப்பட்டுள்ளதா | ஆம்/இல்லை |
| வாகன பார்வையற்ற / இயலாமையுள்ள நபர்களின் பயன்பாடிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளசா | ஆம்/இல்லை, ஆம் என்றால், ஆர்.டி.ஏ (RTA) மூலம் பெற்ற அங்கீகார விவரங்களை குறிப்பிடவும் |
| புவியியல் பகுதி நீட்டிப்பு தேவைப்படுகிறதா | நேபால், வங்காளதேசம், பூட்டான், மாலைதீவு, பாகிஸ்தான், இலங்கை |

நீங்கள் ஒரு பக்க பாலிசியை பெற விரும்புகிறீர்களா? ஆம் / இல்லை

உன்னத நன்னம்பிக்கையின்

**காப்பீடு செய்பவரின் பிரகடனம்**

நான்/நாங்கள் இந்த முன்மொழிவு படிவத்தில் கூறிய அறிக்கைகள் எனக்கு/எங்களுக்கு அறிவு மற்றும் நம்பிக்கைக்கு சிறந்தமுறையில் எட்டியவரைக்கும் 'இந்த பிரகடனைகள் எனக்கும்/எங்களுக்கும் மற்றும் ______________________________மத்தியிலான ஒப்பந்தத்தின் அடிப்படையாக இருக்கும் என்பதை நான் / நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

இந்த முன்மொழிவு படிவத்தை சமர்ப்பித்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட சேர்த்தல்கள் அல்லது செய்த மாற்றங்களை பற்றி உடனடியாக காப்பீட்டு நிறுவனங்களுக்கு உறுதியாக தெரிவிப்போம் என்று அறிவிக்கிறோம்.

நான் / நாங்கள் கடந்த பாலிசி காலாவதியான தேதி முதல் இப்போது வரை என்/எங்கள் வாகனம் எந்த விபத்திற்கும் உள்ளாகவில்லை என்று உறுதி செய்ய விரும்புகிறோம்.. மேலுள்ள வாகனத்தின் காப்பீடிற்கு என்/எங்கள் பிரீமியத்தை ...................... இடத்தில் .............. அன்று உங்களிடம் நான்/நாங்கள் செலுத்திவிட்டதை உறுதி செய்கிறோம்.

இந்த .............. (நேரத்திற்கு) முன் எந்த விபத்து மூலமும் ஏற்பட்ட இழப்பு/சேதம்/கடப்பாடுக்கு நீங்கள் பொறுப்பு இல்லை என்பது புரிந்துக்கொள்ளப்பட்டு மற்றும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

நான்/ நாங்கள் வாகனம் சரியான மற்றும் சாலையில் ஒட்ட தகுதியான நிலையில் இருப்பதாக அறிவிக்கிறோம்.

**இடம்:**

**தேதி :** **முன்மொழிபவரின் கையொப்பம்**

**பாரத் க்ரிஹ ரக்ஷா, பாரத சூக்ஷ்மா மற்றும் பாரத லகு உத்யம் ஆகியவற்றின் முன்மொழிவு வடிவங்கள் (Bharat Griha Raksha, Bharat Sookshma & Bharat Laghu Udyam)**

தரநிலை தயாரிப்புகள் மற்றும் அவற்றுக்கான முன்மொழிவு படிவங்கள், அதாவது பாரத் க்ரிஹ ரக்ஷா, பாரத் சூக்ஷ்மா மற்றும் பாரத் லகு உத்யம் பற்றிய சிறந்த புரிதலுக்கு, ஐஆர்டிஏஐ இணையதளத்தில் பின்வரும் இணைப்பை பார்க்கவும்.

https://www.irdai.gov.in/ADMINCMS/cms/Uploadedfiles/StandardProducts/Annexure-I-BharatGrihaRaksha.pdf